கருப்பொருள் அடிப்படையில்

# திருக்குர்ஆன் விரிவுரை

முஹம்மது அல்கஸ்ஸாலி

தமிழில்:
ஷாஹுல் ஹமீது (உமரீ)

தொகுதி 1
ஸூரா 1 அல்ஃபாத்திஹா முதல் ஸூரா 24 அந்நூர் வரை

கருப்பொருள் அடிப்படையில்

# திருக்குர்ஆன் விரிவுரை

## தொகுதி 1

கருப்பொருள் அடிப்படையில்

# திருக்குர்ஆன் விரிவுரை

முஹம்மது அல்கஸ்ஸாலி

தமிழில்

ஷாஹுல் ஹமீது (உமரீ)

தொகுதி 1

ஸூரா 1 அல்ஃபாத்திஹா முதல் ஸூரா 24 அந்நூர் வரை

**Karupporul Adippadaiyil Thirukkuruaan Virivurai**
**(Vol-1)**
Tamil edition of

**A Thematic Commentary on The Qur'an**
by Shaykh Muhammad al-Ghazali

Originally published (1421 AH/2000 CE) and
reprinted (1433 AH/2011 CE) by
THE INTERNATIONAL INSTITUTE OF ISLAMIC THOUGHT (IIIT)
P.O.Box 669 Herndon, VA 20172 U.S.A.
www.iiit.org
London office
P.O.Box 126, Richmond, Surrey TW9 2UD, UK
www.iiituk.com

ISBN 978-1-56564-260-7 Paperback
ISBN 978-1-56-564502-8 Hardback

All rights reserved

Tamil edition – 2020
Translated
by Shahul Hameed (Umari)

Vol 1 – Surah 1 Al-Fathihah - Surah 24 Al-Nur

ISBN 978-955-8398-67-8

Published by Fuzin Texts
23/3 Market Road, Dharga Town 12090, Sri-Lanka
Cover design by Azar Wazeer
Printed by Millennium Graphics, Maharagama.

**நன்றி**

*சமரசம்* ஸிராஜுல் ஹஸன், ஆம்பூர் நதீம் அஹ்மத்,
*சீர்மை* உவைஸ் அஹ்மத், கோட்டாறு ஸம்மில் மஜீத்,
இர்ஷாத் இஸ்மாயீல் (நளீமி), அஸார் வஸீர் ஆகியோர்க்கு

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| முன்னுரை | | 11 |
| அத்தியாயம் 1 | அல்ஃபாத்திஹா | 15 |
| அத்தியாயம் 2 | அல்பகறா | 20 |
| அத்தியாயம் 3 | ஆலு இம்றான் | 46 |
| அத்தியாயம் 4 | அந்நிசா | 77 |
| அத்தியாயம் 5 | அல்மாயிதா | 120 |
| அத்தியாயம் 6 | அல்அன்ஆம் | 154 |
| அத்தியாயம் 7 | அல்அஃறாஃப் | 185 |
| அத்தியாயம் 8 | அல்அன்ஃபால் | 214 |
| அத்தியாயம் 9 | அத்தவ்பா | 236 |
| அத்தியாயம் 10 | யூனுஸ் | 261 |
| அத்தியாயம் 11 | ஹூது | 282 |
| அத்தியாயம் 12 | யூசுஃப் | 301 |
| அத்தியாயம் 13 | அர்றஃது | 319 |
| அத்தியாயம் 14 | இப்றாஹீம் | 329 |
| அத்தியாயம் 15 | அல்ஹிஜ்ர் | 338 |
| அத்தியாயம் 16 | அந்நஹ்ல் | 347 |
| அத்தியாயம் 17 | அல்இஸ்றாஃ | 367 |

| | | |
|---|---|---|
| அத்தியாயம் 18 | **அல்கஹ்ஃப்** | 387 |
| அத்தியாயம் 19 | **மர்யம்** | 407 |
| அத்தியாயம் 20 | **தாஹா** | 418 |
| அத்தியாயம் 21 | **அல்அன்பியா** | 429 |
| அத்தியாயம் 22 | **அல்ஹஜ்** | 440 |
| அத்தியாயம் 23 | **அல்முஃமினூன்** | 455 |
| அத்தியாயம் 24 | **அந்நூர்** | 466 |

# பதிப்புரை

*பேரறிஞர் அஷ்ஷெய்க் முஹம்மது அல் கஸ்ஸாலி அவர்களின்* نحو تفسير موضوعي لسور القرآن الكريم *நூலின் தமிழாக்கத்தை வெளிக்கொணர் வதில் நாம் காண்பது அளவிறந்த மகிழ்வு. 2000 மாம் ஆண்டு இந்நூலின் ஆங்கிலப்பதிப்பு வெளிவந்த வேளை ஆங்கிலம் வழங்கும் நாடுகளி லெல்லாம் அது பெரும் வரவேற்பைப் பெற்றுக்கொண்டது. ஆங்கில மொழிபெயர்ப்பைச் செய்தவர்* Ashur A. Shamis. *அதனைச் செம்மை யாக்கம் செய்தவர்* Zaynab Alawiye.

نحو تفسير موضوعي لسور القرآن الكريم *நூலினை நேரடியாக அரபு மூலத்திலி ருந்தே தமிழாக்கம் செய்து தந்துள்ளார் ஷெய்க் ஷாஹுல்ஹமீது (உமரீ).*

*இரண்டு தொகுதிகளாக வெளியிடப்படுகின்றது தமிழ்ப் பதிப்பு. முத லாம் தொகுதி ஸூரா அல் பாத்திஹா முதல் 24 வது ஸூரா அந்நூர் வரையான விரிவுரையைக் கொண்டுள்ளது. இரண்டாம் தொகுதி 25 வது ஸூரா அல் புர்கான் முதல் இறுதி ஸூரா அந்நாஸ் வரையாக அமைந் துள்ளது.*

*பேராசிரியர் முஹம்மது அல் கஸ்ஸாலி அவர்களின் இந்த விரிவுரை அறிவுத் தேட்டத்தில் ஈடுபாடு கொண்டார் அனைவருக்கும் பெரு விருந் தாய் அமைவது. தமிழ் கூறும் நல்லுலகத்தாரும் அதன் பயன்களை ஈட்டிக் கொள்ள ஷெய்க் ஷாஹுல் ஹமீது (உமரீ) அவர்கள் ஆற்றியுள்ள பணி மதிப்பிடற்கரியது.*

*எமது முனைவுகள் மூலம் நன்மைகளே விளைய வல்ல அல்லாஹ் நல்லருள் பாலிப்பானாக*

**பூஸின் டெக்ஸ்ட்ஸ்**

**டிசம்பர்** 2020

# முன்னுரை

இது திருக்குர்ஆனைப் புதியதொரு முறையில் அணுகுவதற்கான வழிமுறையாகும். இதற்கு முன்பு நான் எழுதிய சில புத்தகங்களில் இந்த வழிமுறையைக் கடைப்பிடித்துள்ளேன். நான் இந்தப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது மிக உன்னதமான படித்தரம் கொண்ட திருக்குர் ஆனுக்கு என்னைப் போன்றவர்கள் என்ன செய்துவிட முடியும் என்ற உணர்வு என்னை ஆட்கொண்டிருந்தது. ஆனாலும், குர்ஆனைப் புரிந்து கொள்ள வேண்டும், அதன் பொருள்களை ஆழ்ந்து கற்க வேண்டும் என்ற ஆர்வத்தில் இந்தப் பணியில் என்னை நான் ஈடுபடுத்திக்கொண்டேன்.

எனக்கு நானே கூறிக்கொண்டேன், இதற்கு முன்பு நான் சென்றிராத ஒரு வழியைத் தேர்ந்தெடுப்பேன். அதன் மூலம் நன்மையின் வாசல்களில் ஒன்றைத் திறந்துவைப்பேன். குர்ஆனின் அற்புதங்கள் என்றும் முடி வடையாதவை. நாம் எவ்வளவுதான் முயன்றாலும் அதன் சிகரத்தை அடைந்துவிட முடியாது.

மகத்தான இந்த வேதத்தின் ஒவ்வொரு அத்தியாயத்துக்கும் கருப் பொருள் அடிப்படையிலான விளக்கத்தை அளிக்க வேண்டும் என்ப தையே என் நோக்கமாக ஆக்கிக்கொண்டேன். கருப்பொருள் அடிப்படை யிலான விளக்கம் என்பது அத்தியாயத்தின் மையக் கருத்தையும் அதன் வசனங் களை ஒன்றுக்கொன்று இணைக்கும் மறைவான தொடர்பு களையும் அதன் தொடக்கம் எப்படி அதன் முடிவுக்கு முன்னுரையாக அமைந்துள்ளது என்பதையும் அதன் முடிவு எப்படி அதன் தொடக்கத்தை உண்மைப்படுத்துகிறது என்பதையும் தெளிவுபடுத்துவதாகும்.

ஓர் அத்தியாயத்தில் பல்வேறு விவகாரங்கள் குறித்து பேசப்பட்டி ருந்தாலும் அவை ஒரு தலைப்பில் எவ்வாறு ஒன்றிணைகின்றன என்பதை அறிய மிகுந்த கவனம் செலுத்தினேன். இந்த விசயத்தில் நான் ஷைஃக் முஹம்மது அப்துல்லாஹ் தர்றாஸின் வழிமுறையைப் பின்பற்றினேன். அவர் குர்ஆனின் மிக நீளமான அத்தியாயமான அல்பகறாவைக் கொண்டு இதனைத் தெளிவுபடுத்தியுள்ளார். அவர் எழுதிய புத்தகத்தின் பெயர் அந்நபவுல் அழீம் என்பதாகும். நான் அறிந்தவரையில் அதுதான்

கருப்பொருள் அடிப்படையில் ஓர் அத்தியாயத்தை முழுமையாக அணுகிய முதல் விளக்கவுரை.

முஸ்லிம்களுக்கு இந்த வடிவிலான விளக்கவுரை மிகவும் அவசியம் என்பதை நான் உணர்ந்தேன். சிறு வயதிலிருந்தே நான் குர்ஆனோடு தொடர்பில் இருக்கிறேன். என்னுடைய பத்து வயதில் நான் குர்ஆனை மனனம்செய்துவிட்டேன். இப்போது எண்பது வயதை அடைந்தபின்பும் நான் அதைப் படித்துக்கொண்டுதான் இருக்கிறேன். ஆனாலும், நான் அதிலிருந்து வெளிப்படுத்திய பொருள்கள் மிகக் குறைவானவை என்றும் எனது அறிவு இலகுவான பொருள்களையும் மீண்டும் மீண்டும் வரக் கூடிய வாசகங்களையும் தாண்டிச் செல்லவில்லை என்றும் எனக்குத் தோன்றியது. ஆகவே, வசனத்தில் மூழ்கி, அதற்கு முன்னால் வந்துள்ள வசனத்துடனும் பின்னால் வந்துள்ள வசனத்துடனும் அது எந்த வகையில் இணைகிறது என்பதையும் அத்தியாயம் முழுமையையும் இணைக்கின்ற நுண்ணிய இழைகளையும் அறிவதை நான் அவசியமெனக் கருதினேன்.

என்னால் இந்தப் பணியைச் செய்ய முடியுமா என்று தயங்கிநின்றேன். பின்னர், இயலாமல் நின்றுவிடுவதை விடக் குறைந்தது இந்தப் பாதையில் ஓரிரு அடிகளாவது கடந்துவிட வேண்டும் என்று எனக்குநானே முடிவு செய்துகொண்டு முன்னேறினேன். அல்லாஹ் எனக்கு உதவிசெய்தான். பாதையில் இறுதியை அடையும் பெரும் நற்பேற்றினை அவன் எனக்கு வழங்கினான்.

முதல் நூற்றாண்டில் அருளப்பட்ட வஹீயின் சாராம்சமே திருக்குர் ஆன். அதற்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு அதற்கு நிரந்தரத்துவத்தை வழங்கிவிட்டது. முந்தையவர்களிடமும் பிந்தையவர்களிடமும் இது போன்று கொஞ்சம்கூட மாற்றம் இல்லாமல் உள்ளங்களால் மனனம் செய்யப்பட்ட, ஏடுகளால் பதிவுசெய்யப்பட்ட, பாதுகாக்கப்பட்ட எந்த வேதமும் இல்லை. இதற்கு முன்னிருந்தும் பின்னிருந்தும் அசத்தியம் வர முடியாது.

இந்தக் காலத்தில் வஹீ எங்கே இருக்கிறது என்று யாரேனும் கேட்டால் இந்தக் குர்ஆனைத் தவிர, அழிவை வென்றுவிட்ட அதன் வார்த்தை களைத் தவிர வேறு எதைச் சுட்டிக்காட்ட முடியும்? பாதுகாக்கப்பட்ட சத்தியமும் நேரான வழியும் இதில்தான் அடங்கியுள்ளன.

நான் மிகக் குறைவாகவே வெளிப்படுத்தியுள்ளேன் என்பதை நான் மீண்டும் மீண்டும் சொல்வேன். நான் நீர் பருகிய நீரோடையில் நீர் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கிறது. ஆனாலும், எனது இந்தப் பணி

*நீங்கள் முன்னேறிச்செல்வதற்குத் தூண்டுகோலாய் அமையும். அறிவுடையோர் திருக்குர்ஆனுக்குச் சேவையாற்றுவதில், அதன் மீது படிந்துள்ள திரைகளை அகற்றுவதில், அதன் அழகை வெளிப்படுத்துவதில் வெகு தூரம்வரை செல்ல முடியும்.*

*இந்தப் புத்தகம் மிக நீண்டுவிடக் கூடாது என்பதற்காக நான் வசனங்களிலிருந்து அவற்றின் வெளிப்படையான வடிவங்களையே தேர்வு செய்துள்ளேன். மற்றவற்றை வாசகர்களின் சிந்தனைக்கு விட்டுவிட்டேன். சுருக்கமாக எடுத்துரைப்பதே என் நோக்கமாகும்.*

*இந்த வடிவிலான விளக்கவுரை பிற விளக்கவுரைகளிலிருந்து உங்களைத் தேவையற்றவர்களாக ஆக்கிவிடாது என்பதையும் இங்கு நான் கூறிக்கொள்கிறேன். மாறாக, இது மற்ற வடிவிலான விளக்கவுரைகளை முழுமைப்படுத்தக்கூடிய ஒரு விளக்கவுரைதான்.*

*இங்கு ஒரு தலைப்பில் அமைந்துள்ள வசனங்களைத் தொகுத்து நான் பேசவில்லை. இது கருப்பொருள் அடிப்படையிலான ஒரு விளக்கவுரை. நான் எழுதிய அல்முஹாவிர் அல்ஃகம்சா லில்குர்ஆனில் கரீம், நழ்றாத் ஃபில்குர்ஆன் என்ற இரு நூல்களிலும் தலைப்புவாரியாக வசனங்களைத் தொகுத்துத் தெளிவுபடுத்தியுள்ளேன்.*

*நிச்சயமாகத் திருக்குர்ஆன் இந்த முறையிலும் அணுகப்பட வேண்டும். சிலர் இந்த அணுகுமுறை எதிர்காலத்தில் நல்ல வரவேற்பைப் பெறும் என்று கருதுகிறார்கள். எப்படியிருந்தாலும் திருக்குர்ஆன் இஸ்லாத்தின் சட்டமாகவும் அதன் நிரந்தரமான அற்புதமாகவும் இருக்கிறது. நாம் பருகக்கூடிய இந்த ஊற்றிலிருந்து இறுதிநாள்வரை மக்கள் பருகிக் கொண்டே இருப்பார்கள் என்று கருதுகிறோம்.*

*தன் அடியார்மீது வேதத்தை அருளி அதை அறிவுடையோருக்கு வழிகாட்டியாக ஆக்கிய, அதைத் தவறுகளிலிருந்து பாதுகாத்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.*

**ஸஃபர்** 1413 **முஹம்மது அல்கஸ்ஸாலி**

**ஆகஸ்ட்** 1992

## வாசகர் கடன்

*அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் குறிப்பிடப்படும் போதெல்லாம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் (அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் அவர் மீது அருளப்படுவதாக) எனவும் அண்ணலாரின் தோழர்கள் யாரும் குறிப்பிடப்படும்போது ரழியல்லாஹு அன்ஹு அன்ஹா, அன்ஹும் (அல்லாஹ் அவர்கள் மீது கருணை காட்டுவானாக) எனவும் முஹம்மத் (ஸல்) அவர்கள் தவிர்ந்த ஏனைய நபிமார்கள் குறிப்பிடப்படும்போது அலைஹிஸ்ஸலாம் (அவர் மீது அல்லாஹ் நல்லருள்பாலிப்பானாக) எனவும் கூற வேண்டுவது.*

அத்தியாயம் 1

# அல்ஃபாத்திஹா

(ஆரம்பம்)

*'அளவிலாக் கருணையாளனும் இணையிலாக் கிருபையாளனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் தொடங்குகிறேன்.(1)' மிகச் சிறந்த பெயரான அல்லாஹ்வின் திருப்பெயர்கொண்டு தொடங்குகிறேன். வானத்திலோ பூமியிலோ அவனுடைய பெயருடன் எந்த ஒன்றும் தீங்கிழைக்க முடியாது.*

*'அல்ஹம்து' என்று சொல்லப்படும் இந்த அத்தியாயம் மிகச் சிறிய அத்தியாயம்தான். ஆனாலும், அது உம்முல் கிதாப் (வேதத்தில் தலையாயது) என்று அழைக்கப்படக்கூடிய மகத்தான அத்தியாயமாகும்.*

*இது இஸ்லாத்தின் அடிப்படையான கொள்கைகளைச் சுருக்க மாக எடுத்துரைப்பதோடு இந்தப் பிரபஞ்சத்தில் மனிதர்களின் நோக்கத்தை உறுதிப்படுத்துகின்ற, அவர்களுக்கும் அவர்களின் இறைவனுக்குமிடையிலான உறுதியான ஒப்பந்தத்தையும் அவனுடைய அடியார்கள் நேர்வழி காட்டும்படியும் நற்பேறு அளிக்கும்படியும் அவனிடத்தில் மன்றாடுவதையும் உள்ளடக்கியுள்ளது.*

*'படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.(2)' என்ற வசனத்தைக் கவனிப்போம்.*

*அல்ஹம்து என்ற வார்த்தையில் மூன்று பொருள்கள் ஒன்றிணைகின்றன.*

1. *அது உயர்ந்தோனாகிய அல்லாஹ்வின் கண்ணியத்தையும் அழகையும் பரிபூரணத்தையும் வெளிப்படுத்தும் பாராட்டாகும்.*
2. *அது நாம் பெற்றுள்ள அருட்கொடைகளையும் இன்பங்களையும் நமக்குத் தந்தவன் என்ற வகையில் நாம் அவனைப் புகழ்கிறோம்.*

3. அது அவன் பொழியும் அருளுக்கு, பெரும் நன்மைக்குப் பகர மாகச் செலுத்தப்படும் நன்றியாகவும் இருக்கிறது.

எடுத்துக்காட்டாக, அதிகாலை எழுந்தவுடன் நாம் கூறும் இந்த இறைத் துதியை (திக்ரு) பாருங்கள்: 'எங்களின் மரணத்திலிருந்து எங்களை உயிர்த்தெழச் செய்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவனிடமே நாங்கள் மீண்டும் எழுப்பப்படுவோம். நாம் அவனைப் பாராட்டுகிறோம், புகழ்கிறோம், நன்றிசெலுத்துகிறோம்.'

றப்புல் ஆலமீன் - உலகங்கள், படைப்புகள் அனைத்துக்கும் அதிபதி. அவனது அரியணை தொடங்கி இந்தப் பூமியில் இருக்கக்கூடிய சிறு பொருள்கள்வரை, வானம் தொடங்கி பூமிவரை, விலங்குகள், தாவரங்கள் வானவர்கள், மனிதர்கள் என எல்லா வகையான படைப்புகளுக்கும் பொருள்களுக்கும் அவனே அதிபதி.

ஆலம் என்ற வார்த்தையில் அல்லாஹ்வைத் தவிர அனைத்துப் படைப் புகளும் அடங்கிவிடும். அவனைத் தவிர ஒவ்வொன்றும் அவனால் பராமரிக்கப்படக்கூடியதாக, அவன் பக்கம் தேவையுடையதாகவே இருக் கிறது.

அல்லாஹ்வைத் தவிர ஒவ்வொன்றும் அவனுக்கு அடிமையே; அவ னால் படைக்கப்பட்டதே. வானங்கள், பூமி மற்றும் படைப்புகள் அனைத் தையும் படைத்துப் பராமரிக்கும் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். வானங்களிலும் பூமியிலும் அவனுக்கே பெருமையனைத்தும். அவன் யாவற்றையும் மிகைத்தவனாகவும் ஞானம்மிக்கவனாகவும் இருக்கிறான்.

'அவன் அளவிலாக் கருணையாளன், இணையிலாக் கிருபையாளன்.(3)' அவனது அருளில், கருணையில்தான் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். அவனது கருணையும் அறிவும் எல்லாவற்றையும் வியாபித்துள்ளன. அல்லாஹ் பெரும் மன்னிப்பாளனாகவும் கருணையாளனாகவும் இல் லாமல் இருந்திருந்தால் நம்முடைய பாவங்களும் நிராகரிப்பும் நம்மை எப்போதோ நாசம்செய்து அழித்திருக்கும்.

'அவன் தீர்ப்புநாளின் அதிபதி.(4)' தீர்ப்புநாள் என்பது கூலி கொடுக்கப் படும் நாளாகும். அது மறுவுலகமாகும். அது நம்முடைய இவ்வுலகத்துக்கு மாற்றாகும்.

இன்று மனித வாழ்க்கையின் மீது ஆதிக்கம் கொண்டுள்ள சடவாதம் அவ்வுலகை மிகக் குறைவாகவே நினைவுகூர்கிறது. மாறாக, அதனை நினைவுகூர்வதைக்கூடப் பரிகாசத்துக்குரிய ஒன்றாகக் கருதுகிறது.

அது வேண்டுமென்றே பண்பாடு, சட்டம், தேசிய-சர்வதேச அரசியல் ஆகிய தளங்களில் அவ்வுலகை மறந்துவிட்டது. ஆனால், அவ்வுலகமோ கவனத்தில் கொள்ள வேண்டிய மகத்தான உண்மையாகும்.

'உன்னையே நாங்கள் வணங்குகிறோம். உன்னிடமே நாங்கள் உதவி தேடுகிறோம். (5)' அல்லாஹ்வே, உன்னை மட்டுமே நாங்கள் வழிபடு கிறோம். உன்னிடமே நாங்கள் உதவி தேடுகிறோம். உன்னைத் தவிர வேறு யாரையும் நாங்கள் வழிபடவோ உதவிக்கு அழைக்கவோ மாட்டோம். அனைவரும் உன் பக்கமே தேவையுடையவர்களாக இருக்கிறார்கள். நபிமொழிகளில் வந்துள்ளவாறு: 'அல்லாஹ்வே, உன்னை நினைவு கூர்வதற்கும் உனக்கு நன்றிசெலுத்துவதற்கும் உன்னை அழகிய முறையில் வழிபடுவதற்கும் எனக்கு உதவிபுரிவாயாக.' 'நீ கேட்டால் அல்லாஹ் விடமே கேள். உதவி தேடினால் அல்லாஹ்விடமே உதவி தேடு. (அபூ தாவூது, நசாஈ)'

'எங்களுக்கு நேரான வழியைக் காட்டுவாயாக. அது நீ யார்மீது அருள் புரிந்தாயோ அவர்களின் வழி. (6,7)' நேரான வழி என்பது இரண்டு புள்ளிகளுக்கு இடையே காணப்படும் மிகக் குறுகிய வழியாகும். ஆகவே, அது பல வழிகளாக இருப்பதில்லை. யார் அதில் உறுதியாக இருந்தார் களோ அவர் அல்லாஹ்வின் பக்கம் செல்லும் வழியை அடைவார்.

அல்லாஹ்வின் மார்க்கம் ஒன்றுதான். பல்வேறு காலகட்டங்களையும் இடங்களையும் சேர்ந்தவர்களாக இருந்தாலும் தூதர்கள் அந்த ஒன்றையே எடுத்துரைத்தார்கள். ஓரிறைவனையே வழிபட வேண்டும் என்பதே அதன் அடிப்படையாகும். அதிகாரமும் புகழும் அவனுக்கே உரியன. பூமியில் உள்ளவர்களும் வானத்தில் உள்ளவர்களும் அவன் பக்கமே தேவை யுடையவர்களாக இருக்கிறார்கள்.

இதுதான் தற்கால மதங்களைப் பின்பற்றுபவர்களையும் முஸ்லிம் களையும் வேறுபடுத்தும் அம்சம். அல்லாஹ்வைத் தவிர அனைத்துமே அவனுடைய அடிமைகளே, அவனுடைய கட்டளைகளுக்குக் கட்டுப் பட்டவையே என்றும் இவ்வுலகிலும் மறுவுலகிலும் அவனுடைய அதிகாரமே செல்லுபடியாகிறது என்றும் முஸ்லிம்கள் உறுதியாக நம்புகிறார்கள்.

எந்த மனிதரும் எந்த வானவரும் இந்த எதார்த்தத்தைத் தாண்டிவிட முடியாது. யார் இந்த எதார்த்தத்தை உறுதியாகப் பற்றிக்கொண்டார் களோ அவர்கள் வெற்றிபெற்றுவிட்டார்கள். யார் இதனை விட்டு விலகி னார்களோ அவர்கள் வழிதவறிவிட்டார்கள்.

*யாரெல்லாம் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் சிறந்த முறையில் கீழ்ப்படிந்தார்களோ அவர்கள் இந்த நோக்கத்தை அடைந்து விட்டார்கள்.*

> *யார் அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் கீழ்ப்படிகிறார்களோ அவர்கள் அல்லாஹ் அருள்புரிந்த தூதர்கள், உண்மையாளர்கள், சாட்சி யாளர்கள், நல்லோர்கள் ஆகியோருடன் இருப்பார்கள். அவர்களின் தோழமை எவ்வளவு சிறப்பானது!* (4:69)

*யார் அல்லாஹ்வுக்கு இணையாக மற்றவர்களை ஆக்குகிறார்களோ அல்லது அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட மறுக்கிறார்களோ அவர்கள் வழி கேட்டிலும் அல்லாஹ்வின் கோபத்திலும் இருப்பார்கள். அவர்களிடம் எந்த நன்மையும் இல்லை. 'அது உன் கோபத்துக்கு ஆளானோரின் வழியும் அல்ல; தவறான வழியில் சென்றோரின் வழியும் அல்ல.' மனிதன் நேரிய சிந்தனையுடையவனாக, சிந்தனையில் உண்மையானவனாக இருக்க வேண்டும். அவன் சத்தியத்தை அடைந்துவிட்டால் அதன்படி செயல் படுவதும் தன் இறைவனுக்காகப் பணிவை மேற்கொள்வதும் அவனுடைய அடியார்களுடன் மென்மையாக நடந்துகொள்வதும் அவன்மீது கடமை யாகிவிடுகிறது.*

*இந்த அத்தியாயத்தை ஓதுவதை அல்லாஹ் எல்லாத் தொழுகைகளிலும் கடமையாக்கியுள்ளான், அது அவனுக்கும் மனிதர்களுக்குமிடையில் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய பிரார்த்தனையாக, உரையாடலாக அமையும் பொருட்டு. அதில் அடியான் தன் இறைவனின் திருப்தியை வேண்டிய வனாக மன்றாடுகிறான்.*

*அல்லாஹ் கூறுவதாக ஹதீஸில் வந்துள்ளது:*

> *நான் தொழுகையை எனக்கும் என் அடியானுக்குமிடையே சரிபாதி யாகப் பங்கிட்டுக்கொண்டேன். அதில் பாதி எனக்குரியது; பாதி என் அடியானுக்குரியது. என் அடியானுக்கு அவன் கேட்டதெல்லாம் கிடைக்கும். அடியான், 'படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்!' என்று கூறினால், 'என் அடியான் என்னைப் புகழ்ந்துவிட்டான்.' என்று அல்லாஹ் கூறுகிறான். அடியான், 'அவன் அளவிலாக் கருணையாளன், இணை யிலாக் கிருபையாளன்!' என்று கூறினால், 'என் அடியான் என்னைப் புகழ்ந்துவிட்டான்.' என்று அல்லாஹ் கூறுகிறான். அடியான், 'தீர்ப்புநாளின் அதிபதி' என்று கூறினால், 'என் அடியான் என்னைக் கண்ணியப்படுத்திவிட்டான்.' என்று அல்லாஹ் கூறுகிறான்.*

*அடியான், 'உன்னையே நாங்கள் வழிபடுகிறோம். உன்னிடமே நாங்கள் உதவி தேடுகிறோம்.' என்று கூறினால், 'இது எனக்கும் என் அடியானுக்கும் உரியதாகும். என் அடியானுக்கு அவன் கேட்டதெல்லாம் கிடைக்கும்.' என்று அல்லாஹ் கூறுகிறான். அடியான், 'எங்களுக்கு நேரான வழியைக் காட்டுவாயாக. அது நீ யாருக்கெல்லாம் அருள்புரிந்தாயோ அவர்கள் சென்ற வழி. உன் கோபத்துக்கு ஆளானோரின் வழியும் அல்ல, தவறான வழியில் சென்றோரின் வழியும் அல்ல.' என்று கூறினால், 'இது என் அடியானுக்குரியது. என் அடியானுக்கு அவன் கேட்டதெல்லாம் கிடைக்கும்.' என்று அல்லாஹ் கூறுகிறான். (ஸஹீஹ் முஸ்லிம்)*

*நம்முடைய உடலுறுப்புகளை நாம் சுத்தம்செய்வதைப் போல, குளிப்பதைப் போல இந்தப் பிரார்த்தனையை மீண்டும் மீண்டும் செய்கிறோம். இவ்வாறு மீண்டும் மீண்டும் செய்வதற்கான காரணிகள் நிலையானவை. மனித உடலை ஒருமுறை அல்லது இருமுறை மட்டும் சுத்தம் செய்வது போதுமானதாகாது. மனித மனம் ஓரிரு பிரார்த்தனைகளைக் கொண்டு சீர்பெற்றுவிடாது. அது அல்லாஹ்வின் முன்னால் நின்று கொண்டு மீண்டும் மீண்டும் பிரார்த்திக்க வேண்டும். ஏனெனில், மனதின் சிக்கல்களும் ஷைத்தானின் ஊசலாட்டங்களும் முடிவில்லாதவை. ஆகவே, மீண்டும்மீண்டும் பிரார்த்தனைசெய்தாக வேண்டும். எப்போதும் மன்றாடிக்கொண்டே இருக்க வேண்டும். 'நிச்சயமாகத் தொழுகை நம்பிக்கையாளர்களின் மீது நேரம் குறிக்கப்பட்ட கடமையாக இருக்கிறது. (4:103)'*

*இவ்வாறு, குறைவான வரிகளில் மனிதர்களுக்கும் அவர்களின் இறைவனுக்குமான சாத்தியமான ஒரே தொடர்பு படம்பிடித்துக் காட்டப்பட்டுவிடுகிறது.*

*அவனை ஏற்றுக்கொண்டு அவனைப் புகழ்வது, அவனுடைய சந்திப்புக்காகத் தன்னைத் தயார்படுத்திக்கொள்வது, அவனுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் வாக்குறுதியை நிறைவேற்றுவது, பின்னர் அவன் விரும்பியவாறு நம்மை ஆக்க வேண்டும் என அவனிடமே ஆதரவு வைப்பது...*

❖ ❖ ❖

அத்தியாயம் 2

# அல்பகறா

(பசு)

*ஹிஜ்றத்துக்குப் பிறகு மதீனாவில் முதல் இஸ்லாமியச் சமூகத்தை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சிலை வழி பாட்டின் குழப்பங்களை எதிர்கொள்வதில் முஸ்லிம்கள் தனிமனிதர் களாக வெற்றிபெற்றார்கள். அவர்கள் தங்களின் மார்க்கத்தோடு தப்பித்து தங்களின் சமூகத்தை ஒன்றிணைப்பதற்கான, தங்களின் ஆட்சியை நிலை நிறுத்துவதற்கான ஓர் இடத்தைப் பெற்றார்கள்.*

*ஆனால், அங்கு வேறு வகையான எதிர்ப்பை எதிர்கொண்டார்கள். அது மார்க்கத்தைத் தங்களுக்கு மட்டுமே உரித்தான ஒன்றாகக் கருதிய யூதர் களின் எதிர்ப்பு. யூதர்கள் தங்களின் புதிய போட்டியாளர்களை மிக மோசமான முறையில் எதிர்கொண்டார்கள். அவர்களை எதிர்ப்பதற்குத் தயாரானார்கள். வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் அவர்களுக்கு எதிராகச் சதித்திட்டங்களைத் தீட்டினார்கள்.*

*ரோமானியர்களின் ஆதிக்கத்திலிருந்து தங்களின் கொள்கைகளுடன் தப்பிவந்து ஹிஜாஸின் செழிப்பான பகுதிகளில் யூதக் குலங்கள் வாழ்ந்து கொண்டிருந்தன. அவர்கள் எழுதவும் படிக்கவும் தெரியாத அறபுக் களிடையே உயர்ந்தவர்களாக வாழ்ந்தார்கள். அவர்கள் சிலை வழிபாட்டை எதிர்த்துப் போரிட முயலவுமில்லை, அறபுக்களை அல்லாஹ்வின் பக்கம் அழைக்கவுமில்லை. மார்க்கம் என்பது தங்களுக்கு மட்டுமே வழங்கப் பட்ட பிரத்தியேகமான ஒன்று என்று அவர்கள் கருதினார்கள். அதில் மற்றவர்களையும் ஒன்றிணைக்க அவர்கள் விரும்பவில்லை.*

*இஸ்லாம் தோன்றியபிறகும் அவர்களிடம் இந்த உணர்வு நிலைத் திருந்ததா? இல்லை. மாறாக, அவர்கள் இஸ்லாத்தை நிராகரித்தார்கள். விவகாரங்கள் தலைகீழாகிவிட்டன ...*

நபியவர்கள் அவர்களுடன் மென்மையாக நடந்துகொள்ள, நன்மை யான விசயங்களில் அவர்களுடன் ஒத்துழைக்கவே விரும்பினார்கள். ஆனாலும் யூதர்களின் பொறாமை மிகைத்துவிட்டது. அவர்களின் தீங்கு வெளிப்பட ஆரம்பித்துவிட்டது. முஸ்லிம்கள் தாங்கள் புலம்பெயர்ந்த இடத்தில் வஹீயின் அறிவுரைகளுக்கேற்பத் தங்களின் சமூகத்தைக் கட்டியெழுப்பிக் கொண்டும் தங்களின் எதிரிகளை எதிர்கொண்ட வண்ணமும் இருந்தார்கள்.

இந்தச் சூழலில்தான் திருக்குர்ஆனின் மிக நீளமான, பல்வேறு வகை யான அறிவுரைகளைக் கொண்ட அத்தியாயமான அல்பகறா அருளப் பட்டது.

மறைமுகமான சுட்டிக்காட்டலின் மூலம் யூதர்களின் வழிகேடுகள் உணர்த்தப்பட்டன. 'இது இறை வேதமாகும். இதில் எத்தகைய சந்தேகமும் இல்லை. இறையச்சமுடையோருக்கு நேர்வழிகாட்டியாகும். (2)' மற்ற வேதங்கள் சந்தேகத்திற்கிடமானவை. அவற்றில் புகுந்துவிட்ட இடைச் செருகல்கள் இறையச்சத்தை (தக்வா) ஏற்படுத்தாது; வாழ்க்கையைத் தூய்மைப்படுத்தாது.

அல்பகறா அத்தியாயம் குறிப்பிடும் இறையச்சமுடையோரின் பண்பு கள் ஏராளமானவை. அத்தியாயத்தில் தக்வா என்ற மூலத்தைக் கொண்ட வார்த்தைகள் முப்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் வந்துள்ளன. வேறெந்த அத்தியாயத்திலும் இவ்வாறு இடம்பெறவில்லை. பொருள் செறிந்த பண்பான இந்தத் தக்வாதான் எல்லாச் சமூகங்களிலும் வேண்டப்பட் டது. 'வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அல்லாஹ்வுக்கே உரியன. உங்களுக்கு முன் வேதம் வழங்கப்பட்டோருக்கும் உங்களுக்கும் அல் லாஹ்வை அஞ்சுங்கள் என்றே நாம் அறிவுறுத்தினோம். (4:131)'

அல்பகறா அத்தியாயத்தின் ஒரு தனித்தன்மை, இஸ்லாத்தின் ஐந்து அடிப்படையான அம்சங்களைக் குறித்தும் அது பேசுகிறது:

ஏகத்துவம்:

> மனிதர்களே, உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்கள் இறைவனையே வணங்குங்கள். (21)

தொழுகை:

> தொழுகைகளைப் பேணிவாருங்கள். குறிப்பாக, நடுத்தொழு கையைப் பேணுங்கள். அல்லாஹ்வுக்கு முன்னால் பணிந்த வர்களாக நில்லுங்கள். (238)

ஸகாத்:

*நம்பிக்கையாளர்களே, எந்த விதமான பேரமும் நட்பும் பரிந்துரையும் இல்லாத அந்த நாள் வருவதற்கு முன் நாம் உங்களுக்கு வழங்கியவற்றிலிருந்து செலவுசெய்யுங்கள்.* (254)

நோன்பு:

*நம்பிக்கையாளர்களே, உங்களுக்கு முன்னிருந்ததோர் மீது கடமையாக்கப்பட்டதைப் போன்றே உங்கள்மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது* ... (183)

ஹஜ்:

*ஹஜ்ஜையும் உம்றாவையும் அல்லாஹ்வுக்காக நிறைவு செய்யுங்கள்.* (196)

*அல்லாஹ் நாடியவரை அத்தியாயம் திறந்தே இருந்தது. அவனுடைய கட்டளைக்கேற்ப நபியவர்கள், அருளப்படும் வசனங்களை அதனோடு இணைத்துக்கொண்டிருந்தார்கள்.*

*குர்ஆனில் இறுதியாக அருளப்பட்ட பின்வரும் வசனத்தை நபியவர்கள்* **அல்பகறா** *அத்தியாயத்தின் வட்டிகுறித்த தலைப்போடு இணைக்கும்படி கட்டளையிட்டார்கள்:*

*அல்லாஹ்வின் பக்கம் திரும்பக் கொண்டுவரப்படும் அந்த நாளை அஞ்சிக்கொள்ளுங்கள். பின்னர், ஒவ்வொருவருக்கும் அவரவர் செய்தவற்றுக்கான கூலி முழுமையாக வழங்கப்படும்.* (281)

*அத்தியாயத்தின் ஆரம்ப பக்கங்களில் இறையச்சமுடையோரின் பண்புகள் மூன்று வசனங்களிலும் நிராகரிப்பாளர்களின் பண்புகள் இரு வசனங்களிலும் நயவஞ்சகர்களின் பண்புகள் பதிமூன்று வசனங்களிலும் படம்பிடித்துக் காட்டப்படுவதைக் காண்கிறோம். நயவஞ்சகர்களின் பண்புகள் இந்த அளவு அதிகமாகக் கூறப்பட்டிருப்பது அவர்களால் சமூகத்துக்கு ஏற்பட்ட கடுமையான தீங்கினையும் ஆபத்தையுமே உணர்த்துகிறது.*

*அல்லாஹ்வின் மீதும் மறுமைநாளின் மீதும் நம்பிக்கை கொள்ளும்படி விடுக்கப்பட்ட பொதுவான அழைப்பு, திருக்குர்ஆனின் அற்புதம்குறித்த, அதனை அறிவிப்பவரின் நம்பகத்தன்மைகுறித்த சுருக்கமான செய்தி ஆகியவற்றுக்குப் பிறகு இந்தத் தூதுத்துவத்தை எதிர்கொள்ளும் விதவிதமான மக்களைக் குறித்தும் நம்பிக்கையாளர்களுக்கும் நிராகரிப்பா*

ளர்களுக்குமிடையே அல்லது வாக்குறுதியை நிறைவேற்றுபவர்களுக்கும் வாக்குறுதியை மீறுபவர்களுக்குமிடையே காணப்படும் வேறுபட்ட நிலைப்பாடுகள்குறித்தும் பேச்சு திரும்புகிறது.

படைப்புகள் அனைத்தையும் பரிபாலிக்கும் இறைவனுடன் இவ்வாறு மோசமாக நடந்துகொள்ளலாமா? படைத்துப் பரிபாலித்து அருள் பாலிக்கும் இறைவனை நிராகரிக்கலாமா? அவனுடன் இவ்வாறு நன்றிகெட்டத்தனமாக நடந்துகொள்ளலாமா?

> நீங்கள் எப்படி அல்லாஹ்வை நிராகரிக்கிறீர்கள்? நீங்களோ உயிரற்றவர்களாக இருந்தீர்கள். அவன்தான் உங்களுக்கு வாழ்வளித்தான். பின்னர், அவனிடமே நீங்கள் திரும்பக் கொண்டுவரப்படுவீர்கள். (28)

அதற்குப் பிறகு, படைப்பின் ஆரம்பம் குறித்தும் மனிதனுக்கு வழங்கப்பட்ட பொறுப்புகள் குறித்தும் ஆதம் மற்றும் அவரது பிள்ளைகளோடு ஷைத்தான் மற்றும் அவனுடைய சந்ததிகளுக்கு நடைபெறும் நிலையான மோதல்குறித்தும் பேசப்படுவது இயல்பான ஒன்றாகவே இருக்கிறது. இந்த மோதல் யூதர்களுக்கும் அழைப்பாளர்களில் இறுதியானவருக்கும் மத்தியிலான பகைமை வடிவில் மீண்டும் வெளிப்படுகிறது. சத்தியத்துக்கு எதிரான இந்த நிலையான போரில் யூதர்கள் ஷைத்தானின் படைகளில் இணைவதற்கே விரும்பினார்கள்.

ஆகவே, மதீனாவின் ஆரம்ப கட்டத்தில் அருளப்பட்ட அல்பகறா அத்தியாயம் இறுதித் தூதுத்துவம் குறித்த யூதர்களின் நிலைப்பாட்டையும் அவர்களின் பழைய, புதிய பிழையான வழிமுறைகளையும் பொய்யென நிரூபிக்கக்கூடியதாக இருந்தது. பின்வரும் வசனம் அதன் தொடக்கமாக இருக்கிறது:

> இஸ்றாயீலின் மக்களே, நான் உங்களுக்கு வழங்கிய அருட்கொடைகளை நினைவுகூருங்கள். நீங்கள் எனக்களித்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள், நான் உங்களுக்களித்த வாக்குறுதியை நிறைவேற்றுவேன். என்னையே அஞ்சுங்கள். நான் அருளியுள்ளதன் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். அது உங்களிடம் உள்ளதை உண்மைப்படுத்துகிறது. அதனை மறுப்பவர்களில் முதன்மையானவர்களாக ஆகிவிடாதீர்கள். (40,41)

யூதர்களிடம் உள்ளவற்றை குர்ஆன் பொதுவான முறையில்தான் உண்மைப்படுத்துகிறது. வேதக்காரர்கள், அல்லாஹ்வையும் அவன் தூதர்கள்மீது இறக்கும் வஹீயையும் மறுக்கும் சிலை வழிபாட்டாளர்

களைப் போன்றவர்கள் அல்லர். அவர்கள் குறிப்பிடும் அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை, வஹீயை நம்புதல், மனிதர்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்பு, இவ்வுலகில் செய்த செயல்களுக்கு மறுவுலகில் வழங்கப்படும் கூலி ஆகிய பொதுவான விசயங்களைத்தான் குர்ஆன் உண்மைப்படுத்து கிறது என்பதாகும். ஆனாலும், அது அவர்களின் பிழையான, மடத்தன மான நம்பிக்கைகள் எவற்றையும் உண்மைப்படுத்துவதில்லை. எடுத்துக் காட்டாக, 'அல்லாஹ் இந்தப் பூமியை வெள்ளத்தால் மூழ்கடித்த பிறகு வெட்கமடைந்தான்.' என்ற அவர்களின் கூற்று, 'அல்லாஹ் பூமியில் நடந்தான். பின்னர், தன் தூதர் இப்றாஹீமிடம் சென்று அவருடன் மதிய உணவு அருந்தினான்.' என்று பழைய ஏற்பாட்டில் இடம்பெற்ற குறிப்பு, 'அல்லாஹ் யஅகூபுடன் இரவில் நீண்ட நேரம் சண்டையிட்டு அவரை வீழ்த்தினான். பின்னர், அவன் அவருக்கு இஸ்றாயீல் என்ற பட்டத்தை அளிக்காதவரை அவனால் அவரிடமிருந்து விடுபட முடியவில்லை.' என்று பழைய ஏற்பாட்டில் இடம்பெற்ற குறிப்பு ஆகியவை.

யூதர்களிடம் உள்ளவற்றை குர்ஆன் உண்மைப்படுத்துகிறது என்பதன் பொருள் குர்ஆன் ஏற்றுக்கொண்ட பொதுவான விசயங்களைத்தான். அவற்றின் ஒளியில் அவர்களை நியாயமாக அணுகுவதற்காகத்தான் குர்ஆன் அவற்றைக் குறிப்பிடுகிறது.

இஸ்றாயீலின் மக்களுடைய நீண்ட நெடிய வரலாற்றிலிருந்து பதினாறுக்கும் மேற்பட்ட விவகாரங்களை இந்த அத்தியாயம் எடுத் துரைக்கிறது. அவையனைத்தும் தவ்றாத்தில் குறிப்பிடப்பட்டவைதாம். ஆனாலும், அவர்கள் அவற்றைக் கொண்டு படிப்பினை பெறக்கூடிய வர்களாகவும் அவற்றுக்காக அல்லாஹ்வுக்கு நன்றிசெலுத்தக்கூடியவர் களாகவும் இருக்கவில்லை.

'ஃபிர்அவ்னுடைய கூட்டத்தாரிடமிருந்து நாம் உங்களைக் காப்பாற்றிய சந்தர்ப்பத்தை நினைவுகூருங்கள். அவர்கள் உங்களைக் கொடிய வேத னையில் ஆழ்த்திவைத்திருந்தார்கள். (49)' என்ற வசனத்தின் மூலம் இந்த விவகாரங்களின் கணக்கு தொடங்குகிறது. யூதர்கள் இந்த அருட் கொடையை மதித்தார்களா? பின்னர் இஸ்றாயீலின் மக்களுடைய கண் ணெதிரிலேயே அல்லாஹ் ஃபிர்அவ்னின் கூட்டத்தாரை மூழ்கடித்தானே, இந்தத் தண்டனையின் நீதியை யூதர்கள் உணர்ந்தார்களா? அநியாயக் காரர்களை அழித்ததற்காக அவர்கள் தங்கள் இறைவனைப் புகழ்ந்தார் களா?

திருக்குர்ஆன் தொடர்ந்து பல பக்கங்களில் இவற்றை நினைவூட்டிக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருக்கிறது. யூத உள்ளம் நீண்ட இந்தக்

கணக்கெடுப்புக்குப் பின்னர் விழித்துக் கொண்டதா அல்லது சிலை வழிபாட்டாளர்களைவிட மோசமான முறையில் நிராகரிப்பில் நிலைத்திருந்ததா?

ஒரு சமூகத்தின் வரலாறாக இந்த அத்தியாயம் பதிவுசெய்துள்ளவை இவற்றைவிட முக்கியமான ஒன்றை அடைவதற்காகவேயாகும். அதனையே நாம் மார்க்க ஒற்றுமை என்று குறிப்பிடுகிறோம். திருக்குர்ஆன் இந்த அத்தியாயத்தில் அதனையே படம்பிடித்துக் காட்டுகிறது.

❖ ❖ ❖

குறுகிய மார்க்க வெறிக்கு முன்னால் இஸ்லாம் மனிதர்கள் அனைவருக்கும் உரிய, ஆரோக்கியமான இயல்பின் அடிப்படையிலும் தெளிவான அறிவின் அடிப்படையிலும் நிலைபெற்றுள்ள விசாலமான ஒரே மார்க்கத்தை எடுத்துரைத்தது. யூதர்களும் கிறிஸ்தவர்களும் சத்தியத்தையும் வெற்றியையும் தங்களுக்கு மட்டுமே உரித்தானவையாகக் கருதினார்கள். ஏன் அவன் ஒரு சாராருக்கு மட்டும் சார்பாகத் தீர்ப்பளிக்க வேண்டும்?

> யூதர்கள் அல்லது கிறிஸ்தவர்களைத் தவிர வேறு யாரும் சுவனத்தில் நுழைய மாட்டார்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள். அது அவர்களின் வீணான ஆசையே ஆகும். நீர் கூறும், நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் உங்கள் ஆதாரத்தைக் கொண்டுவாருங்கள். (111)

இன்னொரு வகையான மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அல்லாஹ்வைச் சரியான முறையில் அறிந்து அவனுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டுள்ளார்கள். தங்களின் எண்ணங்களைத் தூய்மையாக்கி, தங்களின் செயல்களைச் சீர்படுத்தியுள்ளார்கள். அவர்களின் முயற்சிகளை அல்லாஹ் ஏன் வீணாக்க வேண்டும்?

> அப்படியல்ல. யார் தம்மை முழுமையாக அல்லாஹ்விடம் ஒப்படைத்து, தூய எண்ணத்துடன் நற்செயல் புரிபவராகவும் இருக்கிறாரோ அவரது கூலி அவருடைய இறைவனிடத்தில் உள்ளது. இத்தகையோருக்கு எவ்வித அச்சமும் இல்லை. அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள். (112)

இந்த அடிப்படையில் திருக்குர்ஆன் வேதக்காரர்களிடம் அல்லாஹ்வின் மீதும் தூதர்கள் அனைவரின் மீதும் நம்பிக்கை கொள்ளும்படியும் சத்தியம் தங்களுக்கு மட்டுமே உரித்தானது என்று ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் அலங்கரித்துக் காட்டும் கர்வத்தைவிட்டு நீங்கிவரும் படியும் அழைப்பு விடுக்கிறது:

‘யூதர்களாகவோ கிறிஸ்தவர்களாகவோ ஆகிவிடுங்கள். நீங்கள் நேர்வழிபெறுவீர்கள்.’ என்று அவர்கள் கூறுகிறார்கள். நீர் கூறும், ‘அப்படியல்ல. நாங்கள் இப்றாஹீமின் மார்க்கத்தைப் பின்பற்று கிறோம். அவர் எல்லாவற்றையும்விட்டு விலகி இறைவனின் பக்கம் முழுமையாகச் சாய்ந்தவராக இருந்தார். அவர் இணைவைப்பாளராக இருக்கவில்லை.’ (135)

பின்னர், மனிதர்களுக்கு வழிகாட்டுவதற்காக அல்லாஹ் அனுப்பிய தூதர்கள் அனைவரையும் உள்ளடக்கும் அளவு ஈமானின் வட்டத்தை விசாலமாக்கும்படி அவர்களுக்கு அழைப்பு விடுக்கிறது:

நீங்கள் கூறுங்கள், ‘நாங்கள் அல்லாஹ்வின் மீதும் எங்களுக்கு அருளப்பட்டதன் மீதும் இப்றாஹீம், இஸ்மாஈல், இஸ்ஹாக், யஅகூபு மற்றும் அவரது சந்ததிகளுக்கு அருளப்பட்டதன் மீதும் மூசாவுக்கும் ஈசாவுக்கும் வழங்கப்பட்டதன் மீதும் ஏனைய தூதர்களுக்கு அவர்களின் இறைவனிடமிருந்து வழங்கப்பட்டதன் மீதும் நம்பிக்கை கொண்டோம். அவர்களுக்கிடையே நாங்கள் எவ்வித வேறுபாட்டையும் காட்ட மாட்டோம். நாங்கள் அல்லாஹ் வுக்குக் கீழ்ப்படிந்தவர்களாக இருக்கிறோம்.’ (136)

இவைதாம் இந்த அத்தியாயம் தெளிவுபடுத்தும் மார்க்க ஒற்றுமையின் அடித்தளங்கள். யூதர்களும் கிறிஸ்தவர்களும் இந்த மார்க்கத்தில் நுழைந்துவிடும் பொருட்டும் அவர்கள் முஸ்லிம்களுடன் சகோதரத்துவ உணர்வைப் பேணும் பொருட்டும் இவையே எடுத்துரைக்கப்படுகின்றன. இந்த விளக்கத்துக்கு முன்னால் இஸ்லாம் என்பது புதிய மார்க்கம் அல்ல, அது முந்தைய தூதர்கள் கொண்டுவந்த அதே மார்க்கம்தான் என்பதைத் திருக்குர்ஆன் தெளிவுபடுத்திவிடுகிறது.

தாங்கள் யஅகூபின் பிள்ளைகள் என்பதில் யூதர்கள் பெருமிதம் கொண்டார்கள். அவர்தான் பின்னர் இஸ்றாயீல் என்று அழைக்கப்பட்டார். அவருடைய பெயரால்தான் ஆட்சி நிறுவப்பட்டது. யஅகூபு எப்படிப் பட்டவராக இருந்தார்? அவர் அல்லாஹ்வுடன் தொடர்புகொண்டவராக, அவனைச் சரியான முறையில் அறிந்தவராக, அவனுடைய கட்டளைக்கு முழுமையாகக் கட்டுப்பட்டவராக, தம்முடைய பிள்ளைகளை அவன்மீது நம்பிக்கை கொள்ளும்படி அழைப்பவராக, தம்முடைய மரணத்துக்கு முன்னர் அவன்மீது கொண்ட நம்பிக்கையில் அணுவளவுகூட விலகி விடக் கூடாது என்று தம் பிள்ளைகளுக்கு இறுதி உபதேசம் செய்பவராக இருந்தார்:

யஅகூபுக்கு மரணம் நெருங்கிய சமயத்தில் நீங்கள் அங்கே இருந்தீர்களா? அப்போது அவர் தம் பிள்ளைகளிடம், 'எனக்குப் பின் நீங்கள் யாரை வழிபடுவீர்கள்?' என்று கேட்டார். 'உங்கள் இறைவனும் உங்களின் முன்னோர் இப்றாஹீம், இஸ்மாஈல், இஸ்ஹாக் ஆகியோரின் இறைவனுமான ஒரே இறைவனையே நாங்கள் வழிபடுவோம். நாங்கள் அவனுக்கே கீழ்ப்படிந்தவர்களாக இருக்கிறோம்' என்று அவர்கள் கூறினார்கள். (133)

இந்த இஸ்லாம்தான் உயிரினங்களுக்கும் அவற்றின் இறைவனுக்கும், மனிதர்களுக்கும் அவர்களின் இறைவனுக்கும் மத்தியில் இருக்கக்கூடிய ஒரே அறிவுபூர்வமான தொடர்பாகும். படைப்புகள் அனைத்தையும் தனக்கு அடிமைகளாக, பணிந்தவையாகக் கருதும் உரிமை படைப்பாளனுக்கு இல்லையா? அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுவது மார்க்கம் இல்லை என்றால் அவன் கட்டளையை மீறுவதா மார்க்கம்? அவன் கட்டளையிடாதவற்றைக் கொண்டு ஆட்சிசெய்வதுதான் மார்க்கமா?

முஹம்மது (ஸல்) பொருள்கள் அனைத்தையும் அவற்றின் மூலங்களை நோக்கித் திருப்பினார். அல்லாஹ்வுக்காகப் பாதையை ஒழுங்குபடுத்தினார். அதனைத் தவிர வேறு பாதைகள் இல்லை. ஆகவேதான், இந்த அத்தியாயத்தில் இவ்வாறு வந்துள்ளது:

நீங்கள் நம்பிக்கை கொண்டதுபோல அவர்களும் நம்பிக்கை கொண்டால் அவர்கள் நேர்வழிபெற்றவர்களாவர். அவர்கள் புறக்கணித்தால் அவர்கள் பிடிவாதத்தில் இருப்பவர்களாவர். அவர்கள் விசயத்தில் அல்லாஹ்வே உமக்குப் போதுமானவன். அவன் செவியேற்பவனாகவும் நன்கறிந்தவனாகவும் இருக்கிறான். (137)

இந்த வசனத்தில் நாம் இரு ஒழுக்கங்களைக் காண்கிறோம். ஒன்று, நாங்கள் நம்பிக்கை கொண்டதுபோன்று நம்பிக்கை கொள்ளுங்கள் என்று கூறப்பட்டுள்ளது. எங்களின் நம்பிக்கையையே மேற்கொள்ளுங்கள் என்று கூறப்படவில்லை. இது அவர்களுக்கு வழங்கப்பட்ட மதிப்பையே காட்டுகிறது. அவர்களுக்குச் செயல்படும் சுதந்திரம் வழங்கப்படுகிறது. மற்றபடி ஈமான் என்பது ஒன்றுதான்.

இரண்டாவது, அவர்களின் நிராகரிப்பு அவர்களைத் தாக்குவதற்கான காரணமாக ஆக்கப்படவில்லை. மாறாக, அவர்களின் விவகாரங்கள் அப்படியே விட்டுவிடப்பட்டுள்ளன. அவர்களின் தீங்கு மிகைத்து அவர்கள் எதிர்க்கத் தொடங்கிவிட்டால் அல்லாஹ் நம்மைப் பாதுகாப்பான், அவனே நமக்குப் போதுமானவன் என்ற அடிப்படையில்.

இவைதான் இந்த அத்தியாயம் வரைந்துகாட்டும் ஒன்றிணைவின் மையங்கள். இன்னும் சில சந்தேகங்களை மட்டும் நாம் தெளிவுபடுத்த வேண்டியிருக்கிறது. தூதர்கள் அனைவரும் முஸ்லிம்கள் என்பதன் பொருள் என்ன? முஹம்மது (ஸல்) மக்களிடம் அறிமுகப்படுத்தியது தானே இஸ்லாம் என்று அறியப்படுகிறது?

மீண்டும் மீண்டும் சொல்லப்படும் உண்மை, எப்போதும் இந்த மார்க் கம் ஒன்றுதான். அது அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வதும் செயல் களைச் சீர்படுத்திக்கொள்வதுமாகும். இதுதான் இஸ்லாம் என்பதன் பொருள்.

வெறுமனே அறிவது மட்டும் போதாது. அறிதலோடு, 'கேட்டோம், கீழ்ப்படிந்தோம். எங்கள் இறைவா, உன் மன்னிப்பை வேண்டுகிறோம். உன் பக்கமே நாங்கள் திரும்ப வேண்டும். (285)' என்று கூறுவதும் அவசியம். அல்லாஹ்வே எல்லாவற்றையும் படைத்தான் என்பதை இப்லீஸ் நன்றாக அறிந்திருந்தான். ஆனாலும் அந்த அறிதல் அவனுக்குப் பயனளிக்கவில்லை. அந்த அறிதலோடு அல்லாஹ்வுக்கு முழுமையாகக் கட்டுப்படுவதும் அவனது திருப்தியை அடைய முயல்வதும் அவசியம். இப்லீஸ் அவ்வாறு செய்ய மறுத்ததால் அல்லாஹ்வின் அருளிலிருந்து விரட்டப்பட்டான்.

தூதர்கள் அனைவரும் அல்லாஹ்வைக் குறித்து சரியான முறையில் அறிமுகம்செய்தார்கள். அதே போன்று, அடியார்கள் அவனுக்குக் கட்டுப் பட வேண்டிய அவசியத்தையும் அறிவித்தார்கள்.

இவ்வாறுதான் நூஹ், இப்றாஹீம், மூசா, ஈசா, முஹம்மது ஆகிய தூதர்கள் அனைவரும் செய்தார்கள். அவர்கள் தங்களின் இஸ்லாத்தை அறிவிக்கும் வசனங்களை இங்கு நாம் குறிப்பிடவில்லை. அவை அதிக மானவை. காலத்திற்கேற்ப அவர்களுக்கு வழங்கப்பட்ட சட்டங்களில் சிறு சிறு மாறுதல்கள் இருந்தாலும் அவர்கள் அனைவரும் இஸ்லாத்தின் பக்கம் அழைக்கும் அழைப்பாளர்களாகவே இருந்தார்கள்.

ஒரு மனிதன் சிறுவயதில் 'இன்னார்' என்று அழைக்கப்படுகிறான். அவன் பெரியவனாகிவிட்டாலும் அவன் பெயர் மாறுவதில்லை. அவன் செய்யும் செயல்களின் வட்டம் விரிவடைந்துவிட்டாலும் சரியே. தற்காலத் தில் மார்க்கத்தின் பரப்பளவு நூஹ் காலத்தின் மார்க்கத்தின் பரப்பளவோடு அப்படியே பொருந்திப்போகும் என்று நாம் எண்ணுவது அறிவுடைமை யாகாது. இங்கும் அங்கும் பரப்பளவின் தலைமையகம் ஒன்றுதான். அதன் பரப்பளவு மக்கள்தொகைக்கேற்ப விசாலமடையலாம். மின்சார

இணைப்புகள் சில ஊர்களில் ஒரு மைல் அளவுதான் இருக்கும். சில நகரங்களில் அது பல மைல்கள் பரவியிருக்கலாம். ஆனால், பொருள் ஒன்றுதான்.

மூசாவும் ஈசாவும் மக்களுடன் பெற்ற நீண்ட அனுபவங்களுக்குப் பிறகு முஹம்மது வெளிப்பட்டார். இறுதியாக அவர் கொண்டுவந்த மார்க்கத்தின் மூலம் தவறுகளைச் சரிசெய்தார்; வழிகேடுகளைச் சீர்படுத்தினார்; மார்க்கத்தில் புகுந்துவிட்ட புதிய விசயங்களைக் களைந்தார்; மக்கள் மறந்து விட்ட பல அடிப்படையான உண்மைகளை வேதத்தின் மூலம் கொண்டுவந்தார். இதனால் அவர் மார்க்கத்தை அதிகப்படுத்திவிட்டார் என்று கூற முடியுமா?

மனிதச் சமூகத்தில் புகுந்துவிட்ட பிழைகளை அகற்றுவதற்கும் அதனைச் சரியான பாதையில் ஒழுங்குபடுத்துவதற்கும் முஹம்மதின் தூதுத்துவம் மிக அவசியமானதாக இருந்தது. குறிப்பாக, வேதக்காரர்கள் தமக்குத்தாமே இழைத்துக்கொண்ட பெரும் துன்பங்களை நீக்குவதிலும் அது திருப்புமுனையாக இருந்தது.

அல்லாஹ் ஒருவனே என்பதையும் ஈசா மற்ற படைப்புகளைப் போன்று ஓர் அடிமைதான் என்பதையும் அவர் தம் சீடர்களுடன் இணைந்து உண்மையான இஸ்லாத்தின் பக்கமே அழைத்தார் என்பதையும் கிறிஸ்தவர்களுக்குக் கட்டாயம் அறிவிக்க வேண்டியிருந்தது. யூதர்களுக்கு அவர்களின் கர்வத்தைத் தவறெனக் காட்டவும் அவர்களிடம் இருக்கும் வேதத்தை அழுக்குகளிலிருந்து தூய்மைப்படுத்தவும் அல்லாஹ் ஒரு குறிப்பிட்ட இனத்திற்கு மட்டும் உரியவன் அல்ல என்பதை அவர்களுக்குப் பிரகடனம்செய்யவும் வேண்டியிருந்தது.

மூசாவையும் ஈசாவையும் பின்பற்றிய நல்லோர்கள் முஹம்மதைப் பின்பற்றியவர்களுடன் இணைவார்கள் அல்லது முஹம்மதைப் பின்பற்றுபவர்கள் இந்தப் பொதுவான கட்டளையில் இணைந்துவிடுவார்கள்:

> நம்பிக்கை கொண்டவர்கள், யூதர்கள், கிறிஸ்தவர்கள், ஸாபிஈன்கள் ஆகியோரில் யார் அல்லாஹ்வின் மீதும் மறுமைநாளின் மீதும் நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிகிறார்களோ அவர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை. அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள். (62)

அவர்களைத் தவிர மற்ற வேதக்காரர்கள் வேதம் என்றால் என்ன, ஈமான் என்றால் என்ன என்பதை அறியாமல் சிலை வழிபாட்டாளர்களோடு போட்டி போட்டுக்கொண்டு இச்சைகளுக்குப் பின்னால்

ஓடிக்கொண்டு வாழ்கிறார்கள். அல்லாஹ்விடத்தில் அவர்களின் எந்த வாதமும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்படாது. அவர்களின் இந்த வழிகேட்டோடு ஓரிறைக் கொள்கைவாதிகளுக்கு எதிரான பொறாமையும் அவர்களின் வழிபாட்டுத் தலங்களை இடிக்கும் பிடிவாதமும் இணைந்துவிட்டால் என்னவாகும்?

அல்லாஹ்வின் இல்லங்களில் அவனது பெயர் நினைவுகூரப்படுவதைத் தடுத்துக் கொண்டும் அவற்றைப் பாழாக்க முயன்றுகொண்டும் இருப்பவனைவிட மிகப் பெரிய அக்கிரமக்காரன் யார்? பயந்தவர்களாகவே அன்றி அவர்கள் அவற்றில் நுழைந்திருக்கக் கூடாது. அவர்களுக்கு இவ்வுலகில் இழிவும் மறுமையில் கடுமையான வேதனையும் உண்டு. (114)

ஹிஜ்றத்துக்குப் பிறகு இறங்கிய இந்த அத்தியாயம் அச்சமயத்தில் வாழ்ந்த முஸ்லிம் சமூகத்தை அதன் பழமையான அடித்தளங்களின் மீது கட்டியெழுப்பியது. பல்வேறு மார்க்கங்களைப் பின்பற்றுபவர்களிடையே தொடர்புகளை நிலைநிறுத்தும் அடித்தளங்களை அது ஊன்றியது. அதே சமயம், அது தூதர்கள் அனைவரும் கொண்டுவந்த மார்க்கம் ஒன்றுதான் என்பதையும் பிரகடனம்செய்தது.

❖ ❖ ❖

இஸ்லாம் வெளிப்பட்டதிலிருந்தே யூதர்கள் அதனை வெறுப்புடனும் நிராகரிப்புடனும் எதிர்கொண்டார்கள். மார்க்கம் தங்களுக்கு மட்டுமே உரியது, அது தங்களைத் தாண்டி மற்றவர்களைச் சென்றடையாது என்று அவர்கள் எண்ணினார்கள். ஹிஜ்றத்துக்குப் பிறகு இஸ்லாம் அவர்களின் இருப்பிடத்துக்கு நெருக்கமாக வந்தபிறகு அதற்கு எதிராக, அதனைப் பின்பற்றுபவர்களுக்கு எதிராகச் சூழ்ச்சிகளில் ஈடுபடத் தொடங்கினார்கள்.

நபியவர்கள், யூதர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் தொடர்புகளை ஒழுங்குபடுத்தும் ஒப்பந்தம்செய்தார்கள். விருப்பமின்றியே அவர்கள் அதனை ஏற்றுக்கொண்டார்கள். ஆனாலும், அவர்கள் புதிய மார்க்கத்தைக் குறைகூறிக்கொண்டும் பரிகாசம்செய்துகொண்டும் அதற்கு எதிராகச் சதித்திட்டங்கள் தீட்டிக்கொண்டும் இருந்தார்கள்.

யூதர்களின் நிலைப்பாடுகளை அம்பலப்படுத்தி, அவர்களின் கடந்த காலச் செயல்பாடுகளை விமர்சித்து தொடர்ந்து வசனங்கள் அருளப்பட்டுக்கொண்டிருந்தன. ஆனாலும், அவற்றால் அவர்களின் கர்வத்தை உடைக்கவோ உள்ளத்தை உருக்கவோ முடியவில்லை. தாங்கள் மட்டுமே இறைவனின் வஹீக்கு உரியவர்கள், தங்களை விடுத்து வேறொரு

சமூகத்தாரிடமிருந்து தூதரைத் தேர்ந்தெடுக்க இறைவனுக்கு அனுமதி இல்லை என்றே அவர்கள் கருதிவந்தார்கள்.

அவர்களின் வாதங்கள் அனைத்தையும் திருக்குர்ஆன் ஐயத்திற்குரியவையாக ஆக்கியது. நீங்கள் உங்களிடம் உள்ளவற்றை நம்புபவர்களாக இருந்தால் அவை உண்மைப்படுத்துவதை ஏன் மறுக்கிறீர்கள்?

> 'அல்லாஹ் அருளிய இந்த வேதத்தின் மீது நம்பிக்கை கொள்ளுங்கள்.' என்று அவர்களிடம் கூறப்பட்டால், 'எங்களுக்கு அருளப்பட்டவற்றின் மீதுதான் நாங்கள் நம்பிக்கை கொள்வோம்.' என்று கூறி அதற்குப் பின்னால் வந்த இந்த வேதத்தை நிராகரிக்கிறார்கள். ஆனால் இதுவோ சத்தியமானதாகவும் அவர்களிடம் உள்ளவற்றை உண்மைப்படுத்தக்கூடியதாகவும் இருக்கிறது. நீர் கேளும், 'உண்மையில் நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்தால் இதற்கு முன் இறைத் தூதர்களை ஏன் கொலைசெய்துகொண்டிருந்தீர்கள்?' (91)

அவர்கள் தங்களின் வாதங்களில் பொய்யர்கள் என்பதைத் திருக்குர்ஆன் நிறுவிக்கொண்டே செல்கிறது. அவ்வாறு இல்லையெனில் அவர்கள் இறைத்தூதர்களைக் கொலைசெய்திருக்க மாட்டார்கள்; ஒப்பந்தங்களை முறித்திருக்க மாட்டார்கள்; பாவங்களில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள். இதுதான் ஈமானா என்ன? 'நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்தால் உங்களின் நம்பிக்கை கற்றுக்கொடுப்பது எவ்வளவு மோசமானது! (93)'

அவர்கள் விலகிக்கொள்ளும் பொருட்டு இந்த அத்தியாயம் பத்துக்கு மேற்பட்ட நினைவூட்டல்களை அவர்களுக்கு வழங்கியது. ஆனாலும் அவர்கள் அறிவுரைபெறவில்லை. தங்களின் வழிகேடுகளிலிருந்து விலகவுமில்லை. அவை முஸ்லிம் சமூகத்துக்கான அறிவுரைகளாகவும் இருக்கின்றன. அது நேர்வழியில் நிலைத்திருக்கவும் அவற்றிலிருந்து பயனடையவும் கோபத்துக்குள்ளானோரின் வழிகளைவிட்டுத் தவிர்ந்திருக்கவும் வேண்டும் என்பதற்காக. இதற்கு முன்னால் யூதர்களிடம் கூறப்பட்டது, 'நீங்கள் எனக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள், நான் உங்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவேன். (40)' இப்போது முஸ்லிம்களுக்குக் கூறப்படுகிறது, 'நீங்கள் என்னை நினைவுகூருங்கள், நானும் உங்களை நினைவுகூருகிறேன். நீங்கள் எனக்கு நன்றிசெலுத்துங்கள். நன்றிகெட்டத்தனமாக நடந்துகொள்ளாதீர்கள். நம்பிக்கையாளர்களே, பொறுமையின் மூலமும் தொழுகையின் மூலமும் உதவி தேடுங்கள் ... (152,153)'

யூதர்கள் மார்க்கத்தின் உண்மையான நோக்கத்தை விட்டுவிட்டு வெளிப்படையான வடிவத்தைப் பற்றிக்கொண்டார்கள். முஸ்லிம்களே,

நீங்கள் சத்தியத்தை, அதன் அடித்தளங்களை உள்ளபடியே பற்றிக் கொள்ளுங்கள். 'நன்மை என்பது உங்கள் முகங்களைக் கிழக்குத் திசை நோக்கியோ மேற்குத் திசை நோக்கியோ திருப்பிக்கொள்வதில் இல்லை. மாறாக, நன்மை என்பது ஒருவர் அல்லாஹ்வின் மீதும் மறுமைநாளின் மீதும் வானவர்களின் மீதும் வேதத்தின் மீதும் தூதர்களின் மீதும் நம்பிக்கை கொள்வதும் தம் செல்வத்தின் மீது ஆசையிருந்தும் அதனை உறவினர் களுக்கும் அநாதைகளுக்கும் ஏழைகளுக்கும் வழிப்போக்கர்களுக்கும் யாசிப்போருக்கும் அடிமைகளை விடுதலைசெய்வதற்கும் செலவு செய்வதும் தொழுகையைக் கடைப்பிடித்து கடமையாக்கப்பட்ட தர்மத்தை அளிப்பதும் வாக்குறுதியளித்தால் அதனை நிறைவேற்றுவதும் கடுமை யிலும் சிரமத்திலும் போர் சமயத்திலும் பொறுமை காப்பதும் ஆகும். இத்தகையவர்கள்தாம் உண்மையாளர்கள்; இவர்கள்தாம் இறையச்ச முடையவர்கள்.' (177) நன்மையின் எதார்த்தத்தைத் தெளிவுபடுத்தும் தக்வாவின் அடித்தளங்களை நிலைநிறுத்தும் ஆறு விசயங்கள் இங்கு குறிப்பிடப்படுகின்றன.

இந்த அத்தியாயம் புதிய சமூகத்தைக் கட்டியெழுப்புகிறது. நாம் முன்னரே குறிப்பிட்டவாறு இஸ்லாத்தின் ஐந்து தூண்களைத் தெளிவு படுத்துகிறது. பின்னர், இஸ்லாமியக் குடும்பத்தைக் கட்டியெழுப்பு வதற்கும் நிலைநிறுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் அவசியமான ஏராள மான சட்டங்களைத் தெளிவுபடுத்துகிறது.

இந்த அதிகப்படியான விளக்கங்களோடு முந்தைய யூதர்களைக் குறித்து குறிப்பிடவும் அது மறக்கவில்லை. அவர்களிடையே அல்லாஹ்வின் வசனங்கள் தொடர்ந்து எடுத்துரைக்கப்பட்டும் அவர்கள் எவ்வாறு அவற்றை வீணாக்கினார்கள்? ஆகவே, அவர்கள்மீது உம் இறைவனின் வாக்கு உறுதியாகிவிட்டது. 'இஸ்றாயீலின் மக்களிடம் நாம் அவர்களுக்கு எவ்வளவு தெளிவான சான்றுகளை வழங்கியிருந்தோம் என்று நீர் கேளும். யார் அல்லாஹ்வின் அருட்கொடை தம்மிடம் வந்தபின்னரும் அதனை மாற்றிவிடுகிறாரோ அவர் அறிந்துகொள்ளட்டும், நிச்சயமாக அல்லாஹ் தண்டிப்பதில் கடுமையானவன். (211)'

இது 'உன்னிடம்தான் கூறுகிறேன், கேள், அருகில் இருப்பவளே.' என்ற அறபுப் பழமொழியைப் போன்றதாகும்.

இந்த அத்தியாயம், ஜிஹாதின் மூலம் பெரிய சமூகத்தின் பாதுகாப் பைக் குறித்தும் பல வகையான சட்டங்களின் மூலம் சிறிய சமூகத்தின் - குடும்பத்தின் - பாதுகாப்பைக் குறித்தும் பேசியுள்ளது. ஆனாலும், முஸ் லிம்களாகிய நாம் இந்த இரு விசயங்களையும் சரியாகக் கடைப்

பிடிப்பதில்லை. தற்சமயம் இஸ்லாமியக் குடும்பத்தின் சூழலைக் குறித்து பேசுவதைத் தாமதப்படுத்திவிட்டு, போரைக் குறித்தும் பகைமைக்காகச் செய்யப்படும் மற்ற வகையான போர்களிருந்து இஸ்லாம் கூறும் போரைத் திருக்குர்ஆன் எவ்வாறு வேறுபடுத்தித் தெளிவுபடுத்தியது என்பதைக் குறித்தும் சுருக்கமாகக் காணலாம்.

முஸ்லிம்களாகிய நாம் போர்களையும் அவற்றினால் ஏற்படும் உயிரிழப்புகளையும் பொருட்சேதங்களையும் விரும்புவதில்லை. ஆரோக்கியத்துக்கும் நாம் விரும்பும் மக்களிடையே வாழ்வதற்குமே நாம் முன்னுரிமையளிக்கிறோம். இந்த உணர்வுகளை இஸ்லாம் குறிப்பிட்ட சமயம் வரை அங்கீகரிக்கிறது.

> போர் புரிவது உங்கள்மீது கடமையாக்கப்பட்டுள்ளது, அது உங்களுக்கு வெறுப்பாக இருப்பினும் சரியே. ஒரு பொருள் நன்மையாக இருக்க நீங்கள் அதனை வெறுக்கக்கூடும். ஒரு பொருள் தீமையாக இருக்க நீங்கள் அதனை விரும்பக்கூடும். அல்லாஹ்வே நன்கறிவான். நீங்கள் அறிய மாட்டீர்கள். (216)

உரிமைகள் பாதுகாக்கப்பட்டு மார்க்கத்துக்கு மதிப்பளிக்கப்பட்டால் அமைதியாக வாழ்வது விரும்பத்தக்கது. ஆனால், அமைதி என்பதற்குச் சரணடைவதும் இழிவை ஏற்றுக்கொண்டு வாழ்வதும்தான் பொருள் என்றால் அதற்கு எவ்வித அனுமதியும் இல்லை.

குறிப்பிட்ட சமயங்களில் புனித மாதங்களில் போர்புரிய அளிக்கப்பட்டுள்ள அனுமதியிலிருந்து நீங்கள் இந்த விசயத்தைப் புரிந்துகொள்ளலாம். ‘அம்மாதத்தில் போர்புரிவது பெரும் குற்றம்தான் ... (217)’ ஆனால், நீங்கள் வரம்புமீறினால், அமைதியாக வாழக்கூடியவர்களை விரட்டினால், சரியான முறையில் வணக்க வழிபாடுகள் புரிவதைத் தடுத்தால் வரம்புமீறலைத் தடுக்கும் பொருட்டும் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டும் போரிட வேண்டாமா? ‘இறை வழியைவிட்டு அடியார்களைத் தடுப்பதும் இறைவனை நிராகரிப்பதும் மஸ்ஜிதுல் ஹறாம் என்னும் ஆலயத்தைவிட்டு மக்களைத் தடுப்பதும் அங்கு வசிப்பவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதும் அல்லாஹ்விடத்தில் அதைவிடப் பெரும் குற்றமாகும்.’ ‘குழப்பம் விளைவிப்பது கொலையை விடக் கொடியதாகும்.’ புனிதங்களையும் கொள்கைகளையும் பாதுகாக்கும் பொருட்டே இங்கு போர்செய்யப்படுகிறது.

நம்மிடம் இருப்பதை நாம் விட்டுவிடாதவரை, அவர்களின் மார்க்கத்தில் நுழையாதவரை நம்மைக் குறித்து திருப்தியடையாதவர்களுடன் நாம்

*எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்? நிச்சயமாக இங்கு போர்செய்யப் பட்டே ஆக வேண்டும். அதற்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல. அவர்கள் தாம் அதற்குப் பதிலளிக்க வேண்டும்.*

*இந்த முன்னுரைகளுக்குப் பிறகு நாம் பின்வரும் வசனத்தைத் தெளி வாகப் புரிந்துகொள்கிறோம்: 'உங்களுடன் போர்புரிபவர்களுடன் நீங் களும் அல்லாஹ்வின் பாதையில் போர்புரியுங்கள். வரம்புமீறாதீர்கள். வரம்புமீறுவோரை அல்லாஹ் நேசிப்பதில்லை. (190)' இது மறுமைநாள் வரை நீடிக்கக்கூடிய நிரந்தரமான கட்டளையாகும். திருக்குர்ஆனின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை வந்துள்ள யாவும் இந்தக் கட்டளையுடன் ஒத்துப்போகின்றன.*

*சிலர் பறாஅத் என்ற அத்தியாயம் இதற்கு மாறான கட்டளையைக் கொண்டுள்ளதாகக் கருதுகிறார்கள். இது தவறான எண்ணமாகும். பறாஅத் என்ற அத்தியாயத்தில் இடப்பட்டுள்ள போருக்கான கட்டளை நேர்மை யாக, நியாயமாக நடந்துகொள்ளும் மக்களுக்கு எதிரான கட்டளை அல்ல. மாறாக, அது பிடிவாதமுடைய, தம்மிடம் இருப்பவற்றைக் கொண்டு மக்களுக்குத் தீங்கிழைக்க விரும்புகின்ற மக்களுக்கு எதிராக இடப்பட்ட கட்டளையாகும். 'அவர்கள் செய்துகொண்டிருப்பது எவ்வளவு மோசமான காரியம்! அவர்கள் எந்த நம்பிக்கையாளரின் விசயத்திலும் உறவு முறை யையோ உடன்படிக்கையையோ பொருட்படுத்துவதில்லை. அவர்கள் தாம் வரம்புமீறியவர்கள். (9:9,10)'*

*பின்னர், நியாயமான போரைக் கொண்டு அவர்களை எதிர்கொள்ள அது விரும்புகிறது:*

> *தங்கள் வாக்குறுதிகளை முறித்துவிட்டுத் தூதரை வெளியேற்றத் துணிந்தவர்களுடன் நீங்கள் போரிட வேண்டாமா? அவர்கள்தாம் போரை முதலில் ஆரம்பித்தார்கள். நீங்கள் அவர்களுக்கு அஞ்சு கிறீர்களா? நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்தால் அல்லாஹ்வே அஞ்சுவதற்கு மிகத் தகுதியானவன். (9:13)*

*இங்கு இடப்பட்டுள்ள போருக்கான கட்டளை வரம்புமீறலில் ஈடு படாமல் இருப்பவர்களையும் உள்ளடக்கியது என்று எவரேனும் புரிந்து கொள்ள முடியுமா? அல்பகறா அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள 'வரம்பு மீறியோரைத் தவிர வேறு யாருடனும் போரிடக் கூடாது' என்ற கட்டளை இந்தக் கட்டளையை ரத்துசெய்துவிட்டது என்று கூறுவதும் தவறான புரிதலின் விளைவே. அது நிரந்தரமான கட்டளையை நிராகரிப்பதாகும். அவ்வாறு செய்தால் நாம்தாம் பழிப்புக்குரியவர்களாக ஆவோம்.*

இங்கு நாம் இன்னொரு விசயத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். திருக்குர்ஆன் குறிப்பிடும் சரியான, ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய போர் என்பது அல்லாஹ்வின் பாதையில் செய்யப்படும் போரேயாகும். தனி மனித கௌரவத்துக்காகவோ தனிப்பட்ட நலன்களுக்காகவோ அநியாயக் கார கூட்டத்துக்காகவோ செய்யப்படும் போர்கள் அல்ல.

தற்காலத்தில் உலகைச் சூழ்ந்துள்ள போர்கள் பலவீனர்களின் செல் வங்களைக் கொள்ளையடிப்பதற்காகவும் நாடுகளை அடிமைப்படுத்து வதற்காகவும் ஆயுத பலத்தைக் காட்டுவதற்காகவும் செய்யப்படும் போர் களே ஆகும். அவை ஒருபோதும் அல்லாஹ்வின் பாதையில் செய்யப் படும் போர்களாகாது. அவை ஷைத்தானின் பாதையில் செய்யப்படும் போர்களாகும்.

அல்லாஹ்வின் பாதையில் செய்யப்படும் போர் என்பது ஷைத்தானை வழிபடுவதை அகற்றிவிட்டு அல்லாஹ்வை வழிபடுவதை நிலை நிறுத்துவதற்காகச் செய்யப்படும் போராகும். ஆரம்பக் காலம்தொட்டே நல்லோர்கள் தங்களின் வணக்க வழிபாட்டின் மூலம் அல்லாஹ்வின் இல்லங்களை உயிர்ப்பிக்கும் பொருட்டு இந்தப் போருக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தார்கள்: ‘அல்லாஹ்வின் இல்லங்களில் அவனது பெயர் நினைவுகூரப்படுவதைத் தடுத்துக்கொண்டும் அவற்றைப் பாழாக்க முயன்றுகொண்டும் இருப்பவனைவிட மிகப் பெரிய அக்கிரமக்காரன் யார்? (114)’ ஆகவேதான், இந்தப் போர்களை அனுமதித்தவாறு அவன் கூறுகிறான்:

> இவ்வாறு அல்லாஹ் மக்களில் சிலரைச் சிலரைக் கொண்டு தடுக்கா விட்டால் பூமி குழப்பத்தால் சீர்குலைந்துபோயிருக்கும். ஆயினும், அல்லாஹ் அகிலத்தாரின் மீது பேரருள் புரிபவனாக இருக்கிறான். (251)

ஆம். சத்தியம் நிலைத்திருப்பது அதனைப் பின்பற்றுபவர்களின் வீரத் தோடு, அதனை மேலோங்கச்செய்வதற்காக அவர்கள் செய்யும் தியாகத் தோடு தொடர்புடையது.

❖ ❖ ❖

இந்த அத்தியாயத்தில் குடும்ப விவகாரங்களைக் குறித்து அதிகமாகப் பேசப்பட்டுள்ளது. திருக்குர்ஆனின் தொடக்கத்திலேயே இந்த அத்தியாயம் இடம்பெற்றிருப்பதால் இவை ஆரம்பத்தில் கூறப்பட்ட விசயங்கள் எனக் கருதப்படுகின்றன. இது தவறான கருத்தாகும். திருக்குர்ஆனின் மூன்றில் இருபங்கு வசனங்கள் இந்த அத்தியாயத்துக்கு முன்னரே அருளப்பட்டு விட்டன. அவை இவற்றுக்கு முன்னோட்டமான பல விசயங்களைக் கொண்டுள்ளன. இங்கு குடும்பவியல் சட்டங்களை ஆராயும்போது அவற்றையும் கவனத்தில் கொள்வது மிக அவசியம்.

அவற்றில் ஆண்-பெண் சமத்துவமும் ஒன்றாகும். அந்நஹ்ல் என்ற அத்தியாயத்தில் வந்துள்ளது: 'ஆணாயினும் பெண்ணாயினும் நம்பிக்கை கொண்ட நிலையில் நற்செயல் புரிபவராக இருந்தால் நாம் அவரை நல்வாழ்வு வாழச்செய்வோம். அவர்கள் செய்துகொண்டிருந்த நற்செயல் களுக்கான கூலியை நிச்சயம் நாம் வழங்கிடுவோம். (16:97)'

ஆச்சரியமான விசயங்களில் ஒன்று, ஃபிர்அவ்னின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் தம் காலத்தின் கொடுங்கோலனான ஃபிர்அவ்னுக்கு அறிவுரை கூறியவராக இந்தக் கட்டளையை நிறுவுவது:

> தீமைசெய்பவர் அதைப் போன்றதையே கூலியாகப் பெறுவார். ஆணாயினும் பெண்ணாயினும் நம்பிக்கை கொண்ட நிலையில் நற்செயல் புரிபவர்கள்தாம் சுவனத்தில் நுழைவார்கள். அங்கு அவர்கள் கணக்கின்றி உணவளிக்கப்படுவார்கள். (40:40)

அர்றூம் என்ற அத்தியாயத்தில், அல்லாஹ்வின் ஆட்சியதிகாரத்தில் காணப்படும் அவனுடைய சான்றுகள்குறித்த செய்தியிலும் இதுகுறித்து கூறப்படுகிறது: 'நீங்கள் நிம்மதியடைய வேண்டும் என்பதற்காக உங்கள் இனத்திலிருந்தே அவன் உங்களுக்குத் துணைகளைப் படைத்திருப்பதும் உங்களிடையே அன்பையும் இரக்கத்தையும் ஏற்படுத்தியிருப்பதும் அவனது சான்றுகளில் உள்ளவையாகும். (30:21)' அடியார்கள் மீது அல்லாஹ் பொழிந்த அருட்கொடைகளைத் தொடர்ச்சியாகக் குறிப்பிடும் அந்நஹ்ல் அத்தியாயத்திலும் இது உறுதிப்படுத்தப்படுகிறது: 'அல்லாஹ் உங்களுக்காக உங்களிலிருந்தே உங்கள் மனைவியரை ஏற்படுத்தியுள் ளான். உங்கள் மனைவியரிலிருந்து குழந்தைகளையும் பேரக் குழந்தை களையும் ஏற்படுத்தியுள்ளான் ... (16:72)'

பெண்ணின் இடமும் குடும்பத்தின் மதிப்பும் -இவையிரண்டையும் குறித்து ஏற்கனவே கூறப்பட்டுவிட்டன - புரிந்துகொள்ளப்பட்டால், இந்த அத்தியாயம் கருத்து வேறுபாடு தோன்றும் விசயங்களுக்கான விளக்கங்களை உள்ளடக்கியுள்ளது அல்லது புதிய நிகழ்வுகளுக்கான

அல்லாஹ்வின் கட்டளைகளைக் கொண்டுள்ளது என்று புரிந்துகொள்வதில் சிக்கல்கள் ஏதும் இல்லை. மனைவியுடன் உறவு கொள்ள மாட்டேன் என்று சத்தியம்செய்தல், மணமுறிவு, திருமணத்தை ரத்துசெய்தல், குழந்தை வளர்ப்பு, பாலூட்டுதல் ஆகியவை தொடர்பாகக் கூறப்பட்டுள்ளதில் விசித்திரம் ஏதும் இல்லை என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

குடும்ப விவகாரங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சட்டங்களை ஒழுக்க ரீதியான, ஈமானிய, இறையச்சம் சார்ந்த விதிகளை அகற்றிவிட்டு செயல்படுத்துவது சாத்தியமற்றது. ஒரு முஸ்லிம் தலாக் சொல்லியபிறகும் திரும்ப அழைத்துக்கொள்வது குறித்து யோசிக்கிறான். ஒரேயடியாக அவன் அறுத்துவிடுவதில்லை. மாறாக, அவன் சிந்தித்தே ஆக வேண்டும். முக்கியமான இந்தக் கட்டளையினூடே எட்டு அறிவுரைகள் வந்துள்ளன. அனைத்தும் இந்தக் கட்டளையைத் தொடர்ந்து வரக்கூடிய அறிவுரைகளே:

நீங்கள் பெண்களை விவாகரத்துசெய்து அவர்கள் தமக்குரிய காலக் கெடுவை அடைந்துவிட்டால்,

அ. அவர்களை முறைப்படி வைத்துக்கொள்ளுங்கள்.

ஆ. அல்லது முறைப்படி விடுவித்துவிடுங்கள்.

இ. துன்புறுத்துவதற்காகவும் வரம்புமீறுவதற்காகவும் அவர்களை நீங்கள் தடுத்துவைக்காதீர்கள்.

ஈ. அவ்வாறு செய்பவர் தமக்குத் தாமே அநீதி இழைத்துக் கொண்டவராவார்.

உ. அல்லாஹ்வின் வசனங்களைப் பரிகாசமாக எடுத்துக் கொள்ளாதீர்கள்.

ஊ. அல்லாஹ் உங்கள்மீது பொழிந்த அருட்கொடைகளையும் அவன் உங்களுக்கு அறிவுரையாக அருளிய வேதத்தையும் ஞானத்தையும் நினைவுகூருங்கள்.

எ. அல்லாஹ்வை அஞ்சுங்கள்.

ஏ. அல்லாஹ் எல்லாவற்றையும் நன்கறிந்தவன் என்பதை அறிந்து கொள்ளுங்கள். (231)

மக்களை ஒழுக்கரீதியாகப் பண்படுத்துவதற்கு ஒரு மார்க்கம் இவற்றைவிட அதிகமாக வேறென்ன செய்துவிட முடியும்? ஆனாலும், தலாக் விவகாரத்தில் சிலர் பைத்தியக்காரர்களாகவே ஆகிவிட்டார்கள். தான் சிகரெட் பிடித்தால் தன் மனைவி தலாக் ஆகிவிடுவாள் என்கிறான் ஒருவன். பின்னர் சிகரெட் பிடிக்கிறான். குடும்ப வாழ்வு சிதைந்து விடு

கிறது. இஸ்லாம் பெண்ணின் மீது அநீதி இழைத்துவிட்டதாகப் பழி சுமத்தப்படுகிறது.

என்னுடைய ஒரு கட்டுரையில், 'அல்லாஹ்வின் வரம்புகள்' என்ற வார்த்தை தலாக் குறித்த இரு வசனங்களில் ஆறு முறை இடம்பெற்றுள் ளது என்று குறிப்பிட்டுள்ளேன். இரு வசனங்களும், 'இவை அல்லாஹ் வின் வரம்புகளாகும். அறிந்துகொள்ளும் மக்களுக்காக அவன் இவற் றைத் தெளிவுபடுத்துகிறான். (230)' என்ற வாசகத்தோடுதான் நிறைவு பெற்றுள்ளன.

பெரும்பாலான முஸ்லிம்கள் இந்த வார்த்தையைக் கவனத்தில் கொள்வதில்லை. எத்தனை முறை மீண்டும் மீண்டும் இடம்பெற்றுள்ளது என்பதைக்கூட அவர்கள் அறிய மாட்டார்கள். அவர்கள் அறியாத மக்கள் என்றே தோன்றுகிறது.

பல சூழல்களில் பெண் அநீதி இழைக்கப்படுகிறாள். ஆனால் விசித் திரமான விசயம் என்னவெனில், பெண்ணுக்கு நீதி வழங்கிய இஸ்லாத் தின் போதனைகளே அவளது அநீதிக்குக் காரணமானவையாக இருக்கின் றன என்று கூறப்படுகிறது.

அல்லாஹ் கூறுகிறான்: 'அப்பெண்களுக்குப் பொதுவான வழக்கப்படி உரிமைகள் இருப்பதுபோலவே கடமைகளும் உள்ளன. ஆண்களுக்கு அவர்களைவிடச் சற்று அதிகமாகவே உள்ளன. (228)' என்னும் வசனம், அவர்களுக்கு உரிமைகளுக்கு இணையாக கடமைகளும் இருக்கின்றன என்பதோடு தலைமைத்துவம் ஆண்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறது. ஆனாலும் சில இடங்களில் நானே கண்டிருக்கிறேன். அங்கு பெண்களுக்கு எந்த உரிமையும் இருப்பதில்லை. அங்குள்ளவர்கள் பெண்களை இழிவாகவும் கடினமாகவும் நடத்துகிறார் கள். வீட்டில் மீதமான உணவுகளையே அங்குள்ள பெண்கள் உண்ணு கிறார்கள். மிகச் சிறந்த உணவுகளை மற்றவர்கள் உண்டுவிடுகிறார்கள்.

இதுபோன்ற மோசமான நடத்தைகளை எவ்வாறு இஸ்லாத்துடன் இணைக்க முடியும்?

வீட்டில் நிம்மதியைக் குலைக்கும் சில மோசமான பெண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களால் உண்டாகும் பிரச்சினைகளைக் காவலர்களைக் கொண்டா தீர்க்க முடியும்? மாறாக, அவர்களை நல்ல முறையில் பண்படுத்துதல், இறையச்சத்தைக் கடைப்பிடிக்கச்செய்தல், அல்லாஹ்வின் வரம்புகளைப் பேணச்செய்தல் ஆகியவற்றின் மூலமாகவே சீர்படுத்த முடியும்.

விசாலமான அறிவு, நற்பண்பு, தூய ஒழுக்கம், நியாயமாக நடத்தல், அல்லாஹ்வின் கட்டளையின்படி செயல்படுதல் ஆகியவை மிக அவசிய மான பண்புகளாகும்.

கிறிஸ்தவக் குழுக்கள் இஸ்லாமிய உலகைச் சூழ்ச்சிகளுடன் நோக்குவ தாக நான் கருதுகிறேன். அவர்கள் இந்தச் சமூகத்தின் ஓட்டைகளைத் தேடி அலைகிறார்கள். முஸ்லிம்களில் பெரும்பாலோர் பெண்களை இழிவு படுத்துவதை, இறைவன் பெண்களுக்கு வழங்கிய உரிமைகளை அதிகப் படியாக எண்ணுவதைக் காண்கிறார்கள். அதற்கு இஸ்லாம்தான் காரணம் என்று பழி சுமத்தி இஸ்லாத்தின் அநீதியிலிருந்து விடுபட கிறிஸ்தவத்தின் பக்கம் வாருங்கள் எனக் கிறிஸ்தவக் குழுக்கள் பெண்களுக்கு அழைப்பு விடுக்கின்றன.

மேற்கத்தியக் கல்வி பயின்றவர்களில் பெரும்பாலோர் இந்த வலையில் அகப்படுவதை நான் காண்கிறேன். அதற்கு முதன்மையான காரணமாக நான் கருதுவது, மார்க்கத்தைப் பின்பற்றுபவர்களிடம் ஒட்டியிருக்கும் அறியாமைக்காலப் பழக்கவழக்கங்கள்தாம்.

ஒரு கருத்தரங்கில் நான் பேசினேன், ‘ஆண்களுக்கு வழங்கப்பட்ட தலாக் உரிமையைப் போன்று பெண்களுக்கும் இஸ்லாம் ஃகுலா என்ற உரிமையை வழங்கியுள்ளது. ஒரு பெண் வெளிப்படையான அல்லது மறைமுகமான காரணங்களால் தன் கணவனை வெறுத்தால், அவள் தனக்கு அளிக்கப்பட்ட மணக்கொடையைத் திருப்பியளித்துவிட்டால் அதற்கு அவளுடைய கணவன் இணங்குவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்?’

கேட்டுக்கொண்டிருந்தவர்களில் ஒருவர் கூறினார், ‘கணவன் ஏதேனும் தீங்கிழைக்கும் பட்சத்தில்தான் மனைவி நீதிபதியிடம் சென்று மண உறவை ரத்துசெய்யுமாறு வேண்டலாம்.’ என்றார். நான் கூறினேன், ‘இது வேறு விசயம். அவள் தனக்குத் தீங்கிழைக்கப்பட்டதாக முறையிட வில்லை. அந்தக் கணவனுடன் வாழ்வதை ஏதேனும் ஒரு காரணத்தால் வெறுப்பதாகக் குறிப்பிடுகிறாள். அவன் செலவழித்த அனைத்தையும் திருப்பியளிக்க நாடுகிறாள். இவ்வாறு இருக்கும் பட்சத்தில் நாம் எதற்காக அவனுடன் வாழுமாறு அவளை நிர்ப்பந்திக்க வேண்டும்?’ அவர் கூறினார், ‘கணவன் விரும்பாதவரை இது அனுமதிக்கப்பட்ட ஒன்றல்ல.’ நான் கூறினேன், ‘இல்லை. இது அனுமதிக்கப்பட்ட ஒன்றுதான். நீதிபதி சமாதானத்தின் மூலம் அல்லது மணஉறவை ரத்துசெய்வதன் மூலம் அந்தப் பெண்ணின் விருப்பத்தை நிறைவேற்றலாம்.’

*பின்னர் அந்த மனிதர் என்னைப் பற்றி அவதூறாகக் கூறினார் என்பதை அறிந்துகொண்டேன். அவர் கூறியதைவிட்டும் நான் தூய்மையானவன். ஏனெனில், அவர் திருக்குர்ஆன்குறித்தும் நபிமொழிகள்குறித்தும் போதிய ஞானம் இல்லாதவர். தங்களை அறிஞர்களாகக் காட்டிக்கொள்ளும் மூடர்களுக்குக் கேடு உண்டாகட்டும்!*

நூஹ் வேறு, நூஹின் மனைவி வேறு, ஃபிர்அவ்ன் வேறு, ஃபிர்அவ்னின் மனைவி வேறு என்பதைத் தெளிவாகத் திருக்குர்ஆன் நிறுவிய பின்னரும் பெண்கள் தனித்துவம்மிக்கவர்கள் என்பதை மார்க்கத்தைப் பின்பற்றும் சிலர் மறுக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் அவரவர் செய்த வற்றுக்கான கூலியே வழங்கப்படும், 'யாரும் மற்றவருடைய சுமையைச் சுமக்க முடியாது.' பெண் ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கும்போது உரிமைகளும் கடமைகளும் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே பங்கிடப் பட்டுவிடுகின்றன. 'யார்மீதும் அவரது சக்திக்குட்பட்டே தவிர பொறுப்பு ஏற்றப்படாது. தாயும் தனது குழந்தையினால் சிரமத்திற்குள்ளாக்கப்பட மாட்டாள். தந்தையும் தனது குழந்தையினால் சிரமத்திற்குள்ளாக்கப்பட மாட்டான் ...' பாலூட்டுவதை நிறுத்த விரும்பினால் இருவரும் தங்களுக்குள் ஆலோசனைசெய்துகொள்ள வேண்டும். 'அவர்கள் இருவரும் தங்களுக்குள் ஆலோசித்துப் பாலூட்டுவதை மனநிறைவோடு நிறுத்த விரும்பினால் இருவரின் மீதும் எந்தக் குற்றமும் இல்லை ... (233)'

இன்று நம் சமூகங்களில் மறக்கடிக்கப்பட்டுவிட்ட மார்க்கச் சட்டங்களில் மணவிலக்குசெய்யப்பட்ட பெண்களுக்கு வழங்கப்படும் செல்வமும் (முத்ஆ) ஒன்றாகும். நீண்ட போராட்டத்துக்கும் நிராகரிப்புக்கும் பிறகே மணமுறிவு நிகழ்கிறது. அவை உன்னதமான உணர்வுகளை இல்லாமல் ஆக்கிவிடுகிறது. அல்லாஹ் அனுமதித்தவற்றில் மிக வெறுப்பானது தலாக்தான். அது ஏதேனும் ஒரு காரணத்தினால் நிகழ்ந்துவிட்டால் அழகிய வெகுமதியின் மூலம் அதனால் உடைந்த உணர்வுகள் சரிசெய்யப்பட வேண்டும்; எரியும் பகைமைத் தீ அணைக்கப்பட வேண்டும்.

> *மணவிலக்குசெய்யப்பட்ட பெண்களுக்கு முறைப்படி ஏதேனும் வழங்கிவிட வேண்டும். இது இறையச்சமுடையோர்மீது கடமையாகும். இவ்வாறு நீங்கள் புரிந்துகொள்ளும் பொருட்டு அல்லாஹ் தன் கட்டளைகளை உங்களுக்குத் தெளிவுபடுத்துகிறான். (242)*

முஸ்லிம்கள் குடும்பவியல் சட்டங்களை அறிந்துகொள்ள தங்களின் வேதத்தின் பக்கமும் நபிமொழிகளின் பக்கமும் திரும்ப வேண்டும் என

அவர்களுக்கு அழைப்பு விடுக்கிறேன். அவர்கள் இஸ்லாத்தின் அடிப் படையில் தங்கள் குடும்பத்தினரைப் பண்படுத்தி, தங்களின் சமூக, பண்பாட்டுத் தூதை நிறைவேற்ற வேண்டும். இதுகுறித்து உலகில் நிகழ்ந்துகொண்டிருப்பதையும் அவர்கள் கற்க வேண்டும். உலகம் பெண் களுக்குத் தலைமைத்துவ உரிமையை அளித்துக்கொண்டிருக்கும்போது முஸ்லிம்கள் பெண்களுக்குக் கார் ஓட்டுவதற்குக்கூட உரிமையளிக்க மறுப்பது அறிவுடைமை அல்ல.

❖ ❖ ❖

ஹிஜ்றத்துக்குப் பிறகு முஸ்லிம்கள் புத்துணர்வோடு திருக்குர்ஆனைப் பெற ஆரம்பித்தார்கள், அதற்கு முன்னால் அவர்கள் பதிமூன்று ஆண்டுகள் பெற்றுக்கொண்டிருந்ததைப் போல. சூழல் வெவ்வேறானதாக இருந்த போதிலும். மக்காவில் யூதர்களைக் குறித்த வரலாறு படிப்பினைக்காகவே அருளப்பட்டது. அது மதீனாவில் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் தழுவி நிலைபெற்றுள்ள தர்க்கத்துக்கும் போராட்டத்துக்கும் பதிலடி யாகவே அருளப்பட்டது.

மக்காவில் ஐந்து வேளை தொழுகைகள் தனித்தனியாகவே நிறை வேற்றப்பட்டன. மதீனாவில் தொழுகைக்கான அழைப்பு விடுக்கப்பட்டு கூட்டாக நிறைவேற்றப்பட்டது. கூட்டாகத் தொழுகையை நிறைவேற்று வது இஸ்லாத்தின் கடமைகளில் ஒன்றானது. நோயாளிகள்கூட மற்றவர் களால் தூக்கிவரப்பட்டு கூட்டுத் தொழுகையை நிறைவேற்றினார்கள். நயவஞ்சகர்களும் உண்மையான காரணங்களைப் பெற்றவர்களுமே தொழுகையைவிட்டுப் பின்தங்கினார்கள்.

இஸ்லாமிய ஆட்சியின் மைல்கற்களும் புதிய சமூகத்தின் பண்புகளும் வெளிப்பட ஆரம்பித்தன. மார்க்கம் விதித்த தனிப்பட்ட நடத்தைகளின் இடத்தைக் கூட்டு நடத்தைகள் பெற்றுக்கொண்டன. ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எனக் குடும்பத்தில் உள்ள அனைவரும் பள்ளிவாசல் களுக்குச் சென்றுகொண்டிருந்தார்கள். நன்மையை ஏவித் தீமையைத் தடுக்கும் பொருட்டு குடும்பத்திலும் சமூகத்திலும் சம அளவில் தடை செய்யப்பட்டவை விரட்டப்பட்டன. புதிய இருப்பிடத்தில் ஈமானைப் பாதுகாப்பதற்கும் எதிர்ப்புகளை அகற்றுவதற்கும் சிறிய படைகள் உரு வாக ஆரம்பித்தன.

திருக்குர்ஆன் ஒன்றுக்கொன்று தொடர்புடைய பல பொருள்களை, நோக்கங்களைக் கொண்ட வேதம். அதன் வசனங்கள் ஒன்று மற்றொன்றை விளக்கக்கூடியதாக, வலுப்படுத்தக்கூடியதாக இருந்தன.

*ஓரிறைக் கொள்கை (தவ்ஹீது) மக்காவில் விதைக்கப்பட்டது. மக்கா வில் அருளப்பட்ட வசனங்கள் ஷிர்க்கின் கோட்டைகளைத் தகர்க்கக் கூடியவையாகவும் அதனால் எழுப்பப்பட்ட ஆட்சேபணைகளை ஒன்று மில்லாமல் ஆக்கக்கூடியவையாகவும் இருந்தன.*

*மேலதிக விளக்கத்துக்காகவும் தெளிவுக்காகவும் ஆதாரத்துக்காகவும் மீண்டும் மதீனாவிலும் அது அருளப்பட்டது. பின்வரும் வசனத்தை வாசி க்கும்போது நீங்கள் அதனைத் தெளிவாகக் கண்டுகொள்ளலாம்: 'உங்கள் இறைவன் ஒரே இறைவன்தான். அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவன் அளவிலாக் கருணையாளன், இணையிலாக் கிருபை யாளன். (163)' இந்த வசனத்தைத் தொடர்ந்து வரும் வசனம் ஓரிறைக் கொள்கையை அறிவிக்கும் பல்வேறு விதமான சான்றுகளைக் குறிப் பிடுகிறது: 'நிச்சயமாக வானங்கள், பூமியின் அமைப்பிலும் இரவுபகல் மாறிமாறி வருவதிலும் மக்களுக்குப் பயன்தரக்கூடிய பொருள்களைச் சுமந்துகொண்டு கடலில் செல்கின்ற கப்பல்களிலும் ... சிந்திக்கும் மக்களுக்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. (164)'*

*அதனைத் தொடர்ந்து வரக்கூடிய வசனங்கள் தவ்ஹீதால் விளையும் அன்பைத் தெளிவுபடுத்துகின்றன. நம்பிக்கையாளன் தன் இறைவனை நேசிக்கிறான். அவன் எல்லாவற்றையும்விட அல்லாஹ்வையே அதிகம் நேசிக்கிறான். அவனுடைய இந்த நேசம் அவனது செயல்பாடுகளிலும் பண்புகளிலும் வெளிப்படுகிறது.*

*இந்த நேசத்துக்கு அல்லாஹ்வே தகுதியானவன். ஏனெனில், கண்ணி யம் அனைத்தும் அவனுக்கே உரியது. இங்கு நாம் ஆயத்துல் குர்சீ என்று அழைக்கப்படும் திருக்குர்ஆனின் மகத்தான வசனத்தைக் காண்கிறோம்: 'அல்லாஹ், அவனைத் தவிர வணக்கத்துக்குரிய வேறு இறைவன் இல்லை. அவன் நித்திய ஜீவன். அனைத்தையும் நிலைநிறுத்துபவன். சிறு தூக்கமோ உறக்கமோ அவனைப் பீடிக்காது. வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அவனுக்கே உரியன ... (255)'*

*கொடுங்கோலர்களுடன் விவாதித்து அவர்களை வாயடைக்கச் செய் வதும் ஈமானுக்கு அவசியமாகிறது. 'இப்றாஹீமிடம் அவரது இறை வனைக் குறித்து தர்க்கம் செய்தவனை நீர் பார்க்கவில்லையா? காரணம் அல்லாஹ் அவனுக்கு ஆட்சியதிகாரத்தை வழங்கியிருந்தான் ... (258)' அல்லாஹ்வால் நேர்வழி காட்டப்பட்ட இப்றாஹீம் சிறியோன் ஃபிர்அவ்னை வாயடைக்கச்செய்தார். நிராகரித்தவன் வாயடைத்துப் போனான்.*

இவ்வாறு, மதீனாவின் ஆரம்ப கட்டத்தில் அருளப்பட்ட அல்பகறா அத்தியாயம் நம்பிக்கைக் கோட்பாடுகள் (அகீதா) குறித்த விவகாரங்களை வேறு வழிமுறையில் எடுத்துரைப்பதை நாம் காண்கிறோம். வழிமுறைகள் வேறுபட்டாலும் இரு காலகட்டத்திலும் நோக்கம் ஒன்றுதான். 'இது இறை வேதமாகும். இதில் எத்தகைய சந்தேகமும் இல்லை.' அங்கு சந்தேகத் துக்கிடமான, மனிதக் கரங்களால் திரிக்கப்பட்ட வேறு வேதங்கள் இருந் தாலும் சரியே.

இந்த அத்தியாயத்திலும் இதற்குப் பிறகு அருளப்பட்டவற்றிலும் இடப்பட்ட கட்டளைகளை, அறிவுரைகளைப் பின்பற்றுவதில் முஹம்ம தின் தோழர்கள் வெற்றியடைந்தார்கள். திருக்குர்ஆன் அருளப்பட்டுக் கொண்டிருந்தது. அவர்கள் அதற்கேற்பச் செயல்பட்டுக்கொண்டிருந் தார்கள். அது கட்டளையிட்டுக்கொண்டிருந்தது. அவர்கள் அதற்குக் கட்டுப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அது தனிமனிதனுக்கும் சமூகத்துக்கும் நாட்டுக்கும் தேவையான திட்டங்களை அளித்துக் கொண்டிருந்தது. அவர்கள் அவற்றைச் செயல்படுத்திக்கொண்டிருந்தார்கள்.

மதீனா தன்னுடைய புதிய மனிதர்களின் மூலமும் புதிய அமைப்பின் மூலமும் தூதுத்துவத்தின் தனித்துவம்மிக்க தலைநகரமாகவும் மனிதர் களுக்காக வெளிப்படுத்தப்பட்டிருக்கும் மிகச் சிறந்த சமூகமான சமநிலைச் சமூகத்தின் செயல்பாடுகளுக்கான அடித்தளமாகவும் ஆகியது.

அல்லாஹ் தன் தூதருக்கு வஹீயின் மூலம் கற்றுக்கொடுக்கிறான். முஸ்லிம்கள் தங்களின் தூதரிடமிருந்து தங்களுக்கும் மற்ற மக்களுக்கும் பயனளிக்கும் விசயங்களைக் கற்றுக்கொள்கிறார்கள்: 'இவ்வாறே நாம் உங்களை ஒரு சமநிலைச் சமூகமாக ஆக்கியுள்ளோம். அது நீங்கள் மக்களுக்கு எடுத்துக்கூறுபவர்களாகவும் தூதர் உங்களுக்கு எடுத்துக் கூறுபவராகவும் திகழ வேண்டும் என்பதற்காகத்தான். (143)'

இந்த அத்தியாயத்தின் இறுதி இரு வசனங்களின் மூலம் அல்லாஹ் தெளிவுபடுத்துகிறான்: தூதரும் அவருடன் நம்பிக்கை கொண்டவர்களும் அல்லாஹ்வை உண்மைப்படுத்துகிறார்கள். அல்லாஹ்வும் அவர்களை ஏற்றுக்கொண்டுள்ளான். அவன் இந்த அத்தியாயத்தில் அருளியுள்ள சட்டங்களை அவர்கள் எடுத்துரைக்கிறார்கள். அவற்றைச் சிறந்த முறை யில் நிலைநிறுத்துகிறார்கள். அவற்றைச் சிறந்த முறையில் நிறைவேற்று வதற்குத் தங்களால் இயன்ற அத்தனை முயற்சிகளையும் செய்கிறார்கள்.

அவர்கள் தங்களுக்கு முந்தைய சமூகங்களைவிடக் கண்ணியமான இடத்தைப் பெற்றார்கள். முந்தைய சமூகங்கள் இறைச் செய்தியைப் பெற்றபோது 'நாங்கள் கேட்டோம், மாறுசெய்தோம்.' என்று கூறின.

அறபியர்கள் எழுதவும் படிக்கவும் தெரியாதவர்களாக, அக்காலத்தில் அறியப்பட்ட உலகியல் நாகரிகங்களில் மதிப்பற்றவர்களாக இருந்தார்கள். இறுதியில் அவர்களிடையே இந்தக் குர்ஆன் அருளப்பட்டது. அவர்கள் அதன் மூலம் தங்களின் வாழ்க்கையைத் தூய்மைப்படுத்தினார்கள்; தங்களின் நிலையை உயர்த்தினார்கள். தொடர்ந்து அவர்கள் முன்னேறிக் கொண்டே இருந்தார்கள். இறுதியில் ஏனைய சமூகங்கள் அனைத்தையும் மிகைத்துவிட்டார்கள். அவர்கள் மற்றவர்களை விடச் சீர்திருத்தம் பெற்றவர்களாக, தூய்மையான உள்ளங்களைக் கொண்டவர்களாக, நீதியான ஆட்சியை நிலைநிறுத்தியவர்களாக ஆனார்கள்.

இனவெறியின் அடிப்படையிலோ உலகியல் ஆசையின் அடிப்படையிலோ நிலத்தின் அடிப்படையிலோ அல்லாமல் இறையச்சத்தின் அடிப்படையில் நாகரிகத்தை நிறுவினார்கள். இவ்வுலகை மறுவுலகுக்கான களமாக ஆக்கிக்கொண்டார்கள். ஆகவே, இந்த அத்தியாயத்தின் இறுதியில் அல்லாஹ் கூறினான்:

> இந்தத் தூதர் தம் இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பட்டதை நம்பியுள்ளார். நம்பிக்கையாளர்களும் அதன் மீது நம்பிக்கை கொண்டுள்ளார்கள். இவர்கள் அனைவரும் அல்லாஹ்வின் மீதும் அவனது வானவர்களின் மீதும் அவனது வேதங்களின் மீதும் அவனது தூதர்களின் மீதும் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். நாங்கள் அவனுடைய தூதர்களில் யாருக்கிடையிலும் வேற்றுமை காட்ட மாட்டோம் என்றும், 'கேட்டோம், கீழ்ப்படிந்தோம். எங்கள் இறைவா, நாங்கள் உன்னிடம் மன்னிப்பை வேண்டுகிறோம். உன் பக்கமே நாங்கள் திரும்ப வேண்டும்.' என்றும் அவர்கள் கூறுகிறார்கள். (285)

முஸ்லிம்களிடம் வெறிகொள்வதற்கு எந்த அம்சமும் அல்லது இணைத்துக் கொள்வதற்கு எந்த நாடும் இல்லை. அவர்கள் தங்களின் நேசத்தை, தோழமையை வானங்களையும் பூமியையும் படைத்த, மனிதர்கள் அனைவரையும் படைத்த இறைவனான அல்லாஹ்வுக்கே உரித்தாக்கிவிட்டார்கள். அவர்களில் யாரும் இறையச்சத்தைக் கொண்டே தவிர சிறந்தவராக ஆக முடியாது.

முதல் இஸ்லாமியச் சமூகத்தின் வளர்ச்சியை மதீனா கண்டது என்றால் அந்தச் சமூகத்தை அல்லாஹ்வோடு இணைக்கும் வஹீயையும் அது அறிந்திருந்தது. இஸ்லாமியக் குடும்பம், இஸ்லாமியக் கடைவீதி, ஆட்சி நிர்வாகத்தின் பொதுவான நடவடிக்கைகள், வியாபாரம், விளைச்சல்கள், ஒழுக்கவியல், சட்டவியல் விவகாரங்கள் என அனைத்துத் துறைகளும்

வேதத்தில் அருளப்பட்ட வஹீயின், தூதரின் வழிகாட்டுதலுக்கேற்பச் செயல்படுத்தப்பட்டன.

நபியவர்கள் ஒரு படைக்குத் தளபதியாக வயதில் குறைந்த இளைஞர் ஒருவரை நியமித்தார்கள். காரணம், அவர் **அல்பகறா** அத்தியாயத்தை மனனம்செய்திருந்தார். அவர் வார்த்தைவார்த்தையாக, ராகத்தோடு மனனம்செய்திருந்தார் என்பதனால் அல்ல. மாறாக, அதனைப் புரிந்து அதன் சட்டங்களை மனனம் செய்திருந்தார் என்பதனாலாகும். இவ்வாறு தான் சமூகங்கள் உருவாகின்றன.

❖ ❖ ❖

இறுதியாக இந்த அத்தியாயத்தின் கடைசி வசனத்தின் முன்னால் நாம் நிற்கிறோம். ஆட்சியதிகாரமும் தலைமைத்துவமும் வழங்கப்பட்ட சமூகங்களை நாம் கவனித்துப்பார்த்தால் அவர்களிடம் கர்வம் இருப்பதை யும் அவர்கள் உயரத்திலிருந்து மற்றவர்களைக் காண்பதையும் நாம் காணலாம்.

இன்று உலகை ஆட்சிசெய்யும் வெள்ளையர்கள் தங்களைத் தவிர மற்ற சமூகத்தார்களைக் கர்வத்தோடுதான் அணுகுகிறார்கள்.

நாகரிகமடைந்து விட்டதாகக் கூறிக்கொள்ளும் நாடுதானே வான் வெளித் தாக்குதலை நிகழ்த்தியது? அணுகுண்டு வீசியது? சில திறமை யாளர்களால் நிகழ்த்தப்பட்ட இந்தச் சாதனைகளை வைத்துக்கொண்டு மனித உருவில் இருப்பவர்கள்தானே வரம்புமீறுகிறார்கள்?

ஆனால், முஸ்லிம்கள் தலைமைத்துவத்தைப் பெற்றிருந்தும் உயர்வான இறை வஹீயால் சிறப்பிக்கப்பட்டிருந்தும் அல்லாஹ்வுக்கு முன்னால் பணிய வேண்டும் என்பதை, அவனிடமே கையேந்த வேண்டும் என்பதை உணர்கிறார்கள்.

பாவமன்னிப்பு கோரவும் அருட்கொடைகளைப் பற்றிச் சிந்திக்கவும் அவர்களின் மார்க்கம் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறது.

> … எங்கள் இறைவா, நாங்கள் மறந்துவிட்டாலோ தவறிழைத்து விட்டாலோ எங்களைத் தண்டித்துவிடாதே. எங்கள் இறைவா, எங்களுக்கு முன்னிருந்தோர்மீது சுமத்தியதைப் போன்று எங்கள் மீதும் சுமத்திவிடாதே. எங்கள் இறைவா, எங்களால் சுமக்க முடியாத சுமையை எங்கள்மீது சுமத்திவிடாதே. எங்களைப் பொறுத்தருள் வாயாக. எங்களை மன்னிப்பாயாக. எங்கள்மீது கருணை காட்டு வாயாக. நீயே எங்களின் பாதுகாவலன். நிராகரிப்பாளர்களுக்கு எதிராக எங்களுக்கு உதவியும் புரிவாயாக. (286)

❖ ❖ ❖

அத்தியாயம் 3

# ஆலு இம்றான்

## (இம்றானின் குடும்பத்தினர்)

*இந்த அத்தியாயத்தை வாசிப்பவரால் மிக எளிதாக இதன் தலைப்புகளைக் கண்டுகொள்ள முடியும். இந்த அத்தியாயம் இருபெரும் தலைப்புகளைச் சுற்றியே சுழல்கிறது. ஒன்று, மதீனாவில் இருந்துகொண்டு இஸ்லாத்துக்கு எதிராக வாதிட்டுக்கொண்டிருந்த வேதக்காரர்களுடன் உரையாடுகிறது. இரண்டு, உஹதுப் போரில் முஸ்லிம்களுக்குப் பெரும் பாதிப்பையும் இழப்பையும் ஏற்படுத்திய தோல்வியைக் குறித்து விமர்சிக்கிறது.*

*இரண்டு விவகாரங்களும் அத்தியாயத்தின் ஆரம்பத்திலும் நடுவிலும் தனித்தனியாகவே பேசப்படுகின்றன. பின்னர், உரையாடலும் விமர்சனமும் அத்தியாயத்தின் இறுதியில் ஒன்றிணைகின்றன. இரண்டு விவகாரங்களிலும் உறுதியோடு எதிர்கொள்வதற்கான அழைப்பு விடுக்கப்படுகிறது. மதீனாவுக்குள் யூதர்களின் சூழ்ச்சியையும் இணைவைப்பாளர்களின் தாக்குதல்களையும் ஒரு சேர எதிர்கொள்ளுமாறு முஸ்லிம்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.*

*நாங்கள் யாருக்கும் அநீதி இழைக்காமல், யாரையும் பகைக்காமல் அனைவருக்கும் எங்களின் மார்க்கத்தை எடுத்துரைப்போம். யார் எங்களின் மார்க்கத்தை ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்கள் எங்களின் சகோதரர்கள். யார் அதனைப் புறக்கணிக்கிறார்களோ அவர்களை நாங்கள் விட்டுவிடுவோம். யார் வரம்புமீறுகிறார்களோ அவர்களுக்கு எதிராக அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டவர்களாக நாங்கள் போரிடுவோம்.*

*இந்த நிலைப்பாடு பின்வரும் இறை வசனத்திலிருந்து வெளிப்படுகிறது:*

அவர்கள் உம்மிடம் தர்க்கம்செய்தால் நீர் கூறிவிடும்: 'நானும் என்னைப் பின்பற்றியவர்களும் அல்லாஹ்வுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டுவிட்டோம்.' வேதம் வழங்கப்பட்டவர்களிடமும் பாமர மக்களிடமும் 'நீங்களும் இவ்வாறு கட்டுப்படுகிறீர்களா?' என்று கேளும். அவர்கள் கட்டுப்பட்டுவிட்டால் நேர்வழி பெற்று விட்டார்கள். அவர்கள் புறக்கணித்தால் எடுத்துரைத்து விடுவதே உமது பொறுப்பாகும். (20)

இஸ்லாம் பொதுவான வழிகாட்டலாகும். அதன் வேதம் இதற்கு முன்னர் அல்லாஹ் அருளிய யாவற்றையும் உண்மைப்படுத்தக்கூடியதாக இருக்கிறது என்ற விளக்கத்தோடு அத்தியாயம் தொடங்குகிறது. இறை வஹீயே சத்தியத்தையும் அசத்தியத்தையும் தெளிவுபடுத்தக்கூடியது. மூசா, ஈசா, முஹம்மது எனத் தூதர்கள் அனைவரும் ஒரே நேரான பாதையில்தான் பயணித்தார்கள். கால, இட வேறுபாடுகளைத் தாண்டி இஸ்லாம் அவர்கள் கொண்டுவந்த மார்க்கங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாகும்.

அல்லாஹ் தவ்றாத், இன்ஜீல், குர்ஆன் ஆகியவற்றுக்கு 'அல்லாஹ்வின் சான்றுகள்' எனப் பெயரிட்டுள்ளான். அல்லாஹ்வின் சான்றுகள் என்ற பிரயோகம் இந்த அத்தியாயத்தில் பத்து முறை இடம்பெற்றுள்ளது. அது, 'அல்லாஹ்வின் சான்றுகளை நிராகரித்தோருக்குக் கடுமையான வேதனை உண்டு. அல்லாஹ் யாவற்றையும் மிகைத்தவனாகவும் தக்க தண்டனை யளிப்பவனாகவும் இருக்கிறான். (4)' என்ற வசனத்தில் தொடங்கி, 'வேதக்காரர்களில் இப்படியும் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் அல்லாஹ் வின் மீது நம்பிக்கை கொள்கிறார்கள். உங்களுக்கு அருளப்பட்ட வேதத்தை யும் அவர்களுக்கு அருளப்பட்ட வேதத்தையும் அவர்கள் நம்புகிறார்கள். அல்லாஹ்வுக்கு முன்னால் பணிந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் அல்லாஹ்வின் சான்றுகளை அற்ப ஆதாயத்துக்கு விற்றுவிடுவதில்லை ... (199)' என்ற வசனத்தில் முடிவடைகிறது.

ஈமானிய அம்சங்களுக்கிடையே, முஹம்மதுக்கு அருளப்பட்ட குர் ஆனுக்கும் முந்தைய தூதர்களான மூசாவுக்கும் ஈசாவுக்கும் அருளப்பட்ட வேதங்களுக்குமிடையே எந்த முரண்பாடும் இல்லை. இறைவனின் வஹீக்கும் மனிதர்களின் புனைவுகளுக்கும் மத்தியில்தான் முரண்பாடு காணப்படுகிறது.

ஈமான் என்பது நமக்கு அருளப்பட்டவற்றின் மீதும் நமக்கு முன்னர் வாழ்ந்த மக்களுக்கு அருளப்பட்டவற்றின் மீதும் நம்பிக்கை கொள்வ தாகும். இதற்கு மாறாகச் செயல்படுபவர்கள் நேர்வழியின் பக்கம் திரும்பிவரட்டும்.

வேதக்காரர்கள் யூதர்கள், கிறிஸ்தவர்கள் என இரு வகையினராக இருந்தார்கள். மதீனாவுக்குள் முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கு மிடையில் எந்தச் சூடான விவாதமும் நடைபெறவில்லை. முஸ்லிம் களுக்கும் மதீனாவிலும் ஹிஜாஸின் வடக்குப் பகுதியிலும் தங்களின் குடியிருப்புகளை அமைத்திருந்த யூதர்களுக்குமிடையில்தான் சூடான விவாதங்கள் தொடர்ந்துகொண்டிருந்தன. அவர்கள் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நிராகரித்துக்கொண்டும் வஹீக்கு எதிராகத் தாக்குதல் தொடுத்துக்கொண்டும் சிலை வழிபாட்டாளர்களுடன் இணைந்து முஸ்லிம்களுக்கு எதிராகச் சதித்திட்டங்கள் தீட்டிக்கொண்டும் இருந்தார்கள்.

அவர்கள் பெற்றிருந்த பெரும் செல்வமும் சொத்துகளும் கோட்டை களும் அவர்களை இவ்வாறு செய்யத் தூண்டின. அதனால்தான் இந்த அத்தியாயத்தில் நிராகரிப்பாளர்களின் செல்வமும் வலிமையும் அவர் களுக்கு எந்தப் பலனும் தராது என்ற வாசகம் மீண்டும் மீண்டும் வந்துள் ளது:

- ❖ நிச்சயமாக நிராகரிப்பாளர்களுக்கு அவர்களின் செல்வங்களோ பிள்ளைகளோ அல்லாஹ்விடத்தில் எந்தப் பயனையும் அளிக் காது. அவர்கள்தாம் நரகத்தின் எரிபொருள்களாவர். (10)

- ❖ யார் அல்லாஹ்வின் சான்றுகளை நிராகரித்து தூதர்களை அநி யாயமாகக் கொலைசெய்கிறார்களோ, மேலும் நீதியின் பக்கம் அழைக்கின்ற மக்களையும் கொலைசெய்கிறார்களோ அவர் களுக்கு வதைக்கும் வேதனை உண்டு என்னும் நற்செய்தியைக் கூறிவிடுவீராக. (21)

- ❖ நிச்சயமாக நிராகரிப்பாளர்களுக்கு அவர்களின் செல்வங்களோ பிள்ளைகளோ அல்லாஹ்விடத்தில் எந்தப் பயனையும் அளிக் காது. அவர்கள்தாம் நரகவாசிகளாவர். அதில் நிரந்தரமாக அவர்கள் வீழ்ந்துகிடப்பார்கள். (116)

- ❖ நாட்டுக்குள் நிராகரிப்பாளர்களின் நடமாட்டம் உம்மை ஏமாற் றத்தில் ஆழ்த்திவிட வேண்டாம். அது சிறிதளவு இன்பம்தான். பின்னர் அவர்களின் இருப்பிடம் நரகமாகும். அது மிகவும் கெட்ட இருப்பிடமாகும். (196,197)

அதிகப்படியான செல்வமும் அல்லாஹ்வை மறந்து வாழ்வதும் தனி மனிதர்களையும் சமூகங்களையும் இந்த நிலைக்கு இட்டுச் சென்று விடுகின்றன.

ஹிஜாஸில் யூதர்கள் பொருளாதார அளவில் அறபுகள் யாரும் அடையாத பெரும் முன்னேற்றத்தை அடைந்தார்கள். ஆனாலும், அவர்கள் அந்தச் செல்வத்தைச் சத்தியத்தை நிலைநிறுத்துவதற்காக, நிராகரிப்பை அகற்றுவதற்காகப் பயன்படுத்தவில்லை. அவர்களைவிடச் சிலைகளை வணங்கிக்கொண்டிருந்தவர்கள் நற்பண்புகளைப் பெற்றவர்களாகவும் நன்மையளிப்பவர்களாகவும் இருந்தார்கள்.

ஆகவேதான் யூதர்கள் கர்வம் கொண்டு நபியவர்களுடன் மோதியபோது அவர்களுக்கு ஒழுக்கம் கற்பிக்கும் மிகச் சிறந்த ஆசானாக நபியவர்கள் இருந்தார்கள். அவர்கள் இழிவடைந்து புறங்காட்டி ஓடினார்கள். அவர்களின் வலிமை உடைக்கப்பட்டது. அவர்களின் செல்வங்கள் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டன.

தொடர்ந்து பல தலைமுறைகள் யூதர்கள் இறை வஹீயைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். இறுதியில் அவர்கள், 'இறை வஹீ தங்களுக்கு மட்டுமே உரியது, அது தங்களைத் தாண்டி எங்கும் செல்லாது.' என்று வாதிடத் தொடங்கிவிட்டார்கள்.

ஏன் அது அவர்களைத் தாண்டிச் செல்லக் கூடாது? ஒருவன் தான் அனுபவிக்கும் பதவிக்கான தகுதியை இழந்தால் அதிலிருந்து அவன் அகற்றப்படுவதுதானே நியாயம்?

யூதர்கள் தங்களுடைய வரலாற்றின் கடைசி காலகட்டங்களில் இறை வஹீக்கு முற்றிலும் தகுதியற்றவர்களாக ஆனார்கள். அவர்களின் உள்ளங்கள் கடினமானவையாக இருந்தன. அவர்கள் ஒழுக்க வீழ்ச்சியில் வீழ்ந்து கிடந்தார்கள். சுயநலமும் பேராசையும் அவர்களை அரித்துத் தின்று கொண்டிருந்தன. அவர்கள் உலக மோகங்களில் மூழ்கிக் கிடந்தார்கள். அல்லாஹ்வின் கட்டளையை வெறுத்துக்கொண்டும் மறுத்துக்கொண்டும் இருந்தார்கள்.

ஆகவே, வஹீ அவர்களைத் தவிர அவர்களைவிடச் சிறந்தவர்களுக்கு வழங்கப்பட்டே ஆக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. இதைத் தான் பின்வரும் வசனம் கூறுகிறது:

> நீர் கூறும், 'அல்லாஹ்வே, ஆட்சியதிகாரத்தின் அதிபதியே, நீ நாடியோருக்கு ஆட்சியை வழங்குகிறாய். நீ நாடியோரிடமிருந்து ஆட்சியைப் பறித்துவிடுகிறாய். நீ நாடியோரைக் கண்ணியப் படுத்துகிறாய். நீ நாடியோரை இழிவுபடுத்துகிறாய். நன்மைகள் அனைத்தும் உன் கைவசமே உள்ளன. நீ எல்லாவற்றின் மீதும் பேராற்றலுடையவன்.' (26)

இந்த வசனம் கூறும் இந்த விளைவுக்கு முன்னோட்டமாகப் பல வசனங்கள் முன்னரே கூறப்பட்டுவிட்டன. அவற்றுள் ஒன்று:

> வேதத்தின் ஒரு பகுதி வழங்கப்பட்டோரை நீர் பார்க்கவில்லையா? அவர்களிடையே தீர்ப்பு வழங்குவதற்காக அவர்கள் அல்லாஹ் வின் வேதத்தின் பக்கம் அழைக்கப்படுகிறார்கள். ஆயினும், அவர் களில் ஒரு பிரிவினர் புறக்கணித்தவர்களாக விலகிச் சென்று விடுகிறார்கள். அதற்குக் காரணம், 'குறிப்பிட்ட சில நாள்களைத் தவிர நரக நெருப்பு எங்களை ஒருபோதும் தீண்டாது.' என்று அவர்கள் கூறிவந்ததே ஆகும். (23)

தாங்கள் வெளிப்படையான தண்டனையிலிருந்து பாதுகாக்கப்பட்டு விட்டோம் என்று கூறி அவர்கள் வெளிப்படையாகவே பாவங்களில் ஈடுபட்டார்கள். மார்க்கத்தின் சட்டதிட்டங்களை வீணாக்கினார்கள்.

மனிதர்கள் அனைவருக்கும் தான் வழங்குகின்ற பொதுவான நீதியைக் கொண்டு அல்லாஹ் அவர்களுக்குப் பதிலளித்தான். இனத்தின் அடிப் படையில் அவனிடம் யாரும் எந்த மதிப்பையும் பெற்றுவிட முடியாது.

> சந்தேகமின்றி நிச்சயமாக வரக்கூடிய ஒருநாளில் நாம் அவர்களை ஒன்றுசேர்க்கும்போது அவர்களின் நிலை என்னவாகும்? அந்நாளில் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவன் செய்தவற்றுக்கான கூலி முழுமையாக வழங்கப்படும். அவர்கள் அநீதி இழைக்கப்பட மாட்டார்கள். (25)

இங்கு 'ஒவ்வொரு மனிதனும்' என்ற சொல்லாடல் அவனுடன் போலியாக இணைக்கப்படும் எந்த ஒன்றுக்கும் மதிப்பில்லை என்பதைக் காட்டுகிறது. ஒவ்வொரு மனிதனும் தான் செய்தவற்றுக்கான கூலியையே பெறுவான். மனிதர்கள் படைக்கப்பட்டதுபோன்றே நிர்வாணமானவர் களாக ஒன்றுதிரட்டப்படுவார்கள். தக்வா என்னும் ஆடையைத் தவிர வேறெந்த ஆடையும் அவர்கள் அணிவிக்கப்பட மாட்டார்கள்.

இது யூதர்களை நோக்கிக் கூறப்பட்ட வாசகமாக இருந்தாலும் மற்ற சமூகங்களுக்கும் இதில் படிப்பினை இருக்கிறது. இஸ்றாயீலின் பிள்ளை களான யூதர்கள் குழப்பம்செய்ததால் அல்லாஹ் அவர்களைத் தண்டித் தான். இஸ்மாஈலின் பிள்ளைகளும் அவர்களின் வழிமுறையைப் பின் பற்றினால் அவர்கள் பெற்ற அதே தண்டனைகளைப் பெறுவார்கள். யூதர்களைப் போன்று செயல்படுபவர்கள் அவர்கள் அடைந்த அதே விளைவுகளையே அடைவார்கள்.

தவ்றாத்தைக் கொண்டு தாங்கள் மேன்மையடையவில்லை, தங்க ளுடைய இனத்தினால்தான் தாங்கள் மேன்மையடைந்துள்ளோம் என்று யூதர்கள் கருதினார்கள். அவர்கள் கொண்ட இந்தக் கர்வமே அவர்களின் அழிவுக்குக் காரணமாக அமைந்துவிட்டது.

தற்காலத்தில் அறபுகளிலும் இவ்வகையான மக்கள் காணப்படுகிறார் கள். அவர்கள் இஸ்லாத்தைக் கொண்டு மேன்மையடையவில்லையாம். அவர்கள் அறபுகள் என்பதால்தான் மேன்மையடைந்துள்ளார்களாம்! குரங்குகளாகவும் பன்றிகளாகவும் ஆக்கப்பட்ட யூதர்களைவிடச் சிறந்த விளைவை இவர்கள் பெறுவார்கள் என்று எண்ணுகிறீர்களா? அல்லாஹ் வின் நியதிகள் மாற்றமடைவதில்லை. அவனிடத்தில் மனிதர்கள் அனை வரும் சமமானவர்களே.

இந்த அத்தியாயத்தின் முதல் பத்து பக்கங்கள் வேதக்காரர்களுடனான உரையாடலையே கொண்டுள்ளது. அது முதலில் யூதர்களையே விளித்து உரையாடுகிறது. ஏனெனில், அவர்கள்தாம் முஸ்லிம்களுடன் முதலில் மோதினார்கள். முதல் பக்கத்தில் கிறிஸ்தவர்களுக்கு ஈசா (அலை) தொடர்பாகச் சிறிய குறிப்பு மட்டுமே வருகிறது: ‘அவனே தாயின் கருவறையில் தான் விரும்பியவாறு உங்களை வடிவமைக்கிறான். அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவன் யாவற்றையும் மிகைத்தவனாகவும் ஞானம் மிக்கவனாகவும் இருக்கிறான். (6)’ என்ற வச னம் மனிதப் படைப்புகுறித்த உயர்ந்தோனின் ஆற்றலைக் குறித்து பேசி னாலும் மர்யமின் மகன் ஈசாவும் அந்தப் படைப்பாளனால் முன் மாதிரியின்றிப் படைக்கப்பட்ட ஆயிரக் கணக்கானோரில் ஒருவர்தான் என்பதை உணர்த்துகிறது. அவனே அவர் களுக்கு ஆச்சரியப்படத்தக்க வெவ்வேறான பண்புகளை அளித்தான்.

சிலர் தாம் கேட்பதையோ பார்ப்பதையோ புரிந்துகொள்ள முடியாத வர்களாகவும், வேறு சிலர் மறைதிரைகளை ஊடுருவிச் செல்லக்கூடிய திறனுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்.

> மாந்தரின் திறமைகளும் பண்புகளும் எத்துனை வகை ?
>
> நீ பார்த்ததையும் கேட்டதையும் அப்படியே பார்த்தும் கேட்டும்
> அறிந்தவன் போன்ற அதிதிறன் மிக்க புத்திசாலி உண்டு
>
> சரியாக குதிரையேற்றம் கூட தெரியாதவனும் உண்டு,
> அதேநேரம் அண்டவெளியில் பறந்து கொண்டு சண்டையிடும்
> திறனுள்ள வீரனும் உண்டு.
>
> தன் மனோஇச்சைக்குள் தன்னைத் தொலைத்து அழிந்து
> போனவனையும் பார்த்திருப்பாய், இறைவனை நெருங்கி

*அவனில் தன்னைத் தொலைத் தழிந்தவனையும்
பார்த்திருப்பாய்.*

*ஈசா தந்தையின்றிப் பிறந்தவராக இருந்தாலும் அவரும் படைப்பாற்ற லின் விதிக்குக் கட்டுப்பட்டவர்தாம். யூதர்கள்குறித்த செய்திகளை, சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய அவர்களின் நிலைப்பாடுகளை முழுமை யாகப் பார்த்துவிட்டு இதுகுறித்து பேசுவதே சிறந்ததென எண்ணுகிறேன்.*

❖ ❖ ❖

*யூதர்கள் அறபுகள்மீது கொண்ட வெறுப்பு பழமையானது. அதற்கு முதன்மையான காரணம் நபியவர்களின் மூலம் தூதுத்துவம் யூதர்களை விட்டு அறபுகளின்வசம் சென்றதே ஆகும். தங்களிடையே இருந்த தூதுத் துவத்தின் மூலம் மனிதச் சமூகத்தில் தாங்களே உயர்ந்தவர்கள் என்று அவர்கள் கருதிக்கொண்டிருந்தார்கள். அறபுகளிடையே வஹீ அருளப் படுவதை அவர்கள் கண்டவுடன் அவர்களின் கோபமும் வெறுப்பும் உச்சத்தை அடைந்தன. அவர்கள் வானத்தையும் பூமியையும் வெறுத்தார் கள்.*

*அவர்களின் இந்த நிலைப்பாட்டைக் கண்டித்தவாறு இறைவன் அவர் களிடம் கூறினான்: 'வேதக்காரர்களே, நீங்கள் சாட்சியாளர்களாக இருந்து கொண்டே அல்லாஹ்வின் சான்றுகளை ஏன் நிராகரிக்கிறீர்கள்? வேதக் காரர்களே, நீங்கள் ஏன் உண்மையைப் பொய்யுடன் கலக்கிறீர்கள்? அறிந்துகொண்டே ஏன் உண்மையை மறைக்கிறீர்கள்?* (70,71)'

*இந்த வசனத்திலிருந்து முஹம்மது உண்மையான தூதர் என்பதையும் அவர் அல்லாஹ்வின் பெயரைக் கொண்டே பேசுகிறார் என்பதையும் கடந்தகாலங்களில் தங்களின் பாவங்களினால்தான் அல்லாஹ் தங்களைத் தண்டித்தான் என்பதையும் யூதர்கள் நன்கறிந்திருந்தார்கள் என்பது தெளி வாகிறது. ஆனாலும், அவர்கள் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுவதற்குப் பதிலாக இறுதித் தூதுத்துவத்தை நிராகரித்து நாவாலும் ஆயுதத்தாலும் அதற்கு எதிராகப் போரை அறிவித்தார்கள். சிலை வழிபாட்டாளர்களுடன் இணைந்து உண்மையான ஈமானுக்கு எதிராக, முஸ்லிம்களுக்கு எதிராகச் சதித்திட்டங்கள் தீட்டத் தொடங்கினார்கள்.*

*ஆகவேதான், தங்களின் இந்த மோசமான நிலைப்பாட்டால் பல வசனங்களில் யூதர்கள் பழிக்கப்படுகிறார்கள்: 'நம்பிக்கை கொண்ட பிறகு நிராகரித்துவிட்ட மக்களுக்கு அல்லாஹ் எவ்வாறு நேர்வழி காட்டு வான்? அவர்களோ, அவர் உண்மையான தூதர்தாம், அவரிடம் தெளி*

வான சான்றுகள் வந்துள்ளன என்று சாட்சியமளித்திருந்தார்கள். (86)' பின்னர் அல்லாஹ் தன் தூதர்மூலமாக இந்தக் கேள்வியைக் கேட்கிறான்:

> நீர் கேளும், 'வேதக்காரர்களே, நீங்கள் அல்லாஹ்வின் சான்றுகளை ஏன் நிராகரிக்கிறீர்கள்? நீங்கள் செய்வதையெல்லாம் அல்லாஹ் பார்த்துக்கொண்டிருக்கிறான்.' நீர் கூறும், 'வேதக்காரர்களே, ஏன் நம்பிக்கையாளர்களை அல்லாஹ்வின் பாதையிலிருந்து தடுக்கி றீர்கள்? நீங்கள் சாட்சியாளர்களாக இருந்துகொண்டே அதில் ஏன் குறைகாண விரும்புகிறீர்கள்? அல்லாஹ் உங்கள் செயல்களைக் கவனிக்காமல் இல்லை.' (98,99)

மக்களை இஸ்லாத்தைவிட்டு, அல்லாஹ்வின் பாதையைவிட்டுத் தடுக்கும் பொருட்டு யூத மூளையிலிருந்து ஒரு மோசமான தந்திரம் வெளிப்பட்டது. அவர்கள் கூறினார்கள், 'நாம் இனவெறி கொண்டவர்கள் என்பதால்தான் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம் என்று மக்கள் நம்மீது குற்றம் சுமத்துகிறார்கள். ஆகவே, மக்கள் நம்மைக் குறித்து நாம் நம்முடைய மார்க்கத்தையே விட்டுவிடும் அளவுக்குச் சிந்தனைச் சுதந் திரம் பெற்றவர்கள் என்று கருதும் வகையில் நாம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாகக் காட்டிக்கொள்வோம். பின்னர், இஸ்லாத்தின் மீது குற்றம் சுமத்திவிட்டு, அதில் குறை இருப்பதாகக் கூறிக்கொண்டு அந்த மார்க் கத்தை விட்டுவிடுவோம்.'

> வேதக்காரர்களில் ஒரு பிரிவினர் கூறினார்கள், 'நம்பிக்கையாளர் களுக்கு அருளப்பட்டதன் மீது காலையில் நம்பிக்கை கொண்டு மாலையில் நிராகரித்துவிடுங்கள். இதனால் அவர்கள் தம் நம்பிக் கையைவிட்டுத் திரும்பக்கூடும்.' (72)

புதிய மார்க்கத்தின் மீதுள்ள தங்களின் வெறுப்பை, அது தங்களை விட்டு மற்றவர்களிடம் செல்லாது என்பதை அவர்கள் வெளிப்படுத்து கிறார்கள். அவர்கள் கூறினார்கள்: 'உங்கள் சமயத்தைப் பின்பற்றுவோரைத் தவிர வேறு யாரையும் நம்பாதீர்கள். (73)' உங்களுக்கு வழங்கப்பட்டதைப் போன்று வேறு யாருக்கும் வழங்கப்பட்டிருக்காது. வஹீயைப் பெறுவதில் நீங்களும் அவர்களும் சமமாக மாட்டீர்கள்.

அவர்கள் அல்லாஹ்வின் செயலை வெறுத்தார்கள். அறபுகளுக்குப் புதிய மார்க்கத்தை வழங்கிய இறை நாட்டத்தை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவர்கள் அவன் அமைத்த விதியை மாற்றி விடலாம் என்று எண்ணினார்கள். இங்கு உறுதியான பதில் இடம் பெறுகிறது: 'சிறப்புகள் அனைத்தும் அல்லாஹ்விடமே உள்ளன. தான் நாடியோருக்கு அவன் அவற்றை வழங்குகிறான். அல்லாஹ் தாராள

மானவனாகவும் நன்கறிந்தவனாகவும் இருக்கிறான். அவன் தான் நாடுவோரை தன் அருளுக்குரியவர்களாக ஆக்குகிறான். அவன் மாபெரும் அருளாளன் ஆவான். (73,74)'

கர்வம், கடினத்தன்மை போன்ற தீய குணங்களெல்லாம் யூதர்களிடம் ஒன்றிணைந்தன. அவை எப்படிப்பட்ட பண்புகளெனில், பலவீனம் அவற்றை மறைத்து மறைவான குரோதமாக ஆக்கும். செல்வம் அவற்றை வெளிப்படுத்தி வெளிப்படையான பகைமையாக ஆக்கும். இந்த இரு தன்மைகளும் அவர்களின் பிரதேசத்தில் மற்றவர்களைவிட்டு ஒதுங்கி வாழக்கூடியவர்களாகவும் ஆதிக்க ஆணவத்துடன் மற்றவர்களுக்குத் தீங்குசெய்பவர்களாகவும் அவர்களை ஆக்கிவிட்டன.

அவர்களது இந்தச் செயலுக்கான காரணத்தை இந்த அத்தியாயத்திலேயே நாம் காண்கிறோம். 'இதற்குக் காரணம், வேதக்காரர்கள் அல்லாதோர் (உம்மிய்யூன்) விசயத்தில் நாங்கள் குற்றம்பிடிக்கப்பட மாட்டோம் என்று அவர்கள் கூறிவந்ததே ஆகும். அவர்கள் அறிந்து கொண்டே அல்லாஹ்வின் மீது பொய்யுரைக்கிறார்கள். (75)'

இந்த வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள உம்மிய்யூன் என்ற வார்த்தைக்கு அல்உம்மத் அல்லது அல்உம் என்ற வார்த்தை மூல வார்த்தையாகக் கொள்ளப்படுகிறது. அதனுடைய மூல வார்த்தை அல்உம் என்பதாகக் கொள்ளப்பட்டால் படிக்கத் தெரியாதவர்கள் என்று பொருள். அறபுகள் எழுதவும் படிக்கவும் தெரியாதவர்களாக இருந்ததால் உம்மிய்யூன் என்று அழைக்கப்பட்டார்கள். அதனுடைய மூல வார்த்தை அல்உம்மத் என்பதாகக் கொள்ளப்பட்டால் அது யூதர்கள் அல்லாத மனிதர்கள் அனைவரையும் குறிக்கும். இந்த விளக்கமே யூதர்களின் பண்புகளுக்கு மிக நெருக்கமானது. இதன் காரணமாகத்தான் ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் யூதர்களை வெறுத்தன. அவர்களைக் கடுமையாகத் தண்டித்தன. அவர்களைத் தண்டித்த ஆட்சியாளர்களில் இறுதியானவர் ஹிட்லர். குற்றவாளிகளைத் தண்டிப்பதில் அவரைப் போன்று இன்னொருவர் இருக்க முடியாது.

மனிதர்களுக்கும் அவர்களின் இறைவனுக்குமிடையிலான தொடர்பு பொய்யான வாதங்களின் அடிப்படையில் நிலைபெற முடியாது என்பதைத் திருக்குர்ஆன் தெளிவுபடுத்தியது. உன்னதமான பண்பு, வாக்குறுதியை நிறைவேற்றுதல், இறையச்சம் ஆகியவற்றின் அடிப்படையில்தான் அது நிலைபெற முடியும்: 'மாறாக, யார் தம் வாக்குறுதியை நிறைவேற்றி, இறைவனை அஞ்சி நடக்கிறாரோ நிச்சயமாக அல்லாஹ் அத்தகைய இறையச்சமுடையோரை நேசிக்கிறான். (76)'

*எனக்கு நானே கேட்டுக்கொண்டேன்: 'ஆலு இம்றான் அத்தியாயத்தின் முதல் பாதி வேதக்காரர்களுடனான உரையாடல், அவர்களின் சம்பவம் ஆகியவற்றின் அடிப்படையில் நிலைபெறுகிறது என்றால் இங்கு ஹஜ்ஜைக் குறித்து ஏன் குறிப்பிடப்படுகிறது? அதற்கு முன்னால் ஏன் தடுக்கப்பட்ட, அனுமதிக்கப்பட்ட உணவுகளைக் குறித்து கூறப்பட்டுள்ளது?'*

*நீண்ட சிந்தனைக்குப் பிறகு நான் வெறுங்கையுடன் திரும்பவில்லை. எனக்குநானே கூறிக்கொண்டேன்: 'நான் ஏன் அல்மனாரின் ஆசிரியரிடம் கேட்கக் கூடாது? இமாமுடைய கருத்தை அறியக் கூடாது?' அவரிடம் சரியான பதிலைக் கண்டுகொண்டேன்.*

*யூதர்களிடம் இஸ்லாம் எடுத்துரைக்கப்பட்டபோது அவர்கள் இவ்வாறு கேட்டிருப்பார்கள் போலும்: 'எங்களுக்குத் தடைசெய்யப்பட்ட உணவுகளை அனுமதிக்கப்பட்டவையாகக் கருதும் ஒரு மார்க்கத்தை நாங்கள் ஏன் பின்பற்ற வேண்டும்? நாங்கள் அவற்றிலிருந்து விலகியுள்ளோம். எங்களின் உணவு விரிப்புகளில் அவற்றை நீங்கள் காண மாட்டீர்களே?'*

*தற்காலிகமாகவே சில உணவுகள் அவர்களுக்குத் தடைசெய்யப்பட்டிருந்தன. அவர்கள் தொடர்ந்து அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறாகச் செயல்பட்டுக்கொண்டிருந்ததால் அவர்களைத் தண்டிக்கும் பொருட்டு அல்லாஹ் சில பொருள்களை அவர்களுக்குத் தடைசெய்தான். அல் அன்ஆம் என்ற அத்தியாயத்தில் அவர்களுக்குத் தடைசெய்யப்பட்டவற்றைத் தெளிவுபடுத்திவிட்டு இறுதியில் அதற்கான காரணத்தையும் அவன் கூறுகிறான்:*

> *அவர்கள் வரம்பு மீறியதனால்தான் நாம் அவர்களுக்கு இந்தத் தண்டனையை அளித்தோம். நிச்சயமாக நாம் உண்மையாளராக இருக்கிறோம். ஆகவே, அவர்கள் உம்மைப் பொய்யர் எனக் கூறினால் நீர் கூறிவிடும், 'உங்கள் இறைவன் விசாலமான கருணையாளன். ஆயினும், குற்றவாளிகள் அவனுடைய தண்டனையிலிருந்து தப்ப முடியாது.'* (6:146,147)

*ஈசாவின் தூதுத்துவம் யூதர்களின் சுமைகளைக் குறைப்பதுகொண்டே தொடங்கியது என்பதை நாம் அறிவோம். இதுகுறித்து ஈசாவின் கூற்றாக வந்துள்ள வசனம்: 'நான் எனக்கு முன்னுள்ள தவ்றாத்தை உண்மைப்படுத்தக்கூடியவனாகவும் உங்கள்மீது தடைசெய்யப்பட்டுள்ள சில பொருள்களை உங்களுக்கு அனுமதிக்கப்பட்டவையாக ஆக்குவதற்காகவும் வந்துள்ளேன் ...* (50)*' திருக்குர்ஆன் அருளப்பட்டபோது ஷரீஅத்தை அதன் இயல்பான நிலைக்குக் கொண்டுவந்தது. செத்தவை, பன்றியின்*

இறைச்சி, வழியக்கூடிய இரத்தம், அல்லாஹ் அல்லாதவற்றுக்காக அறுக்கப்பட்டவை ஆகியவற்றைத்தான் குர்ஆன் தடைசெய்தது. அவற்றைத் தவிர மற்றவற்றை அனுமதிக்கப்பட்டவையாக ஆக்கியது.

இதுகுறித்து அல்லாஹ் கூறுகிறான்: 'தவ்றாத் அருளப்படுவதற்கு முன்னர் இஸ்றாயீல் தமக்குத்தாமே தடைசெய்துகொண்டவற்றைத் தவிர மற்றவை அனைத்தும் இஸ்றாயீலின் மக்களுக்கு அனுமதிக்கப்பட்டிருந்தன ... (93)'

இவ்வாறே கிப்லாவின் விசயத்திலும் கூறப்பட்டது. மக்காவில் அமைந்துள்ள கஅபா ஆலயமே மனிதர்கள் அனைவருக்கும் முதல் மற்றும் இறுதியான கிப்லாவாகும்: 'நிச்சயமாக மக்களுக்காக அமைக்கப்பட்ட முதல் ஆலயம் மக்காவில்தான் உள்ளது. அது அருள்வளம் கொண்டதாகவும் அகிலம் அனைத்துக்கும் வழிகாட்டும் மையமாகவும் உள்ளது. (96)' குறிப்பிட்ட சில காரணங்களுக்காகவே பைத்துல் முகத்தஸ் தற்காலிகக் கிப்லாவாக ஆக்கப்பட்டது. அந்தக் காரணங்கள் நீங்கியவுடன் மீண்டும் அது அசலான மூலத்தின் பக்கமே திருப்பப்பட்டது. தவ்ஹீதின் பாதுகாப்புக்காகக் கட்டப்பட்ட அந்த இல்லம் கண்ணியத்தைப் பெற்றது. முந்தைய தூதர்களில் கணிசமானோருக்கு அது கண்ணியத்துக்குரிய இடமாகவே இருந்தது.

நாம் ஷரீஅத்துகளுக்கிடையே உள்ள வேறுபாடுகளை விட்டுவிடுவோம், காலங்கள் வேறுபட்டாலும் மனிதச் சமூகத்தின் முன்னேற்றம் உறுதியான கொள்கையைக் கொண்டு அதனைச் சரியான முறையில் பண்படுத்துவதில்தான் அடங்கியுள்ளது என்பதை நிலைநிறுத்தும் பொருட்டு. இந்த அத்தியாயம் ஆரம்பத்திலேயே இதுகுறித்து கூறுகிறது:

> பெண்கள், ஆண்பிள்ளைகள், தங்கம், வெள்ளியின் குவியல்கள், உயர் ரகக் குதிரைகள், கால்நடைகள், விளைநிலங்கள் ஆகியவற்றை விரும்புவது மனிதர்களுக்கு அழகாக்கப்பட்டுள்ளது. ஆயினும், இவையனைத்தும் இவ்வுலக வாழ்வின் இன்பங்களே ஆகும். அல்லாஹ்விடமே அழகிய தங்குமிடம் இருக்கிறது. (14)

மனித வாழ்க்கைக்கு இந்த உணர்வுகள் மிக அவசியமானவை. பாலியல் இச்சை மட்டும் இல்லை என்றால் பூமியில் எந்த உயிரினமும் நீடிக்க முடியாது. இவ்வாறே மற்ற இச்சைகளும். ஆனால், அவை நிர்ணயிக்கப்பட்ட வரம்பைத் தாண்டிவிடக் கூடாது; நேரான வழியிலிருந்து பிறழ்ந்துவிடக் கூடாது.

இஸ்லாம் பயனுள்ளவற்றை அனுமதித்தது. தீங்களிப்பவற்றைத் தடைசெய்தது. அது ஈமான் மற்றும் நற்செயல்களின் அடிப்படையில்

தன்னுடைய ஹலால், ஹறாமின் அடித்தளங்களை அமைத்துக் கொண்டது. நம்பிக்கையாளன் அல்லாஹ்வுடனும் மறுமைநாளுடனும் கொள்ளும் தொடர்பு உறுதியாக நிலைத்திருக்கும் பொருட்டு அது இறையச்சத்தின் அம்சங்களையும் விதித்துள்ளது.

எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வில் தலைவர் ஒருவர் உரையாற்றியதை நான் செவியேற்றேன். தவறான பாலுறவில் ஈடுபடுபவர்கள் எய்ட்ஸிலிருந்து தப்பிக்கும் பொருட்டு ஆணுறையைப் பயன்படுத்தும்படி அவர் அறிவுறுத்திக்கொண்டிருந்தார். தூய ஒழுக்கத்தைப் பேண முடியாது என்று அவர் நிராசையடைந்துவிட்டார் போலும். நித்திய ஜீவனும் அனைத்தையும் நிலைநிறுத்துபவனுமாகிய அல்லாஹ்வின் மீது உறுதியான நம்பிக்கையை இழந்துவிட்டதே அவரது இந்த நிராசைக்கான காரணமாகும்.

மற்ற மதங்களைப் பின்பற்றுபவர்கள் தங்களின் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாமல் சிரமங்களை அனுபவித்துக்கொண்டுதான் இருப்பார்கள், பின்வரும் இறை வசனத்தை அவர்கள் புரிந்துகொள்ளும் வரை:

> நீர் கூறும், ‘இவற்றைவிடச் சிறந்ததை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா? இறையச்சமுடையோருக்கு அவர்களின் இறைவனிடம் சுவனங்கள் உண்டு. அவற்றில் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். அங்கு அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள். அங்கு தூய துணைகளும் அல்லாஹ்வின் திருப்தியும் உண்டு. அல்லாஹ் தன் அடியார்களைக் கண்காணித்துக்கொண்டிருக்கிறான்.’ அவர்கள் கூறுவார்கள், ‘எங்கள் இறைவா, நாங்கள் நம்பிக்கை கொண்டோம். ஆகவே, நீ எங்கள் பாவங்களை மன்னித்து நரக வேதனையிலிருந்து எங்களைக் காப்பாற்றுவாயாக.’ அவர்கள் பொறுமையாளர்களாகவும் உண்மையாளர்களாகவும் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டவர்களாகவும் அவனுடைய பாதையில் செலவுசெய்யக்கூடியவர்களாகவும் பின்னிரவில் பாவமன்னிப்பு கோருபவர்களாகவும் இருக்கிறார்கள். (15,16)

அத்தியாயத்தின் ஆரம்பத்தில் இந்த வசனம் இடம்பெற்றதன் நோக்கம் வேதக்காரர்களிடம் இவ்வாறு கூறுவதற்காகத்தான்: வெற்றி என்பது, ‘அல்லாஹ், அவனைத் தவிர வணக்கத்துக்குரிய வேறு இறைவன் இல்லை. அவன் நித்திய ஜீவனாகவும் அனைத்தையும் நிலைநிறுத்துபவனாகவும் இருக்கிறான்.’ என்ற அடித்தளத்தின் மீதே நிலைபெற முடியும். பின்னர், மனித இயல்புக்கேற்றவாறே மனிதன் பண்படுத்தப்பட வேண்டும். அவன் ஒரேயடியாகக் கட்டுப்படுத்தப்படவோ ஒரேயடியாக விட்டு

விடப்படவோ கூடாது. மறுவுலக வாழ்க்கைக்கு வழிகாட்டும் அகப் பார்வையோடு அவன் இவ்வுலகை நோக்க வேண்டும்.

❖ ❖ ❖

மர்யம் ஈசாவைப் பெற்றெடுத்தபோது மனிதர்களில் யாரும் மர்யமுடன் இணைந்திருக்கவில்லை. ஆகவே சிலர் கூறினார்கள், ஈசா இறைவனின் மகனாக இருக்கிறார். எவ்வித அடிப்படையுமற்ற அவர்களின் இந்த எண்ணமே அல்லாஹ்வுக்கும் மர்யமுக்குமிடையில் தனித்துவமான தொடர்பை ஏற்படுத்துவதன் பக்கம் அவர்களை இட்டுச்சென்றது. இறைவனின் பண்புகளைக் குறித்த மோசமான அறியாமையாகும். அவர்களின் இந்த மோசமான கண்ணோட்டத்தின்படி அல்லாஹ்வைத் தந்தையாக்கிவிட்டார்கள். ஆகவே அவன் கூறினான்: ‘அல்லாஹ் தனக்கு ஒரு மகனை ஏற்படுத்த நாடியிருந்தால் தன் படைப்புகளிலிருந்து தான் விரும்பியவரைத் தேர்ந்தெடுத்திருப்பான். அவன் தூய்மையானவன். அவனே அனைத்தையும் அடக்கியாளும் ஏகனான அல்லாஹ். (39:4)’

ஆம், ஈசாவின் பிறப்பு வழக்கத்துக்கு மாறான நிகழ்வாக இருந்தது. அல்லாஹ் அதனை அடியார்களிடையே நிகழ்த்திய ஏராளமான வழக்கத்துக்கு மாறான செயல்களில் ஒன்றாக ஆக்க நாடினான். அது, காரணகாரிய விதியையும் அவனே நிகழ்த்துகிறான் என்பதையும் காரணகாரிய விதி அவனை ஆட்சிசெய்வதில்லை என்பதையும் அவர்களுக்குப் புரிய வைப்பதற்காக. ஆகவேதான் இங்கு ஸகரிய்யா மற்றும் அவரது மனைவியைக் குறித்த நிகழ்வுக்குப் பிறகு மர்யம் மற்றும் அவரது மகனைக் குறித்த நிகழ்வு இடம்பெறுகிறது. ஸகரிய்யா மற்றும் அவரது மனைவி குறித்த நிகழ்வும் வழக்கத்துக்கு மாறான ஒன்றுதான்.

மர்யம் அவருடைய தாயாரின் எதிர்பாராத குழந்தையாக இருந்தார். அவருடைய தாயார் தம் வயிற்றில் இருக்கும் குழந்தையை அல்லாஹ்வுக்காக நேர்ச்சைசெய்திருந்தார், அந்தக் குழந்தை மஸ்ஜிதுல் அக்ஸாவுக்குப் பணிவிடைசெய்ய வேண்டும் என்பதற்காகவும் அங்கு வணக்க வழிபாட்டை நிலைநிறுத்த வேண்டும் என்பதற்காகவும் நம்பிக்கையாளர்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்பதற்காகவும். ‘என் இறைவா, என் வயிற்றில் உள்ளதை உனக்காக அர்ப்பணிக்க நான் நேர்ச்சைசெய்துவிட்டேன். நீ என்னிடமிருந்து ஏற்றுக்கொள்வாயாக. நிச்சயமாக நீ செவியேற்பவனாகவும் அறிபவனாகவும் இருக்கிறாய். (35)’ ஆனால், அவள் எதிர்பார்த்ததற்கு மாறாகப் பெண்குழந்தையைப் பெற்றாள். தாயின் ஆசையைப் பெண்குழந்தை எப்படி நிறைவேற்ற முடியும்? முழுமையடைந்த ஆண்கள்தானே அந்தப் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்?

அவள் எதிர்பார்த்திருந்த ஆண்குழந்தை பாதுகாப்பை வேண்டி நிற்கின்ற இந்தப் பெண் குழந்தையைப் போலல்ல. இந்தப் பெண்குழந்தை இவ்வுலகிலும் மறுவுலகிலும் கண்ணியத்தைப் பெறக்கூடிய, இறைவனுக்கு நெருக்கமான அடியார்களில் ஒருவராக இருக்கக்கூடிய ஒரு மனிதனைப் பெற்றெடுக்கும் என்பதையும் மூசாவின் தாயார் மூசாவைப் பாதுகாத்தது போல, முஹம்மதின் தாயார் முஹம்மதைப் பாதுகாத்தது போல அவள் தன் குழந்தையைப் பாதுகாப்பாள் என்பதையும் அந்தத் தாய் அறிந்திருக்கவில்லை.

ஆச்சரியமான ஒரு விசயம், உறுதிமிக்க மூன்று தூதர்களையும் பலவீனமான பெண்கள்தாம் பாதுகாத்துள்ளார்கள். உலகியல் பலமற்ற, தங்கள் இறைவனையே நம்பியிருந்த சாதாரண பெண்களின் மடியில்தான் இறைத்தூதர்கள் வளர்ந்துள்ளார்கள்.

தங்களின் சிறப்பு, அர்ப்பணிப்பு, ஈமான் ஆகியவற்றின் மூலம் உயரத்தை அடைந்த பெண்களும் இருக்கிறார்கள். ஆயினும், விவகாரம் நபியவர்கள் கூறியவாறே, 'ஆண்களில் ஏராளமானோர் முழுமையடைகிறார்கள். பெண்களில் குறைவானவர்களே முழுமையடைகிறார்கள்.' இம்றானின் மனைவி தன் இறைவனிடம் வேண்டினாள்:

> 'என் இறைவா, நான் பெண்குழந்தையைப் பெற்றெடுத்துவிட்டேன்.' அவள் எதைப் பெற்றெடுத்தாள் என்பதை அல்லாஹ் நன்கறிவான். ஆண்குழந்தை பெண்குழந்தையைப் போலல்ல. 'நான் அதற்கு மர்யம் எனப் பெயரிட்டுள்ளேன். நான் அக்குழந்தைக்கும் அதனுடைய வழித்தோன்றல்களுக்கும் விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்.' ஆகவே, அவளுடைய இறைவன் அவளைச் சிறந்த முறையில் ஏற்றுக்கொண்டான். அவளைச் சிறந்த முறையில் வளரச்செய்தான். (36)

மர்யமைப் பராமரிக்கும் பொறுப்பை ஸகரிய்யா ஏற்றுக்கொண்டார். அவர் எலும்புகள் பலவீனமாகிப்போன முதியவராக இருந்தார். அவருடைய மனைவி குழந்தைச் செல்வம் வழங்கப்படாத மலடியாக இருந்தார். இஸ்றாயீலின் மக்களைக் குறித்து ஸகரிய்யா மோசமாக எண்ணினாலும் அவர்களை வழிநடத்துவதற்குத் தமக்குப் பிறகு ஒரு வாரிசு இல்லாததால் அவர் கவலையாக இருந்தார். ஆனாலும் அவர் பொறுமையை மேற்கொண்டார். தம்முடைய குடும்பத்துடன் இணைக்கப்பட்ட மகளை வளர்த்துக்கொண்டிருந்தார். தம் வீட்டில் புதிய சில நிகழ்வுகளை ஸகரிய்யா உணர்ந்தார். ஆச்சரியமான முறையில் மறைவான புறத்திலிருந்து மர்யமுக்கு உணவளிக்கப்படுவதைக் கண்டார்.

அவர் கேட்டார், 'மர்யமே, இது உனக்கு எங்கிருந்து கிடைக்கிறது?' அவள் கூறினாள், 'இது அல்லாஹ்விடமிருந்து வந்ததாகும்.' தான் நாடியோருக்கு அல்லாஹ் கணக்கின்றி வழங்குகிறான். (37)

இந்தப் பதில் ஸகரிய்யாவின் உள்ளத்தில் மறைந்திருந்த கீழ்ப்படி தலின் உணர்வைத் தட்டியெழுப்பக்கூடியதாக இருந்தது. அவர் தம் இறைவனிடம் பிரார்த்தித்தார்: 'இந்த மகளுக்காக நீ வழக்கத்துக்கு மாறான நிகழ்வை நிகழ்த்தினாய். உன் வல்லமையால் வானத்திலிருந்து அவளுக்கு உணவளித்தாய். என்னை உன் அருளிலிருந்து விலக்கிவிடாதே. நான் உன் மேலான அருளை வேண்டியவனாக இருக்கிறேன்.'

மலடியான மனைவிக்குக் குழந்தைபெற்றுக்கொள்ளும் ஆற்றலை வழங்கவும் இயலாமையில் இருக்கும் கணவனுக்கு ஆற்றலை வழங்க வும் எங்களுக்குக் கண்குளிர்ச்சி தரும் மகனை எங்களுக்கு அளிக்கவும் உன்னால் முடியும். அப்போது ஸகரிய்யா தம் இறைவனிடம் பிரார்த்தனை செய்தார். அவர் கூறினார்,

'என் இறைவா, எனக்கு உன்னிடமிருந்து ஒரு தூய சந்ததியை அளிப்பாயாக. நிச்சயமாக நீ பிரார்த்தனையைச் செவியேற்பவனாக இருக்கிறாய்.' அவர் தம் அறையில் நின்று தொழுதுகொண்டிருந்த போது வானவர்கள் அவரை அழைத்து, 'அல்லாஹ் உமக்கு யஹ்யாவைக் கொண்டு நற்செய்தி கூறுகிறான். அவர் அல்லாஹ்வின் வார்த்தையை உண்மைப்படுத்தக்கூடியவராகவும் தலைவராகவும் விளங்குவார் ...' (38,39)

நிராசையடைந்த அந்த இணைகளிடம் வாழ்க்கை திரும்பியது. மலடி யான மனைவி குழந்தைபெற்றாள். மலடனாக இருந்த கணவர் ஆற்ற லைப் பெற்று தம் மனைவியைக் கர்ப்பம் தரிக்கச்செய்தார். அல்லாஹ் நாடினால் காரணிகளைத் தன் நாட்டத்துக்கு ஏற்றவாறு கட்டுப்படுத்து கிறான். அவன் தான் நாடியவற்றைப் படைக்கிறான்; தான் நாடியவற்றைச் செய்கிறான்.

அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்ட, நன்மைகளின் பக்கம் விரைந்து செல் லக்கூடிய இந்தச் சூழலில் மர்யம் வளர்ச்சியடைந்தார். அது எப்படிப் பட்ட சூழலெனில், பூமியின் விதிகளைவிட வானத்தின் கவனிப்பே அங்கு மிகைத்திருந்தது. மர்யமிடம் வானவர்கள் வந்து அவர் உள்ளத்தில் தோன்றாத விசயங்களைக் கொண்டு உரையாடினார்கள் என்பதில் வியப் பேதும் இல்லை.

வானவர்கள் மர்யமிடம் கூறினார்கள், 'மர்யமே, அல்லாஹ் தன்னிட மிருந்து ஒரு வார்த்தையைக் கொண்டு உமக்கு நற்செய்தி கூறு

கிறான். அவரது பெயர் மசீஹ், மர்யமின் மகன் ஈசா என்பதாகும். அவர் இவ்வுலகிலும் மறுவுலகிலும் உயர்ந்த அந்தஸ்துடைய வராகவும் இறைவனுக்கு நெருக்கமான அடியார்களில் ஒருவராகவும் இருப்பார். அவர் தொட்டில் பருவத்தில் இருக்கும்போதும் பக்குவ மான வயதை அடைந்தபின்பும் மக்களிடம் பேசுவார். நல்லோர் களில் ஒருவராகவும் இருப்பார்.' மர்யம் கேட்டார், 'என் இறைவா, எந்த ஆணும் என்னைத் தீண்டாதிருக்க எனக்கு எவ்வாறு குழந்தை பிறக்கும்?' அவன் கூறினான், 'அப்படித்தான். அல்லாஹ் தான் நாடியதைப் படைக்கிறான். அவன் ஒரு விசயத்தைத் தீர்மானித்து விட்டால் ஆகு என்றுதான் கூறுவான். அது ஆகிவிடும்.' (45-47)

இவ்வாறு மர்யம் மிகப் பெரிய அனுபவத்தில் நுழைந்தார். ஒவ்வொரு கன்னிப் பெண்ணும் நடுங்கக்கூடிய, அதற்குப் பதிலாக மரணத்தை விரும்பக்கூடிய பெரும் பொறுப்பு சுமத்தப்பட்டார். ஆயினும், அல் லாஹ்வின் வார்த்தை நிறைவடைந்தது. ஆச்சரியமான இந்த முறையில் மர்யமின் மகன் ஈசா பிறந்தார்.

அவர் இஸ்றாயீலின் மக்களுடைய கோணலைச் சரிசெய்வதற்காகவும் அவர்களின் கர்வத்தை உடைப்பதற்காகவும் பணிவான வணக்க வழி பாட்டுக்கு அவர்களை உட்படுத்துவதற்காகவும் இறுகிய அவர்களின் உள்ளத்தை மென்மையாக்குவதற்காகவும் அவர்களிடையே தூதராக அனுப்பப்பட்டார்.

மர்யம் வளர்ந்த தூதுத்துவத்தின் வீட்டை மதிப்பவர்களாக மக்கள் இருந்தார்கள். அவரும் அவருடைய மகனும் பெற்றுள்ள சிறப்பையும் உயர்வையும் அருட்கொடைகளையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். ஆனால், இஸ்றாயீலின் மக்கள் வேறொரு நிலைப்பாட்டைக் கொண்டி ருந்தார்கள்.

தங்களின் கண்முன்னால் நிகழ்ந்த வழக்கத்துக்கு மாறான நிகழ்வு களை அவர்கள் நிராகரித்தார்கள். அவரது தூதுத்துவத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். அவரை நிராகரித்ததோடு அல்லாமல் அவர்மீது மிகப் பெரிய அவதூறையும் சுமத்தினார்கள். 'ஈசாவின் பிறப்பு வானத்தின் அற்புதம் அல்ல. அது மனிதக் குற்றத்தின் விளைவு.' என்றார்கள். மர்ய முடன் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்த யூசுஃப் நஜ்ஜாரை அவருடன் இணைத்துக் கூறினார்கள். இதன் மூலம் அவர்கள் நிராகரிப்பையும் அவதூறையும் ஒருசேரச் சுமந்தவர்களானார்கள்.

நல்லவர்களிடம், உண்மையாளர்களிடம் ஈசா உதவிகோரினார். அவரு டைய சீடர்கள் அவரது அழைப்புக்குப் பதிலளித்தார்கள். அவருடன்

இணைந்தவர்களாகக் கூறினார்கள், 'எங்கள் இறைவா, நீ அருளியதை நாங்கள் ஏற்றுக்கொண்டோம். உன் தூதரையும் பின்பற்றினோம். எனவே, சாட்சியளிப்போருடன் எங்களையும் நீ சேர்த்து எழுதுவாயாக. (53)'

ஈசாவையும் அவரைப் பின்பற்றுபவர்களையும் தாக்கிக்கொண்டு யூதர்கள் தங்களின் வழிகேட்டில் நிலைத்திருந்தார்கள். ஈசா தம்முடைய தூதை எடுத்துரைத்தார். தம் பணியை நிறைவேற்றினார். அல்லாஹ் அவரது உயிரைக் கைப்பற்றினான். யூதர்களின் சூழ்ச்சிகளிலிருந்து அவரைப் பாதுகாத்தான். அவரது படித்தரத்தை உயர்த்தினான்.

ஈசா உயிருடன் உயர்த்தப்பட்டார் என்று பலர் கருதினாலும் அவர் மரணமடைந்துவிட்டார் என்ற ழாஹிரிய்யாக்களின் கருத்தே சரியென நான் கருதுகிறேன். இப்னு ஹஸ்ம் கூறுவதைப் போல, அவரது மரணம் மீண்டும் அவர் இவ்வுலகுக்கு வருவதற்குத் தடையாக இல்லை. அவர் மீண்டும் வந்து முஸ்லிம்களின் ஓரிறைக் கொள்கையை நிலைநிறுத்து வார். அவர்களுடன் இணைந்து அல்லாஹ்வின் எதிரிகளுக்கு எதிராகப் போரிடுவார்.

அவரது உதாரணம், பின்வரும் வசனத்தில் வரக்கூடிய ஓர் ஊரினைக் கடந்துசெல்லும் மனிதரைப் போன்றதாகும். அல்லது அடியோடு அழிந்து விட்ட ஓர் ஊரினைக் கடந்துசென்ற ஒருவரைப் போன்றது. 'அழிந்துவிட்ட பிறகு அல்லாஹ் இந்த ஊரை எவ்வாறு மீண்டும் உயிர்ப்பிப்பான் என்று அவர் கேட்டார். ஆகவே, அல்லாஹ் அவரை நூறு ஆண்டுகள்வரை மரணிக்கச்செய்தான். பின்னர், அவன் மீண்டும் அவரை உயிர்கொடுத்து எழுப்பினான் ... (2:259)'

அல்லது, பல ஆண்டுகள் தூங்கியபிறகு மீண்டும் உயிர்பெற்ற குகைத் தோழர்களின் உதாரணத்தைப் போன்றது. விவகாரம் மிகவும் இலகு வானது. இங்கு ஈசா அல்லாஹ்வின் அடியாராகவும் தூதராகவும் இருக்கி றார், அவர் இறைவனோ இறை மகனோ அல்ல என்பதுதான் புரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான விசயமாகும்.

தவிர, மதீனாவுக்கு வந்து நபியவர்களுடன் இதுகுறித்து விவாதம் செய்த கிறிஸ்தவக் குழு தொடர்பான சம்பவத்தையும் இந்த அத்தியாயம் நமக்கு எடுத்துரைக்கிறது. அவர்கள் நபியவர்களிடம் கூறினார்கள், 'ஈசா மனிதராக இருந்தால் அவருடைய தந்தை யார்? அல்லாஹ்தான் அவ ருடைய தந்தை. அவர் மனித வடிவில் இருக்கும் இறைவன்.'

தந்தையின்றிப் பிறந்ததால் அவர் அல்லாஹ்வின் மகனாகிவிட மாட் டார் என்று நபியவர்கள் அந்தக் கிறிஸ்தவர்களிடம் விவாதித்தார்கள்.

*விசயத்தை நாம் இவ்வாறு அணுகினால் ஆதமே இறைவனாக இருப்ப தற்குத் தகுதியானவர். ஏனெனில், அவருக்குத் தந்தையும் தாயும் இல் லையே!*

> *நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் ஈசாவின் உதாரணம் ஆதமைப் போன்றதாகும். அல்லாஹ் அவரை மண்ணால் படைத்தான். பின்னர் 'ஆகு' என்று கூறினான். அவர் ஆகிவிட்டார். இது உம் இறைவனிட மிருந்து வந்துள்ள சத்தியமாகும். நீர் ஐயம் கொள்வோரில் ஒருவ ராகிவிடாதீர்.* (59,60)

*ஆனாலும் அவர்கள் தங்களின் கருத்தில் பிடிவாதமாக நிலைத்திருந் தார்கள். ஆக்ரோஷமாக விவாதம்செய்தார்கள். ஆகவே, அவர்களுடன் எவ்வாறு நடந்துகொள்ள இயலும்? முஸ்லிம்களுடன் ஒரே இடத்தில் ஒன்றிணைந்து, இரு பிரிவினரில் பொய்யர்கள்மீது அல்லாஹ்வின் சாபம் இறங்கட்டும் என்று ஒவ்வொருவரும் பிரார்த்திக்க வேண்டும் என்ற ஆலோசனை அவர்களுக்கு வழங்கப்பட்டது:*

> *இதுகுறித்து தெளிவான அறிவு உம்மிடம் வந்தபின்னரும் யாரேனும் இவ்விசயத்தில் உம்மிடம் தர்க்கம்செய்தால் அவரிடம் நீர் கூறி விடும், 'வாருங்கள், எங்கள் மக்களையும் உங்கள் மக்களையும் எங்கள் பெண்களையும் உங்கள் பெண்களையும் அழைத்து, இன்னும் எங்களையும் உங்களையும் சேர்த்து, பொய்யர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும் என்று நாம் ஒன்றுசேர்ந்து பிரார்த்திப்போம்.' நிச்சயமாக இதுதான் உண்மையான சம்பவ மாகும். அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவன் யாவற்றையும் மிகைத்தவனாகவும் ஞானம்மிக்கவனாகவும் இருக் கிறான்.* (61,62)

*அவர்கள் இந்த முபாஹலாவுக்கான அழைப்பை ஏற்றுக்கொள்ள வில்லை. இன்றுவரை இரு பிரிவினரும் தங்களின் மார்க்கத்தில் நிலைத் திருக்கிறார்கள். ஈசா இறுதிக் காலத்தில் இறங்கி அவர்களின் நிலைப் பாட்டைப் பொய்யென நிரூபிப்பார். தம்மை வணங்குவோர் தவறிழைக் கிறார்கள் என்பதையும் அதிகாரம் அனைத்தும் அடக்கியாளும் ஏகன் ஒருவனான அல்லாஹ்வுக்கே உரியது என்பதையும் அவர் அவர்களுக்குத் தெளிவுபடுத்துவார்.*

❖ ❖ ❖

*வேதக்காரர்களைக் குறித்த உரையாடல் நிறைவுபெறுவதற்கு முன்னர் அத்தியாயம் உஹதுப் போரைக் குறித்து பேசத் தொடங்குகிறது. அந்தப் போரில் முஸ்லிம்கள் தோல்வியைத் தழுவினார்கள். கடுமையான இழப்பு களைச் சந்தித்தார்கள்.*

அது வேதக்காரர்களுக்கு முன்பே இஸ்லாத்தை எதிர்த்துக்கொண்டிருந்த சிலை வழிபாட்டாளர்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட போர். முஸ்லிம்கள் தங்களின் எதிரிகளை ஒரு தளத்தில் மட்டும் எதிர்கொண்டதை நாம் குறைவாகவே காண்கிறோம். முஸ்லிம்கள் வரலாறு நெடுகிலும் இரு தளங்களிலும் எதிரிகளுடன் போரிட்டுவருகிறார்கள்.

அல்லாஹ் தன் தூதருக்கு வழங்கும் அறிவுரையைக் கொண்டு உஹதுப் போரைக் குறித்த பேச்சு தொடங்குகிறது. 'நீர் அதிகாலையில் உமது வீட்டிலிருந்து புறப்பட்டு நம்பிக்கையாளர்களைப் போர்க்களத்தில் அவர்களுக்குரிய இடங்களில் நிறுத்திய சந்தர்ப்பத்தை நினைவுகூர்வீராக. அல்லாஹ் செவியேற்பவனாகவும் நன்கறிந்தவனாகவும் இருக்கிறான். (121)' திடீரென உரையாடலின் தொடர்ச்சி துண்டிக்கப்பட்டு வட்டி, வசதியான நிலையிலும் சிரமத்திலும் அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்தல், பாவம்செய்தபிறகு விரைந்து பாவமன்னிப்பு கோருதல் ஆகியவைகுறித்து பேசப்படுகிறது.

அதற்குப் பிறகு உஹதுப் போரில் ஏற்பட்ட விளைவுகள்குறித்து நீண்ட விமர்சனம் இடம்பெறுகிறது. அது அத்தியாயத்தின் இறுதிவரை நீண்டு செல்கிறது.

இப்போது ஒரு கேள்வி எழலாம்: இடையில் கூறப்பட்ட இந்த விசயங்களின் நோக்கம் என்ன? முஸ்லிம்களை எல்லா வகையான அழுக்குகளிலிருந்தும் வழிகேடுகளிலிருந்தும் தூய்மைப்படுத்தி அவர்களை இறையுதவிக்குத் தகுதியானவர்களாக ஆக்குவதே அவற்றின் நோக்கம். மார்க் கத்துக்காகச் செய்யப்படும் போரில் மனிதர்கள் எந்த அளவு அது கூறும் அடிப்படையான அம்சங்களில், நேரான வழிமுறைகளில் நிலைத்திருக்கிறார்களோ அந்த அளவு அவர்கள் வெற்றிபெறுவார்கள்.

மார்க்கத்துக்காகச் செய்யப்படும் போர்களில் தனிமனித பகைமைக்கு எந்த இடமும் இல்லை. அல்லாஹ் தன் தூதருக்குக் கூறுகிறான்: 'உமக்கு இவ்விசயத்தில் எவ்வித அதிகாரமும் இல்லை. அல்லாஹ் அவர்களின் பாவமன்னிப்பு கோருதலை ஏற்றுக்கொள்ளலாம் அல்லது அவர்களுக்குத் தண்டனையளிக்கலாம். ஏனெனில், அவர்கள் அநியாயக்காரர்களாக இருக்கிறார்கள். (128)'

யாருக்குத் தெரியும், நேற்றைய, இன்றைய எதிரி நாளைய நண்பனாகக் கூட ஆகலாம், அவன் அல்லாஹ்வை ஏற்றுக்கொண்டு அவனுடைய மார்க்கத்தில் நுழைந்துவிட்டால். விருப்பும் வெறுப்பும் அல்லாஹ்வுக்காக மட்டுமே இருக்க வேண்டும். அவர்களுக்கும் மற்றவர்களுக்குமிடையில் எந்தத் தனிப்பட்ட பகைமையும் இல்லை!

உஹதுப் போரில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட தோல்வி தெளிவான நோக்கங்களைக் கொண்டது. பத்ருக் களத்தில் முஸ்லிம்கள் அடைந்த வெற்றி சுயநலவாதிகளும் பதவி வெறியர்களும் புதிய மார்க்கத்தில் இணைவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தியது. எதிர்காலம் இந்த மார்க் கத்துக்குத்தான் என்பதை அவர்கள் உணர்ந்துகொண்டார்கள். பத்ருப் போர் முடிந்தபிறகு நயவஞ்சகர்களின் தலைவன் அப்துல்லாஹ் இப்னு உபை கூறிய வாசகம் கவனிக்கத்தக்கது, 'இந்த மார்க்கம் தனக்கான பாதையை அமைத்துக்கொண்டது.' தானும் தன்னைப் பின்பற்றுவோரும் முஸ்லிம்களுடன் இணைந்துகொள்வதையே அவன் சரியெனக் கண்டான்.

ஆகவே அல்லாஹ் கூறினான், 'இப்போது நீங்கள் இருக்கும் அதே நிலையிலேயே அல்லாஹ் நம்பிக்கையாளர்களை விட்டுவைத்திருக்க மாட்டான். அவன் தூய்மையானவர்களைத் தூய்மையற்றவர்களிட மிருந்து வேறுபடுத்தியே தீருவான். அல்லாஹ் மறைவானவற்றை உங்களுக்கு அறிவிக்க மாட்டான் ... (179)'

ஆகவே, நண்பனையும் எதிரியையும் வேறுபடுத்திக் காட்டுகின்ற சிரமத்திலும் துன்பத்திலும் தூதருக்கு உறுதுணையாக இருந்து, உளப் பூர்வமாக இந்த மார்க்கத்தில் நிலைத்திருப்பவர்களையும் ஆதாயத்துக் காக, பதவிக்காக இந்த மார்க்கத்தில் இருப்பவர்களையும் வேறுபடுத்திக் காட்டும் ஒரு தோல்வி அவசியமாகிறது.

மனிதர்களில் இரு வகையினர் இருக்கிறார்கள். ஒரு வகையினர் சத்தியத்துக்காகத் தங்களை அர்ப்பணித்தவர்கள். அந்தப் பாதையில் எவ்வளவு துன்பங்களை அவர்கள் சந்திக்க நேர்ந்தாலும் அதனைவிட்டு ஒருபோதும் பின்வாங்க மாட்டார்கள். இன்னொரு பிரிவினர் சுயநல வாதிகள். தங்களின் ஆதாயத்துக்காக, தேவைக்காகவே தவிர அவர்கள் உழைக்க மாட்டார்கள். மற்றொரு பிரிவினர் தம் உயிரின் மீது கவலை கொண்டு அல்லாஹ்வைக் குறித்து உண்மைக்குப் புறம்பான, அறியா மைக்கால எண்ணங்களைக் கொண்டிருந்தனர். 'இவ்விசயத்தில் நமக்குச் சாதகமாக ஏதேனும் உண்டா என்று அவர்கள் கேட்கிறார்கள். (154)'

தங்களின் ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதனால் அவர்கள் கோபம் கொள்கிறார்கள். ஏனெனில், அவர்கள் முன்னிலைப் படுத்தப்படவில்லை; கண்ணியப்படுத்தப்படவில்லை. இவர்களைப் போன்றவர்களால் மார்க்கத்துக்கு வெற்றி கிடைக்காது.

சிலர் கூறுவதுபோல, திட்டமிடலில் ஏற்பட்ட பிழையே தோல்விக்குக் காரணம் என்பதல்ல. மாறாக, இடப்பட்ட கட்டளைகளைச் செயல் படுத்துவதில் ஏற்பட்ட பிழையே தோல்விக்கான காரணம். ஒவ்வொரு

*வீரரும் தமக்கு இடப்பட்ட கட்டளையை நிறைவேற்றியிருந்தால் இந்தத் தோல்வி ஏற்பட்டிருக்காது. ஆனாலும், சிலர் தங்கள்மீது விதிக்கப்பட்ட கடமைகளை மறந்துவிட்டார்கள். முஸ்லிம்களுக்குத் தொடக்கத்தில் வெற்றி கிடைத்தபோது தற்காலிகமாக ஏற்பட்ட பேராசை அவர்களை மறதியில் ஆழ்த்திவிட்டது.*

> *அல்லாஹ் தன் வாக்குறுதியை உங்களுக்கு உண்மைப்படுத்திக் காட்டினான். நீங்கள் அவனது கட்டளைப்படி அவர்களைக் கொன்றுகொண்டிருந்தீர்கள். ஆனால், இறுதியில் பலவீனமடைந்து உங்கள் விசயத்தில் பிணங்கிக்கொண்டீர்கள். நீங்கள் விரும்பியதை அவன் காட்டியபின்னரும் நீங்கள் மாறாகச் செய்தீர்கள். உங்களில் சிலர் இவ்வுலகை விரும்புவோராக இருந்தனர். சிலர் மறுவுலகை விரும்புவோராக இருந்தனர் ...* (152)

*அவர்களின் நிலைப்பாடு மாறியதால் விளைவும் மாறியது. 'பின்னர் அவன் உங்களைச் சோதிப்பதற்காக அவர்களைவிட்டும் உங்களைத் திருப்பிவிட்டான். அவன் உங்களை மன்னித்துவிட்டான். அல்லாஹ் நம்பிக்கையாளர்கள்மீது பேரருள் புரிபவனாக இருக்கிறான்.* (152)'

*முஸ்லிம்கள் இந்தத் தோல்வியைக் கண்டு, அதன் மோசமான விளைவுகளைக் கண்டு திடுக்கிட்டார்கள். இது எவ்வாறு நிகழ்ந்தது, ஏன் நிகழ்ந்தது என்று வினவினார்கள். உயர்ந்தோனாகிய அல்லாஹ் அவர்களுக்குப் பதிலளித்தான்:*

> *உங்களை ஒரு துன்பம் வந்தடைந்தபோது இதைப் போன்று இரு மடங்கு துன்பத்தை நீங்கள் அவர்களுக்கு அளித்திருக்க 'இது எங்கிருந்து வந்தது?' என்று கேட்கிறீர்கள். நீர் கூறும், 'இது உங்களால்தான் ஏற்பட்டது.' நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் பேராற்றலுடையவன்.* (165)

*உஹுதுப் போரில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட தோல்வி பத்ருப் போரில் இணைவைப்பாளர்களுக்கு ஏற்பட்ட தோல்வியில் பாதிதான். நீங்கள்தாம் அவர்களுக்கு அதிக பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளீர்கள். ஆயினும், உங்களுக்கு ஏற்பட்ட விளைவுகளுக்கு நீங்கள்தாம் பொறுப்பு. ஒவ்வொருவரும் தமக்கு விதிக்கப்பட்ட கட்டளையை முறையாக நிறைவேற்றியிருந்தால் இந்தத் தோல்வி ஏற்பட்டிருக்காது. பின்னர், வேதனை ஏற்படுத்திய நிகழ்வுகளுக்கான ஆழமான ஆறுதல் தொடங்குகிறது.*

> *உங்களுக்கு முன்னர் பல சமூகங்களின் எடுத்துக்காட்டுகள் கடந்துவிட்டன. ஆகவே, பூமியில் சுற்றித்திரிந்து நிராகரித்தோரின்*

முடிவு என்னவாயிற்று என்பதைப் பாருங்கள். இது மக்களுக்கு விளக்கமாகவும் இறையச்சமுடையோருக்கு வழிகாட்டியாகவும் அறிவுரையாகவும் இருக்கிறது. தைரியத்தை இழந்துவிடாதீர்கள். கவலைப்படாதீர்கள். நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்தால் நீங்கள்தாம் மேலோங்கி நிற்பீர்கள். (137-139)

அசத்தியத்துக்கு எதிர்காலம் கிடையாது. முன்சென்ற சமூகங்களின் வரலாறுகளை அல்லாஹ் தன் அடியார்களுக்கு எடுத்துரைத்துள்ளான். அசத்தியத்தில் பிடிவாதமாக நிலைத்திருந்ததால் அவர்கள் அனைவரும் அழிக்கப்பட்டார்கள்.

குறைஷிகள் இந்தப் போரில் வெற்றிபெற்றிருந்தாலும் அது அழியக்கூடிய வெற்றிதான். நிச்சயமாக அது மாறியே தீரும். எதிர்காலம் இஸ்லாத்துக்கே!

நம்பிக்கையாளர்கள் வெற்றிபெற இரு விசயங்கள் அவசியமாகின்றன: தூய எண்ணமும் சிறந்த முறையில் நிறைவேற்றுதலும். இரண்டில் ஒன்று மற்றொன்றைத் தேவையற்றதாக ஆக்கிவிடாது.

முஸ்லிம்கள் இரண்டாவது விசயத்தை நன்கறிந்துகொள்வது மிகவும் அவசியமாகும். சிலர், நேர்மையாக இருந்தால் மட்டும் போதுமானது, அது எதிர்பார்க்கும் வெற்றியைக் கொண்டுவரும் என்று கருதுகிறார்கள். வானவர்கள் இறங்கி எதிரிகளை அழித்து நம்பிக்கையாளர்களுக்கு உதவி செய்வார்கள் என்று எண்ணுகிறார்கள்.

உங்களிடம் இருக்கும் ஈமான், நற்செயல், உளத்தூய்மை, திறமை என அனைத்தையும் பயன்படுத்துங்கள். பின்னர் நன்மையை எதிர்பாருங்கள், உங்களின் பலம் குறைவாக இருந்தாலும் சரியே. உங்களிடம் இருக்கும் அனைத்தையும் செலவுசெய்துவிட்டீர்கள். அல்லாஹ் உங்களை ஒருபோதும் கைவிட மாட்டான்.

சில குத்துச் சண்டைகளை நான் பார்த்திருக்கிறேன். இரண்டு சமமான குத்துச்சண்டை வீரர்கள் மோதினால் பத்துக்கு மேற்பட்ட சுற்றுகள் அல்லது அதற்கும் அதிகமான சுற்றுகளுக்குப் பிறகே இருவரில் ஒருவர் வெற்றிபெறுவார். வேறு சில குத்துச் சண்டைகளையும் பார்த்திருக்கிறேன். இருவரில் ஒருவர் முதல் அடியிலேயே தோல்வியைத் தழுவிவிடுவார்.

மோசமான ஆட்டம் என்னவெனில், வீரன் நோயாளியாக இருந்தால் அவன் தன் எதிரியின் பலத்துக்கு ஆட்படவில்லை என்றாலும் அவனுடைய உள்ளத்தில் பயம் குடிகொண்டுவிடும். அல்லது, அவனுடைய மோசமான சூழல் அவனது பாதத்தை வழுக்கிவிடும்.

வரலாறு நெடுகிலும் முஸ்லிம்கள் ஈடுபட்ட போர்களில் இந்த வகை யான காரணங்களே காணப்படுகின்றன. எதிரிகளின் தாக்குதலைவிட முஸ்லிம்களின் அணியில் ஏற்பட்ட பிளவே முஸ்லிம்களின் தோல்விக் கான நிரந்தரமான காரணிகளில் ஒன்றாக இருக்கிறது. முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட துன்பங்களுக்கு முஸ்லிம்களே காரணமாக அமைந்தார்கள். அவர்கள் தங்களின் அலட்சியத்திலிருந்து விடுபட்டபோது மீண்டும் ஆட்சி யைப் பெற்றார்கள். இதைத்தான் இந்த அத்தியாயம் கூறியது:

> தைரியத்தை இழந்துவிடாதீர்கள். நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்தால் நீங்களே மேலோங்கி நிற்பீர்கள். உங்களுக்குக் காயம் ஏற்பட்டுள்ளது என்றால் எதிரிகளுக்கும் இதுபோன்று காயம் ஏற்படத்தான் செய்தது. இத்தகைய நாள்களை நாம் மக்களிடையே மாறிமாறி வரச்செய்கிறோம். இது நம்பிக்கையாளர்களை அல்லாஹ் அறிந்துகொள்வதற்காகவும் உங்களில் சிலரைச் சாட்சியாளர்களாக ஆக்குவதற்காகவும்தான். அல்லாஹ் அநியாயக்காரர்களை நேசிப்ப தில்லை. (139,140)

இரு பிரிவினருக்குமிடையில் காணப்படும் நிரந்தரமான இந்த மோதலே வாழ்க்கையின் கதையாகும். ‘அவர்கள் எப்போதும் முரண்பட்டுக் கொண்டே இருப்பார்கள். ஆயினும், உம் இறைவன் யார்மீது அருள் புரிந்தானோ அவர்களைத் தவிர. இதற்காகவே அவன் அவர்களைப் படைத்தான். (11:118)’ தீமை நன்மைக்குச் சோதனையாக, அருவருப்பு அழகுக்குச் சோதனையாக, ஈனத்தனம் கண்ணியத்துக்குச் சோதனையாக அமைந்துவிடுகிறது. ‘நாம் உங்களில் சிலரைச் சிலருக்குச் சோதனையாக ஆக்கியுள்ளோம். நீங்கள் பொறுமையைக் கடைப்பிடிப்பீர்களா? உமது இறைவன் அனைத்தையும் பார்த்துக்கொண்டிருக்கிறான். (25:20)’

அசத்தியத்தை வீழ்த்துவதற்கும் அசத்தியவாதிகளை இழிவுபடுத்து வதற்கும் உம் இறைவன் ஆற்றலுடையவன். அவ்வாறெனில் சத்திய வாதிகளின் பணி என்ன? தங்கள் இறைவனைச் சந்திப்பதற்காக அவர்கள் செய்யும் ஜிஹாதின் பொருள் என்ன? ‘அல்லாஹ் நாடியிருந்தால் அவனே அவர்களைத் தண்டித்திருப்பான். ஆயினும், அவன் உங்களில் சிலரைச் சிலரைக் கொண்டு சோதிக்கிறான் ... (47:4)’

வரலாற்றின் ஆரம்பகாலம்தொட்டே தூதர்களின், அவர்களைப் பின் பற்றியோரின் முன்மாதிரிகள் இந்த அடிப்படையில்தான் கடந்துள்ளன. நம்பிக்கையாளர்களின் அர்ப்பணிப்பினாலும் போராட்டத்தினாலும்தான் வணங்குபவரால் அல்லாஹ்வை வணங்க முடிகிறது; பள்ளிவாசலை நிர்ணயிக்க முடிகிறது.

> மனிதர்களில் சிலரின் மூலம் சிலரை அல்லாஹ் தடுக்காவிட்டால் மடாலயங்களும் கிறிஸ்தவ ஆலயங்களும் அல்லாஹ்வின் பெயர் அதிகமாகக் கூறப்படும் பள்ளிவாசல்களும் இடிக்கப்பட்டிருக்கும். தனக்கு உதவிபுரிவோருக்கு அல்லாஹ் நிச்சயம் உதவிபுரிவான் ... (22:40)

முஹம்மதைப் பின்பற்றுபவர்கள் உஹதுப் போரில் அடைந்த துன்பத்துக்கு அல்லாஹ் ஆறுதல் கூறியபோது இந்த வரலாற்று உண்மையையும் அவன் அவர்களுக்கு நினைவூட்டினான்:

> எத்தனையோ தூதர்களுடன் இணைந்து இறையடியார்கள் பலரும் போர்புரிந்துள்ளனர். இறை வழியில் தங்களுக்கு ஏற்பட்ட துன்பங்களினால் அவர்கள் மனம் தளர்ந்துவிடவுமில்லை, பல வீனப்பட்டுப் பணிந்துவிடவுமில்லை. இத்தகைய பொறுமையாளர்களையே அல்லாஹ் நேசிக்கிறான். அவர்களின் பிரார்த்தனை, 'எங்கள் இறைவா, எங்கள் பாவங்களையும் எங்கள் காரியங்களில் நாங்கள் வரம்புமீறிச் செய்தவற்றையும் மன்னித்துவிடுவாயாக. எங்களை உறுதிப்படுத்துவாயாக. நிராகரிப்பாளர்களுக்கு எதிராக எங்களுக்கு உதவிபுரிவாயாக.' என்பதாகத்தான் இருந்தது. (146,147)

இந்த அத்தியாயம் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட காயங்களுக்கு மருந்தளித்து, ஆறுதலளித்து அவர்களின் பலத்தையும் நம்பிக்கையையும் மீளக் கொண்டுவந்தது. உஹதுப் போரில் ஏற்பட்ட தோல்வியே தூய ஆன்மாக்களை வெளிப்படுத்திக் காட்டியது. அவர்கள் இவ்வுலகைத் துறந்துவிட்டுத் திரும்பிப்பார்க்காமல் அல்லாஹ்வை நோக்கிச் சென்றார்கள்.

அங்கு கடினமான சூழல்களிலும் உறுதியாக நிலைத்துநின்றவர்கள் இருந்தார்கள். இறுதி மூச்சுவரை தங்களின் வாக்குறுதியில் உறுதியாக நிலைத்திருந்தார்கள். அங்கு வீரதீரச் செயல்களினாலும் அர்ப்பணிப்பினாலும் தங்களை அழகுபடுத்திக்கொண்ட பெண்களும் இருந்தார்கள். நம்பிக்கை கொண்ட உறுதியான பெண்கள் போர்க்களத்தை நோக்கி விரைந்துசென்றார்கள்.

அவர்களில் உயிர்த்தியாகம் செய்யும் நற்பேறு வழங்கப்பட்டோரும் இருந்தார்கள். அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் உதவிசெய்ய வேண்டும் என்ற நோக்கத்துக்காகவே அவர்கள் வீரத்தோடு போரிட்டார்கள்.

அந்தப் போர் நம்பிக்கையாளர்களின் உள்ளங்களில் என்றும் மறக்க முடியாத நினைவுகளை ஏற்படுத்திவிட்டது. உஹதைப் பற்றிய நினைவு நபியவர்களின் உள்ளத்தில் அவர்களின் மரணம்வரை நிலைத்திருந்தது.

அவர்கள் உஹதுப் போரில் உயிர்த்தியாகம் செய்தவர்களுக்காகப் பிரார்த்தித்துக்கொண்டிருந்தார்கள். ‘உஹது நம்மை நேசிக்கிறது, நாமும் உஹதை நேசிக்கிறோம்’ என்றும் கூறிக்கொண்டிருந்தார்கள்.

ஷஹாதத் என்பது இறைவனின் திருப்தியைப் பெற்றுத்தரும் உயர்ந்த படித்தரமாகும். அல்லாஹ் தன் அடியார்களில் தான் நாடுவோரை அதற்காகத் தேர்ந்தெடுக்கிறான். ஆகவேதான் இந்த அத்தியாயத்தில் அவன் கூறுகிறான்: ‘உங்களிலிருந்து அவன் சாட்சியாளர்களை உருவாக்குவதற்காகவும் ... (140)’

இந்த உயர்ந்த படித்தரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வின் வாக்கை மேலோங்கச்செய்வதையே தங்களின் நோக்கமாகக் கொண்டிருந்தனர் என்பதைக் காண்கிறோம். அவர்கள் இரவும் பகலும் இஸ்லாத்தை வலுப்படுத்திக் கொண்டும் எதிரிகளிடமிருந்து அதனைக் காத்துக்கொண்டும் இருந்தார்கள்.

உறுதியான, தெளிவான இந்தப் பண்புக்கு உஹதுப் போரில் கொல்லப்பட்டவர்கள் தனித்துவமான முன்மாதிரிகளாவர். மக்காவில் மிகவும் செல்வச் செழிப்போடு வாழ்ந்த முஸ்அப் இப்னு உமைர் என்ற இளைஞரின் வாழ்க்கையைக் கவனித்துப்பாருங்கள். இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதனால் அவரது செல்வம் அவரிடமிருந்து பிடுங்கப்பட்டது. வறுமையின் கோரப்பிடியில் அவர் சிக்குண்டார். பட்டாடையை அணிந்து பழக்கப்பட்ட அவர் இஸ்லாத்தை ஏற்றபிறகு ஆட்டுத்தோலினால் ஆன ஆடையை அணியும் நிலைக்கு ஆளானார்.

பின்னர் மதீனாவில் இஸ்லாத்தைப் பரப்புவதற்காக நபியவர்களால் பொறுப்பு வழங்கப்பட்டு அனைவருக்கும் முன்னதாக அங்கு புலம் பெயர்ந்துசென்றார். அங்கு எந்த வீட்டையும் விட்டுவிடாமல் எல்லா வீடுகளிலும் இஸ்லாத்தை நுழையச்செய்தார். உஹதுப் போரில் அவர் கொல்லப்பட்டார். அவரது தூய உடலை முழுமையாக மறைப்பதற்குக் கூட ஆடை இல்லாமல் இருந்தது. அதனால் இத்கிர் என்னும் ஒரு வகையான புல்லைக் கொண்டு அவரது பாதம் மறைக்கப்பட்டது.

அப்துல்லாஹ் இப்னு ஹறாமின் வாழ்க்கை வரலாற்றைக் கவனித்துப் பாருங்கள். ஏழு சிறுமிகளுக்கும் ஒரு சிறுவனுக்கும் தந்தையாக இருந்தவர் (அந்தச் சிறுவரின் பெயர் ஜாபிர் இப்னு அப்துல்லாஹ்). அவர் தம் மகனிடம் கூறினார், ‘ஓர் ஆண் இருக்கும்போது ஏழு யுவதிகள் விட்டுவிடப்பட மாட்டார்கள். என்னால் அல்லாஹ்வின் தூதருடன் போருக்குப் புறப்படாமல் வீட்டில் இருக்க முடியாது. நீ இவர்களுடன் இருந்துகொள்.

நான் போருக்குப் புறப்படுகிறேன்.' உயிர்த்தியாகம் செய்வதற்காக அவர் போருக்குப் புறப்பட்டுச்சென்றார்.

வில்வீரர்கள் தங்களின் இடங்களிலிருந்து விலகிச்சென்ற பிறகு முஸ் லிம்களுக்குப் பெரும் இழப்புகள் ஏற்பட்டன. எழுபது தோழர்கள் கொல்லப்பட்டார்கள். நபியவர்களும் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்ற வதந்தி மக்களிடையே பரவியது.

ஆனாலும், குறைஷிகள் முஸ்லிம்களை உறுதியானவர்களாகக் கண் டார்கள். ஏற்கனவே ஏற்பட்ட இழப்புகளைத் தவிர வேறெந்த இழப் பையும் அவர்களால் முஸ்லிம்களுக்கு ஏற்படுத்த முடியவில்லை. அவர் கள் ஒன்றிணைந்து தங்களின் ஆயுதங்களுடன் மக்காவை நோக்கித் திரும்பினார்கள். அவர்களைக் குறித்தே பின்வரும் வசனம் அருளப் பட்டது:

> அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டவர்களை இறந்தவர் களாகக் கருதாதீர்கள். (169)

அவர்கள் ஐந்து பண்புகளால் வர்ணிக்கப்படுகிறார்கள்:

அ. மாறாக, அவர்கள் தங்கள் இறைவனிடம் உயிருடன் உள்ளார்கள்.

ஆ. அவர்கள் உணவளிக்கப்படுகிறார்கள்.

இ. அல்லாஹ் அவர்களுக்கு வழங்கியவற்றைக் கொண்டு மகிழ்ச்சி யாக இருக்கிறார்கள்.

ஈ. அவர்களுடன் இன்னும் வந்துசேராமல் பின்னால் இருக்கும் மக்களைக் குறித்து 'அவர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை, அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள்' என்ற நற்செய்தியைப் பெறுபவர்களாகவும் இருக்கிறார்கள். (169-170)

அல்லாஹ் அந்த உயிர்த்தியாகிகளுக்கு அறிவித்தான், 'அவர்களின் சகோதரர்களும் பிள்ளைகளும் சத்தியத்தில் நிலைத்திருக்கிறார்கள். அவர்கள் அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் உதவிசெய்து தங்களின் கட மையை நிறைவேற்றிவிட்டார்கள். அவர்கள் விரைவில் சுவனத்தில் இவர்களைச் சந்திப்பார்கள்.'

முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட தற்காலிகத் தோல்விக்குப் பிறகு அவர்கள் செய்த செயல் இங்கு நினைவுகூரத்தக்கதாகும். அவர்கள் தங்களின் காயங்களைச் சகித்துக்கொண்டு, தங்களின் பலத்தை ஒன்றுதிரட்டி

நிராகரிப்பின் படையை விரட்டியவர்களாக மக்காவை நோக்கிச் சென்றார்கள். நிராகரிப்பாளர்கள் திரும்பிவந்து தாக்கத் திட்டமிட்டிருந்தார்கள். முஸ்லிம்களின் மீள்வருகையை உணர்ந்த அவர்கள் விரைவாக மக்காவை நோக்கிச் சென்றார்கள்.

திருக்குர்ஆன் வர்ணிப்பதுபோல முஸ்லிம்கள் திரும்பிவந்தார்கள்: 'அவர்கள் தங்களுக்குக் காயம் ஏற்பட்டபின்னரும் அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் பதிலளித்தார்கள். அவர்களில் நற்செயல் புரிந்து இறையச்சமுடையோராக இருப்போருக்கு மகத்தான கூலி உண்டு. (172)'

உஹதுப் போரைக் குறித்த விமர்சனம் துண்டிக்கப்பட்டு மீண்டும் யூதர்களைக் குறித்த பேச்சு தொடர்கிறது. இங்கிருந்து அத்தியாயத்தின் இறுதிவரை கலவையான விசயங்கள் கூறப்பட்டுள்ளதைக் காண்கிறோம். சில சமயம் யூதர்கள்குறித்து பேசப்படுகிறது. சில சமயம் சிலை வழிபாட்டாளர்கள்குறித்து பேசப்படுகிறது. அழைப்பியல் போராட்டம் இரு பிரிவுகளையும் சமமாகவே உள்ளடக்கியுள்ளது என்பதில் வியப்பேதும் இல்லை. அல்லாஹ் கூறுகிறான்:

> உங்கள் செல்வங்களிலும் உயிர்களிலும் நிச்சயம் நீங்கள் சோதிக்கப்படுவீர்கள். உங்களுக்கு முன் வேதம் வழங்கப்பட்டோரிடமிருந்தும் இணைவைப்போரிடமிருந்தும் நிச்சயம் வேதனை தரும் வார்த்தைகளைச் செவியுறுவீர்கள். நீங்கள் பொறுமையை மேற்கொண்டு இறையச்சத்தோடு இருந்தீர்களானால் நிச்சயமாக அது மனஉறுதிமிக்க காரியமாகும். (186)

சகிப்புத்தன்மைமிக்கவன் கூட நெருக்கடிக்குள்ளாகும் அளவுக்கு யூதர்கள் நிராகரிப்பில் வரம்புமீறிச் சென்றார்கள்.

இறை வழியில் செலவுசெய்யுமாறு திருக்குர்ஆன் நம்பிக்கையாளர்களுக்கு அறிவுறுத்துகிறது. அது சத்தியத்தைப் பாதுகாப்பதற்காகச் செய்யப்படும் செலவாக இருக்கலாம்; அல்லது, ஏழைகள், வறியவர்கள் ஆகியோருக்கு உதவும் பொருட்டுச் செய்யப்படும் செலவாக இருக்கலாம். அது உன்னதமான வழிமுறையில், கண்ணியமான வடிவில் செலவு செய்யுமாறு அவர்களைத் தூண்டியது. 'அல்லாஹ்வுக்கு அழகிய கடன் தருபவர் யார்? அல்லாஹ் அதனை அவருக்குப் பன்மடங்காக்கித் தருவான். அல்லாஹ்வே குறைவாகவும் தாராளமாகவும் வழங்குகிறான். நீங்கள் அனைவரும் அவன் பக்கமே திரும்பக் கொண்டுவரப்படுவீர்கள். (2:245)'

இந்த வசனத்தைச் செவியேற்றபோது யூதர்கள் என்ன பதிலளித்தார்கள் தெரியுமா? அவர்கள் கூறினார்கள், 'அல்லாஹ் ஏழை. அடியார்களைச்

செலவுசெய்யச் சொல்கிறான். அவன் வட்டியைத் தடைசெய்துவிட்டு அடியார்களிடம் வட்டிக்குப் பணம் வாங்குகிறான்.'

*அல்லாஹ் ஏழை, நாங்கள்தாம் செல்வந்தர்கள் என்று கூறியவர்களின் கூற்றை அல்லாஹ் கேட்டுக்கொண்டான். அவர்கள் கூறியதையும் தூதர்களை அநியாயமாகக் கொன்றதையும் நாம் எழுதிக் கொள்வோம். 'நெருப்பின் வேதனையைச் சுவையுங்கள்!' என்று நாம் அவர்களிடம் கூறுவோம். (181)*

இந்தக் கூற்று அவர்களின் உள்ளத்தில் ஈமானோ இறையச்சமோ இல்லை என்பதையே காட்டுகிறது. முன்னோர்களிடமிருந்து பெற்றதை வைத்துக்கொண்டு ஓர் இழிவான வாழ்க்கையையே அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தங்களின் பழமையான குரோதத்தைக் கொண்டு அவர்கள் ஈமானை எதிர்கொள்கிறார்கள்.

அவர்களின் சமூகத்தில் பணம்தான் வணங்கப்பட்டது என்பதிலும் அவர்கள் மறுமையை மறந்து இவ்வுலக ஆதாயங்களைத் தேடினார்கள் என்பதிலும் வியப்பேதும் இல்லை.

தாங்கள் அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டம் என்று யூதர்கள் கருதுகிறார்கள். இந்தத் தேர்ந்தெடுப்பின் மூலம் அவர்கள் பிற சமூகங்களுக்குக் கற்றுக்கொடுப்பவர்களாக, அவற்றுக்கு உதவக் கூடியவர்களாக இருக்க வேண்டுமா அல்லது தங்களின் மேலாதிக்கத்தை, கர்வத்தை நிலைநாட்ட வேண்டுமா?

யூதர்களின் வரலாறு மனிதச் சமூகத்துக்கு அபகரிப்பையும் கர்வத்தையும் அளித்த அளவு எந்தக் கொடையையும் வழங்கியதில்லை.

இன்றைய அறபுகள் மட்டும் யூதர்களைக் குறித்து இவ்வாறு கூறவில்லை. ஐரோப்பிய, அமெரிக்கச் சமூகங்களும் ஆரம்பத்திலிருந்து அவர்களைக் குறித்து இவ்வாறுதான் கூறிவருகின்றன.

இந்த அத்தியாயத்தில் இடம்பெறக்கூடிய பின்வரும் வசனங்கள் யூதர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக எடுத்துரைத்துவிடுகின்றன:

*வேதம் வழங்கப்பட்டோரிடம், 'வேதத்தை மக்களுக்குத் தெளிவுபடுத்திவிட வேண்டும். அதனை நீங்கள் மறைத்துவிடக் கூடாது.' என்று அல்லாஹ் உறுதிமொழி வாங்கியதை நினைவுகூருங்கள். ஆனால், அவர்கள் அதனைத் தங்கள் முதுகுக்குப் பின்னால் எறிந்துவிட்டார்கள். அற்ப ஆதாயத்துக்கு அதனை விற்றுவிட்டார்கள். அவர்கள் வாங்கிக்கொண்டது எவ்வளவு மோசமானது! தாம் செய்த*

செயல்களுக்காக மகிழ்வடைந்து தாம் செய்யாத செயல்களுக்காகப் பாராட்டப்பட வேண்டும் என்று விரும்புபவர்கள் அல்லாஹ்வின் வேதனையிலிருந்து தப்பிவிடுவார்கள் என்று எண்ணிவிடாதீர்கள். அவர்களுக்கு வதைக்கும் வேதனை உண்டு. (187,188)

இந்த அத்தியாயம், கடந்தகாலம், அதன் இனிமையான, கசப்பான நினைவுகள் ஆகியவற்றைவிட்டுத் தூரமாக நம்மை வேறொரு சூழலுக்கு அழைத்துச்செல்கிறது.

நான் இந்த உலகில் வாழ்கிறேன். இதன் ஆற்றல்களையும் விதிகளையும் நன்மைகளையும் சான்றுகளையும் அறிகிறேன். இவையனைத்தும் என்னை அல்லாஹ்வின் பக்கம், அவனது புகழ்பாடுவதன் பக்கம், அவனது கண்ணியத்தை ஏற்றுக்கொள்வதன் பக்கம் இட்டுச்செல்கின்றன.

மார்க்கங்களுக்கும் அவற்றைப் பின்பற்றுவோருக்குமிடையே காணப்படும் எல்லா முரண்பாடுகளையும் விட்டுவிடுகிறேன். நான் எதன் அடிப்படையில் விசாரிக்கப்படுவேனோ அந்த அறிவையே நான் நம்புகிறேன். இந்த உலகுக்குப் பிறகு நான் செல்லுமிடம்குறித்து சிந்திக்கிறேன். நான் ஏன் என் இறைவனை மறக்க வேண்டும்? அவன் காட்டித்தந்த நேரான வழியிலிருந்து விலகியிருக்க வேண்டும்? அவனிடமே அடைக்கலம் தேடுவது என்மீது கட்டாயம், அல்லவா?

ஒரு மனிதர் வெளிப்படுகிறார். பூமியில் உள்ளவர்களை நேரான வழியின் பக்கம் திரும்புமாறும் தங்கள் இறைவனையே நம்புமாறும் அழைக்கிறார். ஏன் அதனைப் புறக்கணிக்க வேண்டும்? நான் இந்த அழைப்பாளரின் அழைப்பைக் காதுகொடுத்துக் கேட்க வேண்டாமா? அதுகுறித்து சிந்திக்க வேண்டாமா?

எங்கள் இறைவா, ஈமானின் பக்கம் அழைக்கும் ஓர் அழைப்பாளர், 'உங்கள் இறைவனின் மீது நம்பிக்கை கொள்ளுங்கள்.' என்று அழைப்பு விடுத்ததை நாங்கள் செவியேற்றோம். ஆகவே நம்பிக்கை கொண்டோம். எங்கள் இறைவா, எங்கள் பாவங்களை மன்னித்தருள்வாயாக. எங்களிடம் உள்ள தீமைகளை அகற்றுவாயாக. எங்களை நல்லோர்களுடன் மரணிக்கச்செய்வாயாக ... (193)

இந்தப் பிரார்த்தனைக்கு அல்லாஹ் பதிலளித்தான். செயல்படக்கூடியவர் ஆணாயினும் பெண்ணாயினும் மனிதராயினும் ஜின்னாயினும் கறுப்பராயினும் வெள்ளையராயினும் அவன் ஒருபோதும் அவருடைய செயலை வீணாக்க மாட்டான். இங்கு நற்செயலே கவனிக்கப்படத்தக்கது.

*அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்ளுமாறு, அவனுக்கு அஞ்சுமாறு, அவனுடைய சந்திப்புக்காகத் தங்களைத் தயார்படுத்திக்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கும் ஓர் அழைப்பாளரின் அழைப்பை ஏற்றுக்கொள்வ தற்கு எது தடையாக இருக்கிறது? ஏன் அவருக்கு எதிராக உள்ளங்கள் ஒன்றிணைய வேண்டும்? அவருடன் போரிடக் கூட்டங்கள் ஒன்றுதிரள வேண்டும்?*

*சிலைவழிபாடு செய்யும் மூடர்களும் குழுவெறி கொண்ட வேதக்காரர் களும் அவருக்கு எதிராக ஒன்றுதிரண்டார்கள். அவருடன் போரிட்டார் கள். அவரைப் பின்பற்றியவர்களைப் புலம்பெயர்ந்துசெல்லும் கட்டாயத் துக்கு ஆளாக்கினார்கள். பல வகையான துன்பங்களை அவர்களுக்கு அளித்தார்கள். அவரைப் பின்பற்றியவர்கள் அல்லாஹ் கூறியவாறு தங்க ளுக்கான கூலியைப் பெறுவார்கள்:*

> *அவர்களின் இறைவன் அவர்களின் பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டு, 'உங்களில் ஆணாயினும் பெண்ணாயினும் யாருடைய செயலையும் நான் வீணாக்க மாட்டேன்.' என்று கூறினான். 'நீங்கள் ஒருவர் மற்றவரிலிருந்து வந்தவர்கள். ஆகவே, புலம்பெயர்ந்தவர் கள், தம் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள், என் பாதை யில் துன்புறுத்தப்பட்டவர்கள், போரிட்டவர்கள், அதில் கொல் லப்பட்டவர்கள் ஆகியோரின் பாவங்களை நிச்சயம் நான் அவர் களைவிட்டும் போக்கிவிடுவேன். அவர்களைச் சுவனச் சோலை களில் நுழையச்செய்வேன். அவற்றில் ஆறுகள் ஓடிக்கொண்டிருக் கும் ...'* (195)

*நிராகரிப்பாளர்கள் வெற்றிபெற்றாலும் அது குறிப்பிட்ட காலம்வரை தான்:*

> *நகரத்துக்குள் நிராகரிப்பாளர்களின் நடமாட்டம் உம்மை ஏமாற்றத் தில் ஆழ்த்திவிட வேண்டாம். அது சிறிதளவு இன்பம்தான். பின்னர், அவர்களின் இருப்பிடம் நரகமாகும். இது மிகவும் மோசமான இருப்பிடமாகும்.* (196,197)

*உஹதுப் போரில் இணைவைப்பாளர்களின் கரம் ஓங்கியது. ஆனாலும் என்ன நிகழ்ந்தது? சத்தியத்தின் ஓட்டம் சிறிது நேரம் தடைபட்டது. பின்னர், அது முன்பைவிட வேகமாகப் பயணிக்க ஆரம்பித்தது. இறுதியில் வெற்றி இறையச்சத்துக்கே!*

*இந்த விரிவான விளக்கத்துக்குப் பிறகு இரு வசனங்களைக் கொண்டு இந்த அத்தியாயம் நிறைவடைகிறது. முதல் வசனம், வேதக்காரர்கள்*

குறித்தும் இந்தத் தூதரை அவர்கள் எவ்வாறு அணுக வேண்டும் என்பது குறித்தும் பேசுகிறது.

*வேதக்காரர்களில் இப்படியும் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறார்கள். உங்களுக்கு அருளப்பட்ட வேதத்தையும் அவர்களுக்கு அருளப்பட்ட வேதத்தையும் ஏற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் அல்லாஹ்வுக்குப் பணிந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் அவனுடைய வசனங்களை அற்ப ஆதாயத்துக்கு விற்றுவிடுவதில்லை. அவர்களின் கூலி அவர்களின் இறைவனிடம் உள்ளது …* (199)

வசனம் இறுதிநாள்வரை வரக்கூடிய வேதக்காரர்கள் அனைவரையும் இந்த இறுதித் தூதரின் மீது நம்பிக்கை கொள்ளுமாறு அழைப்பு விடுப்பதாகவும் இருக்கிறது. இரண்டாவது வசனம், முஹம்மது நபியைப் பின்பற்றும் முஸ்லிம்களுக்கான அறிவுரை.

*நம்பிக்கையாளர்களே, பொறுமையை மேற்கொள்ளுங்கள், உறுதியாக நிலைத்திருங்கள், இணைந்திருங்கள், அல்லாஹ்வை அஞ்சுங்கள். நீங்கள் வெற்றியாளர்களாகத் திகழக்கூடும்.* (200)

அவர்கள் அல்லாஹ் வழங்கிய சத்தியப் போதனைகளில் பொறுமையாக நிலைத்திருக்க வேண்டும். இந்தத் தளத்தில் மற்றவர்களைவிட அதிகப் பொறுமையாளர்களாக இருக்க வேண்டும். எதிரிகள் அவர்களின் பிரதேசங்களில் நுழைந்துவிடாதவண்ணம் ஒற்றுமையாக இருக்க வேண்டும். இதுதான் நமக்கான அழைப்பு. நாம் இந்த அழைப்புக்குச் செவியேற்போமா?

❖ ❖ ❖

அத்தியாயம் 4

# அந்நிசா

(பெண்கள்)

*இந்த அத்தியாயத்தின் மூன்றில் ஒரு பகுதி குடும்பத்தைக் குறித்தும் அதன் விவகாரங்களைக் குறித்தும் பேசுகிறது. குடும்பம் என்பது சிறிய சமூகமாகும். மீதமுள்ள இரு பகுதிகளும் சமூகத்தைக் குறித்தும் அதன் விவகாரங்களைக் குறித்தும் பேசுகிறது. சமூகம் என்பது பெரிய குடும்ப மாகும். சமூகத்தின் தொடர்புகள், அதனை உறுதிப்படுத்துவது, சீர்படுத்து வது ஆகியவற்றைச் சுற்றியே அத்தியாயத்தின் மையக் கருத்து அமைந் துள்ளது.*

*அத்தியாயம் இந்த விழிப்புணர்வைக் கொண்டு தொடங்குகிறது: 'மனிதர்களே, உங்களை ஒரே ஆன்மாவிலிருந்து படைத்த உங்கள் இறை வனை அஞ்சுங்கள். அவன் அதிலிருந்தே அதனுடைய துணையைப் படைத்தான். அவ்விருவரிலிருந்து ஏராளமான ஆண்களையும் பெண் களையும் பரவச்செய்தான் ... (1)' மனிதர்கள் ஒருவருக்கொருவர் வேறு வேறானவர்களாகத் தெரிந்தாலும் உண்மையில் அவர்கள் உறவினர் களாவர். அவர்கள் அனைவரும் ஒரே தாய்தந்தையிலிருந்து வந்தவர்கள். அவர்கள் ஒருவர் மற்றவரின் உறவினராவர்.*

*ஒவ்வொருவரும் இந்த உறவுமுறையை நினைவுகூர வேண்டும். நெருக்கமான, தூரமான உறவுகளைப் பேண வேண்டும். உறவைப் பேணுவது இஸ்லாத்தின் அடையாளங்களில் ஒன்றாகும். உறவுமுறை என்பது மார்க்கம் மற்றும் சகோரத்துவத்தின் அடிப்படையில் நெருக்க மானவர்கள் என்று மக்களிடையே அறியப்பட்டாலும் மனிதச் சமூகத்தின் வட்டம் விசாலமானதாக இருக்க வேண்டும். வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த, நிறங்களுடைய மக்கள் தங்களிடையே ஒருவருக்கொருவர் உதவிக்கொள்பவர்களாக இருக்க வேண்டும்.*

முதல் வசனம், இந்த அறிவுரையில் படைப்பாளனும் பெரும் வல்லமையுடையவனுமாகிய அல்லாஹ்வின் மீதுள்ள அச்சத்தை, அனைத்தையும் தழுவிய அவனுடைய கண்காணிப்பை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆயினும், இந்த அத்தியாயத்தின் பல வசனங் களில் அல்லாஹ்வின் அருளையும் கருணையையுமே காண்கிறோம். உதாரணங் களாக, 'தடுக்கப்பட்டுள்ள பெரும் பாவங்களைவிட்டும் நீங்கள் தவிர்ந்து கொண்டால் நாம் உங்களின் சிறு பாவங்களை மன்னித்து விடுவோம் ... (31)', 'தீமைசெய்துவிட்டு அல்லது தமக்குத்தாமே அநீதி இழைத்துவிட்டு, பின்னர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கோருபவர் அல்லாஹ்வைப் பெரும் மன்னிப்பாளனாகவும் இணையிலாக் கிருபையாளனாகவும் காண்பார். (110)', 'நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணையாக்கப்படுவதை மன்னிக்கவே மாட்டான். அதைத் தவிர மற்ற பாவங்களை தான் நாடு வோருக்கு அவன் மன்னித்துவிடுகிறான் ... (48)', 'அறியாமையால் தீய காரியம் செய்துவிட்டு, பின்னர் உடனடியாக மன்னிப்பு கோருகிறார்களே அவர்களைத்தான் அல்லாஹ் மன்னிப்பான். (17)'

> உங்களுக்குத் தெளிவாக விளக்கவும் முன்சென்றோரின் வழி முறைகளை உங்களுக்குக் காட்டவும் உங்களை மன்னிக்கவுமே அல்லாஹ் விரும்புகிறான். அல்லாஹ் நன்கறிந்தவனாகவும் ஞானம்மிக்கவனாகவும் இருக்கிறான். அவன் உங்கள்மீது கருணை காட்டவே விரும்புகிறான். தம் மனஇச்சைகளைப் பின்பற்றுப வர்கள் நீங்கள் நேரான வழியைவிட்டு வெகுதூரம் சென்றுவிட வேண்டும் என்று விரும்புகிறார்கள். அல்லாஹ் உங்கள்மீது உள்ள பாரத்தைக் குறைக்கவே விரும்புகிறான். மனிதன் பலவீனமான வனாகவே படைக்கப்பட்டுள்ளான். (26-28)

பல வகையான வணக்க வழிபாடுகளைக் கொண்டு அடியார்களின் மீது பாரங்களைச் சுமத்த, அவர்களைச் சிரமத்தில் ஆழ்த்த அல்லாஹ் விரும்பவில்லை. அவன் நிறைவேற்றக்கூடிய கடமைகளால் ஏற்படும் களைப்பானது கல்வியைக் கற்பதற்குக் கற்பவன் அடையும் களைப்பு; பரிபூரணத்தை அடையும் பாதையில் அவன் பெறக்கூடிய களைப்பு. அது பலன்தரக்கூடிய களைப்பாகும்.

பேராற்றலுடைய கண்காணிப்பாளனின் மீதான அச்சத்துக்கும் பெரும் மன்னிப்பாளன், இணையிலாக் கருணையாளனின் மீதான நம்பிக்கைக்கும் மத்தியில்தான் நம்பிக்கையாளர்கள் வாழ்கிறார்கள். இறுதித் தீர்ப்புநாளைச் சந்திக்க தங்களைத் தயார்படுத்திக்கொள்கிறார்கள். அவர்களின் வாழ்நாள் நீளமானதாக அல்லது குறைவானதாக இருந்தாலும் சரியே.

இந்த அத்தியாயத்தில் குடும்பத்துக்கான அறிவுரைகள் குறித்து பேசும் பகுதி அநாதைகளுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகளைக் கொண்டு தொடங்குகிறது. ஏனெனில், முஸ்லிம்கள் எதிரிகளுக்கு எதிராகப் போரிடும் சமூகத்தினராவர். ஆகவே, அவர்களில் பலர் கொலைசெய்யப் பட்டாலும் சமூகத்தில் அநாதைகள் அதிகரித்தாலும் வியப்பேதும் இல்லை.

நம்முடைய இந்தக் காலகட்டத்திலே அநாதைகள் கிறிஸ்தவப் பிரச் சாரக் குழுக்களுக்கு இரையாகிக்கொண்டிருப்பதைக் காண்கிறோம். அவர்கள் அநாதைகளைக் குறிவைத்து நிறுவனங்கள் நடத்துகிறார்கள். அநாதைகளைக் கிறிஸ்தவர்களாக மதமாற்றம் செய்கிறார்கள். ஆகவே, தங்களின் அநாதைகளின் மீது கரிசனம் காட்ட வேண்டியதும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியதும் முஸ்லிம் சமூகத்தின் மீது கட்டாயக் கடமையாகும்.

அநாதைகளைக் குறித்த உரையாடலினூடே திருமணம் குறித்த பேச்சும் இடம்பெறுகிறது. ஒரு பெண்ணையோ பல பெண்களையோ மண முடித்துக் கொள்ளலாம் என்று அனுமதியளிக்கப்படுகிறது.

இந்த விசயத்தில் இஸ்லாம் முந்தைய மார்க்கங்களை விட்டு வேறு படுவதில்லை. அல்லாஹ்விடமிருந்து வந்த எந்த மார்க்கமும் பலதார மணத்தைத் தடைசெய்ததில்லை.

தற்காலச் சூழலை நாம் காணும்போது ஐரோப்பியர்களும் அமெரிக்கர் களும் பெண்களுடனான தொடர்பில் மிக மோசமானவர்களாக இருப்ப தைக் காண்கிறோம். அவர்களுக்கு மத்தியில் பலதார மணம் தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால், அங்கு ஒரு ஆணால் பல பெண் களுடன் தொடர்புவைத்துக்கொள்ள முடியும்.

நமக்கு அளிக்கப்பட்ட அனுமதி வரம்புக்குட்பட்டது. ஏனெனில், இஸ்லாம் மணமுடிக்க வசதியற்ற இளைஞர்களை நோன்புநோற்குமாறு கட்டளையிடுகிறது. ஒரு பெண்ணுடன் வாழ முடியாதவருக்கு, அவ்வாறு வாழ்ந்தாலும் அவளுடன் நியாயமாக நடந்துகொள்ள முடியாதவருக்கு எப்படி வேறு பெண்ணையும் மணமுடித்துக்கொள்ளலாம் என்று அது அனுமதியளிக்கும்?

நம்மிடத்தில் திருமணம் என்பது நிர்ப்பந்தப்படுத்தி செய்யப்படுவ தல்ல. பலதார மணத்தை விரும்பாத எந்தப் பெண்ணுக்கும் அதனை மறுக்க உரிமை உண்டு.

எந்தப் பெண் தன் கணவன் வேறு திருமணம் முடித்துக்கொள்வான் என்று அஞ்சுகிறாளோ அவள் மண ஒப்பந்தத்தின்போது தனக்கு எந்தச்

*சக்களத்தியும் இருக்கக் கூடாது என்று அவனுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். இமாம் அஹ்மது கூறுவதுபோல ஒப்பந்தமளித்த கணவன் தன் ஒப்பந்தத்தைப் பேண வேண்டும். அவ்வாறு இல்லையெனில் திருமணம் ரத்தாகிவிடும்.*

*அதற்குப் பிறகு அத்தியாயம் வாரிசுரிமைச் சட்டங்களைக் குறிப் பிடுகிறது. சொத்தில் பெண்ணுக்குக் குறிப்பிட்ட பங்கு நிர்ணயிக்கப் படுகிறது. அதற்கு முன்னால் பெண்ணுக்கு எந்தச் சொத்தும் வழங்கப் படவில்லை. ஏழைகளுக்கும் பலவீனர்களுக்கும் வழங்கும்படி ஆர்வ மூட்டப்படுகிறது. ஒரு மனிதர் தம்முடைய சொத்திலிருந்து மூன்றில் ஒரு பகுதியை தாம் விரும்பியவாறு உயில் எழுதிக்கொள்ளலாம் என்றும் அனுமதியளிக்கப்படுகிறது.*

*இஸ்லாம் பெண்ணைவிட ஆணுக்கு இருமடங்கு பங்கை அளிக்கிறது. ஏனெனில், ஆணின் மீது இஸ்லாம் பல பொறுப்புகளை விதிக்கிறது. அவன்தான் மணக்கொடை அளிக்க வேண்டும். அவன்தான் தன் குடும் பத்துக்காகச் செலவழிக்க வேண்டும்.*

*பெண்ணின் மீது சம்பாதிக்க வேண்டும் என்ற கடமை இல்லை. அவளுக்கு நெருங்கிய உறவினர் யாரும் இல்லையெனில் பொதுநிதிக் கருவூலத்திலிருந்து அவளுக்குத் தேவையானவை வழங்கப்படும். இது பெண்ணைக் கண்ணியப்படுத்தும் பொருட்டும் மேற்குலகில் நிகழ்ந்தது போல அவளது மானம் மதிப்பின்றி வீணாக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவும் ஆகும்.*

*நான் இந்த வாசகத்தின் மூலம் பொருள்களைப் போன்று பெண்களைப் பதுக்க நினைக்கும் மூளையற்ற சில முஸ்லிம்களுக்கு ஆதரவாக வாதிடவில்லை. அவர்கள் தங்களின் மனைவியரையும் சகோதரிகளையும் மகள்களையும் குறைத்து மதிப்பிடுகிறார்கள். பெண்களை அடைத்து வைப்பதையும் அவர்களை மூடர்களாக ஆக்குவதையும் சிறந்த செயல் களாகக் கருதுகிறார்கள்.*

*ஹதீஸில் வந்துள்ளது. நபியவர்கள் கூறியதாக அன்னை ஆயிஷா அறிவிக்கிறார்: 'நம்பிக்கையாளர்களில் முழுமையானவர்கள், நற்குண முடையவர்களும் தங்களின் குடும்பத்தாரிடத்தில் மென்மையாக நடந்துகொள்பவர்களும் ஆவார்கள்.' நபியவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் அறிவிக்கிறார்: 'உங்களில் சிறந்தவர் உங்கள் மனைவியரிடத்தில் சிறந்தவரே. உங்களைவிட நான் என் மனைவியரிடத்தில் சிறந்தவ னாவேன்.'*

வருந்தத்தக்க விசயம் என்னவெனில், தங்களை மார்க்கப் பற்றுள்ள வர்களாகக் காட்டிக்கொள்ளும் பலர் பெண்களுடன் கடுமையாக நடந்து கொள்வோராகவும் அவர்களைக் குறைத்து மதிப்பிடுவோராகவும் அவர் களுடன் மோசமான முறையில் வாழ்க்கை நடத்துவோராகவும் இருக்கி றார்கள். எந்த அளவுக்கெனில், அவர்களால் பெண்கள் இஸ்லாத்தையே வெறுக்கிறார்கள். இந்த மோசமான புரிதல் சமூகத்தில் இஸ்லாத்தின் ஆதிக்கத்தைக் குறித்து அஞ்சுபவர்களாக அவர்களை ஆக்கிவிடுகிறது.

பழங்காலத்தில் பெண்ணின் தனித்தன்மை வீணாக்கப்பட்டுக் கொண்டும் அவளது உரிமைகள் பறிக்கப்பட்டுக்கொண்டும் இருந்தன. பெண்ணின் கணவன் மரணித்துவிட்டால் அந்தக் கணவனின் நெருங்கிய உறவினர் அந்தப் பெண்ணின் மீது கைவைப்பார். அவள் இறந்தவர் விட்டுச்சென்ற சொத்துகளைப் போன்று ஆகிவிடுவாள்.

யூதர்களும் கிட்டத்தட்ட இதைப் போன்றே செய்துவந்தார்கள். ஒரு பெண் கருவுறாமல் அவளது கணவன் இறந்துவிட்டால் கணவனின் சகோதரன் அவளை மணமுடித்துக்கொள்ள வேண்டும். அவன்மூலமாகப் பிறக்கும் குழந்தை இறந்த கணவனோடு இணைத்து அழைக்கப்பட வேண்டும்.

எனக்குத் தெரியாது, இது எவ்வாறு நிகழும் என்று. வலுக்கட்டாயமாகச் செய்யப்படும் திருமணம்! செயற்கையாக இணைக்கப்படும் குழந்தை!

இது அல்லாஹ் அருளிய சட்டமாக இருக்காது, யூதர்களால் இட்டுக் கட்டப்பட்ட ஒன்றாக இருக்கும் என்றே நான் கருதுகிறேன். அல்லாஹ் கூறுகிறான்

*நம்பிக்கையாளர்களே, பெண்களைப் பலவந்தமாக உரித்தாக்கிக் கொள்வது உங்களுக்கு அனுமதிக்கப்பட்டதல்ல.* (19)

*பின்னர் கூறுகிறான்:*

*நீங்கள் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து சிலவற்றை எடுத்துக் கொள்ளும் பொருட்டு அவர்களைத் தடுத்துவைக்காதீர்கள், அவர் கள் வெளிப்படையாக மானக்கேடான காரியத்தைச் செய்தாலே தவிர.* (19)

இங்கு தடுத்துவைத்துக்கொள்ளுதல் என்பது பெண் தனக்கு வழங் கப்பட்ட மணக்கொடையைத் திரும்ப அளித்தாவது விடுதலை பெற வேண்டும் என்று முயலும்போது அவளுக்கு வீடு சிறைச்சாலையாக இருக்குமளவு அவளுடன் மோசமான முறையில் வாழ்க்கை நடத்து

வதாகும். ஆண்கள் கண்ணியமான வழியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கட்டளையிடப்படுகிறார்கள். அல்லாஹ் கூறுகிறான்: 'அவர்களுடன் நல்ல முறையில் வாழ்க்கை நடத்துங்கள். நீங்கள் அவர்களை வெறுத்தால், ஒன்றை நீங்கள் வெறுக்கக்கூடும். அல்லாஹ் அதில் உங்களுக்கு ஏராளமான நன்மைகளை வைத்திருக்கக்கூடும். (19)'

ஒருவர் தம் மனைவியை விவாகரத்துசெய்ய விரும்பினால் அவர் அவளுக்கு அளித்த மணக்கொடையிலிருந்து எதையும் திரும்பப் பெறக் கூடாது. அது எவ்வளவுதான் அதிகமானதாக இருந்தாலும் சரியே. மணக்கொடை அவளுடைய தனிப்பட்ட சொத்தாகிவிடும், அது ஒரு பெரும் குவியலாக இருந்தாலும் சரியே.

ஒருவர் தம் மனைவியை விவாகரத்து செய்துவிட்டு வேறொரு பெண்ணை மணக்க விரும்பினால் தம்முடைய பணத்திலிருந்து அவர் அதற்கான இழப்பீட்டை ஏற்றுக்கொள்ள வேண்டும். முதல் மனைவியிடமிருந்து எதையும் திரும்பக் கேட்டுப்பெறக் கூடாது:

> நீங்கள் ஒரு மனைவியை விவாகரத்துசெய்து வேறொரு மனைவியை மணக்க விரும்பினால் அவளுக்கு நீங்கள் ஏராளமான செல்வங்களை வழங்கியிருந்தாலும் அதிலிருந்து எதையும் திரும்பப் பெறக் கூடாது. நீங்கள் அவதூறு கூறியும் பகிரங்கமாகக் கொடுமை இழைத்தும் அதனைத் திரும்பப் பெறுவீர்களா என்ன? அவர்கள் உங்களிடம் உறுதியான வாக்குறுதியைப் பெற்று நீங்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து இன்பம் அனுபவித்திருக்கும் நிலையில் நீங்கள் அதனை எவ்வாறு திரும்பப் பெற முடியும்? (20,21)

நல்ல முறையில் வாழ்க்கை நடத்துவது குறித்த இந்த விசயத்திற்கு முன்னால் இங்கு இரண்டு வகையான சமூகத் தீங்குகள் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காண்கிறோம். ஒன்று, பெண்ணும் பெண்ணும் இணையும் ஓரினச் சேர்க்கை. மற்றொன்று, ஆணும் ஆணும் இணையும் ஓரினச் சேர்க்கை. குடும்பத்தைப் பாதுகாக்க, தூய்மையான சூழலைப் பாதுகாக்க இந்த இரண்டு வகையான குற்றங்களையும் எதிர்த்து தீவிரமாகப் போரிட வேண்டும்.

முதல் விசயத்தைக் குறித்து அல்லாஹ் கூறுகிறான்:

> உங்கள் பெண்களில் யாரேனும் மானக்கேடான காரியத்தைச் செய்துவிட்டால் அதை நிரூபிக்க உங்களிலிருந்து நான்கு ஆண் சாட்சிகளை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். அவர்கள் சாட்சியம் கூறிவிட்டால் அப்பெண்கள் மரணிக்கும்வரை அல்லது அல்லாஹ் அவர்களுக்கு

ஏதேனும் ஒரு வழியை ஏற்படுத்தும்வரை வீட்டுக்குள் அடைத்து வையுங்கள். (15)

அதே போன்று ஆண்களுக்கிடையேயான ஓரினச் சேர்க்கைகுறித்து அவன் கூறுகிறான்: ‘உங்களில் இரு ஆண்கள் அருவருக்கத்தக்க காரியத்தைச் செய்துவிட்டால் அவர்களைத் துன்புறுத்துங்கள் ... (16)’

மேற்குலகம் அல்லாஹ்வையும் அவனுடைய மார்க்கத்தையும் அவனுடைய போதனைகளையும் மறந்ததன் விளைவு இவ்வகையான பாவங்களை அது குறைத்து மதிப்பிட ஆரம்பித்தது. இவற்றைவிடக் கடுமையான பாவங்களையும் அது சாதாரணமாகக் கடந்துவிடுகிறது. விளைவாக, எய்ட்ஸ் மற்றும் பாலியல் ரீதியான நோய்கள் அங்கு வேகமாகப் பரவிக்கொண்டிருப்பதை நாம் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறோம்.

உண்மையில் மேற்குலகம் உள்ளிருந்து அரிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதன் இடத்துக்கு வாரிசாகக்கூடியவர்களின் இல்லாமையினால்தான் அது நிலைத்திருக்கிறது. தங்களின் மார்க்கத்தை மறந்துவிட்ட முஸ்லிம்களைத்தான் நான் இவ்வாறு குறிப்பிடுகிறேன்.

ஒரு குடும்பம் தன்னுடைய பணியை நிறைவேற்ற அதன் இயல்புகள் பண்படுத்தப்பட வேண்டும். சுயநலம் அதனைவிட்டு மறைய வேண்டும். ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு நன்மைசெய்வதற்கும் உதவிசெய்வதற்கும் தம்மைப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஒருமுறை ஒரு பெண் என்னைத் தொடர்புகொண்டு தன் கணவனைக் குறித்து முறையிட்டாள். அவளுடைய தொனியிலிருந்து அவள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளாள் என்பதை உணர்ந்துகொண்டேன். சூழ்நிலை மட்டும் இடம்கொடுத்திருந்தால் அவள் தன் கணவனைவிட்டுப் பிரிந்து செல்லும் வழியையே தேர்ந்தெடுத்திருப்பாள். ஃபிர்அவ்னின் மனைவி பொறுமையைக் கடைப்பிடித்தது போலப் பொறுமையைக் கடைப்பிடிக்கும்படி நான் அவளுக்கு உபதேசம் செய்தேன் ...

எனக்குநானே கூறிக்கொண்டேன்: இந்த மனிதருக்கு ஒரு சகோதரி இருந்து அவள் ஒரு பாமர மனிதனுக்கு மனைவியாக இருந்தால், அந்த மனிதனுடன் அவள் கொடுங்கோல் அரசியைப் போன்று நடந்துகொண்டால் என்ன செய்வது? மிகப் பெரிய துன்பம், அவள் பாலியல் உணர்வுகளற்றவளாக இருந்தால் குடும்பத்தின் சூழல் இன்னும் மோசமானதாக ஆகிவிடும்.

இந்த நிலையில் தண்டனையளிப்பதை இஸ்லாம் அனுமதிக்கிறது. அது முதலில் அறிவுரை கூறுதல், பின்னர் விலக்கிவைத்தல், பின்னர் அடித்தல்

*என்ற நிலையை அடைகிறது. ஆனால், அடி பலமானதாக இருந்துவிடக் கூடாது. முகத்தில் அடிக்கக் கூடாது.*

*தண்டனைக்கான காரணமாக நான் நபிமொழியில் காண்பது, பெண் திமிர்கொண்டு உறவுக்கு வர மறுப்பது அல்லது சந்தேகத்துக்குரிய நபரை வீட்டில் அனுமதிப்பது ஆகிய காரணத்தைத்தான். இரண்டும் ஆபத் தானவையே.*

*குடும்பத்துக்கு அவசியமான இந்த அறிவுரைகளுக்கு முன்னர் வச னங்கள் மக்களின் செல்வங்களை அநியாயமாக, உரிமையின்றி உண் பதைக் குறித்து பேசுகின்றன. அதே போன்று, தம்மிடம் இருப்பதைக் கொண்டு திருப்தியடையும்படியும் மற்றவர்களிடம் இருப்பதைப் பார்த்து ஏங்க வேண்டாம் எனவும் அறிவுறுத்துகின்றன. பின்னர், மனிதர்கள் அனைவரையும் நோக்கிப் பொதுவாகக் கூறப்படுகிறது: 'அல்லாஹ்வை வணங்குங்கள். அவனுக்கு யாரையும் இணையாக்காதீர்கள். தாய்தந்தையர், உறவினர், அநாதைகள், ஏழைகள் ஆகியோருடன் நல்ல முறையில் நடந்துகொள்ளுங்கள். (36)'*

*இந்த அறிவுரை குடும்பத்தை விளித்துக் கூறப்பட்டாலும் சமூகம் முழுமையையும் உள்ளடக்கிவிடுகிறது. பின்னர், செலவுசெய்வதைக் குறித்து பேசப்படுகிறது. கஞ்சத்தனமோ வீண்விரயமோ செய்ய வேண்டாம் எனத் தடுக்கப்படுகிறது. இறைக் கட்டளை மக்களில் நேரெதிரான இரு பிரிவினரைக் குறித்து தெளிவுபடுத்திவிடுகிறது. முதல் பிரிவினர் கஞ்சர் கள். இரண்டாம் பிரிவினர் மக்களுக்குக் காட்ட வேண்டும் என்பதற்காக வீண்விரயம் செய்பவர்கள்.*

*ஒருபுறம் தாமும் கஞ்சத்தனம் செய்து மற்றவர்களையும் கஞ்சத்தனம் செய்யத் தூண்டிவிட்டு இன்னொரு புறம் பகட்டுக்காக வீண்விரயம் செய்வோரைக் குறித்து பேசப்படுகிறது. வாழ்வாதாரம் அளிப்பவனின் விருப்பத்திற்கேற்பச் செலவுசெய்வதே அவர்களுக்கு மிக உகந்தது. இந்த விசயத்தில் அவர்கள் நடுநிலையான அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும்: 'அவர்கள் அல்லாஹ்வின் மீதும் மறுமைநாளின் மீதும் நம்பிக்கை கொண்டு அல்லாஹ் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து செலவுசெய்தால் என்ன கேடு வந்துவிடப்போகிறது? அல்லாஹ் அவர் களை நன்கறிந்தவனாக இருக்கிறான். (39)'*

*பின்னர், இந்தச் சமூகத்தின் நிகழ்காலம் மற்றும் எதிர்காலம்குறித்து சிறிதளவு பேசப்படுகிறது. பின்னர், முன்னர் பேசப்பட்ட விசயத்துக்கு நேரெதிரான விசயம்குறித்து பேசப்படுகிறது. நபியவர்கள் தூதராக*

அனுப்பப்பட்டபோது இருந்த கூட்டங்கள்குறித்து தெளிவுபடுத்தப்பட்டு, அவற்றின் யதார்த்தம்குறித்தும் அவற்றை எதிர்கொள்ள வேண்டியதன் அவசியம்குறித்தும் பேசப்படுகிறது. அந்தக் கூட்டங்கள் ஒன்றிணைந்தே அறபிய சமூகம் உருவானது.

ஆச்சரியமான விசயம் என்னவென்றால், அந்தக் கூட்டங்களைத்தான் நம் சமூகம் இன்றும் எதிர்கொண்டவண்ணம் இருக்கிறது.

❖ ❖ ❖

முஸ்லிம்கள் யூதர்களுடன் நட்பு கொள்வதற்குப் பேரார்வம் கொண்டிருந்தார்கள். அவர்கள் வஹீக்குச் சொந்தக்காரர்கள் என்பதை ஒத்துக்கொண்டு, சிலை வழிபாட்டாளர்களுக்கும் தங்களுக்குமான மோதலில் யூதர்கள் தங்களின் பக்கம் நிற்க வேண்டும் என்று முஸ்லிம்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

ஆனால், யூதர்கள் முஸ்லிம்களைக் குறித்து மிக மோசமான எண்ணம் கொண்டவர்களாக இருந்தார்கள். அவர்களின் அருகாமையையோ ஒப்பந்தத்தையோ யூதர்கள் சிறிதும் மதிக்கவில்லை. தங்களால் இயன்ற அளவு இஸ்லாத்துக்குத் தீங்கிழைக்க முயன்றார்கள்.

அவர்களின் இந்தச் செயலை மறுத்து வியப்பை வெளிப்படுத்தியவாறு அல்லாஹ் தன் தூதருக்குக் கூறினான்: ‘வேதத்திலிருந்து சிறு பகுதி வழங்கப்பட்டோரை நீர் பார்க்கவில்லையா? அவர்கள் வழிகேட்டை விலைக்கு வாங்குகிறார்கள். நீங்களும் வழிதவறிவிட வேண்டும் என்று விரும்புகிறார்கள். அல்லாஹ் உங்கள் பகைவர்களை நன்கறிவான். (44,45)’

வேதத்திலிருந்து சிறு பகுதி வழங்கப்பட்டவர்கள் என்ற சொல்லாடல் அவர்களிடம் இருந்த வஹீயின் பெரும் பகுதியை அவர்கள் தொலைத்துவிட்டார்கள் என்பதையே உணர்த்துகிறது. உண்மையில் அவர்கள் வேதத்தைத் தொலைத்தது, அதன் சில பகுதிகள் அழிந்துவிடுவதற்கும் சில பகுதிகள் திரிக்கப்படுவதற்கும் வழிவகுத்தது.

அவர்கள் தங்களிடம் இருந்த மீதமுள்ள பகுதியின் அடிப்படையிலும் செயல்படவில்லை. இன்றுவரை உலகில் வட்டியையும் விபச்சாரத்தையும் பரப்புவதற்கு அவர்கள்தாம் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

மோசமான மார்க்கம், மார்க்கமின்மையையும் அதனைவிட்டு அலட்சியாக இருப்பதையும்விட அதிகத் தீங்களிக்கக்கூடியது. இதனால்தான் சிலை வழிபாட்டாளர்களைவிட வேதத்தைப் படித்தும் கீழ்ப்படிய மறுப்போரை நரகம் விரைவாகத் தீண்டக்கூடியது என்று கூறப்பட்டுள்ளது.

*வழிகேட்டை விலைக்கு வாங்குதல், பாவங்களின்பால் ஈர்க்கப்படுதல், முஸ்லிம்கள் குர்ஆனை மறந்து மீண்டும் சிலை வழிபாட்டாளர்களாக மாற வேண்டும் என்று விசித்திரமாக ஆசைப்படுதல் போன்ற யூதர்களின் பண்புகளுக்குப் பின்னால் அவர்களின் உள்ளத்தில் மறைந்திருக்கும் தீங்குதான் காணப்படுகிறது.*

*அநியாயமான இந்த வழிமுறையில் உண்மைக்கான எந்தத் தேட்டம் இருந்துவிட முடியும்?*

*அல்லாஹ் முஸ்லிம்கள்மீது கடமையாக்கிய இந்தப் போரில் அவர்களுக்கு உதவிசெய்வதாக அவன் வாக்களிக்கிறான். அவனே அவர்களின் பாதுகாவலனாக, உதவியாளனாக இருப்பான்: 'பாதுகாப்பதற்கும் உதவி புரிவதற்கும் அல்லாஹ்வே போதுமானவன். (45)'*

*ஆனால், இந்தப் பாதுகாப்பையும் உதவியையும் போராடாமல் வெறுமனே அமர்ந்திருப்பவர்கள் பெற முடியாது. மாறாக, தங்களைத் தாங்களே காத்துக்கொள்ள போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காதவர்கள், வலுவான திட்டங்கள் தீட்டாமல் சோம்பேறித்தனம் செய்தவர்கள் இந்த இரண்டையும் பெற முடியாது.*

*அல்மனார் என்ற புத்தகத்தின் ஆசிரியர் கூறுகிறார்:*

> *மகத்தானவனும் ஞானம்மிக்கவனுமாகிய அல்லாஹ் தன் படைப்புகள் விசயத்தில் தான் அமைத்த நியதிகளில் எந்த முஸ்லிமுக்கும் யூதருக்கும் கிறிஸ்தவருக்கும் அவர்களின் பெயர், அவர்கள் சூட்டிக்கொண்ட பட்டம் ஆகியவற்றின் காரணமாக அல்லது அவனுடைய படைப்புகளில் நல்லோர்களுடன் இணைத்துக் கொண்டதன் காரணமாக அநீதி இழைக்க மாட்டான். மாறாக, அவன் அமைத்த நியதிகள் அந்த நல்லோர்களின் மீது அதிகாரம் செலுத்தக்கூடியவை. எந்த அளவுக்கெனில், இறுதித் தூதரான முஹம்மது (ஸல்) அவர்களின் தலை காயப்படுத்தப்பட்டது, பல் உடைக்கப்பட்டது, அவர்கள் குழியில் தள்ளப்பட்டார்கள். இவையனைத்தும் உஹதுப் போரில் முஸ்லிம் படையினர் செய்த தவறின் காரணமாக நிகழ்ந்தவையாகும்.*
>
> *முஸ்லிம்களே, இந்த மார்க்கத்தின் வேதத்தை நிலைநிறுத்தாமல், அதன்படி செயல்படாமல், அதில் உள்ள எச்சரிக்கைகளைக் கொண்டு படிப்பினை பெறாமல் நீங்கள் எவ்வாறு இந்த மார்க்கத்தின் பக்கம் உங்களை இணைத்துக்கொண்டு ஏமாற்ற முடியும்?*

*உங்களுக்கு முன்னால் இருந்த சமூகங்கள் எவ்வாறு தண்டிக்கப் பட்டன என்பதை நீங்கள் சிந்தித்துப்பார்க்கவில்லையா? அவர்கள் இவ்வாறு ஏமாற்றுவதை விட்டுவிட்டு கல்வியையும் செயல் பாட்டையும் பற்றிப் பிடித்துக் கொண்டபோது, சமூக அமைப்பில் காணப்படும் காரணிகளையும் விதிகளையும் பின்பற்றியபோது உங்களைவிட அதிகமான நாடுகளை வெற்றிகொண்டார்கள். இப்போது உங்களிடம் இருக்கும் மீதமுள்ள நாடுகளையும் கைப் பற்ற யூதர்கள் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். உங்களிடமிருந்து புனித பூமியைக் கைப்பற்றிவிட்டார்கள். அங்கு அவர்கள் தங்களின் ஆட்சியை நிலைநாட்டிவிட்டார்கள்!*

*ஞானம்மிக்க அல்லாஹ்வின் வேதத்தைக் கொண்டு, அவன் சமூ கத்தில் அமைத்த நியதிகளைக் கொண்டு நேர்வழியடையுங்கள். பொய்யர்கள் ஏற்படுத்தும் ஊசலாட்டங்களை விட்டுவிடுங்கள். அவர்கள் உங்களிடையே இணைவைப்பின் தீங்குகளைப் பரப்பு கிறார்கள். உங்களின் அறிவாற்றல், சமூக ஆற்றல் ஆகியவற்றிட மிருந்தும் உங்கள் இறைவனின் வழிகாட்டலிலிருந்தும் உங்களைத் திருப்பி, இறந்தவர்கள்மீது நம்பிக்கை கொள்வதையும் மூடநம் பிக்கைகளைப் பற்றிப்பிடிப்பதையும் உங்களுக்கு அழகாக்கிக் காட்டுகிறார்கள்.*

*அல்லாஹ் உங்களுக்கு அருளாத திக்றுகள், தொழுகைகள் ஆகிய வற்றின் மூலம் உங்களின் மார்க்கம் மற்றும் உலக விவகாரங்களை விட்டும் உங்களைத் திருப்புகிறார்கள். இதன் மூலமாக அவர்கள் உங்களின் செல்வங்களைப் பறிக்கவும் தங்களின் பதவிகளைக் காத்துக்கொள்ளவும் நாடுகிறார்கள்.*

*விழித்தெழுங்கள், விழித்தெழுங்கள். அல்லாஹ் யார்மீதும் அணுவளவுகூட அநீதி இழைக்க மாட்டான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். உங்கள் இறைவனின் வழிகாட்டலை விட்டுவிட்டு இந்தப் பொய்யர்களை நீங்கள் பின்பற்றினால் உங்களின் ஆட்சியதி காரத்தை, கண்ணியத்தை இழந்துவிடுவீர்கள்.*

அவர் கூறியது உண்மையே. அவர் குறிப்பிடாத நோய்கள் புதிது புதிதாகத் தோன்றிக்கொண்டிருக்கின்றன. அவை முந்தையவற்றை விடக் கடினமானவை; அதிகத் தீங்கிழைக்கக்கூடியவை.

பின்னர், யூதர்கள் தங்களின் மார்க்கத்தோடு எவ்வாறு செயல்பட்டார்கள் -அதில் நமக்கு எச்சரிக்கையும் இருக்கிறது- என்பதைத் திருக்குர்ஆன்

விவரிக்கிறது. அது கூறுகிறது: ‘யூதர்களில் ஒரு பிரிவினர் வேதத்தின் வார்த்தைகளை அவற்றுக்குரிய இடங்களிலிருந்து மாற்றிவிடுகின்றனர்... (46)’

பல வடிவங்களில் அவர்கள் வேதத்தின் வார்த்தைகளைத் திரித்தார்கள். ஒன்று, அவர்கள் தங்களின் மனஇச்சைக்கேற்ப உண்மையான பொருளை விட்டுவிட்டு வெளிப்படையான பொருளை எடுத்துக்கொண்டார்கள்.

அடுத்து வரக்கூடிய தூதரைக் குறித்த முன்னறிவிப்புகள் அவர்களின் வேதத்தில் காணப்பட்டன. ஆயினும், அவர்கள் அவற்றைத் தாங்கள் விரும்பும் நோக்கத்துக்கேற்பத் திரித்தார்கள். முஹம்மதை அவர்கள் உண்மைப்படுத்தவில்லை. அவருக்காகச் சாட்சி கூறவில்லை.

இரண்டு, வசனத்தோடு அதற்குத் தொடர்பற்ற அதிகப்படியான விசயங் களையும் இணைத்தார்கள்.

இந்தியாவைச் சேர்ந்த அஷ்ஷைஃக் ரஹ்மத்துல்லாஹ் தம்முடைய சத்தியம் வெளிப்பட்டது என்ற புத்தகத்தில் வேண்டுமென்றே அவர்கள் திரித்ததற்கான நூற்றுக்கணக்கான ஆதாரங்களைத் தந்துள்ளார். அவர்கள் புனித வேதத்தில் இடைச்செருகல் செய்தார்கள்: ‘இவை அல்லாஹ் விடமிருந்து வந்தவை என்று கூறுகிறார்கள். உண்மையில் அவை அல் லாஹ்விடமிருந்து வந்தவையல்ல. அவர்கள் அறிந்துகொண்டே அல் லாஹ்வின் மீது பொய்யுரைக்கிறார்கள். (3:78)’

சத்தியம் வெளிப்பட்டது - இழ்ஹாறுல் ஹக் - என்ற இந்தப் புத்தகம் இந்தத் தலைப்பில் எழுதப்பட்ட மிகச் சிறந்த புத்தகமாகும்.

யூதர்களின் மோசமான நடத்தைகளில் அவர்கள் தூதரிடம் கூறிய பின்வரும் கூற்றும் ஒன்றாகும்: ‘நாங்கள் செவியேற்றோம். ஆனால் மாறா கச் செயல்பட்டோம். கேளுங்கள், நீங்கள் கேட்கப்பட மாட்டீர்கள் என்று கூறுகிறார்கள். மார்க்கத்தைக் குறைகூறி, தங்கள் நாவுகளை வளைத்து றாயினா — எங்கள் இடையனே — என்று கூறுகிறார்கள். (46)’

அவர்கள் தங்களின் பிடிவாதத்தில் நிலைத்திருந்தால் அவர்களைத் தண்டிப்பேன் என அல்லாஹ் எச்சரிக்கிறான். அவன் கூறுகிறான்: ‘வேதம் வழங்கப்பட்டவர்களே, நாம் முகங்களைச் சிதைத்து அவற்றை முதுகு களின் பக்கம் திருப்புவதற்கு முன்பே அல்லது சனிக்கிழமைக்காரர் களைச் சபித்ததைப் போன்று சபிப்பதற்கு முன்பே நாம் அருளியதன் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். அல்லாஹ்வின் கட்டளை நிறைவேறியே தீரும். (47)’

*யூதர்கள் தங்களின் பிடிவாதத்தில் நிலைத்திருந்தார்கள். அல்லாஹ் ஹிஜாஸிலிருந்து அவர்களின் அடையாளங்களைக்கூட இல்லாமல் ஆக்கி விட்டான். அவர்கள் துடைத்தெறியப்பட்டார்கள்.*

*முஸ்லிம்கள் பலவீனப்பட்டபிறகு இப்போது அவர்கள் மீண்டும் திரும்பியிருக்கிறார்கள். இரு கூட்டாத்தாரில் யார் நேர்வழியில் இருக்கிறார் களோ, யார் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் உதவிசெய்வதில் முனைப்புடன் ஈடுபட்டிருப்பார்களோ அவர்களுக்கே எதிர்காலம் உரியது. நாம் மீண்டும் அல்லாஹ்வின் பக்கம் திரும்பினால் நாம் இழந்த கண்ணி யத்தை அவன் திருப்பித் தரலாம்.*

*பின்னர் அல்லாஹ் கூறுகிறான்: 'நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணையாக்கப்படுவதை மன்னிக்கவே மாட்டான். அதனைத் தவிர மற்ற பாவங்களை தான் நாடுவோருக்கு அவன் மன்னித்துவிடுவான். (48)'*

*இணைவைப்பு -ஷிர்க்- இரு வகைப்படும். முதல் வகை, இந்த உலகத்தில் இரு படைப்பாளர்கள், இரு உணவளிப்பாளர்கள், இரு நிர்வாகிகள் அல்லது அதற்கு அதிகமாக இருக்கிறார்கள் என்று நம்புவது.*

*இரண்டாவது வகை, அல்லாஹ் அல்லாதவருக்குச் சட்டமியற்றும் உரிமையையும் மனிதர்களுக்கு ஒன்றை அனுமதிக்கும் அல்லது தடை செய்யும் உரிமையையும் வழங்குவது, அல்லாஹ் அல்லாதவரிடம் பிரார்த்தனைசெய்வது, நேர்ச்சைசெய்வது, அல்லாஹ் அல்லாதவர்களைச் சார்ந்திருப்பது ஆகியவை.*

*யூதர்கள் முதல் வகையான இணைவைப்பாளர்களாக இருக்கவில்லை. அவர்கள் அல்லாஹ்வைத் தவிர மற்றவர்களுக்குச் சட்டமியற்றும் உரிமையை வழங்கினார்கள்; அவர்களிடம் உதவி தேடினார்கள். இரு வகையான இணைவைப்பும் மன்னிக்க முடியாத குற்றம்தான். ஏனெனில், அவை மனித மனத்தில் ஆழமான குழப்பத்தை ஏற்படுத்துகின்றன.*

*தற்காலத்தில் மிக மோசமான நிராகரிப்பின் வகை வெளிப்பட்டுள்ளது. அது இறைவனின் இருப்பையே மறுத்து மனஇச்சையை வழிபடுவதும் இறைவனையும் அவனுடைய போதனைகளையும் ஒட்டுமொத்தமாக மறந்துவிடுவதும் ஆகும்.*

*தற்காலத்தில் இஸ்லாம் பல வகையான நிராகரிப்புகளை எதிர் கொள்கிறது. இறைவனுக்கு எந்தப் பண்பும் இல்லை என்பவர்கள், இறைவன் மூவர் என்பவர்கள், இறைவனுக்கு இணைகளை ஏற்படுத் துபவர்கள், அல்லாஹ் அருளியதைக் கொண்டு தீர்ப்பளிக்காமல் மற்ற*

வற்றைக் கொண்டு தீர்ப்பளிப்பவர்கள், மார்க்கத்தின் அடிப்படைகளுக்கு எதிராகப் பேசுபவர்கள் எனப் பல வகையான நிராகரிப்பாளர்களை அது எதிர்கொண்டவண்ணம் இருக்கிறது.

முஸ்லிம்கள் இந்தப் பொறுப்புகளை எல்லாம் சுமக்க வேண்டும்; தங்களிடம் இருக்கும் ஒளியைக் கொண்டு பூமியின் பாதைகளில் வெளிச்சம் ஏற்படுத்த வேண்டும். தாங்கள் அல்லாஹ்வினால் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டம் என்று வாதிட்டுக்கொண்டு மக்களுக்கு நினைவுகூரத்தக்க எந்த நன்மையையும் நன்றிசெலுத்தப்படத்தக்க எந்த நற்செயலையும் விட்டுச்செல்லாத யூதர்களைப் போன்று அவர்கள் ஆகிவிடக் கூடாது.

எந்த அளவுக்கெனில், அந்த யூதர்களைக் குறித்து ஹிட்லர் கூறினான், யூதர்கள் மனித உடலில் வசித்து, உணவைத் தின்று வளர்ச்சியைத் தடுக்கும் பூச்சிகளைப் போன்றவர்கள். அவற்றை முழுமையாக அகற்றினாலே தவிர அவற்றின் தீங்கிலிருந்து விடுபட முடியாது.

யூதர்கள் எந்த அளவு கீழ்த்தரமாக நடந்துகொண்டார்களெனில், அவர்களின் தலைவர்களிடம் இணைவைப்பாளர்கள் மற்றும் முஸ்லிம்களில் யார் இறைவனின் உதவிக்குத் தகுதியானவர்கள், சத்தியத்துக்கு நெருக்கமானவர்கள் என்று கேட்கப்பட்டபோது முஸ்லிம்களைவிட இணைவைப்பாளர்களே சிறந்தவர்கள் என்றார்கள்!

யூதர்களிடத்தில் மார்க்கம் என்பது நீதியோ இறையச்சமோ கொடையோ அல்ல. அவர்களின் இனவாதத்துக்கு ஊட்டமளிக்கக்கூடிய, அவர்களின் சுயநலனுக்கும் கர்வத்துக்கும் தீனியளிக்கக்கூடிய ஒவ்வொன்றும் அவர்களிடம் மார்க்கமே.

அவர்கள் அறபுகளை வெறுத்தார்கள். இன்றளவும் வெறுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பொறுப்புகளை நிறைவேற்றாமல் மோசடிசெய்தபிறகு அல்லாஹ் தன் வஹீயைச் சுமக்கும் பொறுப்புக்கு அறபுகளைத் தேர்ந்தெடுத்ததனால்.

யஅகூபின் பிள்ளைகள் இப்றாஹீமின் குடும்பத்தில் ஓர் அங்கம்தான். ஏன் அவர்கள் இப்றாஹீமின் குடும்பத்தாருக்குள் மட்டுமே அல்லாஹ்வின் அருட்கொடையைப் பதுக்க நாடுகிறார்கள்? அதுவும் இஸ்மாஈலின் பிள்ளைகளுக்கு அல்லாமல் அது தங்களுக்கு மட்டுமே உரியது என்று எவ்வாறு கூறுகிறார்கள்?

இஸ்மாஈலின் வழிவந்த தங்களின் சகோதரர்களை -அல்லாஹ் அவர்களுக்குச் சிறப்புகளை வழங்கியிருந்தபோதும்- ஏன் பகைக்

கிறார்கள்? அவர்களை விட்டுவிட்டுச் சிலை வழிபாட்டாளர்களுடன் ஏன் நட்பு கொள்கிறார்கள்? 'இத்தகைய மக்களைத்தான் அல்லாஹ் சபித்துள்ளான். அல்லாஹ் யாரைச் சபித்துள்ளானோ அவருக்கு உதவி புரிவோர் யாரையும் நீர் காண மாட்டீர். அல்லாஹ்வின் அதிகாரத்தில் இவர்களுக்கு ஏதேனும் பங்கு இருக்கிறதா? அவ்வாறு இருக்குமானால் இவர்கள் மக்களுக்கு எள்ளளவுகூட எதையும் அளிக்க மாட்டார்கள். (52,53)'

இந்த வசனம் யூதர்களின் பிரபல்யமான கஞ்சத்தனத்தைச் சுட்டிக் காட்டுகிறது. அவர்கள் உம் இறைவனின் கருவூலத்துக்கு உரிமையாளர்களாக இருந்தால் தேவையுடையோருக்கு எதையும் கொடுக்க மாட்டார்கள். அறபுகள் பெற்ற சிறப்பின் காரணமாக அவர்கள்மீது பொறாமை கொண்டார்கள். இதில் அவர்களின் பங்கு என்ன? ஏன் அவர்கள் ஆட்சேபணைசெய்கிறார்கள்?

தன் அருளிலிருந்து அல்லாஹ் மக்களுக்கு வழங்கியுள்ளதாக இவர்கள் பொறாமை கொள்கிறார்களா? 'நாம் இப்றாஹீமின் குடும்பத்தாருக்கு வேதத்தையும் ஞானத்தையும் கொடுத்தோம். நாம் அவர்களுக்கு மகத்தான அரசாட்சியையும் வழங்கினோம். (54)'

இறைவனின் வஹீ தங்களைவிட்டு அறபுகளிடம் சென்றதனால் அவர்கள் அறபுகளின் மீது கடுமையான கோபம் கொண்டு முஹம்மதையும் அவரது சமூகத்தாரையும் நிராகரித்தார்கள். பதினான்கு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் இப்போது அவர்கள் தங்களின் பழைய கண்ணியத்தைத் தேடியவர்களாக, இஸ்லாத்தைச் சரியான முறையில் பின்பற்றாத, வீணான விசயங்களிலும் அலட்சியத்திலும் மூழ்கிவிட்ட அறபுகளின் நிலையைத் தங்களுக்கான சிறந்த வாய்ப்பாகக் கருதிக் கொண்டு ஃபலஸ்தீனுக்கு வந்துள்ளார்கள்.

அவர்கள், 'ஃகைபரின் சம்பவத்துக்குப் பழிவாங்கியவர்களாக நாங்கள் வந்துள்ளோம். முஹம்மது மரணித்துவிட்டார். தமக்குப் பின்னால் பெண்களை விட்டுச்சென்றுள்ளார்.' என்ற கோஷத்தோடு புனித பூமியில் நுழைவதைத் தற்காலத்தில் வாழ்பவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய பாவங்களை எண்ணி நாம் வெட்கப்பட வேண்டாமா? நாம் மீண்டும் நம்முடைய மார்க்கத்துக்குத் திரும்ப வேண்டாமா? முஹம்மது திரும்பிவிட்டார். அவருடன் வேங்கைகள் வந்துள்ளன என்று கூறப்பட வேண்டாமா?

தொடர்ந்து வசனங்கள், சிலை வழிபாட்டாளர்களுக்கு ஆதரவாகச் சாட்சிகூறும் யூதர்களைப் பழிக்கின்றன. சாட்சியம் என்பது அமானித மாகும். அதனை உரிய முறையில் நிறைவேற்றுவது மார்க்கமாகும். அவர்கள் அணுவளவு நீதிசெலுத்தினால்கூட இஸ்லாத்தைவிடச் சிலை வழிபாட்டை உயர்த்திக் கூறியிருக்க மாட்டார்கள்.

அடைக்கலமாக அளிக்கப்பட்டவற்றை அவற்றுக்குரியவர்களிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்று அல்லாஹ் உங்களுக்குக் கட்ட ளையிடுகிறான். நீங்கள் மக்களிடையே தீர்ப்பு வழங்கினால் நியாயமான முறையில் தீர்ப்பு வழங்குங்கள். அல்லாஹ் உங்களுக்கு நல்ல முறையில் அறிவுறுத்துகிறான் ... (58)

அமானிதம் என்ற வார்த்தை ஏராளமான பொருள்களைக் கொண்டது. அவையனைத்தும் அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமைகள், மனிதர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் ஆகியவற்றைச் சுற்றியே சுழல்கின்றன. யார் அமானிதம் பேணவில்லையோ அவரிடம் ஈமான் இல்லை. யார் ஒப்பந்தத்தைப் பேணவில்லையோ அவரிடம் மார்க்கம் இல்லை.

❖ ❖ ❖

திருக்குர்ஆன் யூதர்களைக் குறித்த செய்திகளை எடுத்துரைத்தபிறகு இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்த இன்னொரு வகையான கூட்டத்தினரைக் குறித்து பேசு கிறது. அவர்கள் நிராகரிப்பை மறைத்துக்கொண்டு ஈமானை வெளிப் படுத்திய நயவஞ்சகர்களாவர். அவர்களின் செயல்களால் அவர்கள் வெளிப்பட்டார்கள். அவர்கள் உள்ளத்தில் மறைத்துவைத்திருக்கும் இரகசியம் வெளிப்பட்டது.

பின்வரும் வசனத்திலிருந்து அவர்களைக் குறித்த செய்தி தொடங்கு கிறது:

உமக்கு அருளப்பட்டதையும் உமக்கு முன்னர் அருளப்பட்டதையும் நாங்கள் நம்பிக்கை கொண்டோம் என்று வாதம்புரிபவர்களை நீர் பார்க்கவில்லையா? ஆனால், அவர்கள் தீர்ப்புவேண்டி தம் விவகாரங்களை ஷைத்தானின் பக்கமே கொண்டுசெல்ல விரும்பு கிறார்கள். ஆயினும் ஷைத்தானை நிராகரிக்கும்படியே அவர்கள் கட்டளையிடப்பட்டிருந்தார்கள். ஷைத்தானோ அவர்களை வழிகெடுத்து வெகுதொலைவில் தள்ளிவிட விரும்புகிறான். (60)

வாதம்புரிதல் என்ற சொல்லாடல் அவர்கள் கூறியது பொய் என்பதைச் சுட்டுகிறது. தாகூத் என்பது அல்லாஹ்வைத் தவிர தீர்ப்புக்காக மனித, ஜின் இனத்தில் யாரிடமெல்லாம் கொண்டு செல்லப்படுகிறதோ அவர்களைக் குறிக்கும்.

ஈமானின் தேட்டம் தாகூத்தை நிராகரித்து அவனுடைய ஊசலாட்டங்களைவிட்டு விலகியிருக்க வேண்டும் என்பதாகும். அல்லாஹ் கூறுகிறான்:

> அல்லாஹ்வே நம்பிக்கையாளர்களுக்குப் பொறுப்பாளனாக இருக்கிறான். அவன் அவர்களை இருள்களிலிருந்து வெளியேற்றி ஒளியின் பக்கம் கொண்டுவருகிறான். நிராகரிப்பாளர்களுக்கு ஷைத்தான்களே பொறுப்பாளர்களாவர். அவர்கள் இவர்களை ஒளியிலிருந்து வெளியேற்றி இருள்களின் பக்கம் கொண்டுசெல்கிறார்கள். (2:257)

மேலும் இந்த அத்தியாயத்தில் அவன் கூறுகிறான்: 'நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வின் பாதையில் போரிடுகிறார்கள். நிராகரிப்பாளர்கள் ஷைத்தானின் பாதையில் போரிடுகிறார்கள் ... (76)'

அல்லாஹ்வைவிட்டுத் தூரமாக்கக்கூடிய, அவனுடைய பாதையை விட்டுத் தடுக்கக்கூடிய, அவனுடைய மார்க்கத்துக்கு எதிராகச் சண்டையிடக்கூடிய ஒவ்வொருவரும் தாகூத் என்றே அழைக்கப்படுகிறார்கள். இங்கு அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் பின்பற்ற வேண்டும் என்ற நம்பிக்கையாளர்களின் அறிவுரையை நயவஞ்சகர்கள் செவியேற்கிறார்கள். ஆனாலும், அவர்கள் தங்களின் பாதையில்தான் செல்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு அடியாக முன்னேறிச் செல்லும்போது பிடிவாதமும் வழிகேடும் அவர்களை ஆட்கொண்டு விடுகின்றன. அறிவுரை கூறுபவனின் அறிவுரையைச் செவியேற்க முடியாத அளவுக்கு அவர்கள் தடுமாற்றம் நிறைந்த பாதையில் நீண்ட தூரம் சென்றுவிட்டார்கள். 'அவர்கள் தொலைவான இடத்திலிருந்து அழைக்கப்படுவார்கள். (41:44)'

நயவஞ்சகன் தன் உடலின் மூலம் உமக்கு நெருக்கமானவனாக இருக்கலாம். ஆனால், தன் உள்ளத்தின் மூலம் உம்மைவிட்டும் தூரமானவன். மனஇச்சை அவனை அலட்சியத்தில் ஆழ்த்திவிட்டது. அவன் கூறப்படுகின்ற விசயத்தைப் பொருட்படுத்த மாட்டான். அதைக் கொண்டு தாக்கமடைய மாட்டான்: 'அல்லாஹ் அருளியுள்ள வேதத்தின் பக்கமும் தூதரின் பக்கமும் வாருங்கள் என்று அவர்களிடம் கூறப்பட்டால் நயவஞ்சகர்கள் உம்மைவிட்டு விலகிச்செல்வதையே நீர் காண்பீர். (61)'

மற்றொரு அத்தியாயத்தில் கூறப்படுகிறது: 'வாருங்கள், அல்லாஹ்வின் தூதர் உங்களுக்காக மன்னிப்பு கோருவார் என்று அவர்களிடம் கூறப்

பட்டால் தங்களின் தலைகளைத் திருப்பிக்கொள்கிறார்கள். ஆணவத்தால் அவர்கள் அலட்சியப்படுத்துவதை நீர் காண்பீர். (63:5)'

வெளிப்படையான நிராகரிப்பாளர்கள் அல்லது நயவஞ்சகர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு நிலைப்பாடு உள்ளது. அவர்கள் அதனையே பற்றிப் பிடிக்கிறார்கள்.

சத்தியம் அவனுக்குத் தெளிவானபின்னர் அதற்காக அவன் அதனை விட்டுவிட வேண்டும் என்று எந்தக் கட்டாயமும் இல்லை.

அசத்தியவாதிகளில் பெரும்பாலோர் தாங்கள் கொண்டிருப்பது சத்தியம் என்றே நம்புகிறார்கள்: 'யாருக்கு அவருடைய தீய செயல் அழகாக்கப்பட்டு அதனை அவர் நற்செயலாகக் கருதுகிறாரோ ... (35:8)' தாங்கள் விதைத்தவற்றால் உண்டாகும் கசப்பை அறுவடைசெய்யும்வரை அவர்கள் அதில்தான் நிலைத்திருப்பார்கள்.

தீய வழிமுறைகளுக்கு உடனடியாக, தாமதமாக ஏற்படக்கூடிய விளைவுகள் இருக்கின்றன. அவை வெளிப்படும்போது சாக்குப்போக்குகள் கூறியவர்களாக அவர்கள் வருவார்கள்:

> தங்களின் கரங்களினால் அவர்கள் தேடிக்கொண்ட துன்பம் அவர்களை வந்தடைந்தால் அவர்களின் நிலைமை என்னவாகும்? அப்போது அவர்கள், 'அல்லாஹ்வின் மீது ஆணையாக, நன்மையையும் இணக்கத்தையும் தவிர வேறு எதையும் நாங்கள் நாடவில்லை.' என்று சத்தியம்செய்தவர்களாக உம்மிடம் வருவார்கள். (62)

நம்முடைய இந்தக் காலத்தில் மனிதர்களால் இயற்றப்பட்ட சட்டங்களை விரும்புவர்கள் அவற்றுக்கு ஆதரவாகப் பேசுகிறார்கள். தாங்கள் சரியான பாதையில் இருப்பதாக எண்ணிக்கொள்கிறார்கள். நாட்டில் குழப்பங்கள் மிகைத்து, குற்றங்கள் அதிகரிக்கும்போது தங்களின் முந்தைய நிலைப்பாட்டைக் குறித்து சிந்திக்கிறார்கள். அதனை மீள்பரிசீலனை செய்கிறார்கள். அதற்காக வருத்தம் தெரிவிக்கிறார்கள்: 'அவர்களின் உள்ளங்களில் உள்ளவற்றை அல்லாஹ் நன்கறிவான். ஆகவே, நீர் அவர்களைப் பொருட்படுத்தாமல் அவர்களுக்கு அறிவுரை கூறுவீராக. அவர்களின் உள்ளங்களில் பதிந்துவிடும்படியான வார்த்தைகளைக் கூறுவீராக. (63)'

இரண்டு இடங்களில் நயவஞ்சகர்களின் நயவஞ்சகம் அப்பட்டமாக வெளிப்பட்டு விடுகிறது. ஒன்று, அல்லாஹ் அருளியதன்படி தீர்ப்

பளிப்பதை நயவஞ்சகர்கள் வெறுப்பார்கள். இரண்டு, அல்லாஹ்வின் பாதையில் சத்தியத்துக்காகப் போரிடுவதை அவர்கள் வெறுப்பார்கள். தொழுகை, தர்மம் போன்ற வணக்க வழிபாடுகளினால் நயவஞ்சகர்கள் நெருக்கடியை உணர்கிறார்கள். சில சமயங்களில் அந்த நெருக்கடியை மறைத்துவிடுகிறார்கள் அல்லது அதனை வேறு விதமாக வெளிப்படுத்து கிறார்கள். ஆனால், அல்லாஹ் அருளியதன்படி தீர்ப்பளித்தல், அல் லாஹ்வின் பாதையில் போரிடுதல் ஆகிய இரு இடங்களிலும் அவர்கள் அப்பட்டமாக வெளிப்பட்டுவிடுகிறார்கள்.

தூதர்கள் அல்லாஹ்விடமிருந்து மனித வாழ்க்கைக்குத் தேவையான முழுமையான வழிகாட்டல்களைக் கொண்டுவருகிறார்கள். தூதர்களைப் பின்பற்றுபவர்கள் அவற்றைச் செயல்படுத்துகிறார்கள். அந்தப் பாதையில் நிலைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு முன்னால் இந்தப் பாதை மட்டுமே இருக்கும். ஆகவேதான் அல்லாஹ் கூறுகிறான்:

> உம் இறைவனின் மீது ஆணையாக, அவர்கள் தங்களுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளில் உம்மை நீதிபதியாக ஏற்று, பின்னர் உமது தீர்ப்பைக் குறித்து தங்களின் உள்ளங்களில் எவ்வித இறுக்கத்தையும் உணராமல் அதனை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளும்வரை அவர் கள் ஒருபோதும் நம்பிக்கையாளர்களாக ஆக முடியாது. (65)

மார்க்கத்தின் போதனைகளில் மனித உள்ளங்களுக்கு நெருடலை ஏற்படுத்தக்கூடிய எந்த ஒன்றும் இல்லை. ஆனாலும், இயலாதவர்கள், மனஉறுதியற்ற கோழைகள் ஜிஹாதையும் இன்னும் பல கடமைகளை யும் கடினமானதாகக் காண்கிறார்கள். அவர்கள் முன்வந்து செயல்பட்டி ருந்தால், உண்மைப்படுத்தியிருந்தால் அது அவர்களுக்கு நன்மையான ஒன்றாகவே அமைந்திருக்கும்.

இந்த அத்தியாயம் தொடர்ச்சியாக நயவஞ்சகர்களின் பண்புகளை எடுத்துரைத்துக் கொண்டே செல்கிறது. அவை குறிப்பிட்ட அளவு நிறைவு பெற்றவுடன் சமூகங்களில் அதிகமாகக் காணப்படுகின்ற இன்னொரு வகையான பிரிவினரைக் குறித்து எடுத்துரைக்கப்படுகிறது. அவர்கள் ஞானம் நிரம்பிய தொடர் சிகிச்சையைப் பெற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள்தாம் ஈமானில் பலவீனமானவர்கள்.

நோயாளிகளுக்கும் மரணித்தவர்களுக்கும் மத்தியில் வேறுபாடு காணப்படுவதைப் போல ஈமானற்றவர்களுக்கும் பலவீனமான ஈமானைக் கொண்டவர்களுக்கும் மத்தியிலும் வேறுபாடு காணப்படுகிறது. அது முறையாகச் சிகிச்சையளிக்கப்படவில்லையெனில் அழிந்துவிடவும் வாய்ப்பு உள்ளது.

இந்தப் பலவீனமான ஈமானுக்குப் பல வடிவங்கள் இருக்கின்றன. அதன் முதல் வடிவத்தின் அடையாளங்கள் பின்வரும் வசனத்தில் வெளிப் படுகின்றன:

> உங்களில் பின்தங்கிவிடக்கூடிய சிலரும் இருக்கின்றனர். உங்க ளுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால் 'அவர்களுடன் நான் இல் லாமல் இருந்ததால் அல்லாஹ் என்மீது அருள்புரிந்துவிட்டான்.' என்று அவன் கூறுகிறான். அல்லாஹ்விடமிருந்து ஏதேனும் அருள் உங்களுக்குக் கிடைத்தால் உங்களுக்கும் அவனுக்கும் மத்தியில் எவ்வித நட்பும் இல்லாததுபோல 'நானும் அவர்களுடன் இருந்தி ருக்கக் கூடாதா! மகத்தான வெற்றியைப் பெற்றிருப்பேனே!' என்று கூறுகிறான். (72,73)

இந்த மனிதரின் நோக்கம்தான் இவரை இயக்குகிறது. அவரது ஆசை கள் மார்க்கத்தின் போக்குடனோ அதன் எதிர்காலத்துடனோ அல்லாமல் அவரது தனிப்பட்ட நலன்களோடு மட்டும் இணைகின்றன. அவருடைய உள்ளம் உளத்தூய்மைக்கும் பேராசைக்கும் மத்தியில் தடுமாறித் திரிகிறது. இன்னொரு வகையான மனிதன் தொழுகிறான், நோன்பு நோற்கிறான், பாவங்களை விட்டுவிடுகிறான். ஆனால், ஜிஹாது கடமையாகிவிட்டால் பதற்றமடைந்து பின்வாங்குகிறான், அவகாசம் வேண்டுகிறான்:

> உங்கள் கைகளைத் தடுத்துக் கொள்ளுங்கள், தொழுகையைக் கடைப்பிடித்து ஸகாத்தையும் கொடுத்து வாருங்கள் என்று கூறப் பட்டவர்களை நீர் பார்க்கவில்லையா? அவர்கள் மீது போர் கடமை யாக்கப்பட்டபோது அவர்களில் ஒரு பிரிவினர் அல்லாஹ்வுக்கு அஞ்சுவது போன்று அல்லது அதைவிட அதிகமாக மக்களுக்கு அஞ்சுகின்றனர் ... (77)

இந்த அத்தியாயம் பல வசனங்களில் ஈமானில் பலவீனமானவர் களுக்குச் சிகிச்சையளிக்கிறது. தங்களின் ஊசலாட்டங்களிலேயே தடு மாறித் திரிந்து தங்களின் மார்க்கத்தை இழந்துவிடுமாறு அல்லாஹ் அவர்களை விட்டுவிடவில்லை.

முதல் வகையினருக்கு அவன் கூறினான், அல்லாஹ்வின் பாதையில் முன்னேறவிடாமல் உங்களின் தனிப்பட்ட நலன்களோடு மட்டும் கட்டிப் போடும் உங்களின் ஆசைக்கோ பயத்துக்கோ அடிமைகளாகி விடாதீர் கள். வெற்றியின்போது பெறப்பட்ட போர்ச் செல்வங்கள் உங்களுக்குக் கிடைக்கவில்லை என்பதற்காகக் கவலையடைவது அல்லது உங்கள் அணி தோல்வியடைந்தும் நீங்கள் காப்பாற்றப்பட்டதற்காக மகிழ்ச்சியடைவது இழிவான பண்பாகும். அது நம்பிக்கையாளர்களுக்கு உகந்ததல்ல.

அல்லாஹ்வின் வாக்கை மேலோங்கச்செய்வதற்காக, அல்லாஹ்வுக்காகப் போர்க்களத்தை நோக்கி விரைந்துசெல்லுங்கள்:

> மறுமைக்காக இவ்வுலக வாழ்வை விற்றுவிடுபவர்கள் அல்லாஹ்வின் பாதையில் போர்புரியட்டும். யார் அல்லாஹ்வின் பாதையில் போரிட்டு அதில் கொல்லப்படுகிறாரோ அல்லது வெற்றி பெறுகிறாரோ அவருக்கு நாம் பெரும் கூலியை வழங்குவோம்... (74)

அவன் இரண்டாவது பிரிவினருக்குக் கூறினான், நிச்சயமாக உங்களின் வாழ்நாள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நீங்கள் நிர்ணயிக்கப்பட்ட தவணையை முந்தவும் மாட்டீர்கள், பிந்தவும் மாட்டீர்கள்: 'எந்த உயிரும் அல்லாஹ்வின் கட்டளையின்றி மரணிக்காது. இது அவனால் எழுதப்பட்ட விதியாகும். (3:145)'

நீங்கள் விமானத்திலிருந்து கீழே விழுந்தாலும் உங்களுக்கான தவணை வரவில்லையெனில் மரணிக்க மாட்டீர்கள். உங்களுக்கான தவணை வந்துவிட்டால் நீங்கள் வீட்டில் இருந்தாலுமே சாதாரண பயம்கூட உங்களின் மரணத்துக்குக் காரணமாக அமைந்துவிடும்!

நயவஞ்சகத்துக்கும் பலவீனமான ஈமானுக்குமிடையே தடுமாறித் திரியக்கூடிய பல வகையினர் இருக்கிறார்கள். இங்கு இந்த அத்தியாயம் அவர்களில் ஒரு வகையினரை உதாரணமாக எடுத்துரைக்கிறது:

> அவர்களுக்கு ஏதேனும் நன்மை ஏற்பட்டால் 'இது அல்லாஹ்விடமிருந்து வந்தது!' என்று கூறுகிறார்கள். அவர்களுக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டால் 'இது உம்மால்தான் ஏற்பட்டது!' என்று கூறுகிறார்கள். நீர் கூறும், 'அனைத்தும் அல்லாஹ்விடமிருந்து வந்தவையே.' (78)

இந்த வசனம் நமக்கும் சேர்த்து மூசாவின் காலத்தில் ஃபிர்அவ்ன்கள் கொண்டிருந்த நிலைப்பாட்டை நினைவூட்டுகிறது: 'அவர்களுக்கு ஏதேனும் நன்மை ஏற்பட்டால் இது எங்களுக்கு உரியதுதான் என்று கூறுகிறார்கள். ஆனால், அவர்களுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டுவிட்டால் அதனை மூசாவாலும் அவருடன் இருப்பவர்களாலும் ஏற்பட்ட பீடையாகக் கருதுகிறார்கள். (7:131)' இவ்வாறுதான் ஸமூது கூட்டத்தினரும் தங்களின் தூதர் ஸாலிஹுடன் நடந்துகொண்டார்கள்.

இங்கு நன்மை என்பது செழிப்பான நிலையை, ஆரோக்கியத்தை, செல்வத்தைக் குறிக்கிறது. தீமை என்பது அவற்றுக்கு மாறானவற்றைக் குறிக்கிறது. இங்கு மார்க்கம் கூறும் நன்மையோ தீமையோ அல்ல.

*தூதர்களின் தூதுத்துவத்தைப் பீடையாகக் கருதுவது நிராகரிப்பாகும். சில சமயங்களில் யூதர்கள் இப்படித்தான் கருதினார்கள். இஸ்லாத்தை ஏற்ற சில புதிய முஸ்லிம்களும் இப்படிப்பட்ட எண்ணத்தைக் கொண்டிருந்தார்கள்.*

*நம்முடைய கொள்கை இதுதான்: அல்லாஹ்தான் நன்மையளிக்கிறான், தீங்களிக்கிறான். அவனே உயர்வையும் தாழ்வையும் அளிக்கிறான். அவனே எல்லாவற்றையும் படைத்துப் பரிபாலிப்பவன். எந்த மனிதனுக்கும் ஒன்றைப் படைக்கும் ஆற்றல் இல்லை. ஆனாலும், படைப்புகளுக்கு இந்த மாபெரும் பிரபஞ்சத்தில் குறிப்பிட்ட அளவிலான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.*

*இதுதான் 'அனைத்தும் அல்லாஹ்விடமிருந்து வந்தவையே' என்பதன் பொருள். பின்னர், அதன் விளக்கம் இடம்பெறுகிறது. மனிதர்களுக்கு ஏற்படக்கூடிய பெரும்பாலான துன்பங்கள் அவர்கள் சம்பாதித்த பாவங்களின், செய்த பிழைகளின் விளைவே ஆகும். இதுதான், 'உமக்கு ஏதேனும் நன்மை ஏற்பட்டால் அது அல்லாஹ்விடமிருந்து ஏற்பட்டதாகும். உமக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டால் அது உம்மால்தான் ஏற்பட்டதாகும். (79)' என்ற வசனத்தின் பொருள். மக்களுக்கு ஏற்படக்கூடிய பெரும்பாலான துன்பங்களைத்தான் நாம் கூறுகிறோம். எல்லா துன்பங்களையும் அல்ல. ஏனெனில், அல்லாஹ் சிலருடைய படித்தரத்தை உயர்த்துவதற்காக அவர்களுக்குத் துன்பமளித்து சோதிக்கிறான். அடியானுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள படித்தரத்தை அவன் தன் செயலின் மூலமாக அடையவில்லையெனில் அவனது படித்தரத்தை உயர்த்தக்கூடிய ஒரு சோதனையை அல்லாஹ் அவன்மீது சாட்டுவான்.*

*படைக்கப்பட்ட, அனுப்பப்பட்ட ஒவ்வொன்றும் அல்லாஹ்வுக்கே உரியது. நாம் சம்பாதித்தவை நமக்குரியன. நமக்கு வரக்கூடிய பெரும்பாலான துன்பங்களுக்கு நம்முடைய பாவங்களே காரணமாக இருக்கின்றன.*

*இவர்கள் மற்றொரு வகையினர்:*

> *அவர்களிடம் அமைதி மற்றும் அச்சம்குறித்த ஏதேனும் செய்தி வந்தால் அதனை அவர்கள் பரப்பிவிடுகிறார்கள். அதனை அவர்கள் தூதரிடமோ பொறுப்பாளரிடமோ தெரிவித்திருந்தால் அவர்களில் ஆராய்ந்தறிவோர் அதன் உண்மைநிலையினை அறிந்துகொண்டிருப்பார்கள் ... (83)*

*பெரும் துன்பம் என்னவெனில் பொதுமக்கள் நாட்டின் விவகாரங் களைக் குறித்து பேசுகிறார்கள். தங்களுக்கு அறிவு இல்லாத விவகாரங் களிலும் அவர்கள் தங்களின் கருத்துகளை வெளிப்படுத்துகிறார்கள்.*

*மார்க்கச் சட்டம் குறித்து எவ்வித அறிவும் இல்லாமல் மார்க்கச் சட்டம் குறித்து பேசுவோரை, போர் மற்றும் சமாதானம் குறித்த விவகாரங்களில் எவ்வித அறிவுமின்றித் தங்களின் கருத்துகளைக் கூறுவோரை, தம் வீட் டைக்கூடச் சீர்படுத்த முடியாதவர்கள் உலகத்தின் சீர்திருத்தம் குறித்து பேசுவதை நான் கண்டிருக்கிறேன். ஏன் நாம் விவகாரங்களைத் துறைசார் நிபுணர்களிடம் ஒப்படைக்கக் கூடாது? போர் மற்றும் பொருளாதாரம் குறித்த விவகாரங்கள் ஏன் எல்லா இடங்களிலும் பேசப்படுகின்றன?*

*ஒரு விசயம்குறித்து அறியாதவர்களிடம் கேட்பதை அல்லாஹ் மறுக்கி றான்: 'அவன் அளவிலாக் கருணையாளன். அவனைக் குறித்து அறிந்த வர்களிடம் கேளும். (44:59)'*

*நாம் துறைசார் நிபுணர்களை மதிக்க வேண்டும். நம் அறிவின் எல் லைக்குள் நின்றுகொள்ள வேண்டும்.*

*முன்னேறிய சமூகங்கள் துறைசார் நிபுணர்களுக்கு மதிப்பளிக்கின்றன. அவர்களுக்கு உகந்த சூழலை உருவாக்கித்தருகின்றன. அவர்களை இழிவுபடுத்துவது ஒட்டுமொத்த சமூகத்துக்கும் தீங்களிக்கக் கூடியது.*

*பொதுமக்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டவற்றைச் சிறந்த முறை யில் நிறைவேற்றினால், துறைசார் நிபுணர்களிடம் அவர்கள் சார்ந்த விவகாரங்களை ஒப்படைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?!*

> *வளைவில் பிழை இருத்தல் வில்லுக்குச் செய்யும் அநீதி*
> *அதை நேர்த்தியுறச் செய்வதே நீதி என்பது பழமையான*
> *ஓர் அரேபிய பழமொழி*

*ஒரு கவிதையில் வரும் இவ்வரிகள் அழகானவை:*

> *குழப்பம் மிகுந்தால் மாந்தருக்கு மீட்சி யில்லை - அங்கு*
> *அறிவிலிகள் கோலோச்சின் மேன்மை இழப்பர் - அம்மக்கள்*

*ஹதீஸில் வந்துள்ளது: 'நம்முடைய பெரியவர்களை யார் மதிக்க வில்லையோ, நம்முடைய சிறியவர்கள் மீது யார் இரக்கம் காட்ட வில்லையோ, நம்முடைய அறிஞருக்கு அவருடைய உரிமையை யார் வழங்கவில்லையோ அவர் நம்மைச் சார்ந்தவர் அல்ல.'*

❖ ❖ ❖

*பலவீனமானவர்கள், கோழைகள், உள்ளங்களில் நோயுள்ளவர்கள் ஆகியவர்களைப் பொருட்படுத்தாமல் குழப்பம் செய்வோர் மற்றும் வரம்புமீறுவோருக்கு எதிராக அவர்களின் பலத்தை அடித்துநொறுக்கும் பொருட்டுப் போர்புரியும்படி அல்லாஹ் தன் தூதருக்குக் கட்டளை யிடுகிறான்:*

> *ஆகவே, நீர் அல்லாஹ்வின் பாதையில் போர்புரிவீராக. உம்மைத் தவிர வேறு யாருக்கும் நீர் பொறுப்பாளர் அல்லர். நம்பிக்கை யாளர்களுக்கு ஆர்வமூட்டுவீராக. நிராகரிப்பாளர்களின் பலத்தை அல்லாஹ் முறித்துவிடக்கூடும் ...* (84)

*இங்கு அல்லாஹ்வின் அரவணைப்பில் போரிடும் அல்லாஹ்வின் அணியினரிடமே நம்பிக்கை வைக்கப்படுகிறது. வசனத்தின் இறுதிப் பகுதி, நிராகரிப்பாளர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என் பதைச் சுட்டிக்காட்டுகிறது: 'அல்லாஹ் வல்லமைமிக்கவனாகவும் கடும் தண்டனையளிப்பவனாகவும் இருக்கிறான்.* (84)'

*யார் தூதருடனும் நம்பிக்கையாளர்களுடனும் இணைந்து அவர்களை வலுப்படுத்தவும் சத்தியத்துக்கு உதவிசெய்யவும் விரும்புகிறார்களோ அவர்கள் இணைந்து கொள்ளட்டும். இவ்வாறு இணைந்து கொள்வதற்குப் பரிந்துரை என்று சொல்லப்படும். ஏனெனில், வலுப்படுத்தக் கூடியவன் ஒற்றைப்படையை இரட்டைப்படையாக்குகிறான். அவன் தனியாக நிற்கும் ஒருவருடன் இணைந்து வலுவான இருவராக ஆகிவிடுகிறார்கள். இந்தப் பொருளையே பின்வரும் வசனம் தருகிறது:*

> *யார் நல்ல விசயத்துக்காகப் பரிந்துரைசெய்கிறாரோ அவருக்கு அதில் பங்கு உண்டு. யார் தீய விசயத்துக்காகப் பரிந்துரைசெய்கிறாரோ அவருக்கும் அதில் பங்கு உண்டு. அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் பேராற்றலுடையவனாக இருக்கிறான்.* (85)

*இந்தப் போராட்டங்களில் மக்களின் அணுகுமுறைகளைக் கண் காணிக்கும்படி அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்குக் கட்டளையிடு கிறான். அவர்களில் நல்ல முறையில் நடந்துகொண்டோருடன் நல்ல முறையில் நடந்துகொள்ளும்படியும் அன்பை வெளிப்படுத்தும் அவர் களின் சலாமுக்கு இன்முகத்தோடு பதிலளிக்கும்படியும் அவன் கட்டளை யிடுகிறான்: 'உங்களுக்கு யாராவது முகமன் கூறினால் அதைவிடச் சிறந்த முறையில் நீங்கள் பதில் கூறுங்கள்.* (86)'

*இந்த வசனம் ஒருவருக்கொருவர் சொல்லும் எல்லா வகையான முகமன்களையும் குறிக்கிறது என்று பொருள் கொள்வதில் எந்தப்*

*பிரச்சினையும் இல்லை. முஸ்லிம்கள் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சலாம் சொல்லியும் தங்களுக்கு சலாம் கூறுவோருக்கு மறுமொழி கூறியும் வந்தார்கள். யூதர்கள் சலாம் என்ற வார்த்தையைத் திரித்து அஸ்ஸாமு அலைக்கும் -உங்களுக்கு மரணம் உண்டாகட்டும்- என்று கூறியபோது தான் வஅலைக்கும் -உங்களுக்கும் உண்டாகட்டும்- என்று பதில் கூறத் தொடங்கினார்கள். அல்லாஹ் முஸ்லிம்களின் பிரார்த்தனையை அங்கீ கரித்தான். யூதர்களின் பிரார்த்தனையை அங்கீகரிக்கவில்லை.*

*நான் இதனை அவர்களுக்கு மட்டுமே உரித்தான நிலைப்பாடாகக் கருதுகிறேன். வசனம் பொதுவானது. இஸ்லாம் மற்றும் இஸ்லாமியச் சமூகத்தின் சிறப்பம்சங்களில் ஒன்று, அவை மற்றவர்களின் உள்ளங் களைக் கவரும் விதமாகத் தத்தம் நடத்தைகளை அமைத்துக்கொள் கின்றன. இப்னு அப்பாஸ் கூறுவதாக இப்னு ஜரீர் அறிவிக்கிறார்: 'அல்லாஹ்வின் படைப்புகளில் யாரேனும் உமக்கு சலாம் கூறினால் அதற்கு நீர் பதிலளிப்பீராக, அவர் நெருப்புவணங்கியாக இருந்தாலும் சரியே. ஏனெனில், அல்லாஹ் கூறுகிறான், உங்களுக்கு யாராவது முகமன் கூறினால் அதைவிடச் சிறந்த முறையில் நீங்கள் பதில் கூறுங்கள்.'*

*தமக்கு சலாம் கூறிய ஒரு கிறிஸ்தவருக்கு ஷுஐபி 'வ அலைக்கஸ்ஸ லாம் வரஹ்மத்துல்லாஹ்' என்று பதில் சலாம் கூறினார். அதுகுறித்து அவரிடம் கேட்கப்பட்டது. அவர் கூறினார், 'அவர் அல்லாஹ்வின் அருளில்தானே வாழ்கிறார்?'*

*பின்னர் திருக்குர்ஆன் நயவஞ்சகர்களைக் குறித்து பேசுகிறது. அவர் களின் நிலைப்பாட்டை வரையறைசெய்கிறது.*

*இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது ஈமானை வெளிப்படுத்தி, நிராகரிப்பை மறைத்துக்கொண்டு மதீனாவில் இருந்த அப்துல்லாஹ் இப்னு உபை போன்றோர் அல்ல.*

*மாறாக, அவர்கள் தூரமாக வசிக்கக்கூடிய கூட்டத்தினர். நம்முடைய தற்கால மொழி வழக்குப்படி கூற வேண்டுமானால், நம்முடன் நட்பாக இருப்பது போன்றும் நம் விவகாரங்களில் உதவிசெய்வது போன்றும் காட்டிக்கொண்டு, மறைவாக நமக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டும் வேற்று நாடுகள். அவர்களுடைய வெளித்தோற்றத்தைப் பார்த்து சில நம்பிக்கையாளர்கள் ஏமாந்துவிட்டார்கள். இறுதியில் இறை வஹீ அவர் களைத் தோலுரித்துக் காட்டியது:*

> *உங்களுக்கு என்னவாயிற்று? நயவஞ்சகர்களின் விசயத்தில் நீங்கள் இரு பிரிவினராகிவிட்டீர்களே! அல்லாஹ் அவர்களின் செயல்*

*களினால் அவர்களைத் தலைகுனியும்படி செய்துவிட்டான். இந்த மக்களின் விசயத்தில் ஏன் இரு பிரிவினராக நீங்கள் பிரிந்து விட்டீர்கள்? அவர்கள் மறைத்துவைத்திருப்பவை வெளிப்பட்டு விட்டனவே. அல்லாஹ் வழிதவறச் செய்துவிட்டவர்களை நீங்கள் நேர்வழியில் கொண்டுவர விரும்புகிறீர்களா? யாரை அல்லாஹ் வழிதவறச் செய்துவிட்டானோ அவருக்கு எவ்வித வழியையும் நீர் காண மாட்டீர்.* (88)

பின்னர் வசனங்கள் இந்த அந்நியர்களில் எத்தனை வகையினர் காணப்படுகின்றனர் என்பதுகுறித்து பேசுகின்றன. அவர்களில் ஒரு பிரிவினர் நம்மைச் சிரமத்தில் ஆழ்த்தவும் நாம் நிராகரிப்பாளர்களாகத் திரும்பிச்செல்வதையும் விரும்புகிறார்கள். காலத்தின் சுழற்சியில் நாம் சிக்கிவிட மாட்டோமா என்று அவர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கி றார்கள்: *'அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் புலம்பெயரும்வரை அவர்களில் யாரையும் நீங்கள் நண்பர்களாக ஆக்கிக்கொள்ள வேண்டாம். அவர்கள் புறக்கணித்தால் எங்கு கண்டாலும் அவர்களைப் பிடியுங்கள்; அவர்களைக் கொலைசெய்யுங்கள். அவர்களில் யாரையும் நண்பராகவோ உதவியாளராகவோ ஆக்கிக்கொள்ளாதீர்கள்.* (89)'

இன்னொரு வகையான மக்கள் யாருடனும் சேராதவர்கள். அவர்கள் நம்முடனும் இல்லை. நமக்கு எதிராகவும் இல்லை. அவர்களுடன் நாம் சமாதானமாக நடந்துகொள்ள வேண்டும்: *'அவர்கள் உங்களைவிட்டு விலகி உங்களுடன் போர்புரியாமல் சமாதானம் கோரினால் அவர்களுக்கு எதிராகச் செயல்படுவதற்கு அல்லாஹ் உங்களுக்கு அனுமதியளிக்க மாட்டான்.* (90)'

இன்னொரு வகையான மக்கள் இருபுறமும் இலாபமடைய விரும்பும் சூழ்ச்சிக்காரர்கள். வாய்ப்பு கிடைக்கப்பெற்றால் அதனைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வார்கள். அவர்கள் நம்முடன் உறுதியாக நிற்க வேண்டும்: *'அடுத்து வேறு சிலரையும் நீங்கள் காண்பீர்கள். அவர்கள் உங்களிடமும் பாதுகாப்புபெற வேண்டும், தங்கள் சமூகத்தாரிடமும் பாதுகாப்புபெற வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால், அவர்கள் குழப்பம்செய்கின்ற வாய்ப்பைப் பெறும்போதெல்லாம் அதில் தீவிரமாக இறங்கிவிடுகிறார்கள். இத்தகையோர் உங்களுடன் இணக்கமாக இல்லாமலும் உங்களுடன் சமாதானத்தை வேண்டாமலும் தம் கைகளைத் தடுத்துக்கொள்ளாமலும் இருந்தால் அவர்களைப் பிடியுங்கள். கண்ட இடத்தில் அவர்களைக் கொன்றுவிடுங்கள் ...* (91)' அவர்கள் இஸ்லாத்தில் நுழையவில்லை என்பதற்காக அவர்களுடன் போரிடப்படவில்லை.

மாறாக, அவர்கள் முஸ்லிம்களுக்கும் அவர்களின் எதிரிகளுக்கும் மத்தியில் எந்தப் பக்கமும் சாயாமல் சார்பற்ற நிலையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

அவர்கள் மறைத்து வைத்திருக்கும் பகைமை வெளிப்பட்டுவிட்டால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் இருப்பதில் எந்தப் பொருளும் இல்லை. ஆகவேதான் அவர்களைக் குறித்து கூறப்படுகிறது: 'அவர்களுக்கு எதிராக நாம் உங்களுக்குத் தெளிவான ஆதாரத்தை ஏற்படுத்தியுள்ளோம்.'

இந்தப் பங்கீடு நியாயமான பங்கீடாகும். நம்முடைய மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளுமாறு நாம் மக்களை நிர்ப்பந்திக்க மாட்டோம். அவர்கள் நம்மைவிட்டும் நம் எதிரிகளை விட்டும் உண்மையாக, கண்ணியமாக விலகியிருக்கும் பட்சத்தில் அவர்களை நிர்ப்பந்தத்துக்கு ஆளாக்க மாட்டோம்.

வெளிப்படையான பகைமையை அல்லது சூழ்ச்சியைத்தான் நாங்கள் வெறுக்கிறோம். பின்வரும் சொல்லைப் போன்று: 'நான் ஏமாற்ற மாட்டேன். ஏமாற்றுக்காரன் என்னை ஏமாற்றவும் விடமாட்டேன்.' பின்னர், அத்தியாயம் தவறுதலாகச் செய்துவிட்ட கொலை மற்றும் வேண்டுமென்றே செய்துவிட்ட கொலைகுறித்து பேசுகிறது. முஸ்லிம்கள் அல்லாஹ்வின் பாதையில் இருந்தபோது செய்துவிட்ட ஒரு கொலையின் விளைவாகவே இந்தக் கட்டளை இடம்பெறுகிறது. ஒரு போரில் முஸ்லிம்கள் தங்களின் எதிரிகளைச் சுற்றிவளைத்து விட்டார்கள். அவர்களுக்கு மத்தியில் ஒரு மனிதர் தம்முடைய இஸ்லாத்தைப் பிரகடனம் செய்தவாறு வெளியேறி வந்தார். தம்மைக் காப்பாற்றிக்கொள்ளத்தான் அவர் இவ்வாறு தந்திரம் செய்கிறார் என்று முஸ்லிம்கள் எண்ணினார்கள். ஆகவே, உசாமா இப்னு ஸைது அவரைக் கொன்றுவிட்டார்.

இந்தச் சம்பவம் நபியவர்களிடம் கூறப்பட்டபோது அவர்கள் கடுமையாகக் கவலையடைந்தார்கள். உசாமாவைக் கடுமையாகக் கடிந்து கொண்டார்கள். லாயிலாஹா இல்லல்லாஹ் என்று அவர் கூறியும் நீர் எப்படி அவரைக் கொலைசெய்தீர் என்று கேட்டார்கள். அதற்கு உசாமா, அவர் வாளுக்குப் பயந்துதான் அவ்வாறு கூறினார் என்றார். அதற்கு நபியவர்கள், அவருடைய உள்ளத்தைப் பிளந்து பார்த்து அவர் பயத்தினால் கூறினார் என்பதை அறிந்துகொண்டீரா என்று கேட்டார்கள்.

உசாமா கூறுகிறார், நபியவர்கள் என்னைப் பழித்துக் கொண்டே இருந்தார்கள். எந்த அளவுக்கெனில், நான் அந்த நாளில்தான் இஸ்லாத்தை ஏற்றிருக்கக் கூடாதா என்று விரும்பினேன்:

நம்பிக்கையாளர்களே, அல்லாஹ்வின் பாதையில் நீங்கள் பயணம் செய்தால் தெளிவாக ஆராய்ந்துகொள்ளுங்கள். யாராவது உங்களுக்கு முகமன் கூறினால் அவரிடம் ‘நீர் நம்பிக்கையாளர் அல்ல.’ என்று கூறிவிடாதீர்கள். நீங்கள் இவ்வுலகப் பொருள்களை விரும்பினால் அல்லாஹ்விடம் ஏராளமான பொருள்கள் இருக்கின்றன. நீங்களும் முன்பு இவ்வாறுதான் இருந்தீர்கள். அல்லாஹ் உங்கள்மீது அருள் புரிந்தான். ஆகவே, ஆராய்ந்துகொள்ளுங்கள். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிந்தவனாக இருக்கிறான். (94)

உண்மையில் ஒருவர் நம்பிக்கை கொண்டபின்பும் நிராகரிப்பாளர்களுக்கு மத்தியில் நிலைத்திருப்பது சரியானதல்ல. அவர் புலம்பெயர்ந்து முஸ்லிம்களுடன் இணைந்து புதிய ஆட்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். தங்களுடைய முஸ்லிம் சகோதரர்களுடன் இணைந்து இந்த மார்க்கத்தின் பொறுப்புகளைச் சுமக்க வேண்டும்.

தம்முடைய கொள்கையை மறைத்துக்கொண்டு அவர்களுடன் தங்கியிருப்பது தீங்கையே தரும். இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள பலவீனமானவர்கள் மட்டுமே விதிவிலக்கானவர்கள்:

தமக்குத்தாமே அநீதி இழைத்துக்கொண்டவர்களின் உயிர்களை வானவர்கள் கைப்பற்றும்போது, ‘நீங்கள் எந்நிலையில் இருந்தீர்கள்?’ என்று கேட்பார்கள். ‘நாங்கள் பூமியில் பலவீனர்களாக இருந்தோம்.’ என்று அவர்கள் கூறுவார்கள். ‘அல்லாஹ்வின் பூமி விசாலமானதாக இருக்கவில்லையா? அதில் நீங்கள் புலம்பெயர்ந்து சென்றிருக்கலாம், அல்லவா?’ என்று வானவர்கள் கேட்பார்கள். அவர்களின் இருப்பிடம் நரகமாகும். அது மிகவும் கெட்ட இருப்பிடமாகும். ஆயினும், எவ்வித உபாயத்தையும் வழியையும் பெறாத பலவீனமான ஆண்கள், பெண்கள், குழந்தைகளைத் தவிர. (97,98)

கொள்கையோடு புலம்பெயர்ந்துசெல்வதே பாதுகாப்புக்கான, வெற்றிக்கான வழி; மிகச் சிறந்த எதிர்காலத்துக்கான வாசல்.

தம் மார்க்க விவகாரங்களிலும் உலக விவகாரங்களிலும் இழிவை ஏற்றுக்கொண்டு வாழ்பவரைவிட இழிந்தவர் யாரும் இல்லை. தன் பாதையில் புலம்பெயர்ந்துசெல்வோருக்கு மிகச் சிறந்த எதிர்காலம் இருப்பதாகவும் அவர்கள் இவ்வுலகிலும் மறுவுலகிலும் ஏராளமான நன்மைகளைப் பெறுவார்கள் என்றும் அல்லாஹ் வாக்களிக்கிறான்.

உண்மையில் நம்மைவிட மற்றவர்களே பூமியில் பயணம்செய்து தங்களின் ஆதிக்கத்தை நிலைநாட்டுகிறார்கள். செல்லும் இடங்களில் எல்லாம் தங்களின் மார்க்கத்தையும் மொழியையும் பரப்புகிறார்கள்.

தங்களின் மார்க்கத்தைப் பரப்பும் பொருட்டும் படைப்புகளைப் படைப்பாளனுடன் இணைக்கும் பொருட்டும் இந்தப் பூமியில் பயணம் செய்வதற்கு முஸ்லிம்களே மிகத் தகுதியானவர்கள்.

அவர்கள் தங்களின் பயணங்களில் கடமையான தொழுகைகளைச் சுருக்கித் தொழுதுகொள்ளலாம். இதுகுறித்து அருளப்பட்ட வசனம்: 'பூமியில் பயணம்செய்யும்போது நிராகரிப்பாளர்கள் உங்களுக்குத் தொல்லை தருவார்கள் என்று நீங்கள் அஞ்சினால் தொழுகையைச் சுருக்கிக்கொள்வது உங்கள்மீது குற்றம் ஆகாது. (101)'

இந்த வசனமும் இதனை அடுத்து வரக்கூடிய வசனங்களும் அச்ச நேரத் தொழுகைகுறித்து அருளப்பட்டவை. ஆனால், பயணத்தில் தொழுகையைச் சுருக்கிக் கொள்ளலாம் என்பதை வேறுசில வசனங்கள் உறுதிசெய்கின்றன. ஃபிக்ஹு கலையின் மூலம் ஒரே தலைப்பில் பல வகையான சட்டங்களை நாம் பெற்றுக்கொள்கிறோம்.

அடுத்து வரக்கூடிய வசனம், போர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது தொழுவதுகுறித்து தெளிவுபடுத்துகிறது:

> நீர் நம்பிக்கையாளர்களிடையே இருந்து அவர்களுக்குத் தொழுகை நடத்தினால் அவர்களில் ஒரு பிரிவினர் உம்முடன் நிற்கட்டும். அவர்கள் தம் ஆயுதங்களையும் தயாராக வைத்துக்கொள்ளட்டும். சிரம்பணிந்தபின் அவர்கள் உங்களுக்குப் பின்னால் நின்று கொள்ளட்டும். தொழாமல் இருக்கும் இன்னொரு பிரிவினர் வந்து உம்முடன் தொழுதுகொள்ளட்டும். அவர்களும் தங்களுடன் பாது காப்புக்குரிய ஆயுதங்களை வைத்திருக்கட்டும். (102)

இந்த வசனத்தில் இமாம் என்பது நபியவர்களைத்தான் குறிக்கிறது என்பதுதான் பெரும்பாலோரின் கருத்து. முஸ்லிம்கள் நபியவர்களுக்குப் பின்னால் தொடர்ந்து தொழுதார்கள்.

இது நபியவர்கள் மற்றும் நபித்தோழர்களுக்கு மட்டுமே உரித்தான கட்டளை என நான் கருதுகிறேன். நபியவர்கள் இருக்கும்போது வேறு யாருக்கும் இமாமத்செய்ய உரிமை இல்லை. ஆனால், தற்காலத்தில் பல இமாம்கள் இருப்பது இலகுவானதுதான். தற்போது போருக்கான வழி முறைகளும் மாறிவிட்டன. அவர்களால் பல ஜமாஅத்துகளை ஏற் படுத்திக்கொள்ள முடியும்.

'நீர் நம்பிக்கையாளர்களிடையே இருந்து' என்ற வாசகம்தான் எனது இந்தப் புரிதலுக்கான ஆதாரம். எனது இந்த கருத்து சரியானதாக இருக்கும்

என்றே நான் நம்புகிறேன். பல இலட்சக்கணக்கான போர்வீரர்கள் ஒரே இமாமுக்குப் பின்னால் தொழ வேண்டும் என்று அவசியம் இல்லை.

❖ ❖ ❖

இந்த அத்தியாயம் ஈமானில் பலவீனமானவர்களையும் நோயுற்ற உள்ளம் கொண்டவர்களையும் வர்ணித்துக்கொண்டே செல்கிறது. ஆச்சரியமான ஒரு சம்பவத்தை அது எடுத்துரைக்கிறது. அது மார்க்கத்தில் பிடிப்பற்ற, இறந்த இதயம் கொண்ட, இஸ்லாத்தை நேசிக்காமல் அதன் வரம்புகளைப் பேணாமல் தன்னை அதன் பக்கம் இணைத்துக்கொண்ட ஒருவருடைய சம்பவம்.

அவர் திருட்டுக் குற்றத்தில் ஈடுபட்டார். தாம் திருடிய பொருளை மறைக்கும் பொருட்டுத் தம் அருகில் வசிக்கும் ஒரு யூதரிடம் அதனைக் கொடுத்துவிட்டார். ஆதாரத்தின் அடிப்படையில் பின்தொடர்ந்து வந்த வர்கள் அந்த இரு வீட்டாரில் யாரேனும் ஒருவர்தாம் திருடியிருக்க வேண்டும் என்பதை உணர்ந்துகொண்டார்கள். இறுதியில் அந்த யூதரின் வீட்டிலிருந்தே அதனைக் கண்டெடுத்தார்கள். துஃமா என்ற மனிதர்தான் இந்தப் பொருளைத் தம்மிடம் ஒப்படைத்ததாக அந்த யூதர் கூறினார். அவர் உண்மையையே கூறினார். ஆனால், திருடிய துஃமா என்ற மனிதர் யூதர் தான் திருடர் என வாதிட்டார். அவரது சமூகத்தார் அவர்தான் திருடினார் என்பதை அறிந்திருந்தும் அவருக்காக வாதிட்டனர். அந்த யூதர் இஸ் லாத்தின் எதிரி என்பதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். ஆகவே, அவர்மீது குற்றம் சுமத்தினார்கள்.

துஃமாவும் அவரது சமூகத்தாரும் உண்மையாளர்கள் என்றே நபி யவர்களும் எண்ணினார்கள். அந்த யூதர்தான் திருடியிருப்பார் என்றும் தம்மை முஸ்லிம் என்று கூறிக்கொள்ளும் துஃமா திருடியிருக்க வாய்ப்பு இல்லை என்றும் நல்லெண்ணம் கொண்டார்கள்.

உயர்ந்தோனிடமிருந்து வஹீ இறங்கியது:

அல்லாஹ் உமக்குக் காட்டிய முறைப்படி நீர் மக்களிடையே தீர்ப்பு வழங்குவதற்காக இந்த வேதத்தை நாம் சத்தியத்துடன் உமக்கு அருளியுள்ளோம். நீர் துரோகிகளுக்கு ஆதரவாக வாதிடுபவராக ஆகிவிடாதீர். அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கோருவீராக. நிச்சயமாக அல்லாஹ் பெரும் மன்னிப்பாளனாகவும் இணையிலாக் கிருபையாளனாகவும் இருக்கிறான். (105,106)

துரோகிகளுக்கு, பாவிகளுக்கு ஆதாரவாக வாதிட வேண்டாம் என்றும் குற்றமற்ற ஒருவரின் மீது குற்றம் சுமத்த வேண்டாம் என்றும் நபியவர்கள் தடுக்கப்படுகிறார்கள்.

இறுதியாக அல்லாஹ் தன் தூதருக்குக் கூறினான்:

அல்லாஹ்வின் அருளும் அவனது கருணையும் உம்மீது இல்லாதிருக்குமானால், அவர்களில் ஒரு பிரிவினர் உம்மை வழிகெடுத்தே தீர வேண்டும் என்று நாடினார்கள். ஆனாலும், அவர்கள் தம்மைத்தாமே வழிகெடுத்துக்கொண்டார்கள். அவர்கள் உமக்கு எந்தத் தீங்கையும் இழைத்துவிட முடியாது. அல்லாஹ் உமக்கு வேதத்தையும் ஞானத்தையும் அருளியுள்ளான். நீர் அறிந்திராதவற்றையும் அவன் உமக்குக் கற்றுத்தந்துள்ளான். (113)

இந்தச் சம்பவத்தை விமர்சித்து இன்னுமொரு வசனம் அருளப்பட்டது: 'ஒரு தவறையோ பாவத்தையோ செய்துவிட்டு அதன் பழியைக் குற்றமற்ற ஒருவரின் மீது சுமத்திவிடுபவர் பெரும் அவதூறையும் பகிரங்கமான பாவத்தையும் தம் தலையில் சுமந்தவராவார். (112)' தவறு செய்தவர்களுக்குப் பாவமன்னிப்பு கோருமாறு கூறப்படுகிறது: 'குற்றம்செய்துவிட்டு அல்லது தமக்குத்தாமே அநீதி இழைத்துவிட்டு, பின்னர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கோருபவர் அல்லாஹ்வைப் பெரும் மன்னிப்பாளனாகவும் இணையிலாக் கிருபையாளனாகவும் காண்பார். (110)'

உண்மையை அறிந்தும் அதனை மறைக்க, அநீதி இழைக்கத் திட்டம் தீட்டிய குற்றவாளியின் சமூகத்தினருக்குக் கூறப்படுகிறது:

தர்மம்செய்யத் தூண்டுதல், நன்மைசெய்யத் தூண்டுதல், மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் ஆகியவற்றுக்காகப் பேசப்படும் இரகசியப் பேச்சுகளைத் தவிர அவர்களின் பெரும்பாலான இரகசியப் பேச்சுகளில் எவ்வித நன்மையும் இல்லை. (114)

மேலும் அல்லாஹ் கூறுகிறான்:

தமக்கு நேர்வழி தெளிவானபின்னரும் தூதரின் கட்டளைக்கு மாறாகச் செயல்பட்டு, நம்பிக்கையாளர்களின் பாதையை விடுத்து வேறொரு பாதையில் செல்பவரை நாம் அவர் சென்ற திசையிலேயே செலுத்தி நரகத்தில் சேர்த்திடுவோம். அது மிகவும் கெட்ட இருப்பிடமாகும். (115)

இவையனைத்தும் சத்தியத்தைச் சத்தியம் எனக் காட்டவும் அசத்தியத்தை அசத்தியம் எனக் காட்டவும் அநியாயமாகக் குற்றம்சாட்டப்பட்ட அவர் இஸ்லாத்தின் எதிரியாக இருந்தாலும் அவருடன் நேர்மையாக நடந்துகொள்ளவும் ஆகும். இதுதான் இஸ்லாத்தின் பெருந்தன்மை!

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு இறை வஹீ மதீனாவில் வாழ்ந்துகொண்டிருந்த மற்றொரு பிரிவினரை எதிர்கொள்கிறது. அவர்கள்தாம்

அதுவரை சிலை வழிபாட்டை விடாமல் தொடர்ந்துகொண்டிருந்தவர்கள். அல்லாஹ் அவர்களுக்கு மிக உறுதியாகக் கூறுகிறான்:

நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணையாக்கப்படுவதை மன்னிக்கவே மாட்டான். அதனைத் தவிர மற்ற பாவங்களைத் தான் நாடியோருக்கு அவன் மன்னித்துவிடுகிறான். யார் அல்லாஹ்வுக்கு இணை ஏற்படுத்துகிறாரோ அவர் தூரமான வழிகேட்டில் வீழ்ந்து விட்டார். (116)

அல்லாஹ்வுக்கு இணை ஏற்படுத்துவது மனிதனின் அறிவையும் உள்ளத்தையும் நாசம்செய்யும், அவனுக்கு வழங்கப்பட்ட தனித் தன்மைகள் அனைத்தையும் வீணாக்கும் ஒன்றாகும். வணக்க வழிபாடு, பிரார்த்தனை, தீர்ப்பளித்தல், நம்பிக்கை, உதவி தேடுதல் போன்ற காரியங்களில் படைப்பாளனையும் படைப்புகளையும் சமமெனக் கருதுவது தெளிவான ஷிர்க்காகும்.

உண்மையாகவே அல்லாஹ்வை வணங்கக்கூடியவன் அவனுக்கு மட்டுமே கட்டுப்படுவான். அவனிடம் மட்டுமே தன் விவகாரங்களை ஒப்படைப்பான். ஹறாம், ஹலால் விவகாரங்களில் அவனிடம் மட்டுமே திரும்புவான், அவன் அல்லாஹ்வின் வாக்குறுதியையும் எச்சரிக்கையையும் அப்படியே நம்பக்கூடியவன். அவற்றைத் தவிர அவனைவிட்டுத் தூரமாக்கும் எந்த ஒன்றையும் அவன் பொருட்படுத்த மாட்டான்.

ஆனால் மற்றவர்களை, ஏமாற்றக்கூடிய ஆசைகளே இயக்குகின்றன. அவர்கள் ஷைத்தானின் பொய்யான வாக்குறுதிகளை நம்பி கானலுக்குப் பின்னால் ஓடுகிறார்கள். தங்களின் வாழ்நாளை வீணான விசயங்களில் கழிக்கிறார்கள்:

அவன் அவர்களுக்கு வாக்குறுதியளிக்கிறான், ஆசையூட்டுகிறான். ஷைத்தானின் வாக்குறுதி ஏமாற்றமே அன்றி வேறில்லை. (120)

மார்க்கங்களைக் கொண்டு பெருமையடிப்பதன் மூலம் அவனுக்கு எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை. உண்மையான செயல்பாடுதான் இங்கு வேண்டப்படுகிறது.

முஹம்மது அப்துஹ் கூறுவதுபோல, தற்காலத்தில் இஸ்லாம் குறித்து புகழ்ந்து பேசக்கூடியவர்கள் பெருமளவில் காணப்படுகிறார்கள். ‘இந்த மார்க்கத்தை விடச் சிறந்த மார்க்கம் வேறென்ன இருக்க முடியும்? இந்த மார்க்கத்தை விடப் பரிபூரணமான மார்க்கம் வேறென்ன இருக்க முடியும்?’ என்றெல்லாம் அவர்கள் பெருமிதமடைகிறார்கள்.

ஆனால் அவர்களில் ஒருவரிடம், 'நீங்கள் இஸ்லாத்துக்காக என்ன செய்தீர்கள்? மற்ற மார்க்கங்களைப் பின்பற்றுபவர்களை விட நீங்கள் எவ்வகையில் சிறப்படைகிறீர்கள்?' என்று கேட்டால் எந்தப் பதிலையும் பெற முடிவதில்லை.

இப்படிப்பட்டவர்களை விமர்சித்து அல்லாஹ் கூறுகிறான்:

உங்கள் விருப்பப்படியோ வேதக்காரர்களின் விருப்பப்படியோ அல்ல. தீமைசெய்தவர் அதற்குரிய தண்டனையைப் பெறுவார். அவர் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் பொறுப்பாளனாகவோ உதவியாளனாகவோ பெற மாட்டார். (123)

தற்காலத்தின் மிகப் பெரிய குழப்பங்களில் ஒன்று, யூதர்கள் தங்களின் மத அடையாளங்களைப் பெருமிதத்தோடு கடைப்பிடிக்கிறார்கள். தங்களின் தொப்பியை அணிந்துகொண்டு பல தளங்களில் அவர்கள் உலவுகிறார்கள்.

ஆனால், முஸ்லிம்களின் தலைவர்களில் பெரும்பாலோர் தொழுகையின் நேரங்களைக் கூட முறையாகப் பேணுவதில்லை. ஆயினும், அல்லாஹ் பாதுகாத்தவர்களைத் தவிர.

பின்னர் அத்தியாயம் தொடங்கிய அதே விசயத்தின் பக்கம் மீண்டும் திரும்புகிறது. அது குடும்ப ரீதியான தொடர்புகள்குறித்த விசயம். அந்தத் தொடர்புகள்குறித்த பொதுவான வழிகாட்டல்களை வழங்குகிறது. நீதியும் சீர்திருத்தமும் அதன் நோக்கங்களாகக் கொள்ளப்பட வேண்டும்:

பெண்களைக் குறித்து மக்கள் உம்மிடம் கேட்கிறார்கள். அவர்களைக் குறித்தும் அநாதைப் பெண்களுக்கு அளிக்க வேண்டியதை நீங்கள் அவர்களுக்கு வழங்காது அவர்களை மணந்துகொள்வதைக் குறித்தும் பலவீனமான சிறார்களைக் குறித்தும் அநாதைகளுடன் நீதியோடு நடந்துகொள்வதைக் குறித்தும் இவ்வேதத்தில் உங்களுக்குப் பரிந்துரைக்கப்பட்டவைகுறித்தும் அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகிறான். நீங்கள் எந்த ஒரு நன்மையைச் செய்தாலும் அதனை அல்லாஹ் நன்கறியக்கூடியவன். (127)

அத்தியாயத்தின் நடுவில் அநாதைகளைக் குறித்து விரிவாகப் பேசப்பட்டது. இங்கு கணவன், மனைவிக்கிடையே ஏற்படும் பிளவு குறித்து பேசப்படுகிறது. சீர்திருத்தத்தின் பக்கம், மனதின் கஞ்சத்தனத்தை எதிர்த்துப் போராடுவதன் பக்கம், நன்மைசெய்வதன் பக்கம், இயன்றவரை இறையச்சத்தோடும் நீதியோடும் நடந்துகொள்வதன் பக்கம் அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

அவர்களிடையே அன்பு இல்லாமல் வெறுப்பு ஏற்பட்டுவிட்டால், வாழ்க்கை என்னும் கண்ணாடி உடைந்துவிட்டால், சீர்திருத்தம் ஏற்படுவது சிரமமான ஒன்றாகிவிட்டால் இருவரும் தனித்தனியாக அல்லாஹ்வின் அருளைத் தேடிக்கொள்ளுமாறு கட்டளையிடப்படுகிறார்கள்: 'அவர்கள் இருவரும் பிரிந்துவிட்டால் தன் தாராளத்தன்மையினால் அல்லாஹ் ஒவ்வொருவரையும் தேவையற்றவராக ஆக்கிவிடுவான். அல்லாஹ் தாராளமானவனாகவும் ஞானம்மிக்கவனாகவும் இருக்கிறான். (130)'

அல்லாஹ்வின் பொக்கிஷங்கள் நிறைவடையாதவை. யாரும் எதிர்காலம்குறித்து தவறான எண்ணம் கொள்ள வேண்டாம். நிகழ்காலம் கைவிட்டுச்சென்றுவிட்டால் இறையச்சத்தைக் கொண்டு உங்களை அலங்கரித்துக்கொள்ளுங்கள்:

> உங்களுக்கு முன் வேதம் வழங்கப்பட்டோருக்கும் உங்களுக்கும் 'அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்!' என்றே கட்டளையிடப்பட்டது. நீங்கள் நிராகரித்தால் அறிந்துகொள்ளுங்கள், வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அல்லாஹ்வுக்கே உரியவையாகும். அவன் தேவையற்றவனாகவும் புகழுக்குரியவனாகவும் இருக்கிறான். (131)

அவர்கள் பிரிய வேண்டும் என்று விதி தீர்ப்பளித்துவிட்டால் நிராசையை நீக்கும் பொருட்டு, தம்பதிகளின் உள்ளத்தைச் சீர்செய்யும் பொருட்டு இந்த வாசகம் அருகருகே மூன்று முறை கூறப்பட்டுள்ளது.

பின்னர் குடும்பத்தை நீதியின் அடிப்படையில் நிலைநிறுத்துமாறு வலியுறுத்தப்படுகிறது. மாறாக, முழுச் சமூகமும் நீதியின் அடிப்படையில்தான் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்று இரத்தினச்சுருக்கமான இந்த வசனத்தின் மூலம் வலியுறுத்தப்படுகிறது: 'நம்பிக்கையாளர்களே, நீதியைக் கடைப்பிடிப்பவர்களாகவும் அல்லாஹ்வுக்காகச் சாட்சி கூறுபவர்களாகவும் ஆகிவிடுங்கள். அது உங்களுக்கோ உங்கள் தாய் தந்தையருக்கோ உறவினருக்கோ பாதகமாக இருந்தாலும் சரியே ... (135)'

நீதியை நிலைநிறுத்துவது இஸ்லாம் மட்டுமே கூறிய ஒன்றல்ல. மாறாக, அது தூதர்கள் அனைவரும் கொண்டுவந்த மார்க்கமாகும்: 'நாம் நம் தூதர்களைச் சான்றுகளுடன் அனுப்பினோம். மக்கள் நீதியில் நிலைத்திருக்கும் பொருட்டு அவர்களுடன் வேதத்தையும் தராசையும் அருளினோம். (57:25)'

இதுதான் பின்வரும் வசனம் இடம்பெற்றுள்ளதன் இரகசியம்: 'நம்பிக்கையாளர்களே, அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதரின்

மீதும் அவன் தன் தூதருக்கு அருளியுள்ள வேதத்தின் மீதும் அவன் முன்னர் அருளியுள்ள வேதங்களின் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள். (136)'

குடும்பத்தில் அநீதி இழைப்பது கணவன்-மனைவியின் மீதும் குழந்தைகளின் மீதும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய பெரும் குழப்பமாகும். சீர்குலைந்த ஒரு குடும்பம் அது வாழும் சூழல் முழுவதிலும் துன்பத்தைப் பரப்புகிறது.

இந்த அத்தியாயம் சமூகத்தில் காணப்படும் பல்வேறு வகையான மக்களைக் குறித்து பேசுகிறது. அது குடும்ப விவகாரங்களைப் பேசும்போது அதனோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. தலைப்பு குறிப்பானதாக இருந்தாலும் அத்தியாயம் பேசும் விசயங்கள் பொதுவானவை.

நயவஞ்சகர்களின் நிலைப்பாடுகளைத் திருக்குர்ஆன் எவ்வாறு எதிர்கொண்டு அவர்களை எச்சரிக்கைசெய்தது என்பதை நாம் கண்டோம்.

அத்தியாயம் நிறைவடைவதற்கு முன்பே அது அவர்களின் பக்கம் திரும்பி ஒவ்வொரு முக்கியமான விசயம்குறித்தும் அவர்களை எச்சரிக்கிறது.

உண்மையான நம்பிக்கையாளன் தன் இறைவனின் வார்த்தைகளுக்கு மதிப்பளிப்பான். அவற்றுக்கேற்ற கண்ணியமான ஒரு சூழலை அவன் ஏற்படுத்துவான். அவை பரிகாசம்செய்யப்படும் இடங்களைவிட்டு அவன் ஒதுங்கியிருப்பான். அவற்றைப் பரிகாசம்செய்பவர்களோடு தனக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்பதை அவன் பிரகடனம்செய்வான்.

ஆனால், உறுதியான நம்பிக்கையைப் பெறாதவர்கள் வஹீயும் இறைச்சட்டமும் பரிகாசம்செய்யப்படும் இடத்தில் அமர்வதை ஒரு பொருட்டாகக் கருத மாட்டார்கள். அவர்களைப் பற்றித்தான் பின்வரும் வசனம் பேசுகிறது:

> நயவஞ்சகர்களுக்குத் துன்புறுத்தும் வேதனை உண்டு என்னும் நற்செய்தியைக் கூறிவிடுவீராக. அவர்கள் நம்பிக்கையாளர்களை விடுத்து நிராகரிப்பாளர்களை நண்பர்களாக ஆக்கிக்கொள்கிறார்கள். இவர்கள் அவர்களிடம் கண்ணியத்தைத் தேடுகிறார்களா? கண்ணியம் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது. (138,139)

எதிரி எவ்வளவுதான் வலிமையானவனாக இருந்தாலும் அவன் பக்கம் நட்போடு நெருங்கக் கூடாது. மார்க்கத்தின் கண்ணியத்தைச் சிதைக்கும் வண்ணம் அவனிடம் எந்தச் சமாதானத்தையும் கோரக் கூடாது.

*நயவஞ்சகர்கள்தாம் சத்தியம் இழிவுபடுத்தப்படுவதை, சத்தியவாதிகள் அவமானப்படுத்தப்படுவதைப் பொறுத்துக்கொண்டு அமைதியாக இருப் பார்கள்:*

*அல்லாஹ்வின் வசனங்கள் நிராகரிக்கப்படுவதையும் பரிகாசம் செய்யப்படுவதையும் நீங்கள் செவியேற்றால் அதை விட்டுவிட்டு அவர்கள் வேறு பேச்சில் மூழ்கும்வரை அவர்களுடன் நீங்கள் அமர வேண்டாம் என்று அல்லாஹ் இந்த வேதத்தில் உங்களுக்குக் கட்டளையிட்டுள்ளான். அவ்வாறு நீங்கள் செய்யவில்லையெனில் நீங்களும் அவர்களைப் போன்றவர்களாக ஆகிவிடுவீர்கள்.* (140)

*ஆரம்பகாலம்தொட்டு இன்றுவரை நயவஞ்சகர்களின் சூழ்ச்சிகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. அதனால்தான் மீண்டும் மீண்டும் அவர்கள்குறித்து பேசப்படுகிறது.*

❖ ❖ ❖

*இந்த அத்தியாயம் தன்னுடைய இறுதிப் பகுதியில் வேதக்காரர்களைக் குறித்து மீண்டும் பேசுகிறது. அவசியமான புதிய விசயங்கள் முந்தைய வற்றோடு இணைக்கப்படுகின்றன.*

*வேதக்காரர்கள் என்பது யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களைக் குறிக்கும். யூதர்கள் ஈசாவையும் முஹம்மதையும் ஒருசேர நிராகரித்தார்கள். ஈசாவைக் குறித்து உண்மைக்கு மாறாக, அவர் தவறான வழியில் பிறந்தவர் என்றும் அவருடைய தாய் ஒரு விபச்சாரி என்றும் கூறினார்கள்.*

*முஹம்மதைக் குறித்து, அவர் தமக்கு வஹீ வருவதாக வாதிடும் ஒரு நாட்டுப்புற அறபி, வஹீக்கும் அவருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று கூறினார்கள்.*

*கிறிஸ்தவர்கள் முஹம்மதைக் குறித்து, அவர் இறைவனோடு எந்தத் தொடர்புமற்றவர் என்று கூறினார்கள். அவரை மோசமான பண்புகளால் இகழ்ந்தார்கள்.*

*அல்லாஹ்வின் தூதர்களை நிராகரிக்கும் இவர்கள் அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதர்களின் மீதும் அவனுடைய வேதங்களின் மீதும் நம்பிக்கை கொண்டவர்கள் என்று அழைக்கப்படுவார்களா என்ன? இந்த அத்தியாயம் இவர்களைக் குறித்து கூறுகிறது:*

*அல்லாஹ்வையும் அவனுடைய தூதர்களையும் நிராகரித்து, அல் லாஹ்வுக்கும் அவனுடைய தூதர்களுக்குமிடையே வேற்றுமை*

பாராட்டுபவர்கள், நாங்கள் சிலரை ஏற்றுக்கொள்வோம், சிலரை நிராகரிப்போம் என்று கூறுபவர்கள் அந்த வேற்றுமைக்கிடையே ஒரு நிலைப்பாட்டை எடுக்க விரும்புகிறார்கள். அவர்கள்தாம் உண்மையில் நிராகரிப்பாளர்கள். நாம் நிராகரிப்பாளர்களுக்காக இழிவுமிக்க வேதனையைத் தயார்படுத்தி வைத்துள்ளோம். அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதர்களின் மீதும் நம்பிக்கை கொண்டு, அவர்களிடையே பாரபட்சம் காட்டாதவர்களுக்கு அல்லாஹ் அவர்களுக்குரிய கூலிகளை வழங்குவான். அல்லாஹ் பெரும் மன்னிப்பாளனாகவும் இணையிலாக் கிருபையாளனாகவும் இருக்கிறான். (150-152)

வேதக்காரர்களுடனான இந்த விவாதத்துக்குப் பிறகு அல்லாஹ் தன் தூதர் முஹம்மதுக்குக் கூறுகிறான்:

நூஹுக்கும் அவருக்குப் பின்னால் வந்த தூதர்களுக்கும் நாம் வஹீ அறிவித்ததுபோலவே உமக்கும் வஹீ அறிவித்தோம். இப்ராஹீம், இஸ்மாஈல், இஸ்ஹாக், யஅகூபுக்கும் அவரது புதல்வர்கள் ஈசா, அய்யூபு, யூனுஸ், ஹாறூன், சுலைமான் ஆகியோருக்கும் நாம் வஹீ அறிவித்தோம். நாம் தாவூதுக்கு ஆகமத்தை வழங்கினோம். *(163)*

இந்தத் தூதர்களுக்கு யார் வஹீ அறிவித்தானோ அவன்தான் முஹம்மதுக்கும் வஹீ அறிவித்தான். அவர்கள் அனைவரும் அல்லாஹ்வுடைய படைப்புகளின் பக்கம் அனுப்பப்பட்ட அவனுடைய தூதர்கள். அவர்கள் பொறுப்பு சாட்டப்பட்டார்கள். தங்களின் பொறுப்பைச் சிறந்த முறையில் நிறைவேற்றினார்கள். அவர்களில் யாரும் மோசடி செய்யவுமில்லை, சோம்பேறித்தனம் செய்யவுமில்லை.

முஹம்மதை மட்டும் பிரத்தியேகமாகக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், அவர் அவர்கள் அனைவரையும்விடச் சிறந்த முறையில் எடுத்துரைப்பவராகவும் அதிகம் சோதனைகளை எதிர்கொண்டவராகவும் மனிதனின் இயல்பையும் அறிவையும் விழித்தெழச் செய்வதில் அவர்களைவிட நெருக்கமானவராகவும் இருந்தார் என்று கூறலாம்.

அவர் விட்டுச்சென்றவை, உறுதியான நம்பிக்கையை ஏற்படுத்தியவாறு, அலட்சியமாக இருப்போரை விழிப்படையச்செய்தவாறு, படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் இறைவனின் பக்கம் படைப்புகளுக்கு வழிகாட்டியவாறு இன்றுவரை நிலைத்திருக்கின்றன. மறுமைநாள் நிலைபெறும்வரை அவை நிலைத்திருக்கும்.

ஆகவேதான் அல்லாஹ் கூறுகிறான்: ‘ஆயினும் அல்லாஹ் உமக்கு அருளியதைக் குறித்து அவனே சாட்சி கூறுகிறான். அவன் அதனைத்

*தனது அறிவுடன் அருளினான். வானவர்களும் சாட்சி கூறுகிறார்கள். சாட்சிய மளிப்பதற்கு அல்லாஹ்வே போதுமானவன். (166)'*

*ஒருவர் பக்கச்சார்பற்று முஹம்மது (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட வேதத்தை ஆராய்ந்துபார்த்தால் தூதர்கள் விட்டுச் சென்றவற்றுக்கு மத்தியில் அதற்கு இணையானது எதுவும் இல்லை என்பதை உறுதியாக அறிந்துகொள்வார். அதே போன்று, ஒருவர் பக்கச்சார்பற்று தூதருடைய வாழ்க்கையை ஆராய்ந்துபார்த்தால் இறைவனை நினைவுகூருதல், அவனுக்கு நன்றிசெலுத்துதல், பொறுமையாக இருத்தல், அவனையே சார்ந்திருத்தல் ஆகிய விசயங்களில் அவர் தனித்துவமானவர் என்பதை அறிந்துகொள்வார். இறுதியில், தூதுத்துவத்துக்கு அவர் தகுதியானவர் அல்ல என்று ஒருவர் கூறினால் முன்னோர்களிலும் பின்னோர்களிலும் அதற்குத் தகுதியான யாரையும் அவர் பெற மாட்டார்.*

*மீண்டும் வேதக்காரர்களுடன் குர்ஆன் விவாதிப்பதன் பக்கம் திரும்புவோம். அவர்கள் என்ன வேண்டுகிறார்கள்?*

> *நீர் வானத்திலிருந்து ஒரு வேதத்தை இறக்கி தங்களிடம் கொண்டுவர வேண்டும் என்று வேதக்காரர்கள் உம்மிடம் கேட்கிறார்கள். மூசாவிடமோ அவர்கள் இதைவிடப் பெரியதைக் கேட்டுவிட்டார்கள். எங்களுக்கு அல்லாஹ்வைக் கண்முன்னால் காட்டும் என்று அவர்கள் கேட்டார்கள். (153)*

*இது உண்மையைத் தேடும், உறுதியான நம்பிக்கையைப் பெற முயலும் அறிவின் ஆலோசனைகள் அல்ல.*

*இது கர்வம் கொண்ட உள்ளத்தின், இறுகிப்போன இயல்பின் வெளிப்பாடு. அதனால்தான் மூசாவும் இவ்வாறு கேட்கப்பட்டார். அதன் காரணமாக அவர்கள் பேரிடியால் தண்டிக்கப்பட்டார்கள்.*

*யூதர்கள் இறுகிய உள்ளமும் கடினமான இயல்பும் கொண்டவர்கள். ஆகவேதான், அல்லாஹ் அவர்களை அச்சுறுத்தி வாக்குறுதி வாங்கினான். அவர்களின் தலைகளுக்கு மேல் மலை உயர்த்தப்பட்டது. அது அவர்கள் மீது நொறுங்கிவிழுந்து அவர்களைச் சமாதிகளாக்கத் தயாராக இருந்தது...*

*ஆனாலும் அவர்கள் வாக்குறுதியை மீறினார்கள். அல்லாஹ் கூறுகிறான்:*

> *அவர்கள் தங்களின் வாக்குறுதியை மீறியதாலும் அல்லாஹ்வின் சான்றுகளை நிராகரித்ததாலும் இறைத்தூதர்களை அநியாயமாகக் கொலைசெய்ததாலும் 'எங்கள் உள்ளங்கள் மூடப்பட்டுவிட்டன.'*

என்று அவர்கள் கூறியதாலும் நாம் அவர்களைத் தண்டித்தோம். இன்னும், அவர்களின் நிராகரிப்பினால் அல்லாஹ் அவர்களின் உள்ளங்களின் மீது முத்திரையிட்டுவிட்டான். அவர்கள் மிகக் குறைவாகவே நம்பிக்கை கொள்வார்கள். அவர்கள் நிராகரித்ததாலும் மர்யமின் மீது பெரும் அவதூறைக் கூறியதாலும் ... (155,156)

அவர்கள் இன்றுவரை மர்யமை விபச்சாரியாகத்தான் கருதுகிறார்கள். அவருடைய மகன் தம்மைத் தூதர் என்று பிரகடனம்செய்தபோது அவரைக் கொலைசெய்ய முயன்றார்கள்.

அல்லாஹ் அவர்களின் சூழ்ச்சிகளிலிருந்து ஈசாவைக் காப்பாற்றினான். அவர்கள் தங்களின் முயற்சியில் வெற்றியடையவில்லை. அவன் கூறுகிறான்:

உண்மையில் அவர்கள் அவரைக் கொல்லவுமில்லை, சிலுவையில் அறையவுமில்லை. மாறாக, அந்த விவகாரம் குழப்பத்துக்குள்ளாக்கப்பட்டது. அவர்கள் எந்த விசயத்தில் முரண்பட்டார்களோ அதில் சந்தேகத்தில் வீழ்ந்துகிடக்கிறார்கள். வெறும் யூகத்தைத் தவிர அவர்களிடம் வேறு அறிவு இல்லை. உறுதியாக அவர்கள் அவரைக் கொலைசெய்யவில்லை. மாறாக, அல்லாஹ் அவரைத் தன் பக்கம் உயர்த்திக்கொண்டான். (157,158)

ஆனாலும் பொதுமக்களைப் பீடித்த யூகம், அவர்களில் பெரும்பாலோரை 'அவர் சிலுவையில் அறையப்பட்டார்' என்பதை நம்பச் செய்தது. அவர்கள் அதனைத் தங்களின் நிலையான கொள்கையாக ஆக்கிக்கொண்டார்கள்.

மக்களிடையே பரவிய எதிர்மறையான சிந்தனை எந்த ஆதாரமுமற்ற யூகங்கள் பரவுவதற்குக் காரணமாக அமைந்தது. அவர்களின் அறிவு விசாலமாக இருந்திருந்தால், அவர்கள் அறிவுபூர்வமாகச் சிந்தித்திருந்தால் அவர்களின் நிலைப்பாடு மாறியிருக்கும். ஆகவேதான் திருக்குர்ஆன் ஈசா காப்பாற்றப்பட்டதையும் அவர் அல்லாஹ்வின் அடிமையாகவே இருந்தார் என்பதையும் உறுதிப்படுத்தியவாறு கூறுகிறது:

ஆயினும், அவர்களில் அறிவுமுதிர்ச்சி பெற்றவர்களும் நம்பிக்கையாளர்களும் உமக்கு அருளப்பட்டதையும் உமக்கு முன்னர் அருளப்பட்டதையும் நம்புகிறார்கள். அவர்கள் தொழுகையைக் கடைப்பிடிப்பவர்களாகவும் ஸகாத்தை நிறைவேற்றுபவர்களாகவும் அல்லாஹ்வின் மீதும் மறுமைநாளின் மீதும் நம்பிக்கை கொள்பவர்களாகவும் இருக்கிறார்கள். இத்தகையோருக்கு நிச்சயமாக நாம் மகத்தான கூலியை வழங்குவோம். (162)

முன்னர் பேசப்பட்ட எல்லாப் பிரிவினரைக் குறித்தும் திட்டவட்ட மான நிலைப்பாட்டை அறிவித்தவாறு இந்த அத்தியாயத்தின் முடிவுரை அமைகிறது. நிராகரிப்பாளர்களும் நயவஞ்சகர்களும் மோசமான விளைவு களைப் பெறுவார்கள். ஏனெனில், அவர்கள் அறியாதவர்களாகவும் அறியாமையில் பிடிவாதமாக நிலைத்திருப்பவர்களாகவும் மற்றவர் களையும் அந்த அறியாமையின் பக்கம் அழைப்பவர்களாகவும் இருக்கி றார்கள்.

அவர்கள் நிராகரித்ததோடு மட்டுமல்லாமல் மற்றவர்களையும் நம் பிக்கை கொள்ளவிடாமல் தடுத்தார்கள். ஆகவே அவர்களைக் குறித்து அல்லாஹ் கூறுகிறான்: ‘சத்தியத்தை நிராகரித்து அல்லாஹ்வின் பாதையை விட்டும் மக்களைத் தடுத்துக்கொண்டிருந்தவர்கள் வழிதவறி வெகுதூரம் சென்றுவிட்டார்கள். சத்தியத்தை நிராகரித்து அநியாயம்செய்தவர்களை அல்லாஹ் மன்னிக்க மாட்டான். அவர்களுக்கு நரகத்தின் வழியைத் தவிர வேறெந்த வழியையும் அவன் காட்ட மாட்டான். (167-169)’

நவீன காலனித்துவ ஆக்கிரமிப்பாளர்களை உற்றுநோக்குபவர் அவர் கள் நிராகரிப்பையும் மக்கள்மீது அநீதி இழைப்பதையும் அல்லது இஸ் லாத்தின் மீதான வெறுப்பையும் அதனைப் பின்பற்றுபவர்களை இழிவு படுத்தும் தன்மைகளையும் ஒருசேரப் பெற்றிருப்பதைக் காண்பார்.

பின்னர் அத்தியாயம் யூதர்களை முன்னோக்கி, அவர்கள் சிந்திக்கத் தகுந்த வகையில் அவர்களுக்கு அழைப்பு விடுக்கிறது:

> மனிதர்களே, உங்கள் இறைவனிடமிருந்து தூதர் உங்களிடம் சத்தி யத்துடன் வந்துள்ளார். ஆகவே நம்பிக்கை கொள்ளுங்கள். அது உங்களுக்குத்தான் நல்லது. நீங்கள் நம்பிக்கை கொள்ளவில்லை யெனில், வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அல்லாஹ் வுக்கே உரியன. அல்லாஹ் நன்கறிந்தவனாகவும் ஞானம்மிக்க வனாகவும் இருக்கிறான். (170)

யூதர்கள் தங்களை இணைத்துக்கொண்ட எந்த இணைப்புமின்றி அவர்கள் வெறுமனே அழைக்கப்படுகிறார்கள். ஏனெனில், அவர்களுக்குத் தவ்றாத் வழங்கப்பட்டது. ஆனால், அவர்கள் அதனைச் சுமக்க வேண்டிய முறைப்படி சுமக்கவில்லை. அவர்கள் வேதக்காரர்களாகவும் கருதப்பட மாட்டார்கள். ஏனெனில், அவர்கள் நிராகரிப்பிலும் அறியாமையிலும் சிலை வழிபாட்டாளர்களோடு ஒன்றுகலந்தார்கள். மாறாக, வரம்புமீறி அவர்களையும் தாண்டிச்சென்றுவிட்டார்கள். ஆகவே, அவர்கள் மக்கா வில் உள்ள இணைவைப்பாளர்கள் அழைக்கப்பட்டதுபோன்று எந்த அடையாளமுமின்றி ‘மனிதர்களே’ என்றுதான் அழைக்கப்பட வேண்டும்.

அதனைத் தொடர்ந்து கிறிஸ்தவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. தடுமாற்றமும் குழப்பமும் அவர்களை மிகைத்ததால் வழிதவறி வெகு தூரம் சென்றுவிட்டார்கள். விவகாரங்களை மிகைப்படுத்தியதுதான் அதற்கான முதன்மையான காரணம்.

வரம்புமீறல் அவர்களை மிகைப்படுத்திச் சொல்லத் தூண்டியது. அதன் காரணமாக அவர்கள் சரியான பாதையைவிட்டு விலகி வெகுதூரம் சென்றுவிட்டார்கள். அல்லாஹ் அவர்களுக்குக் கூறுகிறான்:

> வேதக்காரர்களே, நீங்கள் உங்கள் மார்க்கத்தில் மிகைப்படுத்தி விடாதீர்கள். அல்லாஹ்வைக் குறித்து உண்மையைத் தவிர வேறு எதையும் கூறாதீர்கள். மர்யமின் மகன் ஈசா மசீஹ் அல்லாஹ்வின் தூதரும் அவனுடைய வார்த்தையுமாவார். அதனை அவன் மர்ய மிடம் வைத்தான். அது அவனிடமிருந்து வந்த ஆன்மாவாகும். ஆகவே, அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதர்களின் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள். 'இறைவன் மூவர்' என்று கூறுவதை விட்டும் விலகிக்கொள்ளுங்கள். இதுவே உங்களுக்குச் சிறந்த தாகும். அல்லாஹ் ஒரே இறைவன்தான். தனக்கு மகனை ஏற்படுத் திக்கொள்வதை விட்டும் அவன் தூய்மையானவன். வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அவனுக்கே உரியன. பொறுப்பேற் பதற்கு அல்லாஹ்வே போதுமானவன். (171)

இந்தப் பிரபஞ்சத்தை ஆராய்ச்சிசெய்தால், வானங்களிலும் பூமியிலும் கடினமான தேடலை மேற்கொண்டால் ஓரிறைவனைத் தவிர வேறு யாரையும் காண முடியாது. அவனைத் தவிர மற்றவர்கள் இருக்கிறார்கள் எனில் அவர்கள் எதனைப் படைத்தார்கள்? யாருக்கு வாழ்வாதாரம் அளித்தார்கள்? அணுவின் படைப்பில் அல்லாஹ்வுக்குப் பங்காளியாக இருப்பவன் யார்? விந்தையும் கருமுட்டையையும் படைத்ததில் அவ னுக்குப் பங்காளி யார்? விவகாரங்களை நிர்வகிப்பதற்கு அவனுக்கு யார் உதவிசெய்ய முடியும்? இந்த மாபெரும் பிரபஞ்சத்தில் எந்த வகையிலும் அவனுக்கு யாரும் இணை இல்லை.

ஒரே இறைவனே அல்லாஹ். அவனுக்குக் கட்டுப்படுவது சத்திய மாகும். அவனுடைய கட்டளைகளைப் பின்பற்றுவது சத்தியமாகும். அவனுடைய நெருக்கத்தைத் தேடுவது கட்டாயமாகும். அவனை வணங்கு வது அனைவரின் மீதும் கட்டாயக் கடமையாகும்.

ஆகவே, அவன் கூறுகிறான்:

> அல்லாஹ்வின் அடியாராக இருப்பதை மசீஹ் ஒருபோதும் இழிவாக எண்ண மாட்டார். நெருக்கமான வானவர்களும் இழிவாக எண்ண

*மாட்டார்கள். யார் அல்லாஹ்வை வணங்குவதை இழிவெனக் கருதி கர்வம் கொள்கிறாரோ, நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் அனை வரையும் ஒன்றுதிரட்டித் தன்பக்கம் கொண்டுவருவான்.* (172)

*அத்தியாயம் கலாலாவின் சொத்தை எவ்வாறு பங்கிடுவது என்பதைத் தெளிவுபடுத்தும் வசனத்தோடு நிறைவடைகிறது. கலாலா என்பது தந்தையோ பிள்ளையோ இல்லாதவர். இது அத்தியாயத்தின் ஆரம்பத் தில் பேசப்பட்ட குடும்பத்தின் கட்டமைப்பாக, பாதுகாப்பாக மட்டு மல்லாமல் அவைகுறித்த விவகாரங்களின் முடிவுரையாகவும் அமைந்து விடுகிறது. நீங்கள் வழிதவறிவிடக் கூடாது என்பதற்காக அல்லாஹ் உங்களுக்குத் தெளிவுபடுத்துகிறான். அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் நன்கறிந்தவனாக இருக்கிறான்.*

*அத்தியாயத்தின் கருப்பொருள், சமூகம் முழுமையையும் பல வகை யான மக்களின் நிலைகளையும் தழுவியது என்றே நான் கருதுகிறேன். பெண்களைக் குறித்த செய்தி அதில் ஒரு பகுதிதான். அல்லது, நாம் முன்னரே கூறியவாறு குடும்பம் என்பது சிறிய சமூகம், சமூகம் என்பது பெரிய குடும்பம் என்றும் விளக்கலாம்.*

*பார்வைக் குறைபாடுடையவர்கள் இந்த அத்தியாயத்தைப் பல்வேறு சிதறல்களாக எண்ணிக்கொள்கிறார்கள். இது பிழையான பார்வையாகும். சிந்திக்கக் கூடியவர்களை அல்லாஹ் இந்தப் பிழையிலிருந்து பாது காப்பான்.*

*பெயரைக் கொண்டு கருப்பொருளை நிர்ணயிப்பதை நான் நிராகரிக்கி றேன். அத்தியாயத்தின் பெயர்களைக் கொண்டு அதன் கருப்பொருளை நிர்ணயிக்க முடியாது. தலைப்புகள் பெரும்பாலும் பல்வேறானவை யாகவே இருக்கும். பெயர்கள், அவற்றில் குறிப்பிட்ட ஒரு பகுதியை அறிவிக்கக்கூடியவையாக இருக்கும்.*

*உதாரணமாக அல்பகறா அத்தியாயத்தை எடுத்துக்கொள்ளுங்கள். இஸ்றாயீலின் மக்கள் பசுவை அறுக்குமாறு ஏவப்பட்ட சம்பவம் அத்தி யாயத்தின் நாற்பதுக்கு அதிகமான பக்கங்களில் அரைப் பக்கத்தைக் கூடத் தாண்டவில்லை.*

*அதற்குப் பிறகும் அந்த அத்தியாயம் வரலாறு, சட்டம், ஞானம், அறிவுரை என ஒரு பெரும் கடலையே கொண்டுள்ளது.*

*இவ்வாறே அந்நிசா என்ற அத்தியாமும். குடும்ப விவகாரங்கள் ஒரு குறிப்பிட்ட அளவில்தான் கூறப்பட்டுள்ளன. அத்தியாயம் உலகம் முழுமைக்கும் அவசியமான பல சமூக ஒழுங்குகளைக் கொண்டுள்ளது.*

மூத்த அறிஞர்கள் இந்த அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள நண்பர்கள், பகைவர்கள், பெரியவர்கள், சிறியவர்கள், பணக்காரர்கள், ஏழைகள் என அனைவருக்கும் ஏற்ற உன்னதமான சமூக ஒழுங்குகள்குறித்து பெரும் பெரும் புத்தகங்களை எழுதியுள்ளார்கள்.

குறிப்பாக, பல்வேறு மதங்களைப் பின்பற்றி வாழக் கூடியவர்களி டையே நிகழும் போர், சமாதானம், பழிவாங்குதல் ஆகியவை தொடர் பாகவும் அத்தியாயம் பேசுகிறது. அவற்றில் ஒரு முஸ்லிம் பின்பற்றக் கூடிய வழிமுறையை அத்தியாயம் தெளிவுபடுத்துகிறது. இரவு, பகல் நிலைத்திருக்கும் வரை முஸ்லிம்கள் அந்த வழிமுறையைப் பின்பற்றிக் கொண்டே இருப்பார்கள்.

❖ ❖ ❖

அத்தியாயம் 5

# அல்மாயிதா

(உணவுத்தட்டுகள்)

*அல்மாயிதா என்ற பெயர் கொண்ட இந்த அத்தியாயம் அல்உகூது -ஒப்பந்தங்கள்- என்றும் அழைக்கப்படுகிறது. முதல் பெயரைவிட இரண்டாவது பெயரே அத்தியாயத்தின் கருப்பொருளைத் தெளிவாக அறிவிக்கக்கூடியது. முதல் பெயர் ஈசாவின் சீடர்கள் ஈசாவிடம் வானத் திலிருந்து ஒரு உணவுத்தட்டை இறக்குமாறு வேண்டியதை உணர்த்து கிறது. அதிலிருந்து அவர்கள் உண்ணவும் அதனைக் கொண்டு மகிழ்ச்சி யடையவும் அவர்கள் விரும்பினார்கள்.*

*உண்மையில் இது ஆச்சரியத்தை உண்டுபண்ணும் ஒரு கோரிக்கை தான். ஆனாலும், அல்லாஹ் தன் தூதரை வலுப்படுத்தும் பொருட்டு, அவருடைய தூதுத்துவத்தை உண்மைப்படுத்தும் பொருட்டு அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டான்.*

*உணவுத் தட்டு குறித்த சம்பவம் இந்த அத்தியாயத்தின் நான்கு வச னங்களை மட்டுமே கொண்டுள்ளது. ஒப்பந்தம்குறித்த விவகாரங்கள் அத்தியாயம் முழுமையும் பரவியுள்ளன.*

*இந்த அத்தியாயத்தில் ஏராளமான அழைப்புகள் காணப்படுகின்றன. பதினாறு இடங்களில் 'நம்பிக்கையாளர்களே' என்ற அழைப்பு இடம் பெற்றுள்ளது:*

- ❖ *நம்பிக்கையாளர்களே, ஒப்பந்தங்களை முழுமையாக நிறை வேற்றுங்கள் ...* (1)
- ❖ *நம்பிக்கையாளர்களே, அல்லாஹ்வின் சின்னங்களையும் புனித மான மாதங்களையும் ... அவமதிக்காதீர்கள் ...* (2)

- நம்பிக்கையாளர்களே, நீங்கள் தொழுகைக்குத் தயாரானால் உங்கள் முகங்களையும் முழங்கைகள்வரை உங்கள் கைகளை யும் கழுவிக்கொள்ளுங்கள் ... (6)

- நம்பிக்கையாளர்களே, அல்லாஹ்வுக்காக உறுதியானவர்களாக வும் நீதமாகச் சாட்சி கூறுபவர்களாகவும் ஆகிவிடுங்கள். (8)

- நம்பிக்கையாளர்களே, அல்லாஹ் உங்கள்மீது பொழிந்த அருட் கொடையை நினைத்துப்பாருங்கள். (11)

- நம்பிக்கையாளர்களே, அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அவனு டைய நெருக்கத்தைத் தேடுங்கள். (35)

- நம்பிக்கையாளர்களே, யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் நண்பர்களாக ஆக்கிக்கொள்ளாதீர்கள். (51)

- நம்பிக்கையாளர்களே, உங்களில் யாரேனும் தம் மார்க்கத்தை விட்டுத் திரும்பிவிட்டாரானால், அல்லாஹ் விரைவில் வேறொரு சமூகத்தினரைக் கொண்டுவருவான். அவன் அவர் களை நேசிப்பான். அவர்களும் அவனை நேசிப்பார்கள். (54)

- நம்பிக்கையாளர்களே, உங்களுக்கு முன்னர் வேதம் வழங்கப் பட்டவர்களில் உங்கள் மார்க்கத்தைப் பரிகாசமாகவும் விளை யாட்டாகவும் ஆக்கிக்கொண்டவர்களையும் நிராகரிப்பாளர் களையும் நீங்கள் நண்பர்களாக ஆக்கிக்கொள்ளாதீர்கள். (57)

- நம்பிக்கையாளர்களே, அல்லாஹ் உங்களுக்கு அனுமதித்த தூய பொருள்களைத் தடுக்கப்பட்டவையாக ஆக்கிக்கொள்ளாதீர் கள். (87)

- நம்பிக்கையாளர்களே, மது, சூதாட்டம், நடுகல், குறிபார்க்கும் அம்புகள் ஆகியவை அனைத்தும் ஷைத்தானின் அருவருக்கத் தக்க காரியங்களாகும். (90)

- நம்பிக்கையாளர்களே, உங்கள் கைகளுக்கும் ஈட்டிகளுக்கும் எட்டும் வகையில் இருக்கும் வேட்டையின் வாயிலாக அல்லாஹ் உங்களைச் சோதிப்பான். (94)

- நம்பிக்கையாளர்களே, நீங்கள் புனிதப் பயண இஹ்றாம் ஆடையில் இருக்கும்போது வேட்டையாடி விலங்குகளைக் கொல்லாதீர்கள். (95)

- ❖ நம்பிக்கையாளர்களே, சில விசயங்களைக் குறித்து கேள்வி கேட்காதீர்கள். அவை வெளிப்படுத்தப்பட்டால் உங்களுக்கு மனவருத்தத்தை உண்டாக்கும். (101)
- ❖ நம்பிக்கையாளர்களே, நீங்கள் உங்களைப் பற்றிக் கவலைப் படுங்கள். (105)
- ❖ நம்பிக்கையாளர்களே, உங்களில் யாருக்கேனும் மரண வேளை நெருங்கிவிட்டால் மரண சாசனம் செய்யும்போது உங்களி லிருந்து நம்பிக்கைக்குரிய இரு சாட்சிகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். (106)

இரண்டு இடங்களில் நபியவர்கள் 'தூதரே' என்ற தூதுத்துவப் பண்பால் அழைக்கப்படுகிறார்கள்:

- ❖ தூதரே, நிராகரிப்பின் பாதையில் விரைந்துசெல்வோர் உம்மைக் கவலையில் ஆழ்த்திவிட வேண்டாம். (41)
- ❖ தூதரே, உம் இறைவனிடமிருந்து உமக்கு அருளப்பட்டதை எடுத்துரைத்துவிடுவீராக ... (67)

ஐந்து இடங்களில் வேதக்காரர்கள் அழைக்கப்படுகிறார்கள். அவற்றில் சில நேரடியானவை. சில இடங்களில் தூதரின் வாயிலாக அழைக்கப்படு கிறார்கள்:

- ❖ வேதக்காரர்களே, நாங்கள் அல்லாஹ்வின் மீதும் எங்களுக்கு அருளப்பட்டதன் மீதும் எங்களுக்கு முன்னர் அருளப்பட்டதன் மீதும் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்பதற்காகவா எங்களை வெறுக்கிறீர்கள்? (59)
- ❖ வேதக்காரர்களே, உங்கள் மார்க்கத்தில் மிகைப்படுத்தி விடா தீர்கள் ... (77)
- ❖ வேதக்காரர்களே, நீங்கள் தவ்றாத்தையும் இன்ஜீலையும் உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு அருளப்பட்டதையும் பின் பற்றும்வரை நீங்கள் எந்த ஒன்றிலும் இல்லை. (68)

இந்த அழைப்புகளைத் தொடர்ந்து, சமூகம் அல்லாஹ்வின் மார்க்கத் தில் நிலைபெற அவசியமான அறிவுரைகள், போதனைகள், தெளிவுரை கள், பலன்கள் ஆகியவை இடம்பெறுகின்றன.

அவற்றை நிறைவேற்றப்பட வேண்டிய உண்மையான ஒப்பந்தங்களாக இறைவன் கணக்கிட்டுள்ளான்.

நீங்கள் கவனிக்கவில்லையா? ஜிஹாது என்பது அல்லாஹ்வுக்கும் அடியார்களுக்கும் மத்தியில் நடைபெறும் ஒப்பந்தம் என்பதை: 'நிச்சயமாக அல்லாஹ் நம்பிக்கையாளர்களின் உயிர்களையும் செல்வங்களையும் சுவனத்திற்குப் பகரமாக விலைக்கு வாங்கிக்கொண்டான் ... (9:111)'

இந்த அத்தியாயத்தில் தொழுகைக்கு முன்னால் வுளூசெய்வதற்காக நம்பிக்கையாளர்கள் அழைக்கப்படுகிறார்கள். தொழுகைதான் இஸ்றாயீலின் மக்களிடம் பெறப்பட்ட முதல் ஒப்பந்தம்.

இஸ்லாமியச் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான சில அறிவுரைகளை அளித்த பிறகு அல்லாஹ் கூறுகிறான்:

> அல்லாஹ் உங்கள்மீது பொழிந்த அருட்கொடையையும் உங்களிடம் அவன் பெற்ற வாக்குறுதியையும் நினைவுகூருங்கள். அப்போது நீங்கள் 'கேட்டோம், கீழ்ப்படிந்தோம்.' என்று கூறினீர்கள். அல்லாஹ்வை அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உள்ளங்களில் உள்ளவற்றையும் நன்கறிந்தவனாக இருக்கிறான். (7)

வலுவான தொடர்புகள் உறுதியான நிலைப்பாட்டையும் செயலையும் வேண்டிநிற்கின்றன. ஒரு கவிஞரின் இந்தக் கவிதையைக் கவனித்துப் பாருங்கள்:

> இல்லை, அழகான பெண்ணின் அன்பை நான் வெளிப்படுத்த மாட்டேன். அவள் என்னிடம் வாக்குறுதிகளை, ஒப்பந்தங்களைப் பெற்றிருக்கிறாள்.

காதலர்களிடையே உள்ள தொடர்பு வாக்குறுதியாக, ஒப்பந்தமாக மாறிவிடுகிறது. அவ்வாறெனில் அடியானுக்கும் அவனது எஜமானனுக்கும், மனிதனுக்கும் அவனது படைப்பாளனுக்கும் மத்தியில் உள்ள தொடர்பு எப்படி ஒப்பந்தமாக மாறாமல் இருக்கும்? ஒவ்வொருவரும் அவர்கள் சம்பாதித்தவற்றின் அடிப்படையில் கூலி கொடுக்கப்படுவார்கள்.

அல்லாஹ்வின் கட்டளையை மதிப்பது ஈமானின் அடையாளங்களில் ஒன்றாகும். இவையனைத்தும் அல்உகூது -ஒப்பந்தங்கள்- என்று இந்த அத்தியாயம் பெயரிடப்படுவதற்கான காரணங்களாகும்.

அல்லாஹ் முஸ்லிம் சமூகத்திடம், தன்னை மட்டுமே நம்ப வேண்டும் என்றும் தன்னுடைய கட்டளைப்படியே செயல்பட வேண்டும் என்றும் தன் மார்க்கத்தின் பக்கம் அழைப்பு விடுக்க வேண்டும் என்றும் மக்கள் அதனிடமிருந்து இவ்வுலக, மறுவுலக நன்மைகளைக் கற்றுக்கொள்ளும் வகையில் அது சிறந்த முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என்றும் வாக்குறுதி வாங்கியுள்ளான்.

இந்த விசயத்தில் முஸ்லிம்களிடம் மட்டுமே இவ்வாறு வாக்குறுதி வாங்கப்படவில்லை. அவர்களுக்கு முன்னர் வாழ்ந்தவர்களிடமும் அல்லாஹ் இவ்வாறான வாக்குறுதிகளை வாங்கினான். அவனுடைய மார்க்கத்தைப் பின்பற்ற வேண்டும் என்றும் அவன் கட்டளையிட்ட படியே வாழ வேண்டும் என்றும் அவர்களிடம் உறுதிமொழி வாங்கப் பட்டது. அல்லாஹ் கூறுகிறான்:

> அல்லாஹ் இஸ்றாயீலின் மக்களிடம் உறுதிமொழி வாங்கினான். நாம் அவர்களில் பன்னிரெண்டு தலைவர்களை நியமித்தோம். அல்லாஹ் அவர்களிடம் கூறினான், 'நான் உங்களுடன் இருக்கி றேன், நீங்கள் தொழுகையைக் கடைப்பிடித்து, ஸகாத்தை வழங்கி, என் தூதர்களின் மீது நம்பிக்கை கொண்டு அவர்களுக்கு உதவியும் புரிந்து, அல்லாஹ்வுக்கு அழகிய கடனும் அளித்துவருவீர்களாயின் நான் உங்கள் பாவங்களைப் போக்கி சுவனச் சோலைகளில் உங் களை நுழையச்செய்வேன். அவற்றில் ஆறுகள் ஓடிக்கொண்டி ருக்கும். உங்களில் இதற்குப் பின்னரும் நிராகரிப்பவர் நேர்வழியை விட்டுப் பிறழ்ந்தவராவார்.' (12)

இஸ்றாயீலின் மக்கள் இந்த உறுதிமொழியை நிறைவேற்றவில்லை. மாறாக, மீறினார்கள். அவர்களின் வாரிசுகளும் தொடந்து மீறிக்கொண்டே இருந்தார்கள். ஆகவே, அல்லாஹ் அவர்களைச் சபித்து அவர்களின் உள்ளங்களைக் கடினமானவையாக ஆக்கிவிட்டான்.

கடினமான உள்ளம் அல்லாஹ்வைவிட்டுத் தூரமாகவே இருக்கும். உண்மையாகவே மார்க்கத்தைப் பின்பற்றுபவர்கள் மென்மையான உள்ளத்தைப் பெற்றிருப்பதையும் பின்பற்றுவதைப் போலத் தங்களைக் காட்டிக்கொள்பவர்கள் கடினமான உள்ளத்தைப் பெற்றிருப்பதையும் நான் அனுபவத்தில் கண்டிருக்கிறேன்.

சில மனிதர்கள் கடினமான இயல்புடையவர்களாகவே இருக்கிறார்கள். அவர்கள் நிறைவேற்றும் வணக்க வழிபாடுகள்கூட அவர்களிடம் மென் மையை ஏற்படுத்துவதில்லை. அவர்களில் ஒருவருடன் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தைக் கூறுகிறேன். என் விசயத்தில் அவர் தவறிழைத்து விட் டார். பின்னர், தான் தவறிழைத்துவிட்டேன் என்ற உண்மையை அறிந்துகொண்டார். ஆனாலும் அவர் மன்னிப்பு கேட்பதை வெறுத்தார். உண்மையை அறியாமல் இருந்திருக்க வேண்டுமே என்று ஆசைப் பட்டார். இவையே ஃகவாரிஜ்களின் சில பண்புகள். அவர்கள் நம் பிக்கையாளர்களை வெறுக்கிறார்கள். நிராகரிப்பாளர்களுடன் மென் மையாக நடந்துகொள்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஒரு மனிதரைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவர் அலீ இப்னு அபீதாலிபைக் கொல்வதில்தான் இவ்வுலக, மறுவுலக நன்மை இருக்கின்றன, அதன் மூலம் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறலாம் என்று எண்ணி அவரைக் கொன்றுவிடுகிறார்!

வாஸில் இப்னு அதாவும் அவருடன் இருந்தவர்களும் ஃகவாரிஜ்களிடம் மாட்டிக்கொண்டபோது தங்களை ஏன் இணைவைப்பாளர்கள் என்று கூறினார்கள் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். அவர்கள் ஃகவாரிஜ்களின் ஒரு கூட்டத்திடம் மாட்டிக்கொண்டபோது அந்த ஃகவாரிஜ்கள் இவர்களின் மார்க்கம்குறித்து கேள்வி எழுப்பினார்கள். உண்மையில் இவர்கள் முஸ்லிம்கள் என்பதை ஃகவாரிஜ்கள் அறிந்து கொண்டிருந்தால் கொன்றிருப்பார்கள்.

அவர்கள் கூறினார்கள், 'நாங்கள் பாதுகாப்பு கோரும் இணைவைப்பாளர்கள்.' அந்த ஃகவாரிஜ்கள் பின்வரும் வசனத்துக்கேற்ப அவர்களுடன் நடந்துகொண்டார்கள்: 'இணைவைப்பாளர்களில் யாரேனும் உம்மிடம் பாதுகாப்பு கோரினால் அவர் அல்லாஹ்வின் வாக்கைச் செவியுறும் பொருட்டு அவருக்குப் பாதுகாப்பளிப்பீராக. பின்னர், பாதுகாப்பான அவரது இடத்தில் அவரைச் சேர்த்துவிடுவீராக ... (9:6)'

இறுகிய உள்ளம் அல்லாஹ்வின் சாபத்தின் அடையாளம். நாம் அதனை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் கோருகிறோம்.

மனிதர்களில் யூதர்களே இறுகிய உள்ளங்களைக் கொண்டவர்கள். அவர்களின் இயல்பில் காணப்படும் இந்த இறுக்கத்தைப் பல சமூகங்கள் அனுபவபூர்வமாக உணர்ந்திருக்கின்றன. அவர்களின் பண்புகளுக்கு ஒப்பாக ஆகிவிடுவதைவிட்டும் நாம் முஸ்லிம்களை எச்சரிக்கிறோம். அவர்களின் மார்க்கத்தில் எந்த நன்மையும் இல்லை: 'அவர்களில் சிலரைத் தவிர மற்றவர்களிடம் நீர் துரோகத்தைக் கண்டுகொண்டே இருப்பீர். (13)'

ஆச்சரியமான விசயம் என்னவென்றால், அல்லாஹ் இந்த அறிவுரையைப் பின்வரும் வாசகத்தோடு முடித்துள்ளான்: 'அவர்களை மன்னித்து, கண்டுகொள்ளாமல் விட்டுவிடுவீராக. அல்லாஹ் நன்மைசெய்வோரை நேசிக்கிறான். (13)'

அல்லாஹ் யூதர்களிடம் உறுதிமொழி வாங்கியதைப் போலக் கிறிஸ்தவர்களிடமும் உறுதிமொழி வாங்கினான். இதுகுறித்து வந்துள்ள பின்வரும் சொல்லாடல் கவனத்தைத் தூண்டுகிறது. ஏனெனில், அது பிற்காலத்தில் வந்த கிறிஸ்தவர்களுக்கும் ஈசா மற்றும் ஈசாவின் சீடர்களுக்குமிடையே காணப்படும் தூரத்தைச் சுட்டிக்காட்டுகிறது:

நாங்கள் கிறிஸ்தவர்கள் என்று தங்களைத்தாங்களே கூறியவர்களிடமும் நாம் உறுதிமொழி வாங்கினோம். அவர்களும் தங்களுக்கு வழங்கப்பட்ட அறிவுரைகளில் பெரும் பகுதியை மறந்துவிட்டார்கள். ஆகவே, நாம் அவர்களிடையே பகைமையையும் வெறுப்பையும் மறுமைநாள்வரை உண்டாக்கிவிட்டோம். அவர்கள் செய்துகொண்டிருந்தவற்றைப் பற்றி அல்லாஹ் அவர்களுக்கு அறிவிப்பான். (14)

அவர்களிடையே, அவர்களின் சர்ச்சுகளிடையே காணப்பட்ட பகைமைக்கும் வெறுப்புக்கும் அவர்களின் வரலாறே சாட்சி.

மதத்தின் காரணமாக நடைபெற்ற போர்கள் தம் முற்றத்தை இரத்தத்தால் நிரப்பின என்பதை ஐரோப்பா ஒருபோதும் மறக்க முடியாது. அந்தப் போர்கள் ஏற்படுத்திய உயிர்ச்சேதங்களும் விளைவுகளும் பாரதூரமானவை. இன்றுவரை வெறுப்பு அவர்களின் உள்ளங்களில் புகைந்துகொண்டுதான் இருக்கிறது. அவர்களின் மதத்தை மிகைத்து நாட்டில் ஆதிக்கம் கொண்டுள்ள மதச்சார்பற்ற தன்மையே அதனை மறைத்து வைத்துள்ளது.

இந்தச் சமாதானம் தற்காலிகமானதே. காரணங்கள் நிலைத்திருக்கும் வரை பகைமைத் தீ மீண்டும் மீண்டும் மூண்டுகொண்டுதான் இருக்கும். அதைத்தான் இந்த வசனம் சுட்டிக்காட்டுகிறது.

இஸ்லாத்தின் மூலமாகவே அமைதி நிலைபெற முடியும். இறைவனைக் குறித்த உண்மைக் கொள்கையால் நிரம்பியுள்ள உள்ளங்களே பிறருக்குத் தீங்கிழைக்காமல், அநீதி இழைக்காமல் தம்மைக் காத்துக் கொள்ளும்.

இதுதான் சமூகத்தை விழிப்படையச் செய்யும் இந்த வசனத்தின் பொருள்:

நிச்சயமாக உங்களிடம் அல்லாஹ்விடமிருந்து ஓர் ஒளியும் தெளிவுபடுத்தும் வேதமும் வந்துவிட்டன. அதனைக் கொண்டு அல்லாஹ் அவனது திருப்தியைத் தேடுவோருக்கு அமைதிக்கான வழிகளைக் காட்டுகிறான். அவன் தன் அருளால் அவர்களை இருள்களிலிருந்து வெளியேற்றி வெளிச்சத்தின் பக்கம் கொண்டு வருகிறான். அவன் அவர்களுக்கு நேரான வழியையும் காட்டுகிறான். (15)

சத்தியத்தைக் கொண்டே தவிர சமூகங்களை ஒன்றிணைக்க முடியாது.

❖ ❖ ❖

அல்லாஹ் ஒருவனையே வணங்குவது அடியார்கள்மீது இருக்கின்ற மிகப்பெரிய ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தத்தை மீற அடியார்களில் யாருக்கும் உரிமை இல்லை.

ஆனாலும் சிலர் தந்தை யாரென்று அறியாத அல்லது அவரைக் குறித்து பிழையாக, மோசமாக அறிந்த சிறுவர்களைப் போன்றே இருக்கிறார்கள். அல்லாஹ்வுடன் வேறு இறைவனும் இருக்கிறான் என்று நம்புபவர்கள் இந்த வகையைச் சார்ந்தவர்கள்.

தங்களை விண்ணுலக மார்க்கத்துக்குச் சொந்தக்காரர்கள் என்று கூறுவோர் தங்களை ஏகத்துவவாதிகள் என்று கூறிக்கொள்கிறார்கள். கிறிஸ்தவர்கள் ஈசாவைக் குறித்து கொண்டுள்ள கொள்கைகள் ஏகத்துவத்துக்கு எதிரானவை. ஆனாலும், அவர்கள் அல்லாஹ்வை மட்டும் வணங்குவதாகக் கூறிக்கொள்கிறார்கள். அவ்வாறெனில் ஈசாவைக் குறித்து அவர்களின் நிலைப்பாடு என்ன?

ஆய்வில் அல்லாஹ் ஒருவனை மட்டும் ஏக இறைவனாக ஏற்கிற கொள்கை நிலைப்பாடு சர்வ மாந்தர் மீதும் எடுத்துக்கொள்ளப்பட்ட மகோன்னத உடன்படிக்கை. அல்லாது மனித குலத்தார் அதனை முறித்துக் கொள்வதற்கோ, எதிர்த்துக் கிளர்ந்து வெளியேறுவதற்கோ உரியதல்ல.

வான்மறை வேதங்களின் சொந்தக்காரர்கள் தங்களை ஏகத்துவவாதிகளென்றே உறுதிசெய்கிறார்கள் யதார்த்தத்தில் கிறிஸ்தவர்களின் ஈஸா குறித்த நிலைப்பாடு தெளிவற்றது. மூடுபனிக்குள் அகப்பட்டது போல மிகவும் மங்கலானது. அவர்கள் சொல்வது போலவே அல்லாஹ் ஒருவனுக்கே கட்டுப்பட்டு வணக்கம் செலுத்துகிறார்கள் எனின் இந்த வணக்கத்தில் ஈஸாவுக்கு என்ன இடம் இருக்கிறது?

உண்மையில் ஆய்ந்து நோக்கின், அடிபணிந்து வணங்கப்படுகிற ஒருவனோடு இயேஸூவும் செருகப்பட்டிருக்கிறார் போலவும், அல்லது இயேஸூவுக்கென மிகச்சரியாக வரையறுத்துச் சொல்ல முடியாத அதிமேதகு அந்தஸ்த்து நிலையொன்றுள்ளது போலவுமே தெரிகிறது.

இப்போதெல்லாம் நாம், பாதிரியார்கள் 'அல்லாஹ் ஒருவனே' என்று கூறுவதைச் செவியுறுகிறோம். தங்களின் கூற்றில் அவர்கள் உண்மையாளர்களாக இருந்தால் ஈசாவை ஓர் அடியாராகவே கருதுவார்கள்.

இந்த விசயம்தான் என்னை முனைவர் முஹம்மது மஃறூஃப் தவாலிபியின் பேச்சைக் கவனிக்க வைத்தது. அவர் கிறிஸ்தவத் தலைமையிடமான வாடிகனிடமிருந்து 'ஈசாவுக்கு இறைத்தன்மை இல்லை, அவர்

ஓர் அல்லாஹ்வின் அடியார்தாம்.' என்று கூறக்கூடிய அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டதாகவும் அது தம்மிடம் இருப்பதாகவும் கூறுகிறார்.

நம்பகமானவர்களைக் கொண்டு நான்கு வருடங்கள் முழுமையாக ஆய்வுசெய்தபிறகே இந்த அறிக்கையை வாடிகன் வெளியிட்டது.

அந்த அறிக்கையில் ஈசாவுக்கு இறைத்தன்மை இல்லை என்பதைத் தெளிவுபடுத்தும் பல போதனைகள் இடம்பெற்றிருக்கின்றன. வானங்கள், பூமியையைப் படைத்தவன் இப்றாஹீமின் இறைவன் அல்லாஹ் என்றே அதில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

ஆச்சரியமான ஒரு விசயம் என்னவென்றால், அதில் திருச்சபை இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராகத் தாம் பெரும் அநீதி இழைத்துவிட்டதாக ஒத்துக்கொண்டுள்ளது. இந்த நாள்களில் இஸ்லாத்தோடு இணைந்துவிடுவது அவசியம் எனவும் அது கூறியுள்ளது.

அதே போன்று, சிலுவைப் போர்கள்குறித்தும் காலனித்துவ ஆக்கிரமிப்புகள்குறித்தும் திருச்சபை தன்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துள்ளது.

அதுதான் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் அழிக்கும் பொருட்டு இஸ்றேல் என்னும் நாட்டை உருவாக்கியது. கடந்த காலத் தவறுக்குப் பரிகாரமாகக் கிறிஸ்தவர்கள் அறபுகளுக்கும் முஸ்லிம்களுக்கும் உதவ வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

முனைவர் தவாலிபி கூறுகிறார்: யூதர்கள் தங்களின் பல்வேறு வழிமுறைகளைக் கொண்டு அந்த அறிக்கையை வெளியிடவிடாமல் செய்தனர். அமெரிக்க உளவுத்துறைத் தலைவராக இருந்த ஜே, கடிதம் ஒன்றில் யூதர்கள் செய்தவற்றையெல்லாம் அம்பலப்படுத்தினார். ஆகவே, அவர்கள் அவரையும் அவரது மனைவி, பிள்ளைகளையும் கடத்தினார்கள்...

நாம் வாசகர்களுக்கு நினைவூட்டுகிறோம், மர்யமின் மகன் ஈசாகுறித்து கிறிஸ்தவர்கள் குழப்பமான நிலைப்பாட்டையே கொண்டுள்ளார்கள். அந்நிசா என்ற அத்தியாயத்தின் பின்வரும் வசனம் இதனையே சுட்டிக் காட்டுகிறது:

வெறும் யூகத்தைத் தவிர அவர்களிடம் வேறு அறிவு இல்லை.
உறுதியாக அவர்கள் அவரைக் கொலைசெய்யவில்லை. (157)

அல்லாஹ்தான் உண்மையாளன். அவர்களின் இந்தக் கூற்றுதான் அவனுடைய கோபத்தைப் பெற்றுத்தந்தது:

மர்யமின் மகன் மசீஹ்தான் இறைவன் என்று கூறியவர்கள் உறுதியாக நிராகரித்துவிட்டார்கள். நீர் கூறும், மர்யமின் மகன் மசீஹையும் அவரது தாயையும் இன்னும் பூமியில் உள்ள அனைவரையும் அல்லாஹ் அழித்துவிட நாடினால் அதனை யாரால் தடுக்க முடியும்? ... (17)

யூதர்கள் திரித்துவத்தை நிராகரித்தாலும் அல்லாஹ்வை மட்டமான, மோசமான பண்புகளால் வர்ணிக்கிறார்கள். அவனைக் குறித்து வரம்பு மீறிப் பேசுகிறார்கள். அவர்களின் உள்ளத்தில் தூய்மையோ இறையச்சமோ எதுவும் இல்லை.

இருந்தும் தாங்கள்தாம் அல்லாஹ்வினால் தேர்ந்தெடுக்கப்பட்ட சமூகத்தினர் என்றும் தங்களுக்காகத்தான் அவன் இந்த உலகத்தையே படைத்தான் என்றும் கூறிக்கொள்கிறார்கள். வேதக்காரர்களான இந்த இரு பிரிவினரும் தங்களுடன் அல்லாஹ் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொண்டுள்ளதாகவும் தாங்கள் அவனிடம் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளதாகவும் வாதிடுகிறார்கள். ஒரு கவிஞர் கூறுகிறார்:

‘ஒவ்வொருவரும் லைலா தம்மையே நேசிக்கிறாள் என்று
வாதிடு கிறார்கள். ஆனால், லைலாவுக்கோ அவர்களைக்
குறித்து எதுவும் தெரியாது.’

உண்மையான ஈமானும் நற்செயலுமே உயர்ந்தோனாகிய அல்லாஹ் ஏற்றுக்கொள்ளும் அடிப்படையான அம்சங்கள் என்பதை நாம் அறிவோம். இந்த இரண்டின் மூலமாகவே தனிமனிதர்களும் சமூகங்களும் உயர்வடைகிறார்கள். ஆகவே, மற்ற சமூகங்களைவிட இஸ்லாமியச் சமூகத்தைச் சிறப்பித்துக் கூறும் புஸைரியின் பின்வரும் கூற்று எனக்கு எந்த வியப்பையும் ஏற்படுத்தவில்லை: ‘படைப்புகளில் சிறந்தவரான எங்களின் அழைப்பாளரைத் தனக்குக் கட்டுப்படுமாறு அல்லாஹ் அழைத்தபோது நாங்கள் எல்லாச் சமூகங்களைவிடவும் மிகச் சிறந்த சமூகத்தினராக இருந்தோம்.’

அல்லாஹ்வை மட்டுமே வணங்குவதன் மூலம், அவனுக்கு மட்டுமே கட்டுப்படுவதன் மூலம், அவனுக்கு உதவிசெய்து அவன் எதிரிகளுக்கு எதிராகப் போரிடுவதன் மூலம் முஸ்லிம்கள் கண்ணியமடைகிறார்கள்.

படைப்புகளில் மிகச் சிறந்தவரான முஹம்மது நபி (ஸல்) அவர்களுடன், செயல்படாமல் வெறுமனே இணைத்துக்கொள்வதால் எந்தப் பயனும் இல்லை.

*அல்மாயிதா என்ற இந்த அத்தியாயம் இரண்டு வரலாறுகளை எடுத்துரைக்கிறது. சான்றுகளைக் கொண்டு வலுப்படுத்தாமல் வெறுமனே வாதிடுபவர்களுக்கு எந்த மதிப்பும் இல்லை என்பதை அந்தச் சம்பவங்கள் தெளிவுபடுத்துகின்றன. முதல் சம்பவம் இஸ்றாயீலின் மக்களுடையது. கொடுங்கோலர்களை எதிர்த்துப் போரிட்டுப் புனித பூமியில் நுழைய வேண்டும் என்று அவர்கள் கட்டளையிடப்பட்டபோது மூசா அவர்களுக்கு ஆர்வமூட்டினார், அவர்கள்மீது அல்லாஹ் பொழிந்த அருட்கொடைகளை நினைவூட்டினார்:*

> *'என் சமூகமே, அல்லாஹ் உங்கள்மீது பொழிந்த அருட்கொடையை நினைவுகூருங்கள். அவன் உங்களிடையே தூதர்களைத் தோற்றுவித்து உங்களை அரசர்களாகவும் ஆக்கினான். படைப்புகளில் யாருக்கும் வழங்காததை எல்லாம் அவன் உங்களுக்கு வழங்கினான்.'* (20)

*இது விளக்கத்தை வேண்டும் வசனமாகும். சிலை வழிபாட்டாளர்களுக்கு மத்தியில் ஓரிறைக் கொள்கையின் பக்கம் மக்களை அழைக்கக் கூடிய பொறுப்பு இஸ்றாயீலின் மக்களுக்கு வழங்கப்பட்டது. அவர்களுக்கு வழங்கப்பட்ட இந்தப் பொறுப்பின் மூலம் அவர்கள் மற்றவர்களைவிட உயர்வானவர்களாக இருந்தார்கள். அல்லாஹ் அறபுகளுக்கு அனுப்பிய தூதர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். ஆனால், இஸ்றாயீலின் மக்களின் பக்கம் அவன் ஏராளமான தூதர்களை அனுப்பினான்.*

*அவர்கள் அரசர்களாக ஆக்கப்பட்டார்கள் என்பதன் பொருள், அவர்களுக்குப் போதுமான, தன்னிறைவான செல்வம் வழங்கப்பட்டது என்பதாகும். எனது இந்த விளக்கம் பின்வரும் நபிமொழியின் அடிப்படையில் அமைந்ததாகும்: 'யார் மனதில் பயமின்றி, உடல் ஆரோக்கியத்துடன் அந்த நாளுக்குத் தேவையான உணவையும் பெற்றவராகக் காலைப்பொழுதை அடைகிறாரோ அவர் இவ்வுலகத்தை முழுமையாகப் பெற்றவராவார்.'*

*ஆனால், இஸ்றாயீலின் மக்கள் தாங்கள் அழைப்புப் பணியைக் கொண்டு சிறப்பிக்கப்பட்டதாக எண்ணிக்கொள்ளவில்லை. மாறாக, தங்களைக் கொண்டு அழைப்புப் பணி சிறப்பிக்கப்பட்டுள்ளதாக எண்ணிக்கொண்டனர். தாங்கள் இந்த மார்க்கத்தை அழுக்குகளால் களங்கப்படுத்தினாலும் தாங்கள் அல்லாஹ்விடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாகவே இருப்போம் என்று அவர்கள் எண்ணினார்கள்.*

*ஆனால், நியாயமான விதி அவர்களின் சிறப்பைப் போக்கியது. அவர்களின் கோழைத்தனம் வெளிப்பட்டவுடன் அவர்கள் விரட்டப்படுவதும் உறுதியானது. மூசா அவர்களிடம் கூறினார்: 'என் சமூகமே, அல்லாஹ்*

உங்களுக்கு விதித்த புனிதமான பூமியில் நுழைந்துவிடுங்கள். புறங்காட்டி ஓடிவிடாதீர்கள். இழப்புக்கு ஆளாகிவிடுவீர்கள். (21)'

ஆனால், அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்தார்கள். அவர்களின் திமிர்த்தனம் உச்சத்தை அடைந்தது. அவர்கள் மூசாவிடம் கூறினார்கள்: 'நீரும் உம் இறைவனும் சென்று போரிடுங்கள். நாங்கள் இங்கே அமர்ந்திருக்கிறோம். (24)'

அல்லாஹ் அவர்களைப் பாலைவனத்தில் சிக்கச்செய்தான். நாற்பது வருடங்கள்வரை அங்கிருந்து வெளியேறும் வழி தெரியாமல் அவர்கள் அங்கு தடுமாறித்திரிந்தார்கள். அதனால் அவர்களில் பலர் அழிந்தார்கள்.

யாருடைய பண்புகள் சீர்பெற்றனவோ அவர்களே அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகவும் தூதுத்துவப் பொறுப்பைச் சுமப்பதற்காகவும் நிலைத்திருந்தார்கள்.

இந்த முதல் சம்பவம், மார்க்கம் என்பது வீரமும் நேர்மையும் ஈமானும் ஆகும் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

இரண்டாவது சம்பவம், ஆதமின் இரு மகன்களுடைய சம்பவம். அவர்களில் ஒருவரை இன்னொருவர் கொன்றுவிட்டார். அவர்களில் ஒருவர் மூடராகவும் பலவீனமானவராகவும் இருந்தார். அவர் தம்மை விடச் சிறந்தவரான தம் சகோதரரைக் கொன்றுவிட்டார்.

இந்த மனிதனின் வாழ்க்கையில் காணப்படும் முரண்பாடு தெளிவானது. தன் சகோதரர்தான் சிறந்தவர் என்பதை அவன் நன்கறிந்திருந்தான். ஆனால், அவரைக் கொன்றபிறகு அவரை எப்படிப் புதைப்பது என்று அவனுக்குத் தெரியவில்லை.

இங்கு அவன் மூடனாகவும் அங்கு அவன் புத்திசாலியாகவும் இருந்தான்:

> அல்லாஹ் ஒரு காகத்தை அனுப்பிவைத்தான். தன் சகோதரனின் சடலத்தைப் பூமியில் எவ்வாறு புதைப்பது என்பதை அவனுக்குக் கற்றுக்கொடுப்பதற்காக அது பூமியில் தோண்டிற்று. 'அந்தோ! நான் இந்தக் காகத்தைப் போல்கூட இல்லாமல் ஆகிவிட்டேனே! அப்படி இருந்திருந்தால் என் சகோதரனின் சடலத்தை நான் மறைத்திருப்பேனே!' என்று புலம்பி அவன் வருத்தப்பட்டான். (31)

தோல்வியடைந்தவன், தான் வெற்றிபெற்றவனைக் கொன்றுவிட்டால் புதிய ஆற்றலைப் பெற்றுவிடலாம் என்று எண்ணுகிறான். இது சாத்திய

மற்றது. உங்களால் ஒருவரைக் கொன்று உங்களின் திறமையை வளர்த்துக்கொள்ள முடியாது. எப்படி இருந்தீர்களோ அப்படியே இருப்பீர்கள்.

நேர்மை என்பது மனிதனின் உள்ளத்தைப் பலப்படுத்தும், தூய்மைப் படுத்தும் நேர்மறையான முயற்சி. அது பகைமைக்கு எதிரான ஆற்றல் அல்ல. 'இறையச்சமுடையோரிடமிருந்துதான் அல்லாஹ் ஏற்றுக்கொள்கிறான். (27)' அல்லாஹ் இந்தக் குற்றத்தைத் தனிப்பட்ட குற்றமாக அல்லாமல் மனிதச் சமூகத்துக்கு எதிரான குற்றமாகக் கருதுகிறான்:

> யார் கொலைக்குப் பகரமாகவோ பூமியில் கலகம் விளைவித்த காரணத்துக்காகவோ அன்றி ஒருவரைக் கொலைசெய்கிறாரோ அவர் மனிதர்கள் அனைவரையும் கொன்றவரைப் போல் ஆவார். யார் ஒருவரை வாழவைக்கிறாரோ அவர் மனிதர்கள் அனைவரையும் வாழவைத்தவரைப் போல் ஆவார். (32)

திருக்குர்ஆன் முந்தைய காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களைப் பாடங்களாக்கி முஸ்லிம்களைப் பண்படுத்துகிறது. முந்தைய சமூகங்கள் செய்த தவறுகளிலிருந்து அவர்களைப் பாதுகாக்கும் வகையில் அவர்களுக்குச் சட்டங்களை வழங்குகிறது. ஆகவேதான், அது இந்தச் சம்பவத்துக்குப் பிறகு பூமியில் குழப்பம்செய்தோரின், வரம்புமீறியோரின் விளைவை நினைவூட்டுகிறது.

கொள்ளையடித்தல் மற்றும் திருட்டுக் குற்றத்துக்கான தண்டனையை விதிக்கிறது. இரண்டு சட்டங்களுக்கிடையே இறையச்சத்தின் அவசியம் குறித்து எச்சரிக்கைசெய்கிறது.

ஆதமுடைய தோல்வியடைந்த மகன் உள்ளத்தில் இறையச்சம் இல்லாததனால் அழிந்துபோனான். ஆகவே, நம்பிக்கையாளர்கள் இந்தத் தீய விளைவிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள வேண்டும்: 'நம்பிக்கையாளர்களே, அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அவனுடைய நெருக்கத்தைத் தேடுங்கள். அவனுடைய பாதையில் ஜிஹாது செய்யுங்கள். அதனால் நீங்கள் வெற்றியடையலாம். (35)'

நற்செயல்களின் மூலமே இறை நெருக்கத்தைப் பெற முடியும். நற்செயல் செய்வதற்குத் தடைகளை மிகைக்கும் அளவுக்கு, உயிரையும் விலையுயர்ந்த பொருளையும் துச்சமென மதிக்கும் அளவுக்கு உறுதியைப் பெற்றிருக்க வேண்டும். இதுதான் வெற்றியின் பக்கம் இட்டுச்செல்லும் ஜிஹாதாகும்.

❖ ❖ ❖

வணக்க வழிபாடுகள், வாரிசுரிமைச் சட்டங்கள், குற்றவியல் மற்றும் பழிவாங்குதல் தொடர்பான சட்டங்கள் ஆகியவற்றுக்கு இறை வஹீயே தனித்துவமான ஒரே மூலமாகும். எந்த ஒருவரின் கருத்துக்கும் ஆய்வுக்கும் ஆலோசனைக்கும் இவற்றில் இடம் இல்லை.

வாழையடி வாழையாக வரக்கூடிய நம்பிக்கையாளர்கள் இந்த உண்மையைச் சொத்தாகப் பெற்றுக்கொள்கிறார்கள். ஆனாலும், அவர்கள் சில சமயங்களில் இச்சைகளின் ஆதிக்கத்தால், கீழ்ப்படியும் தன்மையின் பலவீனத்தால் அதனைவிட்டும் விலகிச்செல்கிறார்கள்.

கொலை, கொள்ளை, திருட்டு, விபச்சாரம், மானம் தொடர்பானவை ஆகிய குற்றங்கள் சமூகத்தில் பெரும் விளைவுகளை ஏற்படுத்தக்கூடியவை. ஆகவேதான், அவற்றுக்குத் தண்டனையை நிர்ணயிக்கும் பொறுப்பை அல்லாஹ் ஏற்றுக்கொண்டான். அவற்றை யாருடைய ஆய்வுக்கும் அவன் விட்டுவிடவில்லை. ஏனெனில், மனிதர்கள் அவசியமானவற்றைச் செயல்படுத்துவதில் தவறிழைக்கலாம். தேவையற்ற ஆதாரங்களை உருவாக்கித் தந்திரமாக அவற்றை விட்டுவிடலாம்.

மனிதர்கள் ஒரு குற்றத்துக்கான சட்டத்தை இயற்றும்போது குற்றவாளியின் இடத்திலிருந்தே யோசிக்கிறார்கள். அது சத்தியத்துக்காக அவர்கள் கொள்ள வேண்டிய ரோஷத்தைப் போக்கிவிடுகிறது. அவர்கள் தங்களைக் குற்றவாளிகளின் இடத்தில் வைக்காவிட்டாலும் அந்த இடத்தில் தங்களின் உறவினர்களும் நண்பர்களும் இருப்பதாக எண்ணிக் கொண்டு சிந்திக்கிறார்கள். அதனால்தான் அவர்கள் குற்றவாளிகளின் மீது இரக்கம் காட்டி, தண்டனையைக் குறைப்பதில் முனைப்பு காட்டுகிறார்கள்.

சில சமயங்களில் சமூகச் சூழல்களின் தாக்கத்தினால் பலவீனமானவர்கள் தண்டிக்கப்படுவதும் பணக்காரர்கள், பதவியில் இருப்பவர்கள் விட்டுவிடப்படுவதும் நிகழலாம்.

வேதக்காரர்களிடம் இந்தப் பழக்கம் பரவியது. நபியவர்கள் கூறினார்கள்:

> உங்களுக்கு முன்னிருந்தவர்கள் அழிந்ததற்கான காரணம், அவர்களில் கண்ணியமானவன் திருடிவிட்டால் அவர்கள் விட்டுவிடுவார்கள்; அவர்களில் பலவீனன் திருடிவிட்டால் அவன் மீது தண்டனையை நிறைவேற்றுவார்கள். அல்லாஹ்வின் மீது சத்தியமாக, முஹம்மதின் மகள் ஃபாத்திமா திருடினாலும் நான் அவளுடைய கையை வெட்டியிருப்பேன்.

*வேதக்காரர்களிடையே விவகாரங்கள் வளர்ந்தன. அவர்கள் கை வெட்டும் தண்டனையை வேண்டுமென்றே நீக்கினார்கள். அதற்குப் பதிலாகப் பல்வேறு வகையான சிறைத்தண்டனைகளை ஏற்படுத்தி னார்கள். அவற்றால் திருட்டுக் குற்றம் கணக்கில்லாமல் பெருகியது.*

*ஆனாலும் அவர்களிடத்தில் இதுதான் இறைவன் அளித்த நீதியை விட உயர்ந்த நீதியாகக் கருதப்படுகிறது.*

*இவ்வாறுதான் குற்றங்களுக்கான தண்டனைகளில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. இறுதியில் இறைவன் விதித்த தண்டனைகள் அனைத்தும் நீக்கப்பட்டன.*

*சமூகங்களின் நிலையை நான் கூர்ந்து நோக்கியதில் அவர்கள் செய்த இந்த வரம்புமீறலின் காரணமாக உலக ரீதியாகவும் ஆன்ம ரீதியாகவும் பல இழப்புகள் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளன என்பதை அறிந்து கொண்டேன். சமூகத்தின் அமைதி சீர்குலைந்து கொலை, கொள்ளை, விபச்சாரம் ஆகிய குற்றங்கள் சர்வசாதாரணமாக நிகழ ஆரம்பித்தன. அந்தச் சமூகங்கள் சந்தித்த பல வகையான துன்பங்களுக்கு அவர்களின் இந்தச் செயல்கள்தாம் காரணமாக அமைந்தன.*

*நபியவர்களின் இந்தக் கூற்றின் பொருளை நான் தெளிவாகப் புரிந்து கொண்டேன்: 'அல்லாஹ் விதித்த ஒரு தண்டனையை இந்தப் பூமியில் நிறைவேற்றுவது இந்தப் பூமியில் முப்பது காலைப் பொழுதுகள் மழை பொழிவதைவிடச் சிறந்ததாகும்'.*

*மேலும் நபியவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது: 'நெருங்கியவர் கள், தூரமானவர்கள் என அனைவர் விசயத்திலும் அல்லாஹ் விதித்த வரம்புகளை நிலைநிறுத்துங்கள். அல்லாஹ்வின் விசயத்தில் பழிப்புக் குரியோரின் பழிப்புக்கு நீங்கள் அஞ்ச வேண்டாம்'.*

*முஸ்லிம்கள் தங்களின் நீண்ட நெடிய வரலாற்றில் அல்லாஹ் விதித்த வரம்புகளை நிலைநிறுத்தினார்கள். கொலை, கொள்ளை, விபச்சாரம் ஆகிய தீமைகளிலிருந்து சமூகத்தைப் பாதுகாத்தார்கள்.*

*மங்கோலியர்கள் அவர்கள்மீது தாக்குதல் நடத்தியபோதுதான் அவர் கள் இறைச் சட்டங்களை விட்டுவிட்டு மங்கோலிய ஷைத்தான்களால் வகுக்கப்பட்ட சட்டங்களைப் பின்பற்றினார்கள். சட்டங்கள் வகுக்கப் பட்ட அந்தப் புத்தகத்தின் பெயர் அல்ஃபாசிக்.*

*மேற்கத்தியர்கள் இஸ்லாமிய உலகைத் தாக்கியபோதும் இந்தச் சோதனை மீண்டும் ஏற்பட்டது. ஷரீஅத் சட்டங்களுக்குப் பதிலாக மனிதர் களால் உருவாக்கப்பட்ட சட்டங்கள் பின்பற்றப்பட்டன.*

மேற்கத்தியர்கள் விபச்சாரத்தை அனுமதிக்கப்பட்ட ஒன்றாக ஆக்கினார்கள். அவர்களில் மிக முன்னேறிய நாடு ஓரினச் சேர்க்கைக்குச் சட்டபூர்வமான அங்கீகாரம் வழங்கியது.

அல்லாஹ் விதித்த வரம்புகளை குழிதோண்டிப் புதைத்தார்கள். பழிப்புக்கும் தண்டனைக்கும் அஞ்சாதவர்தாம் அல்லாஹ் விதித்த வரம்புகளுக்கு ஆதரவாகப் பேச முடியும் என்ற நிலை ஏற்பட்டது.

இந்த விசயத்தில் மேற்கத்தியர்கள் தங்களின் முன்னோர்களையே பின்பற்றுகிறார்கள். அவர்கள் வரம்புமீறி வெகுதூரம் சென்றுவிட்டார்கள். நபியவர்கள் மதீனாவுக்குப் புலம்பெயர்ந்து வந்தபோது யூதர்கள் அவர்களிடம் விபச்சாரம் செய்த இருவரைக் கொண்டுவந்து அவர்கள் இருவரின் விசயத்தில் தீர்ப்பு கூறுமாறு வேண்டினார்கள்.

அவர்களின் வேதத்தில் இதற்கு என்ன தண்டனை கூறப்பட்டுள்ளது என்று நபியவர்கள் அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு அவர்கள், ‘சாட்டையடியும் முகத்தில் கரும்புள்ளி குத்துதலும்.’ என்றார்கள்.

அதற்கு நபியவர்கள், ‘இல்லை. மரணிக்கும்வரை கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்பதுதான் உங்களின் வேதத்தில் கூறப்பட்டுள்ள தண்டனை’ என்றார்கள்.

அவர்கள் அதனை மறுத்து இறுதியில் தவ்றாத்தைக் கொண்டு வந்தார்கள். நபியவர்கள் அதிலிருந்து யூதர்கள் மறைக்க நாடிய கல்லெறி தண்டனையை வெளிப்படுத்தினார்கள். அவர்களைக் குறித்துதான் பின்வரும் வசனம் அருளப்பட்டது:

> தூதரே, நிராகரிப்பின் பாதையில் விரைந்துசெல்வோர் உம்மைக் கவலையில் ஆழ்த்த வேண்டாம். அவர்கள் ‘நாங்கள் நம்பிக்கை கொண்டோம்!’ என்று வாயளவில் கூறிவிட்டு உள்ளங்களில் நம்பிக்கை கொள்ளாமல் இருப்பவர்களில் உள்ளவர்களாக இருந்தாலும் சரி அல்லது யூதர்களில் உள்ளவர்களாக இருந்தாலும் சரி. அவர்கள் பொய்யை அதிகமாகச் செவிமடுப்பவர்கள். உம்மிடம் வராத வேறு கூட்டத்தினருக்காக உளவு பார்ப்பவர்கள். அவர்கள் வார்த்தைகளை அவற்றின் பொருள்களிலிருந்து மாற்றி மக்களிடம் ‘இன்ன கட்டளை உங்களுக்குக் கொடுக்கப்பட்டால் அதை ஏற்றுக் கொள்ளுங்கள்; இன்ன கட்டளை உங்களுக்குக் கொடுக்கப்படவில்லையெனில் அதைவிட்டும் விலகிவிடுங்கள்.’ என்று கூறுகிறார்கள். (41)

நயவஞ்சகர்களும் யூதர்களும் இங்கு ஒருசேரக் குறிப்பிடப்பட்டிருப்பது இரு சாராரின் உள்ளங்களும் பாழடைந்து கிடக்கின்றன என்பதனாலும் இரு சாராரும் இறை மார்க்கங்களுக்கு எதிராகப் போர் புரிகிறார்கள் என்பதனாலும்தான்.

தவ்றாத்தின் மீதமுள்ள பகுதியில் கல்லெறி தண்டனை இருந்தது என்பது வெளிப்படையானது. ஆனாலும், யூதர்கள் ஏன் அதனை நீக்கப்பட்டதாகக் கருதினார்கள்.

ஏன் அவர்கள் இதற்குப் பிறகும் அல்லாஹ்வையும் அவனுடைய தூதர்களையும் அவர்களுக்குப் பொருத்தமற்ற பண்புகளால் வர்ணிக்க வேண்டும்.

நபியவர்கள் அல்லாஹ்வின் சட்டத்துக்கு எதிராக வாதம்செய்த அந்த மக்களுடன் நளினமாக நடந்துகொள்ள விரும்பவில்லை:

> யாரை அல்லாஹ் குழப்பத்தில் ஆழ்த்த நாடுகிறானோ அவரது விசயத்தில் அல்லாஹ்விடம் உங்களால் ஒன்றுமே செய்ய முடியாது. அல்லாஹ் அவர்களின் உள்ளங்களைத் தூய்மைப்படுத்த விரும்பவில்லை. அவர்களுக்கு இவ்வுலகில் இழிவும் மறுமையில் கடுமையான வேதனையும் உண்டு. (41)

வசனம் அவர்களை நிர்ப்பந்திக்கவில்லை. யார் தீமையின் வாகனத்தில் ஏறிவிட்டாரோ அதனுடனே அவருடைய பயணம் அமையும் என்கிறது. முட்செடியை விதைத்தவர் கனியை அறுவடைசெய்ய முடியாது.

இந்த வசனம் மர்யம் என்ற அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ள பின்வரும் வசனத்தைப் போல: ‘நீர் கூறும், வழிகேட்டில் இருப்பவருக்குக் கருணைமிக்க இறைவன் அவகாசமளிக்கிறான் ... (19:75)’

மார்க்கம் கூறும் குற்றவியல் சட்டங்கள் ஒரு நாட்டில் வாழும் அனைவர் மீதும் செயல்படுத்தப்படுகின்றன, அவர்கள் வெவ்வேறு மதங்களைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரியே.

இங்கு நாம் காண்பது, யூதர்கள் தனித்த சமூகமாக இருந்தனர். ஹிஜ்றத்தின் ஆரம்ப கட்டத்தில் அவர்களுடன் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன.

ஆகவேதான், நபியவர்கள் தாம் வெளிப்படுத்திய தண்டனையை நிறைவேற்றுமாறு யூதர்களை நிர்ப்பந்திக்கவில்லை. மாறாக, நபியவர்களுக்குக் கூறப்பட்டது:

அவர்கள் உம்மிடம் வந்தால் அவர்களிடையே நீர் தீர்ப்பு வழங்க லாம் அல்லது அவர்களைப் புறக்கணித்துவிடலாம். நீர் அவர்களைப் புறக்கணித்துவிடுவீராயின் அவர்கள் உமக்கு யாதொரு தீங்கும் இழைத்துவிட முடியாது. நீர் தீர்ப்பு வழங்கினால் அவர்களிடையே நியாயமாகத் தீர்ப்பு வழங்குவீராக. (42)

முஸ்லிம்கள் தங்களின் ஆட்சிக்குட்பட்டு அல்லாஹ்வின் வரம்புகளை நிலைநாட்ட வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளார்கள். அவற்றை எல்லா இடங்களிலும் அவர்களால் நிறைவேற்ற முடியாது. இஸ்லாமிய ஆட்சியில் பிற மதங்களைப் பின்பற்றுபவர்கள் தங்களின் சடங்கு களையும் கொள்கைகளையும் தாராளமாகப் பின்பற்றலாம். ஆனால், பொதுவான சட்டங்கள் அனைவருக்கும் உரியவை.

தவ்றாத்தில் ஸிஃபறுத் தஸ்னிய்யா என்ற அத்தியாயத்தில், யார் கன்னிப் பெண்ணை மணமுடித்தபிறகு அவள் கன்னிகழிந்த பெண் என்பதை அறிந்துகொள்கிறாரோ அவளுடைய தந்தையின் வீட்டில் வைத்து அவள் கல்லெறியப்பட வேண்டும் என்றும் ஒரு ஆண் பிற ஆணுடைய மனைவியுடன் விபச்சாரம்செய்தவாறு பார்க்கப்பட்டால் இருவரும் கொல்லப்பட வேண்டும் என்றும் வந்துள்ளது.

மேற்கூறிய அதே அத்தியாயத்தில்:

ஒருவனுக்குப் பேசி முடிவுசெய்யப்பட்ட கன்னிப் பெண் நகரத்தில் வேறு ஒருவனுடன் பார்க்கப்பட்டால் அவர்கள் இருவரையும் நகரத்தின் வாயிலில் வைத்து சாகும்வரை கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்றும் இடம்பெற்றுள்ளது.

பின்னர் திருக்குர்ஆன், குற்றவியல் சட்டங்களுடன் வேதக்காரார்கள் எவ்வகையான நிலைப்பாட்டை மேற்கொண்டார்கள் என்பது குறித்து சுருக்கமான வரலாற்றை எடுத்துரைக்கிறது. யூதர்கள் அவற்றைக் கடைப் பிடிக்க வேண்டும் என்பதற்காகத்தான் அவை தவ்றாத்தில் அருளப் பட்டன என்பதும் தெளிவுபடுத்தப்படுகிறது.

பின்னர், கிறிஸ்தவர்கள் அவற்றின்படி தீர்ப்பளிக்க வேண்டும் என்ப தற்காக இன்ஜீலிலும் அவை வலியுறுத்தப்பட்டன.

யார் வேண்டுமென்றே அவற்றை விட்டுவிடுகிறாரோ அவர் அநியா யத்தில், நிராகரிப்பில், கீழ்ப்படியாமையில் நுழைந்தவராவார்.

இந்த வரலாறு கடந்துபோன நிகழ்வுகளுக்கான நினைவூட்டலாகும். தான் நிலைத்திருந்த வரை தவ்றாத் தன்னைப் பின்பற்றுபவர்களை ஆட்சிசெய்தது.

*அதற்குப் பிறகு வந்த இன்ஜீலின் வசம் தீர்ப்பளிக்கும் அதிகாரம் இடம்பெயர்ந்தது. அதனைச் செயல்படுத்துவது இன்ஜீலைப் பின்பற்று வோர் மீது கடமையாகியது.*

*குர்ஆன் வந்தபோது புதிய வஹீயை எதிர்கொண்டு, அதனடிப்படை யில் செயல்படுவது இரு பிரிவினரின் மீதும் கடமையாகிவிட்டது. அது பிழைகளைச் சரிசெய்தது. இடைச்செருகல்களை நீக்கியது. உண்மையை உள்ளவாறே எடுத்துரைத்தது:*

> *நாம் உமக்கு வேதத்தைச் சத்தியத்துடன் அருளியுள்ளோம். அது தனக்கு முன்னுள்ள வேதத்தை உண்மைப்படுத்தக்கூடியதாக வும் அதில் உள்ளவற்றைப் பாதுகாக்கக் கூடியதாகவும் உள்ளது. ஆகவே, நீர் அவர்களிடையே அல்லாஹ் அருளியதன்படி தீர்ப் பளிப்பீராக. உம்மிடம் வந்துள்ள சத்தியத்தை விட்டு விட்டு அவர் களின் மனஇச்சைகளைப் பின்பற்றாதீர். நாம் உங்களில் ஒவ்வொரு வருக்கும் ஒரு மார்க்கத்தையும் வழிமுறையையும் ஏற்படுத்தி யுள்ளோம்.* (48)

*இங்கு இந்த வசனம் இரண்டு விசயங்களை உள்ளடக்கியுள்ளது. ஒன்று, மார்க்கம் முஹம்மதினுடைய தூதுத்துவத்தின் மூலம் கொள்கை ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் முழுமையடைந்துவிட்டது.*

*கொள்கைரீதியாக என்றால் தவ்ஹீது, கூலிகொடுத்தல், வணக்க வழிபாடு ஆகியவற்றின் பொருளை அது மிகச் சிறந்த முறையில் தெளிவு படுத்திவிட்டது. இவையனைத்திலும் தூதர் தமக்கு முன்னுள்ளவற்றை உண்மைப்படுத்தக் கூடியவராக, முந்தையவர்களின் தவறுகளைச் சரிசெய்யக்கூடியவராக இருந்தார்: 'உமக்கு முன்னர் நாம் அனுப்பிவைத்த தூதர்கள் அனைவருக்கும், என்னைத் தவிர வேறு இறைவன் இல்லை, என்னையே வணங்குங்கள் என்றே நாம் வஹீ அறிவித்தோம்.* (21:25)'

*ஷரீஅத்தின் அடிப்படைகள் அல்லாஹ்விடமிருந்தே அருளப்பட்டன. பின்னர், அந்த அடிப்படைகளிலிருந்து உருவான கியாஸ், இஸ்திஸ்லாஹ், இஸ்திஹ்சான் போன்ற ஃபிக்ஹு வரையறைகளால் ஷரீஅத்திலிருந்து பல கிளைகள் உருவாகின.*

*மார்க்கம் என்பது ஒன்றுதான். ஆனால் ஷரீஅத்துகள் -வழிமுறைகள்- வேறுபடலாம். இங்குதான் இரண்டாவது விசயம் உருவாகிறது.*

*முஹம்மதின் தூதுத்துவம் இறுதிநாள்வரை நிலைத்திருக்கக்கூடிய தன்மைகளைக் கொண்டுள்ளது என்பதே அதன் அடித்தளமாகும். அது மனித இயல்புகளுக்கு ஏற்றது. மனிதனின் இயல்பான அழைப்புடன்*

*ஒத்திசைந்துசெல்லக்கூடியது. அதனுடைய எல்லா போதனைகளிலும் மனிதச் சமூகத்துக்கு அவசியமான பொதுத்தன்மை காணப்படுகிறது.*

*முந்தைய வேதக்காரர்களிடமிருந்து பெறப்பட்டவை காலம் நிர்ண யிக்கப்பட்ட மருந்தைப் போன்றவை. அது காலாவதியாகிவிட்டால் நிவாரணமளிக்கும் தன்மையை இழந்துவிடும். மாறாக, அதுகூட இன்னும் பல நோய்களுக்குக் காரணமாக அமையலாம். ஷைஃக் றஷீத் ரிளா கூறுகிறார், யூத மார்க்கம் கடும்போக்கின் அடிப்படையில் நிறுவப்பட் டது. யூதர்கள் அடிமைத் தனத்துக்கும் இழிவுக்கும் பழக்கப்பட்டிருந்ததால் சுதந்திரத்தையும் அறிவையும் இழந்திருந்தனர். ஆகவே, அவர்களின் கடினமான இயல்புக்கேற்பச் சிகிச்சையும் கடினமானதாக இருக்க வேண்டி யிருந்தது.*

*தவ்றாத்தின் அல்அஸ்ஃபாறுல் ஃகம்சா அத்தியாயங்களைப் படிப்ப வர் நெருக்கடியை, கடினமான சூழலை உணர்வார்.*

*கிறிஸ்தவமும் தன்னுடைய முந்தைய விதிமுறைகளைவிட்டு விலக வில்லை. ஆனாலும், அது சமாதானத்தின் பக்கம், மென்மையான உணர்வுகளின் பக்கம் சாய்ந்தது. ரோமானிய ஆட்சியாளர்களுடன் அது மோதல்போக்கைக் கடைப்பிடிக்கவில்லை. மாறாக, 'யார் உன்னுடைய ஒரு கன்னத்தில் அடிக்கிறாரோ அவருக்கு மறு கன்னத்தையும் காட்டு.' என்ற கொள்கையின் அடிப்படையில் தன்னுடைய செயல்பாட்டை அமைத்துக்கொண்டது.*

*ஆனாலும், அது சிறிது காலத்திலேயே எந்தச் சமாதானத்தையும் ஏற்றுக்கொள்ளாத வகையில் மூர்க்கமான சிலுவைப் போருக்கு மாறியது.*

*இஸ்லாம் உடலுக்கும் ஆன்மாவுக்குமிடையே, உள்ளத்துக்கும் அறி வுக்குமிடையே, இவ்வுலகுக்கும் மறுவுலகுக்குமிடையே இணைப்பை ஏற்படுத்துவதில் பெரும் வெற்றிபெற்றது. மனிதனுக்குப் பெருமதிப் பளித்து அவன் ஆற்ற வேண்டிய பணியைச் சிறப்பித்தது. உறுதியான அறிவின் அடித்தளங்களைக் கொண்டு அல்லாஹ்வுக்கும் மனிதர்களுக்கு மிடையே அது தொடர்பை நிலைநாட்டியது.*

*ஷைஃக் றஷீத் ரிளா நீண்டதொரு ஆய்வுக்குப் பிறகு கூறுகிறார்:*

> *நாம் நிறுவியுள்ளதைப் புரிந்துகொண்டவர், அல்லாஹ்வின் ஆதாரம் இந்தக் குர்ஆனைக் கொண்டு மார்க்கத்தை முழுமைப்படுத்திய திலும் முஹம்மது (ஸல்) அவர்களின் மூலம் தூதுத்துவத்தை நிறை வடையச் செய்ததிலும் அவரது ஷரீஅத்தை நிலையான பொதுத்*

தன்மையோடு ஆக்கியதிலும் உள்ளது என்பதை அறிந்துகொள்வார். இந்த மார்க்கம் அறிவின் அடிப்படையில், இந்த ஷரீஅத் இஜ்தி ஹாதின் -கருத்தாய்வு- அடிப்படையில் கட்டமைக்கப்பட்டாலே அன்றி இந்த ஆதாரம் வெளிப்படாது. உண்மையில் அல்லாஹ் வுக்கும் தூதருக்கும் அடுத்தபடியாகக் கட்டுப்பட வேண்டிய 'ஊலில் அம்று' என்பது தீர்வை முன்வைக்கும் இந்த அறிஞர்களையே குறிக்கும். யார் இஜ்திஹாதைத் தடுக்கிறாரோ அவர் அல்லாஹ் ஏற்படுத்திய ஆதாரத்தை, இந்த மார்க்கத்தின் தனித்தன்மையைத் தடுத்தவராவார். இது எல்லா காலத்துக்கும் பொருத்தமானதல்ல என்று கூறியவராவார். இஸ்லாத்துக்கு எதிராக இந்த மூடர்கள் செய்யும் தீங்கைவிடப் பெரிய தீங்கு வேறென்ன இருக்க முடியும்?

❖ ❖ ❖

அல்லாஹ் கூறுகிறான்: 'நம்பிக்கையாளர்களே, யூதர்களையும் கிறிஸ் தவர்களையும் நேசர்களாக ஆக்கிக்கொள்ளாதீர்கள் ...' நாம் நேசம் கொள்ளக் கூடாது என்று தடுக்கப்பட்ட அந்த யூதர்களும் கிறிஸ்தவர்களும் யார்?

முன்பின் வந்துள்ள வசனங்கள்தாம் அவர்களின் தன்மைகளை, உண்மைநிலையைத் தெளிவுபடுத்தும்.

கவனித்துப் பார்க்கும்போது நமக்கு முன்னால் மூன்று பிரிவினர் வெளிப்படுகிறார்கள்.

முதல் பிரிவினர், இஸ்லாமிய ஷரீஅத்தைக் கடுமையாக வெறுக் கக்கூடியவர்கள். அந்த வெறுப்பின் காரணமாக அதனை விடுத்து மற்ற அனைத்து வழிமுறைகளையும் சிறந்தவையாகக் காண்கிறார்கள். எனக்கு நேர்ந்த ஒரு அனுபவத்தை நான் நினைவுகூர்கிறேன். ஒரு அறபுக் கிறிஸ் தவரிடம் நான் கேட்டேன், 'நீங்கள் கைசருக்குக் கொடுக்க வேண்டியதை கைசருக்குக் கொடுக்க வேண்டும் என்று கூறுகிறீர்கள். உங்களின் மார்க்கச் சடங்குகளுக்குப் பாதுகாப்பளிக்கின்ற எல்லா ஆட்சிக்கும் கட்டுப்படு கிறீர்கள். ஏன் முஹம்மதுடைய ஷரீஅத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கிறீர் கள், அவரும் உங்களைப் போன்றே அறபிதானே?'

அதற்கு அவர் கூறினார், 'நாங்கள் ஆஸ்திரேலியாவின் சட்டத்தையோ அமெரிக்காவின் சட்டத்தையோ ஏற்றுக்கொள்வோம். ஆனால், முஹம் மதின் சட்டத்தை ஏற்றுக்கொள்ள மாட்டோம். முஸ்லிம்களின் ஷரீஆ ஆட்சிசெய்யும்போது அவர்கள் கர்வம் கொள்வார்கள். நாங்கள் அதனை விரும்புவதில்லை.'

வேதக்காரர்களுடைய நிலைப்பாடு அக்காலத்திலும் இக்காலத்திலும் தெளிவானதுதான். அவர்களைக் குறித்துதான் பின்வரும் வசனங்கள் அருளப்பட்டன:

அவர்களிடையே அல்லாஹ் அருளியதன்படி தீர்ப்பளிப்பீராக. அவர்களின் விருப்பங்களைப் பின்பற்றாதீர். அவர்களிடம் எச்ச ரிக்கையாக இருந்துகொள்ளும், அல்லாஹ் உமக்கு அருளியவற்றில் சிலவற்றை விட்டும் அவர்கள் உம்மைத் திருப்பிவிடக்கூடும். அவர்கள் புறக்கணித்தால், அவர்களின் சில பாவங்களின் காரணமாக அல்லாஹ் அவர்களைத் தண்டிக்க விரும்புகிறான். நிச்சயமாக மக்களில் பெரும்பாலோர் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படியாதவர் களாகவே இருக்கிறார்கள். இவர்கள் என்ன அறியாமைக் காலத்துத் தீர்ப்பையா விரும்புகிறார்கள்? உறுதியாக நம்பிக்கை கொள்ளும் மக்களுக்கு அல்லாஹ்வைவிடச் சிறந்த முறையில் தீர்ப்பளிப்பவன் யார்? (49,50)

இந்தக் கூட்டத்தினர் தங்களின் உள்ளங்களில் இருக்கும் குரோதங் களைத் தெளிவான அறிவுடனே வெளிப்படுத்துகின்றனர். அநீதி இழைக்கின்றனர். ஆகவே, இவர்களுடன் நேசம் கொள்ளக் கூடாது என்று தடுக்கப்பட்டதில் எந்தத் தவறும் இல்லை. உங்களை வெறுப்பவர் களுடன் நீங்கள் நியாயமாக நடந்துகொள்ள முடியும். ஆனால், உங்க ளால் அவர் களை நேசிக்க முடியாது.

இரண்டாவது பிரிவினர், நம் எதிரிகளை நேசிக்கக் கூடியவர்கள். வாய்ப்பு கிடைத்தால் நமக்குத் துரோகம் இழைக்கத் தயங்க மாட்டார்கள்.

முஸ்லிம்கள் தங்களின் எதிரிகளுடன் போர்புரிகிறார்கள். தங்களின் அணியைப் பிளவில்லாத வகையில் ஒற்றுமையாக வைத்திருக்க வேண்டி யது அவர்களுக்கு மிக அவசியமாகும். அவர்களின் அணியில் அவர்களின் தோல்வியை, துன்பத்தை விரும்பக்கூடியவர்கள் இருந்தார்களானால் நிச்சயமாக விசயம் சிக்கலாகிவிடும்.

மதீனாவின் ஆரம்ப கட்டங்களில் இப்படித்தான் நிகழ்ந்தது. பின்வரும் வசனம் குறிப்பிடுவதைப் பாருங்கள்:

‘எங்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டுவிடுமோ என்று நாங்கள் அஞ்சுகிறோம்’ என்று அவர்கள் கூறுகிறார்கள். அல்லாஹ் வெற்றி யையோ தன்னிடமிருந்து சாதகமான ஓர் அம்சத்தையோ அளித்து விடலாம். அப்போது அவர்கள் தங்கள் உள்ளங்களில் மறைத்து வைத்தவற்றுக்காக வருந்துவார்கள். (52)

ஆரம்பத்தில் அமைந்த இஸ்லாமிய ஆட்சியில் முஸ்லிம் அல்லாதவர்களும் குடிமக்களாக இருந்தார்கள். முஸ்லிம்கள் ரோமானியர்களுடன் போரிட்டபோது அவர்களையும் தங்கள் படையில் இணைக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பவில்லை.

அவர்களின் கொள்கைச் சகோதரர்கள் போரில் கொல்லப்படும்போது அவர்களுக்கு வருத்தம் ஏற்படலாம்.

ஆட்சியில் தங்களின் செல்வத்தைக் கொண்டு அவர்கள் பங்களிப்பு செய்யலாம் என்பதோடு இஸ்லாம் போதுமாக்கிக் கொண்டது. இஸ்லாம் அவர்களிடம் எதிர்பார்க்கும் குறைந்தபட்சத் தகுதி இதுதான்: அவர்கள் எதிரிகளை நேசித்து முஸ்லிம்கள் தோல்வியடைய வேண்டும் என்று விரும்பக் கூடாது.

மூன்றாவது பிரிவினர், இஸ்லாம் கூறும் வணக்க வழிபாடுகளை, சடங்குளைப் பரிகாசம்செய்யக்கூடியவர்கள். பின்வரும் வசனம் அவர்களின் பண்புகளை எடுத்துரைக்கிறது:

> நம்பிக்கையாளர்களே, உங்களுக்கு முன்னர் வேதம் வழங்கப்பட்டவர்களில் உங்கள் மார்க்கத்தைப் பரிகாசமாகவும் விளையாட்டாகவும் ஆக்கிக்கொண்டவர்களையும் நிராகரிப்பாளர்களையும் நீங்கள் நண்பர்களாக ஆக்கிக்கொள்ளாதீர்கள். நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்தால் அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள். நீங்கள் தொழுகைக்காக அழைப்பு விடுக்கும்போது அவர்கள் அதனைப் பரிகாசமாகவும் விளையாட்டாகவும் எடுத்துக்கொள்கிறார்கள். ஏனெனில், அவர்கள் அறிவற்ற மக்களாக இருக்கிறார்கள். (57,58)

வணக்க வழிபாடுகளையும் பாங்கையும் பரிகாசம்செய்வதற்கான வாய்ப்புகளாக எடுத்துக்கொள்வதைவிட வேறு மடத்தனம் என்ன இருக்க முடியும்?

இவ்வாறு செய்பவர்களுடன் எந்த வகையான நட்பை நாம் எதிர்பார்க்க முடியும்? தன் இறைவனை அறியாத, அவனிடம் உள்ளவற்றை விரும்பாத மோசமான ஒருவனின் நட்பையா நாம் விரும்ப முடியும்?

பாங்கின் வார்த்தைகளைச் செவியேற்றாலே கடுமையாகக் கோபம் கொள்ளக்கூடியவர்களும் இருக்கிறார்கள். பாங்கு சொல்பவர் நிறுத்தி விட வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்.

இஸ்லாம் யாரையும் நிர்ப்பந்திக்காது. அதனைப் பின்பற்றுபவர்களின் உள்ளங்கள் தூய்மையானவையாக, மென்மையானவையாக இருப்பதால் அவர்கள் மற்றவர்களை நிர்ப்பந்திக்க மாட்டார்கள்.

*நன்மைக்கு நன்மையைத் தவிர வேறு கூலி உண்டா?* (55:60)

*ஒரு முஸ்லிமுக்கும் முஸ்லிம் அல்லாதவருக்கும் மத்தியில் நம்பகத் தன்மை மற்றும் நேர்மையின் அடிப்படையில் வியாபாரத் தொடர்பு நிலைபெற முடியும்.*

*ஒரு முஸ்லிமான ஆண் வேதக்காரர்களில் உள்ள ஒரு பெண்ணுடன் இணைந்து, இருவருக்கும் மத்தியில் ஏற்படக்கூடிய அன்பு மற்றும் கருணையின் அடிப்படையில் ஒரு குடும்பத்தை உருவாக்க முடியும்.*

*பல்வேறு மதங்களைப் பின்பற்றுபவர்களுக்கு மத்தியில் அநியாயம், ஏமாற்று, வெறுப்பு ஆகியவற்றைவிட்டும் நீங்கிய மனிதநேயத் தொடர்புகள் ஏற்பட முடியும்.*

*நம்பிக்கையாளர்கள் கோபம் கொள்ள வேண்டிய, ஒதுங்க வேண்டிய சந்தர்ப்பங்களை இஸ்லாம் வரையறுத்துவிட்டது. மதங்களுக்கு மத்தியில் முரண்பாடுகள் தோன்றுவது இயல்பானது. அது அல்லாஹ்வின் நாட்டம்: 'இதற்காகவே நான் அவர்களைப் படைத்துள்ளேன்.* (11:119)'

*ஆனாலும், நாம் நம்மை மதிப்பதுபோன்று மற்றவர்களையும் மதிக்க வேண்டும். அவர்களுடனான நம்முடைய தொடர்புகளை நேர்மை, ஒழுக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். இது கடினமான ஒன்றா என்ன?*

*தங்களைத் தவிர மற்றவர்களை இழிவாகக் கருதுகின்ற யூதர்களுக்கு இது கடினமான ஒன்று. படைப்பின் அடிப்படையில் தான் மட்டுமே உயர்வென்றெண்ணிப் பிற மாந்தரை இழிவாய்க் கருதும் யூதனுக்கும், தான் வெளிப்படையாகவே பிழைகளைச் செய்துகொண்டு மற்றவரெல்லாம் தன்னைக் கண்டுகொள்ளாமல் சரியாய் இருக்க வேண்டும் என்றெண்ணும் ஒரு முரடனுக்கும் இது கடினமானதொன்றே.*

*இதைத்தான் பின்வரும் வசனம் குறிக்கிறது: 'நீர் கூறும், வேதக்காரர்களே, நாங்கள் அல்லாஹ்வின் மீதும் எங்களுக்கு அருளப்பட்டதன் மீதும் எங்களுக்கு முன்னர் அருளப்பட்டதன் மீதும் நம்பிக்கை கொண்டோம் என்பதற்காகவா எங்களை வெறுக்கிறீர்கள்? உங்களில் பெரும்பாலோர் கீழ்ப்படியாதவர்களாகவே இருக்கிறார்கள்.* (59)'

*உண்மையில் நேசமும் தோழமையும் இந்த உண்மையின் அடிப்படையில்தான் நிலைபெற வேண்டும். இதில் அநியாயமான விலக்கலின், குருட்டுத்தனமான வெறியின் எந்தச் சாயலும் இல்லை.*

நம்பிக்கையாளர்கள் இவ்வுலகில் தனியர்களாக ஆகிவிடக் கூடாது. மாறாக, அவர்கள் தங்களைப் போன்ற கொள்கைச் சகோதரர்களுடன் நட்பு கொள்ள வேண்டும்:

> உங்களுடைய நண்பர்கள் அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் இன்னும் நம்பிக்கையாளர்களும் ஆவர். அந்த நம்பிக்கையாளர்கள் தொழுகையைக் கடைப்பிடித்து ஸகாத்தையும் அளித்து அல்லாஹ் வுக்குப் பணிபவர்களாகவும் இருக்கிறார்கள். அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நம்பிக்கையாளர்களையும் நேசர்களாக ஆக்கிக்கொண்டோர் அறிந்துகொள்ளட்டும், நிச்சயமாக அல்லாஹ் வின் கூட்டத்தினரே வெற்றிபெறக்கூடியவர்கள். (55,56)

இஸ்லாத்தின் அடையாளங்களில் ஒன்று, அல்லாஹ்வுக்காக நேசிப்ப தும் அல்லாஹ்வுக்காக பகைப்பதும் ஆகும். ஆனால், அந்த நேசத்திலும் பகைமையிலும் சுயநலமோ அநியாயமோ கலந்துவிடக் கூடாது.

இந்த மார்க்கத்தின் சிறப்பம்சங்களில் ஒன்று, அது திட்டமிடப்படாமல் செய்யப்படும் இயல்பான தவறுகளை மன்னித்துவிடுகிறது. விதிவிலக் கான பாவங்கள் விசயத்தில்தான் அது கடுமையைக் காட்டுகிறது.

நபியவர்கள் 'மாயிஸ்' என்பவருடன் நடந்துகொண்ட விதம் குறித்து நான் சிந்தித்துப் பார்த்தேன். அவர் தம்முடைய தவறை ஒப்புக்கொண்டு பாவமன்னிப்பு கோரியதால் நபியவர்கள் அவரைத் திருப்பியனுப்ப முயன்றார்கள்.

ஆனாலும், மாயிஸ் மரணத்தின் மூலம் தம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்வதையே விரும்பினார். அவர் நாடியதே நிறைவேறியது.

கல்லெறிந்து கொல்வதற்காக யூதர்கள் ஈசா (அலை) அவர்களிடம் ஒரு பெண்ணை அழைத்து வந்தபோது அவரும் இவ்வாறே செய்தார்.

இறைவன் மனிதர்கள் செய்யும் ஒவ்வொரு தவறுக்கும் அவர்களைத் தண்டிக்க விரும்புவதில்லை. இறைத்தூதர்கள் சீர்திருத்தம் செய்பவர் களே அன்றி தண்டனையை நிறைவேற்றுபவர்கள் அல்ல.

ஆனாலும், சாதாரண தவறுக்கும் கீழ்ப்படியாமையினால் செய்த தவறுக்கும் மத்தியில் பெரும் வேறுபாடு காணப்படுகிறது. ஒருவர் ஒருமுறை வழுக்கி விழுவதற்கும் கண்ணை மூடிக்கொண்டு இன்னொ ருவர் பின்னால் செல்வதற்குமான வேறுபாடு தெளிவானது.

தனிமனித தவறுக்கும் அல்லாஹ்வின் சட்டத்தை நிராகரிப்பதற்கு மிடையே மிகப் பெரிய வேறுபாடு இருக்கிறது. இறைத்தூதர்கள்

அனைவரும் எல்லா வகையான குற்றங்களுக்கும் எதிராக நின்றார்கள். அதிலும் குறிப்பாக, அவை சமூகத்தில் பரவிவிடும்போது அவற்றை எதிர்த்துக் கடுமையாகப் போராடினார்கள்.

ஆச்சரியம் என்னவென்றால் அந்தக் காலத்திலும் சரி, இந்தக் காலத் திலும் சரி வேதக்காரர்கள் குற்றங்களுக்கு முன்னால் விசித்திரமான மௌனத்தோடுதான் நின்றுகொண்டிருக்கிறார்கள். எந்த அளவுக்கெனில், மேற்கத்திய கலாச்சாரம் பல விதமான அழுக்குகளால் நிரம்பிய கலாச்சார மாகிவிட்டது. அது சூனியக்காரர்களுக்கு முன்னால் அமர்ந்திருப்பவர்கள் போன்று அவற்றைக் கண்டு மௌனமாக இருக்கிறது.

அவர்கள் இஸ்லாத்தை வெறுக்கிறார்கள், ஆனால் நாத்திகத்தோடு இணக்கமாகச் செல்கிறார்கள் என்பது கவனத்துக்குரிய ஒன்று, அல்லவா? கூர்ந்து அவதானித்தால் அவர்களில் ஒரு சாரார் இஸ்லாத்தை வெறுத்துக் கொண்டு, நாத்திகத்தோடு இணக்கப்பாட்டுடன் நடக்கிறார்கள். இன் னொரு சாரார் காலனிய ஆதிபத்தியத்தியத்துக்கும், சியோனிஸத்துக்கும் பலியானோர் பற்றி குறைந்தளவேனும் அக்கறை கொள்ளாமல் எயிட்ஸ் நோயாளிகளுக்காய் ஜெபித்துப் பிரார்த்தனை செய்ய வேண்டுமென பகிரங்கமாக அறவிக்கின்றார்கள். இது ஆச்சர்யமாக இல்லையா ?

அல்மாயிதா என்ற இந்த அத்தியாயம் நான்கு பக்கங்கள்வரை இந்த மக்களின் முரண்பாடுகளையும் அவர்கள் செய்யக்கூடிய தீமைகளையும் குறித்து பேசுகிறது: ‘அவர்களில் பெரும்பாலோர் பாவம் செய்வதற்கும் அநியாயம் இழைப்பதற்கும் தடுக்கப்பட்டதை உண்பதற்கும் விரைந்து செல்வதை நீர் காண்பீர். அவர்கள் செய்துகொண்டிருப்பது எவ்வளவு மோசமான காரியம்! பாவமான வார்த்தைகளைக் கூறுவது, தடுக்கப் பட்டதை உண்பது ஆகியவற்றைவிட்டும் அவர்களின் குருமார்களும் அறிஞர்களும் அவர்களைத் தடுக்க வேண்டாமா? அவர்கள் செய்து கொண்டிருப்பது எவ்வளவு மோசமான காரியம்! (62,63)’

பின்வரும் வசனத்துக்கேற்ப இறை மார்க்கத்தின் போதனைகளுடன் தொடர்புகொண்டிருக்கும்வரை, தங்களிடம் எஞ்சிவிட்ட தவ்றாத் மற்றும் இன்ஜீலின் போதனைகளை மதிக்கும்வரை, இறுதித் தூதர் கொண்டு வந்ததை உண்மைப்படுத்தும்வரைதான் அவர்கள் மார்க்கத்தைப் பின் பற்றுபவர்களாகக் கருதப்படுவார்கள்:

> நீர் கூறும், ‘வேதக்காரர்களே, தவ்றாத்தையும் இன்ஜீலையும் உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு அருளப்பட்டதையும் பின்பற்றும்வரை நீங்கள் எந்த ஒன்றிலும் இல்லை.’ உம் இறை

வனிடமிருந்து உமக்கு அருளப்பட்டவை அவர்களில் பெரும் பாலோருக்கு வரம்புமீறலையும் நிராகரிப்பையுமே அதிகப்படுத்து கின்றன. ஆகவே, நீர் நிராகரிப்பாளர்களுக்காகக் கவலைப் படாதீர். (68)

அல்லாஹ் ஏற்படுத்திய புனிதங்களுக்காக ரோஷம் கொள்வது அனை த்து மார்க்கங்களிலும் வேண்டப்படுகின்ற ஒன்றுதான்.

நாத்திகம் பேசும் மெய்யியலாளர்களைவிட இறைவனை ஏற் றுக்கொண்ட மெய்யியலாளர்களை நேர்வழிக்கு நெருக்கமானவர்களாக வும் உலக இன்பங்களில் மூழ்கிக்கிடப்பவர்களைவிட நற்குணமுள்ள வர்களைக் கண்ணியத்துக்குத் தகுதியானவர்களாகவும் நம்பிக்கையாளர் கள் காண்கிறார்கள்.

நான் இந்த வகையான மக்களைக் கண்டு வியப்படைகிறேன். அவர்கள் ‘எந்த இறைவனும் இல்லை. வாழ்க்கை என்பது அனுபவித்தல்தான்’ என்ற கோஷத்தைச் செவியேற்கும்போது மௌனமாக இருந்து விடுகிறார்கள். ஆனால், ‘அல்லாஹு அக்பர்’ என்ற பாங்கின் ஓசையைக் கேட்கும்போது அவர்களின் முகம் சிறுத்து கருமையடைந்துவிடுகிறது. ஏனெனில், கண்ணியமான இந்த ஓசை இஸ்லாத்தின் அடையாளங் களில் ஒன்றாக இருக்கிறது. அது நம்மிடத்தில் நிலையான நல்லறங்களில் ஒன்றாக இருக்கிறது!

யூத மதகுருமார்கள், கிறிஸ்தவப் பாதிரியார்கள் ஆகியோர், இருக்க வேண்டிய சரியான உணர்ச்சியை இழந்ததனால் திருக்குர்ஆன் அவர்களை இடித்துரைத்தது:

இஸ்றாயீலின் மக்களில் நிராகரித்தோர் தாவூது மற்றும் மர்யமின் மகன் ஈசாவின் நாவினால் சபிக்கப்பட்டுவிட்டார்கள். ஏனெனில், அவர்கள் கீழ்ப்படியாதவர்களாகவும் வரம்புமீறியவர்களாகவும் தாம் செய்துகொண்டிருந்த தீமைகளைவிட்டு ஒருவரையொருவர் தடுக்காமலும் இருந்தார்கள். (78,79)

அதனைத் தொடர்ந்து பாவிகளுடன் நட்பு கொள்வது குறித்த தடை இடம்பெறுகிறது:

அவர்கள் அல்லாஹ்வின் மீதும் தூதரின் மீதும் அவருக்கு அருளப் பட்டதன் மீதும் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்திருந்தால் நிராகரிப்பாளர்களை நண்பர்களாக ஆக்கிக்கொண்டிருக்க மாட் டார்கள். ஆயினும், அவர்களில் பெரும்பாலோர் கீழ்ப்படியாத வர்களாகவே இருக்கிறார்கள். (81)

*இந்த விவகாரங்களில் எண்ணிக்கையற்ற நபியின் வழிமுறைகளும் காணப்படுகின்றன.*

❖ ❖ ❖

*தீமைகளை ஏற்றுக்கொண்டு, தீயவர்களோடு சமரசம் செய்துகொண்ட வேதக்காரர்களைப் பழித்துரைத்தபிறகு சரியான கொள்கைகளையும் அவற்றைப் பற்றிப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தையும் குறித்த செய்தி இடம்பெறுகிறது.*

*மனிதர்கள் பொதுவாக, அறிவுரைசெய்யும் பொறுப்பிலிருந்து வெருண்டோடும் பொருட்டுப் பாவிகளை, அநியாயக்காரர்களைக் கண்டு அமைதியாக இருக்கிறார்கள். சில சமயங்களில் உலக ஆதாயத் துக்காக அவர்களுக்கு ஆதரவாகப் பேசவும் செய்கிறார்கள்.*

*சத்தியத்தை எடுத்துரைத்தால் அவர்கள் எவ்வளவு சிரமங்களை அனுப விக்க நேரிடலாம்! ஆனாலும், இறுதி வெற்றியே குறிக்கோள்.*

*சத்தியத்தை மறைத்து மோசடிசெய்வதால் உடனடியாகச் சில இலாபங் களைப் பெற்றுவிடலாம். ஆனால், அது இழிவையும் அழிவையும் கொண்டுவந்தே தீரும்.*

*யார் அல்லாஹ்வுக்காக நேசம் கொள்கிறார்களோ, யார் அல்லாஹ் வுக்காகப் பகைமை கொள்கிறார்களோ அவர்கள்தாம் சரியான வாழ்க் கையையும் இறைத் திருப்தியையும் பெற முடியும். ஆகவேதான் அல்லாஹ் கூறுகிறான்:*

> *வேதக்காரர்கள் நம்பிக்கை கொண்டு இறையச்சத்துடன் நடந்திருந் தால் நாம் அவர்களின் பாவங்களை அவர்களைவிட்டும் அகற்றி அவர்களைச் சுவனங்களில் நுழையச்செய்திருப்போம். அவர்கள் தவ்ராத்தையும் இன்ஜீலையும் தங்கள் இறைவனிடமிருந்து அருளப் பட்டதையும் பின்பற்றியிருந்தால் தங்களுக்கு மேலிருந்தும் கீழிருந் தும் புசித்திருப்பார்கள் ...* (65)

*இது யூதர்கள், கிறிஸ்தவர்களுக்கு மட்டும் கூறப்பட்ட அறிவுரை என்று எண்ணிவிடாதீர்கள். அவர்களுக்கு முன்னர் இஸ்லாமிய அறிஞர்களும் தாங்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பின் காரணமாக இவ்வாறு வேண்டப்படுகிறார்கள்.*

*நிச்சயமாக சரியான ஈமானிலிருந்தே நன்னடத்தை வெளிப்பட முடி யும். ஆகவேதான், மீண்டும் உரையாடல் ஓரிறைக் கொள்கையின் பக்கம்,*

எல்லா வகையான பிழையான கொள்கைகளிலிருந்தும் அதனைத் தூய் மைப்படுத்த வேண்டியதன் பக்கம் திரும்புகிறது.

யூதர்கள் 'நாங்கள் அல்லாஹ் ஒருவனின் மீது நம்பிக்கை கொண்டுள் ளோம்' என்று கூறுகிறார்கள். இறைவனைக் குறித்த அவர்களின் கொள்கை சரியானதுதானா? அவர்கள் எல்லா வகையான குறைபாடுடைய பண்பு களை விட்டும் இறைவனைத் தூய்மைப்படுத்தி, பரிபூரணமான பண்பு களை அவனுக்கு வழங்கிவிட்டார்களா?

அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டுப் பாவங்களிலிருந்து விலகியிருக்கும் சில மனிதர்களாக அவர்கள் தங்களைக் காண்கிறார்களா?

நிச்சயமாக இல்லை. அவர்கள் ஓரிறைக் கொள்கையைத் தங்களுக்கு ஏற்றாற்போன்று வளைத்தார்கள். இறைவனைத் தங்கள் இனத்துக்கு மட்டுமே உரிய பாதுகாவலனாக, தங்களை மட்டுமே திருப்திப்படுத்தக் கூடியவனாக ஆக்கினார்கள்.

அதனால்தான் அவர்கள் வாக்குறுதிகளைப் பேணாமல் அலட்சியமாக நடந்துகொண்டார்கள். சமூகங்களுக்குப் பாரமாக இவ்வுலகில் வாழ்ந் தார்கள்:

> நாம் இஸ்றாயீலின் மக்களிடம் வாக்குறுதி வாங்கினோம். அவர் களிடம் பல தூதர்களை அனுப்பினோம். அவர்களின் மனம் விரும் பாததைத் தூதர்கள் அவர்களிடம் கொண்டுவந்தபோதெல்லாம் சிலரைப் பொய்ப்படுத்தினார்கள்; சிலரைக் கொலைசெய்தார்கள். (70)

கிறிஸ்தவர்களின் நம்பிக்கையில் குழப்பமே மிகைத்து காணப்பட்டது. அவர்களிடம் காணப்பட்ட முரண்பாடுகள் தெளிவானவை.

இயேசுதான் எங்களின் கடவுள் என்று அவர்கள் கூறுகிறார்கள். மர்ய மைக் குறித்து 'அவர் கடவுளின் தாய்' என்கிறார்கள்.

அதே போன்று, தந்தையாகிய நிரந்தமான இறைவன் தன் மகனை மனிதர்களை நோக்கி அனுப்பினான் என்கிறார்கள். பரிசுத்த ஆன்மாவான ஜிப்ரீலைக் குறித்து 'அவர்தான் இறைவன்' என்கிறார்கள். பின்னர் கூறு கிறார்கள், 'இவர்கள் அனைவரும் ஒரே இறைவன்தான்'.

> இறைவன் மூவரில் ஒருவன் என்று கூறியவர்களும் உறுதியாக நிராகரித்துவிட்டார்கள். உண்மையில் அவன் ஒருவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. இவ்வாறு கூறுவதை அவர்கள் நிறுத்திக்

கொள்ளாவிட்டால் அவர்களில் உள்ள நிராகரிப்பாளர்களைத் துன்புறுத்தும் வேதனை வந்தடைந்தே தீரும். (73)

இறைவன் ஒருவனே என்று கூறும் இஸ்லாம் வானங்களிலும் பூமியிலும் உள்ள அனைத்தையும் அவனுக்குக் கட்டுப்பட்டவையாக, அவனுடைய கண்ணியத்துக்கும் மகத்துவத்துக்கும் பணிந்தவையாக வர்ணிக்கிறது. வானவர்கள், தூதர்கள், மனிதர்கள் என அனைவரும் அடக்கியாளும் ஏகனான அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்தவர்களாக இருக்கிறார்கள் என்று அது கூறுகிறது. கிறிஸ்தவம் மூவரையும் வணங்குகிறது. மூவரையும் ஒன்றாகக் கருதுகிறது. இந்த இரண்டுக்கும் மத்தியில்தான் இன்று உலகை ஆக்கிரமித்திருக்கும் முரண்பாடு காணப்படுகிறது.

இதனால்தான் நபியவர்களை விளித்துக்கூறப்படுகிறது: 'நீர் கூறும், வேதக்காரர்களே, உங்கள் மார்க்கத்தில் அநியாயமாக மிகைப்படுத்தி விடாதீர்கள். இதற்கு முன்னர் தாமும் கெட்டு, பலரையும் வழிகெடுத்து, நேரான பாதையை விட்டும் பிறழ்ந்துவிட்ட மக்களின் மன இச்சைகளைப் பின்பற்றாதீர்கள். (77)'

இந்த முரண்பாடு மறுமைநாள் நிலைபெறும்வரை நிலைத்திருக்கும் என்றே தோன்றுகிறது. இறுதியில் அல்லாஹ் தன் அடியார் ஈசாவை இறக்கி வணக்க வழிபாடு அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியது என்பதைப் பிரகடனம்செய்யுமாறும் தனக்கு இணை ஏற்படுத்தியவர்களுடன் போர் புரியுமாறும் கட்டளையிடுவான்.

கிறிஸ்தவச் சிந்தனை பரந்த அளவில் பிரிந்து நிற்கிறது. இந்த உலகம் அந்தப் பிரிவினூடே ஏராளமான மதச் சண்டைகளை அறிந்துகொண்டது. அவை பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்த, ஏராளமான உயிர்களைப் பலிகொண்ட போர்கள். திருச்சபையின் அதிகாரம் நீக்கப்பட்ட பிறகுதான் மக்களால் அவற்றிலிருந்து விடுபட முடிந்தது.

ஆனாலும், தனித்தனியே, பல பிரிவுகளாகப் பிரிந்த கிறிஸ்தவம் இன்று இஸ்லாத்தை எதிர்ப்பதற்காக, அதற்கு எதிராகச் சூழ்ச்சி செய்வதற்காக ஓரணியில் திரண்டுநிற்கிறது.

யூதர்கள் ஃபலஸ்தீன் முஸ்லிம்களைக் கொல்கிறார்கள். வடக்கு ஆசியாவில் இந்துக்களும் புத்தர்களும் முஸ்லிம்களைக் கொல்கிறார்கள். புதிய காலனித்துவவாதிகள் ஒட்டுமொத்த முஸ்லிம்களுடன் போரிட்டுக் கொண்டிருக்கிறார்கள் அல்லது கலாச்சார ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் அவர்களைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

*நாம் இந்த வசனத்தை மிக ஆழமாகச் சிந்தித்துப்பார்க்க வேண்டும்:*

*மற்ற மக்களைவிட யூதர்களும் இணைவைப்பாளர்களுமே நம்பிக்கையாளர்களுக்குக் கடும் பகைவர்களாக இருப்பதை நீர் காண்பீர். மற்ற மக்களைவிடத் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறுபவர்களே நேசம் கொள்வதில் நம்பிக்கையாளர்களுக்கு மிக நெருக்கமாக இருப்பதை நீர் காண்பீர். ஏனெனில், அவர்களில் குருமார்களும் துறவிகளும் இருக்கின்றனர். அவர்கள் கர்வம் கொள்வதில்லை. தூதருக்கு அருளப்பட்ட இந்த வாக்கை அவர்கள் செவியுறும்போது சத்தியத்தை அறிந்துகொண்டதனால் அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வடிவதை நீர் காண்பீர். 'எங்கள் இறைவா, நாங்கள் நம்பிக்கை கொண்டோம். ஆகவே, நீ எங்களைச் சாட்சியாளர்களுடன் பதிவுசெய்வாயாக.' என்று அவர்கள் பிரார்த்தனை புரிகிறார்கள்.* (82,83)

*நபியவர்கள் தூதராக அனுப்பப்பட்ட சமயத்தில் நிகழ்ந்த சம்பவத்தை நமக்கு வரலாறு எடுத்துரைக்கிறது. மக்காவின் இணைவைப்பாளர்களும் மதீனாவின் யூதர்களும் இஸ்லாத்தை மிகக் கடுமையாக எதிர்த்துக் கொண்டிருந்தார்கள். அதே சமயம், ரோம் மற்றும் ஹபஷாவில் உள்ள கிறிஸ்தவர்களைக் குறித்து முஸ்லிம்கள் நல்லெண்ணமும் நன்னம்பிக்கையும் கொண்டிருந்தார்கள்.*

*முஸ்லிம்கள் வெளிப்படையாக அறிவித்தார்கள், 'பாரசீகர்கள் ரோமர்களைத் தோல்வியடையச் செய்தது தற்காலிகமானதே. மீண்டும் தங்களின் சகோதரர்களான வேதக்காரர்கள் பாரசீகர்களை வெல்வார்கள். அப்போது நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வின் உதவியால் மகிழ்ச்சியடைவார்கள்.' என்று.*

*மக்காவிலும் மதீனாவிலும் நபியவர்களைக் காண கிறிஸ்தவக் குழுக்கள் வந்தன. வேதத்தைச் செவியுற்ற அவர்களில் பலர் தங்களின் ஈமானை வெளிப்படையாக அறிவித்தார்கள்: 'இது எங்கள் இறைவனிடமிருந்து வந்துள்ள உண்மையாகும். நாங்கள் முன்னரே இதனை ஏற்றுக் கொண்டுள்ளோம்.* (28:53)*'*

*ரோமின் வீழ்ச்சிக்குப் பிறகு ஆசியாவின் பல பகுதிகளையும் வடக்கு ஆப்பிரிக்கா முழுவதையும் இஸ்லாம் கைப்பற்றியது. இந்தப் பிரதேசங்களில் உள்ள சமூகங்கள் இஸ்லாத்தைத் தழுவி அதற்காகப் போர் புரிந்தன. அதன் கொடியை மேலோங்கச் செய்தன.*

*அவர்கள் தங்களின் ஆரம்பகட்ட கிறிஸ்தவத்தை விருப்பத்துடனே விட்டார்கள். அவர்கள் கூறினார்கள்: 'அல்லாஹ்வின் மீதும் எங்களிடம்*

வந்துள்ள சத்தியத்தின் மீதும் நம்பிக்கை கொள்ளாமல் இருக்க எங்களுக்கு என்ன நேர்ந்தது? ... (84)'

ஆனாலும், முந்தைய நிகழ்வுகளைத் தடுக்கும் சம்பவங்களும் நிகழ்ந் தன. ஆயிரம் ஆண்டுகளாக முஸ்லிம்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட சிலுவைப் போர்கள் பெரிய அளவில் தாக்கங்களை ஏற்படுத்திவிட்டன.

இனி கிறிஸ்தவர்கள் நம்பிக்கையாளர்களுக்கு நெருக்கமானவர் களாக ஆகும் வாய்ப்பு இருக்கிறதா? வசனத்தில் கூறப்பட்ட நிகழ்வுகள் ஏற்கனவே கடந்துவிட்டவை மட்டும்தானா? இந்த நிலை மாறுமா?

இன்றும் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் பெரும்பாலோர் சத்தியத்தைத் தேடிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் இஸ்லாத்தை ஏற்பதற்குத் தடையாக இருப்பது முஸ்லிம்களின் மோசமான நிலைதான்.

சந்தேகமேயின்றி முஸ்லிம்களின் நிலை வெறுப்பை ஏற்படுத்தக் கூடியதாகவும் மோசமானதாகவும்தான் உள்ளது.

இஸ்லாத்துக்கும் வேதக்காரர்களுக்கும் மத்தியிலான தொடர்பை எடுத்துரைத்தபிறகு வசனங்கள் இஸ்லாமியச் சமூகத்தைக் கட்டமைப் பதில் கவனம்செலுத்துகின்றன. துறவறம், வரம்புமீறல் ஆகியவற்றை விட்டும் அவர்களைத் தடுக்கின்றன:

நம்பிக்கையாளர்களே, அல்லாஹ் உங்களுக்கு அனுமதித்த தூய பொருள்களைத் தடுக்கப்பட்டவையாக ஆக்கிக்கொள்ளாதீர்கள். வரம்புமீறாதீர்கள். (87)

முந்தையவர்கள் செய்த அதே தவறுகளில் நீங்கள் வீழ்ந்துவிடாதீர்கள்.

பின்னர், மதுவைத் தடைசெய்யும் வசனங்கள் இடம்பெறுகின்றன. ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களும் தங்களின் ஒவ்வொரு உணவு மேசையிலும் மதுவை வைக்கிறார்கள். அது அவர்களுக்குத் தண்ணீரைப் போல அல்லது அதற்கான மாற்றைப் போல.

அதே போன்று, புனிதமான உணர்வுகளைப் பாதுகாப்பதுகுறித்த வசனங்கள் இடம்பெறுகின்றன. அவை மார்க்கத்தைப் பின்பற்றுபவர் களிடையே நிகழும் தர்க்கங்கள், வீணான விசயங்கள் ஆகியவற்றைத் தடைசெய்கின்றன; குர்ஆனையும் சுன்னாஹ்வையும் பற்றிப்பிடிப்பதன் அவசியம்குறித்து பேசுகின்றன.

அல்லாஹ் உங்களுக்கு அருளியதன் பக்கமும் தூதரின் பக்கமும் வாருங்கள் என்று அவர்களிடம் கூறப்பட்டால் எங்கள் முன்னோர்

> களை எதில் கண்டோமோ அதுவே எங்களுக்குப் போதுமானது என்று கூறுகிறார்கள். அவர்களின் முன்னோர்கள் ஒன்றும் அறியாத வர்களாகவும் நேர்வழி பெறாதவர்களாகவும் இருந்தாலுமா? (104)

இவைபோன்ற கட்டளைகளை இந்த அத்தியாயம் கொண்டிருப்பதால் இதற்கு அல்உகூது -ஒப்பந்தங்கள்- என்று பெயரிடப்பட்டிருப்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை என்று நாம் கூறுகிறோம்.

இறுதியாக இரண்டு விசயங்களோடு அத்தியாயம் நிறைவடைகிறது. ஒன்று, கிறிஸ்தவர்கள் தங்களின் ஈமானை அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித்தாக்கி, எல்லா வகையான குழப்பங்கள் மற்றும் பிழையான எண்ணங்களிலிருந்தும் அதனைத் தூய்மைப்படுத்திக்கொள்ள வேண்டும்.

வசனத்தில் மர்யமின் மகன் ஈசா விளித்து உரையாடப்படுகிறார்: 'அல்லாஹ்வை விடுத்து என்னையும் என் தாயையும் வணக்கத்துக் குரியவர்களாக ஆக்கிக்கொள்ளுங்கள் என்று நீர் மக்களிடம் கூறினீரா? (116)'

ஈசா தமக்குப் பிறகு மக்கள் செய்த செயல்களிலிருந்து முழுவதுமாக நீங்கிவிடுவார். அவற்றுக்கும் தமக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று கூறிவிடுவார்:

> என் இறைவனும் உங்கள் இறைவனுமாகிய அல்லாஹ்வையே வணங்குங்கள் என்று நீ எனக்குக் கட்டளையிட்டதையே நான் அவர்களிடம் கூறினேன். அவர்களிடையே நான் இருந்தவரை அவர்கள்மீது சாட்சியாக இருந்தேன். என் உயிரை நீ கைப்பற்றிய பிறகு அவர்களை நீயே கண்காணிப்பவனாக இருந்தாய். (117)

உண்மையில் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துக்குரிய இறைவன் வேறு யாரும் இல்லை. அவனைத் தவிர மற்றவை அனைத்தும் அவனுக்கு அடிமைகளே. ஆனால், கிறிஸ்தவச் திருச்சபைகள் இதுகுறித்து கடுமை யாக பிணங்கிக்கொண்டன. மாறாக, முஸ்லிம்களின் பலவீனத்தைப் பயன்படுத்தி தெளிவான சத்தியத்தை அழிக்க முயன்றன.

இன்னொன்று, இந்த அத்தியாயம் உள்ளடக்கியுள்ள ஒப்பந்தங்கள் அனைத்தும் படிப்பவர்களுக்கு நினைவூட்டப்படுகிறது.

எந்த மனிதனுக்கும் அல்லாஹ்வோடு தனிப்பட்ட தொடர்பு எதுவும் இல்லை. மறுமைநாள் நிலைபெறும்போது மனிதர்கள் அனைவரும் விசாரணைக்காக அவன் முன்னால் ஒன்றுதிரட்டப்படுவார்கள். அவர் களிடம் கூறப்படும்:

இன்றைய நாள் வாய்மையாளர்களின் வாய்மை அவர்களுக்குப் பயனளிக்கக்கூடிய நாளாகும். அவர்களுக்கு சுவனங்கள் உண்டு. அவற்றில் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். அவற்றில் அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள். அல்லாஹ் அவர்களைக் குறித்து திருப்தியடைந்தான். அவர்களும் அல்லாஹ்வைக் குறித்து திருப்தி யடைந்தார்கள். இதுதான் மகத்தான வெற்றியாகும். (119)

அல்லாஹ்வின் அதிகாரத்தில் யாருக்கேனும் ஏதேனும் பங்கு இருக் கிறதா? நிச்சயமாக இல்லை: 'வானங்கள், பூமி மற்றும் அவற்றில் உள்ள அனைத்தின் அதிகாரமும் அல்லாஹ்வுக்கே உரியது. அவன் எல்லாவற்றின் மீதும் பேராற்றலுடையவன். (120)'

இது அல்மாயிதா அல்லது அல்உகூது என்ற அத்தியாயம். இது சட்டங் களைப் பற்றிப் பேசும் இறுதியாக அருளப்பட்ட அத்தியாயங்களில் ஒன்று.

❖ ❖ ❖

அத்தியாயம் 6

# அல்அன்ஆம்

(கால்நடைகள்)

*இது மக்காவில் அருளப்பட்ட ஏழு பெரிய அத்தியாயங்களில் ஒன் றாகும். அவற்றைக் கொண்டுதான் திருக்குர்ஆன் ஆரம்பமானது.*

*அருளப்பட்ட வசனங்கள் முதலில் அல்லாஹ் ஒருவனே என்பதை மறுத்துக்கொண்டிருந்த சிலை வழிபாட்டாளர்களை விளித்து உரை யாடின. அவர்கள் தங்களின் சிலைகளின் மீது அதீதப் பற்றும் வெறியும் கொண்டு அவற்றுக்கு எதிராக ஒலிக்கும் அறிவுபூர்வமான கோஷங்கள் அனைத்தையும் கடுமையாக எதிர்த்துக்கொண்டிருந்தார்கள்.*

*திருக்குர்ஆன் பல வகையான ஆதாரங்களைக் கொண்டு, அல்லாஹ் வின் மகத்துவத்துக்கு உகந்த செய்திகளைக் கொண்டு அவர்களைத் திருப்திப்படுத்த முயன்றது. மனிதர்களிலும் பிரபஞ்சத்திலும் காணப் படும் அவனுடைய சான்றுகளைக் கொண்டு அவர்களை விழிப்படையச் செய்தது. அவர்களின் உள்ளங்களில் மறைந்திருக்கும் இறையச்சத்தையும் இறைமீதான தேட்டத்தையும் தூண்டியது. அவர்களின் இயல்பை மறைத் திருக்கும் இருள்களை விலக்கி அவர்களின் இயல்பைக் கிளர்ந்தெழச் செய்தது.*

*இந்த அத்தியாயம் இரண்டு தனித்தன்மைகளால் சிறப்படைகிறது. அவை அறபிய அறிவை விடுவிக்கும் விளக்கங்களும் அவர்களுக்குக் கூறுமாறு தூதருக்கு இடப்பட்ட கட்டளைகளும் ஆகும். அவையிரண்டும் அதிக அளவில் இடம்பெற்றுள்ளன.*

*எடுத்துக்காட்டாக, இந்த அத்தியாயத்தின் முதல் வசனத்தில் இறை வனைக் குறித்த விவகாரங்களில் ஒன்று மிகத் தீர்க்கமாகத் தெளிவு படுத்தப்படுவதை நாம் காண்கிறோம்: 'எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே.*

அவனே வானங்களையும் பூமியையும் படைத்தான். இருள்களையும் ஒளியையும் உண்டாக்கினான் ... (1)'

அல்லாஹ்தான் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தான். அவன்தான் சூரியன்களுக்கும் சந்திரன்களுக்கும் ஒளியை அளித்தவன்.

அவன் மகத்தானவனாகவும் தனியனாகவும் இருந்து அனைத்தையும் படைத்தபோதும் சில மூடர்கள் எதையும் படைக்காதவர்களை அவனுக்கு ஒப்பாக்குகிறார்கள். இது எப்படி சரியாகும்?

இந்தப் பூமியில் மனிதர்களுக்குத் தவணைகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. தவணை முடிந்தபிறகு ஒவ்வொருவரும் படைப்பாளனின் பக்கமே திரும்புவார்கள்.

முழு மனிதச் சமூகத்துக்கும் ஒரு தவணை இருக்கிறது. அதுதான் மறுமைநாளின் நிகழ்வு. பின்னர், வெளிப்படையானவற்றையும் இரகசியமானவற்றையும் அறிந்தவன் தன் அடியார்களிடையே அவர்கள் இவ்வுலகில் வாழ்ந்த முறைப்படி தீர்ப்பளிப்பான்.

மறுமையிலும் இம்மையிலும் அல்லாஹ்வுக்கே புகழனைத்தும் என்பதைத் தெளிவுபடுத்திய பிறகு இன்னொரு விசயம் தெளிவுபடுத்தப்படுகிறது: 'வானங்களிலும் பூமியிலும் அவனே இறைவன். நீங்கள் மறைப்பதையும் வெளிப்படுத்துவதையும் அவன் அறிவான். நீங்கள் சம்பாதிப்பவற்றையும் அவன் அறிவான். (3)'

இந்த அத்தியாயத்தில் அல்லாஹ்வைக் குறித்து அதிகமாகப் படர்க்கை வாசகம் இஸ்முல் மௌசூலுடன் இடம்பெற்றுள்ளது. உதாரணமாக: 'அவனே உங்களுக்காக நட்சத்திரங்களை உருவாக்கினான். அவற்றைக் கொண்டு தரையிலும் கடலின் இருளிலும் நீங்கள் வழியை அறிந்து கொள்வதற்காக ... (97)', 'அவனே ஓர் உயிரிலிருந்து உங்களைப் படைத்தான். ஒவ்வொருவருக்கும் ஒரு தங்குமிடமும் ஒப்படைக்கப்படும் இடமும் உண்டு. (98)'

படர்க்கை வாசகம் செவியேற்பவரை முன்னால் வைக்கிறது. அது அல்லாஹ் அவருடன் உரையாடுவது போன்றதாகும். அது அவருக்கு முன்னால் அல்லாஹ்வின் மகத்துவத்துக்கான அடையாளங்களை வைக்கிறது. அவரால் கீழ்ப்படிவதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாது.

இந்த வழிமுறை இணைவைப்பாளர்களிடத்தில் மட்டுமே தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எண்ணிவிட வேண்டாம். நிச்சயமாக இல்லை.

வேதக்காரர்களும் இதில் தங்களின் வேதங்களில் பெறாத புதிய, உயிரோட்டமான அறிவைப் பெற்றுக்கொண்டிருந்தார்கள். அது அவர்களின் உள்ளங்களில் மகத்தான தாக்கத்தை விட்டுச்சென்றது.

இதுபோன்று உண்மையான தொனியோடு, நுணுக்கமான அறிவோடு அல்லாஹ்வைப் பற்றிப் பேசக்கூடிய எந்த ஒரு வேதமும் வானத்திலிருந்து அருளப்படவில்லை.

அது மனிதர்களை அவர்களின் பழக்கங்களிலிருந்து விடுவித்து அவர்களிடையே காணப்பட்ட அலட்சியங்களை நீக்குகிறது.

இந்த அத்தியாயத்தில் விளக்கங்களோடு கூறுமாறு இடப்பட்ட கட்டளைகளையும் தொடர்ந்து காண்கிறோம். இணைவைப்பாளர்களிடம் விவாதித்துக் கொண்டிருக்கும் தன் தூதருக்கு ‘இவ்வாறு கூறுங்கள், இவ்வாறு கூறுங்கள்’ என்று அல்லாஹ் கட்டளையிடுகிறான்.

சில இடங்களில் ‘குல் - நீர் கூறும்’ என்ற வார்த்தை ஒரே வசனத்தில் இரு முறை இடம்பெற்றிருப்பதையும் காண்கிறோம்:

> ‘வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாருக்குரியவை?’ என்று நீர் கேளும். ‘எல்லாம் அல்லாஹ்வுக்கே உரியவை.’ என்று நீர் கூறும். அவன் கருணைபுரிவதைத் தன்மீது கடமையாக்கிக் கொண்டான். மறுமைநாளில் நிச்சயமாக அவன் உங்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டுவான். அதில் எத்தகைய சந்தேகமும் இல்லை. (12)

சில இடங்களில் அது ஒரே வசனத்தில் நான்கு முறை இடம்பெற்றுள்ளது:

> நீர் கேளும், ‘மிகப் பெரிய சாட்சி யாருடையது?’ நீர் கூறும், ‘அல்லாஹ்தான் எனக்கும் உங்களுக்குமிடையே சாட்சியாக இருக்கிறான். உங்களுக்கும் இந்தக் குர்ஆன் சென்றடைபவர்களுக்கும் எச்சரிக்கைசெய்வதற்காகவே எனக்குக் குர்ஆன் அருளப்பட்டுள்ளது. அல்லாஹ்வுடன் வேறு கடவுள்களும் இருக்கிறார்கள் என்பதற்கு நீங்கள் சாட்சி கூறுகிறீர்களா? நான் அவ்வாறு சாட்சி கூற மாட்டேன்.’ ‘அவன் ஒருவனே இறைவன். உங்களின் இணைவைப்பைவிட்டும் நான் விலகியவனாக இருக்கிறேன்.’ என்றும் நீர் கூறும். (19)

உயிரோட்டமான இந்த உரையாடல் உண்மையையும் உறுதியையும் கொண்டிருப்பதை நீங்கள் காணவில்லையா?

*தன்னை மறுப்பவர்களுக்குப் பதிலளிக்கும் பொருட்டு 'குல்' என்ற இந்த வார்த்தையைக் கொண்டு அல்லாஹ் தன் தூதருக்கு உதவுவதை நீங்கள் காணவில்லையா?*

*அல்அன்ஆம் என்ற இந்த அத்தியாயத்தில் மட்டும் இந்த வார்த்தை நாற்பத்து நான்கு முறை இடம்பெற்றுள்ளது.*

*இந்த அத்தியாயம் சத்தியத்துக்கும் அசத்தியத்துக்குமான மோதலின் உச்சகட்டத்தில் அருளப்பட்டது. பெரும்பாலான அறிஞர்களின் கருத்துபடி முழு அத்தியாயமும் ஒரே தடவையில் அருளப்பட்டது.*

*சிலர், 'இந்த அத்தியாயத்தின் சில வசனங்கள் மதீனாவில் அருளப் பட்டவை' என்று கூறுகிறார்கள். இது தவறான கருத்து. இதில் வேதக் காரர்களைக் குறித்து கூறப்பட்டிருப்பதால் மக்காவில் வேதக்காரர்களைக் குறித்து கூறப்பட வாய்ப்பு இல்லை என்று அவர்கள் கருதுகிறார்கள். இதுவும் பிழையான எண்ணமாகும்.*

*இன்னும் சிலர், 'மதீனாவில்தான் ஸகாத் கடமையாக்கப்பட்டது. இதில் ஸகாத்தைக் குறித்தும் கூறப்பட்டிருப்பதால் அதுகுறித்த வசனங் கள் மதீனாவில் அருளப்பட்டிருக்கலாம்.' என்று கூறுகிறார்கள். உண்மை யில் ஸகாத்குறித்த கட்டளை மக்காவிலேயே அருளப்பட்டுவிட்டது. மதீனாவில் அதற்குரியவர்கள் விவரிக்கப்பட்டார்கள்.*

*இந்த அத்தியாயம் ஒரே தடவையில் அருளப்பட்டது. அப்போது ஆயிரக்கணக்கான வானவர்கள் வருகைதந்திருந்தார்கள். நபியவர்கள் ஒரு மணி நேரத்தில் முழு அத்தியாயத்தையும் மனனம் செய்துவிட்டார் கள். அவர்களின் உள்ளம் மின்னலைவிட வேகமாக இருந்தது. தற் காலத்தில் பதிவுசெய்யப்படும் சிடிக்களைவிட அவர்களின் நினைவாற்றல் நுணுக்கமானதாக இருந்தது.*

*அவர்கள் அதனை மனனம் செய்தபிறகு மனனம் செய்பவர்களையும் எழுத்தர்களையும் அழைத்து அவர்களிடம் அல்லாஹ்விடமிருந்து வந் துள்ளதை ஓதிக்காட்டி, எழுதிக்கொள்ளுமாறு கூறினார்கள்.*

*இந்த அத்தியாயம் உள்ளடக்கியுள்ள விளக்கங்கள், கூறுமாறு நபி யவர்களுக்கு இடப்பட்ட கட்டளைகள் ஆகியவற்றோடு இன்னும் பல விவகாரங்களையும் நாம் எடுத்துரைக்க விரும்புகிறோம்.*

*ஆரம்பத்திலேயே அத்தியாயம் தெளிவுபடுத்தும் விசயங்களுள் ஒன்று, அநியாயக்காரர்களின் சேருமிடம். அவர்கள் எவ்வளவுதான் நீண்ட வாழ் நாளைப் பெற்றிருந்தாலும் சரியே.*

அவர்களின் நிராகரிப்பு பல நிலைகளைக் கடந்துவருகிறது. அவர்கள் புறக்கணிப்பின் மூலம் தங்களின் நிராகரிப்பைத் தொடங்குகிறார்கள். பின்னர், பொய்யர் என்று தூற்றுகிறார்கள். பின்னர், தொடர்ச்சியான பரிகாசத்தின் மூலம் தொல்லையளிக்கிறார்கள். பின்னர், கடுமையான முறையில் எதிர்க்கிறார்கள்.

இந்த இடைவெளியை ஞானம்மிக்க இறைவன் நம்பிக்கையாளர்கள், நிராகரிப்பாளர்கள் என அனைவருக்கும் சோதனையாகவே ஆக்கியுள்ளான்.

இதுதான் இவ்வுலக வாழ்க்கையின் இயல்பு. ஆனால், இறுதி விளைவு நம்பிக்கையாளர்களுக்குச் சாதகமாகவும் நிராகரிப்பாளர்களுக்குத் தண்டனையாகவும் அமையும். ஆகவேதான் அல்லாஹ் அன்றைய நிராகரிப்பாளர்களைப் பார்த்துக் கூறுகிறான்:

> அவர்களுக்கு முன்னர் நாம் எத்தனையோ சமூகங்களை அழித்திருக்கிறோம் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? பூமியில் உங்களுக்கு வழங்காத வசதிகளையெல்லாம் அவர்களுக்கு வழங்கியிருந்தோம். நாம் அவர்களின் மீது வானத்திலிருந்து நன்கு மழை பொழியச் செய்து ஆறுகளை ஓடச்செய்தோம். ஆயினும், அவர்களது பாவங்களினால் அவர்களை அழித்துவிட்டோம். அவர்களுக்குப் பின்னர் வேறொரு சமூகத்தினரை உருவாக்கினோம். (6)

இதுதான் குழப்பம்செய்த நாகரிகங்கள் அடைந்த விளைவு. இதுதான் வரம்புமீறிய, கர்வம் கொண்ட சமூகங்கள் அடைந்த விளைவு.

குறிப்பிட்ட காலம்வரை அவை பூமியில் நிலைத்திருந்தன. பின்னர், அவை மறைந்தபிறகு அவற்றின் இடங்களில் வேறு சமூகங்கள் தோன்றின.

இப்போது நமக்குச் சில கேள்விகள் எழுகின்றன: இதுதான் கலப்பற்ற நிராகரிப்பின் நிலையா அல்லது இது நிராகரிப்பாளர்களுடன் சத்தியத்தையும் அசத்தியத்தையும் நேர்வழியையும் மனஇச்சையையும் கலந்த பிற சமூகங்களும் அடையும் பொதுவான விதிமுறையா? வேறொரு வாசகத்தில் இவ்வாறு கூறலாம்: ஈமானை முழுமையாக நிராகரித்தவர்களும் தங்களின் ஈமானைக் கொண்டு எந்த நன்மையையும் சம்பாதிக்காதவர்களும் சமமாவார்களா?

இந்த அத்தியாயத்தில் உள்ள வசனங்களிலிருந்து இந்த விசயத்தில் அனைவரும் சமமானவர்கள் என்றே அறிய முடிகிறது. சமூகங்கள் தண்டிக்கப்படும் வழிமுறையைத் தெளிவுபடுத்தும் பின்வரும் வசனத்தைக் கவனித்துப் பாருங்கள்:

*உமக்கு முன்னர் பல சமூகத்தாரிடம் நாம் தூதர்களை அனுப்பி னோம். அவர்கள் பணிந்திட வேண்டும் என்பதற்காக அவர்களை நாம் வேதனையாலும் துன்பத்தாலும் தண்டித்தோம். நமது தண் டனை அவர்களிடம் வந்தபோது அவர்கள் ஏன் பணியவில்லை? உண்மையில் அவர்களின் இதயங்கள் இறுகிவிட்டன. அவர்களின் செயல்களை ஷைத்தான் அவர்களுக்கு அழகாக்கிக் காட்டிவிட்டான்.* (42,43)

*அல்லாஹ் அவர்களுக்கு எதிராகச் சூழ்ச்சிசெய்தான். அவர்கள் அனை வரையும் வீணாக்கினான். தங்களின் பாவங்களில் நிலைத்திருந்த நிலை யில் திடீரென அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள்: 'ஆகவே அக்கிரமக்கார மக்கள் அடியோடு அழிக்கப்பட்டார்கள். அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்.* (45)'

இஸ்லாமியச் சமூகத்தை அதன் நீண்ட வரலாற்றுடன் ஆராய்ந்து பார்த்ததில் இந்த இறை நியதி மீண்டும்மீண்டும் செயல்பட்டிருப்பதை நான் கண்டேன். இணைவைப்பாளர்கள் எதனைக் கொண்டு எச்சரிக்கப் பட்டார்களோ அது வழிதவறியவர்களுக்கும் பொருந்தும்.

*நீர் கூறும், 'அவன் உங்களுக்கு மேலிருந்தும் அல்லது உங்கள் பாதங்களின் கீழிருந்தும் உங்கள்மீது ஏதேனும் ஒரு வேதனையை அனுப்பிவிடவும் அல்லது உங்களைப் பல பிரிவுகளாக்கி, ஒரு வருக்கு மற்றவருடைய பலத்தைச் சுவைக்கச்செய்திடவும் ஆற்றல் படைத்தவன்.' அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக எவ்வாறு நாம் பல்வேறு கோணங்களில் ஆதாரங்களைத் தெளிவு படுத்துகிறோம் என்பதைப் பாருங்கள். அது உண்மையாக இருந்த போதிலும் உம் சமூகத்தினர் அதனை மறுத்துவிட்டனர். நீர் கூறும், 'நான் உங்களுக்குப் பொறுப்பாளன் அல்லன். ஒவ்வொரு விசயத் துக்கும் ஒரு நேரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விரைவில் நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.'* (65-67)

*பொறுமையாளன் நீண்ட காலம் பொறுமையைக் கடைப்பிடிக்கிறான். ஆனால், அவன் பிடித்துவிட்டால் அது உண்மையில் வேதனைமிக்க பிடியாகவே இருக்கும்: 'அக்கிரம்செய்யும் ஊர்வாசிகளை உம் இறைவன் பிடித்தால் அவனுடைய பிடி இவ்வாறுதான் இருக்கும். நிச்சயமாக அவனுடைய பிடி வேதனைமிக்கது; மிகக் கடுமையானது.* (11:102)'

❖ ❖ ❖

*நீங்கள் ஒரு மனிதனுக்கு, 'உன் அறிவுக்கு மதிப்பளி. நீ ஆதாரத்தோடு சட்டங்களைப் பின்பற்று' என்று அறிவுரை கூறும்போது, உம்முடைய*

அறிவுரையை வலுப்படுத்தும் ஓர் அற்புதத்தைக் கொண்டுவாரும் என்று அவன் பதிலளித்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

சிந்திக்கத் தெரியாத மூடனுக்கு முன்னால் அற்புதங்கள் என்ன செய்ய முடியும்? அன்றைய, இன்றைய இணைவைப்பாளர்களின் துன்பம், தங்களின் மடத்தனத்தால் அவர்கள் சிறைபிடிக்கப்பட்டிருப்பதுதான்.

ஆகவேதான், அற்புதங்கள் அவர்களுக்குப் பயனளிக்காது என்பதைத் தெளிவுபடுத்தியவனாக அல்லாஹ் கூறுகிறான்:

> காகிதத்தில் எழுதப்பட்ட ஒரு வேதத்தை நாம் உமக்கு அருளி, அதனைத் தம் கைகளால் அவர்கள் தொட்டுப்பார்த்தாலும் இது தெளிவான ஒரு சூனியமே என்றுதான் நிராகரிப்பாளர்கள் கூறுவார்கள். (7)

அவர்கள் ஒரே சிந்தனையால் வீழ்த்தப்பட்டுள்ளார்கள். அதைத் தவிர வேறு எதையும் அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

நபியவர்களுடன் ஒரு வானவர் வந்து அவர்களை வலுப்படுத்தினால் நாங்கள் நம்பிக்கை கொள்வோம் என்றார்கள் இணைவைப்பாளர்கள்: ‘இவருடன் ஒரு வானவர் இறக்கப்பட்டிருக்க வேண்டாமா என்று அவர்கள் கேட்கிறார்கள். அவ்வாறு நாம் ஒரு வானவரை இறக்கியிருந்தால் விவகாரம் முடிந்திருக்கும். பிறகு அவர்களுக்குச் சிறிதும் அவகாசமளிக்கப்பட்டிருக்காது. (8)’

வானவர் இறக்கப்பட்டபிறகு அவர்கள் தங்களின் நிராகரிப்பில் நிலைத்திருக்க முடியாது. அடியோடு அவர்கள் அழிக்கப்பட்டிருப்பார்கள்.

அவர்கள் சான்றுகளை வேண்டினார்கள். ஆனால், சான்றுகள் வந்த பிறகும் அதனை நிராகரித்தார்கள்: ‘முற்காலத் தூதர்கள் சான்றுகளுடன் அனுப்பப்பட்டவாறு இவரும் நம்மிடம் ஒரு சான்றினைக் கொண்டு வரட்டும் என்று அவர்கள் கூறுகிறார்கள். இவர்களுக்கு முன்னர் நாம் அழித்துவிட்ட ஊரிலிருந்த மக்களில் யாரும் நம்பிக்கை கொள்ளவில்லை. இவர்கள் நம்பிக்கை கொள்ளப்போகிறார்களா என்ன? (21:5,6)’

பின்னர், வானவரைக் காண்பது சாத்தியமற்றது என்பதையும் மனிதர்களால் குறிப்பிட்ட உருவங்களைக் குறிப்பிட்ட தூரங்களில் மட்டுமே காண முடியும் என்பதையும் அவர்களின் கண்களால் வானவர்களையோ ஜின்களையோ காண முடியாது என்பதையும் தெளிவுபடுத்துகிறான்.

வானவர்கள் மனித உருவங்களில் வந்தாலும் இணைவைப்பாளர்கள் அவர்களின் மீது சந்தேகம்தான் கொள்வார்கள். அவன் கூறுகிறான்: ‘நாம்

ஒரு வானவரைத் தூதராக அனுப்பியிருந்தால் அவரையும் மனித உரு வத்திலேயே அனுப்பியிருப்போம். அவர்கள் இப்போது வீழ்ந்து கிடக்கும் சந்தேகத்திலேயே அவர்களை ஆழ்த்தியிருப்போம். (9)'

அன்றைய அறபியாவின் இணைவைப்பாளர்கள் இஸ்லாத்தை எதிர்த் தார்கள். தூதரை நிராகரித்தார்கள்; பரிகாசம்செய்தார்கள். தங்களின் நிலைப்பாட்டிலிருந்து சிறிதளவுகூட அவர்கள் மாறவில்லை. அல்லாஹ் தன் தூதருக்குப் பொறுமையைக் கடைப்பிடிக்கும்படியும் அவர்களைத் தொடர்ந்து அழைத்துக்கொண்டிருக்கும்படியும் உறைந்துபோன அவர் களின் அறிவை உருகவைக்க முயலும்படியும் அறிவுறுத்துகிறான்: 'உங்க ளுக்கு முன்னரும் தூதர்கள் பலர் பரிகசிக்கப்பட்டார்கள். முடிவில் எதனைக் கொண்டு அவர்கள் பரிகாசம் செய்தார்களோ அதுவே பரிகாசம் செய்தவர்களைச் சூழ்ந்துகொண்டது. (10)'

ஆனாலும், நபியவர்கள் கவலை கொண்டார்கள். அவர்களின் நிரா கரிப்பு நபியவர்களைப் பாதித்தது. நிராகரிப்பும் பரிகாசமும் கண்ணிய மான மனிதரைப் பாதிக்கவே செய்யும். அவர்களின் நிலைப்பாட்டை மாற்றும் இறைவனின் தலையீட்டை எதிர்பார்த்தார்கள். ஆகவே, அல் லாஹ் அவருக்குக் கூறினான்: 'அவர்கள் கூறுவது உம்மை வருத்தமடையச் செய்கிறது என்பதை நாம் அறிவோம். அவர்கள் உம்மை மறுக்கவில்லை. மாறாக, இந்த அக்கிரமக்காரர்கள் உண்மையில் அல்லாஹ்வின் சான்று களைத்தான் மறுக்கிறார்கள். (33)'

அவர்கள் உம்மை நிராகரிப்பதைவிட அல்லாஹ் அனுப்பிய தூதரை நிராகரிப்பது மிகப் பெரிய குற்றம். அவர்கள் உம்முடன் போரிடவில்லை. உம் இறைவனுடன் போரிடுகிறார்கள். உம் இறைவனின் சான்றுகளை மறுக்கிறார்கள். ஆகவே, அவர்கள் கூறுவதைப் பொறுமையாகச் சகித்துக் கொள்ளும்:

> உமக்கு முன்னரும் தூதர்கள் நிராகரிக்கப்பட்டார்கள். நம்முடைய உதவி வரும்வரை அவர்கள் நிராகரிக்கப்பட்டதையும் துன்புறுத்தப் பட்டதையும் பொறுத்துக்கொண்டார்கள். அல்லாஹ்வின் வாக்குகளை மாற்றுபவர் எவரும் இல்லை. தூதர்களின் சில செய்திகள் உம்மிடம் வந்தே உள்ளன. (34)

ஆனாலும், நபியவர்கள் அவர்களை வாயடைக்கச் செய்யும் அற்புதம் வேண்டுமென ஆசை கொண்டார்கள். அல்லாஹ் தூதருக்குப் பதிலளித் தான்: 'அவர்களின் புறக்கணிப்பு உமக்கு கஷ்டமாகத் தோன்றினால் -உம்மால் முடியுமானால்- பூமியில் ஏதேனும் சுரங்கத்தின் மூலமோ

வானத்தில் ஏணி வைத்தோ அவர்களிடம் ஒரு சான்றினைக் கொண்டு வாரும். (35)'

உம்மால் முடிந்தால் செய்யும். உம்மால் ஒருபோதும் அவ்வாறு செய்ய முடியாது. அதிகாரம் அனைத்தும் அல்லாஹ்வின் கைவசமே உள்ளன. சமூகங்களின் விதியை அவனே நிர்ணயம்செய்கிறான். அவன் பக்கமே விவகாரங்கள் அனைத்தும் திரும்புகின்றன: 'அல்லாஹ் நாடியிருந்தால் அவர்கள் அனைவரையும் நேர்வழியில் ஒன்றுசேர்த்திருப்பான். ஆகவே, நீர் அறிவீனர்களில் ஒருவராக ஆகிவிடாதீர். (35)'

மனிதர்களில் வடிகட்டிய முட்டாள்களாக நான் காண்பது 'குர்ஆன் வானத்திலிருந்து முஹம்மதுக்கு அருளப்பட்டுள்ளது, முஹம்மதுக்கு அதில் எந்தப் பங்கும் இல்லை' என்பதில் சந்தேகம் கொள்பவர்கள்.

நிலையான விதிகளைக் கொண்டு அல்லாஹ் தன் அடியார்களை ஆட்சிசெய்கிறான். அவற்றை யாரும் மாற்ற முடியாது. அவனுடைய தூதர்கள் அழைப்புப் பணியின் மூலம், பெரும்பான்மையான மக்கள் அளிக்கும் சிரமத்தின் மூலம், அவர்களின் தீய பழக்கங்களை, சடங்குகளை எதிர்த்துப் போராடுவதன் மூலம் சோதிக்கப்படுகிறார்கள்.

சிந்தனைச் சுதந்திரத்தை இழக்கும் மக்களுக்கு அல்லாஹ்விடத்தில் குறிப்பிட்ட தவணை உண்டு. அதுவரை அவர்கள் விரும்பியவாறு இருந்துகொள்ளலாம். தவணை நிறைவடைந்துவிட்டால் அவனுடைய விதி நிறைவேறியே தீரும். அல்லாஹ் தன் தூதருக்குப் புரியவைத்தான். இந்த மக்களின் துன்பம் என்னவெனில், அவர்களின் அறிவு அவர்களைத் தூரமான இடத்திலிருந்து அழைக்கப்படுபவர்களைப் போன்று ஆக்கிவிட்டது. அவர்கள் சத்தியத்தைச் செவியேற்றும் செவிடர்களாவர்: 'செவியேற்பவர்கள்தாம் ஏற்றுக்கொள்வார்கள். இறந்தவர்களை அல்லாஹ் எழுப்புவான். பின்னர், அவர்கள் அவன் பக்கமே திரும்பக் கொண்டு வரப்படுவார்கள். (36)'

அவர்கள் மீண்டும் தங்களின் முதல் கோரிக்கையையே முன்வைத்தார்கள்:

> 'அவரது இறைவனிடமிருந்து ஏதேனும் ஒரு சான்று அவருக்கு அருளப்பட்டிருக்க வேண்டாமா?' என்று அவர்கள் கேட்கிறார்கள். நீர் கூறும், 'சான்றினை அருள்வதற்கு அல்லாஹ் ஆற்றலுடையவனே.' ஆயினும், அவர்களில் பெரும்பாலோர் அறிந்துகொள்வதில்லை. (37)

எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது! இந்தப் பிரபஞ்சத்தின் ஒழுங்க மைப்பு அல்லாஹ்வைக் குறித்து அறிவிக்கவில்லையெனில் வழக்கத் துக்கு மாறான ஒரு நிகழ்வு அவனைக் குறித்து அறிவித்துவிடுமா?

பல காலங்களாக சந்திரன் பூமியைச் சுற்றிக்கொண்டிருக்கிறது. அது தாமதமாகச் சுற்றுவதுமில்லை; தவறான பாதையில் செல்வதுமில்லை.

நிலையான இந்தக் காட்சி படைப்பாளனின் ஆற்றலுக்குச் சான்று, இல்லையா? சில நிமிடநேரங்கள் சந்திரன் பிளப்பது அவனுடைய ஆற்றலுக்குச் சான்றாகுமா?

இரவு, பகல் மாறிமாறி ஏற்பட்டும் அணையாமல் எரிந்துகொண்டி ருக்கும் விளக்கு மகத்தான அல்லாஹ்வுக்குச் சான்று, இல்லையா? மூசாவின் பணியாளர் யூஷா அதனைச் சிறிது நேரம் தாமதமாக மறையச் செய்தது அவனுக்கு ஆதாரமாகுமா?

மனிதர்கள், விலங்குகள், பறவைகள், புழுக்கள் என ஒவ்வொரு உயிரினங்களையும் நான் காண்கிறேன். அவற்றின் வாழ்வில், ஆபத்தி லிருந்து தப்புவதற்கு அவை பெற்றுள்ள வழிமுறைகளில், வாழ்வாதா ரத்துக்கான உத்தரவாதத்தில் செயல்படும் இறை நியதிகளைக் கண்டு நான் ஆச்சரியமடைகிறேன்.

தூதரிடம் வழக்கத்துக்கு மாறான நிகழ்வுகளை வேண்டுவோருக்காகப் பின்வரும் வசனம் இங்கு குறிப்பிடப்பட்டிருப்பதன் இரகசியத்தை நாம் உணர்ந்துகொள்கிறோம்:

> பூமியில் ஊர்ந்துசெல்லும் பிராணிகளும் தமது இரு இறக்கை களால் பறந்து செல்லும் பறவைகளும் உங்களைப் போன்ற இனங்கள்தாம். நாம் பதிவேட்டில் குறிப்பிடாமல் எந்த ஒன்றையும் விட்டுவைக்கவில்லை. பின்னர், அவையனைத்தும் தங்கள் இறை வனிடமே ஒன்றுதிரட்டப்படும். (38)

ஒரு தாய் சிட்டுக்குருவி தன் குஞ்சுகளுக்கு உணவளிக்கும் காட்சி என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அது வயல்களுக்கிடையே சென்று தன் வயிற்றில் உணவை நிரப்பி, பின்னர் கூட்டிற்கு வந்து தன் அலகைத் திறந்து தன் குஞ்சுகளுக்கு ஊட்டுகிறது.

ஒவ்வொன்றையும் அல்லாஹ் மிகச் சிறந்த முறையில் படைத்துள்ளான். ஆனாலும், இணைவைப்பாளர்கள் மூடத்தனத்தால் அல்லாஹ் ஒருவ னுக்கு இணைகளை ஏற்படுத்துகிறார்கள். எதையும் கேட்க முடியாத செவிடான சிலைகளை வணங்குகிறார்கள். அவர்கள் முஹம்மது

*நபியிடம் கூறினார்கள், 'எங்களுக்காக வழக்கத்துக்கு மாறான ஒரு நிகழ்வைக் கொண்டுவாரும். நாங்கள் உம்மை நம்புகிறோம்.'*

> *நம் சான்றுகளை மறுப்பவர்கள் காரிருளில் தத்தளிக்கும் செவிடர்களும் ஊமையர்களும் ஆவர். தான் நாடுவோரை அல்லாஹ் வழி தவறச் செய்துவிடுகிறான். தான் நாடுவோரை நேரான வழியில் செலுத்துகிறான்.* (39)

*இதில் விசித்திரம் என்னவென்றால், தாங்கள் வேண்டியவாறு வழக்கத்துக்கு மாறாக ஏதேனும் நிகழ்ந்துவிட்டால் நம்பிக்கை கொள்வதாகச் சத்தியம் செய்து கூறுகிறார்கள்:*

> *தங்களிடம் ஏதேனும் சான்று வருமானால் நிச்சயம் நாங்கள் நம்பிக்கை கொள்வோம் என்று அவர்கள் அல்லாஹ்வின் மீது உறுதியாக ஆணையிட்டுக் கூறுகிறார்கள். நீர் கூறும், 'சான்றுகள் அனைத்தும் அல்லாஹ்விடமே உள்ளன.' உமக்கு என்ன தெரியும்? அவை அவர்களிடம் வந்துவிட்டாலும் அவர்கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள். அவர்கள் ஆரம்பத்தில் இதன் மீது நம்பிக்கை கொள்ளாததைப் போலவே நாம் அவர்களின் உள்ளங்களையும் பார்வைகளையும் புரட்டி அவர்களது வரம்புமீறலிலேயே தடுமாறித் திரியுமாறு அவர்களை விட்டுவிடுவோம்.* (110, 111)

*எப்போதும் தங்கள் இமைகளை மூடியே வைத்திருக்க வேண்டும் என்று பிடிவாதம் கொண்டிருக்கும் குருடர்களால் பார்க்க முடியுமா என்ன?*

*நம்பிக்கை கொண்ட பலவீனர்களை விரட்டி, தங்களுக்கு மட்டுமே சபையை உரித்தாக்க வேண்டும் என்று சிலை வழிபாட்டாளர்கள் நபியவர்களிடம் கோரிக்கை வைத்தார்கள். அல்லாஹ் தன் தூதருக்குக் கூறினான்: 'தங்கள் இறைவனின் திருப்தியை நாடி காலையிலும் மாலையிலும் அவனை அழைப்பவர்களை நீர் உம்மைவிட்டு விரட்டிவிடாதீர்.* (52)*' மாறாக, அந்த நம்பிக்கையாளர்களுக்குத் தன்னுடைய மன்னிப்பும் திருப்தியும் உண்டு என்று நற்செய்தி கூறுமாறு அல்லாஹ் தன் தூதருக்குக் கட்டளையிட்டான்:*

> *நம்முடைய வசனங்களின் மீது நம்பிக்கை கொண்டோர் உம்மிடம் வந்தால் உங்கள்மீது சாந்தி உண்டாகட்டும் என்று நீர் கூறும். உங்கள் இறைவன் கருணைபுரிவதைத் தன்மீது கடமையாக்கிக் கொண் டான். உங்களில் யாரேனும் அறியாமையினால் பாவம் செய்துவிட்டு அதன் பின்னர் மன்னிப்பு கோரி தன்னைச் சீர்திருத்திக் கொண்டால், அல்லாஹ் பெரும் மன்னிப்பாளனாகவும் இணையிலாக் கிருபையாளனாகவும் இருக்கிறான்.* (54)

*கண்ணியம்மிக்க தூதர் தம்முடைய நேரான வழியில் நிலைத்திருந்து, தெளிவான அகப்பார்வையோடு அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைத்தார். தமக்கு வஹீயாக அறிவிக்கப்பட்ட அடிப்படையான அம்சங்களை அவர்களுக்குத் தெளிவுபடுத்தினார்.*

*அவர் இறை வழிகாட்டலைக் கொண்டு தம்மீது சுமத்தப்பட்ட ஆட்சேபணைகளுக்குப் பதிலளித்தார். பொறுமைமிக்க, உறுதியான இந்தத் தூதர் பிடிவாதம் கொண்ட இணைவைப்பாளர்களை இந்த வசனத்தால் எதிர்கொள்வதைக் காண்பவர் உருகாமல், கவலை கொள்ளாமல் இருப்பதில்லை:*

> *நீர் கூறும், 'அல்லாஹ்வை அன்றி நீங்கள் அழைக்கின்றவற்றை வணங்குவதைவிட்டும் நான் தடுக்கப்பட்டுள்ளேன்.' நீர் கூறும், 'உங்களின் விருப்பங்களை நான் பின்பற்ற மாட்டேன். அவ்வாறு செய்தால் நான் வழிதவறி, நேர்வழி பெறுவோரில் இல்லாதவனாகி விடுவேன்.' நீர் கூறும், 'நான் என் இறைவனிடமிருந்து வந்துள்ள தெளிவான ஒரு சான்றின் மீது இருக்கிறேன். ஆயினும், நீங்கள் அதனை மறுத்துவிட்டீர்கள். நீங்கள் அவசரப்படும் விசயம் என்னிடம் இல்லை. தீர்ப்பளிக்கும் அதிகாரம் அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியது. அவனே சத்தியத்தைத் தெளிவுபடுத்துகிறான். அவனே தீர்ப்பளிப்பதில் சிறந்தவன்.'* (56,57)

*கண்ணியமான இந்த அழைப்பைச் சிந்தித்துப்பாருங்கள். தம் மனதில் இருக்கும் தெளிவான நம்பிக்கையின் மூலம் அவர்களின் உள்ளங்களில் நேரான வழியைக் காட்டும் நம்பிக்கையை ஏற்படுத்த நாடுகிறார். ஆனால், அவரது சமூகத்தினரோ தண்டனைக்காக அவசரப்படுகிறார்கள்.*

> *நீர் கூறும், 'நீங்கள் அவசரப்படும் விசயம் என்னிடம் இருந்திருந்தால் எனக்கும் உங்களுக்குமிடையே உள்ள விவகாரம் முடிந்திருக்கும். அல்லாஹ் அநியாயக்காரர்களை நன்கறிவான்.'* (58)

*இவ்வாறு தொடர் போதனை, கூறுமாறு இடப்பட்ட கட்டளையைக் கூறுதல் ஆகியவற்றின் மூலம் தூதர் தம் தூதுப்பணியை நிறைவேற்றுகிறார்.*

❖ ❖ ❖

*இந்த அத்தியாயத்தையும் இறைவனின் மகத்துவத்தை எடுத்துரைக்கும், மனிதர்களின் ஆட்சேபணைகளைத் தூள்தூளாக்கும் விளக்கங்களையும் கூறுமாறு இடப்பட்ட கட்டளைகளையும் நிதானமாகப் படித்தபிறகு எனக்கு ஒரு கேள்வி எழுந்தது: அல்லாஹ்வின் ஆற்றலுக்கு ஆதாரமாக*

விளங்கும் இந்த அத்தியாயத்தைவிட வழக்கத்துக்கு மாறான நிகழ்வுகள் என்ன செய்துவிட முடியும்?

எனக்கு நானே கூறிக்கொண்டேன்: வழக்கத்துக்கு மாறான நிகழ்வு களை ஒரு புறமும் இந்த அத்தியாயத்தை இன்னொரு புறமும் வைத்தால் இதுதான் அல்லாஹ்வின் சான்றுகளைத் தெளிவாக அறிவிக்கக்கூடிய தாகவும் அவனுடைய மகத்துவத்தைச் சிறந்த முறையில் தெளிவுபடுத்தக் கூடியதாகவும் இருக்கும். கொஞ்சம் கவனத்தோடு இந்த வசனத்தைப் படியுங்கள்:

> அவனிடமே மறைவானவற்றின் திறவுகோல்கள் இருக்கின்றன. அவனைத் தவிர வேறு யாரும் அவற்றை அறிய மாட்டார்கள். நிலத்திலும் நீரிலும் உள்ளவற்றை அவன் அறிவான். மரத்திலிருந்து ஓர் இலை உதிர்ந்தால்கூட அதையும் அவன் அறிவான். பூமியின் இருளில் விழும் விதைகள், அது பசுமையானதோ காய்ந்ததோ அனைத்தும் தெளிவான புத்தகத்தில் பதியப்படாமல் இல்லை. (59)

நமக்கு மறைவாக இருக்கக்கூடியவை யாவும் படைப்புகள் அனைத்தை யும் படைத்துப் பராமரிக்கும் அல்லாஹ்வுக்கு வெளிப்படையானவை.

பெரும்பாலான படைப்புகள் நமக்கு மறைவாகவே இருக்கின்றன.

நீங்கள் ஒரு மனிதனைப் பார்க்கிறீர்கள். அவனுடன் உரையாடுகிறீர்கள். அவனுடைய முகத்தை, வெளித்தோற்றத்தை, ஆடையை உங்களால் காண முடியும். ஆனால், அவனுடைய சிந்தனைகளையோ உள்ளிருக்கும் குடல்களையோ உங்களால் காண முடியாது.

ஆனால், படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் இறைவன் வெளிப்படையானவற்றையும் மறைவானவற்றையும் பார்க்கி றான். அவன் ஒரே சமயத்தில் கோடிக்கணக்கான மனிதர்களை அவர்களின் அனைத்தோடும் பார்க்கிறான்.

அவனுடைய இந்தப் பார்வையோடு ஒப்பிடும்போது மனிதனின் பார்வை மிகமிகப் பலவீனமானது; வரம்புக்குட்பட்டது. மனிதனால் மிகச் சிறிய அளவில்தான் பார்க்க முடிகிறது. அல்லாஹ்வோ மனிதனின் ஆரம்பம்தொட்டு இறுதிவரை அனைத்தையும் அறியக்கூடியவனாக இருக்கிறான். அவன் ஒவ்வொன்றையும் பார்ப்பவனாக இருக்கிறான்.

மறைவானவற்றின் திறவுகோல்கள் அவனிடமே உள்ளன. அவன் அதே போன்று நீரிலும் நிலத்திலும் உள்ள யாவற்றையும் அறிகிறான்.

*என் வீட்டில் அமர்ந்து டிவி பார்த்துக்கொண்டிருந்தேன். ஒரு சேனலில் ஒரு காட்சியைக் கண்டேன்: சீற்றம் கொண்ட அலைகள் ஒரு பெரும் கப்பலை அதகளப்படுத்திக்கொண்டிருந்தன, அந்தக் கப்பலை மூழ் கடித்துவிட நெருங்கிவிட்டன.*

*எனக்கு நானே கூறிக்கொண்டேன்: அல்லாஹ் இங்கும் அங்கும் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டும் இருக்கி றான். அவன் வெறுமனே பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டுமா இருக்கிறான். மாறாக, படைக்கிறான், நிர்வகிக்கிறான், உயிர்கொடுக்கி றான், மரணிக்கச்செய்கிறான், நீரிலும் நிலத்திலும் உள்ள யாவற்றையும் தன் நாட்டத்திற்கேற்ப.*

*அல்லாஹ்வின் மகத்துவத்தை எடுத்துரைக்கும் வசனத்தோடு நான் கடந்துசென்றேன். மண்ணின் இருளில் விதையுடன் இருப்பவன் யார்? அதிலிருந்து அவன் பயிர்களையும் கனிகளையும் படைக்கிறான். நமக்கு நல்ல விளைச்சல்களை, கனிகளை உணவாக அளிக்கிறான்.*

*பூமியின் பகுதிகளில் முளையக்கூடிய மரங்களுடன் இருப்பவன் யார்? அவற்றிலிருந்து எத்தனை இலைகள் விழுகின்றன என்பதையும் அவன் அறிவான்:*

> *மரத்திலிருந்து ஓர் இலை உதிர்ந்தால்கூட அதையும் அவன் அறி வான். பூமியின் இருளில் விழும் விதைகள், அது பசுமையானதோ காய்ந்ததோ அனைத்தும் தெளிவான புத்தகத்தில் பதியப்படாமல் இல்லை.* (59)

*அது கண்ணோட்டரீதியான அறிவு மட்டுமல்ல. மாறாக, ஏடுகளில் அனைத்தையும் அவன் பதிவுசெய்கிறான்: 'சிறியவை, பெரியவை அனைத்தும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.* (54:53)*'*

*இந்தக் கணக்கிடுதலுக்குப் பிறகு இந்தப் பூமியில் மனித வாழ்வும் மனிதர்கள் அனைவரின் செயல்பாடுகளும் கணக்கிடப்படுகின்றன: 'அவனே இரவில் உங்கள் உயிரைக் கைப்பற்றுகிறான். பகலில் நீங்கள் செய்பவற்றை அவன் அறிகிறான். பின்னர், நிர்ணயிக்கப்பட்ட தவணையை நிறைவுசெய்வதற்காக உங்களை மீண்டும் அவன் எழுப்புகிறான்.* (60)*'*

*பகலின் உழைப்புக்குப் பிறகு இரவில் நாம் உறங்குகிறோம். இரு நிலைகளிலும் நம்முடைய ஆன்மாக்கள் அவன் கைவசமே உள்ளன. இந்த உலகில் நிர்ணயிக்கப்பட்ட தவணையை நாம் நிறைவுசெய்தவுடன் அவன் நம் ஆன்மாக்களைக் கைப்பற்றிவிடுகிறான்.*

*நாம் நம்முடைய தவணையை நிறைவுசெய்துவிட்டால் நம் ஆன்மாக் களை அவன் கைப்பற்றிவிடுகிறான். அதனை மீண்டும் இவ்வுலகுக்குத் திருப்பி அனுப்புவதில்லை. நாம் செய்த செயல்களுக்குக் கூலிபெறும் சமயம் நெருங்கிவிடும்: 'பின்னர், அவன் பக்கமே நீங்கள் திரும்பிச் செல்ல வேண்டும். அப்போது நீங்கள் செய்துகொண்டிருந்ததை அவன் உங்களுக்கு அறிவிப்பான்.* (60)'

*இதற்குப் பிறகு இறைவனின் மகத்துவத்தை எடுத்துரைக்கும் வச னங்களில் ஒன்றையும் அதனைத் தொடர்ந்து அவனுடைய அழகை எடுத்துரைக்கும் வசனங்களில் ஒன்றையும் படியுங்கள்.*

*முதல் வசனம்:*

*அவன் தன் அடியார்களின் மீது அதிகாரம் கொண்டவனாக இருக்கி றான்.* (61)

*நாம் அனுபவிக்கக்கூடிய சிரமங்கள், செய்யக்கூடிய முயற்சிகள் அனைத்திலும் அவனுக்குக் கட்டுப்பட்டவர்களாகவே இருக்கிறோம். பிறந்த இடத்திலோ காலத்திலோ நமக்கு எந்த நன்மையும் இல்லை. நமக்கு இவ்வுலகில் வழங்கப்பட்டுள்ள திறமைகளிலோ நாம் செல்லும் வாழ்க்கைப் பாதையிலோ நமக்கு எந்த நன்மையும் இல்லை.*

*இறைத்தூதர்களிலும் சூரியன்கள் இருக்கிறார்கள். வெவ்வேறு அளவு களைக் கொண்ட சந்திரன்களும் இருக்கிறார்கள்.*

*தவிர, ஒவ்வொருவரும் தமக்கு வழங்கப்பட்டுள்ளதன்படியே கணக்கு வாங்கப்படுவார்கள். அவரது சக்திக்குட்பட்டே அவர் கேள்வி கேட்கப் படுவார்: 'இறுதியில் உங்களில் யாருக்கேனும் மரணவேளை வந்து விட்டால் நாம் அனுப்பிய வானவர்கள் அவரது உயிரைக் கைப்பற்றிக் கொள்கிறார்கள். தங்கள் கடமையில் அவர்கள் தவறுவதில்லை. பின்னர், அனைவரும் தம்முடைய உண்மையான அதிபதியாகிய அல்லாஹ்வின் பக்கமே கொண்டுவரப்படுவார்கள். அறிந்துகொள்ளுங்கள். அதிகாரம் அவனுக்கே உரியது. அவன் கணக்குத் தீர்ப்பதில் விரைவானவன்.* (61,62)'

*அச்சுறுத்தக்கூடிய இந்த வசனத்தைத் தொடர்ந்து வரக்கூடிய இறை அழகியலின் வசனம்:*

*நீர் கேளும், 'இத்துன்பத்திலிருந்து அவன் எங்களைக் காப்பாற்றி விட்டால் நாங்கள் அவனுக்கு நன்றிசெலுத்தும் அடியார்களாக மாறிவிடுவோம் என்று நீங்கள் பணிவாகவும் இரகசியமாகவும் அவனை அழைக்கும்போது நிலம் மற்றும் நீரின் இருள்களிலிருந்து*

உங்களைக் காப்பாற்றுபவன் யார்?' அவற்றிலிருந்தும் அனைத்து துன்பங்களிலிருந்தும் அல்லாஹ்தான் உங்களைக் காப்பாற்றுகிறான். ஆயினும், நீங்கள் அவனுக்கு இணைகளை ஏற்படுத்துகிறீர்கள். (63,64)

குர்ஆனிய வழிமுறை அச்சத்துக்கும் நம்பிக்கைக்கும் மத்தியில் ஒரு நிலையை ஏற்படுத்துகிறது. அதனால் நாம் வழிதவறிச் செல்லவோ வரம்புமீறவோ மாட்டோம்.

கல்லைத் தங்கமாக மாற்றுவதுபோன்ற வழக்கத்துக்கு மாறான, அதி சயமான நிகழ்வுகளிலிருந்து நான் என்ன பயனை அடைந்துகொள்ள முடியும்? அதனால் என் அறிவு எவ்வாறு பிரகாசமடையும்?

நிச்சயமாக இந்தக் குர்ஆனின் அற்புதம் அதிகம் பயனளிக்கக்கூடியது, நேரான வழியைக் காட்டக்கூடியது.

அதனால்தான் குர்ஆனுக்கு எதிரான வீணான சபைகளைப் புறக் கணிக்கும்படியும் அவற்றில் ஈடுபடும் மனிதர்களைவிட்டு விலகியிருக் கும்படியும் முஸ்லிம்கள் பணிக்கப்படுகிறார்கள்:

நம் வசனங்களில் குறை காண்பதற்காக வீண் விவாதங்களில் மூழ்குவோரைக் கண்டால் அவர்கள் வேறு பேச்சில் ஈடுபடும்வரை அவர்களைவிட்டு நீர் விலகிவிடும். ஷைத்தான் உம்மை மறக் கடித்துவிட்டால் அது நினைவுக்கு வந்தபிறகு அநியாயக்கார மக்க ளுடன் நீர் அமராதீர். (68)

இதற்குப் பிறகு வரக்கூடிய வசனமும் இவ்வாறு விலகியிருக்கும்படி மீண்டும் கட்டளையிடுகிறது: 'தங்கள் மார்க்கத்தை வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் எடுத்துக்கொண்டவர்களை விட்டுவிடும். இவ்வுலக வாழ்க்கை அவர்களை ஏமாற்றத்தில் ஆழ்த்திவிட்டது. (70)' அவர்களுக்கு இந்த மார்க்கத்தை எடுத்துரைத்த பின்னர் அவர்களை விட்டுவிடும்.

அழைப்புப் பணி நிலைத்திருக்கக்கூடியது. இங்கு புறக்கணித்தல் என்பது அவர்கள் செய்யும் வீணான விசயங்களைவிட்டும் விலகியிருத் தலைக் குறிக்கும். கர்வம் கொண்ட இந்த மூடர்கள் தாம் செய்தவற்றின் விளைவைக் காணும்போது விழித்துக்கொள்வார்கள்.

இங்கு இணைவைப்பாளர்களிடம் கூறுமாறு நபியவர்களுக்கு இன்னு மொரு கட்டளை இடப்படுகிறது. அதில் அறிவுரைகளைக் கேட்ட பின்னரும் தங்களின் எதிர்காலத்தை வீணடிக்கும் இணைவைப்பாளர்கள் பழிக்கப்படுகிறார்கள்:

*நீர் கேளும், 'அல்லாஹ்வை விடுத்து எங்களுக்குப் பலனளிக்கவோ தீங்கிழைக்கவோ இயலாதவற்றையா நாங்கள் அழைக்க வேண் டும்? அல்லாஹ் எங்களுக்கு நேர்வழி காட்டியபிறகு நாங்கள் பின்வாங்கித் திரும்பிச்சென்றுவிட வேண்டுமா? ஒருவருக்கு அவரது தோழர்கள், எங்களிடம் வந்துவிடு என்று நேர்வழியின் பக்கம் அழைத்துக்கொண்டிருக்க, அவரோ ஷைத்தான்களால் வழிகெடுக்கப்பட்டுப் பூமியில் தடுமாறித்திரிவதைப் போன்று நாங்கள் ஆகிவிடுவோமா என்ன?'* (71)

தடுமாற்றமுடைய அவர்களின் நிலைப்பாடும் அவர்களுக்கு நேரான வழியைக் காட்ட வேண்டும் என்பதற்காகத் தூதர் மற்றும் அவரது தோழர் கள் செய்யும் முயற்சிகளும் அவர்களை விடுவிப்பதற்குச் செய்யப்பட்ட முயற்சிக்குப் பின்னரும் எவ்வாறு அவர்கள் சாகடிக்கும் பிடிவாதத்தில் நிலைத்திருக்கிறார்கள் என்பதும் எவ்வாறு படம்பிடித்துக் காட்டப்படு கிறது என்பதைக் கவனியுங்கள்.

*நீர் கூறும், 'அல்லாஹ்வின் வழியே நேரான வழியாகும். நாங்கள் படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் இறை வனிடம் சரணடைந்துவிட வேண்டும் என்றே கட்டளையிடப்பட் டுள்ளோம்.'* (71)

சிக்கலான இந்த நிலையை விட்டுவிட்டுத் திருக்குர்ஆன் மனிதர் களோடு பல நூற்றாண்டுகளுக்குப் பின்னால் திரும்பிச் சென்று இப் றாஹீமின் சம்பவத்தை நினைவுகூருகிறது. அவரது சமூகத்தார் நட்சத் திரங்களை வணங்கிக்கொண்டிருந்தார்கள். அவர் அவர்களை ஒரே இறை வனான அல்லாஹ்வின் பக்கம் கொண்டுவருவதற்கு எவ்வாறெல்லாம் முயன்றார் என்பதைச் சம்பவம் எடுத்துரைக்கிறது.

அவர் அவர்களின் அறிவுத் தரத்திற்கேற்ப இறங்கிச்சென்று அவர் களுடன் உரையாடினார். உதிக்கக்கூடிய நட்சத்திரத்தைக் கண்டார். பின்னர் கூறினார், அவர்கள் கூறுவதுபோன்று 'இதுதான் என் இறைவன்'. ஆனால், அது மறைந்துவிட்டது.

பின்னர் சந்திரனைக் கண்டார். அவர்கள் கூறுவதுபோன்று 'இதுதான் என் இறைவன்' என்றார். ஆனால், அதுவும் மறைந்துவிட்டது.

பின்னர் சூரியனைக் கண்டார். அவர்கள் கூறுவதுபோன்று 'இதுதான் என்னுடைய பெரிய இறைவன்' என்றார். ஆனால், அதுவும் மறைந்து இருளைப் பரப்பியது.

இறைவன் என்பவன் தன் ஆட்சியைவிட்டும் மறைய மாட்டான். அவன் மறைந்துவிட்டால் அவனுக்குப் பிறகு யார்தான் அதனை நிர்வகிப்பார்?

நம்மைச் சுமந்துகொண்டு பெருவெளியில் நீந்தும் இந்தப் பூமியை விட்டு அதன் இறைவன் ஒரு நிமிடம் மறைந்திருந்தால்கூட மூன்று புறமும் சூழ்ந்துள்ள நீர் மிகைத்து பூமியின் நிலப்பரப்பை மூழ்கடித்து விடும்.

இந்தப் பிரபஞ்சம் படைப்பாளனின் கைவசம் உள்ளது. அதில் சிறிய அளவு சீர்குலைவு ஏற்பட்டால்கூட அதன் கிழக்குகளும் மேற்குகளும் அழிந்து, ஒவ்வொன்றும் காரிருளில் மறைந்து அடையாளமற்று மறைந்து விடும்: 'நிச்சயமாக அல்லாஹ்தான் வானங்களையும் பூமியையும் விலகி விடாதவாறு தடுத்துள்ளான். அவை விலகிவிட்டால் வேறு யாராலும் அவற்றைத் தடுத்துவிட முடியாது. (35:41)'

உண்மையான இறைவன் ஒரு நிமிடம்கூட மறைய மாட்டான். அவன் அனைத்தையும் நிலைநிறுத்துபவன். அவனிடமிருந்தே ஒவ்வொன்றும் தமக்கானதைப் பெற்றுக்கொள்கிறது.

அவன் ஒவ்வொருவருக்கும் அவர் சம்பாதித்தவற்றின் அடிப்படையில் கூலி வழங்குவான். அவன் வானங்களையும் பூமியையும் அவற்றுக்கிடையே உள்ளவற்றையும் நிலைநிறுத்துபவன்.

இறைத்தூதர் இப்றாஹீம், ஒரே இறைவனான அல்லாஹ்வைக் குறித்து அறிமுகப்படுத்தும் வழிமுறையைத் திருக்குர்ஆன் அன்றைய அறபுகளுக்கு எடுத்துரைத்து இந்த விளைவைக் கொண்டு முடிக்கிறது: 'நான் முழு நம்பிக்கையுடன் என் முகத்தை வானங்களையும் பூமியையும் படைத்தவனின் பக்கம் திருப்பிக்கொண்டேன். நான் இணைவைப்பாளர்களில் ஒருவன் அல்லன் என்று கூறினார். (79)'

அதே வகையான தர்க்கத்தைக் கொண்டுதான் இறுதித் தூதர் இணைவைப்பாளர்களுடன் உரையாடினார்கள். அவர்கள் புரிந்துகொண்டார்களா என்ன? அது நியாயமான, அறிவுபூர்வமான வழிமுறை.

அல்லாஹ்வை மக்களுக்கு அறிமுகப்படுத்தி நேர்வழியின் பக்கம் அவர்களை அழைக்கும் அழைப்பாளர்களின் திறமைகளுக்கேற்ப அவர்களின் படித்தரங்கள் மாறுபடுகின்றன. ஆகவே அல்லாஹ் கூறுகிறான்:

> இதுதான் இப்றாஹீம் தம் சமூகத்துக்கு எதிராக வாதாட நாம் வழங்கிய ஆதாரம். நாம் நாடுவோருக்குத் தகுதிகளை உயர்த்தி

*விடுகிறோம். நிச்சயமாக உம் இறைவன் ஞானம்மிக்கவனாகவும் நன்கறிந்தவனாகவும் இருக்கிறான். (83)*

❖ ❖ ❖

*இஸ்லாத்தின் வேர்கள் வரலாற்றின் ஆழம்வரை செல்லக்கூடியது. முஹம்மது எந்த மார்க்கத்தைக் கொண்டு அனுப்பப்பட்டாரோ அது மத்தியக் காலத்தில் தோன்றிய புதிய மார்க்கம் அல்ல. வரலாற்றின் ஆரம்பம்தொட்டு தூதர்கள் அனைவரும் ஓரிறைக் கொள்கையை அடித் தளமாகக் கொண்ட அந்த ஒரே மார்க்கத்தையே கொண்டுவந்தார்கள். அதனைச் சரியான முறையில் அறிந்துகொள்வதும் அதன் கட்டளை களுக்குக் கீழ்ப்படிவதும் நம்மீதான கடமையாகும்.*

*தூதர்கள் அனைவரும் இந்த உண்மையைச் சுற்றியே தங்களின் பணி களை அமைத்துக்கொண்டார்கள் என்பதைத் திருக்குர்ஆன் எடுத்துரைக் கிறது.*

*அல்லாஹ்தான் உண்மையாளன். அவன் ஒருவனே. அவனுக்குக் கீழ்ப்படிவது நம்மீது கடமையாகும்.*

*இப்றாஹீமுக்கு முன்னால் நூஹூம் இவ்வாறுதான் சொல்லிக் கொண்டிருந்தார்: 'நான் கீழ்ப்படிந்தோரில் ஒருவராக இருக்க வேண்டும் என்றே பணிக்கப்பட்டுள்ளேன். (10:72)'*

*இந்த அத்தியாயத்தில் உண்மையாளனாகிய அல்லாஹ், அவனை மக்களிடம் அறிமுகப்படுத்துவதற்கு இப்றாஹீம் செய்த போராட்டத்தைக் குறிப்பிடுகிறான். பின்னர், அவருடன் பதினேழு தூதர்களின் பெயர் களையும் குறிப்பிடுகிறான். அனைவரும் அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைப்பவர்களாக இருந்தார்கள்.*

*அவர்களின் மூதாதையர், சந்ததிகள், சகோதரர்கள் ஆகியோரி லிருந்தும் பலரை நாம் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு நேரான வழியைக் காட்டினோம். இது அல்லாஹ்வின் வழிகாட்டுதலாகும். இதன் மூலம் தன் அடியார்களில் தான் நாடுவோரை அவன் நேரான வழியில் செலுத்துகிறான். அவர்கள் அவனுக்கு இணை ஏற்படுத்தி னால் அவர்களின் செயல்கள் அனைத்தும் நாசமாகிவிடும். இவர் களுக்குத்தான் நாம் வேதத்தையும் ஞானத்தையும் தூதுத்துவத்தை யும் வழங்கினோம். இவர்கள் இதனை நிராகரித்துவிட்டால் நிரா கரிக்காத வேறு மக்களிடம் நாம் இதனை ஒப்படைத்துவிடுவோம். (87-89)*

அல்லாஹ் தன் வாக்குறுதியை உண்மைப்படுத்திக் காட்டினான். மக்காவில் நிராகரித்த தலைமுறை மறைந்தது. சிறிது காலத்துக்குள்ளாகவே அறபுகள் அனைவரும் இஸ்லாத்தைத் தழுவினார்கள். பின்னர், நைல் நதியோரமும் வடக்கு ஆப்பிரிக்காவிலும் ஆசியாவின் ஒரு பகுதியிலும் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் இஸ்லாத்தைத் தழுவினார்கள். அவர்கள் தங்களின் மார்க்கத்தை மக்களுக்கு எடுத்துரைக்கும் சமூகத்தினராக இருந்தார்கள்.

இஸ்லாம் என்பது கடந்தகாலத்தின் நீட்சிதான் என்பதையும் அது மீண்டும்மீண்டும் ஒலிக்கும் முந்தைய தூதுத்துவங்களின் குரல்தான் என்பதையும் வலியுறுத்தும் பொருட்டு அல்லாஹ் தன் தூதருக்குக் கூறுகிறான்:

> அவர்களுக்கு அல்லாஹ் நேர்வழி காட்டியுள்ளான். ஆகவே, நீரும் அவர்களின் வழியிலேயே செல்வீராக. நீர் கூறும், 'இதற்காக நான் உங்களிடம் எவ்வித கூலியையும் கேட்கவில்லை. இது உலக மக்கள் அனைவருக்கும் ஓர் அறிவுரையே ஆகும்.' (90)

நூஹ், இப்றாஹீம், மூசா, ஈசா ஆகிய இறைத்தூதர்களின் உண்மை யான வாரிசுகள் முஹம்மதைப் பின்பற்றுபவர்கள்தாம். அவர்கள்தாம் சரியான வஹீயைச் சுமப்பவர்களாக, ஷிர்க்கையும் கீழ்ப்படியாமையையும் எதிர்த் துப் போராடக்கூடியவர்களாக, ஓரிறைக் கொள்கையைக் கொண்டு மக்களை சீர்படுத்தக்கூடியவர்களாக, படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் இறைவனுக்குக் கட்டுப்படக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.

அன்றும் இன்றும் நிராகரிப்பு என்பது அல்லாஹ்வைக் குறித்த அறி யாமையும் அவனுடைய கட்டளைக்கு மாறாகச் செயல்படுவதும் ஆகும்.

அன்றும் இன்றும் மார்க்கம் என்பது அல்லாஹ்வைச் சரியான முறையில் அறிவதும் அவனுக்கு மட்டுமே கீழ்ப்படிவதும் ஆகும். இதுதான் நம்மை முஸ்லிம்களாக ஆக்குகிறது.

இந்த உலகில் அல்லாஹ் வஹீ அறிவிப்பான் என்பதை நிராகரிப்பவர் கள் இருக்கிறார்கள். அல்லாஹ்வின் இருப்பையே நிராகரிக்கும் மக்கள் இருக்கும்போது இது ஒன்றும் ஆச்சரியம் அல்ல. அன்று சிலை வழி பாட்டாளர்கள் செய்துகொண்டிருந்ததைத்தான் இன்று மதச்சார்பற்றவர்கள், நாத்திகர்கள் எனப் பல்வேறு பிரிவினர் செய்துவருகிறார்கள்.

படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் அல்லாஹ் தன் அடியார்களைக் கண்ணியப்படுத்தியுள்ளான். வழி தெரியாமல் தடுமாறித்

*திரியுமாறு அவன் அவர்களை விட்டுவிடவில்லை. அவர்களை நன்மை யின் பக்கம் அழைத்துச்செல்லக்கூடிய தூதர்களை அவன் அனுப்பி யுள்ளான்: 'அவர்கள் அல்லாஹ்வை மதிப்பிட வேண்டிய முறைப்படி மதிப்பிடவில்லை. அதனால்தான் அவர்கள், அல்லாஹ் எந்த மனிதர் மீதும் எதையும் அருளவில்லை என்று கூறுகிறார்கள். (91)'*

*இவர்களுக்குப் பதிலளிக்கும் வகையில் குர்ஆன் பின்வருமாறு கேள்வி எழுப்புகிறது: 'நீர் கேளும், ஒளியாகவும் மக்களுக்கு வழிகாட்டியாகவும் மூசா கொண்டுவந்த வேதத்தை அருளியவன் யார்? (91)'*

*இங்கு குர்ஆனை அருளியவன் தன்னைப் பற்றிக் குறிப்பிடவில்லை. அவன் மூசாவின் வேதத்தையும் அது உள்ளடக்கியுள்ள ஒளியையும் வழிகாட்டலையும் மட்டுமே குறிப்பிடுகிறான்.*

*இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது? நாம் தெளிவுபடுத்தியதைப் போன்று இஸ்லாம் என்பது தூதர்கள் அனைவரும், வேதங்கள் அனைத்தும் கொண்டுவந்ததன் மீது நம்பிக்கை கொள்வதாகும்.*

*அது என்றும் நிரந்தரமான உண்மையை எடுத்துரைக்கிறது. வேதக் காரர்களின் குற்றம் என்னவெனில் அவர்கள் அருளப்பட்ட வஹீயுடன் நியாயமாக நடந்துகொள்ளவில்லை.*

*தங்களுக்கு அருளப்பட்டவற்றில் சிலவற்றை வீணாக்கினார்கள். சிலவற்றை மறைத்தார்கள். சிலவற்றுக்கு மாறாகச் செயல்பட்டார்கள். அதற்குப் பிறகு அல்லாஹ்வின் பாதையைவிட்டு மக்களைத் தடுத்துக் கொண்டும் பொறாமையினாலும் குரோதத்தினாலும் இறுதித் தூதருக்கு எதிராகப் போரிட்டுக்கொண்டும் வாழ்ந்தார்கள்.*

*தவ்றாத்தைத் தனித்தனி ஏடுகளாக ஆக்கினார்கள். அதில் சிலவற்றை வெளிப்படுத்தினார்கள். பெரும்பாலானவற்றை மறைத்தார்கள். அல்லாஹ் யூதர்களுக்குக் கூறுகிறான்: 'அதனை நீங்கள் தனித் தனி ஏடுகளாக ஆக்கிக் கொண்டீர்கள். சிலவற்றை வெளிப்படுத்துகிறீர்கள்; பெரும்பாலான வற்றை மறைத்துவிடுகிறீர்கள். (91)' மற்றொரு கிறாஅத்தின்படி இந்த வசனத்துக்கு 'அவர்கள் சிலவற்றை வெளிப்படுத்துகிறார்கள். பெரும் பாலானவற்றை மறைக்கிறார்கள்.' என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. எவ்வாறு பொருள் கொண்டாலும் இதில் குற்றம் சுமத்தப்படுபவர்கள் யூதர்கள்தாம்.*

*'நீங்களும் உங்கள் முன்னோர்களும் அறியாதவையெல்லாம் உங்க ளுக்குக் கற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது' என்ற வாசகம் அறபுகளையே*

குறிக்கிறது. அவர்கள் சமநிலையான சமூகமாக ஆக வேண்டும் என்பதற்காக அல்லாஹ் அவர்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டான். ஆனால், அவர்கள் இந்த அருட்கொடைக்கு நன்றிசெலுத்தினார்களா? இதற்கு ஏற்றாற்போன்று தங்களை ஆக்கிக்கொண்டார்களா?

வானத்திலிருந்து அருளப்பட்ட வேதங்கள் என்று சொல்லப்படுபவை இன்று வாசகர்களுக்கு முன்னால்தான் இருக்கின்றன. அவர்களால் அவற்றைப் படிக்கவும் அவற்றில் உள்ளவற்றை ஆராய்ச்சி செய்யவும் முடியும். மக்கள் அவற்றில் உள்ளவற்றை ஆராய்ந்துபார்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அறிவுள்ளவர்கள் நிச்சயம் உண்மையைக் கண்டுகொள்வார்கள். அறிவற்றவர்களிடம் எந்த நன்மையும் இல்லை.

*மதி மறைந்தநிலை தோன்றின் - மாந்தர் தம் தரமிழந்து*
*வேட்டை வெறிகொண்ட சிங்கத்தினும் கீழாவர்*

நான் என் அறிவைக் கொண்டு இந்தப் பிரபஞ்சத்துக்கு ஒரு அதிபதி இருக்கிறான், அவன்தான் படைக்கிறான், பரிபாலிக்கிறான் என்பதைக் கண்டுகொண்டேன்.

அந்த அதிபதி ஒருவன்தான் என்பதையும் அவன் இருவரோ மூவரோ அல்ல என்பதையும் உறுதியாக அறிந்துகொண்டேன். அவன் நேர்மையாக நடந்துகொள்ளுமாறும் நற்செயல்களில் ஈடுபடுமாறும் மனிதர்களுக்குக் கட்டளையிட்டுள்ளான். அநியாயம், பாவங்கள் ஆகியவற்றை விட்டும் அவர்களைத் தடுத்துள்ளான்.

இந்த வாழ்க்கைக்குப் பிறகு மனிதர்கள் அனைவரும் அவன் பக்கமே திரும்புவார்கள். இந்த உலகில் அவர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை அவன் விசாரணைசெய்வான்.

இங்கு ஒரு கேள்வி எழுகிறது: இந்த உண்மைகளையெல்லாம் எந்த வேதம் தெளிவுபடுத்துகிறது? எந்த வேதம் ஓரிறைக் கொள்கையையும் மறுமையில் அல்லாஹ்வைச் சந்திக்க வேண்டும் என்பதையும் உண்மையாகவும் உரக்கவும் கூறுகிறது? எந்த வேதம் மனித மனங்களைப் பண்படுத்துவதற்கும் தீமைகளைவிட்டு அவற்றைத் தடுப்பதற்கும் ஏற்றது?

இந்த விசயத்தில் நேர்மையானவர்கள் அடையும் முடிவை நாம் குர்ஆனின் வார்த்தைகளைக் கொண்டு நினைவூட்டுகிறோம்:

*அல்லாஹ்வின் மீது பொய் புனைபவனைவிட, அல்லது தனக்கு இறைவனிடமிருந்து வஹீ அறிவிக்கப்படாத நிலையில் 'எனக்கு*

*இறைவனிடமிருந்து வஹீ அறிவிக்கப்படுகிறது.' என்று கூறு பவனைவிட, 'அல்லாஹ் அருளியுள்ள வசனங்களைப் போலவே நானும் அருளுவேன்.' என்று கூறுபவனைவிட மிகப் பெரிய அநி யாயக்காரன் யார்?* (93)

தொடர்ந்து வரக்கூடிய இந்தக் கேள்விகளுக்குப் பிறகு இந்த உலகை விட்டுப் பிரியும் சமயத்திலிருந்து விசாரணைக்காக அல்லாஹ்வுக்கு முன்னால் நிற்கும்வரை அநியாயக்காரர்கள் அடையும் தண்டனையைக் குர்ஆன் விவரிக்கிறது:

*அந்தோ! இந்த அநியாயக்காரர்கள் மரண வேதனையில் கிடக்கும் போது நீர் காண வேண்டுமே! அப்போது வானவர்கள் தங்கள் கரங்களை நீட்டியவர்களாக, 'உங்கள் உயிர்களை நீங்களே வெளி யேற்றுங்கள்.' என்று கூறுவார்கள். 'நீங்கள் அநியாயமாக அல்லாஹ் வின் மீது பொய்யைப் புனைந்துகொண்டிருந்ததாலும் அவனுடைய சான்றுகளை ஏற்றுக்கொள்ளாமல் கர்வம் கொண்டிருந்ததாலும் இன்று உங்களுக்கு இழிவுமிக்க வேதனையளிக்கப்படும்.'* (93)

இது அல்லாஹ்வின் மீது பொய் கூறுபவரின் வார்த்தையா? இது இட்டுக்கட்டப்பட்ட ஒன்றா? இவ்வாறு கூறுவதால் முகங்கள் சிதைந்து விடாதா?

மூடப்பட்ட உள்ளங்களின் மீது தொடுக்கப்பட்ட வேதனைமிக்க இந்தத் தாக்குதலுக்குப் பிறகு மீண்டும் திருக்குர்ஆன் இறைவனின் மகத்துவத்தைத் தெளிவுரைகளின் வடிவில் குறிப்பிடத் தொடங்குகிறது.

உயிர்பெற்று பயிர்களை விளைவிக்கின்ற பூமியை, பசுமையான ஆடை யைத் தன்மீது போர்த்தியிருக்கும் வயல்களை நீங்கள் காணவில்லையா?

பேரீச்ச மரங்களைப் பார்த்திருக்கிறீர்களா, எவ்வாறு காய்ந்த இலை களுக்குக் கீழே கிளைகளில் பசுமையான பழங்கள் தொங்குகின்றன என்பதை!

கதிர்களில் விதைகளை வைத்தவன் யார்? பேரீச்ச மரங்களில் அடுக் கடுக்கான குலைகளைத் தொங்கச்செய்தவன் யார்?

*நிச்சயமாக அல்லாஹ்தான் தானியத்தையும் விதையையும் வெடிக்கச் செய்பவன். அவனே உயிரற்றதிலிருந்து உயிருள்ளதையும் உயி ருள்ளதிலிருந்து உயிரற்றதையும் வெளிப்படுத்துகிறான். அவனே உங்கள் இறைவன். பிறகு நீங்கள் எங்கே தடுமாறிச் செல்கிறீர்கள்?* (95)

*மண்ணில் நிகழ்வதுபோன்றே விசாலமான வெளியிலும் நிகழ்கிறது: 'அவனே விடியலை ஏற்படுத்துபவன். அவன் இரவை அமைதிக்கான நேரமாக ஆக்கியுள்ளான். சூரியனையும் சந்திரனையும் கணக்கின்படியே வைத்துள்ளான். இது யாவற்றையும் மிகைத்த, நன்கறிந்த இறைவனின் ஏற்பாடாகும்.* (96)'

*குர்ஆனின் வசனங்கள் இந்தப் பிரபஞ்சத்தில் காணப்படும் சான்றுகளை வர்ணித்தவாறும் அவற்றிலிருந்து அல்லாஹ்வின் மகத்துவத்துக்கான ஆதாரங்களை வெளிப்படுத்தியவாறும் கடந்துசெல்கின்றன. அவை கண்ணியத்துக்கும் வணக்க வழிபாட்டுக்கும் உரியவன் அல்லாஹ் ஒருவனே என்பதைத் தெளிவாக அறிவிக்கின்றன. அறிவுள்ளவர் புரிந்து கொள்வார். அறிவைத் தொலைத்தவர் வழிதவறி வெகுதூரம் செல்வார்:*

> *உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்குச் சான்றுகள் வந்து விட்டன. ஆகவே, யார் பார்க்கிறாரோ அது அவருக்கே நன்மை யானதாகும். யார் குருடராகிப்போகிறாரோ அவர் தமக்கே இழப்பை ஏற்படுத்திக்கொள்கிறார். நீர் கூறும், 'நான் ஒன்றும் உங்களுக்குப் பாதுகாவலன் அல்ல.'* (104)

*அற்புதங்களை வேண்டுபவர்கள் தெளிவான இந்த விளக்கத்துக்குப் பிறகு எதை வேண்டுவார்கள்?*

*பன்னெடுங்காலமாக தூதர்கள் செய்த முயற்சிகள் அறிவுபூர்வமான இந்த ஈமானால் மட்டுமே நினைவுகூரப்படும். ஆகவேதான், இறுதித் தூதரின் நாவிலிருந்து பின்வரும் வாசகம் வெளிப்பட்டது: 'அல்லாஹ்வைத் தவிர வேறு ஒருவனையா நான் நீதிபதியாக ஆக்குவேன்? அவனே உங்களுக்குத் தெளிவான வேதத்தை அருளியுள்ளான்.* (114)'

*ஆனாலும் முந்தைய வேதக்காரர்களில் உள்ள அறிஞர்கள் திருக்குர் ஆனின் மகத்துவத்தையும் அதை அருளியவனின் உண்மைத் தன்மை யையும் அறிவார்கள்: 'யாருக்கு நாம் வேதத்தை வழங்கினோமோ அவர் கள் இது உம் இறைவனிடமிருந்து சத்தியத்துடன் அருளப்பட்டுள்ளது என்பதை அறிவார்கள். ஆகவே, நீர் சந்தேகம் கொள்வோரில் ஒருவராகி விட வேண்டாம்.* (114)'

❖ ❖ ❖

*இந்தச் சமூகத்துக்கும் இதன் வேதத்துக்குமான தொடர்பை அல்லாஹ் இந்த அத்தியாயத்தில் பின்வருமாறு கூறுகிறான்:*

*உம் இறைவனிடமிருந்து உமக்கு அறிவிக்கப்படுகின்றவற்றை நீர் பின்பற்றுவீராக. அவனைத் தவிர வணக்கத்துக்குரிய வேறு இறைவன் இல்லை. இணைவைப்பாளர்களைப் புறக்கணித்துவிடுவீராக.* (106)

*மேலும் அவன் கூறுகிறான்:*

*இதுவே உம் இறைவனின் நேரான வழியாகும். சிந்தித்துணரும் மக்களுக்கு நாம் சான்றுகளைத் தெளிவுபடுத்திவிட்டோம்.* (126)

*எந்த ஊரிலிருந்து இந்த முழு உலகத்துக்குமான அழைப்புப் பணி வெளிப்பட்டதோ அதனைத் தெளிவுபடுத்தியவனாக அவன் கூறுகிறான்:*

*இது அருள்வளம் மிக்க, தனக்கு முன்னுள்ளதை உண்மைப்படுத்தக்கூடிய வேதமாகும். மக்காவாசிகளையும் அதனைச் சூழ உள்ளவர்களையும் நீர் எச்சரிக்கை செய்வதற்காகவே நாம் இதனை அருளியுள்ளோம். மறுமையின் மீது நம்பிக்கை கொள்பவர்கள் தாம் இதன் மீது நம்பிக்கை கொள்வார்கள் ...* (92)

*ஹூது, ஸாலிஹ், ஷுஐபு ஆகியோரின் சமூகங்கள் தூதுத்துவங்களை நிராகரித்ததால் அழிக்கப்பட்டன. அவர்கள் அறபுகளாக இருந்தார்கள். பின்னர், தூதுத்துவம் இஸ்றாயீலின் மக்களிடம் சென்றது. மீண்டும் இறுதித் தூதுத்துவம் அறபுகளின் பக்கம் திரும்பியது. இது குறித்து அல்லாஹ் கூறுகிறான்: 'இந்த வேதத்தைப் பாக்கியம்மிக்கதாக நாம் அருளியுள்ளோம். இதனையே நீங்கள் பின்பற்றுங்கள். அல்லாஹ்வை அஞ்சுங்கள். அதனால் உங்கள்மீது கருணை காட்டப்படலாம்.* (155)'

*திருக்குர்ஆன் அருளப்பட்டபிறகு அறபுகள் தங்களின் உலகளாவிய பணியை அறிந்துகொண்டார்களா?*

*இறைவனின் விசாரணை மனிதர்கள் செய்யும் பணிகளுக்கேற்பவே அமையும். அவன் அவர்களை நிர்ப்பந்திக்க மாட்டான்: 'இவ்வாறு தூதர்களை அனுப்புவது ஏன் என்றால் உம் இறைவன் எந்த ஊரையும் அவர்கள் செய்துவிட்ட அநியாயத்துக்காக அவர்கள் அறியாமல் இருக்கும் நிலையில் அழிப்பவனாக இல்லை என்பதற்குத்தான்.* (131)'

*ஆனாலும் மனிதர்கள் தர்க்கம்செய்கிறார்கள். தீய செயல்களில் ஈடுபட்டுவிட்டு இது அல்லாஹ்வின் நாட்டமே என்று கூறி அவர்கள் தப்பிக்க எண்ணுகிறார்கள்:*

*'அல்லாஹ் நாடியிருந்தால் நாங்களும் எங்கள் முன்னோர்களும் இணைவைத்திருக்க மாட்டோம். எந்தப் பொருளையும் தடை*

செய்யப்பட்டதாக ஆக்கியிருக்க மாட்டோம்.' என்று இணை வைப்பாளர்கள் கூறுவார்கள். இப்படித்தான் இவர்களுக்கு முன்னிருந்தவர்களும் நிராகரித்தார்கள். இறுதியில் நம் வேதனையை அவர்கள் அனுபவித்தார்கள். நீர் கேளும், 'நம்மிடம் எடுத்து வைப்பதற்கு உங்களிடம் ஏதேனும் ஆதாரம் இருக்கிறதா? நீங்கள் யூகத்தையே பின்பற்றுகிறீர்கள். அனுமானத்தின்படியே செயல்படு கிறீர்கள்.' (148)

அதற்கு முன்னால் அல்லாஹ் தெளிவுபடுத்துகிறான், யார் நம்பிக்கை கொண்டாரோ அவருடைய உள்ளத்தை விசாலமாக்கி, அவருடைய வழிகாட்டலை முழுமைப்படுத்துவான். மற்றவர்களை அவன் கடும் நெருக்கடியில் தடுமாறித்திரியுமாறு விட்டுவிடுவான்.

இந்தப் புரிதலை வழங்கும் வசனத்தில் இடம்பெற்றுள்ள கடைசி வாசகம் இதைத்தான் அறிவிக்கிறது: 'இவ்வாறு அல்லாஹ் நம்பிக்கை கொள்ளாதவர்களை மன நெருக்கடிக்கு ஆளாக்குகிறான்.'

யார் நம்பிக்கை கொள்ளவில்லையோ அவருடைய இதயத்தை அல்லாஹ் விசாலமாக்க மாட்டான். அவரை நேர்வழியில் செலுத்தவும் மாட்டான். இந்த அழைப்பைச் செவியேற்று, அதற்காகத் தங்களைத் தயார்படுத்திக்கொண்டவர்களின் உள்ளத்தைத்தான் அவன் விசாலமாக்கு கிறான்.

பேராற்றலும் தன்னிறைவும் உடைய அல்லாஹ், மனிதர்கள் தன் னையே வணங்கித் தன்னிடமே தேவையுடையவர்களாக நிற்கும் பொருட்டு இந்த வடிவில் வாசகத்தை அமைக்க நாடிவிட்டான். அவன் கூறுகிறான்:

யாருக்கு அல்லாஹ் நேர்வழி காட்ட நாடுகிறானோ அவரது உள்ளத்தை இஸ்லாத்துக்காக விரிவாக்குகிறான். யாரை அவன் வழிகெடுக்க நாடுகிறானோ அவரது இதயத்தை வானத்தில் ஏறுப வரைப் போன்று மிகவும் இறுக்கமாக ஆக்கிவிடுகிறான். (125)

மனிதர்களின் ஈமானுக்கும் நிராகரிப்புக்கும் இறை நாட்டம்தான் காரணம் என்ற பொருளில் இங்கு கூறப்படவில்லை. அவ்வாறு கூறப் பட்டிருந்தால் அதற்குப் பிறகு, 'இவ்வாறு அல்லாஹ் நம்பிக்கை கொள் ளாதவர்களை மனநெருக்கடிக்கு ஆளாக்குகிறான்.' என்ற வாசகம் கூறப்பட்டிருக்காது.

ஒவ்வொரு மனிதனும் விசாரணைக்காக நிற்பான். அப்போது அவ னிடம் கூறப்படும்: 'உன் புத்தகத்தைப் படித்துப்பார். இன்றைய தினம் உன் கணக்கைப் பார்க்க நீயே போதுமானவன். (17:14)'

*செயல்படுவதற்குச் சுதந்திரம் வழங்கப்படாத மனிதனை நோக்கி இவ்வாறு கூறப்படுமா என்ன?*

*மனிதர்கள் எந்த நம்பிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்களோ அதனுடன் அல்லாஹ் விதித்த சட்டங்களைப் பின்பற்றுமாறும் பொறுப்பு சாட்டப்படுகிறார்கள். செயல்படாமல் வெறுமனே 'நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம்' என்று கூறுமாறு அவர்கள் ஏவப்படவில்லை.*

*அறியாமைக் காலத்தவர்கள் அல்லாஹ் அருளாத புதுப்புது வணக்க வழிபாடுகளை ஏற்படுத்தினார்கள். அவர்களாகவே சட்டங்களை இயற்றி அவற்றின்படி தீர்ப்பளித்தார்கள். வஹீயை விட்டு விட்டு மார்க்கம் கூறாத புதுமைகளைப் பின்பற்றினார்கள். அசத்தியத்தைக் கொண்டு தர்க்கம்செய்தார்கள்.*

*இந்த வகையான செயல்களைவிட்டு விலகியிருக்கும்படி அல்லாஹ் நம்பிக்கையாளர்களை எச்சரிக்கிறான்: 'ஷைத்தான்கள் தங்கள் கூட்டாளிகளை உங்களுடன் தர்க்கம்செய்யுமாறு தூண்டுகிறார்கள். அவர்கள் சொல்வதை நீங்கள் ஏற்றுக்கொண்டால் நீங்களும் இணைவைப்பாளர்களாக ஆகிவிடுவீர்கள். (121)', 'அறிவு இல்லாமல், மக்களை வழிகெடுப்பதற்காக அல்லாஹ்வின் மீது பொய்யைப் புனைபவனைவிட மிகப் பெரிய அநியாயக்காரன் யார்? நிச்சயமாக அல்லாஹ் அநியாயக்காரர்களுக்கு நேர்வழி காட்ட மாட்டான். (144)'*

*மார்க்கத்தைப் பின்பற்றுபவர்கள் பல இடங்களில் குறிப்பிட்ட சில விவகாரங்களுக்குக் கீழ்ப்படிவதையும் அவற்றையே நன்மைக்கான அல்லது தீமைக்கான அளவுகோல்களாக ஆக்குவதையும் நான் கண்டிருக்கிறேன். அவர்கள் மார்க்கம் கூறாத நூதனங்களைப் பற்றிக் கொண்டு மார்க்கத்தின் கட்டளைகளை அலட்சியமாகக் கருதுகிறார்கள்.*

*அத்தகையவர்களை நோக்கி அல்லாஹ் கூறுகிறான்:*

அ. *நீர் கூறும்: வாருங்கள். உங்கள் இறைவன் உங்களுக்குத் தடைசெய்துள்ள விசயங்களைக் கூறுகிறேன்.*

ஆ. *நீங்கள் அல்லாஹ்வுடன் எப்பொருளையும் இணையாக்காதீர்கள்.*

இ. *தாய்தந்தையருடன் நல்ல முறையில் நடந்துகொள்ளுங்கள்.*

ஈ. *உங்கள் குழந்தைகளை வறுமைக்கு அஞ்சி கொன்றுவிடாதீர்கள். உங்களுக்கும் அவர்களுக்கும் நாமே உணவளிக்கிறோம்.*

உ. மானக்கேடான காரியங்களின் பக்கம் நெருங்காதீர்கள். அது வெளிப்படையாக இருந்தாலும் சரி, மறைவாக இருந்தாலும் சரி.

ஊ. அல்லாஹ் தடைசெய்துள்ள எந்த உயிரையும் அநியாயமாகக் கொன்றுவிடாதீர்கள். நீங்கள் சிந்தித்துணரும் பொருட்டு அல்லாஹ் இந்த விசயங்களை உங்களுக்கு அறிவுறுத்தியுள்ளான்.

எ. அநாதைகளின் சொத்தை அவர்கள் பருவ வயதை அடையும் வரை நேர்மையான முறையில் அன்றி நெருங்காதீர்கள்.

ஏ. அளவையிலும் நிறுவையிலும் நியாயமாக நடந்துகொள்ளுங்கள். நாம் ஒருவர்மீது அவரால் தாங்க முடிந்த அளவுக்கே பொறுப்பைச் சுமத்துவோம்.

ஐ. பேசினால் நியாயமாகப் பேசுங்கள். அது உங்கள் உறவினர்களுடைய விவகாரமாக இருந்தாலும் சரி.

ஒ. அல்லாஹ்வுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள். நீங்கள் படிப்பினைபெறும் பொருட்டு இந்த விசயங்களை அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிட்டுள்ளான்.

ஓ. இதுவே எனது நேரான வழியாகும். இதனையே நீங்கள் பின்பற்றுங்கள். வேறு வழிகளில் செல்லாதீர்கள். அவை அவனது பாதையைவிட்டும் உங்களை விலகவைத்துவிடும். இவை, நீங்கள் உங்களைக் காத்துக்கொள்ளும் பொருட்டு அல்லாஹ் உங்களுக்கு இட்ட கட்டளைகளாகும். (151-153)

இந்த அறிவுரைகளைக் கேட்ட ஓர் அறபிய அறிஞர் கூறினார், ‘இது ஒரு மார்க்கமாக இல்லாமல் இருந்திருந்தால் மக்களுக்கு நல்லொழுக்கமாக இருந்திருக்கும்’.

தீய மார்க்கங்கள் மறைவான வழிமுறைகளையே நம்பியுள்ளன. அவை தம்மை மறைவான வழிமுறைகள் என்றே கூறிக்கொள்கின்றன.

மேற்கண்ட வசனத்தில் இடம்பெற்றுள்ள இந்த பத்து அறிவுரைகளைக் குறித்து நாம் சிந்தித்துப்பார்க்கும்போது அவை புரிந்துகொள்ளுதல், படிப்பினை பெறுதல், இறையச்சத்தோடு இருத்தல் ஆகியவற்றையே அடித்தளங்களாகக் கொண்டுள்ளதைக் காண்கிறோம். அவற்றில் மார்க்கத்தில் இல்லாத நூதனமான விசயங்களுக்கோ மனஇச்சையின்படி செயல்படுவதற்கோ எவ்வித ஆதாரமும் இல்லை என்பதையும் அறிந்துகொள்கிறோம்.

முந்தைய அறபுகள், 'நாங்கள் யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களைவிடத் தூய இயல்புகளைக் கொண்டவர்கள்.' என்றும் 'அவர்களுக்கு வழங்கப் பட்டதைப் போன்று எங்களுக்கும் ஒரு வேதம் வழங்கப்பட்டிருந்தால் நாங்கள் இன்னும் மேன்மையானவர்களாக இருந்திருப்போம்.' என்றும் கூறிவந்தார்கள்.

ஆம். உங்களிடம் ஒரு வேதம் வந்துவிட்டது. உங்களிலிருந்து ஒருவர் தூதராக அனுப்பப்பட்டுள்ளார். நீங்கள் என்ன செய்தீர்கள்?

> 'எங்களுக்கு வேதம் வழங்கப்பட்டிருந்தால் நாங்கள் அவர்களை விடச் சிறந்த முறையில் அந்த வழிகாட்டுதலைப் பின்பற்றி யிருப்போம்.' என்றும் நீங்கள் கூறாமல் இருப்பதற்காக உங்களிடம் உங்கள் இறைவனிடமிருந்து தெளிவான ஆதாரமும் வழிகாட்டு தலும் அருளும் வந்துவிட்டன. அல்லாஹ்வின் சான்றுகளைப் பொய்யெனக் கூறி புறக்கணிப்பவனைவிட மிகப் பெரிய அநியாயக் காரன் யார்? நம் சான்றுகளைப் புறக்கணிப்பவர்களை அவர் களுடைய புறக்கணிப்பின் காரணமாகக் கொடிய வேதனையில் நாம் ஆழ்த்துவோம். (157)

இந்த வசனம், முஹம்மது தூதராக அனுப்பப்பட்ட காலத்தில் இருந்தவர்கள், இறை வஹீயால் நெருக்கடிக்குள்ளாகும் மதச்சார் பற்ற வர்கள், இஸ்லாத்தின் பக்கம் தங்களை இணைத்துக் கொள்வதை வெறுப்பவர்கள் ஆகியோரை நோக்கி எச்சரிக்கை செய்கிறது. அவர் களிடம் வானவர்கள் வர வேண்டும் அல்லது உமது இறைவன் வர வேண்டும் அல்லது உமது இறைவனின் சான்றுகளில் ஏதேனும் ஒன்று வெளிப்பட வேண்டும் என்றுதான் அவர்கள் எதிர்பார்க்கிறார்களா? ... பெரும் வேதனை அவர்களை வந்தடையும் சமயத்தில்தான் அவர்கள் மயக்கம் தெளிவார்கள்.

ஹதீஸில் வந்துள்ளது, 'இறுதிக் காலத்தில் கோள்களில் சீர்குலைவு நிகழும். சூரியன் மேற்கிலிருந்து உதயமாகும். அதற்கு முன்னர் நம் பிக்கை கொள்ளாமல் அந்தச் சமயத்தில் நம்பிக்கை கொள்பவர்கள் அவர்களின் நம்பிக்கையினால் எந்தப் பயனையும் பெற மாட்டார்கள்'.

தண்ணீரில் மூழ்கும்போது அல்லது உயிர் ஊசலாடிக் கொண்டிருக் கும்போது அல்லது ஏதேனும் பெரும் துன்பம் இறங்கும்போது கொள் ளப்படும் நம்பிக்கையால் எந்தப் பயனும் இல்லை.

இதுபோன்ற பெரும் துன்பம் ஏற்படுவதற்கு முன்னால் அல்லாஹ் தங்களுக்கு வழங்கிய மார்க்கத்தின் பக்கம் அறபுகள் திரும்புவார்களா?

ஆனால் அவர்களோ, பிரிவினை என்னும் படுகுழியில் வீழ்ந்து கிடக்கிறார்கள். இமாமுக்குப் பின்னால் நின்று தொழும்போது சப்தமாக ஆமின் சொல்ல வேண்டுமா மெதுவாகச் சொல்ல வேண்டுமா என்பது போன்ற விசயங்களுக்காக அவர்கள் பிரிவுகளை ஏற்படுத்திக் கொண்டும் ஒருவரை யொருவர் பகைத்துக்கொண்டும் இருக்கிறார்கள்.

இந்தக் கருத்து வேறுபாட்டுக்குப் பின்னால் உள்ளங்களை நாசம் செய்யும் மறைவான இச்சைகளே இருக்கின்றன: 'தங்கள் மார்க்கத்தில் பிரிவினையை ஏற்படுத்தி, பல்வேறு குழுக்களாகப் பிரிந்துவிட்டவர்களுடன் உமக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை. அவர்களது விவகாரம் அல்லாஹ்விடம் உள்ளது. அவர்கள் செய்துகொண்டிருந்தவற்றை அவனே அவர்களுக்கு அறிவித்துவிடுவான். (159)'

இந்த அத்தியாயத்தின் இறுதியில் இந்த மார்க்கத்தின் ஒத்திசைவை, வணக்க வழிபாடு அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியது என்பதை, ஓரிறைக் கொள்கையின் தூய்மையை, மறுமைநாளில் வழங்கப்படும் நியாயமான கூலியைத் தெளிவுபடுத்தும் மூன்று விளக்கங்கள் இடம்பெறுகின்றன.

இந்த அத்தியாயத்தினூடே நாற்பத்து நான்கு முறை 'நீர் கூறும்' என்ற வார்த்தையைக் கொண்டு நபியவர்கள் தெளிவுபடுத்துமாறு பணிக்கப்படுகிறார்கள்.

- ❖ நீர் கூறும், 'என் இறைவன் எனக்கு நேரான வழியைக் காட்டியுள்ளான். அது நேரான, முற்றிலும் அல்லாஹ்வின் பக்கம் சாய்ந்த இப்றாஹீமின் மார்க்கமாகும் ...' (161)
- ❖ நீர் கூறும், 'எனது தொழுகையும் எனது தியாகமும் எனது வாழ்வும் எனது மரணமும் படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே உரியவையாகும்.' (162)
- ❖ நீர் கூறும், 'அல்லாஹ்வைத் தவிர வேறு ஒருவனை நான் இறைவனாகத் தேடிக்கொள்வேனா? அவனே அனைத்துக்கும் இறைவனாக இருக்கிறான் ...' (164)

மேற்கண்ட வசனங்கள் அல்லாஹ்வுக்காக, அவனுடைய மார்க்கத்தைப் பரப்புவதற்காக, அவனுடைய அடியார்களுக்கு அறிவுரை கூறுவதற்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட ஒரு மனிதனின் வாழ்க்கையைக் குறிப்பிடுகின்றன. இந்த அர்ப்பணிப்பில் உச்சத்தைத் தொட்டவர் இறுதித் தூதரான முஹம்மது (ஸல்) அவர்கள் ஆவார்கள்.

*இந்த அத்தியாயத்தில் இறுதியாக இடம்பெற்றுள்ள விளக்கம் இந்த உலக வாழ்க்கையின் இயல்பைக் குறித்த விளக்கமாகும். அது ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ச்சியாக இடம்பெறக்கூடிய சோதனையாகும்.*

*ஒவ்வொரு மனிதனும் அவன் அறிந்த அனைத்து மனிதர்களைக் கொண்டும் சோதிக்கப்படுவான். அவனைச் சுற்றி நிகழும் மகிழ்ச்சியான, துக்கமான நிகழ்வுகள் அனைத்தைக் கொண்டும் அவன் சோதிக்கப்படு வான். இந்தச் சோதனைகளின் முடிவுகள் மறுவுலகில்தான் வெளிப்படும். இங்கு வாழ்க்கை என்பது கடந்துவிடுதல்தான். இங்கு நிரந்தரமான தங்குமிடம் இல்லை.*

*இங்கு அவனுடைய செயல்பாடுகளுக்கேற்பவே மறுமையில் அவ னுடைய இருப்பிடம் அமையும்:*

> *அவனே பூமியில் உங்களை வழித்தோன்றல்களாக ஆக்கினான். உங்களுக்கு வழங்கியவற்றில் அவன் உங்களைச் சோதிப்பதற்காக உங்களில் சிலரைச் சிலரை விட உயர்த்தியுள்ளான். உங்கள் இறை வன் தண்டிப்பதில் விரைவானவன். ஆயினும், நிச்சயமாக அவன் பெரும் மன்னிப்பாளனாகவும் இணையிலாக் கிருபையாளனாக வும் இருக்கிறான்.* (165)

❖ ❖ ❖

அத்தியாயம் 7

# அல்அஃறாஃப்

(சிகரங்கள்)

*இந்த அத்தியாயம் இரண்டு விவகாரங்களைக் குறித்த சுருக்கமான அறிமுகத்தோடு தொடங்குகிறது. முதலாவது, திருக்குர்ஆனோடு தொடர்புடையது. இரண்டாவது, அதனை நிராகரிப்பவர்கள் மற்றும் இறை வஹீயை ஒட்டுமொத்தமாக மறுப்பவர்கள் தொடர்பானது.*

*முதல் விவகாரம் தொடர்பாகப் பின்வரும் வசனம் அருளப்பட்டது:*

> *இது உமக்கு அருளப்பட்ட வேதமாகும். இதனால் உமக்கு எவ்வித மனபாரமும் ஏற்பட்டுவிட வேண்டாம். இதைக் கொண்டு நீர் மக்களுக்கு எச்சரிக்கை செய்வதற்காகவும் நம்பிக்கையாளர் களுக்கு நினைவூட்டலாக அமைய வேண்டும் என்பதற்காகவும் தான். உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு அருளப்பட்டுள்ள தைப் பின்பற்றுங்கள். அவனைத் தவிர வேறு பாதுகாவலர்களைப் பின்பற்றாதீர்கள்.* (2,3)

*இணைவைப்பாளர்களின் இந்த மோசமான அணுகுமுறையைக் கண்டு கவலை கொள்ள வேண்டாம் எனத் தடுக்கப்படுகிறார்கள். இந்த வசனத்தில் இடம்பெற்றுள்ள 'இன்தார்' என்ற வார்த்தைக்கு அச்சமூட்டி எடுத்துரைப்பது என்று பொருள் கொள்ளலாம். செவிதாழ்த்திக் கேட்கும் மக்களிடம் வேண்டப்படுவது இதுதான்: அவர்களுக்கு அறிவுரை கூறக் கூடிய இந்த வேதத்தை அவர்கள் பின்பற்ற வேண்டும். அதனைத் தவிர ஏனைய பழக்கங்களை விட்டுவிட வேண்டும். அவற்றில் எந்த நன்மையும் இல்லை.*

*அல்லாஹ்வைத் தவிர பின்பற்றப்படும் மற்றவர்களால் எந்த நன்மை யையும் கொண்டுவர முடியாது. சத்தியத்துக்குப் பிறகு அசத்தியத்தைத் தவிர வேறென்ன இருக்க முடியும்?*

இதற்குப் பிறகு அத்தியாயம் பல இடங்களில் வேதம்குறித்து பேசுகிறது. அவற்றில் ஒன்று:

நாம் அவர்களிடம் ஒரு வேதத்தைக் கொண்டு வந்துள்ளோம். அதனை அறிவுபூர்வமாகத் தெளிவுபடுத்தியுள்ளோம். அது நம் பிக்கை கொள்ளும் மக்களுக்கு வழிகாட்டியாகவும் அருளாகவும் இருக்கிறது. அவர்கள் இந்த வேதம் எச்சரிக்கின்ற இறுதி விளை வைத்தான் எதிர்பார்க்கிறார்களா? (52,53)

அவனுடைய வாக்குறுதியும் எச்சரிக்கையும் நிறைவேற வேண்டும் என்பதைத்தான் அவர்கள் எதிர்பார்க்கிறார்களா? அப்போது நம்பிக்கை யாளர்கள் வெற்றியடைவார்கள். நிராகரிப்பாளர்கள் தோல்வியையும் தண்டனையையும் பெறுவார்கள்.

வேதம்குறித்து பேசும் மற்றுமொரு வசனம்: 'நிச்சயமாக வேதத்தை அருளிய அல்லாஹ்தான் என் பாதுகாவலன். அவனே நல்லடியார் களைப் பாதுகாத்துவருகிறான். (196)'

இது நபியவர்களின் கூற்றாக வருகிறது. இதன் பொருள், அவரது உள்ளத்தில் அருளப்பட்டுள்ளவற்றை அவர் எடுத்துரைக்கும் வரை, அதன் அறிவுரைகளைக் கொண்டு மனித வாழ்க்கையில் வெளிச்சம் ஏற்படுத்தும்வரை அவரைப் பாதுகாப்பதற்கும் அவருக்கு உதவிசெய்வ தற்கும் அல்லாஹ் பொறுப்பெடுத்துக் கொண்டான்.

பின்வரும் வசனம் இந்த வேதத்தை ஆய்வுசெய்ய வேண்டியதன், அது உள்ளடக்கியுள்ள அறிவுகளிலிருந்து பயனடைய வேண்டியதன் அவசியம்குறித்து பேசுகிறது: 'குர்ஆன் ஓதப்பட்டால் அதனைச் செவி சாய்த்துக் கேளுங்கள். மௌனமாக இருங்கள். உங்கள்மீது கருணை காட்டப்படலாம். (204)'

இந்த வேதம் நம்பிக்கையாளர்களுக்கு நினைவூட்டலாகவும் அவர் களின் அறிவை வளர்ச்சியடையச் செய்யக்கூடியதாகவும் அவர்கள்மீது இறங்கும் அருளாகவும் இருக்கிறது.

இந்த அத்தியாயம் தொடங்கியுள்ள இரண்டாவது விவகாரம் பின்வரும் வசனத்தின் மூலம் புரிந்துகொள்ளப்படுகிறது: 'எத்தனையோ ஊர்வாசி களை நாம் அழித்திருக்கிறோம். இரவிலோ நண்பகலிலோ அவர்கள் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தபோது திடீரென நம் வேதனை அவர்களைத் தாக்கியது. நம் வேதனை அவர்களை வந்தடைந்தபோது, நாங்கள் உண்மையிலேயே அநியாயக்காரர்கள்தாம் என்பதைத் தவிர அவர்களால் வேறு ஒன்றும் கூற முடியவில்லை. (4,5)'

தூதர்களின் மீது வரம்புமீறிய ஊர்வாசிகளுக்கு ஏற்பட்ட அழிவு வரலாறு பாதுகாத்துவைத்துள்ள இறை நியதியாகும்.

ஆது, ஸமூது, மத்யன், நூஹுடைய சமூகம், லூத்துடைய சமூகம் ஆகிய சமூகங்களுக்கு ஏற்பட்ட வேதனையைக் குறித்து இந்த அத்தியாயம் விரிவாகப் பேசுகிறது.

முந்தைய தூதர்களில் பலர் அறபுத் தீபகற்பத்துக்கு அனுப்பப்பட்டார்கள். அந்த அறபுகள் தங்களுக்கு அனுப்பப்பட்ட தூதர்களை நிராகரித்து அவர்களைத் துன்புறுத்தியபோது அல்லாஹ் அவர்கள்மீது அழிவை இறக்கினான்.

பின்னர், எகிப்தியர்களுக்கும் இஸ்றாயீலின் மக்களுக்கும் வழிகாட்டுவதற்காக மூசாவுக்கு வேதம் வழங்கப்பட்டது. ஃபிர்அவ்ன்கள் மற்றும் யூதர்களின் நிலைப்பாடுகள்குறித்து அது விரிவாகப் பேசியது.

அவர்கள் அல்லாஹ்வின் வழிகாட்டல்களை நிராகரித்து நேரான வழியைவிட்டு விலகிச்சென்றபோது அவர்கள்மீது அவனுடைய வேதனை இறங்கியது.

பின்னர், மீண்டும் வஹீ இறுதியாக அறபுத் தீபகற்பத்தின்பால் திரும்பியது. அல்லாஹ்வின் அருளால் முஹம்மது மக்களை இருள்களிலிருந்து வெளியேற்றி ஒளியின் பக்கம் கொண்டுசென்றார். அறபுகளிலிருந்து ஒரு முன்மாதிரி சமூகத்தை உருவாக்கிக்காட்டினார்.

அந்தச் சமூகமே மறுமைநாள்வரை வஹீக்கு உரியதாகியது. அதனுடைய வஹீயும் வேதமும் இன்றுவரை பாதுகாக்கப்பட்ட வடிவில்தான் உள்ளன.

இந்த உலக வாழ்வு நிலைத்திருக்கும்வரை மனிதர்கள் இந்த வேதத்தைச் செவியேற்றுக் கொண்டும் இதிலிருந்து பயனடைந்து கொண்டும் இருப்பார்கள். ஏனெனில், இது மட்டுமே அவர்களைத் தீமைகளிலிருந்து காக்கும்.

அறபுகள் தங்களுக்கு வழங்கப்பட்ட தூதுத்துவத்தை மதிக்க வேண்டும். எதனைக் கொண்டு அல்லாஹ் அவர்களைக் கண்ணியப்படுத்தியுள்ளானோ அதன் மதிப்பை அவர்கள் உணர வேண்டும். அவன் கூறுகிறான்: ‘பின்னர் நம் அடியார்களில் நாம் தேர்ந்தெடுத்துக்கொண்டவர்களை அந்த வேதத்துக்குரியவர்களாக ஆக்கினோம் ... (35:32)’

நிச்சயம் அவர்கள் அதுகுறித்து விசாரிக்கப்படுவார்கள். யாரிடம் தூதர்கள் அனுப்பப்பட்டார்களோ அவர்களை நிச்சயம் நாம்

விசாரிப்போம். தூதர்களையும் விசாரிப்போம். நாம் அவர்களிடம் எல்லாவற்றையும் முழு அறிவுடன் எடுத்துரைப்போம். நாம் மறை வானவர்களாக இல்லை. (6,7)

அத்தியாயத்தின் நடுப்பகுதியில், இறுதி விசாரணையில் ஒவ்வொரு மனிதனின் இருப்பிடமும் தீர்மானிக்கப்பட்டுவிடும் என்பது தெளிவு படுத்தப்படுகிறது:

அந்நாளில் சத்தியம் மட்டுமே கனமானதாக இருக்கும். ஆகவே, யாருடைய எடை கனமாக இருக்குமோ அவர்கள்தாம் வெற்றி யாளர்கள். யாருடைய எடை குறைவாக இருக்குமோ அவர்கள் தாம் -நம்முடைய சான்றுகளுக்கு அநீதி இழைத்துக் கொண்டி ருந்ததனால்- தம்மைத்தாமே இழப்புக்கு ஆளாக்கிக் கொண்ட வர்களாவர். (8,9)

ஆயினும் சுருக்கமான இந்தத் தெளிவுரை, பூமியில் தங்கள் இறை வனைக் குறித்து தர்க்கித்துக் கொண்ட ஒவ்வொரு கூட்டத்தினரின் இருப்பிடமும் தெளிவுபடுத்தப்பட்ட பிறகு இடம்பெறுகிறது.

அங்கு நம்பிக்கையாளர்கள் இருப்பார்கள். பின்னர், சிகரத்தில் உள்ள வர்கள் இருப்பார்கள். பின்னர், நிராகரிப்பாளர்கள் இருப்பார்கள்.

இவர்களுக்கு மத்தியில் பேச்சுவார்த்தை நிகழும். இந்த இடத்தில் சிறிது நேரம் நின்று சிந்திப்பதை நான் அவசியமெனக் கருதுகிறேன்.

சொர்க்கவாசிகள் அன்பு, அமைதி, கொடை ஆகியவற்றால் அமைந்த உலகில் இருப்பார்கள். அல்லாஹ்வை நினைவுகூர்வதும் அவனது துதி பாடுவதும்தான் அவர்களின் ஒரே பணியாக இருக்கும். தங்கள்மீது அல்லாஹ் பொழிந்த அருட்கொடைகளை அவர்கள் உணர்ந்தவாறு கூறுவார்கள்: 'எங்களுக்கு இதன் பக்கம் வழிகாட்டிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அல்லாஹ் எங்களுக்கு நேர்வழி காட்டவில்லை என்றால் நாங்கள் நேர்வழியடைந்திருக்க மாட்டோம். (43)'

தாங்கள் பெற்ற சிறப்பு தங்களால் அல்ல என்பதையும் அது முழுக்க முழுக்க அல்லாஹ்வின் அருட்கொடைதான் என்பதையும் அவர்கள் உணர்வார்கள்.

இங்கு அவர்களின் பழைய முயற்சிகளையும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பணிகளையும் அல்லாஹ் அவர்களுக்கு நினைவூட்டுவான்: 'நீங்கள் புரிந்த செயல்களுக்குக் கூலியாக உங்களுக்கு உரிமையாக்கப்பட்ட சுவனம் இதுதான் என்று அவர்களுக்குக் கூறப்படும். (43)'

தங்களின் நிலையைக் குறித்து அவர்கள் திருப்தியடைந்தவுடன் நேற்று தங்களுடன் தர்க்கித்துக் கொண்டிருந்த அக்கிரமக்காரர்களையும் இறை மறுப்பாளர்களையும் குறித்து நினைவுகூர்வார்கள். அவர்களுக்கு ஏற்பட்ட விளைவை அறிய வேண்டும் என்று ஆவல் கொள்வார்கள்:

> சுவனவாசிகள் நரகவாசிகளை அழைத்து, 'எங்கள் இறைவன் எங்களுக்கு அளித்த வாக்குறுதியை நாங்கள் உண்மையாகப் பெற்றுக்கொண்டோம். நீங்களும் உங்கள் இறைவனின் வாக் குறுதியை உண்மையாகப் பெற்றுக்கொண்டீர்களா?' என்று கேட்பார்கள். அதற்கு அவர்கள் 'ஆம்' என்பார்கள். அவர்களிடையே அறிவிப்பாளர் ஒருவர் 'அநியாயக்காரர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும்.' என்று அறிவிப்பார். (44)

இந்த அக்கிரமக்காரர்கள் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படு தலையும் கூலிகொடுக்கப்படும் மறுமைநாளையும் மறுத்துக்கொண்டி ருந்தார்கள். அவர்கள் பலவீனமான நம்பிக்கையாளர்களின் மீது அநியாயம் இழைத்துக்கொண்டிருந்தார்கள். சத்தியத்தின் அடையாளங்களைச் சி தைத்து அதன் பாதைகளை அடைத்துக்கொண்டிருந்தார்கள். இங்கு அவர்கள் தங்களுக்கே உரிய இருப்பிடத்தைப் பெறுகிறார்கள்.

இந்த அத்தியாயம் அஸ்ஹாபுல் அஃறாஃப் -சிகரங்களில் உள்ளவர்கள்- குறித்து பேசுகிறது. இந்த அத்தியாயத்துக்கான பெயரும் இந்தச் சம்ப வத்தையே அடிப்படையாகக் கொண்டது.

குர்ஆன் விரிவுரையாளர்களுக்கு மத்தியில் 'யாருடைய நன்மைகளும் தீமைகளும் சம அளவில் உள்ளனவோ அவர்கள்தாம் சிகரங்களில் உள்ளவர்கள்' என்ற கருத்து பரவலாகக் காணப்படுகிறது. தங்களின் விவகாரங்களில் தீர்ப்பளிக்கப்படுவதற்காக அவர்கள் காத்துக்கொண்டி ருப்பார்கள்.

ஆனால் நான், 'சிகரங்களில் உள்ளவர்கள்' என்ற இந்தச் சொல்லாடல் தூதர்கள் கொண்டுவந்த மார்க்கத்தின் பக்கம் அழைத்தவர்கள், அதற்காக உயிர்த்தியாகம் செய்தவர்கள், சமூகங்களுக்கு நன்மையின் பக்கம் வழிகாட்டியவர்கள் ஆகியவர்களையே குறிப்பதாகக் கருதுகிறேன்.

அஃறாஃப் என்றால் உச்சி, சிகரம் என்று பொருள். இதிலிருந்தே சேவலின் கொண்டைக்கு உர்ஃப் என்று சொல்லப்படுகிறது.

அவர்கள் விசாரணைசெய்யப்படும் மைதானத்தில் தலைவர்களையும் பொதுமக்களையும் காண்பார்கள். சுவனவாசிகளுக்கு வாழ்த்து கூறுவார் கள். நரகவாசிகளைப் பழிப்பார்கள்.

திருக்குர்ஆனின் உரையாடலை கவனித்துப்பார்க்கும்போது இந்தப் புரிதலே சரியானது என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. அவர்கள் மிக உறுதியோடு பேசுவார்கள். குற்றவாளிகளைப் பழிப்பார்கள். அவர்களின் இருப்பிடத்தைவிட்டு அல்லாஹ்விடம் பாதுகாவல் கோருவார்கள்.

இப்படிப்பட்டவர்கள் நன்மைகளும் தீமைகளும் சமமானவர்களாக, எங்கு செல்லப்போகிறோம் என்பதைக்கூட அறியாதவர்களாக இருக்க வாய்ப்பு இல்லை.

அங்கு நரகவாசிகள் இறுதியாகக் கூக்குரலிடுவார்கள்: ‘நரகவாசிகள் சுவனவாசிகளை அழைத்து எங்கள்மீது சிறிது தண்ணீராவது ஊற்றுங்கள் அல்லது அல்லாஹ் உங்களுக்கு வழங்கியுள்ள உணவிலிருந்து சிறிதளவாவது கொடுங்கள் என்று கேட்பார்கள். (50)’ ஆனால், அவர்களை அல்லாஹ்விடமிருந்து யாராலும் காப்பாற்ற முடியாது. அவர்கள் அல்லாஹ்வை நிராகரித்தார்கள். அவனுடைய சந்திப்பை மறுத்தார்கள். அந்த நாளுக்காக அவர்கள் எந்தவித முன்னேற்பாட்டையும் செய்யவில்லை. பிறகு எங்கிருந்து உதவி கிடைக்கும்?

இங்கு நாம் இன்னொரு விசயத்தையும் நினைவுபடுத்த விரும்புகிறோம். திருக்குர்ஆன் எடுத்துரைக்கும் விசயங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. அனைத்தும் ஒன்றிணைந்து ஒருசேர தம் பணியைச் செய்கின்றன. திருக்குர்ஆனின் அறிவுரைகள் ஒன்றுக்கொன்று தொடர்பற்ற தனித்தனியான பாடங்கள் அல்ல.

இவ்வாறே உலகம் பல வகையான அறிவுகளின் மூலமாக இருக்கிறது. அது ஒரே ஆன்மாவாக இருந்தாலும் உயிரியல் அறிஞர்கள், தாவரவியல் அறிஞர்கள், வானவியல் அறிஞர்கள் என ஒவ்வொரு துறைசார்ந்த அறிஞர்களும் தங்களுக்குத் தேவையானவற்றை அதிலிருந்து வெளிப்படுத்துகிறார்கள்.

இங்கு குறிப்பிடத்தக்க இன்னுமொரு விசயம், இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் ‘ஆதமின் பிள்ளைகள்’ என்ற வார்த்தை இடம்பெறுகிறது. ஆனால், அது ஆதமையே குறிக்கிறது. அதே போன்று, இதன் இறுதியில் ஆதம் என்ற வார்த்தை இடம்பெறுகிறது. ஆனால், அது அவரது பிள்ளைகளைக் குறிக்கிறது.

அத்தியாயத்தின் ஆரம்பத்தில் அல்லாஹ் கூறுகிறான்: ‘நாம் உங்களைப் படைத்து, பிறகு உங்களை வடிவமைத்தோம். பின்னர், ஆதமுக்குச் சிரம்பணியுங்கள் என்று வானவர்களிடம் கூறினோம் ... (11)’

அத்தியாயத்தின் இறுதியில் மனிதர்களின் பாவங்கள், அவர்களின் தவறான வாழ்க்கை முறைகள் ஆகியவை தொடர்பாக அல்லாஹ் கூறு கிறான்: ‘அவனே உங்களை ஒரே மனிதரிலிருந்து படைத்தான். அவர் மன அமைதியைப் பெற்றுக்கொள்வதற்காக அந்த மனிதரிலிருந்தே அவருக் கான துணையைப் படைத்தான் ... (189)’ பின்னர் கூறுகிறான்:

> அல்லாஹ் அவர்களுக்கு ஆரோக்கியமான குழந்தையை வழங்கிய போது அதில் அவனுக்குக் கூட்டாளிகளை ஏற்படுத்திவிட்டார்கள். அவர்களின் இணைவைப்பைவிட்டும் அல்லாஹ் மிக உயர்ந்த வன். எந்த ஒரு பொருளையும் படைக்க முடியாதவர்களையா அவர்கள் அவனுக்கு இணையாக்குகிறார்கள்? மாறாக, அவையே படைக்கப் பட்டவைதானே? (190,191)

இணைவைப்பு என்னும் பாவத்தைச் செய்தவர்கள் ஆதமின் பிள்ளை கள்தாம். அவர்கள்தாம் அறிவிழந்து வழிதவறிச் சென்றார்கள்.

ஒன்றுக்கொன்று கோர்வையாக அமைந்த திருக்குர்ஆனின் வசனங்கள் ஆரம்பத்திலும் இறுதியிலும் மனிதச் சமூகம் முழுவதையும் விளித்து உரையாடுகின்றன. மனிதனுக்கு வழங்கப்பட்ட பொறுப்பையும் அதனை எவ்வாறு அவன் சரிவர நிறைவேற்றவில்லை என்பதையும் அவை அவனுக்கு நினைவூட்டுகின்றன.

ஷைத்தான் மனிதனை மிகைக்க முடியாது. மனிதன் ஷைத்தானால் ஏமாற்றப்பட்டுவிடுகிறான் அல்லது அவனுடைய சூழ்ச்சியைவிட்டு அலட்சியமாக இருந்துவிடுகிறான். உதாரணமாக, ஷைத்தானால் ரேடியோவின் பல வகையான அலைவரிசைகளால் மனிதனை வழி கெடுக்க முயற்சிசெய்ய முடியும். அதனைக் கேட்பதற்கும் கேட்காமல் இருப்பதற்கும் மனிதன் ஆற்றல்பெற்றுள்ளான்.

யார் ரேடியோவின் குறிப்பிட்ட அலைவரிசையில் தான் விரும்பியதை மட்டும் கேட்பதில் தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்வாரோ அவர் ஷைத் தானின் சூழ்ச்சியிலிருந்து தப்பித்துவிடுவார். தம் மனதை அலைபாய விட்டுவிட்டால் அவனுடைய சூழ்ச்சியில் அகப்பட்டுக்கொள்வார்.

வலுக்கட்டாயமாக ஷைத்தானால் மனிதனை வழிகெடுக்க முடியாது. அவனால் ஆசைகாட்ட மட்டுமே முடியும். அந்த ஆசைக்கு இணங்கு வதும் இணங்கமாலிருப்பதும் மனிதனின் விருப்பத்தைப் பொறுத்தது.

ஆச்சரியம் என்னவென்றால், மனிதன் தன் தந்தை எதனால் சுவனத்தி லிருந்து வெளியேற்றப்பட்டார் என்பதை மறந்துவிட்டான். மீண்டும்

மீண்டும் அந்தத் துன்பம் தன் வாழ்க்கையில் நிகழ்ந்தும் அதனை அவன் பொருட்படுத்துவதில்லை. அதிலும் குறிப்பாக, ஷைத்தான் ‘ஆதமின் பிள்ளைகள் அனைவரையும் வழிகெடுப்பேன்.’ என்று சத்தியம் செய் துள்ளான் என்பதை:

> நீ என்னை வழிதவறச் செய்துவிட்டதனால் நானும் மனிதர்களை வழிகெடுப்பதற்காக உன்னுடைய நேரான வழியில் அமர்ந்து கொள்வேன். பின்னர், அவர்களின் முன்னாலிருந்தும் பின்னா லிருந்தும் வலப்புறமிருந்தும் இடப்புறமிருந்தும் அவர்களிடம் நான் வருவேன். அவர்களில் பெரும்பாலோரை நன்றியுள்ளவர் களாக நீ காண மாட்டாய். (16,17)

வெளிப்படையான இந்தக் குரோதத்திலிருந்து எச்சரிக்கையாக இருக்க வேண்டியது நம்முடைய கடமை, அல்லவா?

ஆச்சரியம் என்னவென்றால், ஒரு புத்திசாலி ஏமாற வாய்ப்பு இல்லாத வெளிப்படையான ஒரு சூழ்ச்சியால்தான் ஆதம் ஏமாற்றப்பட்டார். இப்லீஸ் அவரிடம் கூறினான், ‘நீர் மலக்காக ஆகிவிடக் கூடாது என்ப தற்காகவே இந்த மரத்திலிருந்து உண்ணக் கூடாது என்று தடுக்கப் பட்டுள்ளீர்.’

அதற்கு ஆதம், ‘வானவர்களே எனக்குச் சிரம்பணிந்திருக்கிறார்கள். பிறகு எப்படி நான் அவர்களைவிடத் தாழ்ந்தவனாக ஆவேன்? நான் அவர்களைவிட உயர்ந்தவனாயிற்றே?’ என்று கூறியிருக்கலாம்.

‘நீங்கள் நிரந்தரமாக இருப்பீர்கள்.’ என்று ஷைத்தான் ஆதமுக்கு ஆசை காட்டினான். ஆதமும் அவரது பிள்ளைகளும் நிரந்தரமானவர்கள் இல்லை என்று யார் சொன்னது? அவர்கள் இறந்துபோனாலும் சரியே. இறப்பு என்பது அவர்கள் ஓர் உலகிலிருந்து இன்னொரு உலகை நோக்கிச் செல்லும் ஓர் இடம்பெயர்வுதான்.

நிச்சயமாக ஷைத்தான் பெரும் ஏமாற்றுக்காரன். ஆனாலும் அவன் பழிக்கப்பட மாட்டான். ஏமாந்தவர்களே பழிக்கப்படுவார்கள். யார் வெளிப்படையான அவனுடைய வலையில் போய் விழுந்தார்களோ அவர்களே பழிக்கப்படுவார்கள்.

ஆதம், தாம் அனுபவித்துக் கொண்டிருந்த அருட்கொடைகளை யெல்லாம் இழந்துவிட்டார். அவரும் அவருடைய மனைவியும் உழைத்து வியர்வை சிந்தி உண்ணும் பொருட்டுப் பூமிக்கு அனுப்பப்பட்டார்கள்.

அவர்களின் பிள்ளைகளுக்கு இந்த முதல் அனுபவம் எடுத்துரைக் கப்படுகிறது. அவர்கள் படிப்பினைபெற மாட்டார்களா என்ன?

இறைவன் கூறினான்: 'நீங்கள் இங்கிருந்து இறங்கிவிடுங்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் பகைவர்களாக இருப்பீர்கள். பூமியில் உங்களுக்கு குறிப்பிட்ட காலம்வரை தங்குமிடமும் வாழ்க்கை வசதியும் உண்டு. (24)' குறிப்பிட்ட காலம்வரை உங்களுக்கு வாழ்நாள் உண்டு. பின்னர், அந்தக் காலகட்டத்தில் நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதுகுறித்து விசாரிக் கப்படுவதற்காக உங்களைப் படைத்த படைப்பாளனிடம் திரும்பக் கொண்டுவரப்படுவீர்கள். நீங்கள் அவனுக்கு அடிமையாக இருந்தீர்களா அல்லது ஷைத்தானுக்கு அடிமையாக இருந்தீர்களா என்பதுகுறித்தும் விசாரிக்கப்படுவீர்கள். 'அங்குதான் நீங்கள் வாழ்வீர்கள். அங்குதான் நீங்கள் மரணிப்பீர்கள். அங்கிருந்துதான் நீங்கள் வெளிப்படுத்தப்படுவீர்கள். (25)'

ஆதமின் இந்தச் சம்பவத்துக்குப் பிறகு உரையாடல் அவர்களின் பிள்ளைகளை நோக்கித் திரும்புகிறது. அவர்கள் தங்கள் இறைவனின் அறிவுரைகளைச் செவியேற்க வேண்டும் என்பதற்காக, தங்கள் எதிரியின் சூழ்ச்சியிலிருந்து தப்பிக்க வேண்டும் என்பதற்காக நான்கு முறை அழைக் கப்படுகிறார்கள்.

இந்த அறிவுரைகளில் மனிதச் சமூகம் அதன் இயல்புக்கு உகந்த மார்க்கத்தின் பக்கம், உயர்வான மனிதத்தின் பக்கம் வழிகாட்டப்பட் டுள்ளதைக் காண்கிறோம்.

கவலைக்குரிய விசயம் என்னவென்றால், நம்முடைய தற்போதைய உலகம் கீழான மனிதத்தால் அல்லது மண்ணோடு, மண்சார்ந்த ஈர்ப்பு களோடு அதனைக் கட்டிப்போடக்கூடிய மதச்சார்பற்ற தன்மையால் குழப்பத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். அது அதனை மிகக் குறைவாகவே வானத்தின் பக்கம் உயர்த்துகிறது.

இந்த நான்கு அழைப்புகளையும் குறித்து கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். முதல் அழைப்பு ஆடையோடு தொடர்புடையது. ஆடை அணிவதன் மூலம் மனிதன் ஏனைய உயிரினங்கள் அனைத்தையும் விடத் தனித்து நிற்கிறான். அது அவனது மறைவிடங்களை மறைக்கிறது. அவனது தோற்றத்தை அழகுபடுத்துகிறது.

மனிதர்கள் இந்த ஆடை விசயத்தில் வரம்புமீறுகிறார்கள். சிலர் மோசடிசெய்கிறார்கள். சிலர் கர்வம் கொள்கிறார்கள். அவர்கள் தாங்கள் அணியும் ஆடையின் விலைக்கேற்பத் தங்களை எடைபோட்டுக்கொள் கிறார்கள்.

சில பெண்கள் குட்டையான ஆடைகளை அணிகிறார்கள். அவை அவர்களின் மறைவிடங்களைக்கூட ஒழுங்காக மறைப்பதில்லை. தம்

உறுப்புகள் வெளியே தெரியும்வண்ணம் மிக இறுக்கமான, மெல்லிய ஆடைகளை அணிகிறார்கள்.

இவையனைத்தும் அனுமதிக்கப்பட்டதல்ல. ஆடையைக் கொண்டோ அதன் விலையைக் கொண்டோ மனிதன் மதிப்பிடப்பட மாட்டான்.

இங்கு அந்தரங்கமாக அணியும் இன்னுமொரு ஆடை இருக்கிறது. அதற்குத்தான் திருக்குர்ஆன் 'இறையச்சம் என்னும் ஆடை' என்று பெயரிடுகிறது. இதைத்தான் ஒரு கவிஞர்

'ஒரு மனிதன் பழிப்புகளை ஏற்படுத்தும் செயல்களால்
தன்னைக் களங்கப்படுத்தவில்லையெனில் அவன் அணிகின்ற
ஒவ்வொரு ஆடையும் அழகானதுதான்'

என்று குறிப்பிடுகிறார். இன்னொரு கவிஞர்

'விலையுயர்ந்த ஆடைகளை நான் அணியும் பொருட்டு
மற்றவர்களின் மீது அநீதி இழைப்பதைவிடப் பழைய
ஆடைகளை அணிவதையும் சாதாரண உணவுகளை
உண்பதையுமே நான் விரும்புகிறேன்'

என்று கூறுகிறார்.

*ஆதமின் மக்களே, உங்கள் உடலின் வெட்கத்தலங்களை மறைப்பதற்காகவும் அலங்காரத்துக்காகவும் நாம் உங்களுக்கு ஆடையை அருளியுள்ளோம். ஆயினும், இறையச்சம் என்னும் ஆடையே மிகச் சிறந்ததாகும். இது அல்லாஹ்வின் சான்றுகளில் உள்ளதாகும். இதனால் அவர்கள் சிந்திக்கக்கூடும். (26)*

நாம் நம்முடைய விரிவுரையில் இந்த நினைவூட்டலுக்கும் அத்தியாயத்தின் ஆரம்பத்தில் கூறப்பட்டுள்ள பின்வரும் வசனத்துக்கும் மத்தியில் இணைப்பை ஏற்படுத்துவோம்: 'உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு அருளப்பட்டுள்ளதைப் பின்பற்றுங்கள். அவனைத் தவிர வேறு பாதுகாவலர்களைப் பின்பற்றாதீர்கள். மிக அரிதாகவே நீங்கள் நல்லுணர்ச்சி பெறுகிறீர்கள். (3)' அல்லாஹ் கூறுகிறான்:

*அவனே தன் அருளுக்கு முன்னர் காற்றுகளை நற்செய்தியாக அனுப்புகிறான். அவை கனமான மேகங்களைச் சுமந்து செல்லும்போது நாம் அவற்றை வறண்டுகிடக்கும் பூமியின் பக்கம் ஓட்டிச்செல்கிறோம். அங்கு மழையைப் பொழிவித்து அதன் மூலம் எல்லா வகையான கனிகளையும் நாம் வெளிப்படுத்துகிறோம்.*

*இவ்வாறே நாம் இறந்தவர்களை உயிர்ப்பிக்கிறோம். இதனால் நீங்கள் சிந்திக்கக்கூடும். (57)*

*மனிதன் படிப்பினைபெறுவதற்கு, சிந்திப்பதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன. ஆனாலும், அவன் மறந்துகொண்டிருக்கிறான்.*

*மீண்டும் அதே அழைப்பு இடம்பெறுகிறது: 'ஆதமின் மக்களே, ஷைத்தான் உங்கள் தாய் தந்தையரைச் சுவனத்திலிருந்து வெளியேற்றி, அவர்களை ஒருவருக்கொருவர் நிர்வாணமாகக் காட்ட அவர்களின் ஆடைகளைக் களையச்செய்தவாறு உங்களையும் அவன் வழிதவறச் செய்துவிட வேண்டாம். (27)'*

*உங்களின் தந்தைக்கு நிகழ்ந்ததுபோன்று உங்களுக்கு நிகழ்ந்துவிடக் கூடாது.*

*அவரைச் சுவனத்திலிருந்து வெளியேற்றும் முயற்சியில் ஷைத்தான் வெற்றியடைந்துவிட்டான். அவருடைய பிள்ளைகளையும் அவன் சுவனத்திலிருந்து தூரமாக்கிவிடுவானா? அவரை நிர்வாணமாக்கியது போன்று அவரது பிள்ளைகளையும் நிர்வாணமாக்கிவிடுவானா?*

*நிச்சயமாக அவன் உங்களுக்கு எதிராகக் கடும் குரோதம் கொண்ட எதிரி. அவனால் உங்களைப் பார்க்க முடியும். உங்களால் அவனைப் பார்க்க முடியாது. அவன் உங்களைவிட ஆற்றல்மிக்கவன். ஆனால், அவனால் உங்களை வழிகெடுக்க முடியாது. ஏனெனில் ஈமான் உங்களுக்குக் கேடயம். ஈமானைத் தொலைத்தவர்கள்தாம் அவனுடைய வலையில் அகப்படுவார்கள்.*

*அறியாத மூடர்களான முன்னோர்களைப் பின்பற்றினோம், இட்டுக் கட்டப்பட்ட விசயங்களை நம்பினோம் என எந்தக் காரணமும் ஏற்றுக் கொள்ளப்படாது.*

*அக்காலத்தில் கஅபா என்னும் ஆலயத்தில் நிர்வாணமாகச் சுற்றி வந்தவர்கள், 'எந்த ஆடைகளை அணிந்து நாங்கள் பாவங்கள் செய்தோமோ அந்த ஆடைகளை அணிந்து நாங்கள் தவாஃப் செய்ய மாட்டோம்' என்று கூறிவந்தார்கள். மார்க்கத்தைப் பின்பற்றுவோரில் பெரும்பாலோர் அல்லாஹ் அருளாத இதுபோன்ற மறைவான செய்திகளுக்குப் பின்னால் அலைந்துதான் வழிதவறிப் போனார்கள். அவை வெளிப்படையான அறிவுக்கும் மார்க்கத்தின் ஆதாரங்களுக்கும் எதிரானவை. ஆனாலும் அவர்கள், 'அல்லாஹ்தான் தங்களுக்கு இவ்வாறு கட்டளையிட்டான்.' என்று வாதிடுகிறார்கள்.*

மனிதனின் சிந்தனைக்கும் இயல்புக்கும் எதிரான இதுபோன்ற மானக்கேடான காரியங்களைச் செய்யுமாறு அல்லாஹ் கட்டளையிட மாட்டான். அவன் மிக உயர்ந்தவன், மிகக் கண்ணியமானவன்.

> நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்வின் மீது புனைந்துகூறுகிறீர்களா? நீர் கூறும், 'என் இறைவன் நீதியாக நடக்கும்படி கட்டளையிட்டுள்ளான்.' (28,29)

நீதி என்பது மனிதர்கள் அனைவருக்கும் பழக்கப்பட்ட பாதைதான். அதனைக் கடைப்பிடிப்பதில் அவர்களுக்கு என்ன பிரச்சினை? ஏன் நாம் நம்மைப் படைத்தவனிடம் நம்மை முழுமையாக ஒப்படைக்கக் கூடாது? அவனிடம்தானே நாம் திரும்பிச்செல்ல வேண்டும்.

> ஒவ்வொரு தொழுகை நேரத்திலும் உங்கள் முகங்களை இறைவனை நோக்கித் திருப்பிக்கொள்ளுங்கள். உளத்தூய்மையுடன் அவனையே வழிபட்டுப் பிரார்த்தியுங்கள். உங்களை முதன்முறையாக அவன் படைத்ததுபோன்றே மீண்டும் நீங்கள் திரும்புவீர்கள். ஒரு பிரிவினருக்கு அவன் வழிகாட்டினான். மற்றொரு பிரிவினர் மீதோ வழிகேடு உறுதியாகிவிட்டது. (29,30)

இரு பிரிவினரில் யார் சரியான பாதையில் செல்கிறார்களோ, யார் கண்ணியத்தையும் வெற்றியையும் பெறுவார்களோ அவர்களுடன் நாம் இருக்க வேண்டும்.

❖ ❖ ❖

போலியான மார்க்கங்கள் 'மக்களை அல்லாஹ்வின் பக்கம் இணைக்கிறேன்' என்ற பெயரில் துறவறத்தையும் கடினமான வாழ்க்கையையும் போதிக்கின்றன. ஆகவேதான், அவற்றைப் பின்பற்றுபவர்கள் பழைய, கடினமான ஆடைகளை அணிகிறார்கள். சுவையற்ற, கடினமான உணவுகளை உண்ணுகிறார்கள். அனுமதிக்கப்பட்ட, தூய இன்பங்களைவிட்டும் தங்களை விலக்கிக்கொள்கிறார்கள்.

இஸ்லாத்தின் போதனைகள் இவற்றுக்கு நேரெதிரானவை. அவை அனைத்துக்கும் முதலாவதாக மனித மனதில் 'அவன் அல்லாஹ்வின் ஓர் அடிமை' என்ற எண்ணத்தை விதைக்கிறது. அவனுடைய உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி, பேராசையை, சுயநலத்தை நசுக்கி, அவனுள் பணிவையும் கருணையையும் ஏற்படுத்துகின்றன.

ஒரு மனிதன் அசிங்கமான ஆடையை அணிந்துகொண்டு தொழுவதைவிட அழகான ஆடையை அணிந்துகொண்டு தொழுவதையே இஸ்லாம் விரும்புகிறது.

ஆதமின் மக்களே, ஒவ்வொரு தொழுகை நேரத்திலும் முறையாக ஆடை அணிந்துகொள்ளுங்கள். உண்ணுங்கள், பருகுங்கள். ஆனால், வீண்விரயம் செய்யாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் வீண்விரயம் செய்வோரை நேசிக்க மாட்டான். (31)

ஹதீஸில் வந்துள்ளது: 'நீங்கள் விரும்புவதை உண்ணுங்கள். நீங்கள் விரும்புவதை அணியுங்கள். இரண்டு பண்புகள் உங்களை வழிதவறச் செய்துவிட வேண்டாம். அவை வீண்விரயமும் கர்வமும் ஆகும்.'

உண்மையில் மோசமான பண்பு வீண்விரயத்தில் மறைந்துள்ளது. அது பெரும் புகழைப் பெறும் நோக்கத்தில் உணவுக்கும் ஆடைக்கும் வரம்பு மீறிச் செலவுசெய்வதாகும்.

உடலை வளர்ப்பதிலும் செல்வங்களைப் பதுக்குவதிலும் ஒருவருக் கொருவர் போட்டிபோட்டுக்கொண்டு செயல்படுவதை மார்க்கம் விரும்ப வில்லை.

மறுமையை நோக்கிய பயணத்தில் மனிதன் இவ்வுலக இன்பங்களை அதிகமாகப் பொருட்படுத்தக் கூடாது. அதற்காக அவன் பழைய ஆடை களை அணிய வேண்டும் என்றோ சுவையற்ற, கடினமான உணவுகளை உண்ண வேண்டும் என்றோ எந்த அவசியமும் இல்லை.

நீர் கேளும், 'அல்லாஹ் தன் அடியார்களுக்காக வெளிப்படுத்திய அலங்காரத்தையும் தூய்மையான உணவையும் தடைசெய்தது யார்?' (32)

அலங்காரம் என்ற வார்த்தை அல்லாஹ்வுடன் இணைத்துக் கூறப் பட்டிருப்பது அவன்தான் அதனைப் படைத்தவன் என்பதையும் அவன் அடியார்களிடமிருந்து அதனை ஏற்றுக்கொள்கிறான் என்பதையும் உணர்த்துகிறது.

பின்வரும் வசனம் இந்தப் பொருளை இன்னும் தெளிவுபடுத்துகிறது:

இவ்வுலக வாழ்வில் அது நம்பிக்கையாளர்களுக்குரியது. மறுமை யிலோ அது அவர்களுக்கு மட்டுமே உரித்தானது. (32)

இந்த உலகில் அதில் மற்றவர்களும் பங்குபெறலாம். ஆனால், மறுவுலகில் அது நம்பிக்கையாளர்களுக்கு மட்டுமே உரித்தானது.

நீர் கூறும், 'மானக்கேடானவற்றையும் -அவை வெளிப்படை யாகவோ மறைமுகமாகவோ இருந்தாலும் சரி- பாவங்களையும்

*நியாயமின்றி வரம்புமீறுவதையும் ... என் இறைவன் தடைசெய் துள்ளான்.'* (33)

மறைமுகமான, வெளிப்படையான பாவங்களை அவன் தடை செய்துள்ளான். குரோதத்தையும் கோபத்தையும் போல. 'நியாயமின்றி வரம்புமீறுவது' என்பது மற்றவர்களுக்கு எதிராகச் செய்யப்படும் பாவங் கள் அனைத்தையும் குறிக்கும்.

சிலர் இறையச்சத்தைக் காரணம் காட்டி தங்களின் ஆடையைக் கரண்டைக்காலுக்கு மேல் உயர்த்திக்கொள்கிறார்கள். ஆனால், அவர் களின் உள்ளத்திலோ ஃபிர்அவ்னின் கர்வம் இருக்கும். நபிமொழி யிலிருந்து நமக்குத் தெரியவருகிறது, 'ஏழ்மைநிலையிலும் பெருமை யடிப்பவனை அல்லாஹ் வெறுக்கிறான்' என்று. அதே போன்று, அவர் கள் கடினமான ஆடைகளை அணிவதிலும் கர்வம் கொள்கிறார்கள். பட்டாடை அணிபவன்கூட அதுபோன்று கர்வம் கொள்வதில்லை.

இங்கு உள்ளத்தின் தூய்மையும் நற்பண்புகளைப் பெறுவதுமே நோக்க மாகும். அல்லாஹ்வை மட்டுமே சார்ந்திருப்பதும் அவனுக்கு எந்த வகையிலும் இணைகளை ஏற்படுத்தாமல் விலகியிருப்பதும்தான் மனித இயல்புக்கேற்ற முதல் அடித்தளமாகும்.

மனிதன் தனித்துவிடும்போது இரு கடவுள்களை அல்லது மூன்று கடவுள்களை அவன் முன்னோக்குவதில்லை. அந்த ஒரே இறைவனையே அவன் முன்னோக்குகிறான். துன்பத்தில் அவனிடமே அடைக்கலம் தேடுகிறான். மகிழ்ச்சி ஏற்படும்போது அவனுக்கே நன்றிசெலுத்து கிறான்.

உண்மையில் ஷிர்க் என்பது, மனிதச் சமூகம் தம்முடைய நேரான வழியைத் தொலைத்து வழிதவறிச் சென்றபோது உண்டான ஒரு சூழலில் ஏற்பட்ட ஒன்றாகும்.

இஸ்லாம் மனித இயல்புக்கு உகந்த கொள்கையையும் ஒழுக்கங் களையும் கொண்டுவந்தது. திருக்குர்ஆன் கூறுகிறது: 'எவ்வித ஆதா ரத்தையும் அல்லாஹ் இறக்கிவைக்காத நிலையில் அவனுக்கு நீங்கள் இணை ஏற்படுத்துவதையும் நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்வின் மீது புனைவதையுமே என் இறைவன் தடைசெய்துள்ளான். (33)'

இந்த அத்தியாயத்தில், மனிதன் படைக்கப்பட்டபோது அவனிடம் உறுதிமொழிகள் வாங்கப்பட்டன என்பது தெளிவுபடுத்தப்படுகிறது:

*உம் இறைவன் ஆதமுடைய மக்களின் முதுகுத்தண்டிலிருந்து அவர்களின் சந்ததிகளை வெளியாக்கியபோது அவர்களுக்கு*

அவர்களையே சாட்சியாக்கி 'நான் உங்கள் இறைவன், அல்லவா?' என்று கேட்டான். அதற்கு அவர்கள், 'ஆம். இதற்கு நாங்களே சாட்சியாக இருக்கிறோம்.' என்றார்கள். இது ஏனெனில் நீங்கள் மறுமைநாளன்று, 'இதைப் பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது. நாங்கள் கவனமற்று இருந்துவிட்டோம்.' என்று கூறிவிடக் கூடாது என்பதற்காக, அல்லது 'எங்கள் முன்னோர்கள் ஆரம்பத்திலிருந்தே இணைவைத்து வந்தார்கள். அவர்களுக்குப் பின் நாங்கள் அவர்களின் சந்ததிகளாகவே இருந்தோம். தவறானவர்கள் செய்த காரியத்துக்காக எங்களையா அழிக்கப்போகிறாய்?' என்று நீங்கள் கூறிவிடக் கூடாது என்பதற்காகத்தான். (172,173)

இந்த வசனம் ஓரிறைக் கொள்கையைவிட்டு விலகும் மனிதன், அவன் எப்படிப்பட்ட சூழலில் வாழ்ந்தாலும் எந்தக் காரணமும் சொல்ல முடியாது என்பதைச் சுட்டுகிறது. ஏனெனில், அவனுக்குள் இருக்கும் இயல்பின் அழைப்பு எல்லா வழிகேடுகளையும் எதிர்கொள்வதற்கும் அல்லாஹ்வைக் குறித்த சரியான அறிதலை நிலைப்படுத்துவதற்கும் போதுமானது.

மனிதனின் இயல்பு ஓரிறைக் கொள்கையை மட்டுமே ஏற்றுக்கொள்வதற்கேற்ப அமைக்கப்பட்டுள்ளது. உண்மையில் நம்முடைய அறிவும் மனமும் படைப்பாளன் இல்லாத எந்த ஒரு படைப்பையும் ஏற்றுக் கொள்ளாது. வாழ்க்கை பூஜ்யத்திலிருந்து தொடங்கியது என்பதை அவை நிராகரித்துவிடும்.

நாம் நம்மைப் படைத்த படைப்பாளனை உணர்கிறோம். அவனிடமிருந்தே நாம் தொடங்கினோம். இதனை நாம் ஏற்றுக்கொள்ளவில்லையெனில் நமக்கு வாழ்க்கையை வழங்கியவன் யார்? நம்முடைய இயல்பானது படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் அந்த அல்லாஹ்விடமே நம்மை அழைத்துச்செல்லும்.

இணைவைப்பாளர்களிடத்தில் படைப்பாளன் என்பவன் யார்? ஏமாற்றப்பட்ட அவர்கள் யூகங்களில் உழன்றுகொண்டிருக்கிறார்கள்.

ஆகவேதான் -ஆதமுடைய மக்களுக்குத் தூய ஓரிறைக் கொள்கையை அறிவுறுத்திய பிறகு- தங்களுக்குத் தாங்களே அநீதி இழைத்துக் கொண்டவர்களுக்கு உறுதியான எச்சரிக்கை இடம்பெறுகிறது: 'அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டிக் கூறுபவனைவிட அல்லது அவனது சான்றுகளை மறுப்பவனைவிடப் பெரும் அக்கிரமக்காரன் யார்? அவர்களுக்கு விதிக்கப்பட்டது அவர்களை அடைந்தே தீரும். (37)' அவர்கள் இந்த உலகில் தங்களுக்கென விதிக்கப்பட்ட வாழ்வாதாரங்களையும் வாழ்நாளையும் பெற்றே தீருவார்கள்.

இறுதியில் நம் வானவர்கள் அவர்களின் உயிரைக் கைப்பற்ற வரும்போது, 'அல்லாஹ்வைத் தவிர நீங்கள் அழைத்துக் கொண்டிருந்தவர்கள் எங்கே?' என்று கேட்பார்கள். அதற்கு அவர்கள், 'அவர்களெல்லாம் எங்களைவிட்டும் காணாமல் போய்விட்டார்கள்.' என்று கூறுவார்கள். நிச்சயமாக அவர்கள் தங்களுக்கு எதிராகத் தாங்கள் நிராகரிப்பாளர்களாகவே இருந்ததாகச் சாட்சி கூறுவார்கள். (37)

அல்லாஹ்வை மறப்பதற்குச் சில காரணங்கள் இருக்கின்றன. அவற்றில் முதலாவதாக நான் காண்பது, அவர்களின் பழக்கவழக்கங்களிலிருந்து தோன்றக்கூடிய பொய்யான உணர்வுகள்தாம்.

பசியை உணராத பணக்காரன் பசியின் வலியை மறந்துவிடுகிறான். நோயை உணராத ஆரோக்கியமானவன் நோயினால் ஏற்படும் வலியை மறந்துவிடுகிறான். இருவரும், வாழ்க்கை என்பது தாங்கள் உணர்வது போன்றுதான் என்று எண்ணிக்கொள்கிறார்கள்.

மாறாக, மனிதனை மிகைத்திருக்கும் நிகழ்காலம் அவனது நெருங்கிய, தூரமான கடந்தகாலங்களை மறக்கடித்துவிடுகிறது. இரவு, பகல் மாறி மாறி வருவதையும் சூரியன், சந்திரன் உதிப்பதையும் காணும் நாம் அவை என்றும் மாறாதவை, அவற்றை இயக்குபவன் யாரும் இல்லை என்று எண்ணிக்கொள்கிறோம்.

இறை வஹீ மனிதர்களுக்கு நினைவூட்டுகிறது, அல்லாஹ்தான் இவற்றையெல்லாம் செய்பவன் என்று:

நிச்சயமாக உங்கள் இறைவன் அல்லாஹ்தான். அவனே வானங்களையும் பூமியையும் ஆறு நாள்களில் படைத்தான். பின்னர், அவன் அரியணையின் மீது நிலைகொண்டான். அவன் இரவால் பகலை மூடுகிறான். பகல் அதனைப் பின்தொடர்கிறது. அவன் சூரியனையும் சந்திரனையும் நட்சத்திரங்களையும் படைத்தான். அனைத்தும் அவனது கட்டளைக்குக் கட்டுப்பட்டே இருக்கின்றன. நினைவில் வையுங்கள், படைப்பதும் கட்டளையிடுவதும் அவனுக்கே உரியவையாகும். அகிலம் அனைத்துக்கும் இறைவனாகிய அல்லாஹ் பெரும் பாக்கியமுடையவன். (54)

கால ஓட்டத்தில் மக்கள் மகிழ்ச்சிக்கும் துக்கத்துக்கும் வெற்றிக்கும் தோல்விக்கும் உள்ளாகிறார்கள். அவர்கள் தாங்கள் விரும்பாதவற்றை அகற்றும், விரும்பும் விசயங்களை நெருக்கமாக்கிவைக்கும் தங்கள் இறைவனின் பக்கம் அதிகத் தேவையுடையவர்களாக இருக்கிறார்கள். ஆகவேதான் அவன் கூறுகிறான்:

பணிவாகவும் அந்தரங்கமாகவும் உங்கள் இறைவனிடம் பிரார்த்தியுங்கள். நிச்சயமாக அவன் வரம்புமீறுவோரை நேசிக்க மாட்டான். பூமியில் சீர்திருத்தம் ஏற்பட்டபின் அதில் குழப்பம் உண்டாக்காதீர்கள். அச்சத்தோடும் நம்பிக்கையோடும் அவனிடமே பிரார்த்தியுங்கள். நிச்சயமாக இறையருள் நன்மைசெய்வோருக்கு நெருக்கமாகவே உள்ளது. (55,56)

இந்த உலகில் மனிதர்கள் அல்லாஹ்வின் வாக்குறுதிக்கும் எச்சரிக்கைக்கும் அவன்மீதான நம்பிக்கைக்கும் அச்சத்துக்கும் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் விரும்பியதை அல்லாஹ் மட்டுமே அவர்களுக்குத் தர முடியும், அவர்கள் வெறுப்பதை அல்லாஹ்வால் மட்டுமே அவர்களைவிட்டு அகற்ற முடியும் என்பதை அவர்கள் அதிகமாகவே உணர்கிறார்கள். ஆகவேதான் அவன் கூறுகிறான்:

அவனே தன் அருளுக்கு முன்னர் காற்றுகளை நற்செய்தியாக அனுப்புகிறான். அவை கனமான மேகங்களைச் சுமந்துசெல்லும் போது நாம் அவற்றை வறண்டுகிடக்கும் பூமியின் பக்கம் ஓட்டிச் செல்கிறோம். அங்கு மழையைப் பொழிவித்து அதன் மூலம் எல்லா வகையான கனிகளையும் நாம் வெளிப்படுத்துகிறோம். இவ்வாறே நாம் இறந்தவர்களை உயிர்ப்பிக்கிறோம். இதனால் நீங்கள் சிந்திக்கக்கூடும். (57)

இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் பல அடிப்படையான அம்சங்கள் சுருக்கமாக இடம்பெற்றன. பின்னர், ஒவ்வொன்றும் விரிவாகவே விளக்கப்பட்டன. இவையனைத்தும் தனித்தனியானவை அல்ல. மாறாக, ஒன்றுடன் ஒன்று இணைந்து ஒன்றுக்கொன்று தொடர்புடைய நோக்கங்களை செயல்படுத்தக்கூடியவை. ஈமானை உருவாக்குவது, படிப்பினையை வெளிப்படுத்துவது, நேர்வழியில் உறுதிப்படுத்துவது ஆகியவையே அதன் நோக்கங்களாகும்.

தகுதியானவர்கள் அவற்றைக் கொண்டு பயனடைவார்கள். கற்களின் மீது பொழியக்கூடிய தொடர் மழையால் அவற்றிலிருந்து எந்த ஒன்றும் முளைத்துவிடப்போவதில்லை: ‘வளம்மிக்க பூமி தன் இறைவனின் கட்டளைப்படி நல்ல விளைச்சலைத் தருகிறது. வளம் குன்றிய பூமியின் விளைச்சல் குறைவாகத்தான் இருக்கும். இவ்வாறு நன்றிசெலுத்தும் மக்களுக்கு நம் சான்றுகளைப் பல்வேறு கோணங்களில் நாம் தெளிவுபடுத்துகிறோம். (58)’

❖ ❖ ❖

இறை வஹீயை ஏற்றுக்கொள்ளாமல் வரம்புமீறி, தம் அநியாயத்தி னால் வீழ்த்தப்பட்ட சமூகங்கள்குறித்து இந்த அத்தியாயம் விரிவாகவே பேசுகிறது. இந்தச் சமூகங்களில் பெரும்பாலானவை அறபிய பிரதே சங்களில் வசித்தவை என்பதைக் காண முடிகிறது. நூஹின் சமூகத்தார் இறாக்கிலும் ஆது சமூகத்தார் யமன் பிரதேசங்களிலும் ஸமூது சமூகத்தார் ஹிஜாஸ் பகுதிகளிலும் ஜோர்டான், சீனாய் ஆகிய பகுதிகளுக்கு மத்தியில் மத்யன் சமூகத்தாரும் கிழக்கு ஃபலஸ்தீனில் லூத்தின் சமூகத்தாரும் வாழ்ந்தார்கள் என்பதை அறிய முடிகிறது. இவர்கள் அனைவரும் தூதர் களை எதிர்த்து அவர்கள் கொண்டுவந்தவற்றை நிராகரித்தார்கள்.

இவர்களின் சம்பவங்களுக்கு முன்னால் ஆதமின் சம்பவம் இடம்பெறு கிறது. அதில் நாம் நினைவுகூரத்தக்க காரணம் தெளிவுபடுத்தப்படுகிறது.

ஷைத்தான் ஆதமை ஏமாற்றி அவரைச் சுவனத்திலிருந்து வெளி யேற்றினான். தொடர்ந்து அவன் அவரது பிள்ளைகளையும் அந்தச் சுவனத்தை நெருங்கவிடாமல் தடுத்துக்கொண்டிருக்கிறான்.

மற்ற சம்பவங்கள் திருக்குர்ஆனில் மீண்டும் மீண்டும் இடம்பெறு கின்றன. ஒரு சம்பவத்திலிருந்து ஒரு சமூகத்தின் வரலாற்றை நம்மால் அறிந்துகொள்ள முடியாது. மாறாக, பல்வேறு அத்தியாயங்களில் இடம் பெற்றுள்ள சம்பவங்களைத் தொகுத்தே நாம் ஒரு சமூகத்தின் வரலாற்றை அறிந்துகொள்ள முடியும்.

இங்கு நமக்கு ஒரு கேள்வி எழுகிறது. மனிதச் சமூக வரலாற்றில் இந்தச் சமூகங்கள் எத்தனை நூற்றாண்டுகளைக் கடந்திருக்கும்?

வெள்ளப் பிரளயம் ஏற்பட்டத்திலிருந்து இன்றுவரை சுமார் எண்பது நூற்றாண்டுகள் கடந்திருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆதமுக்கும் நூஹுக்கும் மத்தியில் எத்தனை நூற்றாண்டுகள் இருக்கும்? அது இந்தக் காலகட்டத்தைவிட அதிகமாக இருக்காது என்று நான் கருதுகிறேன்.

ஆதமுக்கும் நூஹுக்கும் மத்தியில் எத்தனை தலைமுறைகள் இருந் தன என்பது குறித்து திருக்குர்ஆன் நமக்கு எதுவும் கூறவில்லை. அதனால்தான் நான் உயிரியல் ஆய்வுகளை நம்புவதில்லை. அவை, கற்கால மனிதர்களின் மண்டை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டதாகவும் அவை பல மில்லியன் வருடங்கள் பழமையானவை என்றும் கூறுகின்றன.

அவை உண்மையில் பழங்கால மனிதர்களின் மண்டை ஓடுகள்தானா? ஏன், பூமியில் மனிதர்களுக்கு முன்னர் வாழ்ந்த பிற படைப்புகளின் மண்டை ஓடுகளாக இருக்கக் கூடாது? எதுவாக இருந்தாலும் அவை நமக்கு அவசியமற்ற ஆய்வுகளாகும்.

நிராகரித்த சமூகங்களின் அழிவுக்குப் பிறகு திருக்குர்ஆன் கூறும் விமர்சனங்களை நான் சிந்தித்துப் பார்த்தேன். அது எச்சரிக்கை விடுக்கும் விவகாரமாக மட்டும் இருக்கவில்லை. அது, அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறாகச் செயல்பட்டால் அதற்குரிய தண்டனையைப் பெறுவது உறுதி என்பதை அறிவிக்கக்கூடியதாக இருக்கிறது.

பின்னால் வந்த ஒவ்வொரு தலைமுறையும் எச்சரிக்கைகளைப் பெற்றது. முந்தையவர்கள் நிராகரித்ததுபோன்றே பிந்தையவர்களும் நிராகரித்தபோது அவர்களைச் சூழ்ந்து கொண்ட வேதனை இவர்களையும் சூழ்ந்துகொண்டது.

பின்வரும் வசனத்தில் இதனைத் தெளிவாகக் காணலாம்:

நாம் எந்த ஊருக்குத் தூதர்களை அனுப்பினாலும் அங்கு வசிக்கின்ற மக்கள் பணிய வேண்டும் என்பதற்காக அவர்களை வறுமையாலும் துன்பத்தாலும் பீடிக்கச்செய்தோம். பின்னர் நாம் அத்துன்பத்தை இன்பமாக மாற்றினோம். அவர்கள் பல்கிப் பெருகியபோது ‘எங்கள் முன்னோர்களுக்கும் இன்பமும் துன்பமும் ஏற்படத்தான் செய்தன’ என்று கூறினார்கள். ஆகவே, அவர்கள் உணராத வகையில் திடீரென அவர்களைப் பிடித்துக்கொண்டோம். (94,95)

அழிக்கப்பட்ட சமூகங்கள் தமக்குத்தாமே சவக்குழிகளைத் தோண்டிக் கொண்டவைதாம். அவர்கள்மீது சிறிதளவு கூட அநீதி இழைக்கப்பட வில்லை:

இந்த ஊர்வாசிகள் நம்பிக்கை கொண்டு இறையச்சத்துடன் நடந்திருந்தால் நாம் அவர்களுக்காக வானம் மற்றும் பூமியின் அருட்கொடைகளைத் திறந்திருப்போம். ஆனால் அவர்கள் மறுத்து விட்டார்கள். ஆகவே, அவர்களின் செயல்களினால் நாம் அவர்களைத் தண்டித்தோம். (96)

பிற்காலத்தில் வந்தவர்கள் தங்கள் முன்னோருக்கு ஏற்பட்ட விளைவைக் கண்டு படிப்பினைபெற்றிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் படிப்பினைபெறவில்லை. ஆகவே, அவர்களும் அழிந்துபோனார்கள்:

பூமியில் முன்பு வாழ்ந்து சென்ற மக்களுக்குப் பின் வந்த வாரிசுகளான இவர்கள் படிப்பினைபெறவில்லையா? நாம் நாடினால் அவர்களின் பாவங்களினால் அவர்களை தண்டித்திருப்போம். நாம் அவர்களின் உள்ளங்களில் முத்திரையிட்டுவிட்டோம். ஆகவே, அவர்கள் செவியேற்க மாட்டார்கள். (100)

*இவ்வாறு அறபுகளின் வரலாற்றையும் அது உள்ளடக்கியவற்றையும் இறைவன் சுருட்டிவிடுகிறான்.*

*பின்னர், தூதுத்துவங்கள் இஸ்றாயீலின் மக்கள் என்று அழைக்கப்படும் யூதர்களின் பக்கம் திரும்பின. அல்லாஹ் அவர்களிடம் கூறினான்: 'அவர்களுக்குப் பின் நாம் மூசாவை ஃபிர்அவ்னிடமும் அவனுடைய பிரமுகர்களிடமும் நம் சான்றுகளுடன் அனுப்பிவைத்தோம். ஆனால், அவர்கள் அவற்றை நிராகரித்தார்கள். குழப்பம்செய்தோரின் முடிவு என்னவாயிற்று என்பதைப் பாரும். (103)'*

*அவர்கள் இஸ்றாயீல் என்று பெயர்சூட்டப்பட்ட யஅகூபின் பிள்ளைகளாக இருந்தார்கள். அவர்கள் ஷாமின் பாலைவனங்களில் நாட்டுப்புற வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருந்தார்கள். பின்னர், இறைத்தூதர் யூசுஃபின் அழைப்பின் பேரில் எகிப்தில் குடியேறினார்கள். அங்குதான் அவர்கள் பல்கிப் பெருகினார்கள்.*

*ஆனாலும் அவர்கள் எகிப்திய சமூகங்களுடன் ஒன்றுகலக்கவில்லை. தங்களுடைய கொள்கைள் மற்றும் பழக்கவழக்கங்களுடன் தனித்தே வாழ்ந்தார்கள். அவர்களுக்கும் எகிப்தியர்களுக்கும் மத்தியில் கடுமையான பகை மூண்டது. ஃபிர்அவ்ன்கள் என்று அழைக்கப்பட்ட எகிப்திய அரசர்கள் அவர்களை அடிமைப்படுத்திக் கொடுமைப்படுத்தினார்கள்.*

*பின்னர், நீண்ட காலகட்டத்துக்குப் பிறகு மூசாவின் மூலம் அல்லாஹ் அவர்களைக் காப்பாற்ற நாடினான். மூசா அவர்களிடம் கூறினார்: 'உங்கள் இறைவன் மிக விரைவில் உங்கள் எதிரியை அழித்துவிட்டு, அவர்களுக்குப் பதிலாக உங்களை இந்தப் பூமியின் அதிபதியாக ஆக்கிவிடக்கூடும், நீங்கள் எவ்வாறு செயல்படுகிறீர்கள் என்பதை அவன் பார்ப்பதற்காக. (129)'*

*இந்த வாசகம், தம் சமூகத்தார் விசயத்தில் மூசா பயந்துகொண்டிருந்ததைத் தெளிவாகக் காட்டுகிறது. அவர் தம் சமூகத்தாரைக் குறித்து மோசமான எண்ணங்கள் கொண்டிருந்தாலும் அவர்களை மிகச் சரியாகக் கணிக்கக்கூடியவராக இருந்தார்.*

*அவர்களுக்கு இழைக்கப்பட்டுக்கொண்டிருந்த அநியாயங்களிலிருந்து அல்லாஹ்வின் பேரருளால் அவர்கள் விடுவிக்கப்பட்டவுடன் அவர்கள் செய்த முதல் காரியம் சிலை வழிபாட்டின் பக்கம் அவர்கள் ஈர்க்கப்பட்டதுதான்:*

> *நாம் இஸ்றாயீலின் மக்களைக் கடலைக் கடக்கச்செய்தோம். பின்னர், தங்களுக்குரிய சிலைகளை வணங்கிக்கொண்டிருந்த ஒரு*

சமூகத்தினரை அவர்கள் கடந்துசென்றபோது 'மூசாவே, இவர்களுக்குத் தெய்வங்கள் இருப்பதைப் போல எங்களுக்கும் ஒரு தெய்வத்தை ஏற்படுத்தித் தாரும்.' என்று கேட்டார்கள். அதற்கு மூசா கூறினார், 'நீங்கள் அறிவுகெட்ட கூட்டமாக இருக்கிறீர்கள். இவர்கள் ஈடுபட்டிருக்கும் காரியம் அழியக்கூடியதே. இவர்கள் செய்து கொண்டிருப்பது அசத்தியமானதாகும்.' (138,139)

சிலை வழிபாட்டின் மீது அவர்கள் கொண்ட ஈடுபாடு அவர்களின் சிந்தனை, உறுப்புகள் என அனைத்தின் மீது ஆதிக்கம்செலுத்தியது. மூசா தம் இறைவனுடன் தனிமையில் உரையாடுவதற்காகச் சென்ற வேளையில் அவர்கள் தங்கள் ஆபரணங்களிலிருந்து ஒரு காளைக் கன்றை உருவாக்கி, அல்லாஹ்வை விடுத்து அதனை வணங்க ஆரம்பித்தார்கள். இந்தச் செயலைக் குறித்து இறைவன் கூறுகிறான்: 'நிச்சயமாக, காளைக் கன்றைத் தெய்வமாக ஆக்கிக்கொண்டவர்கள் தம் இறைவனின் கோபத்துக்கு ஆளாகி இவ்வுலக வாழ்வில் இழிவடைவார்கள். இட்டுக்கட்டுவோரை நாம் இவ்வாறே தண்டிக்கிறோம். (152)'

உண்மையில் யூதர்களில் பெரும்பாலோரின் ஈமான் சந்தேகம் சூழ்ந்ததாகவே இருந்தது. அவர்களின் இச்சைகளே அவர்களை மிகைத்துக் கொண்டிருந்தன.

அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கு எதிராகத் தந்திரம் செய்து கொண்டிருந்தார்கள். சனிக்கிழமை மீன்பிடிக்கக் கூடாது என்று அல்லாஹ் அவர்களுக்குத் தடை விதித்திருந்தான். ஆனால், சனிக்கிழமை கடலில் அதிகமான மீன்கள் தென்படுவதைக் கண்ட யூதர்கள் அந்தக் கட்டளையை மீறினார்கள். பின்னர், அதற்குப் பதிலாக ஞாயிற்றுக்கிழமையை ஆக்கிக்கொண்டார்கள்.

கடற்கரையோரத்தில் இருந்த ஊரைப் பற்றி அவர்களிடம் கேளும். அவர்கள் சனிக்கிழமை விசயத்தில் வரம்புமீறிக்கொண்டிருந்தார்கள். சனிக்கிழமையன்று மீன்கள் தண்ணீருக்கு மேல்மட்டத்தில் அவர்களிடம் வந்தன. சனிக்கிழமை அல்லாத நாள்களில் அவை வருவதில்லை. அவர்கள் கீழ்ப்படியாமல் இருந்ததனால் நாம் அவர்களை இவ்வாறு சோதித்தோம். (163)

அவர்களில் உள்ள அறிவாளிகள் இந்த வழிமுறையை எதிர்த்தார்கள். பின்னர் அவர்கள், அந்த மக்களுக்கு உபதேசம்செய்வதா அல்லது அல்லாஹ்விடம் அவர்களை விட்டுவிடுவதா என்று கருத்து வேறுபாடு கொண்டு பிரிந்தார்கள்:

*அவர்களுக்கு நினைவூட்டப்பட்ட அறிவுரைகளை அவர்கள் மறந்த போது அவர்களில் தீமையை விட்டுத் தடுத்துக் கொண்டிருந்தவர் களைக் காப்பாற்றி, தமக்குத் தாமே அநீதி இழைத்துக்கொண்டி ருந்தவர்களை அவர்களின் கீழ்ப்படியாமையினால் கடும் வேத னையைக் கொண்டு நாம் தண்டித்தோம். (165)*

யூதர்களின் ஆட்சி அவர்களின் எதிரிகளால் வீழ்த்தப்பட்டது என்று வரலாறு நமக்கு அறிவிக்கிறது: *'நாம் பூமியில் அவர்களைப் பல பிரிவி னர்களாக ஆக்கிவிட்டோம். அவர்களில் சிலர் நல்லவர்களாக இருக்கின் றனர். சிலர் அதற்கு மாறாகவும் இருக்கின்றனர் ... (168)'*

ஒரு ஹதீஸில் நபியவர்களிடம் கேட்கப்படுகிறது, 'நம்மில் நல்லவர்கள் இருந்தாலும் நாம் அழிக்கப்படுவோமா?' என்று. அதற்கு நபியவர்கள், 'ஆம். தீயவர்கள் அதிகமாகிவிட்டால்' என்று கூறுகிறார்கள்.

அல்லாஹ் அவர்களைப் பல பிரிவுகளாக ஆக்கினான். அவர்களின் பூமியில் வசித்தோருக்கு ஆட்சியதிகாரத்தை வழங்கினான். மறுமைநாள் வரை அவர்களைக் கடுமையாக வேதனை செய்யக்கூடியவர்கள் வந்து கொண்டே இருப்பார்கள் என்று அறிவித்தான்.

யூதர்களின் வாழ்க்கையிலிருந்து அவர்கள் அறிந்துகொண்டே குழப்பம் செய்தார்கள் என்பதை அறிந்துகொள்ளலாம். இதற்கு முன்னர் அழிக் கப்பட்ட சமூகங்கள் அவர்களிடம் இருந்த அறியாமையினால்தான் அழிக்கப்பட்டன. ஆனால் யூதர்கள், இறை வஹீயை அறிந்துகொண்டே தூதர்களுக்கு எதிராக வரம்புமீறினார்கள்: *'அவர்களின் மனம் விரும் பாததைத் தூதர்கள் அவர்களிடம் கொண்டுவந்தபோதெல்லாம் சிலரை நிராகரித்தார்கள்; சிலரைக் கொலைசெய்தார்கள். (5:70)'*

அவர்கள் அல்லாஹ்வுடன் கண்ணியமாக உரையாடவில்லை. அவர் கள் தங்களின் தூதர் மூசாவிடம் கூறினார்கள்: *'நீரும் உம் இறைவனும் சென்று போரிடுங்கள். நாங்கள் இங்கே அமர்ந்திருக்கிறோம். (5:24)'*

இதுபோன்ற அவர்களின் இழிசெயல்களின் காரணமாக உம் இறை வனின் வாக்கு அவர்களின் மீது உறுதியாகிவிட்டது. ஆகவே, அவர்களின் சம்பவம் எடுத்துரைக்கப்பட்டபிறகு கூறப்படுகிறது:

*அவர்களுக்கு ஒருவனின் நிலையை எடுத்துரைப்பீராக. அவனுக்கு நாம் நம் சான்றுகளை வழங்கியிருந்தோம். ஆனால், அவன் அவற் றைப் புறந்தள்ளிவிட்டான். ஆகவே ஷைத்தான் அவனைப் பின் தொடர்ந்தான். அவன் வழிகெட்டுவிட்டான். நாம் நாடியிருந்தால்*

அவற்றின் மூலம் அவனுக்கு உயர்வை அளித்திருப்போம். ஆனால் அவனோ இவ்வுலகமே நிரந்தரம் என எண்ணி தன் மனஇச்சைகளைப் பின்பற்றினான். அவனது உதாரணம் ஒரு நாயைப் போன்றது. அதனை நீங்கள் துரத்தினாலும் அதற்கு மூச்சிரைக்கும், துரத்தாவிட்டாலும் அதற்கு மூச்சிரைக்கும். (175,176)

இந்த வசனம் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் சமூகத்துக்கும் பொருந்தக்கூடியதாகும். யாரிடம் இறைவழிகாட்டல் வந்து அவர் அதனைக் கொண்டு பயனடையாமல் புறக்கணித்துவிட்டாரோ அவர் ஷைத்தானால் வழிகெடுக்கப்படுவார்.

இன்று அறபுகளுக்கு மத்தியில் ஒரு யூத அரசு நிலைபெற்றுவிட்டது. காரணம் தெளிவானது. யூதர்கள் தங்களைவிட மோசமானவர்களை எதிர்த்துப் போரிட்டுள்ளார்கள்.

அவர்கள் அறபுகளை எதிர்த்துப் போரிட்டுள்ளார்கள். அறபுகள் அல்லாஹ்வின் வரம்புகளை மீறக்கூடியவர்களாக, அவனுடைய புனிதங்களை மதிக்காதவர்களாக, முஹம்மதின் (ஸல்) கொடியை விட்டுவிட்டவர்களாக, பாவமான, துரோகம் இழைக்கக்கூடிய அழைப்புகளுக்குப் பின்னால் செல்லக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.

முந்தைய யூதர்களுக்கு என்ன நிகழ்ந்ததோ அதுவே இந்த அறபுகளுக்கும் நிகழ்வதில் எந்தவித ஆச்சரியமும் இல்லை:

ஜின்களிலும் மனிதர்களிலும் பெரும்பாலோரை நாம் நரகத்துக்காகவே படைத்துள்ளோம். அவர்களுக்கு உள்ளங்கள் இருக்கின்றன. ஆனால், அவற்றைக் கொண்டு அவர்கள் உணர்ந்துகொள்ள மாட்டார்கள். அவர்களுக்குக் கண்கள் இருக்கின்றன. ஆனால், அவற்றைக் கொண்டு அவர்கள் பார்க்க மாட்டார்கள். அவர்களுக்குக் காதுகள் இருக்கின்றன. ஆனால், அவற்றைக் கொண்டு அவர்கள் கேட்க மாட்டார்கள். அவர்கள் கால்நடையைப் போன்றவர்கள். ஏன், அவற்றைவிடவும் வழிகெட்டவர்கள் ... (179)

❖ ❖ ❖

தமது தீய செயல்களின் காரணமாக அழிக்கப்பட்ட சமூகங்களைப் பற்றிய செய்திக்குப் பிறகு நாம் கவனம் செலுத்தத்தக்க இரண்டு வசனங்களைக் காண்கிறோம். முதல் வசனம், ‘அல்லாஹ் யாருக்கு நேர்வழி காட்டுகிறானோ அவரே நேர்வழி பெற்றவராவார். யாரை அவன் வழி தவறச் செய்துவிடுகிறானோ அவர்கள்தாம் இழப்புக்குரியவர்கள். (178)’

இரண்டாவது வசனம், ‘அல்லாஹ் யாரை வழிதவறச் செய்துவிடுகிறானோ அவருக்கு வழிகாட்டுபவர் யாரும் இல்லை. அவன் அவர்களின் வரம்புமீறலிலேயே தடுமாறித் திரியுமாறு அவர்களை விட்டுவிடுகிறான். (186)’

இந்த இரு வசனங்களிலும் இவைபோன்ற ஏனைய வசனங்களிலும் இறைவன் மனிதனை நிர்ப்பந்திக்கிறான் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

எவ்வித விவாதத்துக்கும் இடமின்றி மனிதனுக்குச் சிந்தனைச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு வழங்கப்பட்டிருக்கவில்லையெனில் அவனுக்கு இடப்பட்ட கட்டளைகள் அனைத்தும் அர்த்தமற்றதாகிவிட்டிருக்கும்.

இங்கு நாம் இரண்டு விசயங்களைக் காண்கிறோம். ஒன்று, வழிதவறுதல். மற்றொன்று, வழிதவறச் செய்தல். யார் வழிதவறிச் செல்கிறாரோ அவரைத்தான் இறைவன் வழிதவறச் செய்கிறான். யார் தவறான பாதையை விரும்புகிறாரோ, தவறான பாதையில் செல்கிறாரோ அவரைத்தான் இறைவன் தவறான பாதையில் செலுத்துகிறான். மற்றொரு அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ள பின்வரும் வசனம் இந்தப் பொருளையே உறுதிப்படுத்துகிறது: ‘நீர் கூறும், வழிகேட்டில் இருப்பவருக்குக் கருணைமிக்க இறைவன் அவகாசமளிக்கிறான் ... (19:75)’

மேற்கண்ட வசனங்களில் இறுதியாக வந்துள்ள வாசகங்களில் நாம் இந்தப் பொருளையே காண்கிறோம். ‘அவன் அவர்களின் வரம்புமீறலிலேயே தடுமாறித்திரியுமாறு அவர்களை விட்டுவிடுகிறான்.’ அவர்கள் செய்த அநியாயத்தினால்தான் அவர்கள் அழிக்கப்பட்டார்கள் என்பதை இந்த வாசகம் உணர்த்துகிறது. ‘யாரை அவன் வழிதவறச் செய்துவிடுகிறானோ அவர்கள்தாம் இழப்புக்குரியவர்கள்.’ என்ற வாசகம் அவர்கள் இழப்புக்குரிய வழியைத் தெரிவுசெய்ததால்தான் வழிதவறிப் போனார்கள் என்பதை உணர்த்துகிறது.

திருக்குர்ஆனின் இலக்கிய நடைக்கேற்ப வசனங்கள் கோர்வையாக இடம்பெறுகின்றன. நாமும் இவ்வாறான சில வாசகங்களைக் கூறுகிறோம். எடுத்துக்காட்டாக,

அடுப்பு தனக்கான நெருப்பைக் காய்ந்த மரக்கட்டைகளிலிருந்தும் உலர்ந்த கிளைகளிலிருந்தும் பெற்றுக்கொண்டது.

தோல்வி தனக்குரியவர்களான சோம்பேறிகளையும் செயல்படாமல் அமர்ந்திருப்பவர்களையும் ஆக்கிரமித்துக்கொண்டது.

இங்கு அடுப்போ தோல்வியோ தாமாகச் செயல்படக் கூடியதல்ல. இவை சிலேடை மொழியில் கூறப்பட்ட வாசகங்கள் என்பதை நாம் அறிவோம். திருக்குர்ஆனின் பின்வரும் வசனத்தையும் நாம் இவ்வாறு தான் புரிந்துகொள்ள வேண்டும்: 'ஜின்களிலும் மனிதர்களிலும் பெரும் பாலோரை நாம் நரகத்துக்காகவே படைத்துள்ளோம். அவர்களுக்கு உள்ளங்கள் இருக்கின்றன. ஆனால், அவற்றைக் கொண்டு அவர்கள் உணர்ந்துகொள்ள மாட்டார்கள் ... (179)'

மூடப்பட்ட உள்ளங்களும் கண்களும் மனிதர்களை நரகத்தின் பக்கம் இட்டுச்செல்கின்றன. வெற்றியை விரும்பும் ஒவ்வொரு மனிதனும் திறந்த உள்ளத்தையும் கண்களையும் பெற்றிருக்க வேண்டும். ஆகவேதான் இறைவன் கூறுகிறான்: 'அவர்களின் தோழருக்கு எவ்வித மனநோயும் இல்லை. அவர் பகிரங்கமாக எச்சரிக்கைசெய்பவராகவே இருக்கிறார் என்பதை அவர்கள் சிந்திக்க மாட்டார்களா? (184)'

> வானங்கள் மற்றும் பூமியின் அமைப்பையும் அல்லாஹ் படைத் துள்ள ஏனைய பொருள்களையும் அவர்களின் தவணை நெருங்கி விடக்கூடும் என்பதையும் அவர்கள் சிந்திக்க மாட்டார்களா? ... (185)

சிந்தனையையும் பார்வையையும் இழந்தவன் தன்னைத்தானே தவிர வேறு யாரையும் பழிக்க முடியாது.

முந்தையவர்கள் அடைந்த விளைவுகளைக் கொண்டு படிப்பினை பெறும்படியும் அல்லாஹ்வுடனான தங்களின் தொடர்பை அழகுபடுத் திக்கொள்ளும்படியும் அவனுடைய திருப்பெயர்களைக் கொண்டு அவனை அழைக்கும் படியும் இணைவைப்பு, தீய எண்ணம் ஆகியவற்றை விட்டு விலகியிருக்கும் படியும் அல்லாஹ் முஸ்லிம்களுக்கு அறிவுறுத்து கிறான்: 'அழகிய பெயர்கள் அல்லாஹ்வுக்கே உரியன. அவற்றைக் கொண்டே அவனை அழையுங்கள். (180)'

பரிபூரணம், கண்ணியம், தன்னிறைவு ஆகிய பண்புகள் அல்லாஹ் வுக்கு மட்டுமே உரியன. நாம் தடுமாற்றத்தின்போது வழிகாட்டியை அழைக்கிறோம். இருளில் மாட்டிக்கொண்டால் வெளிச்சத்தை அழைக்கி றோம். தேவை ஏற்படும்போது தன்னிறைவுபெற்றவனை அழைக்கி றோம். அல்லாஹ்வுடனான தொடர்பை அறுத்துக் கொண்டவர்கள் அவனை விடுத்து மற்றவர்களை அழைக்கிறார்கள் அல்லது அவனுடைய விசயத்தில் தவறுதலாக நடந்துகொள்கிறார்கள்.

முஸ்லிம் சமூகத்தின் முதல் தனித்தன்மையே இறைவன் ஒருவனையே அது வணங்குவதும் அவனுக்கு மட்டுமே கட்டுப்படுவதும் ஆகும்:

நாம் படைத்தவர்களில் ஒரு பிரிவினர் சத்தியத்தின்படி மக்களுக்கு வழிகாட்டிக்கொண்டும் தீர்ப்பளித்துக் கொண்டும் இருக்கின்றனர். நம் சான்றுகளை நிராகரிப்பவர்களை அவர்களே அறியாத விதத்தில் கொஞ்சம்கொஞ்சமாக நாம் பிடிப்போம். (181,182)

அல்லாஹ் குற்றவாளிகளுக்கு எதிராகச் சூழ்ச்சிசெய்கிறான். விரைவாகக் கிடைக்கக்கூடிய இன்பங்கள் அல்லது ஏமாற்றக்கூடிய வெற்றிகள் அவர்களை மெய்மறதியில் ஆழ்த்திவிடுகின்றன.

இது அசத்தியவாதிகளுக்கு அல்லாஹ் வழங்கும் அவகாசமாகும். பின்னர், அவர்களை அவர்களின் கொலைக்களம் நோக்கி இழுத்து வருகிறான். அவர்களே அறியாத விதத்தில் அவர்களைப் பிடிக்கிறான்: 'நான் அவர்களுக்கு அவகாசமளிக்கிறேன். நிச்சயமாக எனது திட்டம் மிகவும் உறுதியானது. (183)'

சத்தியவாதிகள் தங்களுக்குத் துன்பம் ஏற்படும்போது தைரியம் இழந்து நிலைகுலைந்துவிடக் கூடாது. மாறாக, அவர்கள் அல்லாஹ்வின் உதவி வரும்வரை அந்தத் துன்பங்களைப் பொறுமையுடன் சகித்துக்கொள்ள வேண்டும். நிச்சயமாக அல்லாஹ்வின் உதவி வந்தே தீரும். காலங்கள் எவ்வளவுதான் நீண்டாலும் சரியே.

மறுமைநாளின் மீதான நம்பிக்கை அல்லாஹ்வின் மீதான, அவனுடைய பண்புகளின் மீதான நம்பிக்கையின் நீட்சியாக இருப்பதால் மனித உள்ளம் அது நிகழும் காலத்தை அறியவே ஆசை கொள்ளும்.

சிலர் நபியவர்களிடம் வந்து மறைவாக இருக்கின்ற அந்த நாளை வெளிப்படுத்தும்படி வேண்டினார்கள். ஆனால், இறை வஹீ அந்தக் கோரிக்கையை நிராகரித்தது. அதுகுறித்த அறிவு அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியது என்பதைத் தெளிவுபடுத்தியது:

அவர்கள் உம்மிடம் மறுமையைக் குறித்து 'அது எப்போது நிகழும்' என்று கேட்கிறார்கள். நீர் கூறும், 'அதைப் பற்றிய அறிவு என் இறைவனிடமே உள்ளது. அதற்குரிய நேரத்தில் அவனே அதனை வெளிப்படுத்துவான்.' (187)

உண்மையில் அதனை அறிவதால் நமக்கு மிகப் பெரிய அளவில் பயன்கள் ஏற்படப்போவதில்லை. மறுமைநாள் நிகழ்வதற்கு முன்னால் இருக்கும் தலைமுறைக்கு வேண்டுமானால் அது பயனளிக்கலாம். நம்முடைய மரணத்திலிருந்தே நமக்கான மறுமைநாள் ஆரம்பமாகி விடுகிறது.

அப்போது நாம் வேறொரு உலகை நோக்கி இடம்பெயர்வோம். இந்த உலக வாழ்க்கை வெறுமனே கற்பனைதான் என்பதை அறிந்து கொள்வோம்.

இஸ்லாத்தின் தனித்தன்மைகளுள் ஒன்று, அது முஹம்மதின் தூதுத் துவத்தை, அவர் அல்லாஹ்வின் அடியார் என்பதை அழுத்தமாகக் கூறு கிறது. அவர் இறைவனோ இறைவனைப் போன்றவரோ இறைவனின் ஒரு பகுதியோ அல்ல என்பதையும் அவர் ஏகனான அல்லாஹ்வின் அடிமை என்பதையும் தமக்கோ மற்றவர்களுக்கோ நன்மையளிக்கவோ தீங்களிக்கவோ சக்திபெற்றவர் அல்ல என்பதையும் தெளிவுபடுத்துகிறது.

இவ்வாறே அது வானவர்கள் மற்றும் பிற மனிதர்களின் விசயத்திலும் கூறுகிறது. இதற்கு மாறாகக் கூறுபவர் மிகப் பெரிய பொய்யராவார்.

அல்அஃறாஃப் என்ற இந்த அத்தியாயம் ஆரம்பத்தில் பேசியதைப் போலவே மீண்டும் ஆதமைக் குறித்து பேசுகிறது. ஆரம்பத்தில் ஆதமின் பிள்ளைகளை விளித்து ஆதமைக் குறித்ததுபோல இங்கு ஆதமை விளித்து அவரது பிள்ளைகளைக் குறிக்கிறது.

இங்கு வசனம் கண்டிப்புத் தொனியில் பேசுகிறது. ஆதமின் பிள்ளை களுக்கு அல்லாஹ் ஏராளமான அருட்கொடைகளைத் தந்துள்ளான். ஆனால், அவர்கள் அவனுக்கு நன்றிசெலுத்துவதற்குப் பகரமாக அவ னுக்கு இணைகளை ஏற்படுத்துகிறார்கள்: ‘எந்த ஒரு பொருளையும் படைக்க முடியாதவர்களையா அவர்கள் அல்லாஹ்வுக்கு இணையாக்கு கிறார்கள்? மாறாக, அவையும் படைக்கப்பட்டவைதானே? அவை அவர்களுக்கு எவ்வித உதவியும் செய்ய முடியாது. ஏன், தமக்குத்தாமேகூட அவற்றால் உதவிக்கொள்ள முடியாது. (191,192)’

பின்னர், வசனம் அழைப்பாளர்களை நோக்கி, அவர்களின் வழி காட்டியை நோக்கிப் பேசுகிறது. இந்த இணைவைப்பாளர்கள் இறை வஹீயைக் கொண்டு பயனடைய மாட்டார்கள் என்பதை அவர்களுக்குத் தெளிவுபடுத்துகிறது: ‘நீங்கள் அவர்களை நேர்வழியின் பக்கம் அழைத் தால் அவர்கள் உங்களைப் பின்பற்ற மாட்டார்கள். அவர்களை நீங்கள் அழைப்பதும் அல்லது அழைக்காமல் மௌனமாக இருப்பதும் ஒன்று தான். (193)’

இது விசித்திரமான உறைநிலை. அழைப்பாளர்களின் தலைவரின் கடமை இதுதான், அவர் தமக்கு அருளப்பட்ட இந்த வேதத்தைப் பற்றிப் பிடித்தவாறு அவர்களுக்கு முன்னால் நிலைத்திருக்க வேண்டும்: ‘நிச்சய மாக வேதத்தை அருளிய அல்லாஹ்தான் என் பாதுகாவலன். அவனே நல்லடியார்களைப் பாதுகாத்துவருகிறான். (196)’

*இந்த வேதம் அவர்கள் வேண்டும் வெளிப்படையான அற்புதங் களைக் காட்டிலும் அதிகம் பயன்தரக்கூடியது: 'நீர் கூறும், என் இறை வனிடமிருந்து எனக்கு வஹீயாக அறிவிக்கப்படுகின்றவற்றையே நான் பின்பற்றுகிறேன். இது உங்கள் இறைவனிடமிருந்து வந்துள்ள தெளிவான சான்றுகளாகவும் நம்பிக்கை கொள்ளும் மக்களுக்கு வழிகாட்டியாகவும் அருளாகவும் இருக்கிறது. (203)'*

*பழிப்பும் கர்வமும் எவ்வளவுதான் அதிகமானாலும் பொறுமையைக் கடைப்பிடிக்கும்படி திருத்தூதர் அறிவுறுத்தப்படுகிறார்: 'மன்னித்து விடுவீராக. நன்மையை ஏவுவீராக. மூடர்களைவிட்டும் விலகிவிடு வீராக. (199)'*

*இந்த அத்தியாயம், ஆரம்பத்தில் ஆதமைச் சுவனத்திலிருந்து வெளி யேற்றுவதில் ஷைத்தான் எவ்வாறு வெற்றிபெற்றான் என்பதையும் அவரது பிள்ளைகளை வழிகெடுப்பதற்கான அவனது முயற்சிகள் என்றும் முடிவடையாதவை என்பதையும் தெளிவுபடுத்தியது. ஆனாலும், ஷைத்தானால் ஊசலாட்டம் ஏற்படுத்துவதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது. மனிதன் இறை நம்பிக்கையாளனாக இருக்கும் பட்சத்தில் ஷைத்தானின் ஊசலாட்டத்தை எளிதில் முறியடித்துவிடுவான்: 'இறை யச்சமுடையோருக்கு ஷைத்தானிடமிருந்து ஏதேனும் தவறான எண்ணம் ஏற்பட்டால் உடனே அவர்கள் விழிப்படைந்துவிடுவார்கள். அது அப் போதே அவர்களுக்குப் புலப்பட்டுவிடும். (201)'*

*ஆனாலும், இந்த விழிப்பான உள்ளத்தைப் பெறாதவர்கள் ஷைத் தானைப் பின்பற்றி தங்களின் அழிவை நோக்கிச் செல்கிறார்கள். மனித னைப் பாதுகாக்கும் மிகச் சிறந்த அரண் திக்ராகும். திக்ர் அவனைத் தவறுகளிலிருந்து பாதுகாத்து நேரான பாதையில் நிலைநிறுத்துகிறது. திக்ருகளில் மிகச் சிறந்தது திருக்குர்ஆனாகும்: 'குர்ஆன் ஓதப்பட்டால் அதற்குச் செவிசாய்த்துக் கேளுங்கள். மௌனமாக இருங்கள். உங்கள்மீது கருணை காட்டப்படலாம். (204)'*

*இங்கு திக்ர் என்பது அலட்சியமான உள்ளத்தோடு வெறுமனே நாவால் மொழிவதல்ல. திக்ர் என்பது மன ஓர்மையோடு செய்யப்படுகின்ற அறிவுச் செயல்பாடாகும்.*

*அவன் அல்லாஹ்வோடு எப்போதும் தொடர்பில் இருக்க வேண்டும். எதிர்பார்ப்புடனும் அச்சத்துடனும் வெளிப்படையாகவும் அந்தரங்க மாகவும் அவனையே நினைவுகூர வேண்டும்: 'உம் உள்ளத்தில் பணிவுடனும் பயத்துடனும் மெதுவான குரலிலும் உம் இறைவனைக்*

காலையிலும் மாலையிலும் நினைவுகூர்வீராக. அலட்சியமாக இருப்பவராகிவிடாதீர். (205)' இந்தத் திக்ரின் மூலம் நம்பிக்கையாளன் முழுப் பிரபஞ்சத்துடனும் இணைந்துவிடுகிறான். அது தன் இறைவனின் துதியைப் பாடிக்கொண்டிருக்கிறது.

❖ ❖ ❖

அத்தியாயம் 8

# அல்அன்ஃபால்

(போர்ச் செல்வங்கள்)

*உஹதுப் போரில் அடைந்த தோல்வி முஸ்லிம்கள் எதிர்பாராத ஒன்றாக இருந்தது. பத்ருப் போரில் அவர்கள் அடைந்த வெற்றியும் எதிர்பாராத ஒன்றாகத்தான் இருந்தது.*

*மகிழ்ச்சியை ஏற்படுத்திய, துன்பத்தை ஏற்படுத்திய இந்த எதிர்பாரா மைகள் அனைத்தும் அவர்களுக்குச் சோதனைகளாக இருந்தன. அவை அவர்களில் சிறந்தவர்களையும் அவர்களின் உள்ளங்களில் மறைத்தி ருந்தவற்றையும் வெளிப்படுத்தின.*

*பத்ருப் போரில் முஸ்லிம்கள் அடைந்த வெற்றியை விமர்சித்தவாறு, அந்தப் போரில் விதியின் செயல்பாட்டையும் மனிதனின் முயற்சியையும் தெளிவுபடுத்தியவாறு இந்த அத்தியாயம் இறங்கியது. இது, முஸ்லிம்கள் அடைந்த வெற்றி கடந்தகாலத்தில் அவர்கள் மேற்கொண்ட பொறுமைக்கு இறைவன் அளித்த வெகுமதி என்பதையும் இந்தப் போரில் பங்குபெற்ற வீரர்கள் இந்த வெற்றியைச் செயல்படுத்தும் கருவிகளாக இருந்தார்கள் என்பதையும் தெளிவுபடுத்தியது. 'நானும் என் தூதர்களுமே மேலோங்கி நிற்போம் என்று அல்லாஹ் விதித்துவிட்டான். நிச்சயமாக அல்லாஹ் வல்லமைமிக்கவனாகவும் யாவற்றையும் மிகைத்தவனாகவும் இருக் கிறான். (58:21)'*

*ஆகவேதான், அத்தியாயத்தின் ஆரம்பத்திலேயே முஸ்லிம்களுக்கும் போர்ச் செல்வங்களுக்குமிடையே உள்ள தொடர்பு துண்டிக்கப்பட்டு, அவற்றைப் பங்கிடுவது அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் மட்டுமேயான உரிமை என்பது தெளிவுபடுத்தப்படுகிறது. அல்லாஹ் தன் அடியார்களை நிராகரிப்பாளர்களுடன் மோதச்செய்தது 'தன் வார்த்தைகளைக் கொண்டு சத்தியத்தை நிலைநிறுத்தவும் நிராகரிப்பாளர்களை அடியோடு அழிக்க வும்தான். (7)'*

ஆரம்பத்தில், ஈமானுக்கென்று, அல்லாஹ்வின் பாதையில் போர் புரியும் வீரர்களுக்கென்று சில அடையாளங்கள் இருக்கின்றன என்பது தெளிவுபடுத்தப்படுகிறது:

நம்பிக்கையாளர்கள் யாரெனில் அல்லாஹ்வைக் குறித்து நினைவு கூரப்பட்டால் அவர்களின் உள்ளங்கள் நடுநடுங்கிவிடும். அவர்களுக்கு முன்னால் அவனுடைய வசனங்கள் எடுத்துரைக்கப் பட்டால் அது அவர்களின் நம்பிக்கையை இன்னும் அதிகப் படுத்தும். அவர்கள் தங்கள் இறைவனையே சார்ந்திருப்பார்கள். தொழுகையைக் கடைப்பிடித்து நாம் அவர்களுக்கு வழங்கிய வற்றிலிருந்து செலவும் செய்வார்கள். அவர்கள்தாம் உண்மையான நம்பிக்கையாளர்கள். (2-4)

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஈமானிய அடையாளங்களைக் குறித்து சிந்தித்துப்பாருங்கள். அவை திக்ர், இறையச்சம், இறை வசனங்களை வாசிப்பது, இறைவனையே சார்ந்திருப்பது, அவனுடைய பாதையில் செலவுசெய்வது ஆகியவையாகும்.

ஆனாலும், மற்றோர் இடத்தில் ஈமானுக்கென்று வேறுசில அடையாளங்களையும் காண்கிறோம்:

அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டு புலம்பெயர்ந்து அவனது பாதையில் போரிட்டவர்களும் புகலிடமளித்து உதவிபுரிந்தவர்களும்தாம் உண்மையான நம்பிக்கையாளர்கள். (74)

அல்லாஹ்வின் பாதையில் புலம்பெயர்வது, போரிடுவது, இடமளிப்பது, உதவிபுரிவது ஆகியவை உண்மையான ஈமானின் அடையாளங்களாகக் கூறப்படுகிறது.

மற்றொரு அத்தியாயத்தில் அல்லாஹ் கூறுகிறான்:

நம்பிக்கையாளர்கள் யாரெனில் அவர்கள் அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதரின் மீதும் நம்பிக்கை கொண்டு, பின்னர் சந்தேகம் கொள்ளாமல் தங்களின் உயிர்களாலும் செல்வங்களாலும் அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாதுசெய்தவர்களாவர். அவர்கள் தாம் உண்மையாளர்கள். (49:15)

உறுதியான நம்பிக்கையோடு போரிடுவதும் அவனுடைய பாதையில் சடையாமல் செலவுசெய்வதும் ஈமானின் அடையாளங்களாகக் கூறப் படுகின்றன.

மற்றொரு அத்தியாயத்தில்:

அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதரின் மீதும் நம்பிக்கை கொண்டவர்கள்தாம் உண்மையான நம்பிக்கையாளர்கள். அவர்கள் ஏதேனும் பொதுப் பணி நிமித்தமாகத் தூதருடன் இருந்தால் அவரிடம் அனுமதிபெறாமல் அங்கிருந்து வெளியேற மாட்டார்கள். (24:62)

இந்தப் பல்வேறு வரையறைகளிலிருந்து நம்பிக்கையாளர்கள் ஒரே அடையாளமின்றிப் பல்வேறு அடையாளங்களைப் பெற்றுள்ளார்கள் என்பது தெளிவாகிறது. காலம் மற்றும் சூழலுக்கேற்ப ஈமானுக்குப் பல அடையாளங்கள் இருக்கின்றன.

நம்பிக்கையாளன் எந்தக் காலத்திலும் சூழலிலும் அதற்கு உகந்த அடையாளங்களைவிட்டுப் பின்தங்கிவிடக் கூடாது.

'போர்ச் செல்வத்தைக் குறித்த விவகாரத்தை விட்டுவிடுங்கள்.' என்று முஸ்லிம்கள் கட்டளையிடப்பட்டால் அவர்கள் விட்டுவிட வேண்டும். விரைவில் அந்த விசயத்தில் அல்லாஹ் அவர்களுக்குத் தீர்வு வழங்கு வான். அல்லாஹ்வின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதே அவர்களுக்கு நன்மையளிக்கக்கூடியது.

முஸ்லிம்களுடன் மோதிக்கொண்டிருந்த இணைவைப்பாளர்களுக்கு எதிராகப் போர்த் தொடுக்கும்படி அல்லாஹ்வின் தூதர் அவர்கள் முஸ்லிம்களுக்குக் கட்டளையிட்டார்கள். என்ன நிகழ்ந்தது?

அவர்களில் ஒரு பிரிவினர் போரை மோசமான ஒரு செயல்திட்டமாகக் கருதினார்கள். முஸ்லிம்கள் அதற்காக இன்னும் தயாராகவில்லை என்று எண்ணினார்கள். மதீனாவில் இருக்கின்ற ஏனைய முஸ்லிம்களுக்காக வும் காத்திருந்து, அவர்கள் வந்தவுடன் அனைவரும் சேர்ந்து போரை எதிர்கொள்ளலாம் என்று கருதினார்கள்.

ஆனால் நபியவர்கள், சவாலை ஏற்றுக்கொள்ளவில்லையெனில் இஸ்லாம் வீழ்ந்துவிடும் என்பதை அறிந்துகொண்டார்கள். இக்கட்டான சூழலில் அல்லாஹ் நம்பிக்கையாளர்களை ஒருபோதும் கைவிட மாட் டான் என்பதையும் அவர்கள் உணர்ந்துகொண்டார்கள். ஆகவேதான் எதிரிகளைச் சந்தித்தே தீர வேண்டும் என்று உறுதி கொண்டார்கள்.

உம் இறைவன் உம்மை ஒரு நோக்கத்துடன் உம் வீட்டைவிட்டு வெளியேற்றிய சமயத்தில் நம்பிக்கையாளர்களில் ஒரு பிரிவினர் அதனை வெறுத்துக்கொண்டிருந்ததைப் போன்றே சத்தியம்

தெளிவானபின்னரும் அதுகுறித்து அவர்கள் உம்மிடம் தர்க்கம் செய்துகொண்டிருந்தனர், பார்த்துக்கொண்டிருக்கும்போதே மரணத்தை நோக்கி அவர்கள் இழுத்துச் செல்லப்படுவதைப் போன்று. (5,6)

அல்லாஹ் நம்பிக்கையாளர்களை வெறுங்கையோடு அனுப்ப மாட்டான் என்று நபியவர்கள் உறுதியாக நம்பினார்கள். அந்த நம்பிக்கையை நம்பிக்கையாளர்களுக்கும் அளித்தார்கள்.

இரு கூட்டங்களில் ஒன்று உங்களுக்குக் கிடைத்துவிடும் என்று இறைவன் உங்களுக்கு வாக்களித்த சமயத்தில் ஆயுதம் தரிக்காத கூட்டமே உங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினீர்கள். (7)

ஆனால், அல்லாஹ் வேறொரு விசயத்தை நாடினான். அவன் அவர்கள் நிராகரிப்பாளர்களுடன் போரிட வேண்டும் என்று நாடினான். 'அது சத்தியம் சத்தியமாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் அசத்தியம் அசத்தியமாக இருந்துவிட வேண்டும் என்பதற்காகவும்தான். குற்றவாளிகளுக்கு அது எவ்வளவுதான் வெறுப்பாக இருந்தாலும் சரியே. (8)'

மனிதர்கள் தங்களால் தாங்க முடியாத சோதனைகளைச் சந்திக்கும்போது படைப்பாளனிடமே உதவி கோரியவர்களாக அடைக்கலம் தேடுகிறார்கள். முஸ்லிம்கள் தங்களைவிட அதிக எண்ணிக்கையையும் ஆயுதங்களையும் கொண்ட எதிரிகளைக் கண்டபோது அல்லாஹ்விடமே உதவி கோரினார்கள்: 'நீங்கள் உங்கள் இறைவனிடம் உதவி கோரி முறையிட்டுக்கொண்டிருந்தபோது, உங்களுக்கு உதவிபுரிய ஓராயிரம் வானவர்களைத் தொடர்ச்சியாக அனுப்புகிறேன் என்று அவன் உங்களுக்குப் பதிலளித்தான். (9)'

இணைவைப்பாளர்களை முற்றிலுமாக அழிப்பதற்கு அந்தப் பேரரசனே போதுமானவன். ஆனாலும், அல்லாஹ் எண்ணிக்கையைக் கொண்டு தன் அடியார்களைத் திருப்திப்படுத்த நாடினான். 'உங்களுக்கு நற்செய்தியாகவும் உங்கள் உள்ளம் அதன் மூலம் அமைதியடைய வேண்டும் என்பதற்காகவுமே அல்லாஹ் இவ்வாறு செய்தான். உதவியோ அல்லாஹ்விடமிருந்தே வருகிறது. நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் மிகைத்தவனாகவும் ஞானம்மிக்கவனாகவும் இருக்கிறான். (10)'

நபியவர்கள் தொடர்ந்து பிரார்த்தனையில் ஈடுபட்டார்கள். 'அல்லாஹ்வே, நீ எங்களுக்கு வாக்களித்த உதவியை வழங்குவாயாக. அல்லாஹ்வே, நம்பிக்கையாளர்களின் இந்தச் சிறு கூட்டம் அழிக்கப்பட்டுவிட்டால் பூமியில் உன்னை வணங்குவதற்கு யாரும் இருக்க மாட்டார்கள்.'

நபியவர்கள் தம்முடைய இரு கைகளையும் வானத்தை நோக்கி உயர்த்தியவர்களாக அல்லாஹ்விடம் மன்றாடினார்கள். எந்த அளவுக் கெனில், அவர்கள் தோள் புஜத்திலிருந்து அவர்களின் ஆடை கீழே விழுந்துவிட்டது. அவர்களுக்குப் பின்னாலிருந்து அபூபக்கர் இவ்வாறு கூறினார்: 'அல்லாஹ்வின் தூதரே, நீங்கள் உங்கள் இறைவனிடம் மன் றாடியது போதும். நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு அளித்த வாக்குறு தியை நிறைவேற்றுவான்.'

இணைவைப்பாளர்கள் கொல்லப்படும் இடங்கள் நபியவர்களுக்கு அறிவிக்கப்பட்டவுடன்தான் அவர்கள் தம்முடைய பிரார்த்தனையை நிறுத்தினார்கள்.

இங்கு, குகையில் இருக்கும்போது அபூபக்கருக்கு ஏற்பட்ட பதற்றம் குறித்து அறிஞர்கள் கேள்வி எழுப்புகிறார்கள். அப்போது நபியவர்கள் தாம் அவரை உறுதிப்படுத்தினார்கள். ஆனால், பத்ருப் போரில் அபூபக்கர் நபியவர்களை உறுதிப்படுத்துகிறாரே?

தூதர் அல்லாஹ்வின் ஓர் அடியார்தாம் என்பதை அறிவிக்கும் ஒரு நிகழ்வு இது.

ஹிஜ்றத்தின்போது வெற்றிக்கான எந்த வாய்ப்புகளையும் நபியவர் கள் பெற்றிருக்கவில்லை. ஆகவே, அல்லாஹ் அவரைப் பாதுகாப்பான் என்று திருப்தி கொண்டிருந்தார்கள். ஆனால் பத்ருப் போரிலோ அவர் களுடன் ஒரு படை இருந்தது. அது பலவீனமாக இருந்தாலும் அவர்கள் அதனையே நம்பியிருந்தார்கள். ஆகவேதான் நபியவர்கள் அந்த நம்பிக்கையிலிருந்து விடுபட்டுப் பிரார்த்தனையின் மூலம் உதவி கோரி அல்லாஹ்விடம் அடைக்கலம் தேட விரும்பினார்கள். உதவியை அவ னிடமிருந்து மட்டுமே எதிர்பார்த்தார்கள்.

இங்கு வானத்திலிருந்து உதவிகள் வரத் துவங்கின. மழை பெய்தது. அவர்களின் பாதங்களுக்குக் கீழே வழுக்கிக்கொண்டிருந்த மணல் உறுதி யானது. அவர்களுக்குக் கிடைத்த நிம்மதியான தூக்கத்தின் மூலம் அவர்களின் உள்ளத்திலிருந்து ஊசலாட்டங்கள் அனைத்தும் அகன்றன.

அல்லாஹ் அவர்களின் உள்ளங்களை உறுதிப்படுத்தினான். இணை வைப்பாளர்களின் உள்ளங்களில் அவன் பீதியை ஏற்படுத்தினான். அவர் கள் மிக மோசமான முறையில் சண்டையிட்டார்கள். அவர்கள் எதிர் பார்க்காத அளவுக்கு அவர்களின் அணி சிதைந்தது: 'ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் மாறுசெய்தார்கள். அல் லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் மாறுசெய்பவர்கள் அறிந்து கொள்ளட்டும், அல்லாஹ் தண்டிப்பதில் மிகக் கடுமையானவன். (13)'

ஆனாலும், தேவையான காரணிகளைப் பின்பற்ற மறுப்பவர்களுக்கு இறையுதவி கிட்டுவதில்லை. அவற்றில் முதலாவது, தைரியமாக முன் வந்து தாக்குவதும் இந்த உலகை விட்டுவிட்டு மறுமையில் அல்லாஹ் விடம் கிடைக்கும் வெகுமதியை ஆதரவுவைப்பதுமாகும்.

சந்தேகமின்றி நாம் மனிதர்கள்தாம். வலுவான தொடர்புகள் நம்மை இந்த உலகோடு இணைக்கவே செய்கின்றன. மரணத்தை முன்னோக் கியவாறு ஓர் அறப்புப் போர்வீரன் கூறிய பின்வரும் கவிதைகள் என்னை மிகவும் கவர்ந்துவிட்டன:

மனம் மரண பயத்தை முறையிட்டு வெறுத்தபோதும் நான்
அதனை நிர்ப்பந்தித்துச் சுமக்கச்செய்தேன்.

மனம் முதன்முதலாக என்னிடம் முறையிட்டுத் தப்பிக்க
முயன்றது. அது வெறுத்தபோதிலும் நான் அதனை
நிர்ப்பந்தித்தேன். அது நிலைபெற்றது.

அது முறையிட்டுத் தப்பிக்க முயன்றபோது நான் அதனிடம்
கூறினேன், ‘பொறுத்திரு. நீ புகழப்படுவாய் அல்லது உனக்கு
ஓய்வளிக்கப்படும்.’

இதுதான் பின்வரும் வசனத்திலும் கூறப்படுகிறது: ‘நம்பிக்கை யாளர்களே, போர்க்களத்தில் நீங்கள் நிராகரிப்பாளர்களைச் சந்திக்க நேர்ந்தால் புறங்காட்டி ஓடிவிடாதீர்கள். (15)’

வாழ வேண்டும் என்ற ஆசையைத் துறந்து மரணத்தை விரும்பு. உனக்கு வாழ்க்கை வழங்கப்படும். அல்லது உயிர்த்தியாகியாக மரணித்துவிடு.

பத்ருப் போரில் நம்பிக்கை கொண்ட சிறுகூட்டம் பெரும்பான்மை யினராக இருந்த இணைவைப்பாளர்களைக் கானல் நீராக்கினார்கள். அவர்களைப் பலவீனப்படுத்தி ஓடஓட விரட்டினார்கள். அவர்களில் சிலர் கொல்லப்பட்டார்கள். சிலர் கைதிகளாகப் பிடிக்கப்பட்டார்கள்.

இது எவ்வாறு நிகழ்ந்தது? தான் செய்த செயலைத் தெளிவுபடுத்திய வாறு அல்லாஹ் கூறுகிறான்:

நீங்கள் அவர்களைக் கொல்லவில்லை. மாறாக, அல்லாஹ்தான் அவர்களைக் கொன்றான். நீர் அவர்களின் மீது மண்ணை எறிந்த போது நீர் அதனை எறியவில்லை. மாறாக, அல்லாஹ்தான் எறிந்தான். இது அல்லாஹ் தன்னிடமிருந்து நம்பிக்கையாளர்களுக்கு ஏராளமான நன்மைகளை வழங்க வேண்டும் என்பதற்காகத்தான்.

*நிச்சயமாக அல்லாஹ் செவியேற்பவனாகவும் நன்கறிந்தவனாக வும் இருக்கிறான். (8:17)*

*இறைவன் வரைந்த திட்டம் மக்காவில் இருந்த அநியாயக்காரர் களைக் கொஞ்சம்கொஞ்சமாக அவர்கள் கொல்லப்படும் இடங்களை நோக்கி இழுத்துவந்தது. அவர்களின் படைபலமோ அதிக எண்ணிக் கையோ அவர்களுக்கு எந்தப் பலனையும் அளிக்கவில்லை. அல்லாஹ் விடம் உதவி கோரிய சிறு கூட்டம் அவனுடைய உதவியால் மகத்தான வெற்றியைப் பெற்றது.*

❖ ❖ ❖

*இந்த அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ள ஆறு உறுதியான அழைப்புகள் கவனத்துக்குரியவை.*

*இங்கு வெற்றிபெற்றவர்கள் வாழ்த்துகளால் எதிர்கொள்ளப்பட வில்லை. மாறாக, கண்டிப்புடன் அவசியமான ஒழுக்கங்களைக் கடைப் பிடிக்குமாறும் கர்வத்தை விட்டுவிடுமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.*

*இந்த ஆறு அழைப்புகளில் இரண்டு அழைப்புகள் நிலைகுலையாமல் உறுதியாக நிற்குமாறும் புறங்காட்டி ஓடிவிடக் கூடாது என்பதையும் வலியுறுத்துகின்றன.*

*நபித்தோழர்கள் புறங்காட்டி ஓடியதுமில்லை. புறங்காட்டி ஓட வேண் டும் என்று அவர்கள் எண்ணியதுமில்லை.*

*எனக்கு வெளிப்படுவது என்னவென்றால், நிதர்சனமான அந்த வெற் றிக்குப் பிறகு முஸ்லிம்கள் பெற்ற அந்த வெற்றியில் விதியின் பங்கு வெளிப்படுத்தப்பட்டு, போர்ச் செல்வங்கள் விசயத்தில் கருத்து வேறுபாடு கொள்வது கண்டிப்பான தொனியில் தடுக்கப்படுகிறது. பின்னர், உஹதுப் போரில் நிகழ்ந்தது நிகழக் கூடாது என்பதற்காக அவர்கள் முன்கூட்டியே தடுக்கப்படுகிறார்கள்.*

*இணைவைப்பாளர்களுக்குரிய பண்புகளைக் கொண்டு அல்லாஹ் அவர்களை வர்ணிக்கிறான். ஒவ்வொரு பண்புடனும் மறுப்புடனும் முஸ்லிம்களுக்கான அறிவுரைகளையும் நாம் காண்கிறோம், ஒருபோதும் அவர்கள் இணைவைப்பாளர்களின் பண்புகளுக்கு ஒப்பான பண்புகளைப் பெற்றுவிடக் கூடாது என்பதற்காக.*

*அல்லாஹ் நிராகரிப்பாளர்களைப் புரிந்துகொள்ளவோ சிந்திக்கவோ முடியாத விலங்குகள் என்கிறான். தம்முடைய இச்சைகளை நிறை*

வேற்றுவதைத் தவிர அவற்றுக்கு வேறெந்த நோக்கமும் கிடையாது. அவர்களைச் சூழ்ந்துள்ள அழிவு, கூறப்படும் எதையும் செவியேற்க முடியாதவர்களாக அவர்களை ஆக்கிவிட்டது.

அவர்கள் செவியேற்றாலும் அவர்களிடம் என்ன விரும்பப்படுகிறது என்பதை அவர்கள் அறிந்துகொண்டாலும் கர்வம் அவர்களை மிகைத்து பதிலளிக்கவிடாமல் தடுத்துவிடுகிறது.

இந்த இழிவான பண்புடைய நிராகரிப்பாளர்களைப் போன்று ஆகிவிட வேண்டாம் என்று அல்லாஹ் முஸ்லிம்களை அழைத்துக்கூறுகிறான்:

> நம்பிக்கையாளர்களே, அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படியுங்கள். செவியேற்றுக் கொண்டே அதனைப் புறக் கணித்துவிடாதீர்கள். செவியேற்காமல் இருந்துகொண்டே 'நாங்கள் செவியேற்றோம்' என்று கூறியோரைப் போன்றும் ஆகிவிடாதீர்கள். (20,21)

நிச்சயமாக இது வெற்றிபெற்றவர்களுக்கு வழங்கப்பட்ட கண்டிப்பு கலந்த அறிவுரை. பின்னர், இணைவைப்பாளர்கள் மோசமான விலங்கு கள் என்று வர்ணிக்கப்படுகிறார்கள்: 'சிந்தித்துணராத செவிடர்களாகவும் ஊமைகளாகவும் இருக்கும் மனிதர்களே அல்லாஹ்விடத்தில் மிக மோச மான விலங்குகளாவர்.(22)' முஸ்லிம்களின் எதிரிகள் பெற்றிருக்கும் இதுபோன்ற கீழான பண்புகளைவிட்டும் முஸ்லிம்கள் விலகியிருக்க வேண்டும் என்று அவர்கள் விளித்து உரையாடப்படுகிறார்கள்:

> நம்பிக்கையாளர்களே, உங்களுக்கு வாழ்வளிப்பதன் பக்கம் தூதர் உங்களை அழைக்கின்றபோது அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் பதி லளியுங்கள். (24)

கண்டிப்புமிகுந்த இந்த அறிவுரைகள் பல எச்சரிக்கைகளால் நிரம்பி யுள்ளன. பின்வரும் வசனங்களைக் கவனியுங்கள்:

> மனிதனுக்கும் அவனது உள்ளத்துக்குமிடையே அல்லாஹ் குறுக் கிட்டுவிடுகிறான் என்பதையும் அவனிடமே நீங்கள் ஒன்று திரட்டப்படுவீர்கள் என்பதையும் அறிந்துகொள்ளுங்கள். (24)

> உங்களில் அநியாயக்காரர்களை மட்டுமே தாக்கும் என்பதல்லாத வேதனையை அஞ்சிக்கொள்ளுங்கள். அல்லாஹ் தண்டிப்பதில் கடுமையானவன் என்பதையும் அறிந்துகொள்ளுங்கள். (25)

இவை பதினைந்து வருட வலிமிகுந்த வாழ்க்கைக்குப் பிறகு கிடைத்த வெற்றிக்குப் பிறகு வழங்கப்படும் அறிவுரைகள்!

இவை எதைக் காட்டுகின்றன? அடியார்களுக்கு வெற்றியளித்தவன் கர்வத்தின் எல்லா வடிவத்தையும் நிராகரிக்கிறான். அல்லாஹ்தான் நிராகரிப்பையும் நிராகரிப்பாளர்களையும் இழிவுபடுத்தினான். வெற்றி பெற்ற முஸ்லிம்கள் வெற்றியின் போதையில் மூழ்கிவிடக் கூடாது என்பதற்காக, அவர்கள் மக்களிடையே கர்வம் கொண்டு திரியக் கூடாது என்பதற்காக அவன் அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குகிறான். ஆகவே, அவன் அவர்களுக்குக் கூறுகிறான்:

> நீங்கள் குறைந்த எண்ணிக்கையினராக இருந்ததையும் பூமியில் பலவீனர்களாகக் கருதப்பட்டதையும் பிற மக்கள் திடீரென உங்களை வாரிச் சென்றுவிடுவார்களோ என்று நீங்கள் அஞ்சிக் கொண்டிருந்ததையும் எண்ணிப்பாருங்கள். அவனே உங்களுக்குப் புகலிடமளித்து தன் உதவியினால் உங்களை வலுப்படுத்தினான். உங்களுக்குத் தூய்மையான ஆகாரங்களையும் அளித்தான், நீங்கள் நன்றிசெலுத்துபவர்களாகத் திகழக்கூடும் என்பதற்காக. (26)

அவர்கள் எந்த அளவு பலவீனர்களாக, ஒடுக்கப்பட்டவர்களாக இருந்தார்கள் என்பதை அவன் அவர்களுக்கு நினைவூட்டுகிறான். பின்னர், அவர்களை நோக்கி வலுவான ஓர் எச்சரிக்கை விடப்படுகிறது:

> நம்பிக்கையாளர்களே, அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் துரோகம் இழைக்காதீர்கள். நீங்கள் அறிந்துகொண்டே உங்களை நம்பி ஒப்படைக்கப்பட்டவற்றில் மோசடிசெய்யாதீர்கள். உங்களின் செல்வங்களும் பிள்ளைகளும் சோதனையே என்பதையும் அல்லாஹ்விடமே மகத்தான கூலி இருக்கிறது என்பதையும் அறிந்து கொள்ளுங்கள். (27,28)

கடந்தகாலங்களிலும் சரி, இந்தக் காலத்திலும் சரி வெற்றிபெற்றவர்கள் கர்வம் கொண்டவர்களாகத்தான் ஆகியிருக்கிறார்கள். அவர்களின் குற்றங்கள் மன்னிக்கப்படுகின்றன. அவர்கள் புகழ்மாலைகளால் அலங்கரிக்கப்படுகிறார்கள்.

ஆனால், ஏகத்துவத்துக்கும் இணைவைப்புக்குமிடையே, அறிவுக்கும் மடமைத்தனத்துக்குமிடையே நடந்த மாபெரும் போரில் வெற்றிபெற்றவர்களுக்கு இஸ்லாம் அறிவுரைகளை வழங்குகிறது. சமநிலையை அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறது.

நாம் இந்தப் பாடத்தை உள்ளங்கள் குருடாகிப்போன ஓரியண்டலிஸ்டுகளுக்கு எடுத்துரைக்கிறோம். அவர்கள் பத்ருப் போரை இஸ்லாத்தின் ஆரம்ப கட்ட பகைமையின் வெளிப்பாடாகக் காண்கிறார்கள்.

வசனங்கள் பத்ருப் போருக்கு முன்னர் அல்லது ஹிஜ்றத்துக்கு முன்னர் இணைவைப்பாளர்கள் தூதருக்கு எதிராக, இஸ்லாத்துக்கு எதிராகச் செய்த சூழ்ச்சிகளின் பக்கம் திரும்புகின்றன. நபியவர்கள் தம் இறைவனின் கட்டளைப்படி அந்த நிராகரிப்பாளர்களிடம் பின்வருமாறு கூறிக்கொண்டிருந்தார்கள்: 'நீர் கூறும், நாங்கள் செய்த குற்றங்கள் குறித்து நீங்கள் விசாரிக்கப்பட மாட்டீர்கள். நீங்கள் செய்த குற்றங்கள் குறித்து நாங்கள் விசாரிக்கப்பட மாட்டோம். நீர் கூறும், நம் இறைவன் நம்மை ஒன்றுதிரட்டுவான். பின்னர், நமக்கிடையே நியாயமாகத் தீர்ப்பளிப் பான். அவன் தீர்ப்பளிப்பவனாகவும் நன்கறிந்தவனாகவும் இருக்கிறான். (34:25,26)'

அவர்களின் நடத்தை எவ்வாறு இருந்தது? அவர்கள் முஸ்லிம்களை ஒடுக்கிக்கொண்டிருந்தார்கள். தூதரையும் சிறைபிடிக்க வேண்டும் அல்லது கொலைசெய்ய வேண்டும் அல்லது நாட்டைவிட்டு வெளியேற்ற வேண் டும் என்பதற்காகத் திட்டங்கள் தீட்டிக்கொண்டிருந்தார்கள்.

> உம்மைச் சிறைபடுத்த வேண்டும் அல்லது கொன்றுவிட வேண்டும் அல்லது ஊரிலிருந்து வெளியேற்றிவிட வேண்டும் என்பதற்காக நிராகரிப்பாளர்கள் உம் விசயத்தில் சதிசெய்துகொண்டிருந்ததை நீர் நினைவுகூரும். அவர்கள் திட்டம் தீட்டிக்கொண்டிருந்தார்கள். அல்லாஹ்வும் திட்டம் தீட்டிக்கொண்டிருந்தான். திட்டம் தீட்டு வதில் அல்லாஹ்வே மிகச் சிறந்தவன். (30)

மக்களுக்குத் தடுமாற்றம் ஏற்பட்டுவிட்டால், அவர்களுக்கு முன்னால் பல பாதைகள் இருந்து எதைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று தெரியா விட்டால் அவர்கள், 'அல்லாஹ்வே, எங்களுக்குச் சத்தியத்தைச் சத்திய மாகக் காட்டுவாயாக. அதனைப் பின்பற்றும் பாக்கியத்தைத் தந்தருள் வாயாக. அசத்தியத்தை அசத்தியமாகக் காட்டுவாயாக. அதனைவிட்டு ஒதுங்கும் பாக்கியத்தைத் தந்தருள்வாயாக.' என்றுதான் பிரார்த்திக்க வேண்டும். ஆனால், இந்த அநியாயக்காரர்கள் இவ்வாறு பிரார்த்தித்தார்கள்: 'அல்லாஹ்வே, இதுதான் உன்னிடமிருந்து வந்துள்ள உண்மையானால் எங்கள்மீது கல்மாரி பொழிந்துவிடு அல்லது வதைக்கும் வேதனையை எங்களிடம் கொண்டுவா. (32)'

நிராகரிப்பில் பல வகைகள் இருக்கின்றன. சிறிய நிராகரிப்பும் இருக் கிறது. நிராகரிப்பில் மிக மோசமானது அல்லாஹ்வின் இருப்பையே மறுப்பதாகும். அதற்குப் பிறகு அல்லாஹ்வுக்கு இணைகளை ஏற்படுத் துவது, அவனுக்குப் பிள்ளைகள் இருக்கின்றன என்று கூறுவது ஆகியவை யாகும்.

*அதில் ஒரு வகை, நிராகரிப்பின் தலைவர்கள் தங்களைத்தாங்களே வணங்கிக்கொண்டிருந்தார்கள். எல்லாவற்றையும்விட அவர்கள் முன்னு ரிமையளிக்கின்ற அவர்களின் இச்சைகள் நிலைத்திருக்கும்வரை அவர்கள் நிராகரிப்புடன் நேசம்பாராட்டத்தான் செய்வார்கள்.*

*அவர்களில் ஒரு வகையினர், உண்மையாகவே தாங்கள் செய்யும் தீய செயல்களைச் சரியானவை என்று எண்ணுகிறார்கள்: 'யாருக்கு அவருடைய தீய செயல் அழகாக்கப்பட்டு அதனை அவர் நற்செயலாகக் காண்கிறாரோ* … (35:8)' *அன்றைய இணைவைப்பாளர்களான அறபுகள், சிலைகள் தங்களுக்குப் பலனளிக்க அல்லது தீங்களிக்கச் சக்திபெற்றவை, அவை அல்லாஹ்விடத்தில் பரிந்துரைசெய்யக்கூடியவை என்று உண்மையாகவே நம்பினார்கள்.*

*இறைத்தூதர்கள் தூய தவ்ஹீதின் பக்கம் மக்களை அழைத்தார்கள். அவர்கள் குறிப்பிட்ட காலம்வரை மக்களிடம் காணப்பட்ட கலவையான இந்தச் சிந்தனைகளைச் சீர்படுத்தக்கூடியவர்களாக இருந்தார்கள். ஆகவேதான் அல்லாஹ் தன் தூதருக்குக் கூறினான்: 'நீர் அவர்களிடையே இருக்கும் நிலையில் அல்லாஹ் அவர்களைத் தண்டிக்க மாட்டான். அவர்கள் பாவமன்னிப்பு தேடுபவர்களாக இருக்கும்போதும் அல்லாஹ் அவர்களைத் தண்டிக்க மாட்டான்.* (33)'

*அவர்களின் இந்த நடத்தை அவர்களை வேதனைக்கு அப்பாற்பட்ட வர்களாக ஆக்கிவிட்டதா? அவர்கள் பிற மனிதர்கள்மீது அநீதி இழைப்ப வர்களாகவும் தங்களுக்குத்தாங்களே அநீதி இழைத்துக் கொள்பவர் களாகவும் இருக்கிறார்கள்.*

> *அல்லாஹ் ஏன் அவர்களைத் தண்டிக்க மாட்டான்? அவர்கள் மஸ்ஜிதுல் ஹறாமின் பொறுப்பாளர்களாக இல்லாதிருந்தும் அதனை விட்டு மக்களைத் தடுக்கிறார்களே! இறையச்சமுடையோர் தாம் அதன் பொறுப்பாளர்களாவர். ஆயினும், அவர்களில் பெரும் பாலோர் அறிந்துகொள்வதில்லை.* (34)

*தவறான அவர்களின் வணக்க வழிபாடுகள் அவர்களுக்கு எந்தப் பயனையும் அளிக்கப்போவதில்லை. அவர்கள் கஅபாவை வீணாகச் சு ற்றிவருவது வணக்கமாகக் கருதப்படாது. கைதட்டுவதையும் விசில் அடிப்பதையும் இணைவைப்பையும் அவர்கள் வணக்க வழிபாடுகளாகக் கருதுகிறார்கள். உண்மையில் கஅபாவைத் தவாஃப்செய்பவர்கள் அல்லாஹ்வை மட்டுமே நினைவுகூரக்கூடியவர்கள்தாம். அவர்கள் நிலையான நல்லறங்களால் அதனை உயிர்ப்பிக்கிறார்கள். அல்லாஹ்*

பரிசுத்தமானவன். எல்லாப் புகழும் அவனுக்கு மட்டுமே உரியது. அவனைத் தவிர வணக்கத்துக்குரிய இறைவன் வேறு யாரும் இல்லை. அவனே மிகப் பெரியவன்.

இணைவைப்பாளர்கள் இவற்றில் எதையும் செய்வதில்லை. அவர்கள் தவ்ஹீதுக்கு எதிராகப் போரிடுவதில் தங்களின் ஆற்றல்களைச் செலவு செய்கிறார்கள். அதற்காக அவர்கள் பெரும் செல்வங்களைச் செலவிடு கிறார்கள். அவர்கள் ஒருபோதும் வெற்றியடைய மாட்டார்கள். 'நிரா கரிப்பாளர்கள் மக்களை அல்லாஹ்வின் பாதையைவிட்டுத் தடுப்பதற் காகத் தம் செல்வங்களைச் செலவுசெய்கிறார்கள். அவர்கள் செலவு செய்துகொண்டே இருப்பார்கள். இறுதியில் அதுவே அவர்களுக்குப் பேரிழப்பாக அமைந்துவிடும். பின்னர், அவர்கள் வெற்றி கொள்ளப் படுவார்கள். (36)'

அவர்கள் வெற்றி கொள்ளப்படுவார்கள். அழிவை ஏற்படுத்தும் தோல்வியைச் சந்திப்பார்கள். ஏன் அவர்கள் செயல்பட வேண்டும்?

இங்கு நபியவர்கள் அவர்களுக்குப் பாவமன்னிப்பின் வாசலைக் காட்டுகிறார்கள். அவர்கள் நிராகரிப்பிலிருந்தும் குழப்பம் செய்வதி லிருந்தும் விலகிவிட வேண்டும். அவ்வாறு அவர்கள் செய்தால் திருப்தி யான ஒரு வாழ்க்கையை அவர்களால் வாழ முடியும்: 'நிராகரிப்பாளர் களிடம் நீர் கூறும், அவர்கள் விலகிக்கொள்வார்களாயின் நடந்தவற்றுக் காக மன்னிக்கப்படுவார்கள். ஆனால், அவர்கள் மீண்டும் அதனையே செய்தால் முன்சென்றவர்களின் வழிமுறை முன்னரே கடந்துவிட்டது. (38)'

அநியாயத்தில் பிடிவாதமாக நிலைத்திருப்பவர்கள் இழப்பைத் தவிர வேறு எதையும் பெற மாட்டார்கள். அவர்களுக்கு முன்னர் ஆது, ஸமூது சமூகங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, பாவமன்னிப்பு கோரி மீண்டுவிடுவதே குறைஷிகளுக்குச் சிறந்தது. அவ்வாறு இல்லையெனில் குழப்பம் நீங்கும்வரை, மார்க்கச் சுதந்திரம் நிலைபெறும்வரை அவர்கள் போரிடப்படுவார்கள்: 'குழப்பம் நீங்கி மார்க்கம் முழுவதும் அல்லாஹ் வுக்கே உரித்தாகும்வரை நீங்கள் அவர்களுடன் போரிடுங்கள். (39)'

❖ ❖ ❖

போர்ச் செல்வங்களுக்கு ஆசைப்பட்டோர், அவற்றுக்காக முரண்பட் டோர் ஆகியவர்களை வசனம் உள்ளடக்கிவிட்டது. ஈமானுடனும் தியாகம்செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடனும் எவ்வாறு அவர்கள் போருக்குப் புறப்பட்டார்களோ அவ்வாறே நிலைத்திருக்கும்படி அவர் களை நோக்கித் தொடர் அழைப்புகள் விடப்படுகின்றன.

*பின்னர், போர்ச் செல்வங்களை ஐந்து பங்குகளாகப் பிரித்து, ஒரு பங்கை நன்மையான வழிகளிலும் மற்ற நான்கு பங்குகளைப் போரிட்ட படை வீரர்களுக்கு மத்தியிலும் பங்கிடுமாறு அறிவுறுத்தப்படுகிறது: 'போரில் நீங்கள் கைப்பற்றிய செல்வங்களில் ஐந்தில் ஒரு பங்கு அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் அவருடைய உறவினருக்கும் அநாதைகளுக்கும் ஏழைகளுக் கும் வழிப்போக்கருக்கும் உரியதாகும்.* (41)'

*நபியவர்கள் மற்றும் தோழர்களின் வாழ்க்கையிலிருந்து இது நிரந்தர மான பங்கீடு அல்ல என்பது தெளிவாகிறது. போர்ச் செல்வங்கள் வேறு வகையான பங்கீடுகளுக்கும் உள்ளாக்கப்பட்டன. சூடான், எகிப்து ஆகிய நாடுகள் வெற்றி கொள்ளப்பட்ட சமயத்தில் உமர் வேறொரு பங்கீட் டையே முன்வைத்தார்.*

*இந்த விவகாரம் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விவகாரமாகும். நபித்தோழர்கள் எந்தக் கூலியையும் பெறாமல் தன்னார்வமாகவே போரிட் டார்கள். அவர்கள் தங்களுக்கான ஆயுதங்களைத் தங்களின் செல்வங் களிலிருந்தே வாங்கினார்கள். போருக்குச் செல்வதற்கு முன்னர் அவர்களின் குடும்பாத்தாருக்குத் தேவையான செலவுகளையும் அவர்கள் வழங்கி விட்டுத்தான் சென்றார்கள்.*

*அரசின் உதவியை எதிர்பார்க்காமல் அவர்களுக்குத் தேவையான முன்னேற்பாடுகளை அவர்களே செய்துகொண்டார்கள்.*

*இந்தச் சூழ்நிலையில் போர்ச் செல்வங்களிலிருந்து அவர்களுக்கு வழங்கப்படும் பங்கீடுகள் சரியான வழிமுறைகளாகவே கருதப்படும்.*

*ஆனாலும் சூழல் மாறும்போது, முறைப்படுத்தப்பட்ட இராணுவம் ஏற்படுத்தப்படும்போது, படைவீரர்களுக்குத் தேவையான ஆயுதங்களும் சம்பளமும் வழங்கப்படும்போது ஓர் அரசு போர்ச் செல்வங்களைத் தான் விரும்பும் வேறொரு வகையில் பயன்படுத்தலாம்.*

*போர்ச் செல்வங்களைப் பங்கிடுவதுகுறித்து பேசும் வசனம் இரண்டு விவகாரங்களுக்கு இடையில் வந்துள்ளதை நம்மால் காண முடிகிறது. ஒன்று, அல்லாஹ்வின் பாதையைவிட்டு மக்களைத் தடுப்பதற்காகத் தங்களின் செல்வங்களைச் செலவுசெய்த, பலவீனர்களைக் குழப்பத்தில் ஆழ்த்துவதற்காக, ஆயுதங்களைக் கொண்டு அவர்களை வழிகெடுப்ப தற்காகத் தங்களின் ஆற்றல்களைச் செலவிட்ட நிராகரிப்பாளர்களின் பகைமை வர்ணிக்கப்பட்டுள்ளது. இரண்டு, முஸ்லிம்களை நோக்கி அல்லாஹ் இழுத்துவந்த அன்பளிப்பு வர்ணிக்கப்படுகிறது. அல்லாஹ் அவர்களுக்குப் பெரும் வெற்றியை அளித்தபோது அதற்கான முன் னேற்பாடுகளில் அவர்களின் எந்தப் பங்கும் இருக்கவில்லை.*

*நீங்கள் பள்ளத்தாக்கின் அருகில் உள்ள எல்லையிலும் அவர்கள் தொலைவில் உள்ள எல்லையிலும் இருந்தபோது வர்த்தகக் கூட்டம் உங்களுக்குக் கீழ்ப்பகுதியில் இருந்தது. நீங்களும் அவர்களும் சந்திக்கும் நேரத்தை நிர்ணயம்செய்திருந்தால் நிச்சயம் அதுகுறித்து பிணங்கியிருப்பீர்கள். ஆயினும், ஆக வேண்டிய காரியத்தை அல்லாஹ் நிறைவேற்றிவிட வேண்டும் என்பதற்காக உங்களை மோதச்செய்தான். இது ஏனெனில், வீழ்பவர் தெளிவான ஆதாரத்துடன் வீழ்ந்துவிட வேண்டும் என்பதற்காவும் வாழ்பவர் தெளிவான ஆதாரத்துடன் வாழ வேண்டும் என்பதற்காகவும்தான். நிச்சயமாக அல்லாஹ் செவியேற்பவனாகவும் நன்கறிந்தவனாகவும் இருக்கிறான்.* (42)

*இணைவைப்பாளர்கள் எண்ணிக்கூடப் பார்க்க முடியாத அளவு அல்லாஹ் ஒரே அடியில் அவர்களின் அறியாமைக்காலக் கர்வத்தினை அடித்துநொறுக்கினான். அவர்கள் தங்களின் அறிவைத் தொலைத்தார்கள். அந்தப் பாலைவன மணலில் இழிவடைந்தவர்களாகச் சிதறிப்போனார்கள்.*

*முஸ்லிம்கள் வலுவடைந்தார்கள். அவர்களின் முகங்கள் பிரகாசமடைந்தன. பதினைந்து வருடங்கள் அவர்கள் அனுபவித்த துன்பங்களுக்கு அந்தச் சமயத்தில் தகுந்த கூலியைப் பெற்றார்கள்.*

*பத்ருடைய நாள் சத்தியமும் அசத்தியமும் வெளிப்படும் நாளாகவும் இரு படைகளும் மோதிக்கொள்ளும் நாளாகவும் இருந்தது. நீண்ட காலமாக அசத்தியத்தைக் கொண்டு கர்வம் கொண்டிருந்தவர்களை அல்லாஹ் இழிவடையச் செய்தான். பெரும் சிரமங்களை அனுபவித்துக்கொண்டு பொறுமையைக் கடைப்பிடித்த நம்பிக்கையாளர்களை அவன் கண்ணியப்படுத்தினான்.*

*இது எடுத்துரைக்கப்பட்டபிறகு ஆறாவது அழைப்பு இடம்பெறுகிறது. அதுவே இறுதியான அழைப்பும்கூட.*

*அது நிரந்தரமான வெற்றிக்குத் தேவையான ஆறு அறிவுரைகளை உள்ளடக்கியுள்ளது.*

*சிகரத்தை அடைவதற்குப் பெரும் முயற்சி தேவைப்படுகிறது. ஆனால், அதன் மேல் நீடித்திருப்பதற்கு அதைவிடப் பெரும் முயற்சி அவசியமாகிறது.*

*பின்வரும் வசனம் இதைத்தான் குறிப்பிடுகிறது போலும். அது வெற்றிக்கும் கால ஓட்டத்தில் அது நிலைத்திருப்பதற்கும் அவசியமான விசயங்களைப் பட்டியலிடுகிறது:*

அ. நம்பிக்கையாளர்களே, ஏதேனும் ஒரு படையோடு நீங்கள் மோதினால் உறுதியாக நில்லுங்கள்.

ஆ. நீங்கள் வெற்றிபெறும் பொருட்டு அல்லாஹ்வை அதிகமதிகம் நினைவுகூருங்கள்.

இ. அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படியுங்கள்.

ஈ. ஒருவருக்கொருவர் பிணங்கிக்கொள்ளாதீர்கள். அவ்வாறு செய் தால் நீங்கள் பலவீனப்பட்டு வலுவிழந்துபோய்விடுவீர்கள்.

உ. பொறுமையைக் கடைப்பிடியுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்.

ஊ. ஆணவத்துடனும் பிற மக்களுக்குக் காட்டுவதற்காகவும் தம் வீடுகளிலிருந்து புறப்பட்டு அல்லாஹ்வின் பாதையை விட்டு மக்களைத் தடுத்துக்கொண்டிருப்பவர்களைப் போன்று நீங்களும் ஆகிவிடாதீர்கள் ... (45-47)

போரில் நிலைகுலையாமல் உறுதியாக நிற்பதற்கு உறுதியும் அர்ப் பணிப்பும் கொண்ட உள்ளம் அவசியமாகிறது. இது தொடர்பான ஒரு கவிஞரின் பின்வரும் கவிதை என்னை மிகவும் கவர்ந்துவிட்டது:

மரணமோ, அவன் அவாக் கொண்டு கடக்கும் தருணம்
எளிதானது
கசப்பாய்ச் சுமந்திருந்த இடர்நிறை உயர்குணம் வழியே!

வாழ்வின் பெருந்துயர்களோடு தன் உதிரத்தால் போராடி , தன்னையே அர்ப்பணித்து தனக்கு முன்னர் உயிர் நீத்தோரைக் காண அவாக் கொள்ளும் உயர்ந்தோர்க்கு அப்துல்லாஹ் இப்னு ரவாஹா என்ற நபித்தோழர் நிகரற்ற முன்னுதாரணமாய் இருக்கிறார். அவர் கூறுவதைக் கவனியுங்கள் :

என்னுயிர் பறிக்கப்படாமலே, என்னை விட்டு பிரியப்
போகிறது!
அதோ நான் யாசித்த மரணம் ஒரு புறாவாய்ப் பறந்துவருகிறது
எந்தன் உயிரே! நீ இறந்துவிட்டால்தான் அவர்களின் ஆசைப்
பரிசுகிடைக்கும்
செய்வாயா? அவர்கள் இருவரும் அதை அடைந்து
கொண்டார்களே!

ரோமர்களுடனான போரில் தனக்கு முன்னர் தலைமை தாங்கி வீர மரணமடைந்த ஸைத் இப்னு ஹாரிதா, ஜஃபர் இப்னு அபீதாலிப் ஆகியோரையே இங்கு அவர் குறிப்பிடுகிறார்.

அவர் உறுதியுடன் நின்று அவர்கள் இருவரையும் சென்றடைந்தார். மூவரும் அருட்கொடைகள் நிரம்பிய சுவனங்களில் ஒன்றிணைந்து விட்டார்கள்.

அல்லாஹ்வை நினைவுகூர்வது அவனை விரைவாகச் சந்திப்பதை, அவன் பக்கமே சென்றடைவதை, அவனுக்காகவே போரிடுவதை நினைவூட்டுகிறது.

மனிதன் தனக்குப் பிரியமானவர்களைப் பிரியப்போகிறேன் என்று பதற்றமடையும்போது அதற்குப் பிறகு அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் தோழர்களாக இருப்பார்கள் என்ற செய்தி அவனுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிவது நிரந்தரமான வெற்றியைப் பெற்றுத்தரும்.

இஸ்லாத்தின் எதிரிகள் மிக அதிகமாக அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறாகச் செயல்படும்போது முஸ்லிம்கள் அவனுக்கு முழுமையாகக் கீழ்ப்படிய வேண்டும். எந்த நிலையிலும் அவனுடைய கட்டளைக்கு மாறாகச் செயல்பட்டுவிடக் கூடாது. நிராகரிப்பாளர்களுக்காகத் தயார் செய்யப்பட்டுள்ள நரக நெருப்பைவிட்டும் அவர்கள் தங்களைக் காத்துக் கொள்ள வேண்டும்.

உமர் இப்னுல் ஃகத்தாப் (றழி) பாரசீகத்தில் போரிட்டுக்கொண்டிருந்த தம்முடைய படைவீரர்களுக்குப் பாவங்களை விட்டு விலகியிருக்குமாறு அறிவுறுத்திக்கொண்டிருந்தார். நான் பாவங்களைக் கண்டு அஞ்சும் அளவுக்கு எதிரிகளின் சூழ்ச்சிகளைக் கண்டுகூட அஞ்சவில்லை என்று அவர்களிடம் கூறுபவராகவும் இருந்தார்.

முஸ்லிம்களும் நிராகரிப்பாளர்களும் பாவம்செய்வதில் சமமானவர்களாக இருந்தால் அல்லாஹ் யாருக்கும் உதவிசெய்யாமல் அவர்களிடமே விவகாரத்தை ஒப்படைத்துவிடுவான். குறைந்த எண்ணிக்கை கொண்ட, போதுமான முன்னேற்பாடுகளைச் செய்யாத அணியினர் தோல்வியைத் தழுவுவார்கள்.

நம்முடைய ஒழுக்கம் நம் எதிரிகளின் ஒழுக்கத்தைவிட மோசமாக இருக்கும் பட்சத்தில் எங்கிருந்து நமக்கு வெற்றி கிடைக்கும்? நம்மிடம் ஒற்றுமையும் இல்லை, கருத்து வேறுபாட்டை ஏற்படுத்தும் விசயங்களைவிட்டு நாம் ஒதுங்கியிருக்கவுமில்லை.

இன்று உலகில் ஐந்தில் ஒரு பங்கினர் முஸ்லிம்கள்தாம். ஆனாலும், அவர்களின் நாடுகளுக்குள் ஒற்றுமையின்மையால் சிதறிப் போய் கிடக்கிறார்கள். அவர்கள் பல்வேறு அணியினராகப் பிரிந்து தங்களுக்குள்

கடுமையாக மோதிக்கொண்டிருக்கிறார்கள். அதே சமயம் யூதர்கள் -அவர் கள் பல்வேறு பிரிவினர்களாக இருந்தும்- ஓரணியில் நிற்கிறார்கள். அனைவரும் ஒன்றிணைந்து நம்மை எதிர்க்கிறார்கள். அவர்கள் நம்மிட மிருந்து கைப்பற்றிக்கொண்டிருக்கிறார்கள். நாம் அவர்களிடமிருந்து எதையும் கைப்பற்ற முடிவதில்லை.

மஸ்ஜிதுல் அக்ஸாவை அவர்கள் கைப்பற்றிவிட்டார்கள். நாமோ நம்முடைய உள்விவகாரங்களில் மூழ்கிக்கிடக்கிறோம். நாம் வலுவிழந்து பலவீனமானவர்களாக இருக்கிறோம்.

பொறுமை என்பது இறைவனுக்குக் கீழ்ப்படிவதும் அவனுக்கு மாறு செய்வதைவிட்டு விலகியிருப்பதும் ஆகும். இச்சைகளுக்குப் பின்னால் ஓடக்கூடிய சமூகத்தால் பொறுமையைக் கடைப்பிடிக்க முடியாது.

இஸ்லாம் வலியுறுத்தும் போருக்கான முதல் நிபந்தனை, அது அல் லாஹ்வின் பாதையில் இருக்க வேண்டும். ஆனால், இன்றைய அரசுகள் செய்யக்கூடிய போர்கள் இனவாதத்துக்காக, கொடுங்கோலனின் ஆட்சியை நிலைநிறுத்துவதற்காக, பலவீனர்களின் உரிமைகளைப் பறிப்பதற்காகவே அமைந்திருக்கின்றன. இவர்கள் அல்லாஹ் வர்ணித்ததுபோன்று பின்வரும் விளைவுகளையே பெறுவார்கள்:

> நிராகரிப்பாளர்களின் உயிர்களைப் பறிக்கும்போது அவர்களின் முகங்களிலும் முதுகுகளிலும் அடித்தவாறு 'சுட்டெரிக்கும் வேத னையைச் சுவையுங்கள்' என்று வானவர்கள் கூறுவதை நீர் பார்க்க வேண்டுமே! நீங்கள் உங்கள் கரங்களால் முன்னரே செய்தவற்றின் விளைவுதான் இது. அல்லாஹ் அடியார்களின் மீது சிறிதும் அநீதி இழைக்க மாட்டான். (50,51)

கொடுங்கோலர்களின் வாழ்க்கையும் அவர்களுக்கு ஏற்படும் முடிவு களும் ஒன்றுபோலவே அமைகின்றன:

> இது ஃபிர்அவ்னைச் சார்ந்தவர்கள், அவர்களுக்கு முன்னிருந்த வர்கள் ஆகியோரின் நிலையைப் போன்றதுதான். அவர்கள் அல் லாஹ்வின் சான்றுகளை நிராகரித்தார்கள். ஆகவே, அவர்களின் பாவங்களினால் அல்லாஹ் அவர்களைத் தண்டித்தான். நிச்சயமாக அல்லாஹ் வல்லமைமிக்கவனாகவும் தண்டிப்பதில் கடுமையான வனாகவும் இருக்கிறான். (52)

காலங்கள் மாறுபடும். ஆனால், முன்னோர்கள் மற்றும் பின்னோர்கள் விசயத்தில் அல்லாஹ்வின் நியதி ஒன்றுதான்.

❖ ❖ ❖

ஒரு ஜாஹிலிய்யக் கவிஞர் பத்ருப் போரில் கொல்லப்பட்ட தம் பிள்ளைகளுக்கு ஒப்பாரிவைத்தவராகக் கூறுகிறார்:

அறிந்துகொள்ளுங்கள், அவர்களுக்குப் பிறகு சிலர் ஆட்சியாளர் களாக ஆனார்கள்.

பத்ருடைய நாள் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் அவர்கள் ஆட்சியாளர்களாக ஆகியிருக்க மாட்டார்கள்.

ஆம். பத்ருடைய நாள் அவர்களுக்கு ஆட்சியதிகாரத்தைப் பெற்றுத் தந்தது. முஸ்லிம்கள் பலமடைந்தார்கள். இணைவைப்பாளர்கள் பலம் குன்றிப்போனார்கள். அது அவர்களின் கர்வத்தையும் ஆடம்பரமான வாழ்வையும் தகர்த்தது.

அருட்கொடைகளோடு அவர்கள் செழிப்புடன் வாழ்ந்த நாள்கள் அவர்களின் கர்வத்தைத்தான் அதிகரித்தன. அது அவர்களிடமிருந்து அவை பறிக்கப்படக் காரணமாக அமைந்தது:

அல்லாஹ் ஓர் ஊர்மக்களை உதாரணமாகக் கூறுகிறான். அவர்கள் அமைதியாகவும் நிம்மதியாகவும் வாழ்ந்துவந்தார்கள். அவர் களுக்கான வாழ்வாதாரம் எல்லா இடங்களிலிருந்தும் தாராளமாகக் கிடைத்துக்கொண்டிருந்தது. ஆனால், அவர்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நன்றிகெட்டத்தனமாக நடந்துகொண்டார் கள். ஆகவே, அவர்களின் செயல்களினால் அல்லாஹ் பசியையும் பயத்தையும் அவர்கள் சுவைக்கும்படி செய்தான். (16:112)

அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்தாமல் நன்றிகெட்டத்தனமாக நடந்துகொள்ளும் முன்னோர்கள், பின்னோர்கள் என அனைவருடனும் அல்லாஹ் இவ்வாறே நடந்துகொள்கிறான்.

எந்தச் சமூகமும் தம் உள்ளங்களில் உள்ளவற்றை மாற்றிக்கொள் ளாதவரை அல்லாஹ் அவர்கள்மீது பொழிந்த அருட்கொடையை மாற்றுவதில்லை என்பதே இதற்குக் காரணமாகும். நிச்சயமாக அல்லாஹ் செவியேற்பவனாகவும் நன்கறிந்தவனாகவும் இருக்கி றான். (53)

நன்றிசெலுத்துதல் அருட்கொடைகளைப் பாதுகாக்கும் தடுப்பு அர ணாக இருக்கிறது. அது இல்லையெனில் ஒவ்வொரு பாதையிலிருந்தும் அவை வெளியேறிவிடும். பத்ருப் போரில் கைதிகளாகப் பிடிபட்ட வர்களுக்கு வழங்கப்பட்ட பின்வரும் அறிவுரையும் இந்தப் பொருளுக்கே வலுசேர்க்கிறது:

தூதரே, உங்களிடம் இருக்கும் கைதிகளிடம் கூறுவீராக: 'அல்லாஹ் உங்கள் உள்ளங்களில் ஏதேனும் நன்மையைக் கண்டால் உங்களிடமிருந்து பெறப்பட்டதைவிடச் சிறப்பானதை அவன் உங்களுக்கு வழங்கிடுவான். உங்களை மன்னித்தும் விடுவான். அல்லாஹ் பெரும் மன்னிப்பாளனாகவும் இணையிலாக் கிருபையாளனாகவும் இருக்கிறான்.' அவர்கள் உமக்குத் துரோகம் இழைக்க நாடினால் -ஏற்கனவே அவர்கள் அல்லாஹ்வுக்குத் துரோகம் இழைத்து விட்டார்கள்- அவன் அவர்கள் விசயத்தில் உமக்கு அதிகாரமளித்துவிட்டான். அல்லாஹ் நன்கறிந்தவனாகவும் ஞானம் மிக்கவனாகவும் இருக்கிறான். (70,71)

இணைவைப்பாளர்களைப் போன்றே யூதர்களும் அல்லாஹ்வின் அருட்கொடைகளுடன் நன்றிகெட்டத்தனமாக நடந்துகொண்டார்கள். தங்களுக்கு ஏதேனும் பலன் இருந்தால்தான் அவர்கள் ஒப்பந்தத்தைப் பேணினார்கள். அவ்வாறு இல்லாத ஒப்பந்தங்களை மீறினார்கள். இவர்களைக் குறித்துதான் பின்வரும் வசனம் அருளப்பட்டது: 'நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் மிகவும் தீய விலங்குகள் நிராகரிப்பாளர்கள்தாம். அவர்கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள். அவர்களுடன் நீர் உடன்படிக்கைசெய்தீர். ஆனாலும், ஒவ்வொரு முறையும் அவர்கள் தம் உடன்படிக்கையை முறித்துவிடுகிறார்கள். அவர்கள் இறைவனை அஞ்சுவதில்லை. (55,56)'

இவர்கள் வேதனைமிக்க தோல்வியின் நிழலில்தான் கட்டுப்படுகிறார்கள். ஆகவேதான் தூதரிடம் கூறப்பட்டது, 'போர்க் களத்தில் உம்முடன் மோதுபவரை, அவருக்குப் பின்னால் இருப்பவர்களும் அஞ்சும் அளவுக்குத் தாக்கும்.'

ஆகவே, நீர் அவர்களைப் போர்க்களத்தில் கண்டால் அவர்களுக்குப் பின்னால் இருப்பவர்களும் விலகி ஓடும் அளவுக்கு அவர்களைத் தண்டிப்பீராக. அதனால் அவர்கள் படிப்பினைபெறக்கூடும். ஏதேனும் ஒரு சமூகத்தைக் குறித்து 'அவர்கள் துரோகம் இழைத்து விடுவார்கள்' என்று நீர் அஞ்சினால் நீரும் சரிசமமாக உடன்படிக்கையை முறித்துவிடும். நிச்சயமாக அல்லாஹ் துரோகிகளை நேசிப்பதில்லை. (57,58)

வாளைக் கொண்டுதான் அநியாயத்தைக் கட்டுப்படுத்த முடியுமெனில் முஸ்லிம்கள் வாளேந்தவே வேண்டும். போரின் மூலமாகவே அன்றி நீதி நிலைநிறுத்தப்படாது என்ற நிலை ஏற்பட்டுவிட்டால் முஸ்லிம்கள் நீதியின் கொடியை உயர்த்தும் பொருட்டுப் போர்க்களம் புகுந்தே தீர வேண்டும்.

நாங்கள் அமைதியைத்தான் விரும்புகிறோம். அதன் நிழலில்தான் எங்களின் மார்க்கத்தை முழுமையாக எடுத்துரைக்க முடியும். விரும்பியவர் நம்பிக்கை கொள்ளலாம். விரும்பியவர் நிராகரிக்கலாம். ஆனால், எங்களின் வாய்கள் கட்டப்பட்டால், இஸ்லாத்தை விட்டு விடும் பொருட்டு ஒரு முஸ்லிம் துன்புறுத்தப்பட்டால் நாங்கள் என்ன செய்வது? போர் செய்வதைத் தவிர எங்களுக்கு வேறு வழி இல்லை.

போர்க்களத்தில் எண்ணிக்கை முக்கியம் அல்ல. சிறு கூட்டம் பெரும் கூட்டத்தை வெல்லலாம். உறுதியான ஒருவர் பத்து நபர்களை வீழ்த்தலாம்.

காரணம், நம்பிக்கையாளன் போர்புரியும்போது அல்லாஹ் அவனுக்கு உதவியாளனாக இருக்கிறான். அவன் தாக்குதல் தொடுக்கும்போது அவனுடன் இணைந்து வானத்தின் ஆற்றல்களும் தாக்குகின்றன. இதைத் தான் பின்வரும் வசனம் எடுத்துரைக்கிறது:

> தூதரே, நம்பிக்கையாளர்களைப் போர்புரியத் தூண்டுவீராக. உங்களில் உறுதி வாய்ந்த இருபது பேர் இருந்தால் அவர்கள் இருநூறு பேரை வென்றுவிடலாம். உங்களில் நூறு பேர் இருந்தால் ஆயிரம் நிராகரிப்பாளர்களை வென்றுவிடலாம். ஏனெனில், அவர்கள் புரிந்துகொள்ளாத மக்களாக இருக்கிறார்கள். (65)

இது ஒரு நிரந்தரமான கட்டளை என்று கூறுவோருடன் நான் இருக்கிறேன். ஒருவர் இருவரை வீழ்த்தலாம் என்பது தற்காலிகமாகத் தோன்றக் கூடிய பலவீனமான நிலைக்கான, சூழலுக்கான அறிவுரைதான். தற்காலிகமான இந்த நிலை அகன்றுவிட்டால் ஒருவர் பத்து பேரை வெல்லலாம். பின்வரும் வசனம் இதைத்தான் எடுத்துரைக்கிறது:

> இப்போது அல்லாஹ் உங்கள்மீது உள்ள சுமையைக் குறைத்து விட்டான். உங்களிடம் பலவீனம் உள்ளது என்பதை அவன் அறிந்துகொண்டான். ஆகவே, உங்களில் உறுதி வாய்ந்த நூறு பேர் இருந்தால் அவர்களில் இருநூறு பேரை வென்றுவிடலாம். ஆயிரம் பேர் இருந்தால் அல்லாஹ்வின் அனுமதிகொண்டு இரண்டாயிரம் பேரை வென்றுவிடலாம். அல்லாஹ் உறுதி வாய்ந்தவர்களுடன் இருக்கிறான். (66)

தங்களுக்கென்று அரண்களை ஏற்படுத்திக்கொண்ட சிறு படைகள் பெரும் படைகளை எதிர்த்துப் போரிட்டுக்கொண்டுதான் இருக்கின்றன.

கடந்த ஒரு போரில் ஒரு சிறு கூட்டம் ஆயுதம் தரித்த யூதர்களின் பெரும் படைகளை விரட்டியடித்தது. எனக்குத் தெரிந்த ஒரு சம்பவம், தாக்கு

வதற்குத் தயாராக நின்ற ஒரு கூட்டத்தை எகிப்திய இராணுவ வீரன் ஒருவன் தன்னிடம் கையெறிகுண்டுகள் இருப்பதாக அச்சுறுத்தி சரண டையச்செய்திருக்கிறான். அவர்கள் அனைவரையும் அவன் கைதிக ளாக்கியிருக்கிறான்.

தன்னை அர்ப்பணிக்க முடிவுசெய்துவிட்ட ஒரு படைவீரனால் ஒரு பெரும் கூட்டத்தை எதிர்த்துப் போரிட முடியும்.

> எத்தனையோ சிறு படைகள் அல்லாஹ்வின் அனுமதிகொண்டு பெரும் படைகளை வென்றிருக்கின்றன. அல்லாஹ் பொறுமை யாளர்களுடன் இருக்கிறான். (2:249)

இறுதியாக இந்த அத்தியாயம் முஸ்லிம்களை -அவர்கள் உலகின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும்- ஒன்றிணைக்கும் ஓர் இணைப்போடு நிறைவடைகிறது. இந்த இணைப்பின் மூலம் அவர்கள் ஒருடலாக மாற்ற மடைகிறார்கள்.

அதுதான் அவர்களிடையே காணப்படும் சகோதரத்துவம். அவர்கள் இந்த மார்க்கத்துக்கு உதவிசெய்வதில் ஒருவருக்கொருவர் சகோதரர் களாக இருப்பார்கள்.

மார்க்கம் தன்னைப் பின்பற்றுவோருக்கு மத்தியில் இணைப்பை ஏற்படுத்துகிறது. அதனை உடைத்துவிடக் கூடாது. முஸ்லிம்கள் ஒரே சமூகத்தினராவர். அவர்கள் மற்றவர்களுக்கு எதிராக ஓரணியில் நிற்பவர் களாவர்.

இன்று முஸ்லிம்களின் எண்ணிக்கை சீனர்களைப் போன்று அதிக மாகிவிட்டது. ஆனாலும் சீன சமூகம் என்ற அடிப்படையில் சீனர்கள் ஒன்றிணைவதுபோன்று இஸ்லாமியச் சகோதரத்துவம் முஸ்லிம்களை ஒன்றிணைக்கிறதா? இன்று சீனர்களின் குரல் ஐக்கிய நாடுகள் சபையில் ஒரே குரலாக ஒலிக்கிறது. அவர்கள் ஒரு தீர்மானத்தை நிறுத்தும் அளவுக் குச் சிறப்பு அதிகாரம் பெற்றவர்களாக இருக்கிறார்கள்.

இந்த அத்தியாயத்தில், இறுதியில் அல்லாஹ் கூறுகிறான்:

> அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டு, புலம்பெயர்ந்து, அவ னுடைய பாதையில் தம் உயிர்களாலும் செல்வங்களாலும் ஜிஹாது செய்தவர்களும் புகலிடமளித்து உதவிபுரிந்தவர்களும் ஒருவருக் கொருவர் உற்ற தோழர்களாவர். ஆனால், யாரெல்லாம் நம்பிக்கை கொண்டபின்பும் புலம்பெயரவில்லையோ அவர்கள் புலம் பெயரும்வரை அவர்களுடன் உங்களுக்கு எவ்வித நட்புறவும் இல்லை ... (72)

அவர்கள் வேறுபடுத்தும் அம்சத்தைவிட்டுப் பின்தங்கிவிட்டார்கள். ஆகவே, அவர்களுக்கு உதவிபெறும் உரிமை இல்லை.

நிராகரிப்பாளர்கள் வெவ்வேறு பாதைகளில் செல்பவர்களாக இருந்தாலும் சத்தியத்தை எதிர்ப்பதில் ஒரே சமூகமாக இருக்கிறார்கள்.

> நிராகரிப்பாளர்கள் ஒருவருக்கொருவர் உற்ற நண்பர்களாக இருக்கிறார்கள். நீங்கள் அவ்வாறு செய்யவில்லையெனில் உலகில் குழப்பமும் பெரும் சீர்குலைவும்தான் ஏற்படும். (73)

ஆனால், எந்தச் சமூகம் ஒன்றுபட்டிருக்க வேண்டுமோ அது கருத்து வேறுபாடு கொண்டு பல சமூகங்களாகப் பிரிந்துகிடக்கிறது.

அது எழுபதுக்கு மேற்பட்ட நாடுகளாகப் பிரிந்துகிடக்கிறது. ஒவ்வொன்றும் தனக்கே உரிய கொடியையும் பெற்றிருக்கிறது.

அவையனைத்தும் அவற்றின் விவகாரங்களில் உதவுகின்றனவா அல்லது உதவி தேவைப்படும் சமயங்களிலும் உதவிசெய்யாமல் கைவிட்டுவிடுகின்றனவா?

இன்று முஸ்லிம்கள் ஐக்கிய நாடுகள் சபையில் தீயவர்களின் உணவு மேசைகளில் இருக்கும் அநாதைகளைவிட மோசமான நிலையில் இருக்கிறார்கள். மாறாக, சில முஸ்லிம்கள் 'ஈமானிய அழைப்பால் எந்தப் பயனும் இல்லை.' என்று கூறுவதையும் காண்கிறோம். அவர்கள் ஈமானிய அழைப்புக்குப் பதிலளிப்பதுமில்லை. அல்லாஹ்வின் கட்டளைக்குக் கட்டுப்படுவதுமில்லை.

இன வெறியும் தேசிய வெறியும் அவர்களிடையே பரவிக் காணப்படுகின்றன. நம்முடைய ஆன்மாவையே சிதைக்கும் பெரும் துன்பம் என்னவெனில், இஸ்லாம் அவர்களை இன வெறியிலிருந்து விடுவித்த பின்னரும் அவர்கள் அறபு தேசியத்தை முன்னிறுத்துகிறார்கள்.

இவையனைத்தும், யூதர்கள் விழிப்படைந்து தங்களின் வாழ்க்கையைத் தங்களின் மதத்தின் அடிப்படையில் அமைத்துக் கொண்ட இந்தத் துன்பம் மிகுந்த காலகட்டத்தில் நிகழ்கிறது. அவர்கள் கிறிஸ்தவர்களுடன் இணைந்து பைத்துல் முகத்தஸையும் புனித பூமியையும் கைப்பற்ற முயன்றுகொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு என்னவெனில், நாம் உள்ளூர் மற்றும் உலகளாவிய சூழல்களில் நம்முடைய ஈமானுக்கு உரிய இடத்தை அளிப்பதுதான்.

❖ ❖ ❖

அத்தியாயம் 9

# அத்தவ்பா

(பாவமன்னிப்பு)

*அத்தவ்பா என்ற இந்த அத்தியாயம் நபியவர்கள் மரணிப்பதற்கு ஐந்து மாதங்களுக்கு முன்னால் அருளப்பட்டதாகும். அதாவது வஹீ இறங்கத் தொடங்கி இருபத்து இரண்டு வருடங்களுக்குப் பிறகு அருளப்பட்ட தாகும். இடைப்பட்ட இந்தக் காலகட்டத்தில் இஸ்லாமிய எதிரிகளுடன் பின்வருமாறான அணுகுமுறைதான் மேற்கொள்ளப்பட்டது:*

> *அவர்கள் உம்மைப் பொய்யர் என்று கூறினால், 'என் செயல் எனக்குரியது, உங்கள் செயல் உங்களுக்குரியது. நான் செய்பவற்றை விட்டும் நீங்கள் விலகிக்கொண்டீர்கள். நீங்கள் செய்பவற்றை விட்டும் நான் விலகிக்கொண்டேன்.' என்று கூறிவிடும்.* (10:41)

*இந்த அணுகுமுறை 'மார்க்கத்தில் எந்த நிர்ப்பந்தமும் இல்லை.', 'அது முன்வந்து யாரையும் தாக்கவும் செய்யாது.' என்ற கொள்கை களையே அடிப்படைகளாகக் கொண்டது. ஆனாலும், இஸ்லாத்தின் எதிரிகளாக இருந்த இணைவைப்பாளர்களும் வேதக்காரர்களும் இஸ் லாமிய அழைப்பை அதன் வழியில் செல்ல அனுமதிக்கவில்லை. அத னோடு மோதினார்கள். இறுதியில் தோல்வியடைந்தார்கள்.*

*அவர்கள் உண்மையை ஒத்துக்கொண்டு எதிர்க்காமல் பின்வாங்கி னார்களா? நிச்சயமாக இல்லை.*

*அவர்கள், இறந்தவைபோன்று நடித்து தாக்க நினைக்கும் குள்ள நரிகளைப் போன்று மீண்டும் மீண்டும் ஏமாற்றவே விரும்பினர். அவர்கள் முஸ்லிம்களின் உரிமைகளைப் பறிப்பவர்களாக ஆனார்கள். ஆகவே, அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு வரம்புகள் மிக அவசியமானவையாக இருந்தன.*

மோசடி செய்யும் இந்த மனிதர்களின் ஒப்பந்தங்களிலிருந்து அல் லாஹ்வும் அவனுடைய தூதரும் விலகிவிட்டார்கள் என்பதற்கான பிரகடனமே இந்த அத்தியாயமாகும்.

வருத்தத்துக்குரிய ஒரு விசயம், சிலர் இந்த அத்தியாயத்துக்குத் தவ றான விளக்கம் கற்பிக்கின்றனர். அவர்கள் வசனத்தின் ஆரம்ப வாசகத்தை எடுத்துக்கொண்டு பிற்பகுதியில் இடம்பெறும் வாசகத்தை விட்டுவிடு கிறார்கள். எடுத்துக்காட்டாக, 'இணைவைப்பாளர்கள் அனைவருடனும் போரிடுங்கள்.' என்ற வாசகத்தை நிராகரிப்பாளர்கள் அனைவரையும் முன்வந்து தாக்குவதற்கான ஆதாரமாகக் கொள்கிறார்கள். ஆனால், அதே வசனத்தில் இடம்பெறும் 'அவர்கள் உங்களுடன் போரிடுவது போன்று...' என்ற வாசகத்தை விட்டுவிடுகிறார்கள். 'இணைவைப்பாளர்கள் ஒன்றி ணைந்து போரிடுவது போன்று நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து போரிடுங்கள். (36)'

அதே போன்று, பின்வரும் வசனத்தில் இடம்பெறும் 'அந்நாஸ்' என்ற வார்த்தை இணைவைப்பாளர்களை மட்டுமே குறிக்கும் என்பதைப் புரிந்துகொள்ளாமல் அது மனிதச் சமூகத்தில் உள்ள அனைவரையும் குறிக்கும் என்று விளங்கிக்கொள்கிறார்கள்:

'இது அல்லாஹ்வும் அவனது தூதரும் இணைவைப்பாளர்களை விட்டும் விலகிக்கொண்டார்கள் என்று மாபெரும் ஹஜ்ஜுடைய நாளில் மக்களுக்கு அல்லாஹ்விடமிருந்தும் அவனது தூதரிடமிருந்தும் செய்யப் படும் பிரகடனமாகும். (3)' பொதுவான இந்த வாசகத்தில் இடம்பெற் றுள்ள பின்வரும் விதிவிலக்கை அவர்கள் மறந்துவிடுகிறார்கள்: 'ஆனால், நீங்கள் ஒப்பந்தம்செய்துகொண்ட இணைவைப்பாளர்களில் உங்களுக்கு எவ்வித குறையும் வைக்காமலும் உங்கள் எதிரிகளில் யாருக்கும் உதவி செய்யாமலும் இருப்பவர்களைத் தவிர ... (4)'

எதிரிகளுக்கு உதவிசெய்து நம்மைக் கொலைசெய்வதை அனுமதிக் கப்பட்ட ஒன்றாகக் கருதும் குறிப்பிட்ட ஒரு சமூகத்தைத்தான் இது குறிக்கிறது என்பது தெள்ளத் தெளிவானது.

இவர்களை எதிர்த்துப் போரிடுவதால் நம்மீது எந்தக் குற்றமும் இல்லை.

ஆனாலும், இறுதியாக இடம்பெறும் வாசகம் மிக முக்கியமானது. வரம்புமீறுவோருக்குப் பாடம் கற்பிக்கும் பொருட்டுத் தொடுக்கப்படும் போரில் அதனோடு எந்த வகையிலும் தொடர்பில்லாத மக்களும் இருக்கின்றனர். அவர்கள் போரில் ஈடுபடுவதுமில்லை, போர்புரிய வேண்டும் என்று விரும்புவதுமில்லை. அவர்களுக்கு அடைக்கலமளித்து

பாதுகாப்பான இடத்தில் அவர்களை விட்டுவிட வேண்டும் என்று நபியவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள்:

இணைவைப்பாளர்களில் யாரேனும் உம்மிடம் பாதுகாப்பு கோரினால் அவர் இறைவாக்கைச் செவியுறும் பொருட்டு அவருக்குப் பாதுகாவலளிப்பீராக. பின்னர், பாதுகாப்பான அவரது இடத்தில் அவரைச் சேர்த்துவிடுவீராக. ஏனெனில், அவர்கள் அறியாத மக்களாக இருக்கிறார்கள். (6)

இந்த வசனத்தில் முன்வந்து தாக்குதல் தொடுப்பதற்கான ஆதாரம் எங்கிருக்கிறது?

இந்த அத்தியாயம் நிராகரிப்பாளர்கள் அனைவருக்கும் எதிராகத் தொடுக்கப்படும் போர்ப் பிரகடனம் என்று புரிந்துகொள்பவர்கள் எகிப்து, ஷாம், இறாக் என நீண்டு ரோமர்கள், பாரசீகர்கள் ஆகியோருக்கு எதிராக நீண்ட போர்களை ஆதாரமாகக் கொள்கின்றனர்.

இது தவறான புரிதலாகும். முஸ்லிம்கள் ரோம், மதாயின் ஆகிய பிரதேசங்களை நோக்கி நேரடியாகப் படையெடுத்திருந்தால் அவர்களின் இந்தப் புரிதல் சரியானதாக இருந்திருக்கும். ஆனால், அநியாயக்கார இந்த அரசுகள் தங்களுக்கு உரிமை இல்லாத நாடுகளையும் ஆக்கிரமித்துக் கொண்டு அங்குள்ளவர்களை இழிவாக நடத்திக்கொண்டிருந்தன.

நாடுகளையும் சமூகங்களையும் மீட்பதற்காகவும் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்காகவுமே அவற்றுக்கு எதிராகப் போர்த் தொடுக்கப்பட்டது.

சுதந்திரமடைந்த அந்த மக்களுக்கு இஸ்லாம் எடுத்துரைக்கப்பட்டது. மிக விரைவாகவே அவர்கள் இஸ்லாத்தில் ஐக்கியமானார்கள்.

சமாதானத்தை விரும்புபவர்கள், குற்றமற்றவர்கள் ஆகியோருக்கு எதிராக எந்த விதமான முன்னெடுப்புத் தாக்குதலையும் இந்த அத்தியாயம் கூறவில்லை. இதுகுறித்து இன்னும் தெளிவாக அறிந்துகொள்ள இந்த அத்தியாயத்தின் ஆரம்ப வசனங்களை மீண்டும் காணலாம்.

தன்னை எதிர்ப்பவர்கள் தங்களின் குற்றத்தை விட்டுத் திரும்பும் பொருட்டு அவர்களுக்கு நான்கு மாதகால அவகாசத்தை இஸ்லாம் வழங்கியது: 'ஆகவே, பூமியில் நான்கு மாதங்கள் நீங்கள் சுற்றித் திரியலாம். உங்களால் ஒருபோதும் அல்லாஹ்வைத் தோற்கடிக்க முடியாது என்பதையும் அல்லாஹ் நிராகரிப்பாளர்களை இழிவுபடுத்தியே தீருவான் என்பதையும் அறிந்துகொள்ளுங்கள். (2)'

நம்பிக்கை கொண்டவர்கள், இணைவைப்பாளர்களான அறபுகள் என அனைவரும் ஒன்றுகூடும் மாபெரும் ஹஜ்ஜுடைய நாளில் இந்த அவகாசத்துக்கான அறிவிப்புசெய்யப்பட்டது. யாருடன் ஒப்பந்தம் இருக்கிறது, யாருடன் ஒப்பந்தம் இல்லை என மிகத் தெளிவாக விவகாரம் தெளிவுபடுத்தப்பட்டது.

இன்னும் தெளிவுபடுத்தும் பொருட்டும் இணைவைப்பாளர்கள் மறைத்து வைத்திருப்பவற்றை வெளிப்படுத்தும் பொருட்டும் நமக்கு எதிராக முன்வைக்கப்படும் அவதூறுகள் அனைத்தையும் முறியடிக்கும் பொருட்டும் அத்தியாயம் மீண்டும் கூறுகிறது:

> இணைவைப்பாளர்களுக்கு அல்லாஹ்விடமும் அவனுடைய தூதரிடமும் எவ்வாறு உடன்படிக்கை இருக்க முடியும்? ஆனால், யாருடன் நீங்கள் மஸ்ஜிதுல் ஹறாமில் உடன்படிக்கை செய்தீர்களோ அவர்களைத் தவிர. அவர்கள் உங்களுடன் நேர்மையாக நடந்துகொள்ளும்வரை நீங்களும் அவர்களுடன் நேர்மையாக நடந்துகொள்ளுங்கள். (7)

ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதற்கு நாம் எந்த அளவு ஆர்வமாக உள்ளோம் என்பதைப் பாருங்கள். ஆனால், துரோகம் இழைப்பவர்களின் ஒப்பந்தங்களை நாம் எவ்வாறு பேண முடியும்? அவர்கள் நமக்கு அளித்த வாக்குறுதிகளைப் பேணவில்லையே?

> அவர்களுடன் எவ்வாறு உடன்படிக்கை இருக்க முடியும்? அவர்கள் உங்களை வென்றுவிட்டால் உங்களுக்கிடையே உள்ள உறவையோ உடன்படிக்கையையோ பொருட்படுத்த மாட்டார்கள். அவர்கள் தங்கள் வாய்ப்பேச்சுகளால் உங்களைத் திருப்திப்படுத்த முனைகிறார்கள். அவர்களின் உள்ளங்களோ மறுக்கின்றன. அவர்களில் பெரும்பாலோர் வாக்குமீறுபவர்களாகவே இருக்கிறார்கள். அவர்கள் அல்லாஹ்வின் வசனங்களை அற்ப ஆதாயத்துக்கு விற்று அவனுடைய பாதையைவிட்டு மக்களைத் தடுத்தார்கள். அவர்கள் செய்துகொண்டிருப்பது எவ்வளவு மோசமான காரியம்! அவர்கள் எந்த நம்பிக்கையாளரின் விசயத்திலும் உறவுமுறையையோ உடன்படிக்கையையோ பொருட்படுத்துவதில்லை. அவர்கள்தாம் வரம்பு மீறியவர்கள். (8-10)

நாம் வரம்புமீற மாட்டோம். வரம்புமீற எண்ணவும் மாட்டோம். இந்தப் பண்பை நாம் நமக்கு விரும்புவதில்லை.

சில முஸ்லிம்கள் போர்புரிய வேண்டும் என்ற கட்டளையை எண்ணி பதற்றம் கொண்டார்கள். தங்களின் எதிரிகள் தங்களைவிட வலிமை

யானவர்கள் என்றும் அதுதான் அவர்களைத் தங்களுக்கு எதிராகப் போரிடுவதற்கும் தங்கள்மீது அநியாயம் இழைப்பதற்கும் தூண்டுகிறது என்றும் எண்ணினார்கள்.

இந்த அச்சத்தைக் குர்ஆன் வெறுத்தது. அவர்களை எதிர்த்துப் போரிட வேண்டும் என்று முஸ்லிம்களுக்கு ஆர்வமூட்டியவாறு அது கூறியது: ‘உடன்படிக்கைக்குப் பின்னர் அவர்கள் தம் சத்தியங்களை முறித்துவிட்டு உங்கள் மார்க்கத்தைக் குறைகூறினால் அவர்கள் விலகிக்கொள்ளும் பொருட்டு நிராகரிப்பின் தலைவர்களுடன் போரிடுங்கள். அவர்களது சத்தியங்களுக்கு எவ்வித மதிப்பும் இல்லை. (12)’

பின்னர், மோசடி செய்யக்கூடியவர்களுக்கு, ஒப்பந்தங்களை மீறுபவர் களுக்குப் பாடம் கற்பித்தே ஆக வேண்டும் என்று முஸ்லிம்களை மீண்டும் ஊக்கப்படுத்தியது:

> தங்கள் வாக்குறுதிகளை முறித்துவிட்டு, தூதரை வெளியேற்ற துணிந்தவர்களுடன் நீங்கள் போர்புரிய வேண்டாமா? அவர்கள்தாம் போரை முதலில் ஆரம்பித்தார்கள். நீங்கள் அவர்களுக்கு அஞ்சுகிறீர்களா? நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்தால் அஞ்சு வதற்கு அல்லாஹ்வே மிகத் தகுதியானவன். (13)

வசனங்களைக் கவனித்துப்பார்க்கும்போது யாருடன் போர்புரியுமாறு கட்டளையிடப்பட்டுள்ளதோ அவர்கள் சமாதானம் விரும்புபவர்களோ ஒப்பந்தங்களை நிறைவேற்றுபவர்களோ அல்ல என்பது தெளிவாகிறது.

அவர்கள் முஸ்லிம்களுக்கு நீண்ட காலமாக மோசடிசெய்தார்கள். அவர்களின் உள்ளங்கள் முஸ்லிம்களுக்கு எதிரான கோபத்தால் நிரம்பிக் காணப்பட்டன. அவர்கள் முஸ்லிம்களுக்குப் பல்வேறு வகையான இழப்புகளை ஏற்படுத்தினார்கள்.

> அவர்களுடன் போரிடுங்கள். அல்லாஹ் உங்கள் கரங்களால் அவர் களைத் தண்டிப்பான். அவர்களை இழிவுபடுத்தி அவர்களுக்கு எதிராக உங்களுக்கு உதவிபுரிவான். நம்பிக்கையாளர்களின் உள்ளங்களையும் குளிரச்செய்வான். அவர்களுடைய உள்ளங்களின் கோபத்தைப் போக்கிடுவான் ... (14,15)

இந்த வசனங்களில், சமாதானத்தை விரும்பும் மக்களுக்கு எதிராகப் போர்த் தொடுக்க வேண்டும் என்பதற்கு ஏதேனும் ஆதாரம் இருக்கிறதா என்ன?

உண்மையில் இந்த அத்தியாயம் போர் குறித்த இஸ்லாத்தின் நிலைப் பாட்டையே மாற்றியது என்று கூறுவது வடிகட்டிய அறியாமையாகும்.

நம்முடன் போரிட்டவர்களுடன்தான் நாம் போரிட்டோம். நம்முடன் சமாதானமாகச் சென்றவர்களுடன் நாமும் சமாதானமாகத்தான் சென்றோம். இன்றும் நாம் அப்படித்தான் இருக்கிறோம். இழிவை ஏற்றுக் கொள்ளாமல் தெளிவாக எடுத்துரைப்பதையே நாம் நம்முடைய கொள்கையாகக் கொண்டுள்ளோம்.

இந்த அத்தியாயம் அருளப்படுவதற்கு முந்தைய இருபத்து மூன்று ஆண்டுகள்வரை சிலை வழிபாட்டை மேற்கொண்டிருந்த அறபுகள் தங்களை எதிர்த்தோருடன் மிக மோசமாகவே நடந்துகொண்டிருந்தார்கள். மக்காவில் இஸ்லாத்துக்கு எந்தவித சட்டபூர்வமான அங்கீகாரமும் வழங்கப்படாமல் இருந்தது. மதீனாவுக்குப் புலம்பெயர்ந்த பின்னர் முஸ்லிம்கள் தங்கள் எதிரிகளுடன் முப்பதுக்கு மேற்பட்ட சிறிய, பெரிய போர்களில் ஈடுபட்டார்கள்.

இந்தப் போர்களில் எத்தனை இணைவைப்பாளர்கள் கொல்லப்பட்டார்கள் என்பதை நீங்கள் அறிவீர்களா? இந்தப் போர்கள் அனைத்திலும் இருநூற்றுக்குக் குறைவான நிராகரிப்பாளர்களே கொல்லப்பட்டுள்ளார்கள். ஃபிரான்ஸில் தங்களை எதிர்த்த புரோட்டஸ்டன்டுகளைக் கொன்று குவித்த கத்தோலிக்கத் திருச்சபையின் கொலைவெறித் தாண்டவத்தோடு ஒப்பிடும்போது இது ஒன்றும் பெரிய எண்ணிக்கை இல்லை.

இருபத்து மூன்று வருடகாலமும் முஸ்லிம்கள் நிராகரிப்பாளர்களிடம் புரிந்துகொள்ளும் படியும் புரிந்துகொள்ளாவிட்டால் நீதி செலுத்தும் படியும் வேண்டிக்கொண்டிருந்தார்கள். பின்வரும் வசனத்தில் வெளிப்படும் உளப்பூர்வமான, நேசம் நிறைந்த கோரிக்கையைப் பாருங்கள்:

> ஆகவே, நீர் அவன் பக்கமே அழைப்பீராக. உமக்குக் கட்டளையிட்டபடி உறுதியாக இருப்பீராக. அவர்களின் மனஇச்சைகளைப் பின்பற்றாதீர். நீர் கூறும், ‘அல்லாஹ் அருளிய வேதத்தின் மீது நான் நம்பிக்கை கொண்டேன். உங்களிடையே நீதிசெலுத்துமாறு நான் பணிக்கப்பட்டுள்ளேன். அல்லாஹ்தான் எங்கள் இறைவனும் உங்கள் இறைவனும் ஆவான். எங்களுக்கு எங்களின் செயல்கள். உங்களுக்கு உங்களின் செயல்கள். எங்களுக்கும் உங்களுக்குமிடையே எந்தத் தர்க்கமும் இல்லை. அல்லாஹ் நம் அனைவரையும் ஒன்றுதிரட்டுவான். அவன் பக்கமே அனைவரும் திரும்ப வேண்டும்.’ (42:15)

ஆனாலும், இந்த அறிவுரைகள் எந்தப் பயனையும் அளிக்கவில்லை. ‘உங்களுக்கு உங்களின் மார்க்கம். எங்களுக்கு எங்களின் மார்க்கம்.’ என்ற

கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. நாம் அவர்களின் வாழ்க்கையை விரும்பி னோம். ஆனால், அவர்கள் நம்மைக் கொல்ல விரும்பினார்கள்.

இறுதியில் இதற்குத் தீர்வாக, முஸ்லிம்கள் அதிகாரம்பெற்றபிறகு தங்களின் எதிரிகளிடம் கூறினார்கள், 'எங்களின் பூமியை விட்டுவிடுங்கள். அல்லாஹ்வின் விசாலமான பூமியில் எங்கு வேண்டுமானாலும் செல் லுங்கள். இஸ்லாத்தினால் நீங்கள் நெருக்கடியை உணர்கிறீர்கள். முஸ் லிம்களுக்கு எதிராக உங்களால் இயன்ற சூழ்ச்சிகளையெல்லாம் செய்கி றீர்கள். அவர்களுக்குத் துன்பம் வர வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள். உங்களின் நிராகரிப்போடு நீங்கள் இருக்க அனுமதிக்கப்பட மாட்டீர்கள். நாங்கள் உங்களை ஒருபோதும் கொல்ல மாட்டோம். ஆனாலும், உங்களின் குழப்பங்களிலிருந்து எங்களைப் பாதுகாத்துக்கொள்ள விரும்புகிறோம். எங்களை விட்டுவிட்டு நீங்கள் விரும்பிய இடத்துக்குச் செல்லுங்கள்.'

இத்தோடு இன்னொரு விவகாரமும் இணைக்கப்பட்டது: 'இந்த வருடத்துக்குப் பிறகு இணைவைப்பாளர்களில் எவரும் கஅபாவை ஹஜ்செய்யவோ வலம்வரவோ கூடாது.'

இது புரிந்துகொள்ளத்தக்க விசயம்தான். கஅபாவில் அவர்கள் வணங் கிக் கொண்டிருந்த சிலைகள் அனைத்தும் உடைக்கப்பட்டுவிட்டனவே! வேறு எதற்காக அவர்கள் கஅபாவை வலம்வர வேண்டும்?

நிர்வாணமாக வலம்வருவது அருவருப்பான காரியங்களில் ஒன்று. அதனை எந்தக் கண்ணியமான மார்க்கமும் அனுமதிக்காது. சிலை வழி பாடுதான் இத்தகைய மிருகத்தனமான காரியங்களோடு இணைந்து போகும்.

ஆகவே, கண்ணியமான இந்த அத்தியாயம் கூறுகிறது:

> தங்களின் நிராகரிப்புக்குத் தாங்களே சாட்சிகளாக இருக்கும் இணை வைப்பாளர்களுக்கு இறையில்லங்களைப் பராமரிக்கும் உரிமை இல்லை. அவர்களின் செயல்கள் அனைத்தும் வீணாகிவிட்டன. அவர்கள் நிரந்தரமாக நரகத்தில் வீழ்ந்துகிடப்பார்கள். அல்லாஹ் வின் மீதும் மறுமைநாளின் மீதும் நம்பிக்கை கொண்டு, தொழு கையைக் கடைப்பிடித்து, ஸகாத்தையும் அளித்து, அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் அஞ்சாமல் இருப்பவர்கள்தாம் இறையில் லங்களைப் பராமரிக்கத் தகுதியுடையவர்கள் ... (17,18)

படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் இறைவன், இந்த அத்தியாயம் அருளப்பட்டு ஒரு வருடம், மூன்று மாதங்கள் கடந்த

*பிறகு தூதர் மரணித்துவிடுவார் என்பதை அறிவான். அவருக்குப் பிறகு தோழர்களை வழிகாட்டியின்றிக் காரிருளில் தத்தளிக்கவிடுவது இஸ்லாமிய அழைப்புக்கு உகந்ததன்று என்பதை அவன் அறிவான்.*

*ஒருபுறம் ரோமர்கள் பயம்காட்டிக்கொண்டிருக்க இணைவைப்பாளர்களும் தொடர்ந்து சளைக்காமல் முஸ்லிம்களுக்குத் தொல்லையளித்துக் கொண்டிருந்தார்கள். பறாஅத் என்ற அத்தியாயம் இணைவைப்பாளர்களுக்குப் பேரிடியாய் வந்திறங்கியது. அது, அவர்கள் உள்ளத்தில் மறைத்து வைத்திருந்த தீய எண்ணங்களையும் வெளிப்படுத்தியது.*

*நபியவர்கள் மரணித்துவிட்டார்கள் என்ற செய்தியைக் கேள்விப்பட்ட மாத்திரத்திலேயே அவர்கள் மீண்டும் திமிறி எழுந்தார்கள். தங்களுக்கான காலம் கனிந்துவிட்டதென எண்ணினார்கள். தாங்கள் இஸ்லாத்தை விட்டு வெளியேறிவிட்டதாகப் பகிரங்கமாக அறிவித்தார்கள்.*

*முஸ்லிம்கள் அபூபக்கரின் தலைமையில் அவர்களை எதிர்கொண்டார்கள். அவர்களை அடக்கி ஒடுக்கினார்கள். இறுதியில் இஸ்லாத்தின் கொடி நிலைநாட்டப்பட்டது: 'நுரையோ காய்ந்து காணாமல்போய் விடுகிறது. மக்களுக்குப் பயனளிப்பது மட்டுமே பூமியில் தங்கிவிடுகிறது … (13:17)'*

*பின்னர் முஸ்லிம்கள் இஸ்லாமிய அழைப்புக்குத் தடையாக இருந்த ரோமானியர்களை எதிர்கொண்டார்கள்.*

*மீண்டும் ஒருமுறை நம்முடைய கொள்கையைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.*

*நாம் வரம்புமீறி யாருடனும் போரிட மாட்டோம். இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும்படி யாரையும் நிர்ப்பந்திக்க மாட்டோம். மற்றவர்களுக்கு இஸ்லாத்தை எடுத்துரைப்பதே நம்முடைய பணி. ஏற்றுக்கொள்வதும் ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதும் அவர்களின் விருப்பம்: 'விரும்பியவர் நம்பிக்கை கொள்ளட்டும், விரும்பியவர் நிராகரிக்கட்டும். (18:29)'*

*யாரேனும் நிராகரிப்பைத் தேர்ந்தெடுத்துக்கொண்டால் அவர்களிடம் இவ்வாறுதான் கூறுவோம்: 'இது உங்களின் விருப்பம். எங்கள் புறத்திலிருந்து உங்களுக்கு எந்தத் தீங்கும் ஏற்படாது. நாங்கள் உங்களிடம் வேண்டுவதெல்லாம் நீங்கள் ஒருபோதும் எங்களின் அழைப்புக்கு இடையூறு ஏற்படுத்திவிடக் கூடாது. மற்றவர்கள் எங்களுக்குப் பதிலளித்தால் அவர்களைத் தடுக்கக் கூடாது.'*

*எங்களின் பார்வையில் இஸ்லாம்தான் அல்லாஹ்வுக்கும் அவனது அடியார்களுக்குமிடையே தொடர்பை ஏற்படுத்தும் தனித்துவம்மிக்க*

ஒரே வழிமுறை. அதனை அறியாதவர்களுக்கு எடுத்துரைக்கும்படி அல்லாஹ் எங்களுக்குக் கட்டளையிட்டுள்ளான். நாங்கள் மக்களை அதன் பக்கம் அழைக்கும்போது நீங்கள் அதற்குத் தடையாக வந்துவிடக் கூடாது. அல்லாஹ் யாருக்கேனும் வழிகாட்டினால் அவர்களை நீங்கள் தடுக்கக் கூடாது. இந்த நிபந்தனையை நீங்கள் ஏற்றுக்கொண்டால் அல்லாஹ் கூறுவதுபோன்று உங்களுக்கு எங்களால் எந்தத் தீங்கும் ஏற்படாது: 'ஆகவே, அவர்கள் உங்களைவிட்டு விலகி உங்களுடன் போர்புரியாமல் சமாதானத்தைக் கடைப்பிடித்தால் அவர்களுக்கு எதிராகச் செயல்படுவதற்கு அல்லாஹ் உங்களுக்கு அனுமதியளிக்க மாட்டான். (4:90)'

மாறாக, 'நாங்கள் உங்களை இஸ்லாத்தை எடுத்துரைக்கவிடாமல் தடுப்போம். எங்களை மீறி யாரும் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.' என்று நீங்கள் கூறினால் உங்களுக்கும் எங்களுக்கும் மத்தியில் போர் மூண்டுவிட்டது என்றே நாங்கள் கூறுவோம்.

உங்களுக்கு எதிராக அல்லாஹ் எங்களுக்கு உதவிசெய்தால் உங்களை நிராயுதபாணிகளாக ஆக்குவோம். நீங்கள் எங்களிடம் அடைக்கலம் பெற்று உங்களின் செல்வங்களோடு எங்களுடன் அமைதியாக வாழலாம். உங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்வோம். யாரையும் உங்களுக்குத் தீங்கிழைக்க விடமாட்டோம்.

எங்களின் நோக்கம் இதுதான், நீங்கள் எங்களைக் குறித்து தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். நாங்கள் உங்களைப் பாதுகாப்பதற்கு ஈடாக உங்களிடமிருந்தும் கொஞ்சம் செல்வங்களைப் பெற்றுக்கொள்வோம்.

அதுதான் ஜிஸ்யா. ஆட்சேபணைசெய்பவர்கள் இதனைச் சுற்றியே தங்களின் ஆட்சேபணைகளை அமைத்துக்கொள்கிறார்கள்.

இதுதான் ஜிஸ்யா என்னும் வரி விதிக்கப்பட்ட சூழல். நம்முடன் போரிடாமல் சமாதானமாக நடந்துகொண்டோரின் மீது இது விதிக்கப்படவில்லை. நம்முடன் போரிட்டு, நமக்கு எதிராக நம் எதிரிகளுக்கு உதவிசெய்தோரின் மீதுதான் இது விதிக்கப்பட்டது. ஜிஸ்யா குறித்த பின்வரும் வசனத்தைக் கவனித்துப்பார்ப்பவர் அல்லாஹ்வின் மீதும் மறுமைநாளின் மீதும் நம்பிக்கை கொள்ளாமல் பல வகையான பாவங்களில் ஈடுபட்டு, இறைத்தூதர்களின் வழிமுறைகள் அனைத்தையும் விட்டு விலகியவர்களின் மீதுதான் அது விதிக்கப்பட்டது என்பதை அறிந்துகொள்வார்:

> அல்லாஹ்வையும் இறுதிநாளையும் நம்பாமலும் அல்லாஹ்வும் அவனது தூதரும் விலக்கியவற்றை விலக்கிக்கொள்ளாமலும் சத்திய

*மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளாமலும் இருக்கும் வேதக்காரர்களுடன் அவர்கள் சிறுமையடைந்து ஜிஸ்யா என்னும் வரி கட்டும்வரை போரிடுங்கள். (29)*

*அதற்குப் பிறகு அவர்கள் வழிகாட்டும் ஒளியை அணைக்கவும் இருளைப் பரப்பவும் முனைவார்கள் என்ற அவர்களின் பண்புகளும் குறிப்பிடப்படுகின்றன: 'அல்லாஹ்வின் ஒளியைத் தம் வாய்களால் ஊதி அணைத்துவிட அவர்கள் நாடுகிறார்கள். அல்லாஹ்வோ தன் ஒளியைப் பரிபூரணப்படுத்தியே தீருவான். (32)'*

*அவர்களின் மதகுருமார்களும் துறவிகளும் மக்களின் செல்வங்களை உரிமையின்றி அநியாயமாக உண்டார்கள். மக்களை அல்லாஹ்வின் பாதையைவிட்டும் தடுத்தார்கள்.*

*ஜிஸ்யாவின் வரலாறு மிகுந்த கவனத்துக்குரியது. ஏனெனில், இஸ் லாத்தை அருகிலிருந்து அறிந்துகொள்ளும் சமூகங்கள் விரைவாகவே இஸ்லாத்தை ஏற்றுக்கொள்கின்றன. எகிப்திலும் ஈறானிலும் இன்னபிற பிரதேசங்களிலும் இப்படித்தான் நிகழ்ந்தது. எந்த அளவுக்கெனில், மக்கள் கூட்டம்கூட்டமாக இஸ்லாத்தில் நுழைந்ததால் ஜிஸ்யா என்னும் இந்த வரி ஒரு கட்டத்தில் முழுமையாக இல்லாமல் ஆக்கப்பட்டது.*

*இதைத்தான் இஸ்லாம் விரும்புகிறது. இறைத்தூதர் முஹம்மது நேர் வழி காட்டக்கூடியவராக அனுப்பப்பட்டாரே அன்றி வரிவசூல் செய்யக் கூடியவராக அனுப்பப்படவில்லை.*

❖ ❖ ❖

*ஹிஜ்ரீ ஒன்பதாம் ஆண்டு அபூபக்கர் தலைமையில் மக்கள் செய்த ஹஜ், ஹிஜ்ரீ பத்தாம் ஆண்டில் இடம்பெற்ற ஹஜ்ஜதுல் விதா என்று அழைக்கப்படும் பொதுவான ஹஜ் பயணத்திற்கு மிகச் சிறந்த அடித் தளமாக அமைந்தது. அந்தப் பயணத்தில் நபியவர்களே தலைவராக இருந்தார்கள்.*

*அது, இனி இணைவைப்பாளர்கள் ஹஜ்செய்ய வரக் கூடாது என்று ஹிஜ்ரீ ஒன்பதாம் ஆண்டு இடப்பட்ட கட்டளைக்குப் பிறகு முஸ்லிம்கள் மட்டுமே செய்த ஹஜ்ஜாக அமைந்தது. 'நம்பிக்கையாளர்களே, இணை வைப்பாளர்கள் அசுத்தமானவர்கள். ஆகவே, அவர்கள் இந்த ஆண்டுக்குப் பிறகு மஸ்ஜிதுல் ஹறாமின் அருகில் வரக் கூடாது. (28)'*

*இணைவைப்பாளர்களின் ஒப்பந்தங்கள் அனைத்தும் செல்லாதவையாக அறிவிக்கப்பட்டன. அந்த வருடத்துக்குப் பிறகு தங்களுடன் நியாயமான*

முறையில் பழிக்குப்பழி வாங்கப்படும் என்பதையும் அதில் எத்தகைய சமரசமும் இருக்காது என்பதையும் அவர்கள் அறிந்துகொண்டார்கள்.

இவ்வாறு சிலை வழிபாடு முடிவுக்கு வந்தது.

அதற்கு முன்னரே யூதர்களின் விவகாரம் ஒரு முடிவுக்கு வந்திருந்தது. அவர்களுடன் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான போர்கள் அவர் களை மிகவும் பலவீனப்படுத்திவிட்டன. அவற்றில் இறுதியானது ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு ஃகைபரில் நடந்த போராகும்.

பகைப்பதற்கும் பாவம்செய்வதற்கும் யூதர்களைத் தூண்டிய அவர் களின் இராணுவ பலம் ஒடுக்கப்பட்டபிறகு அவர்கள் தங்களின் இடங் களில் விவசாயம் செய்துகொண்டும் மதீனாவிலும் இன்னபிற இடங் களிலும் வியாபாரம் செய்துகொண்டும் நிலைத்திருந்தார்கள்.

அவர்களின் இராணுவ பலம் முறியடிக்கப்பட்டபிறகு அவர்கள் இழிவு படுத்தப்பட்டார்களா? அல்லது அநீதி இழைக்கப்பட்டார்களா?

நிச்சயமாக இல்லை. அவர்கள் தங்களுக்கான தனிப்பட்ட சுதந்திரத் தைப் பெற்றே இருந்தார்கள். அதன் நிழலில்தான் யூத வியாபாரிகளில் ஒருவரால் நபியவர்களின் கவசத்தையே அடமானம்பெற முடிந்தது.

கிறிஸ்தவக் குழுக்கள் மதீனாவுக்கு வந்துகொண்டுதான் இருந்தன. அதற்கு முன்னர் அவர்கள் மக்காவிலும் புதிய வஹீயைக் கேட்டுக் கொண்டுதான் இருந்தார்கள். அவர்களில் சிலர் இஸ்லாத்தை ஏற்றுள் ளார்கள். சிலர் இஸ்லாத்தை நிராகரித்தும் ஈசாவின் கடவுள் தன்மைக்கு ஆதரவாக வாதிட்டும் இருக்கிறார்கள்.

யமனிலிருந்து வந்த கிறிஸ்வர்களையோ இன்னபிற இடங்களிலிருந்து வந்தவர்களையோ இஸ்லாம் தனக்கு ஆபத்தானவர்களாகக் காண வில்லை. மாறாக, அறபு தீபகற்பத்தின் வடக்குப் பகுதியில் இஸ்லாமிய அழைப்புக்குத் தடையாக இருந்த ரோமானிய அரசையே அது தனக்கு எதிரியாகக் கண்டது.

இங்கு இரண்டு வெவ்வேறான விசயங்கள் கவனத்துக்குரியன. ஒன்று, இஸ்லாம் கிறிஸ்தவத்தைத் தனக்கு நண்பனாகக் கண்டது. அதனால்தான் நபியவர்கள் மக்காவில் ஒடுக்கப்பட்ட பலவீனர்களை ஹபஷாவை நோக்கி -அங்குள்ள அரசன் அநீதி இழைக்க மாட்டான் என்ற நம்பிக்கையில்- புலம்பெயருமாறு கட்டளையிட்டார்கள்.

இந்தப் பூமியில் நபியவர்கள் மட்டுமே வஹீ அருளப்படுபவராக இருந்த சூழலில், 'ரோமர்கள் தோல்விக்குப் பிறகு மீண்டும் வெற்றி பெறுவார்கள்.' என்ற முன்னறிவிப்பை வெளியிட்டார்கள்.

இரண்டாவது விசயம், இவ்வாறு கிறிஸ்தவத்துடன் நட்புறவாக இருந்தபோதிலும் அது சத்தியத்தைத் தெளிவுபடுத்துவதற்கும் கிறிஸ் தவர்களின் திரித்துவத்தை, ஈசா, ஜிப்ரீல் தொடர்பான தவறான கடவுள் கொள்கையை நிராகரிப்பதற்கும் தடையாக அமையவில்லை. ஈசாவும் ஜிப்ரீலும் நல்லடியார்கள் என்பதை இஸ்லாம் தெளிவுபடுத்தியது.

மக்காவிலும் மதீனாவிலும் இறங்கிய வஹீ இந்த உண்மையைத் தெளிவுபடுத்தியது.

ஈசாவைப் பின்பற்றுபவர்கள் தங்களின் கொள்கைகளைச் சரிசெய்யு மாறும் அவர்கள் அல்லாஹ் ஒருவனையே வணங்க வேண்டும் என்றும் ஹலாலாகவும் ஹறாமாகவும் ஆக்கும் உரிமையை மதகுருமார்களிட மிருந்து பறித்து அவன் ஒருவனுக்கு மட்டுமே அளிக்குமாறும் அது அவர்களிடம் வேண்டியது.

பறாஅத் அத்தியாயத்தில் இறுதியாக இந்த விவகாரங்கள் குறித்தும் அருளப்பட்டன. ஹிஜ்ரீ ஒன்பதாம் ஆண்டே இந்த வசனங்கள் மக்களிடம் ஓதிக்காட்டப்பட்டன:

> அவர்கள் அல்லாஹ்வைத் தவிர தங்கள் மதகுருக்களையும் துறவி களையும் மர்யமின் மகன் மசீஹையும் கடவுள்களாக ஆக்கிக் கொண்டார்கள். ஆனால், அவர்கள் ஒரே இறைவனையே வணங்க வேண்டும் என்றுதான் கட்டளையிடப்பட்டுள்ளார்கள். அவனைத் தவிர வணக்கத்துக்குரியவன் வேறு இல்லை. அவர்களின் இணை வைப்பைவிட்டும் அவன் தூய்மையானவன். (31)

ஹலாலாகவும் ஹறாமாகவும் ஆக்கும் உரிமையை மதகுருமார்களுக்கு அளிப்பதை இஸ்லாம் இணைவைப்பின் ஒரு வகையாகக் கண்டது.

இஸ்லாத்தில் அல்லாஹ் மட்டுமே வணக்கத்துக்குத் தகுதியான இறைவன். அவன் யாரையும் பெறவுமில்லை. யாராலும் பெறப்படவு மில்லை. அவனுக்கு இணையாக யாரும் இல்லை. அவனே அடியார்கள் அனைவரையும் ஆட்சி செய்யக்கூடியவன்.

ரோமானிய அரசு இஸ்லாத்துக்கு எதிராகத் தங்களின் வாசல்களை யெல்லாம் அடைத்துக்கொண்டது. அறபு தீபகற்பத்தில் தன்னை நிலை நிறுத்திக்கொள்ள போர்புரியும் கட்டாயத்துக்கு இஸ்லாம் தள்ளப்பட்டது.

இஸ்லாம் அழகிய முறையில் மக்களை அழைப்பதன் மூலமே ஒரு சமூகத்தைக் கட்டமைக்கிறது. அது யாரையும் கட்டாயப்படுத்துவதில்லை.

சத்தியத்தின் பக்கம், நன்மையின் பக்கம் அழைத்தவாறு ஒரு சமூகம் இருக்க வேண்டும் என்று இஸ்லாம் விரும்புகிறது: 'மக்களை நன்மையின் பக்கம் அழைக்கக்கூடிய ஒரு கூட்டம் உங்களிடையே கண்டிப்பாக இருக்க வேண்டும். அவர்கள் நன்மைபுரியும்படி தூண்ட வேண்டும், தீமையை விட்டுத் தடுக்க வேண்டும். அவர்கள்தாம் வெற்றியாளர்கள். (3:104)'

ஆம். நாம் மற்றவர்களை இஸ்லாத்தின் பக்கம் அழைத்துக் கொண்டே இருப்போம். ஆனால், அவர்களில் யாரையும் நம் விருப்பத்துக்கு இணங்கு மாறு கட்டாயப்படுத்த மாட்டோம்.

நாம் சத்திய வார்த்தையையே விரும்பினோம். ஆனால், ரோமானியர் அதனை நிராகரித்தார்கள். அதனால்தான் அவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராகப் பெரும் படைகளைத் திரட்டிக்கொண்டு தபூக் களத்துக்கு வந்தார்கள்.

இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்றால் ரோமானிய திருச்சபை ஈசா ஒரு படைப்புதான் என்பதை ஏற்றுக்கொள்ள மறுத்து அவர்தான் இறைவன் என்று கூறியது. கிழக்கே எகிப்தில் ஈசா கடவுள் தான் என்பதை ஏற்றுக்கொள்ள மறுத்த தம் கிறிஸ்தவ சகோதரர்களையே கொன்றுகுவித்தது.

அப்படிப்பட்டவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வார்களா என்ன? தங்கள் சகோதரர்களையே கொலைசெய்தவர்கள் முஸ்லிம்களை விட்டு வைப்பார்கள் என்று என்ன நிச்சயம்?

உண்மையில் ஈமானிய சுதந்திரத்துக்காகவே இஸ்லாம் போரிட்டது. அது வெற்றிகொண்ட எகிப்து, ஷாம் ஆகிய பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு மார்க்கரீதியான சுதந்திரத்தை வழங்கியது.

ஆகவேதான் நபியவர்கள் ரோம அரசு ஏற்படுத்திய அந்தத் தடைகளை அகற்றுவதற்கு மிகுந்த முக்கியத்துவம் வழங்கினார்கள். முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து ரோம அரசை எதிர்கொள்ள வேண்டும் என்று கட்டளையிட்டார்கள். ஏனெனில், அந்தத் தடைகளால் இஸ்லாத்தின் எதிர்காலம் கேள்விக்குள்ளாக்கப்பட்டிருந்தது.

ரோம அரசுடன் அது போர்புரிந்தபோது ரோம்தான் அச்சமயத்தில் உலகின் மிகப் பெரிய வல்லரசாக இருந்தது. அவர்கள் பாரசீகர்களைத் தோற்கடித்து தங்களுக்கெனத் தனித்துவமான ஓர் இடத்தை நிறுவியிருந் தார்கள்.

அதனால்தான் பலவீனர்களும் நயவஞ்சகர்களும் ரோம அரசுடன் போர் என்ற செய்தியைக் கேள்விப்பட்ட மாத்திரத்திலேயே நடுங்க ஆரம் பித்தார்கள்.

முஹம்மது அல்லாஹ்வுடன் தொடர்பற்றவராக இருந்திருந்தால் நிச்சயம் இதுபோன்ற ஒரு தாக்குதலுக்கு முன்வந்திருக்க மாட்டார்.

அத்தியாயத்தின் மீதமுள்ள பகுதி நயவஞ்சகர்களை, தடுமாற்றம் கொண்டவர்களை அம்பலப்படுத்தியவாறு, நம்பிக்கையாளர்களை ஊக்கப்படுத்தியவாறு கடந்துசெல்கிறது.

இந்த அத்தியாயத்தின் இரண்டாவது பகுதி பின்வருமாறு தொடங்குகிறது:

> நம்பிக்கையாளர்களே, உங்களுக்கு என்ன ஆயிற்று? அல்லாஹ்வின் பாதையில் புறப்படுங்கள் என்று உங்களிடம் கூறப்பட்டால் உலகியல் இன்பங்களில் சிக்கிக்கொள்கிறீர்களே? மறுமையைவிட இவ்வுலக வாழ்வில் திருப்தியடைந்துவிட்டீர்களா? மறுமைக்கு முன் இவ்வுலக வாழ்வின் இன்பங்கள் அனைத்தும் அற்பமானவையே. நீங்கள் புறப்படவில்லையெனில் அவன் உங்களுக்குத் துன்புறுத்தும் வேதனையை அளிப்பான். உங்களுக்குப் பதிலாக வேறொரு சமூகத்தைக் கொண்டுவருவான். நீங்கள் அவனுக்கு எவ்வித தீங்கையும் இழைக்க முடியாது ... (38,39)

அத்தியாயம் இணைவைப்பாளர்கள், மோசடி செய்யும் யூதர்கள் ஆகியோரை அகற்றிய பிறகு நயவஞ்சகர்களையும் அம்பலப்படுத்திக் கொண்டே செல்கிறது.

வெளியில் உள்ள எதிரிகள் ஒடுக்கப்பட்டபின்னர் சமூகத்தில் உள்ளிருந்து அரிக்க நினைக்கும் எதிரிகளிடமிருந்தும் இஸ்லாம் தன்னைக் காத்துக்கொள்கிறது.

இந்த அத்தியாயம் நபியவர்களுக்குப் பிறகு இந்த மார்க்கத்தைச் சுமப்பதற்காகச் சமூகத்தைத் தயார்செய்கிறது. வெளியிலிருந்தும் உள்ளிருந்தும் அதனை அழிக்க நினைக்கும் எதிரிகளிடமிருந்து அதனைப் பாதுகாக்கிறது. ரோமர்களுடனான இந்தப் போர் அவர்களை உரசிப் பார்க்கும் உரைகல்லாக இருந்தது.

அவசியமான இந்தச் சமயத்தில் போருக்குச் செல்லாமல் பின்தங்கியவர்களும் உதவி தேவைப்படும் இந்தச் சமயத்தில் மோசடி செய்தவர்களும் அவர்களில் வெளிப்படத்தான் செய்தார்கள்.

❖ ❖ ❖

சத்தியவாதிகள் தங்களின் நேசத்தை அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித்தாக்கினார்கள். மற்றவர்கள் தங்கள் தெய்வங்களை நேசிப்பதை விடப்

*பல மடங்கு அவர்கள் அல்லாஹ்வை நேசித்தார்கள்: ‘மனிதர்களில் சிலர் அல்லாஹ்வைத் தவிர மற்றவர்களை அவனுக்கு இணையாக்குகிறார்கள். அல்லாஹ்வை நேசிப்பதுபோன்றே அவர்களையும் நேசிக்கிறார்கள். ஆனால், நம்பிக்கையாளர்கள் அனைத்தையும்விட அல்லாஹ்வையே அதிகமாக நேசிக்கிறார்கள் ...* (2:165)’

*நம்பிக்கையாளர்களும் நிராகரிப்பாளர்களும் மோதிக்கொண்ட இந்தப் போரில் அவர்கள் உள்ளபடியே அப்பட்டமாக வெளிப்பட்டார்கள். நம்பிக்கையாளர்கள் தங்களால் இயன்ற அனைத்தையும் இந்தப் போரில் செலவுசெய்தார்கள். ஆகவேதான், அத்தியாயத்தில் பின்வருமாறு வசனம் இடம்பெற்றுள்ளது:*

> *நீர் கூறும், ‘உங்கள் தந்தையரும் பிள்ளைகளும் சகோதரர்களும் மனைவியரும் குடும்பத்தினரும் நீங்கள் ஈட்டிய செல்வங்களும் நஷ்டமாகிவிடுமோ என்று நீங்கள் அஞ்சுகின்ற வியாபாரமும் நீங்கள் விரும்புகின்ற உங்கள் வீடுகளும் அல்லாஹ்வை விடவும் அவனது தூதரைவிடவும் அவனது பாதையில் ஜிஹாது செய்வதை விடவும் உங்களுக்குப் பிரியமானதாக இருந்தால் அல்லாஹ்வின் கட்டளையை எதிர்பாருங்கள். கீழ்ப்படியாத மக்களுக்கு அல்லாஹ் நேர்வழி காட்டுவதில்லை.’* (24)

*ரோமர்களுடன் போரிட வேண்டும் என்று முடிவுசெய்யப்பட்டது. அப்போதிருந்த சூழ்நிலையின் சில அம்சங்கள்:*

1. *அச்சமயத்தில் ரோம அரசுதான் உலகின் மாபெரும் வல்லரசாக விளங்கியது. பாரசீக அரசைத் தோற்கடித்தபிறகு அது தலைமைப் பொறுப்பை முழுமையாகக் கைப்பற்றிக்கொண்டது.*

2. *முஸ்லிம்கள் அறபுகளில் சிறுபான்மையினராக இருந்தார்கள். அவர்களைத் தவிர மற்ற அறபுகள் அனைவரும் ரோம அரசு அல்லது பாரசீக அரசின் கட்டுப்பாட்டில்தான் இருந்தார்கள்.*

3. *முஸ்லிம்கள் குறிப்பிட்ட அளவே பலம் பெற்றிருந்தார்கள். அவர்கள் முஅத்தா போரில் அதனைச் சோதித்துப் பார்த்தார்கள். ஆனாலும், எந்தப் பயனும் ஏற்படவில்லை.*

4. *இஸ்லாமியச் சமூகத்தில் நயவஞ்சர்கள் குழப்பங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். தோற்றுப்போன சிலை வழிபாட்டாளர்களும் சமூகத்தில் குழப்பங்களை ஏற்படுத்தும் சந்தர்ப்பங்களுக்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள்.*

ஆனாலும் அல்லாஹ், முஸ்லிம் சமூகம் தம்முடைய நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு அதனைத் தூய்மைப்படுத்த விரும்பினான். அது தன் பலத்தை உணரவும் எவ்வித தடுமாற்றமுமின்றிக் கசடுகளை உதிர்த்து விடவும் இந்த அத்தியாயத்தை அருளினான்.

போரைவிட்டுப் பின்தங்கும் முஸ்லிம்களை அது கடுமையாகக் கண்டித்தது:

நம்பிக்கையாளர்களே, உங்களுக்கு என்ன ஆயிற்று? அல்லாஹ்வின் பாதையில் புறப்படுங்கள் என்று உங்களிடம் கூறப்பட்டால் உலகியல் இன்பங்களில் சிக்கிக்கொள்கிறீர்களே? மறுமையைவிட இவ்வுலக வாழ்வில் திருப்தியடைந்துவிட்டீர்களா? மறுமைக்கு முன் இவ்வுலக வாழ்வின் இன்பங்கள் அனைத்தும் அற்பமானவையே. (38)

சோம்பேறிகள், கோழைகள் சொல்லக்கூடிய பொய்யான காரணங்களை அது முழுமையாக நிராகரித்தது:

அல்லாஹ்வின் மீதும் மறுமைநாளின் மீதும் நம்பிக்கை கொண்டவர்கள் தம் செல்வங்களாலும் உயிர்களாலும் அல்லாஹ்வின் பாதையில் போரிடாமல் இருக்க அனுமதி கோர மாட்டார்கள். அல்லாஹ் இறையச்சமுடையோரை நன்கறிந்தவன். அல்லாஹ்வின் மீதும் மறுமைநாளின் மீதும் நம்பிக்கை கொள்ளாமல் உள்ளங்களில் சந்தேகங்களை உடையவர்கள்தாம் உம்மிடம் அனுமதி கோருவார்கள். அவர்கள் தம் சந்தேகங்களிலேயே தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். (44,45)

அத்தியாயத்தின் இறுதியில், போருக்குச் செல்லாமல் பின்தங்கி, பொய் காரணங்கள் கூறியோர் படம்பிடித்துக் காட்டப்படுகிறார்கள்:

நாட்டுப்புற அறபியர்களில் சிலர் தங்களுக்கு அனுமதியளிக்கப்பட வேண்டும் என்பதற்காகப் பொய் காரணங்கள் கூறிக்கொண்டு வந்தார்கள். அல்லாஹ்விடமும் அவனுடைய தூதரிடமும் பொய் கூறியோர் பின்தங்கிவிட்டார்கள். அவர்களில் நிராகரித்தோரை விரைவில் வதைக்கும் வேதனை வந்தடையும். (90)

ரோமர்களுக்கு எதிரான இந்தப் போரில் பின்தங்கியோரில் பெரும்பாலோர் கோழைகள், நம்பிக்கையில் குறைபாடுடையோர், இன்பங்களுக்கு அடிமையானோர் ஆகியோராவர்.

இதில் வேடிக்கை என்னவென்றால், அவர்களில் சிலர் ரோமப் பெண்களைக் கண்டால் தங்களைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாது

*என்றும் அல்லாஹ்வின் தூதர் தங்களுக்குப் பொறுப்பெடுத்துக் கொண்டால் தாங்கள் புறப்பட்டுவரத் தயார் என்றும் கூறியதுதான்:*

> *'எனக்கு அனுமதி தாரும். என்னைக் குழப்பத்தில் ஆழ்த்திவிடாதீர்.' என்று கூறுவோரும் அவர்களில் இருக்கிறார்கள். அறிந்து கொள்ளுங்கள். அவர்கள் முன்னரே குழப்பத்தில் வீழ்ந்துவிட்டார்கள். நரகம் நிராகரிப்பாளர்களைச் சூழ்ந்துள்ளது.* (49)

*நயவஞ்சகர்களில் பெரும்பாலோர் உள்ளத்தில் இஸ்லாத்தை வெறுத்துக் கொண்டிருந்தார்கள். முஸ்லிம்கள் தோற்க வேண்டும் என்றே அவர்கள் ஆசை கொண்டிருந்தார்கள். இந்த உணர்வுகளை மறைத்தவாறு அவர்கள் முஸ்லிம்களைப் பார்த்து புன்னகை பூத்துக்கொண்டிருந்தார்கள்.*

*அல்லாஹ்வின் பாதையில் போரிடும் போர்வீரர்கள் வெற்றியையோ தோல்வியையோ சந்திப்பது இயல்புதான். அந்த நயவஞ்சகர்கள் தொடர்பாகத்தான் பின்வரும் வசனம் அருளப்பட்டது:*

> *உமக்கு ஏதேனும் நன்மை ஏற்பட்டால் அது அவர்களை வருத்தமுறச் செய்கிறது. உமக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டால், 'நாங்கள் முன்னரே எங்களைக் காத்துக்கொண்டோம்.' என்று கூறி மகிழ்ச்சியடைந்தவர்களாகத் திரும்புகிறார்கள். நீர் கூறும், 'அல்லாஹ் எங்களுக்கு விதித்தது மட்டுமே எங்களை வந்தடையும். அவனே எங்களின் அதிபதி. நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வையே முழுமையாகச் சார்ந்திருக்க வேண்டும்.'* (50,51)

*கடினமான சூழலில் நடைபெற்ற இந்தத் தபூக் போர் நயவஞ்சகர்களை அப்பட்டமாக வெளிப்படுத்திக் காட்டியது. அவர்கள் உள்ளத்தில் மறைத்துவைத்திருந்த விசயங்களெல்லாம் வெளிப்பட்டன. முஸ்லிம் சமூகம் அவர்களை உள்ளபடியே கண்டுகொண்டது.*

*இவ்வாறு அவர்கள் வெளிப்படுவது முஸ்லிம்களுக்கு மிகவும் அவசியமான ஒன்றாக இருந்தது. அதுவும் குறிப்பாக, நபியவர்கள் அவர்களைப் பிரிந்துசெல்லக்கூடிய இந்தச் சூழலில்.*

*நயவஞ்சகம் சமூகத்தை உள்ளிருந்து அரிக்கும் நோய். நயவஞ்சகர்கள் ஆதிக்கம்செலுத்தும் சமூகம் எவ்வளவுதான் பெரும் செல்வங்களைப் பெற்றிருந்தாலும் அது வெற்றியடையாது.*

> *அவர்களின் செல்வங்களும் பிள்ளைகளும் உம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட வேண்டாம். அவற்றின் மூலம் அவர்களை இவ்வுலக வாழ்வில் தண்டித்துவிடவும் நிராகரித்த நிலையிலேயே அவர்களின் உயிர்கள் பிரிந்துவிடுவதையுமே அல்லாஹ் நாடுகிறான்.* (55)

இந்த அத்தியாயம் நயவஞ்சகர்களின் பண்புகளை அப்படியே படம் பிடித்துக் காட்டியது. அவர்கள் தூதரிடம் செல்வங்கள் வந்தால் அவற்றை அடைய வேண்டும் என்று ஆசை கொள்கிறார்கள். அவற்றிலிருந்து வழங்கப்பட்டால் திருப்தியடைகிறார்கள். இல்லையெனில் கோபம் கொள்கிறார்கள். அவர்களின் திருப்தியும் கோபமும் அவர்களின் தனிப் பட்ட இலாபங்களை அடிப்படையாகக் கொண்டே அமையும்: 'அவர் களில் சிலர் தர்மங்களைப் பங்கீடுசெய்யும் விசயத்தில் உம்மைக் குறை கூறுகிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்பட்டால் திருப்தியடைகிறார்கள். அவ்வாறு கொடுக்கப்படவில்லையெனில் கோபம் கொள்கிறார்கள். (58)'

சில நயவஞ்சகர்கள் மிகவும் இழிவான ஒரு வழிமுறையைப் பின் பற்றினார்கள். அவர்கள் தங்களுக்குள் கூறிக்கொண்டார்கள், 'தூதரைக் குறித்து நாம் விரும்பியதைக் கூறுவோம். பின்னர், நாம் அவரிடம் சென்று நாங்கள் அவ்வாறு கூறவில்லை என்று சத்தியமிட்டுக் கூறுவோம். அவர் நாம் கூறுவதை ஏற்றுக்கொள்வார்.'

அவர்கள் தூதரின் நற்பண்பை, விவாதிக்க அவர் விரும்பாததைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டார்கள்:

> 'அவர் எல்லாவற்றுக்கும் செவிகொடுக்கக்கூடியவராக இருக்கி றார்' என்று கூறி தூதரைத் துன்புறுத்துபவர்களும் அவர்களில் பலர் இருக்கிறார்கள். அதற்கு நீர் கூறும், 'அவ்வாறு அவர் செவி கொடுப்பது உங்களுக்குத்தான் நல்லது. அவர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டு நம்பிக்கையாளர்களை நம்புகிறார். உங்களில் நம்பிக்கை கொண்டோருக்கு அருளாகவும் இருக்கிறார்.' அல்லாஹ் வின் தூதருக்குத் தொல்லையளிப்போருக்கு வதைக்கும் வேதனை உண்டு. (61)

நயவஞ்சகர்கள் தங்களுக்கான உற்ற நண்பர்களையும் பெற்றிருந்தார்கள். அவர்களின் சபைகளுக்குச் சென்று நயவஞ்சகர்கள் பழகிக்கொண்டும் ஆறுதல் பெற்றுக்கொண்டும் இருந்தார்கள்.

இந்த ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும் நயவஞ்சகர்கள் வெளிப்படவில்லை. மாறாக, பல்வேறு சந்தர்ப்பங்களும் அனுபவங்களுமே அவர்களை ஒன்றி ணைத்துள்ளன.

அவர்கள் அதிகரித்துக்கொண்டும் குறைந்துகொண்டும் இருந்தார்கள். ஆனாலும், அவர்களின் அணி குழப்பங்களை ஏற்படுத்திக் கொண்டும் முஸ்லிம்களுக்கு ஏதேனும் துன்பம் நேராதா என்று எதிர்பார்த்துக் கொண் டும் இஸ்லாத்தையும் தூதரையும் வெறுத்துக்கொண்டும் நிலைத்திருக்கவே செய்தது.

*திருக்குர்ஆன் பல்வேறு அத்தியாயங்களில் அவர்களால் ஏற்படும் ஆபத்துகள்குறித்து எச்சரிக்கைசெய்தது. ஆனாலும், அத்தவ்பா என்று அழைக்கப்படும் இந்த அத்தியாயம் அவர்களின் அடையாளங்களை எடுத்துரைத்து அவர்கள் அனைவரையும் உள்ளபடியே தோலுரித்துக் காட்டியது.*

*இவையனைத்துக்கும் காரணம், விவகாரம் இஸ்லாத்தின் எதிர்காலத் தோடு தொடர்புடையது என்பதேயாகும். ரோமர்களுடன் மேற்கொண்ட போர் சாதாரண விளைவுகளை மட்டும் கொண்டதல்ல. ஒருவேளை முஹம்மது பலவீனப்பட்டிருந்தால் அவரது எதிரிகள் கஅபாவைத் தகர்த்திருப்பார்கள். வேதத்தை அழித்திருப்பார்கள். தவ்ஹீது என்னும் ஓரிறைக் கொள்கை மறைந்திருக்கும்.*

*முஹம்மதும் அவரது படையினரும் ஒருபோதும் திரும்பிவர மாட்டார்கள், ரோம அரசு அவர்களை விழுங்கிவிடும் என்றே இணைவைப் பாளர்களும் நயவஞ்சகர்களும் எண்ணினார்கள்.*

*முஹம்மது சிலை வழிபாட்டாளர்களையும் யூதர்களையும் வென்றி ருந்தாலும் அவரால் ரோம அரசை எதிர்த்துப் போரிட்டு வெற்றிபெற முடியாது என்றே அவர்கள் எண்ணினார்கள்.*

*ஆனாலும், இங்கு இறைவிதி செயல்பட்டே தீரும் என்பதையும் வஹீயை அருளிய இறைவன் அதற்கு உதவிசெய்தே தீருவான் என்பதை யும் அவர்கள் அறிந்திருக்கவில்லை.*

> அவனே தன் தூதரை நேர்வழியுடனும் சத்திய மார்க்கத்துடனும் அனுப்பிவைத்தான், ஏனைய அனைத்து மார்க்கங்களை விட அதனை மேலோங்கச்செய்வதற்காக. அது இணைவைப்பாளர் களுக்கு எவ்வளவு வெறுப்பானதாக இருந்தாலும் சரியே. (33)

*ரோமர்களுடான இந்தப் போரில் நயவஞ்சகம் அதன் உச்சத்தை அடைந்தது. முஸ்லிம்கள் யாருடைய உதவியுமின்றிக் கைவிடப்படு வார்கள் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், சத்தியத்தின் உதவி யாளர்கள் உறுதியாக நின்றார்கள். அல்லாஹ்வுக்காகத் தங்களால் இயன்ற அனைத்தையும் அர்ப்பணம்செய்தார்கள்.*

> *அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டு, அவனுடைய தூதருடன் இணைந்து அல்லாஹ்வின் பாதையில் போரிடுங்கள் என்று கூறும் ஏதேனும் அத்தியாயம் அருளப்பட்டால் அவர்களில் வசதி படைத் தோர் உம்மிடம், 'எங்களை விட்டுவிடும். பின்தங்கியிருப்போருடன்*

*நாங்களும் தங்கிவிடுகிறோம்.' என்று அனுமதி கோருகிறார்கள். வீட்டில் தங்கியிருக்கும் பெண்களுடன் சேர்ந்து தங்கிவிடவே அவர்கள் விரும்பினார்கள். அவர்களது உள்ளங்களின் மீது முத்திரை யிடப்பட்டுவிட்டது. ஆகவே, அவர்கள் எதையும் புரிந்துகொள்ள மாட்டார்கள். ஆனால், தூதரும் அவருடன் நம்பிக்கை கொண்ட வர்களும் தம் செல்வங்களாலும் உயிர்களாலும் அல்லாஹ்வின் பாதையில் போரிட்டார்கள். அவர்களுக்குத்தான் நன்மைகள் இருக் கின்றன. அவர்கள்தாம் வெற்றியாளர்கள்.* (86-88)

இதற்கு முன்னர் இணைவைப்பை அழித்ததுபோன்று இப்போது நயவஞ்சகத்தை அழிப்பதற்கான நேரம் வந்துவிட்டது.

இஸ்லாமியச் சமூகத்தின் உறுதியான பாகங்கள் இணைந்து உறுதியற்ற பாகங்களை உதிர்த்துவிட்டன. அதற்குப் பிறகு அதனால் எவ்வித தடையும் இடையூறுமின்றி அமைதியாகப் பயணிக்க முடிந்தது.

❖ ❖ ❖

ஹிஜ்றத்துக்குப் பிறகு இஸ்லாமிய அரசின் வளர்ச்சியோடு நயவஞ் சகமும் வெளிப்பட்டது. காரணம், இஸ்லாத்தின் வருகையால் சூழல் முழுமையாக மாறியது. அதுவரை ஆட்சிக்கு வரலாம் என்று ஆசை கொண்டிருந்தவர்களின் ஆசையில் அது பேரிடியாய் இறங்கியது. அதே போன்று, புதிதாய் வந்த ஈமானும் அது பரப்பிய நற்பண்புகளும் சிலை வழிபாட்டை விரும்பியவர்களைத் தோற்கடித்தன. அவர்கள் பல்வேறு அடிப்படையான அம்சங்களுக்கிடையே தடுமாறத் தொடங்கி னர்.

ஆயினும் இஸ்லாம், பொறுமையினாலும் நற்பண்புகளினாலும் விவ காரங்களை அணுகியது. தீயவர்கள் திருந்துவதற்கும் வரம்புமீறுபவர்கள் திரும்புவதற்கும் அது கால அவகாசங்களை வழங்கியது.

ஆனாலும் நயவஞ்சகர்கள் தங்களின் செயல்பாடுகளை மாற்றிக் கொள்ளவில்லை. அவர்களின் குழப்பங்கள் இன்னும் அதிகரித்துக் கொண்டே சென்றன. மதீனாவில் அருளப்பட்ட பல அத்தியாயங்கள் அவர்களைக் குறித்து விரிவாகப் பேசின. இந்த அத்தியாயத்தில் அவர்கள் முழுவதுமாக அம்பலப்படுத்தப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

உஹதுப் போரில் ஏற்பட்ட துன்பம்குறித்து அல்லாஹ் கூறுகிறான்:

*இரு கூட்டத்தினரும் மோதிக்கொண்ட நாளில் உங்களுக்கு ஏற்பட்ட துன்பமானது அல்லாஹ்வின் கட்டளையினால் ஏற்பட்டதேயாகும்.*

அது நம்பிக்கையாளர்கள் யார், நயவஞ்சகர்கள் யார் என்பதை அல்லாஹ் அறிந்துகொள்வதற்காகத்தான். 'வாருங்கள், அல்லாஹ் வின் பாதையில் போர்புரியுங்கள் அல்லது எதிரிகளிடமிருந்து தற்காத்துக்கொள்ளுங்கள்.' என்று அவர்களிடம் கூறப்பட்டால், 'போர் நடக்கும் என்று நாங்கள் அறிந்திருந்தால் கண்டிப்பாக உங்களுடன் வந்திருப்போம்.' என்று கூறுகிறார்கள். அவர்கள் நம்பிக்கையைவிட நிராகரிப்புக்கே நெருக்கமானவர்களாக இருந் தார்கள் ... (3:166,167)

இது உஹதுப் போரில் அடைந்த தோல்வி குறித்த இலேசான விமர் சனம்தான்.

ஆனால் தபூக் போரைவிட்டுப் பின்தங்கியவர்கள் வேறு விதமாக அணுகப்பட்டார்கள்:

தாங்கள் கூறவில்லை என்று அவர்கள் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்கிறார்கள். ஆயினும், அவர்கள் இஸ்லாத்தை ஏற்ற பின்னரும் நிராகரிப்புக்கான வார்த்தையைக் கூறி நிராகரித்துவிட்டார்கள். அவர்களுக்குச் சாத்தியமில்லாத காரியத்தைச் செய்ய முயன்றார்கள். அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் தன் அருளால் அவர்களைச் செல்வந்தர்களாக ஆக்கியதற்காகவா அவர்கள் வெறுக்கிறார்கள்? (74)

அவர்களில் சிலர் தாங்கள் அல்லாஹ்வின் பாதையில் செலவுசெய் வதற்காகவும் போர்புரிவதற்காகவும் தங்களை அல்லாஹ் செல்வந்தர் களாக்க வேண்டும் என்று வேண்டினார்கள். ஆனால், அவர்கள் விரும் பியதை அல்லாஹ் அவர்களுக்கு அளித்தபோது செலவுசெய்யாமல் கஞ்சத் தனம்செய்தார்கள்; போர்புரியாமல் புறம்காட்டி ஓடினார்கள். அதன் காரணமாக மோசமான தண்டனையால் அவர்கள் பாதிக்கப்பட்டார்கள்.

அவர்களில் சிலர், 'தன் அருளிலிருந்து அல்லாஹ் எங்களுக்கு வழங்கினால் நிச்சயம் நாங்கள் தர்மங்கள் செய்து நல்லோர்களாக ஆகிவிடுவோம்.' என்று அவனிடம் வாக்களித்தார்கள். ஆனால், தன் அருளிலிருந்து அல்லாஹ் அவர்களுக்கு வழங்கியபோது அவர்கள் கஞ்சத்தனம் செய்தார்கள். புறக்கணித்தவர்களாகத் திரும்பிக் கொண்டார்கள். அல்லாஹ் அவர்களின் உள்ளங்களில் தன்னைச் சந்திக்கும் நாள்வரை நயவஞ்சகத்தை விதைத்துவிட்டான். (75-77)

சமூகத்துக்குத் தடையாக அமைவோர் அடையாளம் காட்டப்பட்டு அகற்றப்பட வேண்டியது மிக அவசியமாகும். நயவஞ்சகர்கள், பெரிய

அளவில் தர்மங்கள் செய்வோரைப் பார்த்து 'அவர்கள் வெளிப்பகட்டுக் காகச் செய்கிறார்கள்.' என்று கூறியும் சிறிய அளவில் தர்மம்செய்வோரைப் பரிகாசம்செய்தும் வந்தார்கள்.

நம்பிக்கையாளர்களில் தாராளமாகத் தர்மம் செய்பவர்களையும் தங்களின் உழைப்பால் வரும் கூலியைத் தவிர வேறு எதையும் பெறாதவர்கள் செய்யும் தர்மத்தையும் அவர்கள் குறைகூறி ஏளனம் செய்கிறார்கள். (79)

நாளுக்கு நாள் நயவஞ்சகர்கள் அதிகமாகிக்கொண்டே சென்றார்கள். இஸ்லாத்துக்கு எதிரான தங்களின் சதித்திட்டங்களை முறைப்படுத்தவும் ஒன்றுகூடவும் ஓர் இடத்தை ஏற்படுத்த விரும்பினார்கள். தங்களைப் போன்ற நயவஞ்சகர்களை ஒன்றுகூட்டும் பொருட்டு ஒரு பள்ளிவாசலைக் கட்டுமாறு ஷைத்தான் அவர்களுக்கு வழிகாட்டினான்.

அதில் பொய்யான தொழுகைகள், வணக்க வழிபாடுகள் ஆகிய வற்றைக் கொண்டு முஸ்லிம்களிடத்தில் குழப்பம் விளைவிக்கலாம் என்று அவர்கள் நாடினார்கள்.

அவர்கள் தீங்கிழைப்பதற்காகவும் நிராகரிப்பதற்காகவும் நம்பிக் கையாளர்களிடையே பிரிவினை ஏற்படுத்துவதற்காகவும் முன்னர் அல்லாஹ்வுடனும் அவனுடைய தூதருடனும் போரிட்டுக் கொண்டி ருந்தவர்கள் பதுங்கிக்கொள்வதற்காகவும் ஒரு பள்ளிவாசலை ஏற்படுத்தியுள்ளனர். நாங்கள் நன்மையைத்தான் நாடியுள்ளோம் என்று அவர்கள் சத்தியமிட்டுக் கூறுவார்கள். அவர்கள் பொய்யர்கள் என்பதற்கு அல்லாஹ் சாட்சி கூறுகிறான். (107)

நயவஞ்சகர்களின் இந்தச் செயல்பாடு அவர்கள் முஸ்லிம் சமூகத்தில் எந்த அளவு தீங்குகளைப் பரப்பிக்கொண்டிருந்தார்கள் என்பதையே காட்டுகிறது. முஸ்லிம்கள் அதனைத் தீங்கிழைக்கும் நோக்கில் கட்டப் பட்ட பள்ளிவாசல் என்று கூறி இடித்துத் தரைமட்டமாக்கினார்கள்.

நீர் அங்கு ஒருபோதும் தொழுகைக்காக நிற்க வேண்டாம். ஆரம்ப நாள் முதலே இறையச்சத்தின் அடிப்படையில் நிறுவப்பட்டதுதான் நீர் நின்று வணங்குவதற்குத் தகுதியான பள்ளிவாசலாகும். அங்கு தூய்மையை விரும்பக்கூடிய மக்கள் இருக்கிறார்கள். அல்லாஹ் தூய்மையாளர்களை நேசிக்கிறான். (108)

இந்த அத்தியாயம் அவர்களின் திட்டங்கள், அவர்கள் உள்ளத்தில் மறைத்துவைத்திருந்த விசயங்கள், நாவில் வெளிப்படுத்தியவை என அனைத்தையும் வெளிச்சம்போட்டுக் காட்டியது.

சமூகத்தை நயவஞ்சகத்தனத்திலிருந்து தூய்மைப்படுத்தும் பொறுப்பை இந்த அத்தியாயத்தின் இரண்டாவது பகுதி ஏற்றுக்கொண்டது. அதன் மூலம் முஸ்லிம்கள் இந்த உலகில் தாங்கள் ஆற்ற வேண்டிய பெரும் பணிக்காகத் தயாரானார்கள். 'நாம் உம்மை உலக மக்கள் அனைவருக்கும் அருட்கொடையாகவே அனுப்பியுள்ளோம். (21:107)'

முஸ்லிம்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது, இந்த மார்க்கத்தைப் பரப்பும் பொருட்டு உங்களின் உயிரையும் பொருளையும்கூட நீங்கள் அர்ப்பணம்செய்ய வேண்டும் என்று: 'நிச்சயமாக அல்லாஹ் நம்பிக்கை யாளர்களின் உயிர்களையும் செல்வங்களையும் சுவனத்துக்குப் பகரமாக விலைக்கு வாங்கிக்கொண்டான். (111)'

எதற்காக இந்த ஒப்பந்தம்? இந்தத் தியாகங்களின் அடிப்படையில் ஏன் உள்ளங்கள் பண்படுத்தப்பட வேண்டும்?

பதில், பூமியில் குழப்பம்செய்வோர் இடைவிடாமல் பகைத்துக் கொண்டும் பாவங்களில் ஈடுபட்டுக்கொண்டும் இருக்கிறார்கள். இறைத் தூதர்களின் எதிரிகள் வரம்புமீறலிலும் அநியாயத்திலும் தொடர்ந்து ஈடுபட்டபோது இறைத்தூதர்கள் அவர்களுக்கு எதிரான ஜிஹாதையும் தொடர்ந்து நடத்தினார்கள்.

இந்த அத்தியாயத்தில் அல்லாஹ் கூறுகிறான்: 'நம்பிக்கையாளர்களே, உங்கள் அருகில் உள்ள நிராகரிப்பாளர்களுடன் போரிடுங்கள். அவர்கள் உங்களிடம் கடுமையை உணரட்டும். அறிந்துகொள்ளுங்கள், அல்லாஹ் இறையச்சமுடையோருடன் இருக்கிறான். (123)'

நாம் யாருடன் போரிட வேண்டும்? அவர்கள் ரோமர்களே. இந்த முழு அத்தியாயமும் அதைத்தான் அறிவிக்கிறது.

அருகில் வசிப்பவர்கள் என்று ஏன் அவர்கள் வர்ணிக்கப்பட்டுள்ளார் கள்?

அவர்கள் இத்தாலியிலிருந்து வந்தார்கள். கிழக்கத்திய நாடுகளையும் ஷாம் தேசத்தையும் நம் அருகில் உள்ள நாடுகளையும் கைப்பற்றினார்கள்.

அவர்கள் தலைவர்களாகவும் அவர்களைத் தவிர மற்றவர்கள் அடி மைகளாகவும் ஆனார்கள். எதற்காக அவர்கள் வந்தார்கள்? நாடுகளை ஆக்கிரமிப்பதற்காக, காலனித்துவ நாடுகளை உருவாக்குவதற்காக!

அறபுகளிடம் அவர்கள் என்ன நாடினார்கள்? அறபுகள் தங்களின் மார்க்கத்தை விட்டுவிட்டு உலகியல் இன்பங்களில் அவர்களோடு போட்டி போட வேண்டும் என்று விரும்பினார்கள்.

*அவர்கள் தங்களின் மார்க்கங்களைத் தவிர மற்ற மார்க்கங்களுக்குக் கண்ணியமளித்தார்களா? அவற்றுக்கான உரிமைகளை வழங்கினார்களா? நிச்சயமாக இல்லை.*

*அவர்களிடம் இருப்பது அசத்தியம், நம்மிடம் இருப்பது சத்தியம் எனில் நாம் ஏன் அதற்காக நம் உயிரையும் பொருளையும் அர்ப்பணிக்கக் கூடாது?*

*இந்த வாக்குறுதிதான் மூசா, ஈசா, முஹம்மது ஆகிய தூதர்களைப் பின்பற்றுவோரிடத்தில் பெறப்பட்டது. அவர்கள் சத்திய மார்க்கத்தை மேலோங்கச்செய்ய வேண்டும். நிராகரிப்பை அடிபணியச் செய்ய வேண்டும்:*

> *இது தவ்றாத்திலும் இன்ஜீலிலும் குர்ஆனிலும் அல்லாஹ் தன்மீது கடமையாக்கிக்கொண்ட உண்மையான வாக்குறுதியாகும். அல்லாஹ்வைவிடத் தம் வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றுபவர் யார்?* (111)

*காவலர்கள் குற்றவாளிகளைப் பிடிக்கும்படி பணிக்கப்படுகிறார்கள். குற்றவாளிகள் ஆயுதங்களைத் தூக்கினால் அவர்களும் ஆயுதங்களைத் தூக்குவதைத் தவிர வேறு வழி இல்லை.*

*இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தையும் இறுதியையும் சிந்தித்துப் பார்த்து நான் ஆச்சரியப்படுகிறேன்.*

*அத்தியாயத்தின் ஆரம்பம் இணைவைப்பாளர்களுடனான அனைத்து ஒப்பந்தங்களையும் ரத்துசெய்கிறது. இறுதிப் பகுதி, தூதரை அனுப்பி அல்லாஹ் பொழிந்த அருட்கொடையை நினைவூட்டுகிறது. அவர் கருணையாளராகவும் போர்புரிபவராகவும் இருக்கிறார். யார் ஆயுதத்தைத் தூக்குகிறார்களோ அவர்களுக்கு எதிராக அவரும் ஆயுதத்தைத் தூக்குகிறார். அறபுக் கவிஞர் ஷௌகீ கூறுகிறார்.*

> போரும் உம்முடைய ஒரு வழிமுறைதான், கொல்லும்
> விஷத்துக்கான மருந்தைப் போன்று.

*அதே சமயம், அவர் பூமியின் ஒவ்வொரு பகுதியிலும் அமைதியைத் தேடினார். போர் மூட்டங்களை அகற்ற, கவலை கொண்டோரின் கவலைகளை நீக்க தம்மால் இயன்றவரை முயன்றார்:*

> *உங்களிலிருந்தே ஒரு தூதர் உங்களிடம் வந்துள்ளார். நீங்கள் துன்பப்படுவது அவருக்கு வேதனையாக இருக்கிறது. அவர் உங்கள் நன்மையைப் பெரிதும் விரும்புபவர், நம்பிக்கையாளர்களிடம் மிகுந்த பரிவும் இரக்கமும் உடையவர்.* (128)

அவர் போர்புரிய வேண்டும் என்று விரும்பிப் போரிடவில்லை. மாறாக, ஆதிக்கத்தையும் எதிர்ப்பையும் நீக்கும் பொருட்டுக் கட்டாயத்தினால்தான் போரிட்டார்.

நீதி நிலைநிறுத்தப்பட்டு, மனிதர்களுக்கான சுதந்திரம் வழங்கப்பட்டு, அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டால் குற்றவாளிகளைத் தவிர வேறு யாரும் போர்புரிய மாட்டார்கள். அதனால்தான் அத்தியாயம் பின்வரும் வசனத்தோடு நிறைவுபெறுகிறது:

> அவர்கள் புறக்கணித்தால் நீர் கூறிவிடும், 'அல்லாஹ்வே எனக்குப் போதுமானவன். அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவனையே நான் முழுமையாகச் சார்ந்துள்ளேன். அவனே மகத்தான அரியணையின் அதிபதி.' (129)

இந்த அத்தியாயத்தைக் குறித்துதான் அவர்கள் 'இது மக்களுக்கு எதிராகப் போரை அறிவித்த அத்தியாயம்.' என்று அவதூறாகக் கூறு கிறார்கள்.

❖ ❖ ❖

அத்தியாயம் 10

# யூனுஸ்

(ஒரு நபியின் பெயர்)

*இந்த அத்தியாயம் மக்காவில் அருளப்பட்டதாகும். இது அல்அன்ஆம், அல்இஸ்றா ஆகிய இரு அத்தியாயங்களை ஒத்திருக்கிறது. அல்லாஹ்வின் அரசாட்சி, அவனுடைய படைப்புகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தி அவனை அறிமுகப்படுத்தும் வழிமுறையை இந்த அத்தியாயம் கொண் டுள்ளது.*

*நான் கருதுவது என்னவென்றால், மக்காவில் அருளப்பட்ட அத்தி யாயங்கள் சிலை வழிபாட்டாளர்களைச் சிந்திக்கத் தூண்டவும் உறைந்து போன அவர்களின் சிந்தனைகளைத் தட்டி எழுப்பவும் அவர்களை அவர்களின் இறைவனோடு இணைக்கவும் ஆற்றல் பெற்றவையாக இருந்தன. தற்போதைய மதச்சார்பற்றவர்கள், நாத்திகர்கள் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கவும் அவை மிக உகந்தவை.*

*திருக்குர்ஆனின் பொதுவான தனித்தன்மைகளுள் ஒன்று -அதன் வசனங்கள் மக்காவில் அருளப்பட்டிருந்தாலும் சரி, மதீனாவில் அருளப் பட்டிருந்தாலும் சரி- அது மனிதச் சமூகத்துக்கான வேதமாகும். அது மனிதர்களை அலட்சியத்திலிருந்து விடுவிக்கிறது. அவர்களின் இறை வனை அவர்களுக்கு அறிமுகம்செய்து அவனைச் சந்திப்பதற்காக அவர் களைத் தயார்படுத்துகிறது.*

*சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு வேதக்காரர்களுடனும் விவாதிக் கப்பட்டுள்ளது. அவர்கள் எழுப்பிய ஆட்சேபணைகள், உண்டாக்கிய புதுமையான விசயங்கள் ஆகியவைகுறித்து. மதீனாவின் காலகட்டத்தில் இந்த அம்சம் மிகத் தெளிவாகவே வெளிப்பட்டது.*

*சிலை வழிபாட்டாளர்களை ஒருவித உணர்வுநிலைதான் ஆட் கொண்டிருந்தது. அவர்கள் இவ்வுலகுக்காகச் செயல்படுவதில் மட்டுமே*

மூழ்கியிருந்தார்கள். தற்கால நாகரிகமும் இதே வகையான நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் அவற்றின் நாக ரிகத்தால் தாக்கமடைந்த நாடுகள் அல்லாஹ்வைக் குறித்தோ அவனைச் சந்திப்பதுகுறித்தோ பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை.

முந்தைய மதங்களும் அவர்களின் உள்ளத்தில் பெரிய அளவில் தாக் கத்தை ஏற்படுத்தவில்லை. அவர்கள் இவ்வுலக வாழ்வையே ஆராதித் தார்கள். மதகுருமார்களுக்கென்று தங்கள் வாழ்க்கையில் ஓர் இடத்தை அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள். அதில் அவர்கள் நம்பும் சில விசயங் களுக்கேற்பச் செயல்படுகிறார்கள். அதில் அறிவு, நீதி ஆகிய அம்சங்களை மிகக் குறைவாகவே பயன்படுத்துகிறார்கள்.

வேடிக்கையான ஒரு விசயம், ஓரியண்டலிஸ்டுகளில் ஒருவர் மக்காவில் அருளப்பட்ட வசனங்கள் உணர்ச்சிமயமானவை என்றும் மதீனாவில் அருளப்பட்டவையே அறிவுபூர்வமானவை என்றும் கூறுகிறார். மதீனாவில் வேதக்காரர்களுடனான பழக்கமே அவர்களின் வழிமுறையை அறிவு பூர்வமானதாக ஆக்கிவிட்டது என்கிறார். இதற்கு ஆதாரமாக, மதீனாவில் அருளப்பட்டதாக அவர் எடுத்துரைக்கும் பின்வரும் வசனம் உண்மையில் மக்காவில் அருளப்பட்டது: 'வானங்களிலும் பூமியிலும் அல்லாஹ்வைத் தவிர வேறு தெய்வங்கள் இருந்திருந்தால் அவை அழிந்தே போயிருக்கும். அவர்கள் கூறுவதைவிட்டும் அரியணையின் அதிபதியாகிய அல்லாஹ் தூய்மையானவன். (21:22)' அவர்களின் புரிதல் எப்படியிருக்கிறது என் பதைப் பாருங்கள்!

நாம் வாழக்கூடிய இந்த உலகமே நாம் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படும் மறுவுலகுக்கான முன்னோட்டம்தான் என்று திருக்குர்ஆன் அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறது. இங்கு அல்லாஹ்வை அறிபவர்கள் அங்கும் அல்லாஹ்வை அறிந்துகொள்வார்கள். நாம் அது குறித்து இவ் வாறு கூறலாம், 'இது ஓர் உலகம். இங்கு இதன் ஆரம்பத்தைப் பொறுப்பு வழங்கப்பட்ட இந்தக் காலகட்டத்தில் உணர்கிறோம். அங்கு இதன் இறுதியைக் கூலி வழங்கப்படும் காலகட்டத்தில் உணர்வோம்.'

தற்கால நாகரிகம் இவையனைத்தையும் நிராகரிக்கிறது.

இங்கு நாம் அல்லாஹ்வைப் போற்றிப்புகழ்கிறோம். அவனுடைய அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துகிறோம். அவன் நமக்கு இட்ட கட்டளைகளைச் செயல்படுத்துகிறோம். அங்கு அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்வதும் கடமைகளை நிறைவேற்றுவதும் வழங்கப்பட்ட பொறுப்பு களாக, கடமைகளாக அல்லாமல் நம்முடைய இயல்பான செயல்பாடு களாக ஆகிவிடும்:

நம்பிக்கை கொண்டு நற்செயல்கள்புரிபவர்களை அவர்களின் இறைவன் அவர்களின் நம்பிக்கையினால் அருட்கொடைகள் நிறைந்த சுவனங்களில் சேர்த்திடுவான். அங்கே ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும். ‘அல்லாஹ்வே, நீயே தூயவன்.’ என்பதே அங்கு அவர்களின் பிரார்த்தனையாக இருக்கும். ‘அமைதி நிலவட்டும்.’ என்பதே அவர்களின் வாழ்த்தாக இருக்கும். ‘அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.’ என்பதே அவர்களின் இறுதி வார்த்தையாக இருக்கும். (10:9,10)

இங்கு அல்லாஹ்வோடு இணக்கமானவர் அங்கும் அவனோடு இணக்கமானவராக ஆகிவிடுவார். அவனுடைய அரவணைப்பில் நிம்மதியாக வாழ்வார். இங்கு அல்லாஹ்வை நிராகரித்தவர் அங்கு என்ன எதிர்பார்க்க முடியும்? நவீனக் கலாச்சாரத்தை ஆராதிப்பவர்கள் மேற்கத்திய கலாச்சாரத்துக்குப் பின்னால் ஓடி அதனைத் தவிர அனைத்தையும் விட்டு முழுமையாக நீங்கிவிட்டார்கள். எவ்வித முன்னேற்றமுமின்றி முந்தையவர்கள் கூறிய அதே வார்த்தைகளையே இவர்களும் திரும்பக் கூறுகிறார்கள். ‘நமது சந்திப்பை நம்பாமல் இவ்வுலக வாழ்வை விரும்பி அதிலேயே திருப்தியடைந்தவர்களும் நம் சான்றுகளைவிட்டு அலட்சியமாக இருப்பவர்களும் தம் செயல்களின் விளைவாக நரகத்தையே தம் தங்குமிடமாகப் பெறுவார்கள். (10:7,8)’

சடவாத சிந்தனை திருக்குர்ஆனை அல்லது வஹீயை அந்நியமான, விசித்திரமான ஒன்றாகக் காண்கிறது. ஏனெனில், ஒரு சடவாதி கோள்களின் மோதல்கள் குறித்து ஆராய்ச்சிசெய்யும் சந்தர்ப்பத்தைத் தவிர வேறு எப்போதும் அவன் வானத்தை நோக்கிப் பார்க்க மாட்டான். கர்வத்துடன் அவன் நிராகரித்துவிடுகிறான்.

யூனுஸ் என்ற இந்த அத்தியாயம் இந்த நிலைப்பாட்டைப் படம் பிடித்துக் காட்டியவாறு தொடங்குகிறது:

அலிஃப், லாம், றா. இவை ஞானம்மிக்க வேதத்தின் வசனங்களாகும். மனிதர்களை எச்சரிப்பதற்காகவும் நம்பிக்கையாளர்களுக்குத் தங்கள் இறைவனிடம் உண்மையான அந்தஸ்து உண்டு எனும் நற்செய்தியைக் கூறுவதற்காகவும் அவர்களிலிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுத்து நாம் அறிவிப்பது அவர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறதா? ஆனாலும் நிராகரிப்பாளர்கள், ‘இவர் தெளிவான சூனியக்காரராக இருக்கிறார்.’ என்று கூறுகிறார்கள். (10:1,2)

ஈமான் என்பது மிக எளிமையான, இயல்பான ஒன்றுதான். ஜோதிடத்தை தொழிலாகக் கொண்டவர்களும் பிடிவாதம் கொண்ட மூடர்களுமே தூய்மையான இந்த ஊற்றைக் களங்கப்படுத்தினார்கள்.

*ஈமானுக்கும் நேர்மைக்கும் மத்தியில் வலுவான, ஆழமான தொடர்பு இருக்கிறது என்பதை இந்த அத்தியாயத்தில் காண்கிறோம். நிச்சயமாக ஈமான் நற்செயல்களின் பக்கம் இட்டுச்செல்கிறது. அல்லாஹ் கூறுகிறான்: 'நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிந்தோருக்கு நியாயமாகக் கூலி வழங்குவதற்காக. (4)', 'நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிபவர்களை அவர்களின் இறைவன் அவர்களின் நம்பிக்கையால் அருட்கொடைகள் நிறைந்த சுவனங்களில் சேர்த்திடுவான் ... (9)'*

*இந்த இரு வசனங்களுக்குப் பிறகு, சிறிது இடைவெளிக்குப் பிறகு அவன் கூறுகிறான்: 'நன்மைசெய்தோருக்கு நன்மையும் அதிகப்படியானவையும் உண்டு. (26)' இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'இஹ்சான்' என்பது தெளிவான ஈமானும் நற்செயலுமாகும். இந்த இரண்டும் இணைந்து மனித வாழ்க்கையில் அல்லாஹ்வின் கண்காணிப்பில் ஒருசேர பயணிக்கும்போது அது இஹ்சான் ஆகிவிடுகிறது.*

*உறுதியான நம்பிக்கையையும் இறையச்சத்தையும் பெற்றவர்களே இறை நேசர்கள் என்பதை இந்த அத்தியாயம் அறிவிக்கிறது: 'அறிந்து கொள்ளுங்கள், இறை நேசர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை. அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள். அவர்கள்தாம் நம்பிக்கை கொண்டு இறைவனை அஞ்சி நடப்பவர்கள். (62,63)'*

*நபியவர்களின் கூற்றாகத் திருக்குர்ஆனில் இடம்பெறும் பின்வரும் வசனங்களைச் சிந்தித்துப்பாருங்கள்:*

- ❖ *நான் என் இறைவனின் கட்டளைக்கு மாறாகச் செயல்பட்டால் மாபெரும் நாளின் வேதனையை அஞ்சுகிறேன். (15)*
- ❖ *தீமைகளைச் சம்பாதித்துக்கொண்டோருக்கு அதைப் போன்ற தீமையே கூலியாகும். இழிவு அவர்களைச் சூழ்ந்திருக்கும். அவர்களை அல்லாஹ்விடமிருந்து காப்பாற்றுபவர் யாரும் இல்லை. (27)*
- ❖ *நிச்சயமாக அல்லாஹ் குழப்பவாதிகளின் செயலைச் சீராக்க மாட்டான். (81)*

*முஸ்லிம் சமூகத்துக்கு எவ்வித ஒளிவுமறைவுமின்றி நேரடியாகக் கூறப்பட்டது, நீங்கள் செய்தவற்றுக்கான கூலியையே பெறுவீர்கள்.*

*முந்தைய சமூகங்கள் தாம் செய்த செயல்களின் விளைவை அனுபவித்தது போன்று நீங்களும் உங்கள் செயல்களின் விளைவையே அனுபவிப்பீர்கள். அவர்கள் நடத்தப்பட்டது போன்றே நீங்கள் நடத்தப்படுவீர்கள்:*

*உங்களுக்கு முன்னுள்ள சமூகங்கள் அநியாயம்செய்தபோது நாம் அவர்களை அழித்துவிட்டோம். அவர்களின் தூதர்கள் அவர்களிடம் தெளிவான சான்றுகளைக் கொண்டுவந்தார்கள். ஆயினும், அவர்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. இவ்வாறே நாம் குற்றவாளிகளுக்குக் கூலி வழங்குகிறோம். பின்னர், நீங்கள் எவ்வாறு செயல்படுகிறீர்கள் என்பதைப் பார்ப்பதற்காக அவர்களுக்குப் பின் நாம் உங்களைப் பூமியில் பிரதிநிதிகளாக ஆக்கினோம்.* (13,14)

*இந்த அத்தியாயத்தின் இறுதிப் பகுதியில் இடம்பெறும் வசனங்களும் இந்த உண்மையை அழுத்தம்திருத்தமாகப் பதிவுசெய்கின்றன:*

*நீர் கூறும், 'மக்களே, உங்கள் இறைவனிடமிருந்து சத்தியம் உங்களிடம் வந்துவிட்டது. ஆகவே, யாரேனும் நேர்வழியை ஏற்றுக் கொண்டால் அது அவருக்கே நன்மை பயக்கும். எவர் வழிதவறிச் செல்கிறாரோ அவர் தமக்குக் கேட்டை ஏற்படுத்திக்கொள்ளவே வழிதவறிச் செல்கிறார். நான் உங்களுக்குப் பொறுப்பாளன் அல்லன்.' உமக்கு வஹீயாக அறிவிக்கப்படுவதைப் பின்பற்றுவீராக. அல்லாஹ் தீர்ப்பளிக்கும்வரை பொறுமையுடன் இருப்பீராக. அவனே தீர்ப்பளிப்பவர்களில் மிகச் சிறந்தவன்.* (108,109)

*நியாயமான இந்த முடிவுரையையும் அத்தியாயத்தின் ஆரம்பத்தில் தூதருக்குச் சொல்லப்பட்டதையும் கொஞ்சம் ஒப்பிட்டுப்பாருங்கள்: 'மக்களை எச்சரிப்பதற்காகவும் நம்பிக்கையாளர்களுக்குத் தங்கள் இறைவனிடம் உண்மையான அந்தஸ்து உண்டு என்னும் நற்செய்தியைக் கூறுவதற்காகவும்...* (2)*' நீதியை நிலைநிறுத்துவதும் சத்தியத்தைச் சத்தியம் என்றும் அசத்தியத்தை அசத்தியம் என்றும் காட்டுவதும்தான் தூதரின் பணி என்பதைப் புரிந்துகொள்வீர்கள். ஏமாற்றாத, மோசடிசெய்யாத ஒரு சமூகத்தை அவர் கட்டமைக்கிறார். அது தன் இறைவனை அறிந்த, தன் இறைவனைக் கொண்டு அறியப்படும் சமூகம். அது அவன் வகுத்த நேரான பாதையில் செல்கிறது. அவனுடைய சந்திப்பைக் கொண்டு திருப்தியடைகிறது.*

*அந்தச் சமூகம் தன்னிடம் எடுத்துரைக்கப்பட்ட ஃபிர்அவ்ன்களைப் போன்று தம் நடத்தையை அமைத்துக்கொள்ளாது. செல்வத்தைக் கண்டோ அதிகாரத்தைக் கண்டோ அது ஏமாந்துவிடாது. மாறாக, அது அநியாயக் காரர்களையும் ஷைத்தான்களையும் எதிர்த்துப் போரிடும். மூசாவுடன் சேர்ந்து அவர் கூறியதுபோன்றே நாமும் கூறுவோம்:*

*எங்கள் இறைவா, அவர்களின் செல்வங்களை அழித்துவிடுவாயாக! அவர்கள் வதைக்கும் வேதனையைக் காணும்வரை நம்பிக்கை*

*கொள்ளாதவாறு அவர்களின் உள்ளங்களைக் கடினமாக்கி விடு வாயாக!* (88)

❖ ❖ ❖

*யாரேனும் ஒருவர், 'இவ்வாறெல்லாம் வணங்க வேண்டும் என்று நமக்குக் கட்டளையிட்ட நம் இறைவன் யார்? இந்த உலகில் நம் தவணை நிறைவடைந்த பிறகு நாம் அவன் பக்கம்தான் திரும்புவோமோ?' என்று கேட்டால் இந்த அத்தியாயம் அதற்குப் பதிலளிக்கிறது:*

*நிச்சயமாக உங்கள் இறைவன் அல்லாஹ்தான். அவனே வானங் களையும் பூமியையும் ஆறு நாள்களில் படைத்தான். பின்னர், அரியணையின் மீது நிலைகொண்டு அனைத்துக் காரியங்களையும் நிர்வகிக்கிறான். அவனது அனுமதியின்றிப் பரிந்துரைசெய்பவர் யாரும் இல்லை. அல்லாஹ்வே உங்கள் இறைவன். எனவே அவனையே வணங்குங்கள். நீங்கள் சிந்திக்க மாட்டீர்களா?* (3)

*சுருக்கமான இந்தப் பதில் விரிவை வேண்டிநிற்கிறது. இந்த அத்தி யாயத்தில் இடம்பெற்றுள்ள மற்ற வசனங்கள் அந்தப் பொறுப்பை நிறைவேற்றிவிடுகின்றன. இங்கு கோடிக்கணக்கான மெல்லக்கூடிய வாய்களும் செரிக்கக்கூடிய வயிறுகளும் இருக்கின்றன. அவற்றுக்கெல் லாம் உணவுகளை ஏற்படுத்தியவன் யார்? அந்த உணவுகளைச் சதை களாகவும் கொழுப்புகளாகவும் கண்களாகவும் காதுகளாகவும் ஆக்கியவன் யார்? கண்களுக்குப் பார்க்கும் சக்தியை, காதுகளுக்குக் கேட்கும் சக்தியை வழங்கியவன் யார்? இந்த விலைமதிப்பற்ற புலனுறுப்புகள் ஓர் உடலில் மிக உறுதியாக, கச்சிதமாக இணைக்கப்பட்டுள்ளனவே! பேராற்றல்மிக்க இறைவன் இந்தப் பிரபஞ்சத்தில் காணப்படும் கோடிக்கணக்கான உயிர் களை எவ்வாறு உருவாக்கியிருப்பான்?*

*'வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் உங்களுக்கு வாழ்வாதாரம் அளிப்பவன் யார்? உங்களின் செவிகளும் கண்களும் யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளன? உயிரற்றதிலிருந்து உயிருள்ளதையும் உயிருள்ளதிலிருந்து உயிரற்றதையும் வெளிப்படுத்துபவன் யார்? விவகாரங்களை நிர்வகிப்பவன் யார்?' என்று நீர் அவர்களிடம் கேளும். 'அல்லாஹ்தான்' என்று அவர்கள் கூறுவார்கள். 'அவ் வாறாயின் நீங்கள் அஞ்ச மாட்டீர்களா?' என்று கேளும்* (31)

*விவசாயி ஒரு விதையைத்தான் பூமியில் விதைக்கிறான். அது ஆயிரம் விதைகளை வெளிப்படுத்துகிறதே! யார் சுவையற்ற மண்ணை அரிசியாக, கோதுமையாக, இன்னபிற தானியமாக மாற்றியது?*

இயற்கையான கழிவுப் பொருள்களிலிருந்து கரும்பையும் பல்வேறு வண்ணங்களும் மணங்களும் உடைய மலர்களையும் உருவாக்கியவன் யார்? ‘அல்லாஹ்தான் உங்களின் உண்மையான இறைவன். நேர்வழிக்குப் பிறகு வழிகேட்டைத் தவிர வேறென்ன இருக்க முடியும்? நீங்கள் எங்கே திருப்பப்படுகிறீர்கள்? (32)’

விசித்திரம் என்னவென்றால், சில மனிதர்கள் படைப்பின் ஆரம்பம் குறித்து, படைப்புகளைக் கொண்டு படைப்பாளனின் வல்லமை குறித்து ஆராய்ச்சி செய்வதற்குப் பதிலாகப் படைப்பாளனின் உள்ளமை குறித்து ஆராய்ச்சிசெய்கிறார்கள்.

அவர்கள் செய்ய வேண்டிய இயல்பான பணியைவிட்டு அவர்கள் வெருண்டோடுகிறார்கள். தங்களின் ஆற்றல்களைத் தவறான காரியங்களில் பயன்படுத்துகிறார்கள். இந்தத் தலைகீழான காரியம் இஸ்லாமிய நாகரிகம் உலக அளவில் வீழ்ச்சியடைவதற்கான காரணங்களில் ஒன்றாகும்.

நாம் அல்லாஹ்வின் பண்புகளைப் பற்றிக் கூறும் வசனங்களை உள்ளபடி அப்படியே ஏற்றுக்கொள்கிறோம். அவற்றுக்கு எந்த வியாக்கியானங்களும் செய்ய மாட்டோம். அவன் தன்னுடைய கண்ணியத்துக்கேற்ப அரியணையின் மீது நிலைகொண்டுள்ளான் என்பதை நாம் உறுதியாக நம்புகிறோம். பிரபஞ்சத்தின் விவகாரங்களை விவேகத்தோடு அவனே நிர்வகிக்கிறான். அதில் அவனுக்கு எந்தப் பங்காளியும் உதவியாளனும் இல்லை. ஒருபோதும் படைப்பாளன் படைப்புகளிடம் உதவி கோர மாட்டான். எதையும் செய்யும் பேராற்றல் பெற்றவன் இயலாதவர்களிடம் உதவி கோருவானா என்ன?

மனிதர்கள் அனைவரும் இந்த உண்மையை அறிந்துகொள்ள வேண்டும். அவர்கள் அவனைத் தவிர வேறு யாரிடமும் கையேந்தக் கூடாது. அவ்வாறு கையேந்தும் மூடர்களைத் திருக்குர்ஆன் பழித்துரைக்கிறது:

> அவர்கள் அல்லாஹ்வைத் தவிர தங்களுக்குப் பலனளிக்கவோ தீங்களிக்கவோ இயலாதவற்றை வணங்குகிறார்கள். இவை அல்லாஹ்விடத்தில் எங்களுக்காகப் பரிந்துபேசும் என்றும் கூறுகிறார்கள். நீர் கேளும், ‘வானங்களிலும் பூமியிலும் அல்லாஹ் அறியாதவற்றையா நீங்கள் அவனுக்கு அறிவிக்கிறீர்கள்?’ அவர்கள் செய்யும் இணைவைப்பை விட்டும் அல்லாஹ் தூய்மையானவன்; மிக உயர்ந்தவன். (18)

உண்மையில் மனிதர்களும் -அவர்களில் முதன்மையானவர்களான தூதர்களும்- வானவர்களும் -அவர்களில் முதன்மையானவரான ஜிப்ரீல்

உட்பட- அல்லாஹ்வின் அடியார்கள்தாம். அவர்கள் அவனது கட்ட ளைக்குக் கீழ்ப்படிபவர்கள். அவனது அதிகாரத்துக்கு உட்பட்டவர்கள்:

அவர்கள் அவனை மீறிப் பேச மாட்டார்கள். அவனது கட்டளைப் படியே செயல்படுவார்கள். அவர்களுக்கு முன்னுள்ளவற்றையும் பின்னுள்ளவற்றையும் அவன் நன்கறிவான். அவனுடைய திருப்தி யின்றி யாருக்கும் அவர்கள் பரிந்து பேச மாட்டார்கள். அவன்மீதான அச்சத்தினால் அவர்கள் நடுங்கிக்கொண்டிருக்கிறார்கள். (21:27,28)

சரியான கொள்கையுடன் அல்லாஹ்வுடனான மனிதனின் தொடர்பு சீரடைகிறது. அவன் நிலையான வாழ்க்கையில் நிரந்தரமான இருப்பைச் சம்பாதித்துக்கொள்கிறான். இந்த உலக வாழ்க்கை அவனுடைய நல்ல நினைவுகளாக மாறிவிடுகின்றன.

தனிமனிதன் வாழக்கூடிய பல ஆண்டுகள் அல்லது அரசுகளின் பல நூற்றாண்டுகள் எண்ணப்படக்கூடிய சில மணி நேரங்களாக ஆகிவிடு கின்றன:

அவர்களை அல்லாஹ் ஒன்றுதிரட்டும் நாளில் பகலின் சில மணித் துளிகளே உலகில் வாழ்ந்ததாக அவர்களுக்குத் தோன்றும். அவர்கள் ஒருவரையொருவர் அறிந்துகொள்வார்கள் ... (45)

ஆனாலும், அவர்கள் அறியக்கூடிய நேரம் பல இன்பங்களுக்கும் துன்பங்களுக்கும் பிறகு வரக்கூடிய நீண்ட தூரங்களுக்குப் பிறகே ஆகும். அதுகுறித்து அறிஞர் இப்னு கய்யூம் கூறுகிறார், ‘நிரந்தரமான சுவனங் களை நோக்கி முன்னேறுவீராக. அவைதான் உம்முடைய ஆரம்ப தங்கு மிடம். அங்குதான் தங்க வேண்டும்.’

பாவங்களுக்கு வழங்கப்படும் தண்டனை மிகவும் பிற்படுத்தப்பட்டு விடுவதால் சிலர் தப்பித்துவிட்டதாக எண்ணிக்கொள்கிறார்கள். உண்மையில் அது அவர்களுக்கு வழங்கப்படும் அவகாசமாகும்.

மதீனாவின் காலகட்டத்தில் யூதர்கள் முஸ்லிம்களைப் பார்த்து அஸ் ஸலாமு அலைக்கும் என்று கூறுவதற்குப் பதிலாக ‘அஸ்ஸாமு அலைக் கும்’ -உங்களுக்கு அழிவு உண்டாகட்டும்- என்று கூறிவந்தார்கள். இதன் மூலம் அவர்கள் தங்களின் நோக்கத்தை நிறைவேற்றிவிட்டதாக எண் ணிக்கொண்டார்கள்.

அவர்கள் உம்மிடம் வந்தால் அல்லாஹ் உமக்கு முகமன் கூறாத முறைப்படி முகமன் கூறுகிறார்கள். அவர்கள் தங்களின் உள்ளங் களில் ‘எங்களின் இந்தப் பேச்சுக்காக எங்களை ஏன் அல்லாஹ்

*தண்டிப்பதில்லை?' என்று கூறுகிறார்கள். அவர்களுக்கு நரகமே போதுமானது. அதில் அவர்கள் நுழைந்தே தீருவார்கள். அது மிகவும் கெட்ட இருப்பிடமாகும்.* (58:8)

*அவர்கள் தண்டனையை விரைவாக வேண்டினார்கள். அளிக்கப்பட்ட அவகாசம் அவர்களின் சந்தேகத்தையே அதிகப்படுத்தியது.*

*அதற்கு முன்னால் இணைவைப்பாளர்களும் அல்லாஹ்வை நிராகரித்துக் கொண்டும் தூதரை எதிர்த்துக்கொண்டும் இருந்தார்கள். தாங்கள் உண்மையாளர்களாக இருப்பதால்தான் தங்களை இறைவன் உடனுக்குடன் தண்டிக்கவில்லை என்றும் தங்களின் நிராகரிப்பும் பரிகாசமும் சரியானவையே என்றும் அவர்கள் கருதிவந்தார்கள்.*

*அவர்கள் வேதனைக்காக உம்மிடம் அவசரப்படுகிறார்கள். குறிப்பிட்ட ஒரு தவணை நிர்ணயிக்கப்படாதிருந்தால் வேதனை அவர்களை வந்தடைந்திருக்கும். அது அவர்கள் அறியாத விதத்தில் திடீரென அவர்களைத் தாக்கிவிடும். நரகம் நிராகரிப்பாளர்களைச் சூழ்ந்திருக்கும் நிலையில் அவர்கள் வேதனைக்காக உம்மிடம் அவசரப்படுகிறார்கள்.* (29:53,54)

*அவர்களுக்கு வழங்கப்படும் அவகாசத்தைத்தான் இந்த அத்தியாயம் பின்வருமாறு தெளிவுபடுத்துகிறது:*

*அல்லாஹ் மக்களுக்கு அருள்புரிவதில் அவசரம் காட்டுவதைப் போன்று அவர்களைத் தண்டிப்பதில் அவசரம் காட்டினால் அவர்களின் தவணை முடிக்கப்பட்டிருக்கும். ஆயினும், நமது சந்திப்பை நம்பாதவர்களை அவர்களின் வரம்புமீறலிலேயே தடுமாறித் திரியுமாறு விட்டுவிடுகிறோம்.* (11)

*இந்த எச்சரிக்கை பாக்கியம்மிக்க அவனது பெயருடன் ஒன்றிணைகிறது:*

*உம் இறைவன் பெரும் மன்னிப்பாளனாகவும் கருணையாளனாகவும் இருக்கிறான். அவர்கள் செய்தவற்றுக்காக அவன் அவர்களைத் தண்டிப்பதாக இருந்தால் அவர்களை விரைவாகத் தண்டித்திருப்பான். ஆயினும், அவர்களுக்குக் குறிப்பிட்ட நேரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்குப் பின் அவர்கள் எங்கும் தப்ப முடியாது.* (18:58)

*ஆயினும் இந்த அத்தியாயம் குற்றவாளிகளிடம் கேட்கிறது, 'ஏன் தண்டனையை விரைவுபடுத்த வேண்டும்? அதனால் உங்களுக்கு ஏற்படும் பயன் என்ன?'*

*நீங்கள் தண்டிக்கப்படுவதற்கு முன்னால் பாவமன்னிப்பு கோரி அவன் பக்கம் திரும்புவதுதானே சிறந்தது? வழங்கப்பட்ட அவகாசத்தை பயன்படுத்திக்கொள்வதுதானே உங்களுக்குச் சிறந்தது?*

> *நீர் கேளும், 'இறை வேதனை இரவிலோ பகலிலோ உங்களை வந்தடைந்துவிட்டால் குற்றவாளிகள் அதற்கு முன் எப்படித் தப்பிக்க முடியும் என்பதை நீங்கள் கவனிக்கவில்லையா? அது உங்களைத் தாக்கும்போதுதான் அதனை நம்புவீர்களா? இப்பொழுதுதான் நம்புகிறீர்களா? இதற்குத்தானே நீங்கள் அவசரப் பட்டுக்கொண்டிருந்தீர்கள்?'* (50,51)

*நிர்ணயிக்கப்பட்ட அந்த நாள் வந்துவிட்டால் யாரேனும் அல்லாஹ் வின் தண்டனையிலிருந்து தப்ப முடியுமா? பொருள்கள் அனைத்தும் அவன் கைவசம்தானே உள்ளன? 'அறிந்துகொள்ளுங்கள், வானங்களிலும் பூமியிலும் உள்ளவர்கள் அனைவரும் அல்லாஹ்வுக்கே உரியவர்கள். அல்லாஹ்வைத் தவிர வேறு இணைத் தெய்வங்களை அழைப்பவர்கள் எதைப் பின்பற்றுகிறார்கள்? அவர்கள் வெறும் யூகங்களைத்தான் பின் பற்றுகிறார்கள் ...* (66)'

*மனிதர்கள், பொருள்கள் எனப் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் அல்லாஹ்வின் கட்டுப்பாட்டில் இருக்கும்போது ஒரு மனிதனால் எங்கு தப்பிச்செல்ல முடியும்? யார் அவனைப் பாதுகாப்பார்? 'இந்த விசயம் உண்மைதானா என்று அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள். நீர் கூறும், ஆம். என் இறைவன்மீது ஆணையாக, அது உண்மையே. உங்களால் அவனிட மிருந்து தப்பிவிட முடியாது.* (53)'

*உண்மையில் விசித்திரம் என்னவென்றால், கருணைமிக்க இறைவன் ஒரு மனிதரைத் தேர்ந்தெடுத்து அவருக்கு வஹீ அறிவித்து அதனை மற்ற மனிதர்களுக்கு எடுத்துரைக்குமாறு அவருக்குப் பொறுப்பு வழங்கி யிருக்க அவர்மீது பொறாமை கொண்டு அவரை நிராகரிப்பதுதான்: 'நமக்கு மத்தியில் இவருக்குத்தான் இறைவாக்கு அருளப்பட வேண்டுமா?* ... (38:8)'

*சிலை வழிபாடும் அதன் சடங்குகளும் காயப்படுத்தப்பட்டதால் அவர்கள் கோபம் கொண்டார்கள். தங்கள் முன்னோர்களிடமிருந்து பலகடவுள் கொள்கையைப் பெற்றுக்கொண்டவர்களால் ஓரிறைக் கொள் கையை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இந்த உலக வாழ்வு மட்டுமே வாழ்வு என்ற கொள்கையைக் கொண்டவர்கள் மறுவுலகு தொடர்பான பேச்சுகள் அனைத்தையும் நிராகரிக்கிறார்கள்.*

இந்த அத்தியாயம் தவ்ஹீதின் கொடியை உயர்த்தியது. ஓர் இறைவனின் இருப்புக்கு ஆதாரங்களை அள்ளி வழங்கியது. இந்தப் பிரபஞ்சத்தில் அவனுடைய வல்லமையைப் பறைசாற்றும் சான்றுகளின் பக்கம் அவர்களைத் திருப்பியது:

அவனே சூரியனைப் பிரகாசமானதாக ஆக்கி சந்திரனுக்கு ஒளியைக் கொடுத்தான். ஆண்டுகளின் எண்ணிக்கையையும் கணக்கையும் நீங்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு அதன் நிலைகளை நிர்ணயம் செய்தான். இவற்றையெல்லாம் அல்லாஹ் வீணாகப் படைக்கவில்லை. அறிந்துகொள்ளும் மக்களுக்கு அவன் சான்றுகளைத் தெளிவுபடுத்துகிறான். (5)

அறபுகள் இந்த வஹீயை ஏற்றுக்கொள்ளவில்லை. திருக்குர்ஆன் இந்த அத்தியாயத்தில் மூன்று இடங்களில் அவர்களை எதிர்கொண்டு அவர்கள் எழுப்பிய ஆட்சேபணைகளுக்கான பதில்களை அளித்தது.

ஒன்று:

அவர்களிடம் நம்முடைய தெளிவான வசனங்கள் எடுத்துரைக்கப்பட்டால் நம் சந்திப்பை நம்பாதவர்கள், 'இது அல்லாத வேறு குர்ஆனைக் கொண்டுவாருங்கள் அல்லது இதனை மாற்றி விடுங்கள்' என்று கூறுகிறார்கள். (15)

எங்களின் தெய்வங்களைப் புகழக்கூடிய, எங்களின் சடங்குகளை அங்கீகரிக்கக்கூடிய வேறொரு வேதத்தை நீர் கொண்டுவாரும். 'நீர் கூறும், என் விருப்பப்படி இதனை மாற்றிவிடுவது என் பணி அல்ல. நான் எனக்கு வஹீயாக அறிவிக்கப்படுவதையே பின்பற்றுகிறேன் ... (15)'

பின்னர் தூதர், தாம் நாற்பது வயதுவரை எந்த ஒரு வஹீயையும் கொண்டுவரவில்லை என்பதையும் எந்த ஒரு மார்க்கத்தையும் சீர்படுத்தவில்லை என்பதையும் தெளிவுபடுத்தி, அதற்குப் பிறகு திடீரென வஹீயின் மூலம் தமக்குப் பொறுப்பு வழங்கப்பட்டதால்தான் இவ்வாறெல்லாம் கூறுகிறேன் என்பதையும் எடுத்துரைப்பதைத் தவிர தமக்கு வேறு வழி இல்லை என்பதையும் அவர்களுக்குத் தெளிவுபடுத்துகிறார்: 'நீர் கூறும், அல்லாஹ் நாடியிருந்தால் நான் இதனை உங்களுக்குக் கூறியிருக்க மாட்டேன். அல்லாஹ்வும் இதனை உங்களுக்கு அறிவித்திருக்க மாட்டான். நான் இதற்கு முன்னர் உங்களிடையே நீண்ட காலம் வாழ்ந்துள்ளேன். நீங்கள் சிந்திக்க மாட்டீர்களா? (16)'

*இரண்டாவது இடம்:*

*இந்தக் குர்ஆன் அல்லாஹ் அல்லாதவர்களால் புனைந்துரைக்கப் பட்ட தல்ல. மாறாக, இது தனக்கு முன்னுள்ள முன்னறிவிப்பு களை உண்மைப்படுத்தக்கூடியதாகவும் அகிலங்களின் இறை வனிடமிருந்து வந்துள்ள சந்தேகமற்ற வேதத்தின் விளக்கமாகவும் உள்ளது.* (37)

*ஒரு நேர்மையான வாசகர் திருக்குர்ஆனை வாசித்த பிறகு அது முஹம்மதால் புனைந்துரைக்கப்பட்ட புத்தகம் அல்ல என்பதை மிகத் தெளிவாக உணர்ந்துகொள்வார். தாவரத்தின் தண்டுகளில் நீர் ஊடுருவிச் செல்வதுபோல் அதன் வசனங்களினூடே சத்தியத்தை நோக்கி அது விடுக்கும் அழைப்பு ஊடுருவியிருப்பதைக் காண்பார்.*

*இந்தக் குர்ஆன் அல்லாஹ்வைத் தவிர மற்றவர்களால் உருவாக்கப் பட்டிருந்தால் அதில் முரண்படாத, சீரான உண்மையை நாம் கண்டிருக்க முடியாது.*

*அவ்வாறு நாம் கூறுவது -நாம் முந்தைய வேதங்களையும் ஏற்றுக் கொண்டிருந்தால்- படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் இறைவனைவிட மனிதனால் அற்புதமான ஒரு வேதத்தை உருவாக்க முடியும் என்று கூறுவதற்குச் சமமாகும். ஏனெனில், இறைவனைக் குறித்தும் அவன் ஒருவனே என்பதைக் குறித்தும் திருக்குர்ஆன் எடுத்து ரைக்கும் ஆதாரங்கள் வலுவானவையாகவும் அதன் மொழிநடை உண்மையானதாகவும் இருக்கின்றன.*

*இந்தக் குர்ஆன் மனிதனின் உருவாக்கமாக இருந்தால் ஏன் இதைப் போன்ற ஒன்றைக் கொண்டுவர முடியாது? அவ்வாறு கொண்டு வருவ தற்குத் தடையாக இருப்பது எது?*

*அவரே இதனைச் சுயமாகப் புனைந்துகொண்டார் என்று அவர்கள் கூறுகிறார்களா? நீர் கூறும், 'நீங்கள் உண்மையாளர்களாயின் இதுபோன்ற ஓர் அத்தியாயத்தைக் கொண்டுவாருங்கள். அல்லாஹ் வைத் தவிர நீங்கள் அழைக்க முடிந்தவர்களையெல்லாம் அழைத் துக்கொள்ளுங்கள்.'* (38)

*இதுபோன்ற ஒரு வேதத்தை உருவாக்குவதற்கு அல்லது இந்த வேதத் தில் உள்ள ஒரு அத்தியாயத்தைப் போன்று உருவாக்குவதற்கு மனிதர் கள், ஜின்கள் என உங்களால் இயன்றவர்களையெல்லாம் உதவிக்கு அழைத்துக் கொள்ளுங்கள்.*

*பல நூற்றாண்டுகள் கடந்தபின்னரும் இன்றளவும் இது சவாலாகவே எஞ்சிநிற்கிறது. யாராலும் இந்தச் சவாலை முறியடிக்க முடியவில்லை. 'மாறாக, அவர்கள் தம் அறிவால் புரிந்துகொள்ள முடியாததையும் எதனுடைய உண்மைநிலையை அவர்கள் அறியவில்லையோ அதனையும் மறுத்துவிட்டார்கள் ... (39)' இந்த அவகாசம் அவர்கள் திருந்துவதற்கு அளிக்கப்படும் வாய்ப்புதான் என்பதைக்கூட அறியாத மூடர்களாக இருக்கிறார்கள்.*

*பின்னர், இந்த வேதம்குறித்து மக்களின் பல்வேறு நிலைப்பாடுகள் இடம்பெறுகின்றன: 'அவர்களில் இந்தக் குர்ஆனை நம்புவோரும் இருக்கிறார்கள். இதனை நம்பாதோரும் இருக்கிறார்கள். குழப்பம் விளைவிப்போரை உம் இறைவன் நன்கறிவான். (40)' சந்தேகம் கொண்டிருக்கும், நிராகரிக்கும் இந்த மக்களுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? 'அவர்கள் உம்மைப் பொய்யர் எனக் கூறினால், என் செயல் எனக்குரியது, உங்கள் செயல் உங்களுக்குரியது. நான் செய்பவற்றைவிட்டும் நீங்கள் விலகிக்கொண்டீர்கள். நீங்கள் செய்பவற்றை விட்டும் நானும் விலகிக்கொண்டேன் என்று நீர் கூறிவிடும். (41)'*

*மக்களுக்கு முழுச் சுதந்திரமளிக்கப்பட்டு, இந்தக் குர்ஆன் எடுத்துரைக்கப்படுவதைத் தடுக்கும் எந்த ஒன்றும் இல்லாதிருந்தால் மக்களைக் கட்டாயப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. திறந்த உள்ளம் கொண்டவர்கள், சத்தியத்தைத் தேடும் இதயம் கொண்டவர்கள் நிச்சயமாக இந்தக் குர்ஆனின் அழைப்பை மிக விரைவாக ஏற்றுக்கொள்வார்கள். ஆனால் மற்றவர்கள்? செவியேற்கக் கூடாது என்று தன் காதுகளைப் பொத்திக்கொண்டிருப்பவனுக்கு எப்படிக் கேட்கச்செய்ய முடியும்? அதிகாலையின் வெளிச்சத்தைக் கண்டுவிடக் கூடாது என்று தன் கண்களை மூடியிருப்பவனால் எப்படி அதனைக் காண முடியும்?*

> *அவர்களில் சிலர் நீர் கூறுவதைக் கவனமாகக் கேட்கிறார்கள். விளங்கிக்கொள்ள முடியாத செவிடர்களை உம்மால் செவியுறச் செய்ய முடியுமா? அவர்களில் சிலர் உம்மைப் பார்க்கிறார்கள். நேர்வழியைப் பார்க்க முடியாத குருடர்களுக்கு உம்மால் வழிகாட்ட முடியுமா? (42,43)*

*மூன்றாவது இடம்:*

*இந்தக் குர்ஆனைக் குறித்து அல்லாஹ் கூறுகிறான்: 'மனிதர்களே, உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு அறிவுரை வந்துள்ளது. அது உள்ளங்களில் உள்ளவற்றுக்கு நிவாரணமாகவும் நம்பிக்கையாளர்களுக்கு வழிகாட்டியாகவும் அருளாகவும் இருக்கிறது. (57)'*

திருக்குர்ஆன் உள்ளங்களை மிகச் சிறந்த முறையில் பண்படுத்தக் கூடியது. அது உள்ளங்களைவிட்டும் தீய பண்புகளை நீக்கும். சந்தேகங் கள், குழப்பங்கள், தடுமாற்றங்கள் ஆகியவற்றிலிருந்து அவற்றைப் பாதுகாக்கும்.

ஆகவேதான் அதற்குப் பிறகு பின்வரும் வசனம் இடம்பெறுகிறது: 'நீர் கூறும், இது அல்லாஹ்வின் அருளாலும் அவனது கருணையாலும் உள்ளதாகும். ஆகவே, அவர்கள் மகிழ்ச்சியடையட்டும். இது அவர்கள் சேர்த்து வைப்பவற்றைவிடச் சிறந்ததாகும். (58)' திருக்குர்ஆன் வழங்கப் பட்ட மனிதன் அதனைத் தவிர மற்றவற்றைச் சிறந்தவையாகக் கருது வானெனில் அவன் மிகச் சிறந்ததை மட்டமாக்கியவனாவான் அல்லது மட்டமானதைச் சிறந்ததென எண்ணியவனாவான்.

நபியவர்கள் தம்முடைய எதிரிகளுடன் இந்தக் குர்ஆனைக் கொண்டே போரிட்டார்கள். அது அவர்களின் அணியில் பிளவை ஏற்படுத்தியது. ஏனெனில், அது அவர்களின் எந்த ஆட்சேபணையையும் விட்டு வைக்காமல் அனைத்தையும் தக்க பதிலடி வழங்கி முறியடித்தது. நபியவர்கள் ஒவ்வொரு களத்திலும் திருக்குர்ஆனை ஓதினார்கள். ஒவ்வொரு இடத்துக்கும் இதனை எடுத்துச்சென்றார்கள். ஆகவேதான் இங்கு அவர்களுக்குக் கூறப்படுகிறது:

> நீர் எந்த நிலையில் இருந்தாலும் குர்ஆனிலிருந்து எந்தப் பகுதியை எடுத்துரைத்தாலும் நீங்கள் எந்தச் செயலைச் செய்தாலும் நீங்கள் அதில் ஈடுபட்டிருக்கும்பொழுது நாம் உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். பூமியிலும் வானத்திலும் உள்ளவற்றில் ஓர் அணுவளவுகூட உம் இறைவனை விட்டும் மறைவானதாக இல்லை. அதைவிடச் சிறியதோ பெரியதோ அனைத்தும் ஒரு தெளிவான பதிவேட்டில் பதியப்படாமல் இல்லை. (61)

இந்த அத்தியாயத்தின் இறுதியில், வஹீயைப் பற்றிப்பிடிக்க வேண்டும் என்று ஆரம்பத்தில் வந்துள்ள வசனத்தை உண்மைப்படுத்தும் வசனம் இடம்பெறுகிறது. மனிதர்களிலிருந்து ஒரு மனிதரைத் தேர்ந்தெடுத்து அல்லாஹ் வஹீ அறிவிப்பது அவர்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது எனில், இறுதியாக இடம்பெறும் வசனத்தில் அல்லாஹ் தன் தூதருக்குக் கூறுகிறான்: 'உமக்கு வஹீயாக அறிவிக்கப்படுவதைப் பின்பற்றுவீராக. அல்லாஹ் தீர்ப்பளிக்கும்வரை பொறுமையுடன் இருப்பீராக. அவனே தீர்ப்பளிப்பவர்களில் மிகச் சிறந்தவன். (109)'

இந்தக் குர்ஆனைக் குறித்தே முஸ்லிம் அல்லாதவர்கள் முஸ்லிம் களுடன் கடுமையாக முரண்படுகிறார்கள். அது தெளிவான சத்தியம் என்று

நாம் ஐயத்திற்கிடமின்றி உறுதியாக நம்புகிறோம். அதில் காணப்படும் சில வாசகங்களை அறபு இலக்கியத்தில் நன்கு தேர்ச்சி பெற்றவர் களால்தான் புரிந்துகொள்ள முடியும். மற்றவர்கள் அவற்றைக் குறித்து தவறான புரிதலில் சிக்கிவிடுகிறார்கள். எடுத்துக்காட்டாக, போட்டியில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவனிடம் நாம், 'சோம்பேறித்தனம் செய்யாதே.' அல்லது 'நீ அடைந்த இந்த உயரத்தைப் பேணிப் பாதுகாத் துக்கொள்.' என்று நாம் கூறுகிறோம். அவன் சோம்பேறித்தனம் செய்ப வனோ அலட்சியமாக இருப்பவனோ இல்லாமல் இருந்தாலும் அவனை ஊக்கப்படுத்தும் விதமாக நாம் இவ்வாறு கூறுகிறோம்.

இதுபோன்ற ஒன்றுதான் அல்லாஹ் தன் தூதருக்குக் கூறிய பின்வரும் அறிவுரையும்: 'நாம் உமக்கு அருளியுள்ளதைக் குறித்து நீர் சந்தேகத்தில் இருப்பீரானால் உமக்கு முன்னர் வேதத்தை வாசித்துக்கொண்டிருப் போரிடம் கேட்டுப்பாரும். (94)' ஓரிறைக் கொள்கையை ஏற்றுக்கொள் ளாமல் திரித்துவத்தைக் கொள்கையாகக் கொண்டிருப்போரிடம் ஓரிறைக் கொள்கையைக் குறித்து கேட்க முடியுமா? ஆரம்பம்தொட்டே அவர் அவர்களுடன்தானே விவாதம்செய்துவருகிறார்? ஆகவேதான், நபியவர்கள் கூறியதாக ஹதீஸில் இடம்பெற்றுள்ளது: 'நான் சந்தேகம் கொள்ளவும் மாட்டேன், கேட்கவும் மாட்டேன்.' ஒருவேளை இது அவர்களிடம் கேட்க வேண்டிய கேள்வி என்று நாம் எடுத்துக்கொண்டாலும் உறுதியான நம்பிக்கை கொண்ட ஒருவர் சந்தேகம் கொண்டோரிடம் கேட்பதாகவே இருக்கும். அல்லாஹ் எந்தத் தேவையுமற்ற ஓரிறைவன். அவன் யாரையும் பெறவுமில்லை. யாராலும் பெறப்படவுமில்லை. அவனுக்கு இணையாக யாரும் இல்லை.

இதுதான் இஸ்லாத்தின் அடித்தளம். இதில் எந்த விதமான தர்க்கத் துக்கும் இடம் இல்லை. அதே போன்றுதான் யூதர்களிடம் கேட்பதும். இறைத்தூதர்களைக் குறித்து அவர்கள் இட்டுக்கட்டிய அவதூறுகள் ஏராளம். அவர்கள் மறுப்பதால் எதுவும் சந்தேகத்துக்குரிய ஒன்றாகி விடாது. பின்னர், நபியவர்களுக்கு அறுதியான கட்டளை இடப்படுகிறது:

> நிச்சயமாக உம் இறைவனிடமிருந்து உமக்குச் சத்தியம் வந்துள்ளது. ஆகவே, நீர் சந்தேகம் கொள்வோரில் ஒருவராகிவிடாதீர். அல் லாஹ்வின் வசனங்களை மறுத்தோருடன் நீர் இணைந்துவிடாதீர். அவ்வாறாயின் பேரிழப்புக்கு உரியவராகிவிடுவீர். யார்மீது உம் இறைவனின் வாக்கு உறுதியாகிவிட்டதோ அவர்கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள். சான்றுகள் அனைத்தும் அவர்களிடம் வந்துவிட்டாலும் துன்புறுத்தும் வேதனையைக் காணும்வரை அவர்கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள். (94-97)

இதுதான் மனித அறிவுக்கு வழங்கப்படும் அறுதியான கட்டளை. அல்லாஹ் ஒருபோதும் இருவராகவோ மூவராகவோ இருக்க மாட்டான். மனிதப் பலவீனங்கள் எதையும் அவனோடு இணைக்க முடியாது.

❖ ❖ ❖

மனிதன் கடினமான சில நாள்களையும் கடக்கத்தான் செய்கிறான். அவ்வாறான சமயங்களில் வேதனையும் இயலாமையும் அவனைப் பிடித்து ஆட்டுகின்றன. துன்பங்கள் தன் குரல்வளையை நசுக்குவதாக அவன் உணர்கிறான். அதே நிலை நீடித்தால் தான் அழிந்துவிடுவதாக அவன் எண்ணுகிறான். உதவி தேடியவனாக அல்லாஹ்விடம் மன்றாடுகிறான். இறுதியில் துன்பங்கள் அவனைவிட்டு நீங்கிவிடுகின்றன. ஆனாலும், அவனிடம் அதே அளவு ஈமானிய உத்வேகம் நிலைத்திருக்கிறதா? அல்லது அது குறைந்து அவன் அல்லாஹ்வை மறந்துவிடுகிறானா?

அல்லாஹ் கூறுகிறான்:

> மனிதனுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால் நின்றவாறும் அமர்ந்த வாறும் படுத்தவாறும் நம்மை அழைக்கிறான். ஆனால், அவனது துன்பத்தை நாம் அவனை விட்டும் நீக்கிவிட்டால் தனக்கு ஏற்பட்ட துன்பத்துக்கு நம்மை அழைக்காதவனைப் போன்று ஆகிவிடு கிறான். இவ்வாறு வரம்புமீறும் மக்களுக்கு அவர்களின் செயல்கள் அழகாக்கப்பட்டுள்ளன. (12)

இந்த வழிமுறை அவனது கீழ்மையைத்தான் காட்டுகிறது. அவன் கண்டிப்பாகத் தன்னைத் துன்பத்திலிருந்து காப்பாற்றியவனை, தனக்கு அருள்புரிந்தவனை நினைவுகூர வேண்டும். துன்பத்தில் அவனிடம் மன்றாடியதுபோன்று இன்பத்திலும் அவனை நினைவுகூர வேண்டும்.

இந்த அத்தியாயம் இந்த நிலையை இன்னும் விரிவாகப் படம்பிடித் துக் காட்டுகிறது:

> அவனே நிலத்திலும் நீரிலும் உங்களைப் பயணிக்கச் செய்கிறான். நீங்கள் கப்பலில் பயணிக்கும்போது சாதகமான காற்று அதனை வழிநடத்திச் சென்றால் அதில் பயணிப்பவர்கள் மகிழ்ச்சியடை கிறார்கள். அப்போது திடீரென வீசும் புயல் காற்றால் அலைகள் அவர்களை நாலாபுறமும் தாக்கும்போது சூழ்ந்துகொள்ளப்பட்ட வர்களாக அவர்கள் எண்ணிக்கொள்கிறார்கள். அச்சமயத்தில் அவர்கள் தங்களின் மார்க்கத்தை அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித் தாக்கிய வண்ணம் முழுமனதுடன், ‘நீ எங்களை இதிலிருந்து

*காப்பாற்றினால் நிச்சயம் நாங்கள் நன்றியுள்ளவர்களாக ஆகிவிடுவோம்.' என்று பிரார்த்தனைசெய்கிறார்கள். ஆனால், அல்லாஹ் அவர்களைக் காப்பாற்றிவிட்டால் பூமியில் அநியாயமாக வரம்பு மீறுகிறார்கள். 'மனிதர்களே, உங்களின் வரம்புமீறல் உங்களுக்குத் தான் கேடாக அமையும். இவ்வுலக வாழ்வை அனுபவித்துக் கொள்ளுங்கள். பின்னர், நீங்கள் நம்மிடமே திரும்ப வேண்டும். அப்போது நீங்கள் செய்துகொண்டிருந்தவற்றை நாம் உங்களுக்கு அறிவிப்போம்.'* (22,23)

*மனிதர்கள் மூழ்கும் சமயத்தில், நாலாபுறமும் அலைகளால் சூழப்படும் சமயத்தில் அவர்களின் நம்பிக்கைகளெல்லாம் அல்லாஹ்வின் பக்கம் முழுமையாகத் திரும்பிவிடும். அல்லாஹ்வைத் தவிர வேறு எங்கும் அடைக்கலம் இல்லை என்பதை அவர்கள் உணர்ந்துகொள்வார்கள்.*

*ஆனாலும், மனிதன் தனக்கு உதவிசெய்த அந்த இறைவனை ஏன் மறக்கிறான்? ஏன் மனிதர்கள் மீண்டும் அலட்சியத்தில் ஆழ்ந்துவிடுகிறார்கள்? இது ஏமாற்று, அல்லவா? கண்ணியமான எந்த மனிதனுக்கும் இவ்வாறு செய்வது உகந்ததில்லைதானே?*

*மகிழ்ச்சியின் அலைகள் அவர்களைச் சூழ்ந்துவிடுகின்றன. அதைத் தவிர மற்றவற்றை அவர்கள் நினைவுகூர்வதில்லை. அப்படியானால் அவர்கள் தண்டனைக்கே உரியவர்கள். அவர்கள் அலட்சியத்தின் உச்சத்தில் ஆழ்ந்திருக்கும்போது அந்தத் தண்டனை மீண்டும் அவர்கள்மீது இறங்குகிறது. அல்லாஹ் கூறுகிறான்:*

*இவ்வுலக வாழ்க்கையின் உதாரணம் வானிலிருந்து நாம் பொழியச் செய்கின்ற நீரைப் போன்றது. அதன் மூலம் மனிதர்களும் கால்நடைகளும் உண்ணக்கூடிய தாவரங்கள் செழித்துவளர்கின்றன. அவற்றால் பூமி தனது அழகைப் பெற்று அலங்கரித்துக் கொள்ளும்போது அதன் உரிமையாளர்கள், அது தங்களின் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்று எண்ணிக்கொள்கிறார்கள். அப்போது திடீரென இரவிலோ பகலிலோ நம் கட்டளை வந்துவிடுகிறது. நாம் அங்கு நேற்றுவரை ஒன்றுமில்லாததைப் போல் அதனை அழித்து விடுகிறோம். இவ்வாறு நாம் சிந்திக்கும் மக்களுக்குச் சான்றுகளைத் தெளிவுபடுத்துகிறோம்.* (24)

*மெய்மறதியில் ஆழ்ந்திருக்கும்போது திடீர் வேதனை வந்தடைகிறது. அது தனிமனிதர்களின், அமைப்புகளின் வழக்கமான சிந்தனையோட்டத்தைத் தடைசெய்து விடுகிறது.*

*இரவுகள் உன்னை அமைதியாக்கிவிடும். அவற்றைக் கொண்டு நீ ஏமாந்துவிடுவாய். அவை விடியும்போதுதான் அழுக்குகள் புலப்படும்.*

*விளைச்சல்கள் அறுவடைசெய்யப்படும் சமயத்தில் ஏதேனும் ஒரு ஆபத்தால் அவை அழிக்கப்படுகின்றன. எதிர்பார்க்கப்பட்ட விளைச் சல்களைப் பெற்றுவிட முடியும் என்றே மக்கள் எண்ணுகிறார்கள். அதற்கு மாறான இந்த நிகழ்வு அவர்களுக்கு வேதனைமிக்க தண்டனை யாக ஆகிவிடுகிறது.*

*தங்களுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால் அல்லாஹ்வின் பக்கம் விரைவது மக்களின் உரிமைகளில் ஒன்றுதான். ஆனால், அந்தத் துன் பத்திலிருந்து அவர்கள் காப்பாற்றப்பட்ட பிறகு அவனுக்கு நன்றி செலுத்தக்கூடியவர்களாகவும் அவர்கள் இருக்க வேண்டும். எந்தத் துன்பத்துக்காக அவர்கள் அல்லாஹ்விடம் அடைக்கலம் தேடினார்களோ அது நீங்கிவிட்டபின்னரும் அல்லாஹ்வுடனான தங்களின் தொடர்பை அவர்கள் நிலைப்படுத்த வேண்டும். அவர்களால் அவனுடைய உதவி யின்றி இருக்க முடியாது.*

*மேற்கண்ட வசனத்தில் விளைச்சல் நிலம் உதாரணமாகக் கூறப்பட் டுள்ளது. இது மக்கள் பயன்படுத்தும் ஒவ்வொரு பொருளுக்கும் பொருந் தும். கர்வமும் அலட்சியமும் இறைத் தண்டனையைக் கொண்டுவரு கின்றன. மனிதர்கள் தாங்கள் விதைத்ததையே அறுவடைசெய்வார்கள்.*

❖ ❖ ❖

*அத்தியாயம் நிறைவடைவதற்கு முன்னால் பின்வரும் அறிவுரையுடன் கூடிய மென்மையான உரையாடலைக் கொண்டு மக்களிடம் உரை யாடும்படி தன் தூதருக்கு அல்லாஹ் கட்டளையிடுகிறான்:*

> *நீர் கூறும், 'மக்களே, என் மார்க்கத்தைக் குறித்து நீங்கள் சந்தேகத் தில் இருப்பீர்களானால், அல்லாஹ்வைத் தவிர நீங்கள் வணங்கு பவற்றை நான் வணங்க மாட்டேன். மாறாக, உங்களை மரணிக்கச் செய்பவனான அல்லாஹ்வையே நான் வணங்குவேன். நம்பிக்கை யாளர்களில் ஒருவனாக நான் இருக்க வேண்டும் என்றும் என் முகத்தை முழு நம்பிக்கையுடன் நேரான மார்க்கத்தின் பக்கமே திருப்ப வேண்டும் என்றும் இணைவைப்பாளர்களில் ஒருவனாகி விடக் கூடாது என்றும் நான் கட்டளையிடப்பட்டுள்ளேன்.' அல் லாஹ்வைத் தவிர உமக்குப் பலனளிக்கவோ தீங்களிக்கவோ இய லாதவற்றை நீர் அழைக்காதீர். நீர் அவ்வாறு செய்தீரானால் அநி யாயக்காரர்களில் உள்ளவராவீர். அல்லாஹ் ஏதேனும் ஒரு*

துன்பத்தை உமக்கு ஏற்படுத்தினால் அவனைத் தவிர அதனை நீக்குபவர் யாரும் இல்லை. அவன் உமக்கு ஏதேனும் நன்மையை அளிக்க நாடினால் அவனது அருளைத் தடுப்பவர் யாரும் இல்லை. தன் அடியார்களில் தான் நாடியோருக்கு அதனை வழங்குகிறான். அவன் பெரும் மன்னிப்பாளனாகவும் இணையிலாக் கிருபையாளனாகவும் இருக்கிறான். (104-107)

இதுதான் இஸ்லாம். அல்லாஹ் ஒருவனுடன் இணைந்திருப்பது, இணையாக்கப்பட்ட தெய்வங்கள் அனைத்தையும்விட்டு விலகிவிடுவது, அவனிடமே நம்பிக்கையும் அச்சமும் கொள்வது, இதனடிப்படையில் மனிதர்கள் அனைவருடனும் நடந்துகொள்வது.

அல்லாஹ் இந்த அத்தியாயத்தில் முந்தையவர்களின் சம்பவங்களிலிருந்து சில பகுதிகளை எடுத்துரைக்கிறான். அவற்றில் ஒன்று, இறைத்தூதர் யூனுஸின் சம்பவம். தம் சமூகத்தாருடன் அவர் நடந்துகொண்ட முறை மிகச் சுருக்கமாக எடுத்துரைக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் இடம்பெற்றிருப்பதால்தான் இந்த அத்தியாயத்துக்கு யூனுஸ் என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் யூனுஸின் சமூகம் காப்பாற்றப்பட்டதுபோல மக்காவின் குறைஷிகளும் காப்பாற்றப்படலாம் என்ற குறிப்பும் உணர்த்தப்படுவதாக நான் கருதுகிறேன்.

ஆரம்பகாலம்தொட்டே மக்காவாசிகள் இஸ்லாத்தைத் தீவிரமாக எதிர்த்துவந்தார்கள். இருபது வருடங்களுக்கு மேலாக அதற்கு எதிராகப் போரில் அவர்களே தலைமை ஏற்றிருந்தார்கள். ஆனாலும், அவர்கள் அதற்குப் பிறகு இஸ்லாத்தை ஏற்றுவிட்டார்கள். இஸ்லாமிய அணியில் இணைந்து அதன் கொடியை உயர்த்தினார்கள். அதன் கஅபாவைப் பாதுகாத்தார்கள்.

ஒப்பீட்டளவில் யூனுஸின் சமூகத்தார், ஹூது சமூகத்தாரைவிடச் சிறந்தவர்களாக இருந்தார்கள். அல்லாஹ் கூறுகிறான்:

யூனுஸின் சமூகத்தைத் தவிர வேறு ஊர்வாசிகள் கொண்டிருந்த நம்பிக்கை ஏன் அவர்களுக்குப் பயனளிக்கவில்லை? அவர்கள் நம்பிக்கை கொண்டபோது இவ்வுலக வாழ்வில் இழிவுதரும் வேதனையை நாம் அவர்களைவிட்டும் நீக்கினோம். குறிப்பிட்ட காலகட்டம்வரை அவர்களைச் சுகம் அனுபவிக்கச்செய்தோம். (98)

நபியவர்கள் அனுபவிக்கும் சிரமங்களை ஒத்த வெவ்வேறு சம்பவங்கள் தகுந்த இடத்தில் எடுத்துரைக்கப்படுகின்றன. அவற்றிலிருந்து பொதுவான படிப்பினைகள் பெறப்படுகின்றன. அவற்றில் ஒன்று,

காலங்கள் மாறினாலும் நிராகரிப்பாளர்களின் எதிர்வினைகள் ஒன்று போலவே இருக்கின்றன.

இறைத்தூதர் நூஹ் தம் சமூகத்தாருக்கு மத்தியில் தொள்ளாயிரத்து ஐம்பது வருடங்கள் அழைப்புப் பணி செய்துகொண்டிருந்தார்கள். ஆனாலும், அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளாமல் கர்வம் கொள்ளவே செய்தார்கள். இறுதியில் அவர்களின் இந்தப் பிடிவாதத்துக்கு முன்னால் அவருடைய நிலைப்பாடு எவ்வாறு மாறியது? அல்லாஹ் கூறுகிறான்:

> அவர்களுக்கு நூஹின் வரலாற்றைக் கூறுவீராக. அவர் தம் சமூகத்திடம் கூறினார், 'என் சமூகமே, நான் இங்கு இருப்பதும் அல்லாஹ்வின் வசனங்களைக் கொண்டு அறிவுறுத்துவதும் உங்களுக்குப் பாரமாக இருக்குமென்றால், நான் அல்லாஹ்வையே சார்ந்துள்ளேன். நீங்கள் ஒருமித்து தீர்மானித்துக்கொள்ளுங்கள். உங்கள் இணைத் தெய்வங்களையும் சேர்த்துக்கொள்ளுங்கள். உங்கள் தீர்மானத்தில் எவ்வித குறையும் இருக்க வேண்டாம். பின்னர், என் விசயத்தில் செய்ய விரும்புவதைச் செய்துகொள்ளுங்கள். எனக்கு அவகாசமும் அளிக்க வேண்டாம். நீங்கள் புறக்கணித்தால் நினைவில் வையுங்கள், நான் உங்களிடம் எந்தக் கூலியையும் கேட்கவில்லை. எனது கூலி அல்லாஹ்விடமே உள்ளது. நான் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்தோரில் இருக்க வேண்டும் என்றே கட்டளையிடப்பட்டுள்ளேன்.' (71,72)

நூஹ் தம் சமூகத்தாருக்கு எதைக் கூறினாரோ அதையே முஹம்மதும் தம் சமூகத்தாருக்குக் கூறினார். தூதர்கள் அல்லாஹ்வின் திருப்திக்காக அவன் பக்கம் அழைக்கக்கூடியவர்கள். அவர்கள் பதவியையோ செல்வத்தையோ விரும்ப மாட்டார்கள். அல்லாஹ்வைக் குறித்து மக்களுக்கு அறிமுகப்படுத்துவதே அவர்களுக்குப் போதுமானது.

அதற்குப் பிறகு சில தூதர்களைக் குறித்து கூறப்படுகிறது. பின்னர், ஃபிர்அவ்னையும் அவனுடைய சமூகத்தாரையும் குறித்து விரிவாகப் பேசப்படுகிறது. பின்னர், இஸ்றாயீலின் மக்கள் தங்களுக்கு வழிகாட்ட வந்த அழைப்பாளர்களுடன் எவ்வாறு நடந்துகொண்டார்கள் என்பது குறித்து குறிப்பிடப்படுகிறது.

சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாமல் கர்வம் கொண்டதும் மக்களின் மீது அநியாயம் இழைத்ததுமே ஃபிர்அவ்ன்களின் அழிவுக்குக் காரணமாக அமைந்தன. ஆனால், இஸ்றாயீலின் மக்கள் வஹீயைக் கொண்டு வியாபாரம் செய்தார்கள். துணிந்து அல்லாஹ்வின் மீதே புனைந்து

கூறினார்கள். அவர்களுக்கு வழங்கப்பட்ட அறிவைக் கொண்டு அவர்கள் பயனடையவில்லை:

இஸ்றாயீலின் மக்களை நாம் மிகச் சிறந்த இடத்தில் வசிக்கச் செய்தோம். அவர்களுக்குத் தூய்மையான உணவுகளை உண்ணக் கொடுத்தோம். அவர்களிடம் அறிவு வந்தபின்னரே அவர்கள் முரண்பட்டார்கள். அவர்கள் முரண்பட்ட விசயங்களில் மறுமை நாளன்று அவர்களிடையே உம் இறைவன் தீர்ப்பளிப்பான். (93)

முஹம்மதைப் பின்பற்றுபவர்கள் இஸ்றாயீலின் மக்கள் சறுக்கிய இடங்களிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் திருப்தியை நாடி அவனுடைய மார்க்கத்தை அவர்கள் சுமக்க வேண்டும். அவனையே அவர்கள் முன்னோக்க வேண்டும்.

❖ ❖ ❖

அத்தியாயம் 11

# ஹூது

(ஒரு நபியின் பெயர்)

*பல அத்தியாயங்களைப் போல இந்த அத்தியாயமும் திருக்குர் ஆனைக் குறித்த செய்தியோடுதான் ஆரம்பமாகிறது: 'அலிஃப், லாம், றா. இது வேதமாகும். யாவற்றையும் அறிந்த ஞானம்மிக்கவனால் இதன் வசனங்கள் உறுதிசெய்யப்பட்டு, பின்னர் தெளிவாக்கப்பட்டுள்ளன.* (1)'

*மகத்தான இந்த வேதமே இஸ்லாத்தின் அடித்தளம், அதன் தூதுத் துவத்தின் ஆதாரம், அதன் நிரந்தரத்தின் இரகசியம். மனிதர்கள் அனைவரையும் ஷிர்க்கிலிருந்து, தவறான வழிகளிலிருந்து விடுவித்து தவ்ஹீதின் பக்கம் கொண்டுவருவதற்காக நபியவர்கள் இதனை வஹீ யாகப் பெற்றார்கள். அல்லாஹ்வை மட்டும் பற்றிக்கொள்வது மாத்திரமே இங்கு வெற்றிக்கான அடித்தளம்: 'நீங்கள் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் வணங்காதீர்கள். நான் அவன் புறத்திலிருந்து உங்களுக்கு எச்சரிக்கைசெய்யக்கூடியவனாகவும் நற்செய்தி கூறக்கூடியவனாகவும்* இருக்கிறேன். (2)'

*எடுத்துரைக்கும் பொறுப்பு கடினமானது. நபியவர்கள் அதனைக் கடினமாகவே உணர்ந்தார்கள். நபிமொழியில் வந்துள்ளது: 'அபூபக்கர் அல்லாஹ்வின் தூதரிடம் கேட்கிறார், உங்களை நரைக்கச் செய்தது எது? ஹூது என்ற அத்தியாயமும் அதைப் போன்ற அத்தியாயங்களுமே என்னை நரைக்கச்செய்துவிட்டது என்றார்கள்.'*

*நரைக்கச் செய்யும் அளவுக்கு இந்த அத்தியாயத்தில் என்ன இருக் கிறது? நான் அதற்கான காரணத்தைத் தேடினேன். எனக்கு நானே கூறிக் கொண்டேன், 'சமூகங்கள் அழிக்கப்பட்ட வரலாறுகள் கூறப்பட்டுள்ளன, அவைதான் காரணமாக இருக்குமா? அவைபோன்ற வரலாறுகள் மற்ற அத்தியாயங்களிலும் கூறப்பட்டுள்ளனவே!'*

தூதரை ஏற்றுக்கொள்ளாமல் மக்கள் எதிர்த்ததும் நிராகரித்ததும் அவர்களை நரைக்கச்செய்திருக்குமா? இந்த அத்தியாயத்திலும் இந்தச் செய்தி இடம்பெறுகிறது:

பாருங்கள், அவர்கள் அல்லாஹ்விடமிருந்து மறைத்துக்கொள்வதற்காக எப்படித் தங்கள் நெஞ்சங்களை மூடிக்கொள்கிறார்கள். எச்சரிக்கை! அவர்கள் தங்களை ஆடைகளால் போர்த்திக் கொண்டாலும் அவர்கள் மறைப்பதையும் வெளிப்படுத்துவதையும் அல்லாஹ் அறிவான். அவன் உள்ளங்களில் உள்ளவற்றையும் நன்கறிந்தவன். (5)

நான் இந்தக் காரணத்தையும் சரியெனக் கருதவில்லை. மூடர்களின் புறக்கணிப்பால் அவர்கள் மனம் தளர மாட்டார்கள். அப்படியெனில் வேறென்ன காரணம் இருக்கும்?

❖ ❖ ❖

வேறெந்த அத்தியாயங்களிலும் அல்லாமல் இந்த அத்தியாயத்தில் தூதர் அதிகமாகவே விளித்து உரையாடப்படுகிறார். தொடர்ந்து அவர்கள் இவ்வாறு விளிக்கப்படுவது அவர்கள்மீது இருந்த பெரும் பொறுப்பை அவர்களுக்கு உணர்த்தியிருக்கலாம். பின்வரும் வசனத்தின் மூலம் அது தொடங்குகிறது:

'இவருக்கு ஒரு பொக்கிஷம் அருளப்பட்டிருக்க வேண்டாமா? அல்லது, இவருடன் ஒரு வானவர் வந்திருக்க வேண்டாமா?' என்று அவர்கள் கூறுவதால் உமக்கு அறிவிக்கப்பட்டவற்றில் சிலவற்றை நீர் விட்டுவிடுவீர் போலும்; அதனால் உமது மனம் இறுகிவிடும் போலும். நீர் எச்சரிக்கைசெய்பவர்தாம். அல்லாஹ்வே அனைத்துக்கும் பொறுப்பாளனாக இருக்கிறான். (12)

இந்த ஒரு வசனத்தில் மட்டும் மூன்று முறை சேர்ந்தாற் போன்றும் ஒருமுறை தனியாகவும் நபியவர்களை விளித்து முன்னிலைச் சொல் இடம்பெறுகிறது.

அத்தியாயத்தின் இறுதி வசனம்வரை இந்த வழிமுறை பல்வேறு வசனங்களில் இடம்பெறுகிறது:

வானங்களிலும் பூமியிலும் மறைவாக இருக்கின்றவை அல்லாஹ்வுக்கே உரியன. அவனிடமே அனைத்து விவகாரங்களும் திருப்பப்படுகின்றன. ஆகவே, நீர் அவனை வணங்கி அவனையே சார்ந்திருப்பீராக. உம் இறைவன் நீங்கள் செய்பவற்றைக் கவனிக்காமல் இல்லை. (123)

நூஹின் சமூகம் பிரளயத்தின் மூலம் அழிக்கப்பட்ட சம்பவத்தைக் குறிப்பிட்டபிறகு வசனம் இறைத்தூதரை விளித்து உரையாடுகிறது:

தூதரே, இவை மறைவான செய்திகளாகும். இவற்றை நாம் உமக்கு வஹீயாக அறிவிக்கிறோம். இதற்கு முன்னர் நீரும் உம் சமூகமும் இவற்றை அறிந்திருக்கவில்லை. ஆகவே, பொறுமையை மேற் கொள்வீராக. நிச்சயமாக முடிவு இறையச்சமுடையோருக்கே சாதகமாக அமையும். (49)

இந்த வசனத்தில் 'குன்த்த', 'தஃலமுஹா', 'அன்த்த' மூன்று வார்த்தை களும் ஒன்றிணைந்தார்போல் நபியவர்களையே முன்னோக்குகின்றன. இறுதியில் நபியவர்கள், 'இறுதி முடிவு இறையச்சமுடையோருக்கே சாதகமாக அமையும்.' என்று அறிவுறுத்தப்பட்டு, பொறுமையாக இருக் கும்படி பணிக்கப்படுகிறார்கள்.

சம்பவத்தின் இடையேயும் நபியவர்கள் விளித்து உரையாடப்படு கிறார்கள்:

'தூதர்தான் இதனைப் புனைந்துள்ளார்' என்று கூறுகிறார்களா? நீர் கூறும், 'இதனை நான் புனைந்திருந்தால் என் குற்றம் என் னையே சாரும். நீங்கள் செய்யும் குற்றங்களை விட்டு நான் விலகிக் கொண்டேன்.' (35)

இறைத்தூதரால் இவ்வாறு புனைய முடியுமா? அவர் உண்மையாள ரும் நம்பிக்கைக்கு உரியவருமாயிற்றே! உண்மையின் பக்கமே அவர் நிலைத்திருப்பார். இரு பிரிவினரில் யார் நேர்வழி பெற்றவர்கள் என்பதை விதி வெளிப்படுத்திவிடும்.

ஆது சமூகத்தாரின் சம்பவத்தை, அவர்கள் எப்படியெல்லாம் ஹூதைத் துன்புறுத்தினார்கள் என்பதைத் திருக்குர்ஆன் எடுத்துரைக்கிறது. பின்னர் அல்லாஹ் கூறுகிறான்: 'நம்முடைய கட்டளை வந்தபோது நம் கருணை யினால் ஹூதையும் அவருடன் நம்பிக்கை கொண்டவர்களையும் நாம் காப்பாற்றினோம். நாம் அவர்களைக் கடுமையான வேதனையிலிருந்து காப்பாற்றினோம். (58)' அதற்குப் பிறகு நபியவர்கள் விளித்து உரை யாடப்படுகிறார்கள்: 'அவர்கள்தாம் ஆது சமூகத்தினர். அவர்கள் தங்கள் இறைவனின் சான்றுகளை நிராகரித்து, அவனது தூதர்களுக்கு மாறு செய்தார்கள். வரம்புமீறிய பகைவர்கள் ஒவ்வொருவரின் பேச்சையும் அவர்கள் பின்பற்றினார்கள். (59)'

ஆது சமூகத்தாருக்கு என்ன நிகழ்ந்ததோ அதுவே ஸமூது சமூகத் தாருக்கும் நிகழ்ந்தது. நபியவர்கள் விளித்து உரையாடப்பட்டு இந்த

விளைவு அவர்களிடம் சுட்டிக்காட்டப்படுகிறது: ‘இறுதியில் நம் கட்டளை வந்தபோது நாம் நம் கருணையினால் ஸாலிஹையும் அவருடன் நம்பிக்கை கொண்டவர்களையும் அன்றைய நாளின் இழிவிலிருந்து காப்பாற்றினோம். நிச்சயமாக உம் இறைவன் வல்லமைமிக்கவனாகவும் யாவற்றையும் மிகைத்தவனாகவும் இருக்கிறான். (66)’

லூத்தின் சமூகத்தாருக்கு ஏற்பட்ட பேரழிவைக் குறித்து அல்லாஹ் தன் தூதருக்குக் கூறுகிறான்:

> இறுதியில் நம் கட்டளை வந்தபோது அந்த ஊரை தலைகீழாகப் புரட்டிவிட்டோம். அதன் மீது சுட்ட களிமண்ணைத் தொடர்ந்து பொழியச் செய்தோம். அது உங்கள் இறைவனிடமிருந்து அடையாளமிடப்பட்டதாக இருந்தது. இந்தத் தண்டனை அநியாயக்காரர்களைவிட்டும் தூரமாக இல்லை. (82,83)

இறுதி வாசகம் பாவமன்னிப்பு கோராமல் தவறான பாதையில் சென்று கொண்டிருந்த அறபுகளுக்கான எச்சரிக்கை.

❖ ❖ ❖

மத்யன்வாசிகளும் ஃபிர்அவ்ன்களும் அழிக்கப்பட்டதைக் குறித்து அல்லாஹ் தன் தூதருக்குக் கூறுகிறான்: ‘இவை சில ஊர்களைப் பற்றிய செய்திகள். இவற்றை நாம் உமக்கு எடுத்துரைக்கிறோம். அவற்றில் சில இன்றும் நிலைத்திருக்கின்றன. சில அழிந்துவிட்டன. (100)’ அத்தியாயத்தின் இறுதிப் பகுதியில் நபியவர்கள் இன்னும் அதிகமாக விளிக்கப்படுகிறார்கள். நபியவர்களை விளிக்கும் முன்னிலைச் சொல் கிட்டத்தட்ட பதினெட்டு தடவை இடம்பெற்றுள்ளது. இவையெல்லாம் இறைத் தூதரின் உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்காதா?

அதற்குப் பிறகு இடம்பெறக்கூடிய வசனம்:

> நாம் அவர்களுக்கு அநீதி இழைக்கவில்லை. மாறாக, அவர்கள் தமக்குத்தாமே அநீதி இழைத்துக்கொண்டார்கள். உம் இறைவனின் கட்டளை வந்தபோது அல்லாஹ்வைத் தவிர அவர்கள் அழைத்துக்கொண்டிருந்த தெய்வங்கள் அவர்களுக்கு எவ்வித பலனும் அளிக்கவில்லை; அவை இழப்பைத் தவிர வேறு எதையும் அவர்களுக்கு அதிகரிக்கவில்லை. அக்கிரமம் புரியும் ஊர்களை உம் இறைவன் பிடித்தால் அவனது பிடி இவ்வாறுதான் இருக்கும். நிச்சயமாக அவனது பிடி வேதனைமிக்கது; மிகக் கடுமையானது. (101,102)

*மறுமைநாளில் வழங்கப்படும் கூலியைப் பற்றிக் குறிப்பிடும்போது 'றப்' என்ற வார்த்தையோடு இரு முறையும் நல்லோர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது மூன்றாவது முறையும் நபியவர்களை விளிக்கும் முன்னிலைச் சொல் இடம்பெறுகிறது:*

> *துர்பாக்கியசாலிகள் நரகத்தில் இருப்பார்கள். அங்கே அவர்கள் கூக்குரலிட்டுக் கதறுவார்கள். வானங்களும் பூமியும் நிலைத்திருக்கும்வரை அங்கே அவர்கள் கிடப்பார்கள். ஆனால், உம் இறைவன் நாடினாலே தவிர. நிச்சயமாக உம் இறைவன் தான் நாடியதைச் செய்துவிடுகிறான்.* (106,107)

> *நற்பேறு பெற்றவர்கள் சுவனம் செல்வார்கள். வானங்களும் பூமியும் நிலைத்திருக்கும் வரை அங்கே அவர்கள் தங்கியிருப்பார்கள். ஆனால், உம் இறைவன் நாடினாலே தவிர. அவர்களுக்கு என்றும் முடிவுறாத அருட்கொடைகள் உண்டு.* (108)

*பின்னர் அல்லாஹ் அவருக்குக் கூறுகிறான்: 'இவர்கள் வணங்குகின்ற தெய்வங்கள்குறித்து நீர் சந்தேகப்பட வேண்டாம் ...* (109)*' அவர்கள், ஏற்கனவே எழுதப்பட்டுள்ள விதியின்படி கூலி கொடுக்கப்படும் நாள் வரை தாமதப்படுத்தப்படுவார்கள் என்று குறிப்பிடுகிறான்: 'உம் இறைவனின் வாக்கு முந்தியிராவிட்டால் அவர்களிடையே தீர்ப்பளிக்கப்பட்டிருக்கும்.* (110)*' ஒன்றுகூட்டப்படும் இந்த நாள்வரை தூதர் தமக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். சோதனைகளால் ஏற்படும் வலிகளையும் காத்திருப்பினால் உண்டாகும் வலிகளையும் அவர் தாங்கிக்கொள்ள வேண்டும். நீண்ட இந்தப் பயணத்தில் அவர் நிராசையடைந்துவிடக் கூடாது. 'நீரும் உம்முடன் இறைவனின் பக்கம் மீண்டவர்களும் உமக்குக் கட்டளையிடப்பட்டவாறு உறுதியாக இருங்கள்.* (112)*', 'பகலின் இரு நேரங்களிலும் இரவின் சில பகுதிகளிலும் தொழுகையைக் கடைப்பிடியுங்கள். நிச்சயமாக நன்மைகள் தீமைகளை அழித்துவிடுகின்றன. நினைவுகூர்வோருக்கு இது ஒரு நினைவூட்டலாகும்.* (114)*'*

*அத்தியாயத்தின் இறுதிப் பகுதி நெருங்கநெருங்க இன்னும் அதிகமாக நபியவர்கள் விளிக்கப்படுகிறார்கள். அல்லாஹ் தன் தூதருக்குக் கூறிய பின்வரும் வசனத்தைக் குறித்து சிந்தித்துப்பாருங்கள்:*

> *ஊர்களில் வசிக்கும் மக்கள் சீர்த்திருத்துபவர்களாக இருக்கும் நிலையில் அந்த ஊர்களை உம் இறைவன் அநியாயமாக அழித்துவிடுபவன் அல்ல. உம் இறைவன் நாடியிருந்தால் மக்கள் அனைவரையும் ஒரே சமூகமாக ஆக்கியிருப்பான். ஆனால், அவர்கள்*

எப்போதும் முரண்பட்டுக்கொண்டே இருப்பார்கள். ஆயினும், உம் இறைவன் கருணைபுரிந்தவர்களைத் தவிர. இதற்காகவே அவன் அவர்களைப் படைத்துள்ளான். 'ஜின்கள் மற்றும் மனிதர்கள் அனைவரையும் கொண்டு நான் நரகத்தை நிரப்பிவிடுவேன்.' என்ற உம் இறைவனின் வாக்கு நிறைவேறிவிட்டது. (117-119)

இவற்றையெல்லாம் கொண்டு, 'ஹூது என்ற அத்தியாயமும் அதைப் போன்ற அத்தியாயங்களும் என்னை நரைக்கச்செய்துவிட்டன.' என்ற நபியவர்களின் கூற்றை விளங்கிக்கொள்ள முடியாதா?

❖ ❖ ❖

தற்காலிகமான பாவங்கள் எதிர்காலத்தைப் பாழாக்காது. அவை உருவாகி அழிந்துவிடுகின்றன. பாவம்செய்தபிறகு ஏற்படும் வெட்கமும் அதனைத் தொடர்ந்து வரக்கூடிய நற்செயல்களும் அதனை அழிக்கும் காரணிகளாக இருக்கின்றன. சில சமயங்களில் அது மனிதனுக்கு அது போன்ற பாவங்களிலிருந்து பாதுகாக்கும் கேடயமாகவும் அமைந்து விடுகிறது. அது தீங்கைவிட அதிகமாக அவனுக்குப் பலனளித்துவிடு கிறது.

ஒரு சமூகத்தின் அழிவுக்குக் காரணமான பாவங்களே மனித மனதில் தங்கிவிடுகின்றன. அவை மனித உள்ளத்தின் ஒரு பகுதியாக மாறி, பின்னர் சமூகத்தின் ஒரு பகுதியாக மாறிவிடுகின்றன. பின்பற்றப்படும் சடங்கு களாக, நிலையான சட்டங்களாக அவை மாறிவிடுகின்றன. இப்படிப் பட்ட சூழலில் அவற்றைவிட்டு விலகியிருப்பது விசித்திரமான ஒன்றாகப் பார்க்கப்படுகிறது.

லூத்தின் சமூகத்தார் அவருக்கு அளித்த பதிலைக் கவனியுங்கள்: 'இவர்களை உங்கள் ஊரைவிட்டு வெளியேற்றுங்கள். இவர்கள்தாம் பரிசுத்தவான்களாம் என்பதுதான் அவருடைய சமூகத்தாருடைய பதிலாக இருந்தது. (7:82)' தூய்மையாக இருப்பது தீய செயலாகவும் அசிங்கத்தில் புரள்வது வழக்கமான ஒன்றாகவும் ஆகிவிட்டது.

மோசமான கலாச்சாரங்கள் இந்தக் கீழ்நிலையின் பக்கமே சாய்கின்றன. தற்கால நாகரிகத்திலும் அழிவுக்கான பல அடையாளங்கள் வெளிப் பட்டுவிட்டன. இங்குள்ளவர்களுக்கு இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் கூறப்பட்ட அறிவுரையைக் கூறுவோர் அவசியமானவர்களாக ஆகி விட்டார்கள்:

இது வேதமாகும். யாவற்றையும் அறிந்த ஞானம்மிக்கவனால் இதன் வசனங்கள் உறுதிசெய்யப்பட்டு, பின்னர் தெளிவாக்கப்

பட்டுள்ளன. நீங்கள் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் வணங்காதீர்கள். நான் அவன் புறத்திலிருந்து உங்களுக்கு எச்ச ரிக்கை செய்பவனாகவும் நற்செய்தி கூறுபவனாகவும் இருக்கி றேன். நீங்கள் உங்கள் இறைவனிடம் மன்னிப்பு கோரி அவனிடமே மீண்டு விடுங்கள். அவன் குறிப்பிட்ட காலம்வரை நல்ல முறை யில் உங்களைச் சுகம் அனுபவிக்கச் செய்வான். தகுதியான ஒவ் வொருவருக்கும் தன்னிடமிருந்து அதிகம் வழங்குவான். நீங்கள் புறக்கணித்தால், நான் உங்கள்மீது மாபெரும் நாளின் வேதனையை அஞ்சுகிறேன். (1-3)

பாவமன்னிப்பு கோருபவர்களுக்கு உடனடியாகச் சுகமான வாழ்வு கிடைக்கும் என்று வாக்குறுதியளிக்கப்படுகிறது. இந்த உலக வாழ்வு சோதனைக் களமாக இருந்தாலும் மனித மனம் சுகமான வாழ்வையே விரும்பும். சோதனைகள் மனித உள்ளங்களைத் துன்புறுத்துகின்றன. அல்லாஹ் தன் அடியார்களுக்கு நிம்மதியை வழங்குகிறான். அவர்களின் விவகாரங்களைச் சீர்படுத்துகிறான். ஆனால் ஒரு நிபந்தனை. அவர்கள் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டவர்களாக, அவனையே முன்னோக்கிய வர்களாக இருக்க வேண்டும்.

நமக்கு வழங்கப்பட்ட இந்த வாக்குறுதி நமக்கு முன்னால் ஆது சமூகத்துக்கும் வழங்கப்பட்டது. அவர்களின் சகோதரர் ஹூது அவர் களிடம் கூறினார்,

‘என் சமூகமே, உங்கள் இறைவனிடம் மன்னிப்பு கோரி அவ னிடமே மீளுங்கள். அவன் உங்கள்மீது வானிலிருந்து நன்கு மழை பொழியச்செய்வான். உங்கள் வலிமையை இன்னும் அதிகப்படுத்து வான். குற்றவாளிகளாகப் புறக்கணித்து விடாதீர்கள்’ என்று கூறி னார். அதற்கு அவர்கள் கூறினார்கள், ‘ஹூதே, நீர் எங்களிடம் எந்தத் தெளிவான சான்றையும் கொண்டுவரவில்லை. உமது பேச்சை நம்பி எங்களின் தெய்வங்களை நாங்கள் விட்டுவிட மாட்டோம். உம்மை நாங்கள் ஏற்றுக்கொள்ளவும் மாட்டோம்.’ (52,53)

இந்தப் பதிலைச் செவியேற்பவர் அந்தச் சமூகத்தார் அறிவுடையோர் என்றும் ஆதாரம் எடுத்துரைக்கப்பட்டால் ஏற்றுக்கொள்வர் என்றும் எண்ணுவார்.

ஆனால், அவர்களின் இந்த நடத்தைக்கும் அறிவுக்கும் எந்தச் சம்பந்த மும் இல்லை. சிலை வழிபாட்டாளர்களிடம் எந்த அறிவை எதிர்பார்க்க முடியும்? ஆதாரத்தோடுதான் அவர்கள் கற்களை வணங்கினார்களா?

இதற்கு முன்னால் ஹூது அவர்களை அல்லாஹ் ஒருவனின் பக்கம் அழைத்தபோது விசித்திரமாகப் பதிலளித்தார்கள்: 'உம்மை நாங்கள் மடமையிலேயே காண்கிறோம். உம்மைப் பொய்யர் என்றும் கருது கிறோம். (7:66)' சகிப்புத்தன்மைமிக்க அந்த மனிதர் அவர்களுக்குப் பதிலளித்தார்: 'என் சமூகமே, என்னிடம் மடமைத்தனம் இல்லை. மாறாக, நான் அகிலங்களின் இறைவனால் அனுப்பப்பட்ட தூதராவேன். உங்க ளுக்கு என் இறைவனின் செய்திகளை எடுத்துரைக்கிறேன். நான் உங் கள் நலன்விரும்பியாகவும் நம்பிக்கைக்குரியவனாகவும் இருக்கிறேன். (7:67,68)'

❖ ❖ ❖

திருக்குர்ஆனில் சம்பவங்கள் மீண்டும்மீண்டும் இடம்பெறுகின்றன. ஆயினும், ஒவ்வொரு சம்பவத்திலும் மற்றவற்றில் காண முடியாத தனித்துவமான ஒன்று காணப்படுகிறது. பல்வேறு சம்பவங்களை ஒன்றி ணைத்தே ஒரு சமூகத்தின் உண்மைநிலை அறியப்படுகிறது. இது தனித் துவமான அறிவை வேண்டிநிற்கும் ஒரு செயல்பாடு.

அல்அஃறாஃப் என்ற அத்தியாயத்தில் வந்துள்ளவாறே முந்தையவர் களின் சம்பவங்களும் அவர்கள் அடைந்த விளைவுகளும் இந்த அத்தி யாயத்திலும் வந்துள்ளன. ஆனாலும், இந்த அத்தியாயத்தில் நூஹின் சமூகத்தார் குறித்து அல்அஃறாஃப் அத்தியாயத்தில் இடம்பெறாத விரிவான செய்திகள் இடம்பெறுகின்றன.

நூஹ் தம் மகனைத் திருப்பியளிக்குமாறு இறைவனிடம் மன்றாடு வதைக் காணும் மனிதன் அச்சத்தை உணர்வான்.

> நூஹ் தம் இறைவனிடம் பிரார்த்தித்து, 'என் இறைவனே, என் மகனும் என் குடும்பத்தில் உள்ளவன்தான். நிச்சயமாக உன் வாக் குறுதி உண்மையானது. நீ அனைவரிலும் மிகச் சிறந்த நீதிபதியாக இருக்கிறாய்.' என்று கூறினார். (45)

என் குடும்பத்தாரைக் காப்பாற்றுவதாக நீ வாக்களித்துள்ளாய். என் மகனும் என் குடும்பத்தில் உள்ளவன்தான். ஆகவே, அவனைத் திருப்பித் தந்துவிடு. இறைவனின் பதில் மிகக் கடுமையான தொனியில் அமைகிறது. அவன் கூறினான்:

> 'நூஹே, அவன் உன் குடும்பத்தைச் சார்ந்தவன் அல்ல. ஏனெனில், அவனது செயல் சீர்கெட்டது. உமக்கு அறிவு இல்லாத விசயங் களைப் பற்றி என்னிடம் கேட்காதீர். நீர் மூடர்களில் ஒருவராகிவிட வேண்டாம் என்று நான் உம்மை அறிவுறுத்துகிறேன்.' (46)

சிலர் நூஹின் மனைவி அவருக்குத் துரோகம் இழைத்து தவறான வழியில் மகனைப் பெற்றுவிட்டு, அவனை நூஹோடு இணைத்து விட்டதாக எண்ணுகிறார்கள்.

இது தவறான எண்ணமாகும். இப்படிப்பட்ட இழிநிலையிலிருந்து அல்லாஹ் தன் தூதர்களைப் பாதுகாத்துள்ளான்.

சரியான விசயம் இதுதான், அவரது மனைவியின் துரோகம் என்பது அவருடைய தூதுத்துவத்தை ஏற்றுக்கொள்ளாமையாகும். அவளும் நிராகரிப்பாளர்களின் அணியில் இருந்தாள். அவளுடைய மகனும் அவளுடைய நிலைப்பாட்டை ஆதரித்துக்கொண்டும் அல்லாஹ்வின் எதிரிகளுக்கு உதவிக்கொண்டும் இருந்தான். பிரளயம் ஏற்பட்டபோது மலை உச்சிக்குச் சென்று தன்னைக் காத்துக்கொள்ளலாம் என்று அவன் எண்ணினான்.

ஆனால், பொதுவான அந்த அழிவு அவனையும் உள்ளிழுத்துக் கொண்டது. இதுதான் மேற்கண்ட வசனத்தின் பொருள்.

பின்னர் நூஹ் வருத்தப்பட்டுக் கூறினார்:

> ‘என் இறைவனே, எனக்கு அறிவு இல்லாத விசயங்களை உன்னிடம் கேட்பதைவிட்டும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். நீ என்னை மன்னித்து, கருணை காட்டவில்லை என்றால் நான் அழிந்துவிடுவேன்.’ ‘நூஹே, நீரும் உம்முடன் இருக்கின்ற சமூகமும் நம்மிடமிருந்து அமைதியையும் அருள்வளங்களையும் பெற்று இறங்குங்கள்!’ (47,48)

நூஹ், இப்றாஹீம் தொடங்கி மூசா, ஈசா, முஹம்மது ஆகியோர் வரை கொண்டுவந்த தூதுத்துவங்கள் வேறுவேறாக இருப்பினும் வெவ் வேறு காலகட்டங்களாக இருந்தாலும் அல்லாஹ்வின் மார்க்கம் இரத்த உறவுக்கு முன்னால் ஈமானிய உறவையே முன்னிலைப்படுத்துகிறது. விருப்பையும் வெறுப்பையும் அல்லாஹ்வுக்காக ஆக்கிக்கொள்ளும்படி, தங்களுக் கிடையே உள்ள தொடர்புகளை மனிதர்கள் அதனடிப்படை யிலேயே அமைத்துக்கொள்ளும்படி அது வலியுறுத்துகிறது.

நாம் நூஹின் சமூகத்தாரை விட்டுவிட்டு ஹூதின் சமூகத்தாரின் பக்கம் செல்வோம். அவர்களும் தங்களின் தூதரை நிராகரித்து, அவரைக் கடுமையாக வெறுத்தார்கள். கர்வமும் பிடிவாதமும் கொண்ட அந்த மக்களுக்கு முன்னால் தாம் தனியராக நிற்பதை அவர் உணர்ந்தபோது கூறினார்: ‘என் இறைவனும் உங்கள் இறைவனுமான அல்லாஹ்வையே

நான் முழுமையாகச் சார்ந்துள்ளேன். எந்த உயிரானாலும் அதன் நெற்றி முடி அவன் பிடியிலேயே உள்ளது. நிச்சயமாக என் இறைவன் நேரான வழியில் இருக்கிறான். (56)'

இறுதியில் இறைத் தண்டனையும் கடுமையாகவே இருந்தது. தங்களின் பலத்தைக் கொண்டு கர்வம் கொண்டிருந்த அவர்களை, எந்தப் பயனையும் ஏற்படுத்தாமல் அழிவை ஏற்படுத்தக்கூடிய மலட்டுக் காற்று தூக்கி வீசியது. பூமி கடுமையாக அவர்களைத் தாக்கியது. அது அவர்களின் தலைகளைத் தூக்கி வீசியது: 'வேரோடு பிடுங்கப்பட்ட பேரீச்சை மரங்களைப் போல் அது மக்களைத் தூக்கியெறிந்தது. நான் அளித்த வேதனையும் எச்சரிக்கையும் எப்படி இருந்தன? (54:20,21)'

ஹூதும் அவருடன் நம்பிக்கை கொண்டவர்களும் காப்பாற்றப்பட்டார்கள்: 'நம்முடைய கட்டளை வந்தபோது நம் கருணையினால் ஹூதையும் அவருடன் நம்பிக்கை கொண்டவர்களையும் நாம் காப்பாற்றினோம். நாம் அவர்களைக் கடுமையான வேதனையிலிருந்தும் காப்பாற்றினோம். (58)'

துன்பமான இந்தச் சம்பவம் இந்தப் பின்னூட்டத்தோடு நிறைவடைகிறது:

> அவர்கள்தாம் தங்கள் இறைவனின் சான்றுகளை நிராகரித்து அவனது தூதர்களுக்கு மாறுசெய்த ஆது சமூகத்தினர். வரம்புமீறிய பகைவர்கள் ஒவ்வொருவரின் பேச்சையும் அவர்கள் பின்பற்றினார்கள். இவ்வுலகிலும் மறுமையிலும் சாபமே அவர்களைப் பின்தொடரும். அறிந்துகொள்ளுங்கள், ஆது சமூகம் தங்கள் இறைவனை நிராகரித்தது. அறிந்துகொள்ளுங்கள், ஹூதுடைய மக்களான 'ஆது' மீது சாபம் உண்டாகட்டும் ... (59,60)

பலம் கொண்ட பாவிகள்மீது அல்லாஹ்வின் வாக்கு நிலைபெற்றபோது அவர்கள் கடுகைவிட இழிவானவர்களாக ஆகிவிட்டார்கள். வானங்கள் மற்றும் பூமியின் அதிபதிக்கு முன்னால் அவர்களின் பலம் அவர்களுக்கு எந்தப் பலனையும் தரவில்லை.

அந்த அறபுகளை இந்த நிலைக்கு இட்டுச்சென்றது எது? ஏன் அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தூதர்களை நிராகரித்தார்கள், தூதர்களைப் பின்பற்றியோரைக் கொடுமைப்படுத்தினார்கள், அழிவுக்குரியவர்களாகத் தங்களை ஆக்கிக்கொண்டார்கள், அழிக்கப்பட்ட அறபுகள் என்று பெயரிடப்பட்டார்கள்?

ஆதுகுறித்த செய்தியை நாம் குறிப்பிட்டோம். இப்போது ஸமூது குறித்த செய்தியையும் அவர்கள் தங்கள் தூதர் ஸாலிஹுடன் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதையும் காணலாம்.

நூஹின் காலகட்டத்தில் தோன்றிய சமூக ஏற்றத்தாழ்வுகள் ஸமூது சமூகத்தாரிடையே மிக வலுவாகவே வெளிப்பட்டது. இறைத்தூதர் ஸாலிஹைப் பின்பற்றியவர்களில் பெரும்பாலோர் பலவீனர்கள்.

> அவரது சமூகத்தில் ஆணவம் கொண்ட பிரமுகர்கள் பலவீனமாகக் கருதப்பட்ட நம்பிக்கையாளர்களிடம், 'ஸாலிஹ் தம்முடைய இறைவனால் அனுப்பப்பட்ட தூதர் என்று நீங்கள் நம்புகிறீர்களா?' என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், 'ஆம், அவர் கொண்டுவந்த தூதை நாங்கள் நம்புகிறோம்.' என்றார்கள். அதற்கு அந்த ஆணவக்காரர்கள், 'நீங்கள் நம்புவதை நாங்கள் நிராகரிக்கிறோம்.' என்றார்கள். (7:75,76)

தனிமனிதன் கர்வம் கொள்வது தீய பண்பாகும். ஒரு சமூகமே கர்வம் கொள்வது அதன் தீமையை இன்னும் அதிகப்படுத்திவிடுகிறது.

குருட்டுத்தனமான இந்தக் கர்வத்திலிருந்துதான் இனவெறி தோன்றுகிறது. தற்காலத்திலும் கடந்தகாலத்திலும் மக்களிடையே பரவிய இனவெறிக்குப் பின்னால் இந்தக் கர்வம்தான் இருக்கிறது.

தற்காலத்தில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள வெள்ளையர்களிடம் இந்த இனவெறிதான் காணப்படுகிறது. அதிகாரம் அதனை வெளிப்படுத்துகிறது. பலவீனம் அதனை மறைக்கிறது. ஜாஹிலிய்யக் காலத்திலும் இந்த இனவெறிதான் காணப்பட்டது. அம்று இப்னு குல்சூமின் பின்வரும் கவிதையைக் கவனித்துப் பாருங்கள்:

> நாங்கள் தண்ணீர் அருந்த வரும்போது அது சுத்தமாகக் காணப்படுகிறது. எங்களைத் தவிர மற்றவர்கள் அருந்தும்போது அது அசுத்தமானதாக இருக்கிறது.

ஏன் இந்தக் கர்வம்? ஜெர்மனியர்கள் அனைவரையும்விட உயர்ந்தவர்கள் அல்லது எகிப்தியர்கள் அனைவரையும் விட உயர்ந்தவர்கள்! இதுபோன்ற கோஷங்கள்தான் நவீன நாட்டுப்பற்றாகக் கருதப்படுகின்றன. எல்லா தொடர்புகளைவிட இதுவே வலுவான தொடர்பாக ஆகிவிட்டது.

இதுபோன்ற வெற்றுக் கோஷங்களுக்காக அல்லாஹ் மனிதர்களைப் படைக்கவில்லை. ஆகவே, அவன் ஸமூது சமூகத்தாருடைய சம்பவத்தில் கூறுகிறான்:

*ஸமூது சமூகத்தாரிடம் அவர்களின் சகோதரர் ஸாலிஹை அனுப்பி னோம். அவர் கூறினார், 'என் சமூகமே, அல்லாஹ்வை வணங் குங்கள். அவனைத் தவிர உங்களுக்கு வேறு இறைவன் இல்லை. அவனே பூமியிலிருந்து உங்களைப் படைத்து அதில் உங்களை வசிக்கச் செய்தான். ஆகவே, நீங்கள் அவனிடம் மன்னிப்பு கோரி அவன் பக்கமே மீளுங்கள். நிச்சயமாக என் இறைவன் அருகில் இருப்பவனாகவும் ஏற்றுக்கொள்பவனாகவும் இருக்கிறான்.'* (61)

*உண்மையில் இது ஸமூது சமூகத்தாருக்கான அழைப்பு மட்டுமல்ல. முழு மனிதச் சமூகத்துக்கும் அல்லாஹ் விடுக்கும் அழைப்பு. அவன்தான் அவர்களைப் படைத்து பூமியில் வசிக்கச் செய்து அதனை வளப்படுத்தும் பொறுப்பை அவர்களுக்கு வழங்கினான். அங்கு அவர்கள் குறிப்பிட்ட காலம்வரை அவனை வணங்க வேண்டும் என்றும் பின்னர் அவர்கள் செய்தவற்றைக் குறித்து விசாரணை செய்யப்படுவதற்காக அவன் பக்கமே மீண்டும் திரும்புவார்கள் என்றும் அவன் அவர்கள்மீது விதித்தான்.*

*தற்காலத்தில் உள்ள மனிதர்களில் இரு வகையினரைப் பார்த்து நாம் ஆச்சரியப்படுகிறோம். ஒரு வகையினர், பூமியைச் சிறந்த முறையில் வளப்படுத்தும் கலையை அறியாதவர்கள். செயல்பட வேண்டிய அளவு செயல்படாமல் இருக்கும் இவர்கள் தங்களை நம்பிக்கையாளர்கள் என்றும் அழைத்துக்கொள்கிறார்கள்.*

*இன்னொரு வகையினர், பூமியை வளப்படுத்தும் கலையை நன்கறிந்து செயல்படுத்துபவர்கள். அதற்கு அப்பால் உள்ள விண்வெளியையும் அவர்கள் ஆராய்ச்சிசெய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், அல்லாஹ் வுடனான தொடர்பில் பூஜ்யமாக இருக்கிறார்கள் அல்லது மிகவும் அரி தாகவே தொடர்புகொள்கிறார்கள்.*

*ஸமூது சமூகத்தினர் இரண்டாவது வகையான மனிதர்களைச் சேர்ந்த வர்கள். அவர்களின் தூதர் ஸாலிஹ் அவர்களிடம் கூறினார்:*

*ஆது சமூகத்துக்குப் பின் இறைவன் உங்களை வழித்தோன்றல்களாக ஆக்கியதையும் பூமியில் உங்களுக்கு இடமளித்ததையும் நினைவு கூருங்கள். நீங்கள் அதன் சமவெளிகளில் மாளிகைகளைக் கட்டு கிறீர்கள். மலைகளைக் குடைந்து வீடுகளை அமைக்கிறீர்கள். ஆகவே, அல்லாஹ்வின் அருட்கொடைகளை நினைவுகூருங்கள். பூமியில் குழப்பம்செய்துகொண்டு திரியாதீர்கள்.* (7:74)

*கர்வமும் அக்கிரமமும் ஸமூது சமூகத்தாரைக் குருடாக்கின. அவர்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்தவில்லை: 'இறுதி*

யில் நம் கட்டளை வந்தபோது நாம் நம் கருணையினால் ஸாலிஹையும் அவருடன் நம்பிக்கை கொண்டவர்களையும் அன்றைய நாளின் இழிவிலிருந்து காப்பாற்றினோம். நிச்சயமாக உம் இறைவன் வல்லமை மிக்கவனாகவும் யாவற்றையும் மிகைத்தவனாகவும் இருக்கிறான். (66)'

ஸமூது சமூகத்தாருக்குப் பிறகு மத்யன்வாசிகள் வந்தார்கள். அவர்களின் வாழ்க்கை, அரசியல் சீரழிவுக்கும் பொருளாதாரச் சீரழிவுக்கும் மத்தியில் தடுமாறிக்கொண்டிருந்தது. அல்அஃஹ்ராஃப் என்ற அத்தியாயத்தில் அரசியல் சீரழிவுக்கு எதிராகப் போர் அறிவிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். இந்த அத்தியாயத்தில் பொருளாதாரச் சீரழிவுக்கு எதிராகப் போர் அறிவிக்கப்பட்டுள்ளது.

அல்அஃஹ்ராஃப் என்ற அத்தியாயத்தில் அல்லாஹ் மத்யன்வாசிகளிடம் மற்றவர்களின் கருத்துகளைப் பொறுத்துக்கொள்ளும்படியும் அவர்களின் ஆதாரங்களைக் காணும்படியும் அவர்களை அச்சுறுத்தக் கூடாது என்றும் வேண்டினான்:

> மக்களை அச்சுறுத்துவதற்காகவும் அல்லாஹ்வின் பாதையை விட்டுத் தடுப்பதற்காகவும் அந்தப் பாதையில் கோணலை ஏற்படுத்துவதற்காகவும் நீங்கள் வழிகளில் அமராதீர்கள். நீங்கள் மிகவும் குறைவானவர்களாக இருந்தீர்கள். அவனே உங்களை அதிகரிக்கச் செய்தான் என்பதை எண்ணிப்பாருங்கள். குழப்பவாதிகளின் முடிவு என்னவாயிற்று என்பதைப் பாருங்கள். (7:86)

ஷுஐபின் அழைப்புக்கு முன்னால் மக்கள் இரு வகையினராக இருந்தார்கள். ஒரு பிரிவினர், அவரது அழைப்பை ஏற்றுக்கொண்டு அவருடன் இருந்தவர்கள். மற்றொரு பிரிவினர், அவரது அழைப்பை நிராகரித்து அவரை எதிர்த்தவர்கள்.

இந்த விவகாரத்தைக் காலத்தின் வசம் ஒப்படைத்துவிடும்படியும் எது சத்தியம் எது அசத்தியம் என்பதைக் காலம் விரைவில் காட்டிவிடும் என்றும் நம்பிக்கையாளர்களை அச்சுறுத்தாதிருக்கும்படியும் ஈமானை விட்டுவிடும்படி அவர்களை நிர்ப்பந்திக்காதிருக்கும்படியும் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்:

> அவர் கூறினார், 'நான் கொண்டுவந்துள்ள தூதின் மீது உங்களில் சிலர் நம்பிக்கை கொண்டும் சிலர் நம்பிக்கை கொள்ளாமலும் இருந்தால் அல்லாஹ் நமக்கிடையே தீர்ப்பளிக்கும்வரை காத்திருங்கள். அவன் தீர்ப்பளிப்பதில் மிகச் சிறந்தவன்.' (7:87)

ஆனாலும் மத்யன்வாசிகள் குருட்டுத்தனமான இந்த எதிர்ப்பையும் குழப்பத்தையுமே தேர்ந்தெடுத்தார்கள்: ‘அவரது சமூகத்தில் ஆணவம் கொண்ட பிரமுகர்கள் கூறினார்கள், ஷுஐபே, உன்னையும் உன்னுடன் நம்பிக்கை கொண்டோரையும் எங்கள் ஊரிலிருந்து வெளியேற்றிவிடு வோம் அல்லது நீ எங்கள் மார்க்கத்துக்குத் திரும்பிவிட வேண்டும். (7:88)’

இந்த அத்தியாயத்தில் அவர்கள் விளித்து உரையாடப்பட்டு, அல் லாஹ்வுக்கு மற்றவர்களை இணையாக்கியதோடு பொருளாதார விசயத் தில் அவர்கள் செய்துகொண்டிருந்த மோசடிகளும் சுட்டிக்காட்டப்படு கின்றன:

மத்யன்வாசிகளிடம் அவர்களின் சகோதரர் ஷுஐபை அனுப்பி னோம். அவர் கூறினார், ‘என் சமூகமே, அல்லாஹ்வை வணங் குங்கள். அவனைத் தவிர உங்களுக்கு வேறு இறைவன் இல்லை. அளவையிலும் நிறுவையிலும் குறைவுசெய்யாதீர்கள். நான் உங்களை நல்ல நிலையில் காண்கிறேன். ஆனால், உங்கள்மீது சூழ்ந்துகொள்ளும் ஒரு நாளின் வேதனையைக் குறித்து அஞ்சு கிறேன். என் சமூகமே, அளவையையும் நிறுவையையும் நேர்மை யாக முழுமையாக்குங்கள். மக்களுக்கு அவர்களின் பொருள் களைக் குறைத்துக் கொடுக்காதீர்கள். பூமியில் குழப்பம் செய்து கொண்டு திரியாதீர்கள் …’ (84,85)

ஆனால், அவரது சமூகத்தார் பரிகாசத்துடனும் ஆணவத்துடனும் அவருக்குப் பதிலளித்தார்கள்:

‘ஷுஐபே, எங்கள் முன்னோர் வணங்கி வந்தவற்றை விட்டுவிடும் படி அல்லது எங்கள் செல்வத்தில் நாங்கள் விருப்பம்போல் செலவுசெய்வதை விட்டுவிடும்படியா உம் தொழுகை உம்மை ஏவுகிறது? நீர் மட்டும்தான் அறிவாளியாகவும் நன்னடத்தை கொண்டவராகவும் இருக்கிறீர்!’ (87)

இவ்வாறு அவர்கள் ஓரிறைக் கொள்கையை, நேர்மையை, தூய்மையை நிராகரித்தார்கள்.

இறைத்தூதர் ஸாலிஹ் தொடர்ந்து நன்மையை ஏவியவராக, தீமை யைத் தடுத்தவராகக் களத்தில் நிலைத்திருந்தபோது அவரிடம் கூறி னார்கள்: ‘எங்களில் பலவீனமானவராகவே உம்மைக் காண்கிறோம். உம்முடைய குலத்தார் மட்டும் இல்லையெனில் உம்மைக் கல்லால் அடித்தே கொன்றிருப்போம். நீர் ஒன்றும் எங்களுக்குக் கடினமானவர் இல்லை. (91)’

ஏமாற்றிக்கொண்டும் குழப்பம்செய்துகொண்டும் இருந்த அந்தச் சமூகத்தாரின் அழிவோடு சம்பவம் நிறைவடைகிறது. முந்தையவர் களைப் போன்றே அவர்களும் அழிக்கப்பட்டார்கள். ‘அறிந்துகொள் ளுங்கள், ஸமூது சமூகம் சபிக்கப்பட்டதுபோன்று மத்யன்வாசிகளும் சபிக்கப்பட்டார்கள். (95)’

அல்லாஹ் ஃபிர்அவ்ன்களையும் அழித்தான். அதுகுறித்து மற்ற அத்தி யாயங்களில் விரிவான செய்திகள் இடம்பெறுகின்றன. பின்னர் அல்லாஹ் தன் தூதருக்குக் கூறினான்: ‘நாம் தூதர்களின் செய்திகளிலிருந்து எல்லா வற்றையும் உமக்கு எடுத்துக்கூறி அதன் மூலம் உமது உள்ளத்தைப் பலப்படுத்துகிறோம். இவற்றில் உண்மையும் நம்பிக்கையாளர்களுக்கு அறிவுரையும் நினைவூட்டலும் உம்மிடம் வந்துள்ளன. (120)’

குறைஷிகளால் நிராகரிக்கப்பட்ட இறுதித் தூதர், அவர்களின் நிரா கரிப்பு புதிய ஒன்றல்ல என்பதை அறிந்துகொள்ளும் பொருட்டு இந்த அத்தியாயம் முந்தைய சமூகங்களின் நிலைமைகளைக் குறித்து விரிவாகப் பேசுகிறது. சத்தியத்துக்கும் அசத்தியத்துக்குமான மோதல் நிரந்தரமானது. ஆனால், முடிவுகள் நம்பிக்கையாளர்களுக்குச் சாதகமாகவே அமையும். இறையச்சமுடையவர்கள் கண்ணியப்படுத்தப்படுவார்கள்.

❖ ❖ ❖

இந்தப் பிரபஞ்சம் தோன்றிய பெருவெடிப்பைக் குறித்து வாசித்துப் பார்த்தேன். அதற்குப் பிறகே கோள்கள் சுற்ற ஆரம்பித்தன. அதுதான் இந்த உலகுக்கு இப்போதைய போக்கை வழங்கியது.

அது எப்போது நிகழ்ந்தது என்பதை யாராலும் கணக்கிட முடிய வில்லை. நான் நினைக்கிறேன், பெரும் பாலைவனத்தில் உள்ள மணல் துகள்களை எண்ணுவதைவிட அது நிகழ்ந்த வருடத்தைக் கணக்கிடுவது கடினமானது.

நிச்சயமாக இந்தப் பிரபஞ்சம் படைக்கப்பட்டது ஆச்சரியம் ஏற்படுத்தும் பெரும் நிகழ்வுதான். ஆனால், அதைவிட ஆச்சரியமானது அது நிலைத் திருப்பதும் அதன் வாழ்க்கையும்தான்.

ஒரு குழந்தை படைக்கப்படுவது மிகப் பெரிய ஒன்றுதான். ஆனால், அதைவிட ஆச்சரியம் தரக்கூடிய ஒன்று, அது வளர்ச்சியடைவதற்காக அதற்கு அனுப்பப்படும் உணவு. ஒரு குழந்தைக்கு மட்டுமா இப்படி வழங்கப்படுகிறது? எண்ணிக் கணக்கிட முடியாத அளவு இந்தப் பூமியில் காணப்படும் உயிரினங்களுக்கும் தாவரங்களுக்கும் வழங்கப்படுகிறதே!

பூமியில் உள்ள உயிரினங்கள் அனைத்துக்கும் உணவளிப்பது அல் லாஹ்வின் கடமையாகும். அவற்றின் தங்குமிடத்தையும் அவை சென்றடையும் இடத்தையும் அவன் அறிவான். அனைத்தும் ஒரு தெளிவான பதிவேட்டில் உள்ளது. (6)

எனக்குநானே ஒரு கேள்வி கேட்டுக்கொண்டேன், 'நான் எப்படி உருவானேன்? நான் வாழும் இந்தப் பூமி எப்படி உருவானது?' தாவர வியல் அறிஞர்கள் இந்தப் பிரபஞ்சத்தின் கிழக்குகளுக்கும் மேற்கு களுக்கும் மத்தியில் மிகப் பெரிய தூரம் இருப்பதாக எனக்குப் புரிய வைக்கிறார்கள்!

இந்தக் கேள்விக்கு அல்லாஹ்மீது நான் கொண்ட நம்பிக்கையே பதிலளித்தது, 'மகத்தான அரியணையின் இறைவனுக்குத் தூரமும் நெருக்கமும் ஒன்றுதான். அவன் அரியணையின் மீது இருந்துகொண்டே என்னைப் பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டும் என்மீது ஆதிக்கம் செலுத்திக் கொண்டும் இருக்கிறான்'.

என் சிந்தனையை என் ஆற்றலுக்கு அப்பாலும் செலுத்தினேன். 'அர்ஷ்' குறித்தும் 'இஸ்தவா' குறித்தும் எனக்குநானே கேட்டுக்கொண் டேன். தன் காலுக்குக் கீழ் உள்ளவற்றைக் குறித்து அறியாதவன் இது போன்று அறிய முடியாதவற்றின் பக்கம் செல்வது உகந்ததல்ல என்று எனக்குநானே கூறிக்கொண்டேன்.

நீ படைக்கப்பட்ட நோக்கத்தை அறிந்து அதனைச் செயல்படுத்த முனைவதே உனக்குச் சிறந்தது. 'அவனே வானங்களையும் பூமியையும் ஆறு நாள்களில் படைத்தான். அது உங்களில் நற்செயல் புரிபவர் யார் என்பதைச் சோதிப்பதற்காக. (7)'

நான் என் செயலைச் சீர்படுத்திக்கொள்ள வேண்டும். என் அறிவைப் பட்டைதீட்டிக்கொள்ள வேண்டும். என் மனதைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். நான் படைக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும். இதுதான் எனக்குச் சிறந்தது; பயன்தரக்கூடியது.

இந்த உலகம் மறுவுலகுக்கான பாதை. அதுதான் நிரந்தரமானது, என் கவனத்தை வேண்டுவது. பலர் இந்த உண்மையை அறியாமல் இருந் தாலும் சரியே. 'மரணித்த பின்பு நீங்கள் மீண்டும் உயிர்கொடுத்து எழுப் பப்படுவீர்கள் என்று நீர் கூறினால், இது தெளிவான சூனியமே என்று நிராகரிப்பாளர்கள் கூறுவார்கள். (7)'

நிராகரிக்கும் பொருட்டு அல்லது பரிகாசம் செய்யும் பொருட்டு மூடர்கள் வேதனையை விரைவாகக் கேட்கிறார்கள். வேதனை வந்து

*அவர்களைத் தீண்டினால்தான் அவர்கள் நம்பிக்கை கொள்வார்களா? வேதனை வந்தபிறகு அவர்கள் நம்பிக்கை கொள்வதால் என்ன பயன் ஏற்படப்போகிறது?*

*ஒரு குறிப்பிட்ட காலம்வரை நாம் அவர்களின் வேதனையைத் தாமதப்படுத்தினால் ‘எது அதனைத் தடுத்துள்ளது?’ என்று அவர்கள் கேட்கிறார்கள். அறிந்துகொள்ளுங்கள், அது அவர்களை வந்தடையும் நாளில் அவர்களைவிட்டுத் தடுக்கப்படாது. எதனைக் குறித்து அவர்கள் பரிகாசம்செய்துகொண்டிருந்தார்களோ அதுவே அவர்களைச் சூழ்ந்துகொள்ளும்.* (8)

❖ ❖ ❖

*மனிதனின் மிகப் பெரிய பலவீனம், அவன் நிகழ்காலத்தின் அந்த நிமிடத்தின் அடிமையாக இருக்கிறான் என்பதுதான். அவன் தனக்கு ஏற்பட்ட ஒரு துன்பத்துக்கு அல்லாஹ்விடம் உதவி கோரும்போது வழங்கப்படும் இந்த உதவியை வரவேற்காதவனாக ஆகிவிடுகிறான். உதவி கேட்டான் என்பதையே மறந்துவிடுகிறான். தனக்கு உதவிசெய்த கருணைமிக்க இறைவனை அறிந்தே நிராகரித்துவிடுகிறான்:*

*நாம் மனிதனுக்கு நம்மிடமிருந்து ஏதேனும் அருளை வழங்கி, பின்னர் அதனை அவனிடமிருந்து பறித்துக்கொண்டால் அவன் நம்பிக்கையிழந்து நன்றிகெட்டவனாக ஆகிவிடுகிறான். அவனுக்கு ஏற்பட்ட துன்பத்துக்குப் பின் அவனுக்கு நாம் கருணை காட்டினால் ‘எல்லாத் துன்பங்களும் என்னைவிட்டு நீங்கிவிட்டன.’ என்று அவன் கூறுகிறான். அவன் பூரிப்பில் திளைத்தவனாகவும் கர்வம் கொண்டவனாகவும் ஆகிவிடுகிறான். ஆயினும், பொறுமையைக் கடைப்பிடித்து நற்செயல்கள் புரிந்தவர்களைத் தவிர. அவர்களுக்கு மன்னிப்பும் பெரும் கூலியும் உண்டு.* (9-11)

*மனிதர்கள் படைக்கப்பட்ட நோக்கத்தையும் அவர்கள் எங்கு செல்லவிருக்கிறார்கள் என்பதையும் அவர்களுக்கு அறிவிக்கும் ஒரு வேதம் அவர்களுக்கு மிக அவசியமானதாக இருக்கிறது.*

*இந்த அறிமுகம் மனித உள்ளத்தின் ஆழம்வரை செல்லக்கூடியதாக இருந்தால்தான் பயனளிக்கக்கூடியதாக இருக்கும். அது மனிதர்களால் கொண்டுவர முடியாத வேதமாக இருக்க வேண்டும். முந்தைய அத்தியாயத்தில் ‘இதுபோன்ற ஒரு அத்தியாயத்தையேனும் உருவாக்கிக் கொண்டுவாருங்கள்’ என்று சவால் விடுக்கப்பட்டுள்ளது. இந்த அத்தியாயத்தில் ‘இதுபோன்ற பத்து அத்தியாயங்களை உருவாக்கிக் கொண்டுவாருங்கள்’ என்று சவால் விடுக்கப்படுகிறது.*

இது மனிதனின் இயலாமையை உணர்த்தும் ஒரு வடிவம்தான் என்று கருதுகிறேன். ஒரு அடியைத் தாங்க முடியாமல் தோல்வியை ஒப்புக் கொள்பவனால் எப்படிப் பத்து அடிகளைத் தாங்கிக்கொண்டு களத்தில் நிற்க முடியும்?

தூதர்தாம் இந்த வேதத்தைப் புனைந்துள்ளார் என்று அவர்கள் கூறுகிறார்கள். நீர் கூறும், 'நீங்கள் உண்மையாளர்களாயின் இது போன்ற பத்து அத்தியாயங்களையேனும் புனைந்து கொண்டு வாருங்கள். அல்லாஹ்வைத் தவிர உங்களால் அழைக்க முடிந்த வர்களை எல்லாம் அழைத்துக்கொள்ளுங்கள்.' அவர்கள் உங்க ளுக்குப் பதிலளிக்காவிட்டால் இது அல்லாஹ்வின் அறிவைக் கொண்டே அருளப்பட்டுள்ளது. அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை என்பதை அறிந்துகொள்ளுங்கள். இனியாவது நீங்கள் கீழ்ப்படிவீர்களா? (13,14)

இறைவனின் இந்த ஆதாரத்தைக் கொண்டு வலுவூட்டப்பட்டவராக முஹம்மது மக்களிடையே சென்றுகொண்டிருந்தார். இந்த ஆதாரத்துக்கு முன்னர் முந்தைய வேதங்களின் முன்னறிவிப்புகள் அவருக்குச் சாட்சியாக இருந்தன.

ஒருவர் தம் இறைவனிடமிருந்து தெளிவான சான்றுடன் உள்ளார். அதன் பின்னர் அவனிடமிருந்து அவருக்கு ஒருவர் சாட்சியாக வந்துவிட்டார். இதற்கு முன்னர், மூசாவின் வேதம் வழிகாட்டியாக வும் அருளாகவும் இருந்தது (இத்தகையவர் நிராகரிப்பவரைப் போல ஆவாரா?). இவர்கள்தாம் இதன் மீது நம்பிக்கை கொள்கிறார்கள். மக்களில் இதனை நிராகரிப்போருக்கு நரகமே வாக்களிக்கப்பட்ட இடமாகும். ஆகவே, நீர் இதுகுறித்து சந்தேகம் கொள்ளாதீர். இது உம்முடைய இறைவனிடமிருந்து வந்த சத்தியமாகும். ஆயினும், மக்களில் பெரும்பாலோர் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள். (17)

கண்ணியமான மனிதர்கள் மக்களின் மீதே புனைந்துகூற மாட்டார்கள். அவர்களால் எப்படி அல்லாஹ்வின் மீது புனைந்துகூற முடியும்? 'அல்லாஹ் ஒருவன்தான்; அவனுடைய சந்திப்பு நிச்சயமானது; நல்லவர் கள் சுவனத்தில் இருப்பார்கள்; தீயவர்கள் நரகத்தில் இருப்பார்கள்.' என்று அவர்கள் கூறுவது பொய்யாகுமா?

இந்த மார்க்கம் முந்தையவர்களிடமும் எடுத்துரைக்கப்பட்டது. அவர் கள் நிராகரித்தார்கள். அதன் காரணமாக அழிக்கப்பட்டார்கள். அவர்கள் விட்டுச்சென்ற அடையாளங்கள் இதைத் தெளிவாக அறிவிக்கின்றன. அவற்றில் சில அடியோடு அழிக்கப்பட்டுவிட்டன; சில எஞ்சியிருக் கின்றன.

*ஏன் அவர்கள் இந்த இழிநிலைக்கு ஆளானார்கள்? அவர்களிடத்தில் எச்சரிக்கைசெய்யக்கூடிய சிந்தனையாளர்கள் இருக்கவில்லையா?*

> *உங்களுக்கு முன்சென்ற சமூகங்களில் பூமியில் குழப்பத்தைத் தடுக்கக்கூடிய நேர்மையாளர்கள் -அவர்களில் நாம் காப்பாற்றிய சிலரைத் தவிர- ஏன் இல்லாமல்போனார்கள்? அநியாயக்காரர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட ஆடம்பர வாழ்வில் திளைத்திருந்தார் கள். அவர்கள் குற்றவாளிகளாக இருந்தார்கள். ஊர்களில் வசிக்கும் மக்கள் சீர்த்திருத்துபவர்களாக இருக்கும் நிலையில் அவற்றை உம் இறைவன் அநியாயமாக அழித்துவிடுபவன் அல்ல.* (116,117)

*தெளிவான இந்த வழிமுறையில்தான் முஹம்மது முந்தையவர் களையும் பிந்தையவர்களையும் அழைத்தார். ஆனாலும், மனிதர்கள் இந்தச் சத்தியத்துக்கு முன்னால் இரு பிரிவினராகப் பிரிந்தார்கள்.*

*அவர்களிடையே உருவான வழிமுறைகளும் கொள்கைகளும் அதி கரித்துவிட்டன. ஒவ்வொருவரும் தாம் விரும்பக்கூடிய வழிமுறையை ஏற்படுத்திக்கொண்டார்கள்.*

*அவர்களை ஒன்றிணைப்பதற்கு அல்லாஹ் ஆற்றலுடையவன்தான். ஆனாலும், அவர்களை அப்படியே விட்டுவிடுவதையே அவன் நாடினான்: ‘உம் இறைவன் நாடியிருந்தால் மக்கள் அனைவரையும் ஒரே சமூகமாக ஆக்கியிருப்பான். ஆனால், அவர்கள் எப்போதும் முரண்பட்டுக்கொண்டே இருப்பார்கள்.* (118)*’ முரண்படுவது மனித இயல்புதான். பின்னர் அவன் கூறுகிறான்:*

> *ஆயினும் உம் இறைவன் கருணைபுரிந்தவர்களைத் தவிர. இதற் காகவே அவன் அவர்களைப் படைத்துள்ளான். ‘ஜின்கள், மனிதர்கள் அனைவரையும் கொண்டு நான் நரகத்தை நிரப்பிவிடுவேன்!’ என்ற உம்முடைய இறைவனின் வாக்கு நிறைவேறிவிட்டது.* (119)

*நம் இறைவன் நாடியிருந்தால் பாவங்கள்செய்யாத வானவர்களாக அல்லது பொறுப்பு வழங்கப்படாத பிற உயிரினங்களாக நம்மைப் படைத்திருப்பான். ஆனாலும், அவன் நம்மைத் தேர்வுசெய்யப்பட்ட மனிதர்களாக ஆக்கியுள்ளான். நம்மால் சிஜ்ஜீனின் -பாவிகளின் பதிவேடு- பக்கம் இறங்கிச் செல்லவும் முடியும் அல்லது இல்லிய்யீனின் -நல்லோர்களின் பதிவேடு- பக்கம் ஏறிச்செல்லவும் முடியும்.*

❖ ❖ ❖

அத்தியாயம் 12

# யூசுஃப்

(ஒரு நபியின் பெயர்)

*யூசுஃப் சிறுவனாக இருந்தபோது, தான் அல்லாஹ்விடத்தில் உயர்ந்த இடத்தைப் பெறுவேன் என்பதை உணர்ந்திருக்கலாம். யார் அறிவார், அவர் சத்தியத்தின் பாதையில் மக்களை வழிநடத்தும் தேர்ந்தெடுக்கப் பட்ட நல்லோர்களில் ஒருவராக இருக்கலாம் என்பதை. அவரது சகோதரர்களில் அவர்தாம் மிகவும் சிறியவர். ஆனாலும், அவரது சகோதரர்களின் வாழ்க்கை எந்த ஒரு சிறப்பையும் உணர்த்தக்கூடியதாக இருக்கவில்லை. அவர்களைவிட யூசுஃபே தன் தந்தைக்கு மிகவும் பிரியமானவராக இருந்தார்.*

*யார் அறிவார், அவர்தாம் தம் தந்தையிடமிருந்து தூதுத்துவத்தை வாரிசாகப் பெறுவார் என்பதை. அவரது தந்தை யஅகூபு இஸ்ஹாக்கிட மிருந்து அதனை வாரிசாகப் பெற்றார். இஸ்ஹாக் இப்றாஹீமிடமிருந்து அதனை வாரிசாகப் பெற்றார். அந்தத் தொடர்ச்சியின் ஒரு இணைப்பாக யூசுஃப் இருக்க வேண்டும் என்று அல்லாஹ் நாடிவிட்டான். நல்ல கனவின் வடிவில் அல்லாஹ் அந்த நற்செய்தியை அவருக்கு வழங்கி னான்: 'யூசுஃப் தன் தந்தையிடம் கூறினார், என் தந்தையே, நான் கனவில் பதினோரு நட்சத்திரங்களையும் சூரியனையும் சந்திரனையும் கண்டேன். அவை எனக்குச் சிரம்பணியக் கண்டேன். (4)'*

*யஅகூபு அந்தக் கனவிலிருந்து தன் சிறிய மகனின் எதிர்காலத்தைக் கணித்துக்கொண்டார். அவரது சகோதரர்களால் அவருக்கு ஆபத்து ஏற் படலாம் என்று அஞ்சினார்.*

> *அவர் கூறினார், 'என் அருமை மகனே, உன் கனவை நீ உன் சகோதரர்களிடம் கூறிவிடாதே. அவர்கள் உனக்கு எதிராகச் சதிசெய்துவிடுவார்கள். நிச்சயமாக ஷைத்தான் மனிதனுக்கு*

*வெளிப்படையான விரோதியாவான். இவ்வாறே உன் இறைவன் உன்னைத் தேர்ந்தெடுத்து விசயங்களின் உண்மை நிலையை உனக்குக் கற்றுக்கொடுப்பான். இதற்கு முன்னர் உன்னுடைய முன்னோர்களான இப்றாஹீம், இஸ்ஹாக் ஆகியோரின் மீது தன் அருட்கொடையை அவன் நிறைவாக்கியதைப் போன்று உன்மீதும் யஅகூபின் குடும்பத்தினர்மீதும் நிறைவுபடுத்துவான்.* (5,6)

*ஆனாலும், மூத்த சகோதரர்களின் பொறாமை தெரிவுசெய்யப்பட்ட அந்த இளைஞரின் மீது நிலைகொண்டது. விளைவாக, அவர்கள் ஒரு பாழுங்கிணற்றில் அவரைப் போட்டுவிட்டுச் சென்றார்கள்.*

*அல்லாஹ் அவரது உள்ளத்தில் நம்பிக்கை என்னும் ஒளிக்கீற்றைப் பாய்ச்சினான். சூழ்ச்சிசெய்யக்கூடிய, பலம்மிக்க இந்தச் சகோதரர்கள் ஒருநாள் தாங்கள் செய்த செயலுக்காக வெட்கப்பட்டு அவர் முன்னால் நிற்பார்கள் என்பதை அவருக்கு உணர்த்தினான். இப்போது அவர் சிறிய வராக, ஒடுக்கப்பட்டவராக இருக்கலாம். ஆனால், விரைவில் அவர்கள் செய்த செயலைக் குறித்து அவர்களிடம் கேட்பவராக அவர் ஆகுவார்.*

*அவரைக் கிணற்றில் போட்டபிறகு அவரிடமிருந்து முழுமையாக நீங்கிவிட்டதாக அவர்கள் எண்ணினார்கள். அது எப்படி முடியும்? அல்லாஹ் தன் விவகாரத்தில் மிகைத்தே தீருவான், இல்லையா?*

*அவர்கள் யூசுஃபை அழைத்துச்சென்றபோது ஒரு பாழுங்கிணற்றில் அவரைத் தள்ளிவிட வேண்டும் என முடிவுசெய்தார்கள். அப்போது நாம் அவருக்கு வஹீ அறிவித்தோம், 'அவர்களின் இந்தச் செயலைக் குறித்து அவர்கள் அறியாதிருக்கும் நிலையில் நீர் அவர்களிடம் அறிவிப்பீர்.'* (15)

*அவர்கள் திரும்பிச்சென்றபோது யூசுஃப் அவர்களைப் பார்த்தார், ஒரு நீதிபதி குற்றவாளிகளைப் பார்ப்பதைப் போல. அவருக்கு முன்னால் எதிர்காலம் பிரகாசமாக இருந்தது. தாம் வெற்றியடைவோம் என்பதையும் அவர்கள் நஷ்டமடைவார்கள் என்பதையும் அவர் உணர்ந்துகொண்டார்.*

*பல ஆண்டுகளுக்குப் பிறகு இந்த முன்னறிவிப்பு உண்மையாக வேண்டும் என்று அல்லாஹ் நாடினான். யூசுஃப் எகிப்தின் அரசராக ஆனபிறகு அந்தச் சகோதரர்கள் யூசுஃபிடம் தர்மத்தை வேண்டியவர்களாக வந்தார்கள். அவர்தான் யூசுஃப் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. அவர்கள் யூசுஃபிடம் சென்று கூறினார்கள்:*

*'மேலானவரே, எங்களையும் எங்கள் குடும்பத்தாரையும் பெருந் துன்பம் பீடித்துள்ளது. நாங்கள் சிறிதளவு பொருளையே கொண்டு*

வந்துள்ளோம். ஆகவே, எங்களுக்குத் தானியத்தை நிறைவாக வழங்கி தானமும் செய்யுங்கள். நிச்சயமாக அல்லாஹ் தானம் செய்வோருக்கு அதற்குரிய கூலியை வழங்கிடுவான்.' அப்போது அவர், 'நீங்கள் அறியாதிருந்தபோது யூசுஃபையும் அவரது சகோதரரையும் என்ன செய்தீர்கள் என்று தெரியுமா?' என்று கேட்டார். (88,89)

அந்தப் பாழுங்கிணற்றின் கடினமான சூழல்தான் இந்த உலகில் அவரை உயர்வை நோக்கி இட்டுச்செல்லும் வழியாக இருந்தது. அல்லாஹ் அமைத்த விதி எத்துணை அற்புதமானது! யூசுஃபின் சகோதரர்கள் தங்களின் திட்டத்தைச் செயல்படுத்தியபிறகு தங்களின் தந்தையிடம் வந்து கூறினார்கள்:

'எங்கள் தந்தையே, நாங்கள் ஓடி விளையாடிக்கொண்டிருந்தோம். யூசுஃபை எங்கள் பொருள்களுக்கு அருகில் விட்டிருந்தோம். அப்போது ஓநாய் அவரைத் தின்றுவிட்டது. நாங்கள் உண்மையாளர்களாக இருந்தாலும் நீங்கள் எங்களை நம்ப மாட்டீர்கள்.' (17)

அவர் கூறினார்: 'இல்லை. உங்களது உள்ளம் ஒரு விசயத்தை உங்களுக்கு அழகாக்கிவிட்டது. இனி பொறுமையே சிறந்ததாகும். நீங்கள் வெளிப்படுத்தும் விசயத்துக்கு அல்லாஹ்விடமே நான் உதவி கோருகிறேன். (18)' அழகிய பொறுமை பெரும் நன்மைகளைக் கொண்டுவரும். யூசுஃபும் அவரது தந்தையும் எண்ணியவாறே பின்னர் நிகழ்ந்தது.

யூசுஃபின் சம்பவம் உண்மையான வரலாற்றுச் சம்பவம். அது மனிதர்களால் எழுதப்பட்ட புனைவு அல்ல.

நம் காலத்தில் கதை மிகவும் பிரபல்யமான ஒன்றாக இருக்கிறது. அது மனிதச் சிந்தனையால் புனையப்படும் ஒன்றாகும். கதையில் ஆசிரியரே உயிரோட்டத்தை ஏற்படுத்துகிறார். கதைமாந்தர்கள் ஆசிரியரின் பார்வைக்கேற்பவே செயல்படுகிறார்கள். அதன் ஆரம்பமும் முடிவும் அந்த எழுத்தாளரின் சிந்தனைகளுக்கேற்பவே அமையும்.

கடந்தகாலத்திலும் புனைவுகள் எழுதப்பட்டன. கலீலா வதிம்னா என்ற புத்தகம் அதற்கு ஓர் உதாரணம். அதில் ஆசிரியர் கதைமாந்தர்களை விலங்குகளின் வடிவில் உலவவிடுகிறார். தான் விரும்பிய அனைத்தையும் அந்த விலங்குகளின் நாவில் பேசியுள்ளார்.

வரலாறு என்பது புனைவுகளுக்கு மாறான வேறொரு வடிவமாகும். அதில் மனிதர்களின் விசயத்தில் செயல்படும் இறை நியதிகள் வெளிப்

படுகின்றன. அது படிப்பினைபெற விரும்புவோருக்கு ஏராளமான படிப் பினைகளையும் வெளிப்படுத்துகின்றன. அல்லாஹ் தன் தூதருக்குக் கூறுகிறான்: 'நாம் உமக்கு வஹீயாக அறிவித்துள்ள இந்தக் குர்ஆனின் மூலம் சிறந்த வரலாற்றை உமக்கு எடுத்துரைக்கிறோம். இதற்கு முன்னர் நீர் இவற்றைப் பற்றி அறியாதவராக இருந்தீர். (3)' அறிவிக்கப்பட்ட இந்த வஹீயில் முஹம்மதுக்கு எந்தப் பங்கும் இல்லை. அறிவிக்கப்படுவதைப் பெறுவதே அவர்மீதான பொறுப்பாக இருந்தது. 'இவை மறைவான செய்திகளாகும். இவற்றை நாம் உமக்கு அறிவிக்கிறோம். யூசுஃபின் சகோதரர்கள் சதித்திட்டம் தீட்டி ஏகமனதாக அதனை முடிவுசெய்தபோது நீர் அவர்களுடன் இருக்கவில்லை. (102)'

இந்த அத்தியாயத்தின் நிறைவுபெற்றுள்ள வசனம் இஸ்லாம் எடுத் துரைக்கும் சம்பவங்களின் நோக்கத்தை உணர்த்தக்கூடியதாக இருக்கிறது:

> அவர்களின் வரலாறுகளில் புரிந்துகொள்ளும் மக்களுக்குப் பெரும் படிப்பினை இருக்கிறது. இது புனைந்துரைக்கப்பட்ட செய்தி அல்ல. மாறாக, இது தனக்கு முன்னுள்ளவற்றை உண்மைப்படுத்தக்கூடிய தாகவும் ஒவ்வொன்றின் விரிவுரையாகவும் நம்பிக்கை கொள்ளும் மக்களுக்கு வழிகாட்டியாகவும் அருளாகவும் இருக்கிறது. (111)

அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைப்பதற்கு யூசுஃப் கடைப் பிடித்த வழிமுறை பின்பற்றத்தகுந்த முன்மாதிரியாகும். அவர் இளமைப் பருவத்தை அடைந்ததும் அவரது தூதுத்துவம் வெளிப்பட ஆரம்பித்தது: 'அவர் தம் வாலிபத்தை அடைந்ததும் நாம் அவருக்குத் தீர்ப்பளிக்கும் திறனையும் ஞானத்தையும் வழங்கினோம். நன்மைபுரிவோருக்கு நாம் இவ்வாறே கூலி வழங்குகிறோம். (22)'

மதிநுட்பமும் ஞானமும் இறைத்தூதர்களுக்கு வழங்கப்படும் முதன் மையான அருட்கொடைகளாகும். அல்லாஹ் லூத்தைக் குறித்து கூறு கிறான்: 'நாம் லூத்துக்கு மதிநுட்பத்தையும் ஞானத்தையும் வழங்கி னோம். அருவருப்பான காரியங்களில் ஈடுபட்டுவந்த ஊரிலிருந்த மக்க ளிடமிருந்து அவரைக் காப்பாற்றினோம் ... (21:74)' மூசாவைக் குறித்து அவன் கூறுகிறான்: 'மூசா தம் வாலிபத்தை அடைந்து பக்குவமடைந்த போது நாம் அவருக்கு ஞானத்தையும் மதிநுட்பத்தையும் வழங்கினோம். நன்மைசெய்வோருக்கு நாம் இவ்வாறே கூலி வழங்குகிறோம். (28:14)'

இறைத்தூதர்களில் ஒருவராக இருந்த யூசுஃப் அற்பமான அடிமையாகக் கருதப்பட்டு விற்கப்பட்டார். அவரைக் கண்டெடுத்தவர்கள் வைத்துக் கொள்ள விருப்பமின்றி அவரை ஒரு சுமையாகக் கருதி விற்றுவிட்டனர்.

காலம்தான் எத்துணை அற்புதமான மாற்றங்களைக் கொண்டு வருகிறது! கண்ணியமான வானவராகக் கருதப்படுபவர் அற்பமான ஒரு பொருளாகக் கருதப்பட்டு விற்கப்படுகிறார். ‘எகிப்தில் அவரை வாங்கியவர் தம் மனைவியிடம், இவரை நல்ல முறையில் கவனித்துக்கொள். இவர் நமக்குப் பயனுள்ளவராக இருக்கலாம் அல்லது இவரை நாம் நம் மகனாக ஆக்கிக்கொள்ளலாம் என்று கூறினார். (21)’

இப்படியாக இறைத்தூதர்களின் வாரிசு, அரசரின் கோட்டைக்கு வந்து சேர்ந்தார், அங்கு தமது பணியைச் செய்வதற்காக. அங்கு அவர் எதிர்பார்க்காத வேறொரு வகையான சோதனையை எதிர்கொண்டார்.

தம்முடைய இளமைக் காலகட்டத்திலேயே அவர் தம் இறைவனைக் குறித்து நன்கறிந்தவராக இருந்தார். அவனை நினைவுறக்கூடியவராக, அவனுக்கு அஞ்சக்கூடியவராக இருந்தார். தமக்கெனத் தனித்துவமான பாதையை ஏற்படுத்திக்கொண்டார். ‘இவ்வாறு, விசயங்களின் உண்மை நிலையைக் கற்றுக்கொடுப்பதற்காக நாம் யூசுஃபுக்கு அந்நாட்டில் இடமளித்தோம். அல்லாஹ் தன் காரியத்தில் மேலோங்கியவனாக இருக்கிறான். ஆயினும், மனிதர்களில் பெரும்பாலோர் அறிந்துகொள்வதில்லை. (21)’

யூசுஃப் தமக்கு அபயமளித்த குடும்பத்தினரை மிகவும் மதித்தார். அவர்களின் பெண்களுடன் கண்ணியமான முறையில் நடந்துகொண்டார். அந்தக் குடும்பத்தின் தலைவரின் மீது பெருமதிப்பு கொண்டிருந்தார். அந்தக் குடும்பத்தின் தலைவராக இருந்த அரசர் பூமியில் அநியாயம் செய்த ஃபிர்அவ்ன்களில் ஒருவராக இருக்கவில்லை. மாறாக, நற்குணமுடைய கண்ணியமான மனிதராக இருந்தார்.

அவர் யூசுஃபை மிகவும் நேசித்தார். அவருக்கான உரிமைகளை வழங்கினார். ஆனாலும், யூசுஃப் தம்முடைய அசலையும் தம் முன்னோர்களிடமிருந்து பெற்ற மார்க்கத்தையும் மறக்கவில்லை. அவருடைய முன்னோர்கள் அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கும் அழைப்பாளர்களாக இருந்தார்கள். அவர்களின் வழிமுறையைப் பின்பற்றி அல்லாஹ் ஒருவனை வணங்கிக்கொண்டும் நற்செயல்களில் ஈடுபட்டுக்கொண்டும் பாவங்களைவிட்டு விலகியும் இருந்துவந்தார்.

அந்தக் குடும்பத்தினர் அவரை வளர்ப்பு மகனாக ஆக்கியிருந்தனர். வளர்ப்பு மகனுடனான தொடர்பு இயற்கையான தொடர்பாக இல்லாதிருந்தாலும் எகிப்தின் அரசர் யூசுஃபின் நற்பண்புகளின் காரணமாக அவரை மிகவும் நேசித்துவந்தார். ஆனால், அவருடைய மனைவி யூசுஃபின் மீது மையல் கொண்டாள்.

யூசுஃப் பேரழகராக இருந்தார். இந்த உலகில் உள்ள அழகில் பாதி அழகு அவருக்குத்தான் வழங்கப்பட்டிருந்தது.

தன்னைத் தாய் என்று அழைத்துக்கொண்ட அவள் யூசுஃபின் மீது ஆசை கொண்டாள். யூசுஃப் இதுபோன்ற நிலையிலிருந்து உயர்ந்தவராக இருந்தார். ஈமான் அவரது இயல்பைப் பட்டை தீட்டியிருந்தது. அவரது உள்ளத்தைத் தூய்மைப்படுத்தியிருந்தது. அல்லாஹ்வுடன் அவருக்கு உறுதியான தொடர்பை ஏற்படுத்தியிருந்தது. இதுபோன்ற இழிவான செயலை அவர் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

அந்தப் பெண் அவரை அழைத்தபோது அவரது ஈமான் பொங்கியது. தம் முன்னோர்களிடமிருந்து பெற்ற கண்ணியத்தை அவர் நினைவு கூர்ந்தார். தமக்குத் தஞ்சமளித்து கண்ணியப்படுத்திய வீட்டின் சொந்தக் காரரையும் நினைவுகூர்ந்தார். எப்படி அவருடைய மானத்துடன் அவரால் விளையாட முடியும்?

> யூசுஃப் எந்தப் பெண்ணின் வீட்டில் இருந்தாரோ அவள் அவரைத் தன் விருப்பத்துக்கு இணங்குமாறு தூண்டலானாள். ஒருநாள் அவள் கதவுகளைத் தாழிட்டுவிட்டு 'வா' என்று அழைத்தாள். அதற்கு அவர், 'அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறேன். என் எஜமானர் என்னை நல்ல முறையில் வைத்துள்ளார். நிச்சயமாக அநியாயக் காரர்கள் ஒருபோதும் வெற்றியடைவதில்லை.' என்றார். (23)

ஒரு நம்பிக்கையாளன் இதுபோன்ற சோதனையில் வெற்றிபெறவே செய்வான். ஹதீஸில் வந்துள்ளது, 'நிழலே இல்லாத அந்த நாளில் அல்லாஹ் ஏழு பேருக்கு நிழலளிப்பான். அவர்களில் ஒருவர், அழகும் அந்தஸ்தும் உடைய ஒரு பெண் அவரைத் தவறான உறவுக்கு அழைத்த போது, நான் அல்லாஹ்வுக்கு அஞ்சுகிறேன் என்று கூறியவர்.'

யூசுஃப் பாவம்செய்ய உறுதியாக மறுத்துவிட்டார். இதை அரசரின் மனைவி வெளிப்படையாகக் கூறுவதைப் பாருங்கள்: 'நான் அவரைக் கவர்ந்துகொள்ள முயன்றேன். ஆனால் அவர் தப்பிவிட்டார். (32)'

யூசுஃப் பரிபூரணமான ஆண்மையைப் பெற்ற இளைஞராக இருந்தார். அவரது மனமும் நாடத்தான் செய்தது. ஆனால், தமக்கு முன்னால் மரணம் இருக்கிறது என்பதை அவர் அறிந்துகொண்டார். அறிந்துகொண்டே அந்த அழிவில் தம்மை ஆழ்த்தவில்லை. அவரது கண்ணியமும் இறையச்சமும் மார்க்கமும் மற்ற எல்லா வகையான உணர்வுகளையும் மிகைத்தன.

அவர் இச்சைகளற்ற இளைஞராக இருந்திருந்தால் அவருக்கு எப்படிச் சிறப்பு கிடைத்திருக்கும்?

அவள் அவரை அடைய நாடினாள். தம் இறைவனின் சான்றினைக் கண்டிராவிட்டால் அவரும் அவளை அடைய நாடியிருப்பார். தீமையையும் மானக்கேடானவற்றையும் அவரைவிட்டும் திருப்பி விடவே நாம் இவ்வாறு செய்தோம். நிச்சயமாக அவர் நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களில் உள்ளவராக இருந்தார். (24)

நம்பிக்கையாளனின் பலம் அந்தப் பெண்ணின் தூண்டலை மிகைத்தது. யூசுஃப் தம் இறைவனை நினைவுகூர்ந்தவராக அவன் வகுத்த எல்லையில் நின்றுகொண்டார்.

அவள் யூசுஃபின் ஆடையைப் பிடித்து இழுத்துக்கொண்டிருக்க, அவர் விலகியோட முயன்றுகொண்டிருக்க, போர் உச்சகட்டத்தை அடைந்துவிட்ட அந்தச் சமயத்தில் அரசரும் வந்துவிட்டார். தான் அகப்பட்டுக்கொண்டேன் என்பதை உணர்ந்த அந்தப் பெண் உடனடியாக அரசரிடம்:

‘உங்கள் மனைவியுடன் தவறான முறையில் நடக்க நாடியவனுக்குரிய தண்டனை என்ன? அவன் சிறையில் அடைக்கப்பட வேண்டும் அல்லது கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும் என்பதைத் தவிர வேறென்ன இருக்க முடியும்?’ என்று அவள் கேட்டாள். (25)

யூசுஃப் உண்மையைக் கூறினார். சாட்சிகளும் அவருக்குச் சாதகமாகத்தான் இருந்தன. அவர் கூறினார்: ‘இவள்தான் என்னை அடைய முயன்றாள். (26)’ தூய்மையான அவரது தொனியும் கண்ணியம்மிக்க அவரது முகமும் அவருக்குச் சாட்சிகளாக இருந்தன.

ஓடக்கூடிய இளைஞனின் ஆடையைப் பின்னாலிருந்து அவள் பிடித்து இழுத்ததால் அவரது ஆடை பின்புறமாகக் கிழிந்திருந்தது. அவ்வாறு இருந்திருக்காவிட்டால் அவர்தான் குற்றம் சாட்டப்பட்டிருப்பார். இவ்வாறு நீதிபதிகள் கூறினார்கள்.

அவளது குடும்பத்திலிருந்து ஒருவர், ‘அவரது சட்டை முன்புறமாகக் கிழிந்திருந்தால் இவள் உண்மை சொல்கிறாள். அவர் பொய் சொல்லியவராவார். அவரது சட்டை பின்புறமாகக் கிழிந்திருந்தால் இவள் பொய் சொல்கிறாள். அவர் உண்மை சொல்லியவராவார்’ என்று சாட்சியம் கூறினார். அவரது சட்டை பின்புறமாகக் கிழிக்கப்பட்டிருப்பதைக் கண்ட அவளது கணவன், ‘நிச்சயமாக இது பெண்களாகிய உங்களின் சூழ்ச்சியாகும். உங்களின் சூழ்ச்சி மிகக் கடுமையானதாகும்’ என்று கூறினார். (26-28)

*ஆதாரங்களைக் கொண்டு தீர்ப்பளிப்பதே ஷரீஅத்தின் வழிமுறை யாகும். தற்காலத்தில் இரத்தம், எச்சில் ஆகியவற்றைக் கொண்டு குற்ற வாளிகளைத் தண்டிக்கும் முறையையும் நாம் ஷரீஆவின் வழிமுறை யாகவே கணக்கிடலாம்.*

*ஆயினும், அரசரின் மனைவி தனக்கு எதிரான ஆதாரங்களை எதிர்த்து நின்றாள். அவளின் உணர்வுகள் வரம்புமீறி வெகுதூரம் சென்றன. இந்தச் செய்தி மக்களிடையே பரவியபோது மறுப்பதை விட்டுவிட்டு, தன் உணர்வையும் அதற்கான காரணத்தையும் வெளிப்படையாக அறிவித்தாள்.*

*அவளைப் பற்றிப் பேசுவோரிடம் அவள் இப்படித்தான் கூறினாள், 'நீங்கள் என் இடத்தில் இருந்திருந்தால் நான் சென்ற அதே பாதை யிலேயே நீங்களும் சென்றிருப்பீர்கள்.' யாரால் முழு நிலவை விரும் பாமல் இருக்க முடியும்? 'நகரத்தில் உள்ள பெண்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள், அரசனின் மனைவி தன்னிடம் அடிமையாய் உள்ள இளைஞரின் மீது மோகம் கொண்டுள்ளாள். அவர்மீது கொண்ட காதலில் மயங்கிவிட்டாள். அவள் வெளிப்படையான தவறில் இருப்ப தாகவே நாங்கள் கருதுகிறோம். (30)'*

*அவள் அந்தப் பெண்களுக்காக விருந்து ஒன்றை ஏற்பாடுசெய்தாள். அவர்கள் அனைவரும் பழங்களைச் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் வேளையில் யூசுஃபை வெளியேறிவருமாறு உத்தரவிட்டாள். அவர்கள் அவரைப் பார்த்தபோது மெய்மறந்து தங்களின் கைகளை அறுத்துக் கொண்டார்கள், தங்களிடம் இருந்த கத்திகளைக் கொண்டு. அந்தப் பெண்கள் அவரைப் பார்த்தபோது அப்படியே பிரமித்துப்போய்த் தங்கள் கைகளை வெட்டிக்கொண்டார்கள். 'அல்லாஹ் எங்களைக் காப்பாற்று வானாக, இவர் மனிதரே அல்ல. இவர் கண்ணியத்துக்குரிய ஒரு வானவரே ஆவார் என்று அவர்கள் கூறினார்கள். (31)'*

*இங்குதான் அரசரின் மனைவியுடைய உணர்வு உச்சகட்டத்தை அடை கிறது. அவள் அவர்மீது பைத்தியமானாள். அவள் கூறினாள்: 'நான் அவரைக் கவர்ந்துகொள்ள முயன்றேன். ஆனால் அவர் தப்பிவிட்டார். நான் சொல்வதை அவர் செய்யாவிட்டால் சிறையில் அடைக்கப்பட்டு இழிவுபடுத்தப்படுவார். (32)'*

*அறிவு மழுங்கியதன் வெளிப்பாடு இது. அவள் தன் உணர்வால் மிகைக்கப்பட்டிருந்தாள். ஆனாலும் அது இழிவுதான். ஃப்ராய்டு அவ ளுக்காக வாதாடுகிறார். மேற்கத்திய நாகரிகம் அதனை அனுமதிக்கப்பட்ட ஒன்றாகக் கருதுகிறது. அதற்கான காரணங்களை அது அடுக்குகிறது.*

யூசுஃப் ஆண்மையும் கண்ணியமும் மிக்கவராக, ஒழுக்கசீலராக, அல்லாஹ்வின் திருப்தியை நாடுபவராக இருந்தார். அவர் கூறினார்:

> ‘என் இறைவனே, இவர்கள் அழைக்கும் செயலைவிடச் சிறைச் சாலையே எனக்கு விருப்பமானது. இவர்களின் சூழ்ச்சியை என்னைவிட்டும் நீ தடுக்கவில்லை என்றால் நான் இவர்களின் பக்கம் சாய்ந்து அறிவற்றவனாக ஆகிவிடுவேன்.’ அவருடைய இறைவன் அவரது பிரார்த்தனையை ஏற்றுக்கொண்டு அவர்களின் சூழ்ச்சியை அவரைவிட்டும் நீக்கினான். நிச்சயமாக அவன் செவி யேற்பவனாகவும் நன்கறிந்தவனாகவும் இருக்கிறான். (33,34)

இந்தச் சூழ்ச்சியிலிருந்து அவர் எப்படி வெற்றிபெற்றார்? அந்தப் பெண்ணுக்காகக் கோட்டையை விட்டுவிட்டார். அவர் நம்பிக்கைக் குரியவராக இருந்தும் அதிலிருந்து வெளியேற்றப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்: ‘சான்றுகளை அவர்கள் கண்டபின்னரும், ஒரு குறிப் பிட்ட காலம்வரை அவரைச் சிறையில் அடைக்க வேண்டும் என்றே அவர்களுக்குத் தோன்றியது. (35)’

❖ ❖ ❖

இந்த அத்தியாயத்தில் மூன்று கனவுகள் பகலின் வெளிச்சத்தைப் போல உண்மையாகிவிடுகின்றன.

முதல் கனவு, இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் இடம்பெற்றுள்ள பதினோறு நட்சத்திரங்களும் சூரியனும் சந்திரனும் தனக்குச் சிரம்பணி வதாக யூசுஃப் தன் தந்தையிடம் கூறிய கனவு.

இரண்டாவது கனவு, அவர் சிறையில் இருந்த ஆரம்ப நாள்களில் நிகழ்ந்தது:

> அவருடன் இரு இளைஞர்களும் சிறைக்குச் சென்றனர். அவர்களில் ஒருவர், ‘நான் கனவில் திராட்சை ரசம் பிழிந்துகொண்டிருப்பதாகக் கண்டேன்’ என்று கூறினார். மற்றொருவர், ‘என் தலைமீது ரொட்டி யைச் சுமந்துகொண்டிருக்க, அவற்றைப் பறவைகள் தின்பதாக நான் கனவு கண்டேன்.’ என்று கூறினார். ‘இவற்றின் விளக்கத்தை நீர் எங்களுக்குக் கூறுவீராக. நாங்கள் உம்மை ஒரு நேர்மையான மனிதராகக் காண்கிறோம்.’ (36)

கனவு மனிதனின் ஆன்மா மட்டுமே தொடர்புகொள்ளும் மறைவான செய்திகளில் ஒன்றாகும். அது நன்மையையோ தீமையையோ அறிவிக் கக்கூடிய ஒன்றல்ல. அது மனிதனில் நிகழும் வழக்கத்துக்கு மாறான

ஆற்றலாகும். அதன் மூலம் பிற மனிதர்கள் அறியாததை அவன் அறிந்து கொள்கிறான்.

கெய்ரோவில் எனக்கு ஒரு மனிதரைத் தெரியும். அவர் தன் கிராமத் துக்குப் பயணம்செய்ய நாடியபோது அவருடைய உறவுக்காரப் பெண் ஒருவர் இறந்துவிட்டதாகவும் அந்த ஜனாஸாவைச் சுற்றி மக்கள் இருப்பதாகவும் அவள் அவர்களுக்கு மத்தியில் எழுந்து குறிப்பிட்ட மையவாடியை நோக்கிச் செல்வதாகவும் கனவில் கண்டார். அவர் அந்தக் கிராமத்துக்குப் பயணம்செய்தபோது சிறிதுகூட மாறுபாடின்றித் தாம் கனவில் கண்ட அதே காட்சியைக் கண்டார். அவரது கனவு அப்படியே நிகழ்ந்தது.

இதுபோன்று வெளிப்படையான காரணமின்றி மறைவான செய்திகள் அறிவிக்கப்பட்ட சிலரை அறிவேன். ஜெர்மனிய மெய்யியலாளர் ஒரு வரைக் குறித்து, 'அவர் பல மைல்களுக்கு அப்பால் உள்ள தீ பற்றி எரிவதைக் கண்டார்.' என்று கூறப்படுகிறது. நமக்கு உமர் இப்னுல் ஃகத்தாபின் சம்பவம் மிகச் சிறந்த உதாரணம். அவர் ஒருமுறை மதீனாவில் உள்ள ஒரு பள்ளிவாசலில் உரையாற்றிக்கொண்டிருந்தார். திடீரென 'மலையில் உள்ள சிறு படையே!' என்று அவர் கூறினார். மலையின் மறு பகுதியிலிருந்து எதிரிகள் முஸ்லிம்களைத் தாக்க வருவதாக அவர் கண்டார். அதனால்தான் அவர் அவ்வாறு கத்தினார். அவர் கத்தியது எங்கோ களத்தில் இருந்த படைத்தளபதிக்குக் கேட்டதாகவும் அவர் தம் படை யோடு மலைக்கு அப்பால் உள்ள எதிரிகளை நோக்கிச் சென்று வெற்றி பெற்றார் என்றும் கூறப்படுகிறது.

இதுபோன்ற சம்பவங்களுக்குத் திட்டவட்டமான வரையறைகள் எதுவும் இல்லை. யூசுஃபுக்கு நிகழ்ந்த சம்பவத்தை விளக்கவே நாம் இவற்றை இங்கு குறிப்பிடுகிறோம். அவர் தம் தோழர்களின் கனவைக் கேட்டு, பின்னர் தம்மைப் பற்றிக் கூறினார்:

> 'உங்களுக்கு வழங்கப்படும் உணவு உங்களிடம் வருவதற்கு முன்பே இவற்றின் விளக்கத்தை நான் உங்களுக்குக் கூறிவிடு வேன். இது என் இறைவன் எனக்குக் கற்றுத்தந்ததாகும். அல் லாஹ்வின் மீது நம் பிக்கை கொள்ளாமலும் மறுமையை மறுத்தும் வாழ்கின்ற மக்களின் வழிமுறையை நான் விட்டுவிட்டேன். நான் என் முன்னோர்களான இப்றாஹீம், இஸ்ஹாக், யஅகூபு ஆகியோ ருடைய வழிமுறையைப் பின்பற்றுகிறேன். எப்பொருளையும் அல்லாஹ்வுக்கு இணையாக்குவது எங்களுக்குத் தகுமானதல்ல ...' (37,38)

யூசுஃப் தம் முன்னோர்களிடமிருந்து பெற்ற கொள்கையைக் கொண்டு பெருமிதம் கொள்பவராக இருந்தார். அந்தக் கொள்கைதான் கோட்டை யின் சூழ்ச்சிகளிலிருந்து அவர் தப்புவதற்குக் காரணமாக இருந்தது. சிறையில் அவர் இருந்தபோது அதுதான் அவருடன் இருந்தது.

சிறையில் இருந்தபோது அந்தக் கொள்கையைக் குறித்து அவர் பேசாமல் இருக்கவில்லை. தம்முடன் இருந்தவர்களை ஈமானின் பக்கம் அழைத்தார்: 'என் சிறைத் தோழர்களே, பல்வேறு தெய்வங்கள் சி றந்தவையா அல்லது அடக்கியாளும் ஏகனான அல்லாஹ்வா? (39)' அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படும் அனைத்தும் இட்டுக்கட்டப்பட்ட வையே. அவற்றுக்கு எந்த மூலமும் இல்லை. அவை வெறுமனே பெயர் கள்தாம். ஒன்றுமே இல்லாத பூஜ்யத்தை நாம் ஏன் நம்ப வேண்டும்?

ஆச்சரியமான விசயம் என்னவென்றால், மேற்கத்திய நாகரிகம் பிர பஞ்சத்தின் பல அதிசயங்களை வெளிப்படுத்தியுள்ளது. அல்லாஹ்வின் பக்கம் உந்தித்தள்ளும் அவனது சான்றுகளைக் கண்டிருக்கிறது. ஆனா லும், அது அல்லாஹ்வுடனான தொடர்பில் பலவீனமாகவே இருக்கிறது. அது அவனுடைய சந்திப்பைக் குறித்து சிந்திப்பதுமில்லை. அவனுடைய வஹீயைக் கொண்டு பயனடைவதுமில்லை. உலகியல் தேவைகளை, வசதிகளைத் தவிர வேறு எதையும் அது ஒரு பொருட்டாகக் கருதுவ தில்லை.

இரண்டாவது கனவுக்கு யூசுஃப் பின்வருமாறு விளக்கமளித்தார்:

> 'என் சிறைத்தோழர்களே, உங்களில் ஒருவர் தம் எஜமானனுக்கு மதுவைப் பரிமாறுவார். மற்றொருவர் தூக்கிலிடப்படுவார். அவரது தலையைப் பறவைகள் கொத்தித்தின்னும். நீங்கள் என்னிடம் கேட்கின்ற விசயம் முடிவுசெய்யப்பட்டுவிட்டது.' (41)

ஒன்றுக்கொன்று முரணான இரு விசயங்கள். இதுதான் கனவுகளின் விளக்கம்.

> அவ்விருவரில் எவரைக் குறித்து அவர் விடுதலையடைவார் என்று யூசுஃப் கருதினாரோ அவரிடம், 'என்னைப் பற்றி உம் எஜமான னிடம் குறிப்பிடும்.' என்று கூறினார். ஆனால், ஷைத்தான் அவரைத் தம் எஜமானனிடம் கூறுவதைவிட்டும் மறக்கடித்துவிட்டான். ஆகவே, யூசுஃப் சிறையில் பல ஆண்டுகள் தங்கிவிட்டார். (42)

கோட்டையின் செழிப்பு அவருக்குச் சிறையையும் சிறையில் இருந்த நாள்களையும் உடனிருந்த தோழர்களையும் மறக்கடித்துவிட்டது. தமக்கு

உபகாரம்செய்த மனிதர் அநியாயமாகச் சிறையில் அடைக்கப்பட்டி ருக்கிறார் என்பதையே அவர் மறந்துவிட்டார்.

ஆனாலும், நீண்ட காலத்துக்குப் பிறகு யூசுஃபை நினைவூட்டக்கூடிய ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அரசர் பயமுறுத்தக்கூடிய ஒரு கனவு கண்டார். அவரைச் சூழ இருந்தவர்கள் அந்தக் கனவுக்கு விளக்கம் கூற முடி யாமல் திணறினர். அவருக்கு மதுவை ஊற்றிக்கொடுப்பவர் கூறினார், ‘என்னைச் சிறைக்கு அனுப்புங்கள். நான் உறுதியான செய்தியைக் கொண்டுவருகிறேன்.’

> ‘யூசுஃபே, உண்மையாளரே, ஏழு கொழுத்த பசுக்களை ஏழு மெலிந்த பசுக்கள் தின்றுகொண்டிருப்பதையும் ஏழு பசுமையான கதிர்களையும் ஏழு காய்ந்த கதிர்களையும் கனவில் கண்டால் அதன் விளக்கம் என்ன என்பதை எங்களுக்குக் கூறுவீராக. மக்கள் அறிந்து கொள்வதற்காக நான் அவர்களிடம் திரும்பச் செல்லக்கூடும்.’ (46)

யூசுஃப் இந்தக் கனவுக்கான விளக்கத்தைக் கூறினார். அரசர் கண்ட அந்த முக்கியமான கனவுக்கான விளக்கத்தை அறிவித்தார். அரசர் கூறினார், ‘அவரை என்னிடம் அழைத்து வாருங்கள்.’ ஆனால் யூசுஃபோ, தான் குற்றமற்றவர் என்பது நிரூபணமாகும் வரை வெளியேறிவர மறுத்து விட்டார்.

மறந்துபோன விவகாரம் மீண்டும் நினைவூட்டப்பட்டது. அரசர் அந்தப் பெண்களை அழைத்து விசாரித்தார். அரசர் அப்பெண்களிடம்,

> ‘நீங்கள் யூசுஃபைக் கவர்வதற்கு முயன்றபோது உங்களுக்கு நேர்ந்த தென்ன?’ என்று விசாரித்தார். அதற்கு அவர்கள், ‘அல்லாஹ் எங்களைக் காப்பாற்றுவானாக, நாங்கள் அவரிடம் எந்தத் தீய அம்சத்தையும் காணவில்லை.’ என்றார்கள். அரசனின் மனைவி கூறினாள், ‘இப்போது உண்மை வெளிப்பட்டுவிட்டது. நான்தான் அவரைக் கவர முயன்றேன். நிச்சயமாக அவர் உண்மையாளராக இருக்கிறார்.’ (51)

இவ்வாறு அவர்கள் ஒப்புக்கொண்ட பிறகு யூசுஃப் அரசரிடம் நடந்த வற்றைக் கூறினார்: ‘இது ஏனெனில் நான் அவருக்கு மறைவில் துரோகம் இழைக்கவில்லை என்பதை அவர் அறிந்துகொள்வதற்கே ஆகும். நிச்சய மாக அல்லாஹ் துரோகிகளின் சூழ்ச்சியை வெற்றிபெறச் செய்வதில்லை. (52)’

கனவு உண்மையாகப் போகும் வருடங்களில் யூசுஃப்தான் ஆட்சிக்குத் தகுதியானவர் என்பதை அரசர் உணர்ந்துகொண்டார். இது ஒரு பெரும்

சமூகத்தின் எதிர்காலம்குறித்த விவகாரமாயிற்றே! அவர்களின் நலன்களைக் குறித்து நன்கறிந்தவர் தாம் அவர்களை ஆட்சி செய்யத் தகுதியானவர்.

> அரசர் கூறினார், 'அவரை என்னிடம் அழைத்து வாருங்கள். அவரை நான் எனது தனிப்பட்ட சேவைக்காக வைத்துக்கொள்கிறேன்.' யூசுஃப் அவரிடம் பேசியபோது அவர் கூறினார், 'இன்று முதல் நீர் எங்களிடம் மதிப்புக்குரியவராகவும் நம்பிக்கைக்குரியவராகவும் ஆகிவிட்டீர்.' (54)

தம்மைப் பொதுக் கருவூலங்களுக்குப் பொறுப்பாளராக நியமிக்கும்படி யூசுஃப் அரசரிடம் வேண்டினார்:

> 'என்னை நாட்டின் கருவூலங்களுக்குப் பொறுப்பாளராக ஆக்குங்கள். நான் பாதுகாப்பவனாகவும் நன்கறிந்தவனாகவும் இருக்கிறேன்.' இவ்வாறு நாம் யூசுஃபுக்கு நாட்டில் அனைத்து வசதிகளையும் வழங்கினோம். அங்கு அவர் எங்கு விரும்பினாலும் வசித்துக்கொள்ளலாம். நாம் நாடியோர்மீது நம் அருளைப் பொழிகிறோம். நன்மை செய்வோரின் கூலியை நாம் வீணாக்குவதில்லை. (55,56)

யூசுஃப் தமது தனித்தன்மைகளை, திறமைகளை எடுத்துரைப்பதை நம்மால் காண முடிகிறது. அவர் வெறுமனே வணக்கசாலியாக, ஒழுக்கமானவராக மட்டும் இருக்கவில்லை. மாறாக, பொருளாதார விவகாரங்களில் நிபுணராகவும் இருந்தார். அதனை எவ்வாறு பெற வேண்டும், எவ்வாறு பங்கிட வேண்டும் என்பதை அறிந்தவராகவும் இருந்தார்.

தம்மை விடத் தகுதியானவர் வேறு யாரும் இல்லை என்பதால் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு பதவியை வேண்டுவதை அவர் சரியெனக் கருதினார். பொதுமக்களின் விவகாரங்களை நிர்வகிப்பவர் திறமையானவராகவும் நம்பிக்கைக்குரியவராகவும் இருப்பது மிகவும் அவசியமாகும்.

❖ ❖ ❖

யர்மூக் போரில் முஸ்லிம்களுக்குத் தலைமை தாங்க வேண்டும் என்று காலித் இப்னு வலீத் வேண்டினார். ஏனெனில், அவரைத் தவிர மற்ற தளபதிகள் ரோமர்களின் இராணுவக் கலைகளை எதிர்கொள்ள இயலாதவர்களாக இருந்தார்கள். ஆகவேதான், போர் ஆரம்பித்த முதல் நாளிலேயே வழிநடத்தும் பொறுப்பு தமக்கு வழங்கப்பட வேண்டும் என்று வேண்டினார். படைகளை மீண்டும் தயார்செய்தார். எதிரிகளை எதிர்

*கொள்வதற்கு விவேகமான திட்டங்களை வகுத்தார். இறுதியில் வெற்றி கிடைத்தது.*

*பதவிக்கு ஆசைப்பட்டுப் பதவியை வேண்டுவது பெரும் பாவமாகும். பதவி வெறிபிடித்த பேராசைக்காரர்களால்தான் சமூகங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றன.*

❖ ❖ ❖

*அரசர் கண்ட கனவின்படி, யூசுஃபின் விளக்கத்தின்படி பஞ்ச வருடங்களும் வந்தன. நைல் நதியிலிருந்து ஷாம் தேசம்வரை பஞ்சம் தலைவிரித்தாடியது. அங்குள்ளவர்கள் எகிப்திய அரசிடமே உதவி கோரியவர்களாகத் தஞ்சமடைந்தார்கள்.*

*அவ்வாறு வந்தவர்களில் யூசுஃபின் சகோதரர்களும் இருந்தார்கள். 'யூசுஃபின் சகோதரர்கள் எகிப்துக்கு வந்து அவரிடம் சென்றார்கள். அவர் அவர்களை அறிந்துகொண்டார். ஆனால் அவர்கள் அவரை அறிந்துகொள்ளவில்லை. (58)' அவர் அவர்களை நல்ல முறையில் உபசரித்தார். அவர்களின் நிலைமைகளைக் கேட்டறிந்தார். அடுத்த முறை வரும்போது அவர்களின் இன்னொரு சகோதரரையும் அழைத்துவரும்படி பணிவோடு கேட்டுக்கொண்டார். அவர்கள் கூறினார்கள்: 'நாங்கள் அவர்குறித்து தந்தையை இணங்கவைக்க முயல்வோம். நாங்கள் இதனைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். (61)' தந்தை இந்தக் கோரிக்கையைக் கேட்டு பதற்றமடைந்தார். அவர் தம் பிள்ளைகளிடம் கூறினார்: 'இதற்கு முன்னர் இவருடைய சகோதரரின் விசயத்தில் உங்களை நம்பியதைப் போல இவர் விசயத்திலும் உங்களை நான் நம்ப வேண்டுமா? அல்லாஹ்வே சிறந்த பாதுகாவலன். அவன் கருணையாளர்களில் எல்லாம் மிகச் சிறந்த கருணையாளனாக இருக்கிறான். (64)'*

*ஆயினும், தேவையும் சகோதரர்களின் வற்புறுத்தலும் அவரை இணங்கவைத்தது. அவர்களை அவர் அனுப்பியபோது அவர்களிடம் கூறினார்:*

> *'என் மக்களே, நீங்கள் அனைவரும் ஒரே வாசல் வழியாக நுழையாதீர்கள். மாறாக, வெவ்வேறு வாசல் வழியாக நுழையுங்கள். அல்லாஹ்வின் கட்டளையைவிட்டும் சிறிதளவும் நான் உங்களைக் காப்பாற்றிவிட முடியாது. அதிகாரம் அல்லாஹ்வுக்கே உரியது. நான் அவனையே சார்ந்துள்ளேன். நம்பிக்கையாளர்கள் அவனையே சார்ந்திருக்க வேண்டும்.' (67)*

*அவர்கள் வேற்று நாட்டின் உளவாளிகள் என்று குற்றம் சாட்டப்படலாம் என்று யஅகூபு அஞ்சினார். ஏனெனில், அவர்கள் அனைவரும்*

சேர்ந்தாற் போன்று செல்லும் காட்சியும் அவர்களின் தோற்றமும் அப்படித்தான் இருந்தது.

அனைவரும் யூசுஃபைப் பார்க்கும் சமயத்தில் ஒன்றிணைந்தார்கள். யூசுஃப் தம் சகோதரரைத் தனிப்பட்ட முறையில் வரவேற்றார்: ‘அவர்கள் யூசுஃபிடம் சென்றபோது அவர் தம் சகோதரரைத் தம்முடன் வைத்துக் கொண்டார். நான் உமது சகோதரன்தான். அவர்கள் செய்துகொண்டிருப்பதைப் பற்றிக் கவலைப்படாதீர் என்று கூறினார். (69)’ யூசுஃப் தம் சகோதரர்களைக் குறித்து சில விசயங்களை அறிந்திருக்கலாம். அதுதான் அவரை இவ்வாறு ஆறுதல்கூறும் விதமாகப் பேசவைத்திருக்கும்.

பின்னர் யூசுஃப் ஒரு திட்டம் தீட்டி, தம் சகோதரரை அவர்களுடன் அனுப்பாமல் தம்முடனேயே வைத்துக்கொண்டார். பொருள்களை அளக்கும் ஓர் அளவையை அவரது பொருள்களோடு மறைத்துவைத்தார். காவலர்கள் அறிந்துகொண்டபோது அவரைக் குற்றவாளி எனக் கருதி பிடித்துக்கொண்டனர். யூசுஃபின் சகோதரரும் தொலைந்துவிட்டார் என்பதை அறிந்த யஅகூபு வருத்தத்தோடு கூறினார்: ‘அல்லாஹ் அவர்கள் அனைவரையும் என்னிடம் கொண்டுவரக்கூடும். அவன் நன்கறிந்தவனாகவும் ஞானம்மிக்கவனாகவும் இருக்கிறான். (83)’

உண்மையில் யஅகூபு அடைந்த துன்பம் மிகப் பெரியது. தம் உள்ளத்தின் அடியாழத்தில் யூசுஃப் உயிருடன் இருப்பதாகவும் நிச்சயம் திரும்பி வருவார் என்றும் நம்பிக்கை வைத்திருந்தார். அவருடைய இன்னொரு மகனும் தொலைந்துபோனது அவரது துன்பத்தைப் பன்மடங்காக்கி விட்டது.

> அவர் எதையும் பார்க்காமல் அவர்களை விட்டு விலகி, ‘அந்தோ யூசுஃபே!’ என்று அழ ஆரம்பித்துவிட்டார். கவலையால் அவரது கண்கள் வெளுத்துவிட்டன. அவர் துக்கத்தை அடக்கிக்கொண்டிருந்தார். (84)

இறுதியான கெஞ்சுதலோடு, அல்லாஹ்வின் மீதுள்ள நம்பிக்கையோடு அவர் தம் பிள்ளைகளிடம் கூறினார்: ‘என் மக்களே, நீங்கள் சென்று யூசுஃபையும் அவருடைய சகோதரரையும் தேடுங்கள். அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கையிழந்துவிடாதீர்கள். நிராகரிக்கும் மக்கள்தாம் அவனது அருளில் நம்பிக்கையிழப்பார்கள். (87)’

யூசுஃபின் சகோதரர்கள் மூன்றாவது முறையாக எகிப்தை நோக்கிச் சென்றார்கள். அவர்கள் மிகவும் கவலையோடு காணப்பட்டார்கள். அவர்களின் தோற்றம் பரிதாபமாக இருந்தது. அவர்கள் யூசுஃபிடம் சென்று,

*‘மேலானவரே, எங்களையும் எங்கள் குடும்பத்தாரையும் பெருந்துன்பம் பீடித்துள்ளது. நாங்கள் சிறிதளவு பொருளையே கொண்டுவந்துள் ளோம். எனவே, எங்களுக்குத் தானியத்தை நிறைவாக வழங்கி தர்மமும் செய் யுங்கள். நிச்சயமாக அல்லாஹ் தர்மம்செய்வோருக்கு அதற்குரிய கூலியை வழங்கிடுவான் என்று கூறினார்கள்.* (88)’

*தம் சகோதரர்களின் இந்த இழிநிலையை உணர்ந்த யூசுஃப் அதுவரை மறைத்துக்கொண்டிருந்த விசயத்தை வெளிப்படுத்தினார். அவர்களின் உள்ளத்தை உலுக்கும் விதமாக அவர் அவர்களிடம் கேட்டார்:*

> *‘நீங்கள் அறியாதிருந்தபோது யூசுஃபையும் அவருடைய சகோதர ரையும் என்ன செய்தீர்கள் என்று தெரியுமா?’ ‘உண்மையில் நீங் கள்தான் யூசுஃபா?’ என்று அவர்கள் ஆச்சரியமாகக் கேட்டார்கள். ‘ஆம், நான்தான் யூசுஃப். இவர் என் சகோதரர். அல்லாஹ் எங்கள் மீது அருள்புரிந்துள்ளான். இறையச்சத்துடன் பொறுமையை மேற் கொண்டு நற்செயல் புரிவோரின் கூலியை அல்லாஹ் ஒருபோதும் வீணாக்க மாட்டான்.’ என்று அவர் கூறினார்.* (89,90)

*பிரபஞ்சத்தில் செயல்படும் இறை நியதிகளை ஒத்த சமூக நியதியை யூசுஃப் நினைவுகூர்ந்தார். இறையச்சமும் பொறுமையும் வெற்றியைப் பெற்றுத்தரக்கூடியவையாக இருக்கின்றன. ஆக்ஸிஜனும் ஹைட்ரஜனும் இணைந்து நீரைத் தருவதுபோல.*

❖ ❖ ❖

*சம்பவம் நிகழ்ந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு அனைவரும் அல்லாஹ் வின் நியதிகள் உண்மையானவை என்பதை உணர்ந்துகொண்டார்கள். ‘சொல்லில் அல்லாஹ்வைவிட உண்மையாளன் வேறு யார்?* (4:122)’ *அவர்கள் கூறினார்கள்:*

> *‘அல்லாஹ்வின் மீது ஆணையாக, அல்லாஹ் எங்களைவிட உம்மைச் சிறப்பித்துள்ளான். நிச்சயமாக நாங்கள் தவறிழைத்து விட்டோம்.’ அதற்கு யூசுஃப் கூறினார், ‘இன்று உங்கள்மீது எந்தக் குற்றமும் இல்லை. அல்லாஹ் உங்களை மன்னிப்பானாக. அவன் அனைவரையும் விடப் பெரும் கருணையாளனாக இருக்கிறான்.’*
> (91,92)

*பெரிய மனிதர்கள் குரோதம் கொள்ள மாட்டார்கள். அவர்கள் அதி காரம் பெற்றுவிட்டால் அது அவர்களின் பணிவையும் மன்னிக்கும் பண்பையுமே அதிகப்படுத்தும். யூசுஃப் தன் சகோதரர்களிடம் கூறினார்:*

'நீங்கள் எனது இந்தச் சட்டையைக் கொண்டுசென்று என் தந்தையின் முகத்தில் போடுங்கள். அவர் பார்வையுடையவராக ஆகிவிடுவார். உங்கள் குடும்பத்தார் அனைவரையும் என்னிடம் அழைத்துவாருங்கள். (93)'

பயணக் குழு எகிப்திலிருந்து ஷாம் தேசத்தை நோக்கிப் புறப்பட்டது. திடீரென யஅகூபைச் சுற்றியிருந்தவர்கள் ஒரு சப்தத்தைச் செவியுற்றனர். அவர் அதனை நற்செய்தியாக எண்ணினார். அவரைச் சுற்றியிருந்தவர் கள் அதன் பொருளை உணரவில்லை. 'நான் யூசுஃபின் வாடையை உணர்கிறேன் என்று அவர் கூறியதையே அவர்கள் செவியேற்றார்கள். என்னை நீங்கள் மூடர் என்று எண்ணிவிடக் கூடாதே என்றும் அவர் கூறினார். (94)'

ஆன்மாவின் உலகம் ஆச்சரியமானது. எப்படி அந்த நற்செய்தி யஅகூபின் உள்ளத்தில் ஊடுருவியது? நிகழ்ந்ததை அவர் எவ்வாறு உணர்ந்துகொண்டார்? 'நற்செய்தி கூறுபவர் வந்தபோது அவர் அந்தச் சட்டையை யஅகூபுடைய முகத்தில் போட்டார். உடனே அவர் பார்வை யுடையவராக ஆகிவிட்டார். அப்போது அவர், நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்விடமிருந்து நான் அறிவேன் என்று உங்களிடம் கூறவில்லையா என்று கேட்டார். (96)'

சிறிது நாள்களிலேயே முதல் கனவு உண்மையானது. பின்னர் இரண் டாவது, மூன்றாவது கனவுகளும் உண்மையாயின.

> அவர்கள் யூசுஃபிடம் வந்தபோது அவர் தம் பெற்றோரைத் தம் பக்கம் அழைத்துக்கொண்டார். 'அல்லாஹ்வின் நாட்டப்படி எகிப் தில் நீங்கள் அச்சமற்றவர்களாக இருங்கள்.' என்று அவர் அவர் களிடம் கூறினார். அவர் தம் பெற்றோரை அரியணையின் மீது அமரவைத்தார். அனைவரும் அவருக்குச் சிரம்பணிந்தார்கள். 'என் தந்தையே, இதுதான் நான் முன்னர் கண்ட கனவின் விளக்கம். என் இறைவன் அதனை உண்மையாக்கிவிட்டான். அவன் என்மீது பேருபகாரம் புரிந்துள்ளான். அதாவது, சிறையிலிருந்து என்னை விடுவித்து, எனக்கும் என் சகோதரர்களுக்குமிடையே ஷைத்தான் குழப்பத்தை ஏற்படுத்தியபின்னரும் அவன் உங்கள் அனைவரையும் பாலைவனத்திலிருந்து இங்கு கொண்டுவந்து சேர்த்துள்ளான். நிச்சயமாக என் இறைவன் தான் நாடும் விசயத்துக்குச் சிறந்த முறையில் திட்டமிட்டுக்கொள்கிறான். அவன் நன்கறிந்தவனாகவும் ஞானம்மிக்கவனாகவும் இருக்கிறான்.' (99,100)

இந்தச் சம்பவம் நிறைவடைந்த பிறகு அல்லாஹ் தன் தூதர் முஹம்ம திடம் கூறுகிறான்: 'இவை மறைவான செய்திகளாகும். இவற்றை நாம்

*உமக்கு அறிவிக்கிறோம். யூசுஃபின் சகோதரர்கள் திட்டம்தீட்டி ஏக மனதாக அதனை முடிவுசெய்தபோது நீர் அவர்களுடன் இருக்கவில்லை.* (102)'

*ஆம். அவர் அவர்களுடன் இருக்கவில்லை, நடந்தவற்றைப் பார்ப்ப தற்கு. அவர்களின் செய்திகளை வாசிப்பதற்கு அவர் படிப்பவராகவும் இருக்கவில்லை. நிச்சயமாக இது அல்லாஹ்விடமிருந்து அறிவிக்கப் பட்ட வஹீ. அவர் அதனைக் கூடுதல்குறைவின்றி அப்படியே மக்களுக்கு எடுத்துரைக்கிறார். ஆயினும், மக்களில் பெரும்பாலோர் முஹம்மதின் தூதுத்துவத்தை மறுப்பவர்களாகவே இருக்கிறார்கள்.*

*சிலை வழிபாட்டாளர்கள், வேதக்காரர்கள் எனத் தற்காலத்திலும் இத்தகைய மக்கள் அதிகமாகவே காணப்படுகிறார்கள். 'நீர் கூறும், இதுதான் என் வழி. நானும் என்னைப் பின்பற்றியவர்களும் தெளிவான அறிவுடன் அல்லாஹ்வின் பக்கம் அழைக்கிறோம். அல்லாஹ் தூய்மை யானவன். நான் இணைவைப்பவர்களில் உள்ளவன் அல்ல.* (108)'

*அவர்கள் பிரபஞ்சத்தில் பரவிக் காணப்படும் சான்றுகளைக் காணாமல் கண்களை மூடியவர்களாகவே இருக்கிறார்கள். 'வானங்களிலும் பூமியிலும் எத்தனையோ சான்றுகள் இருக்கின்றன. ஆனால், அவற்றைப் புறக்கணித்த வர்களாகவே அவர்கள் கடந்துசெல்கிறார்கள்.* (105)'

❖ ❖ ❖

அத்தியாயம் 13

# அர்றஃது

## (இடி)

*இந்த அத்தியாயத்தின் முதல் வசனத்தில் அல்லாஹ் தன் தூதரை விளித்துக் கூறுகிறான்: 'உம் இறைவனிடமிருந்து உமக்கு அருளப்பட்டது சத்தியமானதாகும். ஆனாலும், மக்களில் பெரும்பாலோர் நம்பிக்கை கொள்வதில்லை.* (1)'

*பெரும்பாலோர் சத்தியத்தைப் புறக்கணித்து அதற்குக் கட்டுப்படாமல் இருப்பதற்கு ஏதேனும் காரணம் இருக்கிறதா? இல்லை.*

*ஒரு பேச்சுக்கு வஹீ அருளப்படவில்லை என்று வைத்துக்கொள் வோம். இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள படைப்புகள் படைப்பாளனின் இறைத்தன்மையை, அவனுடைய வல்லமையை உணர்த்தக்கூடியவை யாக இல்லையா? வானங்கள் மற்றும் பூமியைச் சரியாகப் பார்த்தாலே இறைவனை மறுப்பதும் ஒன்றுமே இல்லாதவற்றை அவனுக்கு இணை களாகக் கருதுவதும் மடமைத்தனத்தின் உச்சகட்டம் என்பதை அறிந்து கொள்ளலாம்.*

*இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றியும் அதில் காணப்படும் அல்லாஹ்வின் சான்றுகள் பற்றியும் வர்ணிக்கும் வசனங்களைக் கொஞ்ச நேரம் விட்டு விட்டு, பின்வரும் வசனத்தில் கவனம்செலுத்துவோம்: 'உம் இறை வனிடமிருந்து உமக்கு அருளப்பட்டது உண்மையானதாகும்.' இந்த வச னம் இதே அத்தியாயத்தில் உள்ள பின்வரும் வசனத்தோடு இணைந்து வருவதையும் காண்கிறோம்: 'உம் இறைவனிடமிருந்து உமக்கு அருளப் பட்டது உண்மையானது என்பதை அறிபவர் குருடரைப் போல ஆவாரா?* (19)'

*வஹீயின் உண்மைகளை அறிந்த இவர்கள்தாம் சிறப்புக்குரியவர்கள். வஹீயின் மூலம் அவர்களின் உள்ளம் பிரகாசமடைந்ததால் அவர்களின்*

வாழ்க்கையும் சீர்பெற்றுவிட்டது. அவர்களின் பண்புகளைக் கணக்கிடும் வசனங்கள் பின்வரும் வசனத்தைக் கொண்டு தொடங்குகிறது: ‘அறிவுடையோர்தாம் அறிவுரையை ஏற்றுக்கொள்வர். அவர்கள் அல்லாஹ்வுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றுவார்கள். அவனது உடன்படிக்கையை முறித்துவிட மாட்டார்கள். அல்லாஹ் இணைத்துக் கொள்ளும்படி கட்டளையிட்டதை இணைத்துக்கொள்வார்கள் ... (19-21)’

தொடர்ந்து வசனங்கள் பத்து முத்தான அறிவுரைகளைக் குறிப்பிடுகின்றன. அவையனைத்தையும் ஒருசேரப் பெற்றிருப்பவரே முழுமையான கூலிக்கு உரியவர்:

> அவர்களுக்குத்தான் மறுமையின் முடிவு சாதகமாக அமையும். நிலையான சுவனங்களில் அவர்களும் அவர்களின் மூதாதையர், மனைவியர், குழந்தைகள் ஆகியோரில் அதற்குத் தகுதியானவர்களும் நுழைவார்கள். வானவர்கள் ஒவ்வொரு வாசல் வழியாகவும் அவர்களிடம் வருவார்கள். நீங்கள் பொறுமையை மேற்கொண்டதனால் உங்கள்மீது சாந்தி நிலவட்டும். மறுமையின் முடிவு உங்களுக்கு எவ்வளவு சிறப்பானது! (22-24)

அவற்றுள் முதன்மையானது, பக்குவமான அறிவு. இரண்டாவது, மனிதனிடம் பெறப்பட்டுள்ள -அவனுடைய இயல்பில் வைக்கப்பட்டுள்ள- வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றுவது. தன் இறைவனையே முன்னோக்க வேண்டும் என்றும் அவனுக்கு இணையாக யாரையும் ஆக்கிவிடக் கூடாது என்றும் மனிதனிடம் வாக்குறுதி பெறப்பட்டுள்ளது.

மீண்டும், அருளப்படும் வஹீ குறித்தும் அதனை எடுத்துரைக்கும் பொறுப்பு தூதருக்கு உள்ளது குறித்தும் பேசப்படுகிறது:

> இவ்வாறே நாம் உம்மை ஒரு சமூகத்தின் பக்கம் அனுப்பியுள்ளோம். அது ஏனெனில் நாம் உமக்கு வஹீயாக அறிவிப்பதை நீர் அவர்களுக்கு எடுத்துரைப்பதற்காக. அவர்களுக்கு முன்னரும் பல சமூகங்கள் கடந்துவிட்டன. அவர்கள் கருணைமிக்க இறைவனை மறுத்துக்கொண்டிருக்கிறார்கள். நீர் கூறும், ‘அவனே என் இறைவன். அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவனையே நான் சார்ந்துள்ளேன். அவன் பக்கமே நீங்கள் திரும்ப வேண்டும்.’ (30)

எழுதப் படிக்கத் தெரியாத உம்மிகளான அப்போதைய அறபுகள் இந்த மார்க்கத்தை மிகக் கடுமையாக எதிர்த்தார்கள். தூதர் தம் தூதுத்துவத்தை உண்மைப்படுத்தும் பொருட்டு வழக்கத்துக்கு மாறான ஒரு அற்புதத்தை

நிகழ்த்திக்காட்ட வேண்டும் என்பதுதான் அவர்களுடைய பிடிவாதத்தின் மையமாக இருந்தது.

அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டும் அவர்கள் நம்பிக்கை கொள்ளவில்லையெனில் அவர்களை அழிவு சூழ்ந்துகொள்ளும் என்று வசனங்கள் எச்சரிக்கின்றன.

இந்த அத்தியாயத்தில் அவர்களின் நிராகரிப்பும் அதற்கான பதில்களும் பல வடிவங்களில் இடம்பெறுகின்றன:

- ‘அவருக்கு அவரது இறைவனிடமிருந்து ஏதேனும் ஒரு சான்று அருளப்பட்டிருக்கக் கூடாதா?’ என்று நிராகரிப்பாளர்கள் கேட்கிறார்கள். நீர் எச்சரிக்கைசெய்பவர்தாம். ஒவ்வொரு சமூகத்துக்கு ஒரு வழிகாட்டி இருக்கிறார். (7)
- ‘அவருக்கு அவரது இறைவனிடமிருந்து ஒரு சான்று அருளப் பட்டிருக்கக் கூடாதா?’ என்று நிராகரிப்பாளர்கள் கேட்கிறார் கள். நீர் கூறும், ‘தான் நாடியோரை அல்லாஹ் வழிதவறச் செய்துவிடுகிறான். தன் பக்கம் திரும்புவோருக்கு அவன் நேரான வழியைக் காட்டுகிறான்.’ (27)

இந்த முடிவை அடைவதற்காகவே அவர்கள் தங்களின் நிராகரிப்பில் முன்னேறிக்கொண்டே செல்கிறார்கள். ‘நீர் இறைவனால் அனுப்பப் பட்டவர் அல்ல என்று நிராகரிப்பாளர்கள் கூறுகிறார்கள். நீர் கூறும், எனக்கும் உங்களுக்குமிடையே சாட்சிகூற அல்லாஹ்வும் வேத அறிவு உள்ளவர்களும் போதுமானவர்கள். (43)’

இந்தப் பிரபஞ்சத்தைப் பார்க்காமல் பார்வையைத் தொலைத்தவனிடம் சரியான ஈமானை எதிர்பார்க்க முடியாது. தன்னைக்கூடக் கவனித்துப் பார்க்காதவன் அல்லாஹ்வைச் சரியான முறையில் அறிந்துகொள்வான் என்று எதிர்பார்க்க முடியாது. அவன் நம்பிக்கையாளர்களுடன் இணைந் திருந்தாலும் எந்தச் சிந்தனையுமின்றிக் குருட்டுத்தனமாகப் பின்பற்று வோருடன்தான் இருப்பான்.

பல அத்தியாயங்களில் இந்த வஹீயை எடுத்துரைக்குமாறு தூதர் கட்டளையிடப்படுகிறார்: ‘உமக்கு அறிவிக்கப்பட்டுள்ள இந்த வேதத்தை நீர் எடுத்துரைப்பீராக. தொழுகையையும் கடைப்பிடிப்பீராக ... (29:45)’

> அவனுக்குக் கட்டுப்பட வேண்டும் என்றும் இந்தக் குர்ஆனை எடுத்துரைக்க வேண்டும் என்றும் நான் பணிக்கப்பட்டுள்ளேன். யார் நேர்வழி பெறுகிறாரோ அவர் தமக்காகவே நேர்வழி பெறுகிறார் ... (27:91,92)

*இந்த அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ளது: 'அது ஏனெனில் நாம் உமக்கு அறிவிப்பதை நீர் அவர்களுக்கு எடுத்துரைப்பதற்காக. (30)'*

*இங்கு வசனத்தில் கூறப்பட்டுள்ள 'திலாவத்' என்பது வெறுமனே ஓதுவதல்ல. அது வழிமுறையை, செயல்திட்டத்தைத் தெளிவுபடுத்து வது, பகிரங்கமாக எச்சரிக்கை செய்வது. இதுதான் 'தர்பிய்யா'வின் அடிப்படை. அன்றையே அறபிய சமூகம் தம் பணியை உணர்ந்து செயல் படும் பொருட்டு இறைவனால் தெரிவுசெய்யப்பட்டு வழங்கப்பட்ட அறிவுரையை அவர்களுக்கு எடுத்துரைப்பது. அவர்கள் தம் பணியை நிறைவேற்றினால் வெற்றிபெறுவார்கள். இல்லையெனில் தங்களுக்காகக் காத்திருக்கும் தண்டனையையே பெறுவார்கள்: 'நிராகரிப்பாளர்களுக்கு அவர்களின் செயல்களினால் ஏதேனும் ஒரு ஆபத்து வந்துகொண்டே இருக்கும் அல்லது அது அவர்களது ஊருக்கு அருகில் எங்காவது இறங்கிக்கொண்டே இருக்கும். அல்லாஹ்வின் வாக்குறுதி வரும்வரை இவ்வாறு நிகழ்ந்துகொண்டே இருக்கும். நிச்சயமாக அல்லாஹ் தன் வாக்குறுதிக்கு மாறாகச் செயல்படுவதில்லை. (31)'*

❖ ❖ ❖

*இந்த அத்தியாயம் 'முஹம்மது' என்ற அத்தியாயத்துக்குப் பிறகு மதீனாவில் அருளப்பட்டது என்ற கருத்தே பெரும்பான்மையினரின் கருத்து. ஆனால் நான் இது மக்காவில் அருளப்பட்டது என்ற கருத்தையே சரியெனக் காண்கிறேன். இதில் காணப்படும் வழிமுறையே எனது இந்தக் கருத்துக்குக் காரணம். அல்அன்ஆம், யூனுஸ், அல்இஸ்றா ஆகிய அத்தி யாயங்களில் காணப்படுவதுபோன்று வழக்கத்துக்கு மாறான அற்புதத்தை நிகழ்த்துமாறு வைக்கப்பட்ட இணைவைப்பாளர்களின் கோரிக்கை இந்த அத்தியாயத்திலும் காணப்படுகிறது.*

*முதல் வசனத்தில் 'உம் இறைவன் உமக்கு அருளியது உண்மையான தாகும்.' என்ற வாசகம் இடம்பெறுகிறது. அதே போன்று, அத்தியாயத்தின் இறுதியில் பின்வரும் வசனத்தைக் காண்கிறோம்:*

> *நாம் யாருக்கு வேதத்தை வழங்கியுள்ளோமோ அவர்கள் உமக்கு அருளப்பட்டுள்ளதைக் குறித்து மகிழ்ச்சியடைகிறார்கள். அந்தக் குழுக்களில், அவற்றில் சிலவற்றை நிராகரிக்கக்கூடியவர்களும் இருக்கிறார்கள். நீர் கூறும், 'நான் அல்லாஹ்வை மட்டுமே வணங்க வேண்டும் என்றும் அவனுக்கு யாரையும் இணையாக்கக் கூடாது என்றும் கட்டளையிடப்பட்டுள்ளேன். அவன் பக்கமே நான் அழைக்கிறேன். அவனிடமே நான் திரும்ப வேண்டும்.' (36)*

இந்த வசனத்தில் வந்துள்ள முன்னறிவிப்பு நிகழ்ந்தது. எகிப்து, ஷாம் ஆகிய நாடுகளின் கதவுகளை இஸ்லாம் தட்டியபோது உள்ளங்கள் மிக விரைவாகவே இஸ்லாத்தின் பக்கம் ஈர்க்கப்பட்டன. கிறிஸ்தவர்கள் கூட்டம்கூட்டமாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள். அதன் உதவி யாளர்களாக, அதன் கொடியை உயர்த்திப்பிடிப்பவர்களாக ஆனார்கள்.

எந்த அளவுக்கெனில் ஜிஸ்யா என்ற வரியே இல்லாமல் போனது. அந்த வழியை நிலைத்திருக்கச் செய்யும் பொருட்டு எகிப்தின் ஆட்சி யாளர், 'இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டாலும் ஜிஸ்யா வரி செலுத்த வேண்டும்.' என்று உத்தரவிட்டார். உமர் இப்னு அப்துல் அஸீஸ் அவ ருக்குக் கடிதம் எழுதி அவரைக் கடுமையாகக் கண்டித்தார்: 'உமக்குக் கேடு உண்டாகட்டும். முஹம்மது நேர்வழி காட்டுபவராகத்தான் அனுப்பப்பட்டார். வரி வசூலிப்பவராக அனுப்பப்படவில்லை. இஸ் லாத்தை ஏற்றுக்கொண்டவர்களிடமிருந்து ஜிஸ்யா வரியை நீக்கிவிடும், அதனால் பொதுக் கருவூலம் காலியாகிவிட்டாலும் சரியே.'

எகிப்து, ஷாம் மற்றும் இன்னபிற பகுதிகளில் இருந்த கிறிஸ்தவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதோடு அறபு மொழியையும் தமதாக்கிக் கொண்டார்கள். இதன் மூலம் அறபிய சமூகம் பெருகிக்கொண்டே சென்றது. அவர்களைக் குறித்து வசனத்தில் கூறப்பட்டது:

> இவ்வாறே நாம் இதனை ஒரு கட்டளையாக அறபி மொழியில் அருளியுள்ளோம். உம்மிடம் அறிவு வந்துவிட்ட பின்னரும் அவர்களின் விருப்பங்களை நீர் பின்பற்றினால் அல்லாஹ்வுக்கு எதிராக உமக்கு உதவிபுரிபவரோ காப்பாற்றுபவரோ இருக்க மாட் டார்கள். (37)

இந்த வசனத்தில் அல்ஹுக்ம் -கட்டளை- என்பது அரசின் அதி காரத்தைக் குறிப்பதுபோலக் குர்ஆனின் ஞானத்தையும் குறிக்கும்.

இஸ்லாம் அறபிய தீபகற்பத்தில் வேகமாகப் பரவியது. மக்காவாசிகள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன்பே அவர்களைச் சுற்றியிருந்த பல கோத்திரத்தார் இஸ்லாத்தை ஏற்றுவிட்டார்கள். பின்வரும் வசனம் இதனையே குறிக்கிறது:

> நாம் பூமியை அதன் சுற்றளவிலிருந்து குறைத்துக் கொண்டே வருவதை அவர்கள் பார்க்கவில்லையா? அல்லாஹ்வே தீர்ப்ப ளிக்கிறான். அவனது தீர்ப்பை நீக்குபவர் யாரும் இல்லை. அவன் விசாரணைசெய்வதில் விரைவானவன். (41)

திருக்குர்ஆன் அல்லாஹ்வின் பக்கம் இட்டுச்செல்லக் கூடி பேசக்கூடிய ஆதாரமாகும். பிரபஞ்சம் அல்லாஹ்வை அறிமுகப்படுத்தும் மௌனமான ஆதாரமாகும். இரு ஆதாரங்களையும் புரிந்துகொள்வதற்கு அறிவின் விழிப்பும் உணர்வின் நுணுக்கமும் அவசியமாகிறது. அலட்சியமும் பொடுபோக்கும் எந்த நன்மையையும் கொண்டுவராது. ஆகவேதான் திருக்குர்ஆனில், 'நீங்கள் புரிந்துகொள்ள மாட்டீர்களா?', 'நீங்கள் சிந்திக்க மாட்டீர்களா?' என்பதுபோன்ற சொல்லாடல்கள் அதிகமாகக் காணப்படு கின்றன.

தூங்கும் உணர்வைத் தட்டியெழுப்பும் இதுபோன்ற வசனங்களை நாம் திருக்குர்ஆனில் காண்கிறோம்:

> பூமியில் அருகருகே பல பகுதிகள் உள்ளன. திராட்சைத் தோட்டங் களும் தானியப்பயிர் நிலங்களும் ஒற்றையாகவும் இரட்டையாகவும் இருக்கின்ற பேரீச்சைகளும் உள்ளன. அனைத்துக்கும் ஒரே தண்ணீர் தான் பாய்ச்சப்படுகிறது. ஆனாலும், நாம் அவற்றில் சிலவற்றைச் சிலவற்றைவிடச் சுவையில் சிறப்பித்துள்ளோம். சிந்திக்கும் மக்க ளுக்கு நிச்சயமாக இதில் ஏராளமான சான்றுகள் இருக்கின்றன! (4)

பூமியில் விளையக்கூடிய திராட்சை, எலுமிச்சை, கருவேல மரம் ஆகிய மரங்கள் அனைத்துக்கும் ஒரே வகையான தண்ணீர்தானே பாய்ச்சப் படுகிறது. ஆனாலும், அவற்றின் கனிகள் நிறத்திலும் சுவையிலும் வெவ் வேறானவையாகவே இருக்கின்றன?

பட்டுப்புழுவை கவனித்துப்பார்த்திருக்கிறீர்களா? புதர்ச் செடிகளை உணவாக உட்கொண்டு அது எப்படிப் பட்டை வெளிப்படுத்துகிறது? தேனீ அவற்றை உட்கொண்டு தேனைத் தருகிறது. ஆடு அவற்றை உட் கொண்டு புழுக்கைகளைத்தானே தருகிறது?

உயர்வான இறை நாட்டமே இத்தனை வகைகளுக்கும் பின்னால் மறைந்திருக்கிறது. அதுவே வானங்களிலும் பூமியிலும் ஆச்சரியமான பல வகைகளை ஏற்படுத்தியுள்ளது. இத்தனை சான்றுகளைக் கண்டபிறகும் நாத்திகன் கூறுகிறான், 'எந்த இறைவனும் இல்லை' என்று. அப்படி யானால் இவையெல்லாம் என்ன? அவர்களில் ஒருவன் வந்து தூதரிடம் கூறுகிறான், 'நீர் இந்த மலையைப் பிளந்து, இந்த இடத்தில் எனக்காக ஒரு தோட்டத்தை ஏற்படுத்தாதவரை நான் உம்மீது நம்பிக்கை கொள்ள மாட்டேன்.' தன்னுடைய இந்த ஆசையைப் பிரபஞ்சத்தின் இறைவன் நிறைவேற்றுவான் என்று எண்ணுகிறான்போல.

உயிரினங்களைப் படைத்துப் பெருகச்செய்வதில் படைப்பாளனின் வல்லமையைக் குறித்து திருக்குர்ஆன் பேசுகிறது. நீரிலும் நிலத்திலும்

ஆகாயத்திலும் கோடிக்கணக்கான உயிரினங்கள் காணப்படுகின்றன. அவை இனப்பெருக்கம் செய்து பெருகிக்கொண்டும் இருக்கின்றன. அவை கருவாகி, நிர்ணயிக்கப்பட்ட நிலைகளைக் கடந்துதான் வருகின்றன. அவற்றில் எந்த ஒரு விதியும் மாறுவதில்லை. எந்தச் சீர்குலைவும் நிகழ்வதில்லை. ஆகாயத்திலும் காடுகளிலும் பொந்துகளிலும் குடும்பங்களிலும் இருக்கும் எந்த ஒரு உயிரினமாக இருந்தாலும் அவை சுமந்துகொண்டிருப்பதை, அவற்றின் கருவறைகளில் நிகழ்ந்துகொண்டிருப்பதை அவன் அறிவான். ஒவ்வொன்றுக்கும் அவனிடம் ஓர் அளவு இருக்கிறது:

> ஒவ்வொரு பெண் சுமந்திருப்பதையும் கருவறைகளில் சுருங்கி விரிவதையும் அல்லாஹ் நன்கறிவான். ஒவ்வொரு பொருளுக்கும் அவனிடமே ஓர் அளவு உள்ளது. அவன் மறைவானதையும் வெளிப்படையானதையும் நன்கறிந்தவன். மிகப் பெரியவன்; மிகவும் உயர்ந்தவன். (8,9)

இவையனைத்தையும் செய்தவன்தான் வானத்தை உயர்த்தினான். எந்த ஒரு செயலும் அவனை மற்ற செயல்களைவிட்டும் திருப்பிவிடுவதில்லை. அவன் நட்சத்திரங்களை அவற்றுக்குரிய இடங்களில் நிலைபெறச் செய்துள்ளான். எந்த ஒன்றும் அதன் வட்டப்பாதையை விட்டுப் பிறழ்ந்துவிடுவதில்லை.

இரவிலும் பகலிலும் மனிதனைப் பாதுகாக்கும் பாதுகாவலர்கள் இருக்கிறார்கள். தாக்கக்கூடிய கிருமிகளிலிருந்து மனிதனைப் பாதுகாக்கும் எதிர்ப்பு அணுக்கள் இந்த அருட்கொடையின் விளைவுகள்தானா? எவ்வாறு இருந்தாலும் இந்தப் பாதுகாவலர்கள் அல்லாஹ்வின் கட்டளையின் பேரில்தான் செயல்படுகிறார்கள்.

இந்த அத்தியாயம் இறை வல்லமையின் வெளிப்பாடுகளைத் தெளிவுபடுத்திக் கொண்டே, இதுவரை வந்துள்ள எந்த வேதத்திலும் இல்லாத அளவு சிறப்புகளை முழுமைப்படுத்திக் கொண்டே செல்கிறது. பின்னர், கேள்விகள் எழுப்பப்பட்டு அவற்றுக்குரிய தனித்துவமான பதில்களும் வழங்கப்படுகின்றன:

> 'வானங்கள் மற்றும் பூமியின் இறைவன் யார்?' என்று கேளும். 'அல்லாஹ்தான்' என்று நீரே கூறும். 'அவ்வாறிருக்க அவனைத் தவிர தமக்கே எவ்வித பலனையோ தீங்கையோ செய்ய இயலாதவற்றையா நீங்கள் உதவியாளர்களாக ஆக்கிக்கொண்டீர்கள்?' என்று கேளும். 'பார்வையற்றவரும் பார்வையுள்ளவரும் சமமாவார்களா அல்லது இருள்களும் ஒளியும் ஒன்றாகிவிட முடியுமா?'

என்று கேளும். அல்லது அவர்களின் இணைத் தெய்வங்கள் அல்லாஹ் படைத்துள்ளதைப் போன்று எதையேனும் படைத்ததால் இவர்கள் குழப்பத்துக்குள்ளாகிவிட்டார்களா? நீரே கூறும், 'அல்லாஹ்தான் அனைத்தையும் படைத்தவன். அவன் தனித்தவனாகவும் அனைவரையும் அடக்கியாள்பவனாகவும் இருக்கிறான்.' (16)

❖ ❖ ❖

இந்த அத்தியாயம் பிரபஞ்சம்குறித்த, அதில் காணப்படும் சான்றுகள் குறித்த உரையாடலோடு தொடங்கியது. பின்னர், இந்தச் சான்றுகளைத் தெளிவுபடுத்திய திருக்குர்ஆனோடு மனிதன் மேற்கொள்ளும் நிலைப்பாடு தெளிவுபடுத்தப்படுகிறது.

திருக்குர்ஆனைக் குறித்து முதலில் பேசிவிட்டு, பிரபஞ்சம்குறித்து பேசுவதைத் தாமதப்படுத்த நான் நாடினேன். ஏனெனில், நான் பிரபஞ்சம் குறித்து விரிவாகப் பேச விரும்புகிறேன். முஸ்லிம்கள் அதற்குத் தொடர்பற்ற அந்நியர்களாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் அது குறித்த அறிவுகளை விட்டும் வெகுதூரமாகிவிட்டார்கள்.

நான் என் மனதில் கூறிக்கொண்டேன், நான் இந்தப் பூமியைவிட்டு நூறு மைல் தொலைவில் இருந்தால் என்னால் என்ன பார்க்க முடியும்? என்னால் எதைக் கேட்க முடியும்? சூழலை மாசுபடுத்தும் புகையையும் தூசியையும் என்னால் காண முடியுமா? எல்லாவற்றையும் மிகைத்திருக்கும் தொழிற்சாலைகள் வெளியிடக்கூடிய இரைச்சலை என்னால் கேட்க முடியுமா? இந்தப் பூமிக்கு ஒரு குறிப்பிட்ட தவணை இருக்கிறது என்பதை நான் அறிவேன். இவையெல்லாம் அந்தத் தவணையை விரைவுபடுத்துகிறதா? அதனை அழிவின் பக்கம் இட்டுச்செல்கிறதா?

இந்தப் பெரும் பிரபஞ்சத்தில் நாம் யார்? விஞ்ஞானிகள் பால்வெளியில் கருந்துளைகள் (Black holes) இருப்பதாகக் கண்டுபிடித்துள்ளதாக நான் வாசித்துள்ளேன். இந்தப் பெரும் துளை மில்லியன் கணக்கான நட்சத்திரங்களைத் தன்னுள் கொண்டுள்ளது. இந்த நட்சத்திரங்களின் ஒன்றிணைவும் அதில் உள்ள பிற பொருள்களும் அதனை மிக அதிக ஈர்ப்புச் சக்தி கொண்ட ஒன்றாக ஆக்கிவிட்டது. ஒளி உட்பட அதன் ஈர்ப்புச் சக்தியிலிருந்து எந்த ஒன்றும் தப்ப முடியாது. அது அனைத்தையும் உள்ளிழுத்துவிடுகிறது.

எனக்கு நானே கூறிக்கொண்டேன், இந்தத் துளை உலகத்தின் ஒரு பகுதியில் இருந்தால் உலகத்தின் நிலை என்னவாகும்? வானங்களுக்கும் பூமிக்கும் மத்தியில் இருப்பவை அதைவிட ஆச்சரியமான ஒன்று, அல்லவா?

எனக்கு முன்னால் இருக்கின்ற வெளி அல்லாஹ்வின் வல்லமையை அறிவிக்கும் சான்றுகளால் நிரம்பியுள்ளது:

> அல்லாஹ்வே உங்கள் பார்வைக்குப் புலப்படும் தூண்களின்றி வானங்களை உயர்த்தினான். பின்னர், அவன் அரியணையின் மீது நிலைகொண்டான். அவன் சூரியனையும் சந்திரனையும் ஒரு நியதிக்குட்படுத்தியுள்ளான். ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட தவணைவரை இயங்கிக்கொண்டிருக்கும். அவனே அனைத்துக் காரியங்களையும் நிர்வகிக்கிறான். உங்கள் இறைவனின் சந்திப்பை நீங்கள் உறுதியாக நம்பும் பொருட்டு அவன் சான்றுகளைத் தெளிவுபடுத்துகிறான். (2)

என்னைச் சுற்றிலும் ஒரு பெரும் மக்கள்திரளைக் காண்கிறேன். நான் செயற்கைகோளில் இருந்துகொண்டே பூமியின் சுற்றளவைக் காண்கிறேன்.

மனிதனும் ஒரு சிறிய உலகம்தான். அவனது தோலிலும் ஆயிரக்கணக் கான மரங்கள் இருக்கின்றன -முடிகளைத்தான் மரங்கள் என்கிறேன்- அவை வளர்ந்துகொண்டும் உதிர்ந்துகொண்டும் இருக்கின்றன.

மனிதனிடம் காணப்படுபவற்றில் மிக இலகுவானது முடிதான். அவ னுடைய நாளங்களில் இரத்தம் பல வகையான அணுக்களோடு ஓடிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். அணுக்கள் மீண்டும் மீண்டும் புதிதாக உற்பத்தியாகிக் கொண்டே இருக்கின்றன. தேவைக்கேற்றவாறு அவற்றை உற்பத்திசெய்ய அவனுக்குள் உற்பத்தி ஆலைகளும் இருக்கின்றன.

அவனுடைய உடலில் வலைப்பின்னல் போன்று பரவியுள்ள நரம்புகள் இரவும் பகலும் மூளையிடமிருந்து கட்டளைகளைப் பெற்றுக்கொண்டி ருக்கின்றன. மனிதனால் சிக்கலான அந்த மூளையின் தன்மைகள், பணி களைக் குறித்து அறிய முடியவில்லை.

மனிதச் சமூகத்தைப் படைத்ததிலிருந்து இப்போதுவரை அல்லாஹ் தான் பூமிக்கும் அதில் உள்ளவற்றுக்கும் சொந்தக்காரனாக இருக்கிறான். இந்த உடல்களை அவனே பரிபாலிக்கிறான். அதற்கான இன்பங்கள், துன்பங்கள் என அனைத்தையும் அவனே வழங்குகிறான். ‘உம் இறை வனிடமே அனைவரும் திரும்பிச் செல்ல வேண்டும். நிச்சயமாக அவனே சிரிக்கவைக்கிறான். அழவும் வைக்கிறான். அவனே மரணிக்கச் செய்கி றான். வாழவும் வைக்கிறான். (53:42-44)’

அறிவியல் வெளிப்படுத்துவதுபோன்று இந்த உலகம் மிகப் பெரியது. ஆனால், அல்லாஹ்வோ எல்லாவற்றையும்விட மிகப் பெரியவன். இதைத்தான் அறிவியலாளர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

*நம்முடைய சமூகத்தில் பெரும்பெரும் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளும் தலைவர்கள் சிறுசிறு விசயங்களைவிட்டும் கவனமற்று இருப்பதைக் காண்கிறோம். ஆனால், படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் இறைவனை எந்த எந்த ஒன்றும் பிறவற்றைவிட்டுத் திருப்பிவிடாது. அவன் வேதனையில் அழும் பூனையின் முனகலைக்கூடச் செவியேற்கிறான். அதனை வேதனைக்குள்ளாக்கியவர்களை நரகத்தில் நுழையச்செய்கிறான். அதே போன்று, அவன் துன்பத்துக்குள்ளான பெரும்பான்மையான மக்களின் பிரார்த்தனையைச் செவியேற்கிறான். அநியாயக்காரர்களுக்கு உரிய தண்டனையை அளிக்கிறான்.*

*மரத்திலிருந்து ஒரு இலை கீழே விழும் சப்தத்தைக் கூட அவன் செவியேற்கிறான். நாளங்களில் ஓடும் இரத்தத்தை அவன் பார்க்கிறான். வானத்தின் இடியோசையை அவன் செவியேற்கிறான். வானவெளியில் நட்சத்திரம் மறைவதைக் காண்கிறான். 'அல்லாஹ்வைத் தூய்மைப்படுத்தி அவனைப் புகழ்கிறேன், அவனது படைப்புகளின் எண்ணிக்கை அளவு; அவன் பொருந்திக்கொள்ளும் அளவு; அவனது அரியணையின் கன அளவு; அவனது வார்த்தையின் மையளவு!'*

❖ ❖ ❖

அத்தியாயம் 14

# இப்றாஹீம்

(ஒரு நபியின் பெயர்)

*இது நாம் உமக்கு அருளியுள்ள வேதமாகும். அது நீர் மக்களை இருள்களிலிருந்து வெளியேற்றி -அவர்களுடைய இறைவனின் கட்டளைப்படி- வெளிச்சத்தின் பக்கம் கொண்டுவருவதற்காக. அதாவது புகழுக்குரியவனும் வல்லமைமிக்கவனுமாகிய அல்லாஹ்வின் பாதையின் பக்கம் அவர்களைக் கொண்டுவருவதற்காக. வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அவனுக்கே உரியன.* (1,2)

*இந்த உலக வாழ்க்கையில் ஏராளமான இருள்கள் காணப்படுகின்றன. அறியாமை என்னும் இருள், கர்வம் என்னும் இருள், பாவம் என்னும் இருள், இறைவனுக்குக் கீழ்ப்படியாமை என்னும் இருள். இந்த இருள்கள் அனைத்திலிருந்தும் மனிதச் சமூகத்தை வெளியேற்றி, இந்த உலக வாழ்வு மறுவுலக வாழ்வுக்கான விளைநிலமே என்பதையும் மறுவுலகை விடுத்து இவ்வுலகை விரும்புபவர்கள் வழிகேடர்கள் என்பதையும் வஹீயின் வெளிச்சத்தில் வாழ மறுப்பவர்கள் இருள்களில் தட்டழிந்து திரிவார்கள் என்பதையும் அதற்குக் கற்றுக்கொடுக்கும் பொருட்டே அல்லாஹ் இறுதித் தூதரான முஹம்மதுக்கு வேதத்தை அருளினான்.*

*இதற்கு முன்னர் அல்லாஹ் இழிவு, அடிமைத்தனம் ஆகியவற்றின் இருள்களிலிருந்து இஸ்றாயீலின் மக்களை விடுவிக்கும் பொருட்டு மூசாவை அனுப்பிவைத்தான். அவர்களின் அறிவையும் உள்ளத்தையும் அடிமைத்தனத்தின் பிடியிலிருந்து விடுவித்து, சிந்தனைச் சுதந்திரத்தையும் செயல்பாட்டையும் வழங்கினான்.*

*அவர்களிடம் வேண்டப்பட்டதெல்லாம் அவர்கள் அல்லாஹ்வின் இந்த அருட்கொடையை நினைவுகூர வேண்டும், அருட்கொடை யாளனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய வேண்டும் என்பதுதான்:*

நாம் மூசாவை நம் சான்றுகளுடன், 'உம் சமூகத்தை இருள்களி லிருந்து வெளியேற்றி வெளிச்சத்தின் பக்கம் கொண்டுவாரும். அவர்களுக்கு அல்லாஹ்வின் (தண்டனை ஏற்பட்ட) நாள்களை நினைவூட்டும்.' என்று கூறி அனுப்பினோம். நிச்சயமாகப் பொறுமையும் நன்றியுணர்வும் உள்ள ஒவ்வொருவருக்கும் இதில் பெரும் சான்றுகள் இருக்கின்றன. (5)

இறைவனால் வழங்கப்பட்ட மார்க்கங்கள் அனைத்தும் மக்களை அறியாமையிலிருந்து விடுவித்து அறிவின் பக்கமும் தவறான பாதை யிலிருந்து விடுவித்து நேர்வழியின் பக்கமும் கொண்டுசென்றன. நபி யவர்களுக்கு வழங்கப்பட்ட வேதம் அறியாமையை அகற்றும் பேரொளி யால் நிரம்பியுள்ளது. அது அல்லாஹ்வின் பக்கம் இட்டுச் செல்லும் சரியான வழியைக் காட்டுகிறது.

ஆனாலும் மனிதர்கள் வஹீயை எதிர்த்தும் தூதர்களை நிராகரித்தும் வந்துள்ளார்கள். தங்களுக்கு வழங்கப்பட்ட ஆற்றலை, திறமைகளைக் கொண்டு நம்பிக்கையாளர்களைச் சத்தியத்தைவிட்டும் தடுக்க முயன் றார்கள். ஆனாலும் நம்பிக்கையாளர்கள் நிலைகுலையாமல் உறுதியாக நின்று பொறுமை காத்தார்கள். 'அல்லாஹ்வை நாங்கள் சாராமல் இருக்க எங்களுக்கு என்ன நேர்ந்தது? அவன்தானே எங்களுக்கு வழிகாட்டி யிருக்கிறான். நீங்கள் கொடுக்கும் துன்பங்களை நாங்கள் சகித்துக் கொள்வோம். சார்ந்திருப்பவர்கள் அல்லாஹ்வையே முழுமையாகச் சார்ந்திருக்க வேண்டும். (12)'

ஒரு சமூகத்தை இருளிலிருந்து வெளிச்சத்தின் பக்கம் கொண்டுவரு வது ஏதோ ஒரு நாளில் நிறைவுபெறக்கூடிய செயல் அல்ல. அதற்கு நீண்டகாலம் அவசியமாகிறது. நம்முடைய நபியவர்கள் இருபத்து மூன்று வருடங்கள் இந்தக் குர்ஆனைக் கொண்டு அறிவுரை கூறியவராக அந்த மக்களிடம் தங்கியிருந்தார்கள். எந்த அளவுக்கெனில், அந்த மக்களின் அறியாமை அகன்று அவர்கள் உலகை வழிநடத்தும் தகுதிபடைத்த ஆட்சியாளர்களாக ஆனார்கள்.

நாகரிகங்கள், அறிவு, பண்பு என அனைத்திலும் குர்ஆன் அவர்களை உன்னதமானவர்களாக ஆக்கியது. அவர்கள் அல்லாஹ்வின் எதிரிகளுடன் மோதியபோது அவர்களே வெற்றிபெற்றார்கள். பூமியில் ஆதிக்கம் செலுத் தும் தகுதியைப் பெற்றார்கள்.

இதுதான் வாக்குறுதியாகப் பின்வரும் வசனத்தில் இடம்பெறுகிறது:

நிராகரிப்பாளர்கள் தங்களின் தூதர்களிடம், 'நீங்கள் எங்கள் மார்க் கத்துக்குத் திரும்பிவிட வேண்டும். இல்லையெனில் எங்களுடைய

ஊரிலிருந்து உங்களை வெளியேற்றிவிடுவோம்' என்று கூறினார்கள். அவர்களுடைய இறைவன் அவர்களுக்கு வஹீ அறிவித்தான், 'அநியாயக்காரர்களை நிச்சயம் நாம் அழித்திடுவோம். அவர்களுக்குப் பின் நாம் உங்களைப் பூமியில் வசிக்கச்செய்வோம். இது என் முன்னால் நிற்பதை அஞ்சியவருக்கும் என் எச்சரிக்கையைப் பயந்தவருக்கும் உரியதாகும்.' (13,14)

ஒடுக்கப்பட்ட, வழிநடத்தும் பொறுப்பு பறிக்கப்பட்ட சமூகம் சிகரத்தை அடைய முடியாது. அதன் எண்ணங்கள் பலவீனமானவையாகவே இருக்கும். நிச்சயமாக ஈமான் அவர்களின் பழைய நிலையை மாற்றி அவர்களுக்குப் புத்தெழுச்சியையும் உறுதியையும் வழங்க வேண்டும். அப்போதுதான் அவர்களால் தங்களின் எதிரிகளை வீழ்த்த முடியும். அல்லாஹ்வுக்கு மட்டுமே அடிபணிந்த ஒரு வாழ்க்கையைப் பூமியில் வாழ முடியும்.

அப்போதுதான் அல்லாஹ்வும் அவர்களுக்கு அதிகாரத்தை வழங்குவான். அவர்களின் எதிரிகளைத் தோல்வியடையச் செய்வான்: 'அவர்கள் தீர்ப்பை வேண்டினார்கள். பிடிவாதம் கொண்ட ஆணவக்காரர்கள் அனைவரும் இழப்புக்குள்ளாகிவிட்டார்கள் (15)'.

இந்தப் பாடத்தைத் தம்மை மாற்றிக்கொள்ள விரும்பாத நம்முடைய சமூகம் புரிந்துகொள்ள வேண்டும்.

❖ ❖ ❖

ஆரம்பகாலம்தொட்டே மனிதச் சமூகத்தில் பல நிலைகள் அல்லது படித்தரங்கள் காணப்படுகின்றன. முதலாளிகளும் அடிமைகளும் அல்லது தலைவர்களும் அவர்களைப் பின்பற்றுபவர்களும் அல்லது வழிநடத்துபவர்களும் பொதுமக்களும் அல்லது விசேஷமான திறமை வழங்கப்பட்டவர்களும் அவர்களின் திறமைகளைக் கண்டு வியந்து அவர்களைப் பின்பற்றுபவர்களும் காணப்படுகிறார்கள்.

இரு சாராரும் ஒரே இலக்கையே பெற்றிருப்பார்கள். ஏதேனும் ஒரு எழுத்தாளரை விரும்புபவர்கள் அவரது சிந்தனையினால் பெருமளவில் தாக்கமடைகிறார்கள். அவரது சிந்தனை அவர்களின் உள்ளங்களில் மறைமுகமாகவும் தனக்கான இடத்தைப் பெற்றுவிடுகிறது.

தலைவர்களுக்கும் அவர்களைப் பின்பற்றுபவர்களுக்கும் மத்தியில் அல்லது வழிநடத்துபவர்களுக்கும் அவர்களால் கவரப்பட்டவர்களுக்கும் மத்தியில் இந்த ஒற்றுமை பல தளங்களில் காணப்படுகிறது.

*பத்ருப் போரில் அபூஜஹலைச் சுற்றியிருந்த இணைவைப்பாளர்கள் கூறினார்கள், 'அபுல் ஹகமை யாரும் நெருங்க முடியாது.' அவன் அவர்களுக்கு மத்தியில் இருந்ததால் முழுமையான பாதுகாப்பில் இருப்பதாக எண்ணினார்கள். ஆனால், வயதில் சிறிய நபித்தோழர்கள் அவனைக் கொலைசெய்தார்கள்.*

*ஆச்சரியம் என்னவென்றால், இந்த நிராகரிப்பாளர்கள் மறுமைநாளில் இந்தத் தொடர்புகளின் பக்கம் அடைக்கலம் தேடுவார்கள். ஆனால், அவர்களால் எந்தப் பயனையும் அளிக்க முடியாது:*

> *அவர்கள் அனைவரும் இறைவனின் முன்னால் நிற்பார்கள். அப்போது பலவீனமானவர்கள் கர்வம் கொண்டோரிடம், 'நாங்கள் உங்களைப் பின்பற்றியவர்களாக இருந்தோம். எனவே, அல்லாஹ்வின் வேதனையை விட்டும் எங்களைக் காப்பாற்றுவீர்களா?' என்று கேட்பார்கள். அதற்கு அவர்கள், 'அல்லாஹ் எங்களுக்கு வழிகாட்டியிருந்தால் நாங்களும் உங்களுக்கு வழிகாட்டியிருப்போம். இனி பதறினாலும் அல்லது பொறுமையாக இருந்தாலும் இரண்டும் நமக்குச் சமமே. நாம் தப்புவதற்கு எந்த வழியும் இல்லை.' என்று கூறுவார்கள்.* (21)

*விரைவில் நிகழக்கூடிய அந்த நாளின் நிகழ்வுகளை அல்லாஹ் மனிதர்களுக்குத் தெளிவுபடுத்துகிறான். தொண்டனைக் கொண்டு தலைவன் ஏமாந்துவிடக் கூடாது. தலைவனைக் கொண்டு தொண்டன் ஏமாந்துவிடக் கூடாது. ஆனாலும், கர்வம் கொண்ட தலைவர்கள் பெரும்பாலோரை வழிகெடுக்கவே செய்வார்கள். தங்களின் நம்பகத் தன்மையைப் பயன்படுத்தி தங்களைப் பின்பற்றியவர்களை அழிவின் பக்கம் இட்டுச்செல்வார்கள்: 'அல்லாஹ்வின் அருட்கொடையை நிராகரித்து, தம் சமூகத்தை அழிவின் வீடான நரகத்தில் தள்ளியவர்களை நீர் பார்க்கவில்லையா? அதில் அவர்கள் நுழைவார்கள். அது எவ்வளவு மோசமான தங்குமிடம்!* (28,29)'

*தலைவர்களும் அவர்களைப் பின்பற்றி ஏமாந்த தொண்டர்களும் ஒரே இருப்பிடத்தையே பெறுவார்கள். சத்தியத்தின் இயல்பைத் தெளிவுபடுத்துவதில் இந்த அத்தியாயம் அர்றஃது என்ற அத்தியாயத்தை ஒத்திருக்கிறது. நிச்சயமாகச் சத்தியம் மக்களுக்குப் பயனளிக்கும். ஆனால், அசத்தியம் துன்பத்தையும் வலிகளையுமே கொண்டுவரும்.*

*அர்றஃது என்ற அத்தியாயத்தில் அல்லாஹ் கூறுகிறான்: 'இவ்வாறே அல்லாஹ் சத்தியத்துக்கும் அசத்தியத்துக்கும் உதாரணம் கூறுகிறான். நுரையோ காய்ந்து காணாமல்போய்விடுகிறது. மக்களுக்குப் பயனளிப்பது மட்டுமே பூமியில் தங்கிவிடுகிறது.* (13:17)'

இந்த அத்தியாயத்தில் அல்லாஹ் கூறுகிறான்:

தூய வார்த்தைக்கு அல்லாஹ் எவ்வாறு உதாரணம் கூறியுள்ளான் என்பதை நீர் பார்க்கவில்லையா? அது ஒரு நல்ல மரத்தைப் போன்றதாகும். அதனுடைய வேர் பூமியினுள் ஆழப் பதிந்துள்ளது. அதன் கிளைகளோ வானளாவ உயர்ந்துநிற்கிறது. அது தன் இறைவனின் கட்டளைப்படி எப்பொழுதும் கனிகளை அளித்துக் கொண்டிருக்கிறது. (24,25)

❖ ❖ ❖

சமூகங்கள், அவை பெற்றுள்ள மதிப்பீடுகளைக் கொண்டு வேறுபடு கின்றன. அவை கொள்கை, பண்புகள், நாகரிகம் ஆகிய விசயங்களில் வெவ்வேறான மதிப்பீடுகளையே கொண்டுள்ளன.

உதாரணமாக, தவ்ஹீது என்ற வார்த்தை பல கிளைகளையும் ஆழப் பதிந்துள்ள வேர்களையும் கொண்ட, நல்ல கனிகளையும் தருகின்ற ஒரு மரத்தைப் போன்றது. அது தம்மை அறிந்தவர்களுக்கு, தம்மைக் கொண்டு பிரகாசமடைந்தவர்களுக்கு அற்புதமான நாகரிகத்தை வழங்குகிறது.

ஆனால், அசத்தியம் எந்த அடித்தளமுமற்றது. இறுதியில் தோல்வி யையும் அழிவையுமே தரும்: ‘தீய வார்த்தைக்கு உதாரணம் பூமியின் மேற்பகுதியிலிருந்து பிடுங்கப்பட்டுள்ள உறுதியற்ற, தீய மரத்தைப் போன்றதாகும். (26)’

நாம் சத்தியத்தின் நிழலில் இளைப்பாறுவோமா அல்லது எந்தப் பயனுமற்ற கானல்நீரின் பக்கம் விரைந்துசெல்வோமா?

முஸ்லிம் சமூகம் கடைப்பிடிக்க வேண்டிய இரு விசயங்கள்குறித்து இந்த அத்தியாயம் பேசுகிறது. ஒன்று, மற்ற சமூகங்கள் தங்களின் தனிப் பட்ட விவகாரங்களில் கவனம் செலுத்துவதைவிட அதிகமாக முஸ்லிம் சமூகம் தொழுகையைக் கடைப்பிடிப்பதிலும் ஸகாத்தை வழங்குவதி லும் கவனம் செலுத்த வேண்டும். இந்தச் சமூகம் இறை மார்க்கத்தைப் பெற்றுள்ளது. பூமியில் அது பெற்றுள்ள அதிகாரத்தை, அல்லாஹ்வின் வாக்கை மேலோங்கச் செய்வதற்காக, அவனுடைய மகத்துவத்தை நிலைபெறச் செய்வதற்காகப் பயன்படுத்த வேண்டும்:

நம்பிக்கை கொண்ட என் அடியார்களிடம் நீர் கூறும், ‘எவ்வித கொடுக்கல்வாங்கலோ நட்போ பலன் தராத அந்த நாள் வருவதற்கு முன்பே அவர்கள் தொழுகையைக் கடைப்பிடித்து, நாம் அவர் களுக்கு வழங்கியவற்றிலிருந்து வெளிப்படையாகவும் மறைமுக மாகவும் தர்மமும் செய்துகொள்ளட்டும்.’ (31)

*தூதுத்துவங்களின் வரலாறு நமக்கு ஒரு விசயத்தை உணர்த்துகிறது, மனிதர்களுக்காக அல்லாமல் அல்லாஹ்வுக்காக நிலைநிறுத்தப்படும் அரசுகள் தம்முடைய நிரந்தரமான தொடர்பை வஹீயுடன்தான் அமைத்துக்கொள்கின்றன.*

*வஹீயின் போதனைகள் மறையும்போது சமூகங்கள் சிற்றின்பங்களிலும் பெருமையடித்துக்கொள்வதிலும் மூழ்கிவிடுகின்றன. பொருளாதாரத்தில் ஏற்படும் இழப்புகளும் அவர்கள் அனுபவிக்கும் இன்பங்களில் ஏற்படும் குறைவும்தான் அவர்களைக் கவலையில் ஆழ்த்துகின்றன.*

*இன்றைய உலகுக்கு ஒரு முன்மாதிரி சமூகம் அவசியம். அது வணக்க வழிபாட்டிலும் இன்னபிற விசயங்களிலும் மிகச் சிறந்த முன்மாதிரியாகத் திகழ வேண்டும். அதுதான் இஸ்லாமியச் சமூகமாகும்.*

*அல்லாஹ்வைப் போற்றிப்புகழும் சமூகம் என்னும் அதே சமயம் ஆட்சிக்கு அதிபதியாகவும் வாழ்க்கையின் பல்வேறு படித்தரங்களில் ஆதிக்கம்செலுத்தும் சமூகமாகவும் இருக்க வேண்டும்.*

*இங்கு தெளிவுபடுத்தப்படும் இரண்டாவது விசயம், நம்பிக்கையாளர்கள் யாரையும் சார்ந்திருக்காமல் சுயமாகச் செயல்படக்கூடியவர்களாக, வழிகாட்டிகளாக இருக்க வேண்டும். இந்த உலகை வழிநடத்தும் பொறுப்பு அவர்களின் கைவசம்தான் இருக்க வேண்டும். தாம் நாடியவாறு அவர்கள் அதனை வழிநடத்த வேண்டும்.*

*பின்வரும் மூன்று வசனங்களிலிருந்து இந்த விசயம் தெளிவாகிறது. இவற்றில் 'லக்கும்' -உங்களுக்காக- என்ற வார்த்தை மட்டும் ஐந்து முறை இடம்பெற்றுள்ளது:*

> *அல்லாஹ்தான் வானங்களையும் பூமியையும் படைத்தான். அவனே வானத்திலிருந்து நீரை இறக்கி அதன் மூலம் உங்களுக்கு உணவாக பல்வேறு கனிகளை விளையச் செய்தான். கப்பலை அவனே உங்களுக்குப் பயனளிக்கும்படி ஆக்கித்தந்தான். அது அவனது கட்டளைப்படி கடலில் செல்கிறது. உங்களுக்காக ஆறுகளையும் பயனளிக்கக்கூடியவையாக ஆக்கினான். சூரியனையும் சந்திரனையும் அவை ஒழுங்காக இயங்கும்வண்ணம் உங்களுக்காக அமைத்துத் தந்துள்ளான். அவனே இரவையும் பகலையும் உங்களின் பயன்பாட்டுக்காக ஆக்கியுள்ளான். நீங்கள் அவனிடம் கேட்டவை அனைத்தையும் அவன் உங்களுக்கு வழங்கியுள்ளான். அல்லாஹ்வின் அருட்கொடைகளை நீங்கள் கணக்கிடுவீர்களாயின் உங்களால் கணக்கிடவே முடியாது.* (32-34)

*நேரான வழியைவிட்டும் நம்பிக்கையாளர்கள் விலகியதால் அவர்களின் திறமைகள் வற்றிவிட்டன. அவர்கள் அவர்களுக்காக வசப்படுத்தப்பட்ட பூமியில் அந்நியர்களாக வாழ்ந்தார்கள். மாறாக, அதில் அவர்கள் அடிமைப்படுத்தப்பட்டார்கள். அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய திறமைகளைக் கொண்டு அவர்கள் அவனுடைய மார்க்கத்துக்கு உதவியிருக்க வேண்டும். ஆனால், அவர்கள் பயந்து பின்வாங்கிவிட்டார்கள். அல்லாஹ்வின் எதிரிகள் விரைந்துவந்து, கேட்பாரின்றிக் கிடந்த கடிவாளத்தைக் கைப்பற்றிக்கொண்டார்கள். அவர்கள் நிராகரிப்பாளர்களாக இருந்தும் உலகை வசப்படுத்தினார்கள். நம்பிக்கையாளர்களுக்குக் கடும் நெருக்கடிகளை அளிக்கலானார்கள்.*

*நம்முடைய காலத்தில் ஜிஹாது என்பது, நீரிலும் நிலத்திலும் ஆகாயத்திலும் நம்முடைய ஆதிக்கத்தை நிலைநிறுத்துவது; இந்தப் பிரபஞ்சத்தையும் இதில் உள்ளவற்றையும் குறித்து அறிவது. இவற்றில் எல்லாம் முஸ்லிம்களின் பங்களிப்புதான் என்ன?*

*சத்தியத்தை நிலைநாட்ட ஆகாயத்தைப் பிளந்துசெல்லும் விமானங்களையோ கடலைக் கிழித்துச்செல்லும் நீர்மூழ்கிக் கப்பல்களையோ, அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு உதவிசெய்ய பீரங்கிகளையோ நாம் கண்டுபிடிக்கவில்லை என்பதை எண்ணும்போது துக்கமே மேலிடுகிறது.*

*அதே சமயம், இந்தக் கலைகளிலெல்லாம் யூதர்கள் திறமையானவர்களாக இருக்கிறார்கள். சுலைமானின் ஜின்களைப் போன்று அவர்கள் செயல்படுகிறார்கள். ஒரு வித்தியாசம் என்னவெனில், சுலைமானிடம் இருந்த ஜின்கள் ஒரு நல்ல நம்பிக்கையாளரின் கட்டுப்பாட்டில் இருந்தன. அவர் அவற்றை அல்லாஹ்வுக்காகப் பயன்படுத்தினார். இன்றைய யூதர்கள் இஸ்லாத்தையும் அறபியர்களையும் அழிப்பதற்காக, ஷைத்தானிய ஆட்சியை நிலைநிறுத்துவதற்காகத் தங்களின் திறமைகளை, ஆற்றல்களைப் பயன்படுத்துகிறார்கள்.*

*இப்றாஹீமின் சந்ததியினருக்கு மத்தியில்தான் எத்துணை வேறுபாடு! அவர்களில், கர்வம் கொண்டு, தம் மனஇச்சைகளைப் பின்பற்றி ஈசாவையும் முஹம்மதையும் நிராகரித்தவர்கள் இருக்கிறார்கள். இன்று அவர்களின் கைகளில்தான் அதிகாரம் இருக்கிறது. அவர்களில் சிலர் வஹீயை வாரிசாகப் பெற்று, அதற்குச் செய்ய வேண்டிய கடமைகளை முறையாகச் செய்யவில்லை. அதைவிட்டும் அலட்சியமானவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள்தாம் அறபுகள்.*

*இப்றாஹீம் நல்ல மனிதராகவும் சீர்திருத்தவாதியாகவும் இருந்தார். உலக மக்களைத் தவ்ஹீதின் பக்கம் அழைத்தார். சிலை வழிபாட்டுக்கு எதிராகச் சமரசமற்ற போரை அறிவித்தார்.*

*பின்னர், ஹிஜாஸுக்கு வந்து பின்வருமாறு பிரார்த்தித்தார்:*

*'எங்கள் இறைவா, நான் என் மக்களைப் புனிதமான உன் இல்லத்துக்கு அருகில், விவசாயம் இல்லாத பள்ளத்தாக்கில் குடியமர்த்தியுள்ளேன், அவர்கள் தொழுகையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்காக. ஆகவே, நீ மக்களின் உள்ளங்களை அவர்களின் பக்கம் திருப்புவாயாக. அவர்கள் நன்றிசெலுத்தும் பொருட்டுக் கனி வகைகளிலிருந்து அவர்களுக்கு உணவளிப்பாயாக.'* (37)

*இவர்கள் இப்றாஹீம் மற்றும் ஹாஜருக்குப் பிறந்த இஸ்மாஈலின் வழிவந்தவர்கள். இப்றாஹீமுக்குச் சாறா என்ற மனைவியின் மூலம் இஸ்ஹாக் பிறந்தார். அவர்தான் இஸ்றாயீல்களின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். இந்த இரு பிள்ளைகளும் இப்றாஹீமுக்கு முதிய வயதில்தான் வழங்கப் பட்டார்கள். ஆகவேதான் அவர் கூறுகிறார்:*

*'முதுமையில் எனக்கு இஸ்மாஈலையும் இஸ்ஹாக்கையும் வழங்கிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். நிச்சயமாக என் இறைவன் பிரார்த்தனையைச் செவியேற்பவனாக இருக்கிறான். என் இறைவா, என்னையும் என் சந்ததியினரையும் தொழுகையைக் கடைப்பிடிப்போராக ஆக்குவாயாக. என் இறைவா, என் பிரார்த்தனையை ஏற்றுக்கொள்வாயாக.'* (39,40)

*விசித்திரம் என்னவென்றால், யூதர்கள் தங்களைச் சுதந்திரமான பெண்ணின் வழிவந்தவர்கள் என்றும் அறபுகளை அடிமைத் தாயின் வழிவந்தவர்கள் என்றும் கருதுகிறார்கள். இது இழிவான சிந்தனை. ஆதமின் மக்கள் அனைவரும் சமமானவர்கள். தக்வாவைக் கொண்டே தவிர அவர்களுக்கு மத்தியில் எந்த வேறுபாடும் இல்லை. இப்றாஹீமின் சொத்து அவரது பிள்ளைகள் அனைவருக்கும் உரியதாகும். படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் இறைவன் யஅகூபின் சந்ததிகளுக்கு மட்டுமே அந்த வாய்ப்பை வழங்க மாட்டான். 'பூமி அல்லாஹ்வுக்கே சொந்தமானது. தன் அடியார்களில் தான் நாடுவோருக்கு அவன் அதனைச் சொந்தமாக்கி வைக்கிறான்.* (7:128)*'*

❖ ❖ ❖

*சத்தியத்துக்கும் அசத்தியத்துக்குமான நிரந்தரமான இந்தப் போரில் ஒடுக்கப்படுபவர்கள் அநீதி இழைக்கப்படுவதாக உணர்வார்கள். தங்கள் மீது ஆதிக்கம் கொண்டுள்ளவர்களை நோக்கி அவர்கள் கூறுவார்கள்: 'நீங்கள் கொடுக்கும் துன்பங்களை நாங்கள் சகித்துக்கொள்வோம்.* (12)*' அநியாயம் மிக மோசமான விளைவையே கொண்டுவரும்.*

அல்லாஹ் அநியாயக்காரர்களை இவ்வுலகிலேயே தண்டிப்பான். தண்டனை தாமதப்படுத்தப்பட்டாலும் அவர்கள் தண்டனைபெறுவது நிச்சயமானது: ‘அநியாயக்காரர்கள் செய்துகொண்டிருப்பதை அல்லாஹ் கவனிக்காமல் இருக்கிறான் என்று ஒருபோதும் நீர் எண்ணிவிடாதீர். பார்வைகள் நிலைகுத்திவிடும் ஒரு நாளுக்காக அவன் அவர்களை விட்டுவைத்திருக்கிறான். (42)’

வரலாற்றை ஆராய்ந்து பார்க்கும்போது நிராகரிப்பாளர்களின் சூழ்ச்சிகளும் திட்டங்களும் கடுமையானவையாக இருந்தன என்பதை அறிய முடிகிறது. ஆனாலும், அவற்றால் நிச்சயிக்கப்பட்ட விளைவுகளைத் தாண்ட முடியவில்லை:

அவர்கள் சதித்திட்டங்களைத் தீட்டினார்கள். அவர்களது திட்டங்கள் மலைகளையே பெயர்த்துவிடக் கூடியவையாக இருந்தபோதிலும் அவை அல்லாஹ்வின் கட்டுப்பாட்டில்தான் இருந்தன. அல்லாஹ் தன் தூதர்களுக்கு அளித்த வாக்குறுதிக்கு மாறுசெய்வான் என்று ஒருபோதும் எண்ணிவிடாதீர். நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் மிகைத்தவனாகவும் தக்க தண்டனையளிப்பவனாகவும் இருக்கிறான். (46,47)

❖ ❖ ❖

மனிதர்களை இருள்களிலிருந்து வெளியேற்றி வெளிச்சத்தின் பக்கம் கொண்டுவருவதற்காக அல்லாஹ் தன் இறுதித் தூதருக்கு வேதத்தை அருளினான் என்ற அறிவிப்போடு இந்த அத்தியாயம் தொடங்கியது. அதே அறிவிப்போடு இந்த அத்தியாயம் நிறைவடையவும் செய்கிறது: ‘இது மக்களுக்கான ஓர் அறிவிப்பாகும். இது அவர்கள் எச்சரிக்கப்படுவதற்கும் அவனே இறைவன் என்பதை அவர்கள் அறிந்துகொள்வதற்கும் அறிவுடையோர் படிப்பினையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்குமேயாகும். (52)’

அறிவுடையோர் தங்களுக்கு வழங்கப்பட்ட அறிவைக் கண்ணியப்படுத்த வேண்டும். அவர்கள் இல்லாதவற்றையும் சிலைகளையும் வணங்கக் கூடாது. அவர்கள் இறைவனின் வஹீயைக் குறித்து சிந்திக்க வேண்டும். பாதையில் வெளிச்சத்தை ஏற்படுத்தும், செல்ல வேண்டிய இலக்கைத் தெளிவுபடுத்தும் சத்தியத்தைக் கொண்டு அவர்கள் திருப்தியடைய வேண்டும். நேரான வழியில் செல்ல வேண்டும்.

❖ ❖ ❖

அத்தியாயம் 15

# அல்ஹிஜ்ர்

(பாறை)

*'அலிஃப், லாம், றா. இவை வேதமாகிய தெளிவான குர்ஆனின் வசனங்களாகும். (1)'* உயர்வான இந்த வஹீ எழுதப்பட்ட வரிகளாக இருப்பதால் இதற்கு 'கிதாப்' என்றும் படிக்கப்பட வேண்டிய வசனங் களாக இருப்பதால் 'குர்ஆன்' என்றும் சொல்லப்படுகிறது.

இந்த இரண்டு வார்த்தைகளும் குர்ஆனில் அடங்கியுள்ளவற்றைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பெயர்ச்சொற்களாகும்.

*'தாங்களும் இறைவனுக்குக் கீழ்ப்படிந்தவர்களாக இருந்திருக்கக் கூடாதா என்று நிராகரிப்பாளர்கள் சில சமயம் ஏங்குவார்கள். (2)'* பரி காசத்துடன் சோம்பேறித்தனம் செய்தவர்கள் சில சமயம் தாங்கள் தீவிர மாகச் செயல்பட்டிருக்கக் கூடாதா என்று ஏங்குவார்கள். இறைவனின் கட்டளைக்குக் கீழ்ப்படியாதவர்கள் சில சமயம் தாங்கள் இறைவனின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்திருக்கக் கூடாதா என்று ஏங்குவார்கள். மிகப் பெரிய ஏமாற்றம் வெளிப்படும் நாளில் தங்களின் காலங்களை வீணாக் கியவர்கள், நிரந்தரமான வாழ்க்கைக்காகத் தங்களைத் தயார்படுத்திக் கொள்ளாதவர்கள் வருத்தப்படுவார்கள். *'நீர் அவர்களை விட்டு விடும். அவர்கள் உண்டுகளிக்கட்டும். ஆசைகள் அவர்களை மறதியில் ஆழ்த் தட்டும். விரைவில் அவர்கள் அறிந்துகொள்வார்கள். (3)'*

உலக இன்பங்களில் மூழ்குவது ஆரம்பகாலம்தொட்டே மக்களின் வழிமுறையாக இருந்துவருகிறது. ஆனால், தற்காலத்தில் அது மறுவுலக வாழ்வை முழுமையாக மறக்கடித்துவிட்டது.

இத்தகைய நிலையை எதிர்கொண்ட தன் தூதருக்கு அல்லாஹ் கூறுகிறான்: *'அவர்களில் பலதரப்பட்ட மக்களுக்கு நாம் வழங்கியுள்ள*

உலக இன்பங்களை நீர் ஏறெடுத்தும் பார்க்காதீர். அவர்களுக்காகக் கவலையும் கொள்ளாதீர். (88)'

இந்த அத்தியாயத்தில் இறுதியாக வந்துள்ள வசனங்கள் ஆரம்ப வசனங்களோடு ஒத்துப்போவதை நம்மால் காண முடிகிறது. இவ்வுலக இன்பங்களில் மூழ்கியவர்கள் இறைத்தூதர்களை எதிர்த்தபோது தாங்கள் பெற்றுள்ள இந்த அதிகாரம் நிரந்தரமாகத் தங்களிடம் இருக்கும் என்று எண்ணினார்கள். அத்தியாயத்தின் ஆரம்பத்தில் அவர்களுக்குப் பதிலளிக்கப்படுகிறது: 'நாம் எந்த ஊரையும் அதற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில்தான் அழித்துள்ளோம். எந்தச் சமூகமும் அதற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்தை முந்தவும் செய்யாது, பிந்தவும் செய்யாது. (4,5)' இந்தச் சுருக்கமான வாசகத்துக்கு அத்தியாயத்தின் இறுதியில் வந்துள்ள வசனங்கள் விளக்கங்களாக அமைகின்றன. அவை லூத்தின் சமூகம், ஷுஐபின் சமூகம், ஸாலிஹின் சமூகம் ஆகிய சமூகங்களுக்கு ஏற்பட்ட விளைவுகளைத் தெளிவுபடுத்துகின்றன.

தங்களிடம் வந்த விருந்தாளிகளிடம் தீய செயலை நாடிய லூத்தின் சமூகத்தாரைக் குறித்து அல்லாஹ் கூறுகிறான்:

> உம் உயிரின் மீது சத்தியமாக, அவர்கள் தம் மதிமயக்கத்தில் உணர்விழந்துகிடந்தார்கள். எனவே, பொழுது விடிந்ததும் இடிமுழக்கம் அவர்களைத் தாக்கியது. நாம் அந்த ஊரைத் தலைகீழாகப் புரட்டிவிட்டோம். அவர்களின் மீது சுடப்பட்ட கற்களைப் பொழியச் செய்தோம். நிச்சயமாக ஆய்வுசெய்வோருக்கு இதில் அத்தாட்சிகள் இருக்கின்றன. (72-75)
>
> இந்த ஊர் நேரான பாதையில்தான் அமைந்துள்ளது. (76)

அழிக்கப்பட்ட அந்த ஊர் வழியாகத்தான் அவர்கள் காலையிலும் மாலையிலும் சென்றுவருகிறார்கள்.

ஷுஐபின் சமூகத்தாரைக் குறித்து அல்லாஹ் கூறுகிறான்: 'அய்கா வாசிகளும் அநியாயக்காரர்களாகத்தான் இருந்தார்கள். ஆகவே, நாம் அவர்களைத் தண்டித்தோம். இவ்விரு ஊர்களும் அறியப்பட்ட பாதையில்தான் அமைந்துள்ளன. (78,79)'

ஹிஜ்ர்வாசிகளைக் குறித்து அல்லாஹ் கூறுகிறான். அவர்களைக் கொண்டுதான் இந்த அத்தியாயத்துக்கு அல்ஹிஜ்ர் என்று பெயரிடப்பட்டுள்ளது:

> ஹிஜ்ர்வாசிகளும் நம் தூதர்களை நிராகரித்தார்கள். நாம் அவர்களுக்கு நம் சான்றுகளை வழங்கியிருந்தோம். ஆனால், அவர்கள்

அதனைப் புறக்கணிப்பவர்களாக இருந்தார்கள். பாதுகாப்பாக வாழ்வதற்காக அவர்கள் மலைகளைக் குடைந்து வீடுகளை அமைத்துகொண்டார்கள். அதிகாலையில் அவர்களைப் பயங்கர சப்தம் தாக்கியது. அப்போது அவர்கள் செய்துகொண்டிருந்தவை அவர்களுக்குப் பலனளிக்கவில்லை. (80-84)

ஸமூது சமூகத்தினரே ஹிஜ்ர்வாசிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். அறபுகள் அந்தச் சமூகத்தினரின் இடங்களை ஸாலிஹின் நகரங்கள் என்று பெயரிட்டுள்ளார்கள். அவர்கள் காலையிலும் மாலையிலும் அந்த நகரங்களைக் கடந்துதான் செல்கிறார்கள். ஆனாலும், அவர்கள் அவற்றி லிருந்து எந்தப் படிப்பினையும் பெறுவதில்லை. இவையனைத்தும் ஆரம்பத்தில் இடம்பெற்றுள்ள அழிக்கப்பட்ட ஊர்களைக் குறித்த விளக் கங்களாகும். 'உமக்கு முன்சென்ற சமூகங்களுக்கு நாம் தூதர்களை அனுப்பியுள்ளோம். ஆயினும், எந்தத் தூதர் அவர்களிடம் வந்தாலும் அவரை அவர்கள் பரிகாசம்செய்யாமல் இருந்ததில்லை. (10-11)'

அன்றைய அறபுகள் குர்ஆனையும் தூதரையும் பரிகாசம் செய்து கொண்டிருந்தார்கள்: 'அவர்கள் கூறுகிறார்கள், அறிவுரை அருளப்பட்ட வரே, நிச்சயமாக நீர் பைத்தியக்காரர்தான். நீர் உண்மையாளராயின் எங்களிடம் வானவர்களை அழைத்துவந்திருக்க வேண்டாமா? (6,7)' வானவர்களை அழைத்துவருமாறு வேண்டுவதில் இவர்கள் புதுமை யானவர்கள் இல்லை. இவர்களுக்கு முன்னரும் நிராகரித்த நூஹ், ஹூது, ஸாலிஹ் ஆகியோரின் சமூகங்கள் இவ்வாறுதான் வேண்டின. பல தூதுத் துவங்களைக் கண்டும் இதுபோன்று அவர்கள் அர்த்தமின்றிக் கோரிக்கை வைத்ததால் அல்லாஹ் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

அவர்கள் மற்றவர்கள் சிறப்படைவதை விரும்பாத தீயவர்கள். தலை மைப் பதவியும் வெற்றியும் தங்களுக்கு மட்டுமே உரியது என்று அவர்கள் எண்ணுகிறார்கள். 'நாம் வானவர்களைத் தீர்ப்புக்காகத்தான் இறக்கு கிறோம். அப்போது நிராகரிப்பாளர்களுக்கு அவகாசமளிக்கப்பட மாட் டாது. (8)' வானங்கள் மற்றும் பூமி நிலைத்திருக்கும்வரை இறுதியாக அருளப்படும் இந்த வஹீயும் நிலைத்திருக்கும் என்றும் சத்தியத்தின் எதிரிகள் எவ்வளவுதான் உயரத்தை அடைந்தாலும் அவர்களால் அதன் வெளிச்சத்தை ஒருபோதும் அணைத்துவிட முடியாது என்றும் அல்லாஹ் எச்சரிக்கிறான்: 'இந்தக் குர்ஆனை நாமே அருளினோம். நாமே இதனைப் பாதுகாப்போம். (9)' இந்தக் குர்ஆனைக் கொண்டு தன் தூதரின் மீது கிருபை பாராட்டியவனாக அல்லாஹ் கூறுகிறான்: 'திரும்பத்திரும்ப ஓதக்கூடிய ஏழு வசனங்களையும் மகத்துவம்மிக்க குர்ஆனையும் நாம் உமக்கு வழங்கியுள்ளோம். (87)'

சிலர் திருக்குர்ஆனை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். அதில் ஏதேனும் குறைபாடு இருக்கிறது என்பதனால் அல்ல. தம் சமூகத்தின் மீதான குருட்டு பக்தியும் பிடிவாதமுமே அவர்களின் மறுப்புக்கான காரணங்கள். சான்றுகள் அனைத்தையும் அவர்களிடம் கொண்டுவந்தாலும் கூட அவர் கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள். நாம் அவர்களுக்காக வானத்தின் ஒரு கதவைத் திறந்து, அதன் வழியே அவர்கள் ஏறிச்செல்லத் தொடங்கி னாலும் அவர்கள் கூறுவார்கள்: ‘எங்களின் பார்வைகள் மயக்கப்பட்டு விட்டன. எங்கள்மீது சூனியம்செய்யப்பட்டுள்ளது. (14,15)’ சான்றுகள் எவ்வளவுதான் வலுவானவையாக இருந்தாலும் அவற்றால் இவர்களுக்கு எந்த நன்மையும் இல்லை.

மனிதன் வானத்தை நோக்கிப் பார்த்தால் அதன் அற்புதங்களைக் கண்டு, எல்லையற்ற அதன் வெளியைக் கண்டு ஆச்சரியத்தின் உச்சிக்கே சென்றுவிடுவான். அவன் பூமியை நோக்கி அதன் நிலத்திலும் நீரிலும் உள்ளடங்கியுள்ள உயிரினங்களை, பொருள்களைப் பார்த்தால், எப்படி அல்லாஹ் இவை எல்லாவற்றுக்கும் வாழ்வாதாரம் வழங்குகிறான் என்பதை எண்ணி வியப்படைந்துவிடுவான். அவனையும் அறியாமல், தூதர் சொன்ன அதே வார்த்தைகளை அவனும் கூறுவான்: ‘அல்லாஹ்வே, உனக்கே புகழனைத்தும். நீதான் வானங்களையும் பூமியையும் அவற்றுக்கு இடையில் உள்ளவற்றையும் நிர்வகிப்பவன்’.

அல்லாஹ் கூறுகிறான்:

> நாம் வானத்தில் விண்மீன்களை அமைத்து அதனைப் பார்ப்பவர் களுக்கு அழகுபடுத்தியுள்ளோம். விரட்டப்பட்ட ஒவ்வொரு ஷைத்தானை விட்டும் அதனைப் பாதுகாத்துள்ளோம். ஆனால், யாரேனும் திருட்டுத்தனமாக ஒட்டுக்கேட்டால் அவனை எரியும் தீச்சுவாலை பின்தொடரும். நாம் பூமியை விரித்து அதில் மலை களை நிறுத்தியுள்ளோம். ஒவ்வொரு பொருளையும் பொருத்த மான முறையில் அதில் முளைக்கச் செய்தோம். அதில் உங்களுக் காகவும் நீங்கள் யாருக்கு உணவளிப்பவர்களாக இல்லையோ அவர்களுக்காகவும் வாழ்வாதாரங்களை ஏற்படுத்தியுள்ளோம். (16-20)

அத்தியாயத்தின் ஆரம்ப வசனங்கள் பூமியின் பொக்கிஷங்களையும் நன்மைகளையும் அதிசயங்களையும் தெளிவுபடுத்துகின்றன. ஆனால், அவற்றைவிட அழகாக, சுருக்கமாக அத்தியாயத்தின் இறுதியில் தெளிவு படுத்தப்படுகிறது:

*வானங்களையும் பூமியையும் அவற்றுக்கிடையில் உள்ளவற்றையும் நாம் நோக்கத்துடன்தான் படைத்துள்ளோம். சந்தேகமின்றி மறுமை நாள் வரத்தான்போகிறது. ஆகவே, நீர் அழகிய முறையில் புறக் கணித்துவிடும். நிச்சயமாக உம் இறைவனே அனைத்தையும் படைத்தவனாகவும் நன்கறிந்தவனாகவும் இருக்கிறான். (85,86)*

*இந்தப் பூமியின் மண்ணில் காணப்படும் கூறுகள்தாம் மனித உடலிலும் காணப்படுகிறது. எப்படிச் சதையும் எலும்பும் மண்ணாக மாற்றமடையும்? பின்னர் எப்படி மண் மீண்டும் சதையாக, எலும்பாக மாற்றமடையும்?*

*இந்த இரு பண்புகள்தாம் அவனுடைய தனித்தன்மைகளை உருவாக்குகின்றனவா? ஆன்ம ரீதியான, உடல் ரீதியான இயல்புகளை மனிதனுக்கு அளிக்கின்றனவா?*

*மதிப்பற்ற இந்த மாமிசம்தான் மனிதனின் விதியை நிர்ணயிக்கிறதா?*

*கொஞ்சம் கவனம்செலுத்தினாலே சரியான அறிவு இறை வல்லமையைக் கண்டுகொள்ளும்; அல்லாஹ்தான் உயிர்கொடுக்கிறான், மரணிக்கச் செய்கிறான் என்பதை அறிந்துகொள்ளும். அவன்தான் எல்லாவற்றையும் படைத்தவன்: 'எல்லாவற்றின் கருவூலங்களும் நம்மிடமே உள்ளன. நாம் அவற்றை ஒரு குறிப்பிட்ட அளவோடுதான் இறக்கிவைக்கிறோம். (21)'*

*இறைவனின் அறிவு ஒரு பக்கத்தைப் போன்றது. தூரமானது, நெருக்கமானது, நுணுக்கமானது, பருமனானது என அனைத்தும் அவனுக்கு ஒன்றுதான். அவன் மனிதர்கள், ஜின்கள், பறவைகளை மட்டுமல்ல அவற்றில் காணப்படும் நுண்ணுயிரிகளையும் நன்கறிந்தவன்.*

*நான் ஒரு விமானத்தில் இருந்தபோது பாலைவனத்தின் ஒரு பகுதியைக் கண்டேன். அது விவசாயம் செய்வதற்கு உகந்ததாக எனக்குத் தோன்றியது. எனக்கு நானே கேட்டுக்கொண்டேன், 'நாளை இங்கு விவசாயம் செய்யப்படுமா?' பின்னர் எனக்குநானே பதிலளித்துக் கொண்டேன், 'இங்கு ஏதேனும் முளைப்பதாக இருந்தால் மழை வரும் நாள்களை அல்லாஹ் மட்டுமே அறிவான். மனிதர்கள் அதற்குப் பிறகுதான் அதனைச் சுற்றிக் கூடுவார்கள். அதிலிருந்து விளைச்சலை, கனிகளைப் பறிப்பார்கள்.' 'உங்களுக்கு முன் வாழ்ந்துசென்றவர்களையும் உங்களுக்குப் பின் வரப்போகிறவர்களையும் நாம் அறிவோம். உம் இறைவன் அவர்கள் அனைவரையும் ஒன்றுசேர்ப்பான். அவன் ஞானம்மிக்கவனாகவும் நன்கறிந்தவனாகவும் இருக்கிறான். (24,25)'*

*நீரிலும் நிலத்திலும் காணப்படும் உயிரினங்களை நான் கவனித்துப் பார்க்கிறேன். எப்படி அவை பெருகிக்கொண்டும் அழிந்துகொண்டும்*

இருக்கின்றன என்பதை எண்ணி வியப்படைகிறேன். ஒரு சிறிய பறவையின் உணவை ஒரு பெரும் விலங்கின் முதுகில் வைத்துள்ளானே. அந்தப் பறவை வந்து தன் உணவைத் தின்னும்போது அந்தப் பெரிய விலங்கு நிம்மதியடைகிறதே!

❖ ❖ ❖

மனிதனின் உலகமும் ஆழமான சிந்தனையை வேண்டிநிற்கிறது. காய்ந்த களிமண்ணிலிருந்துதான் அந்த மனிதன் படைக்கப்பட்டுள்ளான். 'நாம் மனிதனை ஓசை தரக்கூடிய காய்ந்த களிமண்ணால் படைத்தோம். (26)'

அவன் வாழ்நாள் முடிந்து மீண்டும் மண்ணுக்குத் திரும்பும்போது, அதற்குக் கீழே அவன் புதைக்கப்படும்போது அவனது வாடை சகிக்க முடியாததாக ஆகிவிடுகிறது. மனிதர்கள் ஒருவரையொருவர் வெறுத்து விடக் கூடாது என்பதற்காகவே அவர்கள் இறந்தவர்களைப் புதைக்கிறார்கள் போலும்!

மனிதன் எதனைக் கொண்டு தூய்மையடைகிறான்? எதனைக் கொண்டு அவன் கண்ணியப்படுத்தப்படுகிறான்? அவனுக்குள் ஊதப்பட்ட இறைவனின் றூஹைக் கொண்டு. அதன் மூலம்தான் அவன் உயர்வடைகிறான்.

அல்லாஹ்வுடைய வெளிச்சத்தின் ஒரு பகுதி மனிதனிடம் இருப்பதால்தான் இப்லீஸ் மனிதனைக் கண்டு பொறாமை கொண்டான். அவனை ஏற்றுக்கொள்ள மறுத்தான். ஆதமையும் ஆதமின் மக்களையும் பழிவாங்க வேண்டும் என்று முடிவுசெய்தான்:

> அவன் கூறினான், 'என் இறைவனே, நீ என்னை வழிதவறச் செய்ததைப் போன்று நானும் பூமியில் உள்ளவற்றை அவர்களுக்கு அழகாகக் காட்டி அவர்கள் அனைவரையும் வழிகெடுப்பேன். ஆயினும், தேர்ந்தெடுக்கப்பட்ட உன் அடியார்களைத் தவிர!' இறைவன் கூறினான், 'இதுவே என்னை வந்தடையும் நேரான பாதை. நிச்சயமாக என் அடியார்கள்மீது உனக்கு எவ்வித அதிகாரமும் இல்லை, ஆனால் உன்னைப் பின்பற்றி வழிகெட்டுப் போகக் கூடியவர்களைத் தவிர.' (39-42)

ஆதம் மற்றும் அவரது எதிரியின் சம்பவம் திருக்குர்ஆனில் மீண்டும் மீண்டும் இடம்பெறுகிறது. இங்கு குறிப்பிடப்படும் சம்பவத்தில் அவர் எதிலிருந்து படைக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடப்படுகிறது. காய்ந்த களிமண்ணிலிருந்து அவர் படைக்கப்பட்டார்.

*எப்படியிருப்பினும் இங்கு மனிதனுக்குத் தற்காலிக வசிப்பிடமே வழங்கப்பட்டுள்ளது. அவன் இங்கு சேர்த்துவைக்கும் செயல்களுக்கேற்பத் தன்னுடைய நிரந்தரமான இருப்பிடத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறான்.*

*தன் இறைவனையும் தன் ஆரம்பத்தையும் முடிவையும் மறப்பவனே ஏமாளியாவான்.*

*மனிதனின் மீது ஷைத்தானுக்கு எந்த அதிகாரமும் இல்லை. மக்களின் வார்த்தைகளில் கூற வேண்டுமானால், சட்டம் அலட்சியமாக இருப்பவர்களைப் பாதுகாக்காது. ஷைத்தானால் மனிதனை ஏமாற்றவும் வழிகெடுக்கவும் விஷத்தை மனிதன் உண்பதற்கு ஏற்ற உணவாக அழகாக்கிக் காட்டவும் முடியும். தொடர்ச்சியான எச்சரிக்கைகளுக்குப் பிறகும் யார் அவனது வலையில் வீழ்ந்துவிடுகிறார்களோ அவர்களே பழிக்கப்பட வேண்டியவர்கள்.*

*ஆதமின் பிள்ளைகள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். மனிதனைக் கொண்டு அல்லாஹ் திருப்தியடையும்போது அவனது சிறுசிறு தவறுகளை மன்னித்து அவனது படித்தரத்தை உயர்த்திவிடுகிறான். அவன் கோபம் கொண்டுவிட்டால் அவனது பிடியிலிருந்து யாரும் தப்ப முடியாது: 'என் அடியார்களுக்கு அறிவித்துவிடுவீராக, நான் பெரும் மன்னிப்பாளனாகவும் இணையிலாக் கிருபையாளனாகவும் இருக்கிறேன் என்று. ஆயினும், நான் அளிக்கும் வேதனைதான் துன்புறுத்தும் வேதனையாகும். (49,50)'*

*பின்னர், இந்த வாக்குறுதியையும் எச்சரிக்கையையும் அடுத்து இப்றாஹீம், அவரது விருந்தினர்கள் ஆகியோர்குறித்த செய்தி இடம்பெறுகிறது. இப்றாஹீமின் விருந்தினராக வந்தவர்கள் யார்? அவர்கள்தாம் வானவர்கள். அவருக்கு ஒரு ஆண் மகனைக் குறித்த நற்செய்தியோடு வந்தார்கள். அதே சமயம், தீய காரியத்தைச் செய்துகொண்டிருக்கும் ஒரு நகரம் அழிக்கப்படும் என்ற செய்தியையும் கொண்டுவந்தார்கள்.*

*'அல்லாஹ் இப்றாஹீம் ஏற்பாடுசெய்த விருந்தில் மதிய உணவு அல்லது இரவு உணவு உண்டான். அவர் கொழுத்த காளைக் கன்றை வைத்தார். அல்லாஹ் அதனை உண்ணவில்லை.' என்று பழைய ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ள செய்தியைக் குறிப்பிட்டு திருக்குர்ஆன் இங்கு மறுத்துரைக்கவில்லை.*

*இங்கு அதைப் பற்றிக் குறிப்பிடாமல் இருப்பதே குறிப்பிட்டு மறுத்துரைப்பதை விட மேலானது. பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டிருப்பது*

புனையப்பட்டவை என்பதற்கு அல்லாஹ்வின் தூய்மையையும் புகழை யும் பறைசாற்றக்கூடிய திருக்குர்ஆனின் வசனங்களே போதுமானவை யாகும்.

லூத்தின் சமூகத்தினர் தீயவர்களாக, மானக்கேடான காரியத்தைச் செய்பவர்களாக இருந்தார்கள். லூத் தம்மால் இயன்றவரை அவர்களை எச்சரித்துப்பார்த்தார். ஆனாலும் அவர்கள் திருந்தவில்லை. அல்லாஹ் அவர்களின் நகரங்களைத் தலைகீழாக ஆக்கினான்.

ஓரினச் சேர்க்கை தடைசெய்யப்பட்ட, வரம்புமீறிய வழிமுறையாகும். ஓரினச் சேர்க்கையாளர்கள் மறைவாகவே தங்களின் இச்சைகளை நிறைவேற்றிவந்தார்கள். ஐரோப்பியர்கள், அமெரிக்கர்கள் ஆகியோரின் ஆதிக்கத்துக்குப் பிறகு அவர்களுக்கும் சட்டபூர்வமான அங்கீகாரம் வழங்கப்பட்டுவிட்டது.

வரம்புமீறிய எத்தனையோ இச்சைகள் இருக்கின்றன. அவற்றை யெல்லாம் இந்தக் கலாச்சாரம் ஏற்றுக்கொள்கிறதா? ஆனாலும், இறைவன் அளிக்கும் தண்டனை அவர்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது.

இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்துக்கும் இறுதிக்கும் மத்தியில் உள்ள தொடர்பை நாம் சுட்டிக்காட்டியுள்ளோம். இந்த இரண்டுக்குமிடையே படிப்பினைகளை உள்ளடக்கிய சம்பவங்கள் இடம்பெறுகின்றன. பின்னர் தூதருக்குக் கூறப்படுகிறது. 'அல்லாஹ் இந்த வஹீயைக் கொண்டு உங்களைக் கண்ணியப்படுத்தியுள்ளான். இதைக் கொண்டு நீங்கள் சமூகங்களைப் பண்படுத்துங்கள். அவர்களில் பலதரப்பட்ட மக்களுக்கு நாம் வழங்கியுள்ள உலக இன்பங்களை நீர் ஏறெடுத்தும் பார்க்காதீர். அவர்களுக்காகக் கவலையும் கொள்ளாதீர். நம்பிக்கையாளர்களுக்காக உமது அன்பென்னும் சிறகைத் தாழ்த்துவீராக. நான் வெளிப்படையாக எச்சரிப்பவன்தான் என்று கூறிவிடும். (88,89)'

இந்த அத்தியாயத்தில் 'கூறுபோட்டவர்கள்' குறித்து கூறப்பட்டுள்ள தைக் காண்கிறோம். அவர்கள் வேதக்காரர்களாவர். அவர்கள்தாம் வேதத் தின் சில பகுதிகளை ஏற்றுக்கொண்டு சில பகுதிகளை நிராகரித்தார்கள். அல்லாஹ் கூறுகிறான்: 'இவ்வாறே நாம் கூறுபோட்டவர்கள் மீதும் இறக்கியிருந்தோம். அவர்கள் குர்ஆனைப் பல கூறு களாக்கிவிட்டார்கள். (90,91)' தங்களின் மனம் விரும்பியதை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். தங்களின் மனம் விரும்பாததைப் புறக்கணித்தார்கள்.

அல்லாஹ் முஸ்லிம்களுக்கு இறுதி வேதத்தை வழங்கியுள்ளான். அது தமக்கு முன்னுள்ள வேதங்களில் புகுந்துவிட்ட இடைச்செருகல்களைத்

தெளிவுபடுத்தக்கூடியதாக இருக்கிறது. வேதக்காரர்கள் தங்களின் வேதங்களைத் திரித்துவிட்டார்கள். உண்மைகளைப் பொய்களோடு கலந்து விட்டார்கள். ‘உம் இறைவனின் மீது ஆணையாக, அவர்கள் செய்து கொண்டிருந்ததைப் பற்றி அவர்கள் அனைவரையும் நிச்சயம் நாம் விசாரணைசெய்வோம். (92,93)’

பின்னர் அல்லாஹ் தன் தூதருக்கு நற்செய்தி கூறுகிறான், இந்த மார்க்கத்தை எதிர்த்துக்கொண்டிருக்கும் சிலை வழிபாட்டாளர்கள் விரைவில் வீழ்த்தப்படுவார்கள் என்று: ‘பரிகாசம்செய்வோர் விசயத்தில் நாமே உமக்குப் போதுமானவர்களாக இருக்கிறோம். அல்லாஹ்வுடன் வேறு தெய்வங்களை ஏற்படுத்திக்கொண்டவர்கள் விரைவில் அறிந்து கொள்வார்கள். (95,96)’

மக்காவாசிகள் பரிகாசத்தால் தூதரையும் அவருக்கு அருளப்பட்ட குர்ஆனையும் எதிர்கொண்டார்கள். அவதூறுகளையும் பரிகாசங்களையும் பெருமளவில் பரப்பினார்கள். மக்காவுக்கு வரக்கூடிய வியாபாரக் குழுக்கள் அனைத்தையும் சந்தித்து, முஹம்மதைச் சந்திக்க வேண்டாம் என்றும் அவர் கூறுவதைக் கேட்டு ஏமாந்துவிட வேண்டாம் என்றும் எச்சரித்தார்கள்.

இதுபோன்ற தாக்குதல்கள் தூதருக்குப் பெரும் மன வலியை, வேதனையை அளித்தன. அவர்களைப் பொருட்படுத்த வேண்டாம் என்றும் அவர்களுக்காகக் கவலை கொள்ள வேண்டாம் என்றும் அல்லாஹ் தன் தூதருக்கு அறிவுறுத்துகிறான்: ‘அவர்களின் கூற்றுகளால் உம் உள்ளம் இறுக்கமடைவதை நாம் அறிவோம். ஆகவே, நீர் உம் இறைவனைப் புகழ்ந்துதுதிப்பீராக. அவனுக்குச் சிரம்பணிபவராக ஆகிவிடுவீராக. மரணம் உம்மை வந்தடையும்வரை உம் இறைவனை வணங்குவீராக. (97-99)’

அல்லாஹ் தன் வாக்குறுதியை உண்மைப்படுத்திக் காட்டினான். ஈமானியக் கொடி உயர்ந்தது. இணைவைப்பும் இணைவைப்பாளர்களும் பழங்கதைகளாகக் கடந்துபோனார்கள்.

❖ ❖ ❖

அத்தியாயம் 16

# அந்நஹ்ல்

(தேனீ)

*மக்காவுடைய காலகட்டத்தின் இறுதியில் இணைவைப்பாளர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மத்தியில் மோதல் நிகழ்ந்தபிறகு இந்த அத்தியாயம் அருளப்பட்டது என்று தெரிகிறது. நம்பிக்கையாளர்கள் துன்பம் அனுபவித்துக் கொண்டிருந்த காலம் நீண்டுகொண்டே சென்றது. அவர்களுக்கு இன்னும் வெற்றி கிடைக்காமலும் இணைவைப்பின் பலம் முறியடிக்கப்படாமலும் இருந்தது. இணைவைப்பாளர்கள் நம்பிக்கையாளர்களைப் பார்த்து 'நீங்கள் எங்களை அச்சுறுத்திக்கொண்டிருக்கும் வேதனை இன்னுமா வரவில்லை?' என்று பரிகாசமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பதிலளிக்கப்பட்டது: 'வரக்கூடிய ஒவ்வொன்றும் நெருங்கிவிட்டது. நாளை மிகச் சமீபமாகவே இருக்கிறது. அல்லாஹ்வின் கட்டளை வந்துவிட்டது. ஆகவே, அதற்காக நீங்கள் அவசரப்படாதீர்கள். (1)'*

*எது நிகழ வேண்டுமோ அது நிச்சயமாக நிகழ்ந்தே தீரும். சிலை வழிபாட்டாளர்களின் தோல்வியோடு சத்தியத்துக்கும் அசத்தியத்துக்குமான மோதல் முடிவுக்கு வந்துவிட்டது. அவர்கள் ஒரு தவணைக்காகக் காத்திருக்கிறார்கள். அது நீண்ட காலத்துக்குப் பிறகுதான் நிகழும் என்று அவர்கள் கருதுகிறார்கள். ஆனால், விதி அதனை விரைவாகவே கொண்டு வந்துவிடும்.*

*முஸ்லிம்கள் இந்தத் தவணை வரும்வரை சந்தேகம் கொள்ளாமல் பொறுத்திருக்க வேண்டும். இந்த அத்தியாயத்தின் இறுதியில் அல்லாஹ் தன் தூதருக்குக் கூறுகிறான்:*

> *பொறுமையைக் கடைப்பிடிப்பீராக. அல்லாஹ்வின் உதவி கொண்டே உம்மால் பொறுமையைக் கடைப்பிடிக்க முடியும்.*

*அவர்களுக்காக நீர் கவலைப்பட வேண்டாம். அவர்கள் தீட்டும் திட்டங்களால் நெருக்கடிக்குள்ளாகிவிட வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் தன்னை அஞ்சி நடப்போருடனும் நற்செயல்கள் புரிவோருடனும் இருக்கிறான்.* (127,128)

*முஸ்லிம்கள் நீண்ட காலம்வரை பொறுமையாக இருந்தார்கள். வலி அவர்களை மிகைத்தபோது அல்லாஹ் இந்த அத்தியாயத்தில் இரண்டு வசனங்களை அருளி அவர்களுக்கு ஆறுதல் கூறினான். ஒன்று:*

*அநீதி இழைக்கப்பட்டபின் அல்லாஹ்வுக்காகப் புலம்பெயர்ந்தவர்களுக்கு இவ்வுலகில் நாம் நல்ல வசிப்பிடத்தை வழங்குவோம். ஆயினும், மறுமையின் கூலியே மிகப் பெரியது. அவர்கள் அறிந்துகொள்ள வேண்டுமே!* (41)

*இரண்டு:*

*யாரெல்லாம் துன்புறுத்தப்பட்டபின் புலம்பெயர்ந்து, அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாதுசெய்து பொறுமையாக இருந்தார்களோ, உம் இறைவன் பெரும் மன்னிப்பாளனாகவும் இணையிலாக் கிருபையாளனாகவும் இருக்கிறான்.* (110)

*இங்கு குறிப்பிடப்பட்டுள்ள புலம்பெயர்வு என்பது ஹபஷாவை நோக்கிய புலம்பெயர்வாகும். சித்திரவதைகளைத் தாங்கிக்கொள்ள முடியாத பலவீனர்களுக்கு அங்கு புலம்பெயர்ந்துசெல்ல அனுமதி வழங்கப்பட்டது. இமாம் புகாரீ இந்தத் தலைப்பில் செய்தி ஒன்றைப் பதிவுசெய்துள்ளார்:*

*ஹஃப்ஸாவுக்கு அருகில் அஸ்மா பின்த் உமைஸ் இருந்தபோது உமர் அங்கு வந்தார். அஸ்மாவைக் கண்ட உமர் 'இவர் யார்?' என்று தம் மகளிடம் கேட்டார். 'இவர் அஸ்மா பின்த் உமைஸ்.' என்று ஹஃப்ஸா பதிலளித்தார். அப்போது உமர் அஸ்மாவிடம், 'உங்களுக்கு முன்பே நாங்கள் புலம்பெயர்ந்து மதீனாவுக்கு வந்துவிட்டோம். ஆகவே, உங்களைவிட நாங்களே அல்லாஹ்வின் தூதருக்கு மிகவும் நெருக்கமானவர்கள்.' என்று கூறினார். இதனைக் கேட்ட அஸ்மா கோபப்பட்டுவிட்டுக் கூறினார், 'உமரவர்களே, நீங்கள் தவறாகச் சொல்கிறீர்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக அப்படி இல்லை. நீங்கள் அல்லாஹ்வின் தூதரவர்களுடன் இருந்தீர்கள். உங்களில் பசித்தவருக்கு அவர்கள் உணவளித்தார்கள். அறியாதவர்களுக்கு அறிவூட்டினார்கள். நாங்களோ உறவிலும் மார்க்கத்திலும் வெகுதொலைவில் இருக்கும் அபிசீனியா நாட்டில்*

இருந்தோம். நாங்கள் துன்புறுத்தப்பட்டோம்; அச்சுறுத்தப் பட்டோம். அல்லாஹ்வுக்காகவும் அவனுடைய தூதருக்காகவுமே இவ்வாறு செய்தோம். அல்லாஹ்வின் மீது ஆணையாக, நீங்கள் சொன்னதை அல்லாஹ்வின் தூதரவர்களிடம் தெரிவிக்காமல் நான் எதையும் உண்ணவோ பருகவோ மாட்டேன்.' பின்னர், அல்லாஹ் வின் தூதரவர்கள் அங்கு வந்தபோது அஸ்மா பின்த் உமைஸ், 'அல்லாஹ்வின் தூதரே, உமர் இப்படி இப்படிச் சொன்னார்' என்று கூறினார். அதற்கு அல்லாஹ்வின் தூதர் அவர்கள், 'நீங்கள் அவருக்கு என்ன பதில் சொன்னீர்கள்?' என்று கேட்டார்கள். அதற்கு அவர், 'நான் இப்படியெல்லாம் சொன்னேன்.' என்று கூறினார். அப்போது அல்லாஹ்வின் தூதரவர்கள், 'அவர் உங்களைவிட எனக்கு நெருக்கமானவர் அல்ல. அவருக்கும் அவருடைய சகாக் களுக்கும் ஒரே ஒரு ஹிஜ்றத்துதான் உண்டு. அபிசீனியாவிலிருந்து கப்பலில் வந்தவர்களே, உங்களுக்கு இரண்டு ஹிஜ்றத் செய்த சிறப்பு உண்டு.' என்று கூறினார்கள்.

❖ ❖ ❖

இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் அல்லாஹ் வஹீயை றூஹ் -ஆன்மா- என்று அழைக்கிறான். ஏனெனில், அது தனிமனிதர்களையும் சமூகங்களையும் உயிர்ப்பிக்கிறது.

தன் அடியார்களில் தான் நாடியோர்மீது அவன் தனது கட்டளை என்னும் வஹீயுடன் வானவர்களை அனுப்பி 'என்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. ஆகவே, என்னையே அஞ்சுங்கள்.' என்று மக்களுக்கு எச்சரிக்கைசெய்யுமாறு கட்டளையிட்டுள்ளான். (2)

அவன் வேறொரு வசனத்தில் கூறுகிறான்: 'இவ்வாறே நம் கட்டளை யின் வாயிலாகக் குர்ஆனை உமக்கு வஹீயாக அறிவித்தோம். வேதம் என்றால் என்ன, நம்பிக்கை என்றால் என்ன என்பதை நீர் அறியாதிருந்தீர் ... (42:52)'

அறபுகளின் மீது அருளப்பட்ட இந்த றூஹ் -ஆன்மா- அவர்களை உலகை வழிநடத்துவதற்குத் தகுதியான புதியதொரு சமூகத்தினராக ஆக்கிவிட்டது. அவர்கள் அதற்கு முன்னால் ஒன்றுமே இல்லாதவர்களாக இருந்தார்கள்.

இந்த அத்தியாயத்தில் உள்ள வசனங்களை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதல் வகை வசனங்கள் வானவர்கள் கொண்டிறங்கிய வஹீயைக் குறித்து பேசுகின்றன. இரண்டாவது வகை வசனங்கள்

இந்தப் பிரபஞ்சத்தில் காணப்படும் அல்லாஹ்வின் சான்றுகள் குறித்தும் அவனுடைய அடியார்கள்மீது அவன் பொழிந்துள்ள அருட்கொடைகள் குறித்தும் பேசுகின்றன.

இந்த இரண்டு வகையான வசனங்களும் மக்களுக்கு அறிவுரை கூறிக் கொண்டும் அவர்களின் இறைவனைக் குறித்து அவர்களுக்கு அறிமுகப் படுத்திக் கொண்டும் இருக்கின்றன.

இப்போது நாம் முதல் வகையான வசனங்களைக் குறித்து பார்க்கலாம். பின்வரும் வசனத்தைச் செவியேற்றவுடன் மக்கள் என்ன பதிலளித்தார் கள்? 'தன் அடியார்களில் தான் நாடியோர்மீது அவன் தனது கட்டளை என்னும் வஹீயுடன் வானவர்களை அனுப்புகிறான். (2)'

அவர்கள் இந்த விசயத்தில் இரு பிரிவினராகிவிட்டார்கள். ஒரு பிரி வினர் வழிகெட்டவர்கள்; மற்றவர்களையும் வழிகெடுப்பவர்கள்.

> 'உங்கள் இறைவன் உங்களுக்கு எதனை அருளியுள்ளான்?' என்று அவர்களிடம் கேட்கப்பட்டால், 'இவை முன்னோர்களின் கட்டுக் கதைகள்.' என்று கூறுகிறார்கள். இதனால் அவர்கள் மறுமைநாளில் தங்கள் சுமைகளையும் முழுமையாகச் சுமப்பதுடன் அறிவில் லாமல் யாரை இவர்கள் வழிகெடுத்தார்களோ அவர்களின் சுமை களையும் சுமப்பார்கள் ... (24,25)

இவர்கள்தாம் தலைமையேற்று மக்களைத் தவறான பாதையின் பக்கம் அழைத்துச் செல்லும் தலைவர்கள். இவர்கள் அந்த மக்களின் சுமைகளை யும் சேர்த்து சுமப்பார்கள். அவர்கள் தங்களைத்தாங்களே வழிகேட்டில் ஆழ்த்தியதோடு மட்டுமல்லாமல் மற்றவர்களையும் தவறான பாதையின் பக்கம் அழைத்துச் சென்றார்கள். ஹதீஸில் இடம்பெறுகிறது: 'யார் தவறான பாதையின் பக்கம் மக்களை அழைக்கிறாரோ அவர் தம்மைப் பின்தொடர்ந்து வந்தவர்களின் பாவங்களையும் சுமப்பார். ஆனாலும், அவர்களின் பாவங்களிலிருந்து எதுவும் குறைந்துவிடாது. (முஸ்லிம், அபூதாவூது, நசாஈ)'

எடுத்துக்காட்டாக, ஒருவர் தவறான அழைப்புகள், பிழையான விச யங்களைக் கொண்டு ஒரு புத்தகம் எழுதுகிறார் என்றால் அவருடைய குற்றம் அதனை வெளியிடுவதோடு மட்டும் நின்றுவிடும் என்றில்லை. மாறாக, மறுமைநாள்வரை அதனைப் படித்து, தவறான பாதையைத் தேர்ந்தெடுப்பவர்களின் பாவங்களையும் அவர் சுமக்க நேரிடும்.

அவர்களைப் பின்பற்றிச்சென்றவர்களும் தங்களின் குருட்டுத்தனமான பக்தியின் காரணமாக விசாரணை செய்யப்படுவார்கள். அவர்கள்

விலங்குகளைப் போன்று ஓட்டிச்செல்லப்படுபவர்களாக அல்லாமல் அறிவுடையவர்களாக இருந்திருக்க வேண்டும்.

ஞானம் வழங்கப்பட்டவர்கள், 'இன்று இழிவும் வேதனையும் நிராகரிப்பாளர்களுக்குத்தான்.' என்று கூறுவார்கள். தமக்குத்தாமே அநீதி இழைத்துக்கொண்டிருந்தவர்களின் உயிர்களை வானவர்கள் கைப்பற்றும்போது ... (27,28)

இவர்கள்தாம் முதல் வகையினர். இரண்டாவது வகையினர் யாரென்றால் அவர்களிடமும் அதே கேள்வி எழுப்பப்படுகிறது. ஆனாலும், அவர்கள் புத்திசாலிகள். நல்ல முறையில் பதிலளிக்கும் திறமை பெற்றவர்கள்:

இறையச்சமுடையோரிடம் 'உங்கள் இறைவன் எதனை அருளியுள்ளான்?' என்று கேட்கப்பட்டால் 'அவன் நன்மையானதை அருளியுள்ளான்!' என்று அவர்கள் கூறுவார்கள். நற்செயல் புரிந்தோருக்கு இவ்வுலகிலும் நன்மை உண்டு. மறுமையின் வீடே மிகச் சிறந்ததாகும். இறையச்சமுடையோரின் வீடு எவ்வளவு சிறப்பு வாய்ந்தது! (30)

இதுதான் அறிவுடையோரின் கூற்று. இந்த உலகிலும் மறுவுலகிலும் முடிவு இறையச்சமுடையோருக்கே சாதகமாக அமையும் என்பதை அவர்கள் அறிவார்கள். ஆனாலும், இறையச்சமுடையோர் என்பவர்கள் யார்?

அவர்கள் தூய்மையாக இருக்கும் நிலையில் வானவர்கள் அவர்களின் உயிர்களைக் கைப்பற்றுவார்கள். 'உங்கள்மீது சாந்தி உண்டாகட்டும். உங்களுடைய செயல்களின் காரணமாக நீங்கள் சுவனத்தில் நுழையுங்கள்.' என்று அவர்கள் கூறுவார்கள். (32)

அவர்கள் தங்கள் வாழ்க்கையை நற்செயல்களில் கழித்தார்கள். அவர்களின் ஆன்மாக்கள் தூய நிலையில் இருந்தன. அவர்களுக்கான தவணை வந்தபோது அவர்கள் நன்மையான செயல்களைச் செய்பவர்களாகவும் தீமையான காரியங்களைவிட்டு விலகியிருப்பவர்களாகவும் இருந்தார்கள்.

கனி அதன் மரத்திலேயே கனிகிறது. நீருக்கும் வெளிச்சத்துக்கும் மத்தியில் அது கழித்த வாழ்வுக்குப் பின் தூய்மையடைந்து, அதன் சுவை முழுமையடைகிறது. இவ்வாறுதான் நம்பிக்கையாளர்கள் பக்குவமடைந்து சுவனத்துக்குள் நுழைகிறார்கள்.

ஏற்றுக்கொள்வோருக்கும் நிராகரிப்போருக்கும் மத்தியில் வஹீயைக் குறித்த விசயத்தை இத்தோடு நிறுத்திவிட்டு, இந்த உலகம் குறித்தும் அதன் பாதைகளையும் அதில் உள்ளவற்றையும் அல்லாஹ் எவ்வாறு ஆதமின் பிள்ளைகளுக்கு வசப்படுத்தித் தந்துள்ளான் என்பது குறித்தும் பார்க்கலாம்.

அவன் வானங்களையும் பூமியையும் சத்தியத்துடன் படைத்துள்ளான். அவர்களின் இணைவைப்பைவிட்டும் அவன் மிக உயர்ந்தவன். அவன் மனிதனை ஒரு துளி விந்திலிருந்து படைத்தான். அவ்வாறிருந்தும் மனிதன் வெளிப்படையாகத் தர்க்கிப்பவனாக இருக்கிறான். (3,4)

இப்படிப்பட்ட மனிதன் அவனைப் படைத்துச் செம்மைப்படுத்திய, அவனுக்கு வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் வழங்கிய அல்லாஹ்வை எதிர்க்கத் தலைப்பட்டுவிடுகிறான். ‘அவன் கால்நடைகளையும் படைத்துள்ளான். அவற்றில் உங்களுக்கு உணவும் உடையும் இன்னும் பல பயன்களும் இருக்கின்றன. அவற்றை நீங்கள் மாலையில் ஓட்டிவரும்போதும் காலையில் ஓட்டிச் செல்லும்போதும் அவை உங்களுக்கு அழகாகத் தோன்றுகின்றன. (5,6)’

திருக்குர்ஆன் காட்டும் இந்தச் சித்திரம் தன் அலுவலகத்தில் அமர்ந்து கட்டளைகளை இடக்கூடிய ஒரு முதலாளியின் சித்திரம் அல்ல. அது தன் கால்நடைகளை வயல்வெளிக்கு ஓட்டிச்செல்லும் ஒரு விவசாயியின் சித்திரம். அவனே அவற்றுக்கு உரிமையாளனாக இருக்கிறான். அவை அவனுக்கு வசப்படுத்தப்பட்டிருக்கின்றன. நிச்சயமாக அந்தக் காட்சி ஒரு மகத்தான இன்பம்.

❖ ❖ ❖

பின்னர் இறைவன் அளித்த அருட்கொடைகள் எண்ணப்படுகின்றன.

அவனே உங்களுக்காக வானத்திலிருந்து மழையை இறக்கினான். அதில் நீங்கள் அருந்தும் நீரும் உள்ளது. உங்கள் கால்நடைகளை மேய்ப்பதற்கான தாவரங்களும் வளர்கின்றன. அதன் மூலம் உங்களுக்குப் பயிர்களையும் ஆலிவ் மரத்தையும் பேரீச்சை, திராட்சை மற்றும் எல்லா வகையான கனிகளையும் அவன் முளைக்கச் செய்கிறான். நிச்சயமாக சிந்திக்கும் மக்களுக்கு இதில் சான்று இருக்கிறது. (10,11)

பூமியின் மீது எவ்வாறு மழை பொழிகிறது? விதைகள் விதவிதமாக, பூக்கள் பல்வேறு வண்ணங்களைக் கொண்டவையாக, சுவை வெவ்

வேறானவையாக இருக்கின்றன. விலங்குகளுக்கு அவற்றுக்குரியவை கிடைத்துவிடுகின்றன. மனிதர்களுக்குரியவை அவர்களுக்குக் கிடைத்து விடுகின்றன. ஒரே பூமிதான். ஒரே வகையான நீர்தான். ஆனாலும், அடர்த்தியான காடுகளையும் விசாலமான சமவெளிகளையும் காண்கிறோம். இவையனைத்தையும் படைத்தது யார்?

> அவனே இரவையும் பகலையும் சூரியனையும் சந்திரனையும் உங்களுக்குப் பயன்படும்படி அமைத்துத் தந்துள்ளான். நட்சத்திரங்களும் அவனுடைய கட்டளைக்கு உட்பட்டவையாகவே இருக்கின்றன. புரிந்துகொள்ளும் மக்களுக்கு இதில் பல சான்றுகள் இருக்கின்றன. (12)

பெரும்பாலான உயிரினங்கள் வாழக்கூடிய இந்தப் பூமியிலிருந்தே அவற்றுக்கான உணவுகள் பெறப்படுகின்றன. வானவெளியில் சிறிய அணுவைப் போன்று புரிந்துகொள்ள முடியாத ஒழுங்கில் எண்ணிக்கையற்ற நட்சத்திரங்கள் காணப்படுகின்றன.

அது பெரும் பாலைவனத்தின் ஒரு பிடி மண்ணைப் போல அல்லது அலைகள் சூழ்ந்த கடலின் ஒரு துளி நீரைப் போல காணப்படுகிறது.

நிச்சயமாக இந்த உலகம் மிகப் பெரியது. இதனைப் படைத்தவன் அனைத்தையும்விட மிகப் பெரியவனாவான். ஆனாலும், சிலர் இந்தப் படைப்பாளனை அறியாமல் இருக்கிறார்கள். கற்களையோ மரக் கட்டைகளையோ இறைவனாக எண்ணுகிறார்கள். எவ்வளவு மோசமான மடமைத்தனம் இது!

> படைக்க முடிந்தவனும் படைக்க முடியாதவனும் சமமாக முடியுமா? நீங்கள் சிந்திக்க மாட்டீர்களா? அல்லாஹ்வின் அருட்கொடைகளை நீங்கள் கணக்கிட நாடினால் அவற்றை உங்களால் கணக்கிடவே முடியாது. நிச்சயமாக அல்லாஹ் பெரும் மன்னிப்பாளனாகவும் இணையிலாக் கிருபையாளனாகவும் இருக்கிறான். நீங்கள் மறைப்பதையும் வெளிப்படுத்துவதையும் அல்லாஹ் நன்கறிவான். மக்கள் அல்லாஹ்வையன்றி அழைக்கும் தெய்வங்களால் எதையும் படைக்க முடியாது. அவையே படைக்கப்பட்டவைதாம். அவை உயிரற்ற சடலங்கள். இறந்தவர்கள் எப்போது எழுப்பப் படுவார்கள் என்பதையும் அவை அறிய மாட்டா. (17-21)

அந்நஹ்ல் என்ற இந்த அத்தியாயத்தில் அல்லாஹ் தன் அடியார்கள் மீது பொழிந்த அருட்கொடைகளைக் குறித்து அதிகம் கூறுவதால் இதற்கு ‘அருட்கொடைகள்’ என்றும் பெயரிடப்பட்டுள்ளது. அவர்கள் அவற்றை

நினைவுகூர்ந்து தனக்கு நன்றிசெலுத்த வேண்டும் என்று அல்லாஹ் விரும்புகிறான்.

இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில், இந்தப் பிரபஞ்சத்தின் மௌன மான சாட்சிகளுக்கு இணையாகப் பேசக்கூடிய குர்ஆனின் சாட்சிகளும் இருக்கின்றன என்று கூறினோம். இரு வகையான சாட்சிகளும் மனிதர் களுக்கு அவர்களின் இறைவனை அறிமுகப்படுத்துகின்றன; அவன் பக்கம் வழிகாட்டுகின்றன.

கடந்தகாலத்தில் மட்டுமல்ல, தற்காலத்திலும் வஹீயை மறுத்து, தூதர்களைப் பொய்யர்கள் என்று தூற்றக்கூடியவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அன்றைய நிராகரிப்பாளர்களைப் போன்று இன்றைய நிராகரிப்பாளர்களும், 'இருக்கக்கூடிய இந்த உலகத்தைத் தவிர வேறு உலகம் இல்லை.' என்றும் 'அவன் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்ப மாட்டான்.' என்றும் மறுத்துவருகிறார்கள். 'ஆரம்பத்தில் படைத்தவாறே நாம் மீண்டும் படைப்போம். (21:104)', 'மரணித்துவிட்டவர்களை அல்லாஹ் எழுப்ப மாட்டான் என்று அவர்கள் அல்லாஹ்வின் மீது உறுதியான சத்தியங்கள் செய்கிறார்கள். ஆம், இது அவன் தன்மீது கடமையாக்கிக் கொண்ட உறுதியான வாக்குறுதியாகும். ஆயினும், மக்களில் பெரும்பாலோர் அறிந்துகொள்வதில்லை. (38)'

மனிதன் இந்த உலகையும் அதில் உள்ளவற்றையும் அனுபவிக்கும் குறுகிய காலகட்டத்தைத் தொடர்ந்து அவனுடைய நிரந்தரமான மறுவுலக வாழ்க்கை தொடங்குகிறது. இதனைக் குறித்து மக்களை எச்சரிக்கவே தொடர்ந்து தூதர்கள் அனுப்பப்பட்டார்கள்.

> உமக்கு முன்னரும் நாம் ஆண்களையே தூதர்களாக ஆக்கி அவர்களுக்கு வஹீ அறிவித்தோம். நீங்கள் அறியாதவர்களாக இருந்தால் அறிவுடையோரிடம் கேட்டுக்கொள்ளுங்கள். நாம் அவர்களை ஆதாரங்களுடனும் வேதங்களுடனும் அனுப்பி யிருந்தோம். நாம் உமக்கு நினைவூட்டலை அருளியுள்ளோம். அது, மக்களுக்கு அருளப்பட்டதை நீர் அவர்களுக்குத் தெளிவுபடுத்து வதற்காகவும் அவர்கள் சிந்தித்துணர வேண்டும் என்பதற்காக வும்தான். (43,44)

இவ்வுலக வாழ்வைத் தவிர வேறு எதுவும் இல்லை என்று கூறுபவர் கள், சிலை வழிபாட்டாளர்கள், மதச்சார்பற்றவர்கள் இறை வஹீயை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். மக்காவாசிகள் சிலை வழிபாட்டையே தங்கள் முன்னோர்களிடமிருந்து பெற்றார்கள். இந்த உலகின் இன்பங் களைக் குறித்தே தவிர வேறு எதையும் அவர்கள் சிந்திக்கவில்லை.

எனக்கு வஹீ அறிவிக்கப்படுகிறது. நீங்கள் எண்ணுவதை விட இவ் வுலகம் விசாலமானது என்று ஒரு மனிதர் கூறியதை அவர்கள் செவி யுற்றபோது அதனை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். அவருக்கு எதிராகப் பாய்ந்தார்கள். வேதக்காரர்களுடன் தொடர்புகொண்டு வஹீயைக் குறித் தும் முந்தைய தூதர்களைக் குறித்தும் கேட்கும்படி திருக்குர்ஆன் அவர் களுக்கு அறிவுரை கூறியது.

இந்த இடத்தில் வேதக்காரர்களைக் குறித்த செய்தி மிகுந்த முக்கி யத்துவம் வாய்ந்தது. மூசாவும் ஈசாவும் உண்மையாளர்கள். தூதர்களாக வந்தவர்கள். அப்படியானால் அவர்களுக்கு வழங்கப்பட்ட வேதங்கள் எங்கே? அவற்றை எடுத்துரைக்குமாறு அவர்கள் பணிக்கப்பட்டார்கள் தானே?

அவர்களின் சமூகத்தார் தாங்களாகவே பலவற்றைப் புனைந்து வேதத் தோடு இணைத்துக்கொண்டார்கள். ஆதம் விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசித்தவுடன், நிரந்தரமான மரத்தையும் உண்டு தன் அதிகாரத் தைக் கைப்பற்ற வந்துவிடுவார் என்று அல்லாஹ் அஞ்சினானாம்! அதன் காரணமாக அவரும் அவருடைய பிள்ளைகளும் இங்கு துன்பம் அனுப விக்க வேண்டும் என்பதற்காக அவரைச் சுவனத்திலிருந்து விரட்டி பூமியில் இறக்கினானாம். அறிவுடைய யாராவது இந்தக் கதையை ஏற்றுக்கொள்வார்களா?

அல்லாஹ் தன் ஒரே மகனாகிய ஈசாவைக் கொலைசெய்ய அனுமதித் தான் என்றும் அந்தக் கொலையை ஆதமின் பாவத்துக்குப் பரிகாரமாக ஆக்கினான் என்றும் அவர்கள் புனைந்துவைத்துள்ளார்கள்.

வேதக்காரர்கள் இப்படிப்பட்ட விசயங்களைத் தாமாகவே புனைந்து, பின்னர் அது அல்லாஹ்விடமிருந்து அருளப்பட்ட வஹீ என்றும் இதனை ஏற்றுக்கொள்ளாதவர்கள் இறைவனின் வஹீயை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள் என்றும் வாதிட்டார்கள்.

‘அறிந்தவர்களிடம் கேளுங்கள்’ என்ற வாசகம், ஆரம்பகட்ட அறபுகள் இறைவனிடமிருந்து வஹீ வருவது சாத்தியமானதுதான், அதில் எந்த விசித்திரமும் இல்லை என்பதை அறிந்துகொள்வதற்காகத்தான். ஆனால், வேதக்காரர்களிடம் உள்ளவை நீண்ட சீர்திருத்தத்துக்கு உட்படுத்தப்பட வேண்டியவையாகும்.

முஹம்மதுக்கு அருளப்பட்ட வேதம் இந்தச் சீர்திருத்தங்களை உள்ள டக்கியுள்ளது. அல்லாஹ் கூறுகிறான்:

*அல்லாஹ்வின் மீது ஆணையாக, உமக்கு முன்னரும் நாம் பல் வேறு சமூகங்களிடம் தூதர்களை அனுப்பியுள்ளோம். ஆயினும், ஷைத்தான் அவர்களது செயல்களை அவர்களுக்கு அழகாக்கிக் காட்டினான். அவனே இன்று இவர்களின் நண்பனாக இருக்கி றான். இவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனை உண்டு. அவர்கள் முரண்பட்டுள்ள விசயங்களை நீர் அவர்களுக்கு தெளிவுபடுத்து வதற்காகத்தான் நாம் உமக்கு வேதத்தை அருளியுள்ளோம். நம் பிக்கை கொள்ளும் மக்களுக்கு இது வழிகாட்டியாகவும் அருளாக வும் இருக்கிறது.* (63,64)

*அது ஆரம்பத்தில் அருளப்பட்ட சத்தியத்தைத் தெளிவுபடுத்துகிறது; மனித அறிவைப் பாதுகாக்கிறது.*

*உண்மையில் முஹம்மது மார்க்கத்துக்கும் அறிவுக்கும் மத்தியில், மறைவான நம்பிக்கைக்கும் வெளிப்படையான நம்பிக்கைக்கும் மத்தியில், அல்லாஹ்விடமிருந்து அருளப்பட்டவற்றுக்கும் மனித அறிவு அடைந்த வற்றுக்கும் மத்தியில் இணைப்பை ஏற்படுத்துபவராக இருந்தார்.*

*ஆகவேதான் வசனம் அவரது பணியையும் வாழ்க்கையையும் நிர்ணயம் செய்கிறது: 'நாம் உமக்கு இந்தக் குர்ஆனை அருளியுள்ளோம். அது, மக்களுக்கு அருளப்பட்டதை நீர் அவர்களுக்குத் தெளிவுபடுத்துவதற் காகவும் அவர்கள் சிந்தித்துணர வேண்டும் என்பதற்காகவும்தான்.* (44)'

*சிந்திப்பது உயிருள்ள அறிவின், சரியான மனிதனின் தனித்தன்மை யாகும். மனித அறிவிலிருந்து வெளிப்படும் மார்க்கம் ஒவ்வொன்றும் மனிதர்களின் சிந்தனைகளாகவே கருதப்படும். அவை ஒருபோதும் அல்லாஹ்வின் வஹீயாக ஆகாது. அல்லாஹ் ஆரம்பத்திலேயே தன் வஹீயில் இந்த விசயத்தைத் தெளிவுபடுத்திவிட்டான்:*

*அல்லாஹ் கூறுகிறான், 'இரு தெய்வங்களை ஏற்படுத்திக்கொள்ளா தீர்கள். அவன் ஒரே இறைவன்தான். நீங்கள் என்னையே அஞ்சு ங்கள்.' வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அவனுக்கே உரியவை. என்றென்றும் நீங்கள் அவனுக்கே கட்டுப்பட வேண்டும். அல்லாஹ்வைத் தவிர மற்றவர்களுக்கா நீங்கள் பயப்படுகிறீர்கள்?* (51,52)

❖ ❖ ❖

*மீண்டும் இந்த அத்தியாயம் மனிதர்களின் மீது பொழியப்பட்ட அல் லாஹ்வின் அருட்கொடைகளை எண்ணுவதன் பக்கம் திரும்புகிறது:*

*'அல்லாஹ்தான் வானத்திலிருந்து நீரை இறக்கி, அதன் மூலம் இறந்த பூமியை உயிர்ப்பிக்கிறான். நிச்சயமாக செவியேற்கும் மக்களுக்கு இதில் சான்று உள்ளது. (65)'* பூமியில் உள்ள உயிரினங்களால் வெளியேற்றப் பட்ட கழிவுகள் விதைகளாகவும் பழங்களாகவும் அழகிய விளைச்சல் களாகவும் மாற்றமடைகின்றன.

இவற்றையெல்லாம் நிகழ்த்துபவன் யார்? அல்லாஹ் ஒருவன்தான். *'கால்நடைகளிலும் உங்களுக்குப் படிப்பினை இருக்கிறது. நாம் அவற் றின் வயிற்றில் உள்ள சாணத்துக்கும் இரத்தத்துக்கும் மத்தியிலிருந்து இதமான, சுத்தமான பாலை அருந்துவோருக்காக அளிக்கிறோம். (66)'* பாலை உருவாக்குவதில் மாட்டின் பங்கு ஏதேனும் இருக்கிறதா? குடலும் அது உள்ளடக்கியவையும் தூய்மையான இந்தப் பாலின் ஊற்று அல்லவே!

முட்டையிடும் கோழிக்குத் தெரியுமா, அது என்ன செய்தது என்று?

இவற்றையெல்லாம் அல்லாஹ்தான் படைக்கிறான். ஆனாலும் சிலர் அவனுடைய அருட்கொடைகளை உண்டுகொண்டே அவனை நிரா கரிக்கிறார்கள்.

❖ ❖ ❖

> *உம் இறைவன் தேனீக்களுக்கு உள்ளுணர்வை ஏற்படுத்தினான். 'மலைகளிலும் மரங்களிலும் மக்கள் கட்டும் கட்டடங்களிலும் கூடுகளை அமைத்துக்கொள். பின்னர், எல்லா வகையான கனி களிலிருந்தும் சாற்றை உறிஞ்சிக்கொள். உன் இறைவன் அமைத்துத் தந்த இலகுவான பாதைகளில் செல்.' அதன் வயிற்றிலிருந்து பல்வேறு நிறங்களுடைய பானம் வெளிப்படுகிறது. அதில் மக்க ளுக்கு நிவாரணம் உள்ளது. நிச்சயமாக இதில் சிந்திக்கக்கூடிய மக்களுக்குச் சான்று இருக்கிறது. (68,69)*

தேனீக்களின் தேனால் ஏற்படும் பயன்களையும் நன்மைகளையும் குறித்து ஏராளமான புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. அவை வயல் வெளிகள், தோட்டங்கள், புல்வெளிகள் எனப் பல இடங்களிலிருந்து தமக்கானவற்றை உறிஞ்சிக்கொண்டு தேனை வெளிப்படுத்துகின்றன. அது மனிதர்களுக்கு உணவாகவும் மருந்தாகவும் இருக்கிறது. அதனை அவர்கள் உண்ணுகிறார்கள். ஆனால், அதனைத் தந்த அல்லாஹ்வுக்கு நன்றிசெலுத்துவதில்லை.

பின்னர் வசனங்கள், மனிதர்கள் அனைவரையும் தழுவியுள்ள பொது வான அருட்கொடைகளைக் குறிப்பிடுகின்றன: *'அல்லாஹ்வே உங்களைப்*

*படைத்தான். பின்னர், அவனே உங்களை மரணிக்கச்செய்கிறான். அறிந்த பின்னரும் எதையும் அறியாதவராக ஆகிவிடக்கூடிய முதுமைவரை தள்ளப்படுபவரும் உங்களில் உண்டு.* (70)'

*வாழ்க்கை என்பது இல்லாமை அல்ல. அல்லாஹ் யாருக்கு இருப்பை வழங்கியுள்ளானோ அவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட அருட் கொடையை உணர வேண்டும். தாம் படைக்கப்பட்ட நோக்கத்தை அறிந்து அதனை நிறைவேற்ற வேண்டும்.*

*மிதிபடக்கூடிய மண்ணாக, சவாரிக்குப் பயன்படுத்தப்படும் ஒரு விலங்காக மனிதன் படைக்கப்பட்டிருக்கலாம். ஆனாலும் அல்லாஹ் அவனை அழகிய வடிவில் படைத்திருக்கிறான். ஆகவே, அவன் இந்த அருட்கொடைக்கு நன்றிசெலுத்த வேண்டும்.*

*மனிதர்களைச் சோதிக்கும் பொருட்டு அவர்களிடையே வாழ்வா தாரங்களில் அல்லாஹ் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தியுள்ளான். சிலருக்கு அதிகமாகவும் சிலருக்கு குறைவாகவும் வழங்கியுள்ளான். தன் அடி யார்களைச் சோதிக்கும் உரிமை அவனுக்கு இருக்கிறது. வாழ்வாதாரம் அதிகமாக வழங்கப்பட்ட செல்வந்தன் தன்னுடைய செல்வங்களைக் கொண்டு ஏழைகளுக்கு உதவுகிறானா அல்லது பேராசையால் மிகைக்கப் பட்டு நன்றிகெட்டத்தனமாக நடந்துகொள்கிறானா என்பதை அல்லாஹ் பார்க்க விரும்புகிறான்.*

❖ ❖ ❖

*மனிதச் சமூகம் பரவவும் நீடிக்கவும் வேண்டும் என்பதற்காக அல்லாஹ் திருமணம் என்னும் வழிமுறையை அமைத்துள்ளான். மனிதச் சமூகம் திருமணத்தின் பொருளை, ஒரு மனிதன் தந்தையாக, பின்னர் தாத்தாவாக மாற்றமடைவதன் பொருளை அறிந்திருக்கிறதா? அல்லது அது குடும்ப அமைப்பை நிறுவி மோசடிசெய்யும் வழிகளைத் திறந்துவிட்டதா? பல சமயங்களில் அது திருமணத்தை ஒரு சுமையாக ஆக்கிவிட்டதா?*

> *அல்லாஹ் உங்களுக்காக உங்களிலிருந்தே உங்கள் மனைவியரை ஏற்படுத்தியுள்ளான். உங்கள் மனைவியரிலிருந்து குழந்தைகளை யும் பேரக்குழந்தைகளையும் ஏற்படுத்தி, தூய்மையானவற்றி லிருந்து உங்களுக்கு உணவும் வழங்கியுள்ளான். இதன் பின்னரும் இவர்கள் அசத்தியத்தின் மீது நம்பிக்கை கொண்டு அல்லாஹ்வின் அருட்கொடைகளை நிராகரிக்கிறார்களா?* (72)

*விசித்திரம் என்னவென்றால், மனிதர்கள் தங்களுக்கு அருட்கொடைகள் அளித்து சிறப்பித்த அல்லாஹ்வை வணங்குவதற்குப் பதிலாக இல்லாத*

வற்றை வணங்கி, அசத்தியத்துக்கு அடிபணிந்துகொண்டும் சிலைகளை அல்லது எந்த அடிப்படையுமற்ற புனைவை வணங்கிக் கொண்டும் இருக்கிறார்கள்.

அல்லாஹ்வை விடுத்து அவர்கள் வணங்குபவை வானங்களி லிருந்தோ பூமியிலிருந்தோ அவர்களுக்குச் சிறிதும் உணவளிக்கும் அதிகாரத்தையோ ஆற்றலையோ பெற்றிருக்கவில்லை. ஆகவே, நீங்கள் அல்லாஹ்வுக்கு உதாரணங்களைக் கூறாதீர்கள். அல் லாஹ்வே நன்கறிவான், நீங்கள் அறிய மாட்டீர்கள். (73,74)

நிச்சயமாக ஒரு நாளில் மனிதர்கள் அனைவரும் விசாரணைக்காக ஒன்றுதிரட்டப்படுவார்கள். ஒவ்வொரு மனிதனும் தான் செய்தவற்றை யும் செய்யாமல் விட்டுவிட்டவற்றையும் அறிந்துகொள்ளும் பொருட்டு தன் இறைவனுக்கு முன்னால் நின்றே தீர வேண்டும். முந்தையவர்கள், பிந்தையவர்கள் என அனைவரையும் ஒன்றுதிரட்ட நீண்ட நேரம் அவ சியம் இல்லை. ‘மறுமைநாளின் நிகழ்வு கண் இமைக்கும் நேரத்தைப் போன்றதுதான். ஏன், அதைவிடவும் விரைவானது. நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் பேராற்றலுடையவன். (77)’

தொடர்ந்து இந்த அத்தியாயம் மனிதர்கள் அனுபவித்துக்கொண்டி ருக்கும் இறைவனின் அருட்கொடைகளை எண்ணிக்கொண்டே செல் கிறது. ‘அல்லாஹ்தான் உங்கள் அன்னையரின் வயிற்றிலிருந்து உங்களை வெளிப்படுத்தினான். நீங்கள் எதையும் அறியாதவர்களாக இருந்தீர்கள். நீங்கள் நன்றிசெலுத்தும் பொருட்டு உங்களுக்குச் செவிப்புலனையும் பார்வையையும் உள்ளங்களையும் ஏற்படுத்தினான். (78)’

மிகவும் குறைவான எடை கொண்ட குழந்தைக்கும் நன்கு வளர்ந்து எடை கூடிய, பலசாலியாக இருக்கின்ற இளைஞனுக்கும் எவ்வளவு வித்தியாசம்! தசைகளும் இன்னபிற உறுப்புகளும் எப்படி வளர்ச்சி யடைந்தன?

எப்படி ஒரு குழந்தையின் அறிவு, அனுபவங்களால் நிரம்பியுள்ள புத்திசாலியின் அறிவாக மாற்றமடைகிறது? இதுதான் பேராற்றல்மிக்க எல்லாவற்றையும் அறிந்தவனின் படைப்பு!

நீரிலும் நிலத்திலும் ஆகாயத்திலும் அவனுடைய அதிகாரமே நிலை பெற்றுள்ளது. அவன்தான் ஆகாயத்தில் பறவைகளை பறக்கச் செய்கிறான். ‘ஆகாயத்தில் கட்டுப்படுத்தப்பட்டுள்ள பறவைகளை அவர்கள் பார்க்க வில்லையா? அல்லாஹ்தான் அவற்றைத் தாங்கியுள்ளான். நம்பிக்கை கொள்ளும் மக்களுக்கு இதில் ஏராளமான சான்றுகள் இருக்கின்றன. (79)’

ஒரு விசயத்தைப் பார்த்துப்பார்த்துப் பழகிவிட்டால் அதன் இரகசியம் குறித்து தேடுவதை மறந்துவிடுவோம். ஆகாயத்தில் பறவைகளின் உலகம், நீரில் மீன்களின் உலகம் என ஒவ்வொன்றும் ஆச்சரியங்களால் நிரம்பியது. ஆனாலும் நாம், இந்த உலகங்களின் இரகசியங்களை அறிந்துகொள்வதன் பக்கம் கவனம்செலுத்துவதில்லை.

அல்லாஹ் கூறுகிறான்:

அல்லாஹ் உங்கள் வீடுகளை உங்களுக்கு அமைதியளிக்கக்கூடியதாக ஆக்கியுள்ளான். கால்நடைகளின் தோல்களிலிருந்து கூடாரங்களையும் அவன் உங்களுக்காக ஏற்படுத்தியுள்ளான். பயணத்தின் போதும் ஊரில் நீங்கள் தங்கியிருக்கும்போதும் அதன் பயனை நீங்கள் எளிதாகப் பெறுகிறீர்கள். செம்மறியாடு, ஒட்டகம், வெள்ளாடு ஆகியவற்றின் உரோமங்களிருந்து வீட்டு உபகரணங்களையும் பயனுள்ள பொருள்களையும் ஒரு குறிப்பிட்ட காலம்வரை ஏற்படுத்தியுள்ளான். தான் படைத்தவற்றிலிருந்து அல்லாஹ் உங்களுக்காக நிழல்களையும் மலைகளில் தங்குமிடங்களையும் ஏற்படுத்தியுள்ளான். (80,81)

இறைவனின் அருட்கொடைகள் எண்ணற்றவை. ஒவ்வொரு நொடியும் அருட்கொடைகள் இறங்கிக்கொண்டே இருக்கின்றன. 'அல்லாஹ்வின் அருட்கொடைகளை நீங்கள் கணக்கிட நாடினால் அவற்றை உங்களால் கணக்கிடவே முடியாது. (16:18)'

இந்த நினைவூட்டலுக்குப் பிறகு திருக்குர்ஆனைக் குறித்த உரையாடல் இடம்பெறுகிறது. ஆனால், அது சம்பவத்தின் இறுதிப் பகுதியாக வருகிறது. முந்தையவர்களும் பிந்தையவர்களும் ஒன்றிணைந்து அல்லாஹ்வுக்கு முன்னால் நிற்கும்போது ஒவ்வொரு சமூகத்திடமும் அது செய்த செயல்கள்குறித்தும் அது தூதர்களுக்கு எவ்வாறு பதிலளித்தது என்பதுகுறித்தும் விசாரிக்கப்படும்:

ஒவ்வொரு சமூகத்திலும் அவர்களிலிருந்தே ஒரு சாட்சியை அவர்களுக்கு எதிராக நாம் எழுப்பும் நாளில் உம்மை அவர்களின் மீது சாட்சியாகக் கொண்டுவருவோம். யாவற்றையும் தெளிவுபடுத்தக்கூடிய வேதத்தை நாம் உமக்கு அருளியுள்ளோம். அது கீழ்ப்படிந்து வாழும் மக்களுக்கு வழிகாட்டியாகவும் அருளாகவும் நற்செய்தியாகவும் இருக்கிறது. (89)

மறுமைநாளின் காட்சிகளில் ஒன்றான இந்தக் காட்சி அந்நிசா என்ற அத்தியாயத்திலும் கூறப்பட்டுள்ளது:

*நாம் ஒவ்வொரு சமூகத்திலிருந்தும் ஒரு சாட்சியைக் கொண்டு வரும்போதும் உம்மை இவர்களின் மீது சாட்சியாக ஆக்கும் போதும் நிலைமை என்னவாகும்? அந்நாளில் நிராகரித்தவர்களும் தூதருக்கு மாறுசெய்தவர்களும் பூமி தங்களை விழுங்கிவிடக் கூடாதா என்று ஏங்குவார்கள். அவர்கள் அல்லாஹ்விடம் எந்த விசயத்தையும் மறைத்துவிட முடியாது.* (4:41,42)

*நபியவர்கள் இந்த வசனத்தைக் கேட்டபோது அழுதுவிட்டார்கள்.*

*எல்லாவற்றையும் தெளிவுபடுத்தக்கூடிய இந்தக் குர்ஆனை அவர் அல்லாஹ்விடமிருந்து பெற்றார். அதனை நேர்மையான முறையில் முழுவதுமாக மக்களிடம் எடுத்துரைத்தார். அதனடிப்படையில் ஒரு சமூகத்தை வளர்த்தெடுத்தார். அது வரலாற்றின் போக்கையே மாற்றியது. மனிதர்கள் தவறான பாதையிலிருந்து விடுபட்டு நேரான பாதையின் பக்கம் வந்தார்கள்.*

*இந்தச் சமூகத்துக்கு என்ன துன்பம் நேர்ந்தது? அது ஏன் இந்தக் குர்ஆனை மறந்துவிட்டது, இழிவடைந்துவிட்டது? மூடர்கள் அதனை மிகைத்துவிட்டார்களா? இந்த வேதத்தில் செயல்படுத்துவதற்குக் கடினமான கட்டளைகள் இருக்கின்றனவா? அல்லாஹ் கூறுகிறான்: 'நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும் நன்மை செய்யுமாறும் உறவினர்களுக்கு உதவிபுரியுமாறும் கட்டளையிட்டு, மானக்கேடான காரியங்கள், பாவங்கள், வரம்புமீறுதல் ஆகியவற்றைவிட்டு உங்களைத் தடுக்கிறான். நீங்கள் படிப்பினைபெறும் பொருட்டு உங்களுக்கு அறிவுரை வழங்குகிறான். (90)' இவை செயல்படுத்துவதற்குக் கடினமான கட்டளைகளாகவா தெரிகின்றன? இவற்றைக் கடினமாகக் கருதுபவர்கள் இழிவையும் சிரமத்தையுமே அடைவார்கள். மீண்டும் அவர்கள் குர்ஆனின் பக்கம் திரும்பும்வரை அவர்களால் வெற்றிபெற முடியாது.*

❖ ❖ ❖

*நபியவர்களின் மீது இஸ்லாத்தின் எதிரிகள் சுமத்திய ஒரு குற்றச்சாட்டு இங்கு குறிப்பிடப்பட்டு விவாதம்செய்யப்படுகிறது. அவர்கள் கூறினார்கள், 'வேதக்காரர்களில் உள்ள ஒரு மனிதர் அல்லது முந்தைய வஹீயைக் குறித்து தீர்க்கமான அறிவுடைய ஒரு மனிதர்தான் முஹம்மதுக்கு இவற்றையெல்லாம் கற்றுக்கொடுக்கிறார்.'*

*அப்படியானால் அந்த மனிதர் யார்? ஏன் யாராலும் அவரை அறிய முடியவில்லை? 'ஒரு மனிதர்தான் இவருக்கு இதனைக் கற்றுக்கொடுக்கிறார் என்று அவர்கள் கூறுவதை நாம் அறிவோம். ஆனால், அவர்கள்*

*குறிப்பிடும் மனிதரின் மொழி வேற்று மொழியாகும். இதுவோ தெளிவான அறபி மொழியாகும். (103)'*

*திருக்குர்ஆன் அறபி மொழியில் இருக்கின்ற பேரற்புதம் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. அப்படியிருக்கும்போது அறபி மொழியை அறியாத, முந்தைய வஹீயை அறிந்த ஒருவரால் அது எவ்வாறு கொண்டுவரப்பட்டிருக்க முடியும்?*

*ஏன் அந்த மனிதர் தம்மை வெளிப்படுத்தவில்லை? முஹம்மதை எதிர்க்கும் குறைஷிகளுக்கு அவர் உதவியிருக்கலாம், அல்லவா?*

*இந்தக் கேள்விகளை அப்படியே விட்டுவிட்டு, நமக்கு முன்னால் இருக்கும் தவ்றாத்தையும் இன்ஜீலையும் குர்ஆனையும் எடுத்து ஒப்பீடு செய்வோம்.*

*தவ்றாத் அல்லாஹ்வுக்கு உருவம் கற்பிக்கிறது. அவனுக்குப் பொருத்த மற்ற பண்புகளைக் கொண்டு அவனை வர்ணிக்கிறது. அவன் இஸ்றாயீலுடன் சண்டையிட்டுத் தோற்றுவிட நெருங்கிவிட்டதாகவும் இறுதியில் நிபந்தனை விதித்து தப்பிவிட்டதாகவும் கூறுகிறது.*

*தவ்றாத்தில் பல இடங்களில் இறைவனுக்கு உருவம் கற்பிக்கப்பட்டுள்ளது. அறியாமை, வெட்கம் ஆகிய பண்புகள் அவனோடு இணைத்துக் கூறப்பட்டுள்ளன. இதுபோன்ற தவறான பண்புகளைக் கொண்டா குர்ஆன் இறைவனை வர்ணிக்கிறது? அவன் ஒருவனே வணக்கத்துக்குரியவன் என்றும் அவனே அனைத்து அதிகாரங்களும் பெற்றவன் என்றும் அவன் பரிபூரணமான பண்புகளைக் கொண்டவன் என்றும் திருக்குர்ஆன் அவனை வர்ணிக்கிறது. 'அளவிலாக் கருணையாளன் அரியணையின் மீது உயர்ந்துவிட்டான். வானங்களிலும் பூமியிலும் அவற்றுக்கிடையிலும் பூமிக்கு அடியிலும் உள்ளவை யாவும் அவனுக்கே உரியவை. நீர் உமது பேச்சை உரக்கக் கூறினாலும் (இரகசியமாகக் கூறினாலும்) அவன் இரகசியத்தையும் அதைவிட மறைவானதையும் அறிகிறான். (20:5,6)'*

*கொள்கை, வரலாறு, இறைத்தூதர்களின் வாழ்க்கை ஆகியவை தொடர்பாக இரண்டு வேதங்களும் எடுத்துரைக்கும் விசயங்களில் ஏதேனும் ஒற்றுமை காணப்படுகிறதா?*

*குர்ஆன் தவ்ஹீதின் அடிப்படையில் ஈமானைக் கட்டமைக்கிறது. 'வானங்களிலும் பூமியிலும் உள்ள அனைவரும் கருணைமிக்க இறைவனிடம் அடிமைகளாகவே வருவார்கள். அவன் அவர்களை நன்கு கணக்கிட்டு வைத்துள்ளான். அவர்களின் எண்ணிக்கை அவனிடமே உள்ளது.*

மறுமைநாளில் அவர்கள் அனைவரும் அவனிடம் தனித்தனியாகவே வருவார்கள். (19:94,95)' இப்போது காணப்படும் பைபிள்களில் இப்படித் தான் காணப்படுகிறதா?

பைபிள், வானவர்களில் ஒருவரான ஜிப்ரீலை இறைவன் என்கிறது. தூதர்களில் ஒருவரான மர்யமின் மகன் ஈசாவை இறைவன் என்கிறது. நிலையான படைப்பாளனுக்குத் தந்தை எனப் பெயரிட்டு அவனையும் இறைவன் என்கிறது. பின்னர், மூவரும் ஒன்றுதான் என்கிறது. திரித்துவத்தில் இறைவன் கலந்துவிட்டான் என்கிறது. அவன் இறைவனாகவும் மகனாகவும் மனிதர்களின் தந்தையாகவும் இருப்பதில் எந்தத் தவறும் இல்லை என்கிறது.

முஹம்மது இத்தகைய ஒரு புத்தகத்திலிருந்தா கற்றுக்கொண்டார்? அல்லது 'இஹ்லாஸ்' என்ற அத்தியாயத்தை அருளியவனிடமிருந்தா? 'நீர் கூறும், அவன் அல்லாஹ் ஒருவனே. அல்லாஹ் தேவையற்றவன். அவனுக்குச் சந்ததியாக யாரும் இல்லை. அவன் யாருடைய சந்ததியும் இல்லை. அவனுக்கு நிகராக யாரும் இல்லை. (112:1-4)'

முஹம்மது முந்தைய வேதங்களிலிருந்து எடுத்துக்கொண்டார் என்று கூறுவது மடமைத்தனமே அன்றி வேறில்லை.

இதைத் தவிர இறையச்சத்தை ஏற்படுத்துவதற்கு, பரிபூரணமான பண்புகளைப் பெறுவதற்கு, தீய உணர்வுகளை அடக்குவதற்குக் குர்ஆன் கூறும் வழிமுறைகளை எடுத்துக்கொள்ளுங்கள். அவற்றில் ஏதேனும் வேறு புத்தகங்களிலிருந்து பெறப்பட்டுள்ளதாகக் காண்கிறீர்களா?

இறைவனின் மகத்துவத்தைத் திருக்குர்ஆனில்தான் காண முடிகிறது. அது மனிதனுக்கு அல்லாஹ்வின் கண்ணியத்தையும் இந்த உலகம் முழுவதையும் அவன் பராமரிக்கிறான் என்பதையும் உணர்த்தக்கூடியதாக இருக்கிறது. அவன் மனிதர்களின் கண்கள் செய்யும் மோசடியையும் அவர்களின் உள்ளங்கள் மறைத்துவைத்திருப்பவற்றையும் அறியக்கூடியவன். அதே போன்று அவன், நட்சத்திரங்கள் எங்கு விழுகின்றன என்பதையும் அவை மறைந்தபின் எப்போது உதிக்கும் என்பதையும் அறியக்கூடியவன்.

குர்ஆனின் வசனங்கள் இறைவனின் மகத்துவத்தைத் தெள்ளத் தெளிவாக உணர்த்துகின்றன. அவை மனிதனை ஆசைக்கோ அச்சத்துக்கோ அல்லாமல் அல்லாஹ்வுக்கு மட்டுமே அடிமையாக ஆக்குகிறது.

முந்தைய வேறெந்த வேதத்தையும் போல் அல்லாமல் திருக்குர்ஆனின் கட்டமைப்பே தனித்துவமானது. ஆகவே, எப்படி ஒருவர் அது முந்தைய

வேதங்களிலிருந்து எடுக்கப்பட்டது என்று கூற முடியும்? பலமானவன் மிகப் பலவீனமானவனிடமிருந்து எடுக்க மாட்டான். செல்வத்தில் காரூனாக இருப்பவன் வீதியோரக் கடைகளில் ரொட்டி வியாபாரியாக இருப்பவனிடமிருந்து தம் செல்வத்தைப் பெற்றுக்கொள்வானா?

ஓரியண்டலிஸ்டுகள் மீண்டும் மீண்டும் இதே விசயத்தையே கூறு கிறார்கள். அவர்களின் இந்த நிலைப்பாடு நமக்குச் சிரிப்பையே வர வழைக்கிறது. இவ்வாறு அவர்கள் பிதற்றிக் கொண்டிருக்கும்வரை அவர் களால் உண்மையை அடைய முடியாது என்றே கருதுகிறோம்.

> அல்லாஹ்வின் வசனங்களை நம்பாதவர்களுக்கு அல்லாஹ் ஒரு போதும் நேர்வழி காட்ட மாட்டான். அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனை உண்டு. அல்லாஹ்வின் வசனங்களை நம்பாதவர்கள் தாம் அவன்மீது பொய்யைப் புனைவார்கள். அவர்கள்தாம் பொய்யர்கள். (104-105)

இந்தப் பொய்யர்கள்மீது திருக்குர்ஆன் கடினத்தைப் பிரயோகிக்கிறது. ஏனெனில், அவர்களின் பொய் அப்பட்டமானது. அவர்களின் அவதூறு மடத்தனமானது.

மறுமைநாள்வரை யாருமே அடைய முடியாத சிகரத்தில்தான் குர்ஆன் நிலைத்திருக்கும்.

குழப்பம் என்னும் சிறையில் அகப்பட்டுத் துன்பம் அனுபவித்துக் கொண்டிருக்கும் பலவீனர்களுக்குத் திருக்குர்ஆன் மன்னிப்பை வழங்கு கிறது. அவர்கள் நிர்ப்பந்தத்தின் காரணமாக நிராகரிப்பின் வார்த்தை யைக் கூறிவிட்டாலும் அவர்கள்மீது எந்தக் குற்றமும் இல்லை:

> ஒருவர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டபின்னர் நிர்ப் பந்தத்துக்குள்ளாகி -அவரது உள்ளம் நம்பிக்கையைக் கொண்டு திருப்தியடைந்த நிலையில்- அவனை நிராகரித்துவிட்டால் அவர் மீது எவ்வித குற்றமும் இல்லை. ஆயினும், யார் முழுமனதோடு நிராகரித்துவிட்டாரோ அத்தகையவர்கள் மீது அல்லாஹ்வின் கோபம் உண்டாகும். அவர்களுக்குக் கடுமையான வேதனையும் உண்டு. ஏனெனில், அவர்கள் மறுமைக்குப் பகரமாக இவ்வுலக வாழ்வைத் தேர்ந்தெடுத்துக்கொண்டார்கள். நிச்சயமாக நிராகரிக்கும் மக்களுக்கு அல்லாஹ் நேர்வழி காட்ட மாட்டான். (106,107)

❖ ❖ ❖

இந்த அத்தியாயம், இறைவன் மனிதர்களுக்கு அளித்த அருட் கொடைகளை எண்ணிக்கொண்டே செல்கிறது. அந்த அருட்கொடை

களில் தலையாயது இந்தக் குர்ஆன்தான். ஆகவே, அவர்கள் இந்த அருட் கொடையை நன்றியுடனும் ஈமானுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

ஆனாலும் சிலர் நன்றிகெட்டத்தனமாக நடந்து கொள்கிறார்கள். நேரான பாதையை விட்டுவிட்டுத் தவறான பாதைகளில் செல்கிறார்கள். அவர்களின் முடிவு என்னவாகும்?

> அல்லாஹ் ஓர் ஊர் மக்களை உதாரணமாகக் கூறுகிறான். அவர்கள் அமைதியாகவும் நிம்மதியாகவும் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக் கான வாழ்வாதாரப் பொருள்கள் அனைத்து இடங்களிலிருந்தும் தாராளமாகக் கிடைத்துக் கொண்டிருந்தன. ஆனால், அவர்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நன்றிகெட்ட விதத்தில் நடந்துகொண்டார்கள். ஆகவே, அவர்களின் செயல்களினால் அல்லாஹ் அவர்களைப் பசியையும் பயத்தையும் சுவைக்கும்படி செய்தான். (112)

நன்றிசெலுத்துவது அருட்கொடைகளைத் தக்கவைக்கிறது. ஈமான் தான் அதனைப் பாதுகாக்கிறது.

மனிதர்களில் சிலர் தவறிழைக்கிறார்கள். பின்னர், நேர்வழியின் பக்கம் திரும்பிவிடுகிறார்கள். அல்லாஹ் பாவங்களை மன்னிக்கக்கூடியவன். பாவமன்னிப்புக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளக்கூடியவன். அவன் தங்களின் ஈமானை ஒருபோதும் வீணாக்க மாட்டான் அல்லது தங்களின் பாதையை அடைத்துவிட மாட்டான் என்று பாவமன்னிப்பு கோருப வர்கள் உறுதியாக நம்ப வேண்டும். 'அறியாமையால் பாவங்கள் புரிந்து விட்டு, பின்னர் மன்னிப்பு கோரி, அதற்குப் பின் தம்மைத்தாமே சீர் படுத்திக்கொண்டவர்களுக்காக உமது இறைவன் பெரும் மன்னிப்பாள னாகவும் இணையிலாக் கிருபையாளனாகவும் இருக்கிறான். (119)'

சத்தியத்துக்கு ஒரு சமூகமாகத் திகழக்கூடிய ஒரு மனிதர் மிக அவசியம் அல்லது, வேறு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் தீரம்மிக்க இளைஞர்கள் மிக அவசியம். ஒரு கவிஞர் கூறுவதைப் பாருங்கள்.

> 'ஆயிரம் மனிதர்கள் ஒரு மனிதனைப் போன்றவர்களாகவும் ஒரு மனிதர் ஆயிரம் மனிதர்களைப் போன்றவராகவும் ஆகிவிடு கிறார்கள் சந்தர்ப்பம் வாய்த்துவிட்டால்.'

இப்றாஹீம் தனித்த சமூகமாகத் திகழ்ந்தார். முஹம்மதும் அவரைப் போன்றே தனித்த சமூகமாகத் திகழ்ந்தார். ஒரு கவிஞர் கூறுகிறார்.

*‘அவர் தனியாக இருந்தாலும் அவரது கண்ணியத்தின் காரணமாக ஒரு படையோடு நிற்பதைப் போலவும் ஒரு கூட்டத்தோடு நிற்பதைப் போலவும் நீர் காண்பீர்.’*

*இஸ்லாம் இயற்கை மார்க்கமாகும். அது வானத்திலிருந்து அருளப் பட்ட முந்தைய மார்க்கங்களை உண்மைப்படுத்துகிறது. அவற்றில் புகுத்தப்பட்ட இடைச்செருகல்களை, திரிபுகளை அடையாளப்படுத்தி அவற்றைப் பிரித்துக் காட்டுகிறது.*

*நான் பின்வரும் வசனத்துக்குப் பழ்ல் இப்னு ஆஷூறா அளித்த விளக்கத்தை ஆமோதிக்கிறேன்: ‘இப்றாஹீமின் விசயத்தில் கருத்து வேறுபாடு கொண்டவர்களுக்குத்தான் சனிக்கிழமை தடைவிதிக்கப் பட்டிருந்தது. (124)’ அவர்கள் இப்றாஹீமின் விசயத்தில் கருத்து வேறுபாடு கொண்டு அவருடைய வாழ்க்கையையும் மார்க்கத்தையும் விட்டுத் தூர மானார்கள். அவர்கள் அவர் கூறாத வேறு போதனைகளையும் பழக்கங் களையும் ஏற்படுத்திக்கொண்டார்கள்.*

*பின்னர் அத்தியாயம், ‘இஸ்லாமிய அழைப்பு என்பது உரையாடல், ஆதாரங்களைக் கொண்டு திருப்திப்படுத்துதல், ஆட்சேபணைகளுக்குப் பதிலளித்தல் ஆகியவற்றைக் கொண்டுதான் நிலைபெறுகிறது. அது கட்டாயப்படுத்தி தன்னை ஒருபோதும் மக்களிடம் திணிக்காது’ என்ற விதியோடு நிறைவுபெறுகிறது:*

*ஞானத்துடனும் அழகிய அறிவுரையுடனும் உம் இறைவனின் பாதையின் பக்கம் அழைப்பீராக! அவர்களுடன் அழகிய முறை யில் விவாதம்புரிவீராக! நிச்சயமாக உம் இறைவன் தன் பாதையை விட்டும் விலகிவிட்டவர்களையும் நேர்வழியில் செல்பவர்களை யும் நன்கறிவான். (125)*

*திருக்குர்ஆனையும் நபிமொழியையும் நன்கு புரிந்துகொண்டவரால், நோயையும் அதற்குரிய நிவாரணத்தையும் அறிந்தவரால்தான் இந்தப் பணியைச் செய்ய முடியும்.*

❖ ❖ ❖

அத்தியாயம் 17

# அல்இஸ்றாஃ

(இரவுப் பயணம்)

*இந்த அத்தியாயத்தின் முதல் வசனம் நபியவர்கள் மிஃறாஜ் பயணத்துக்கு அழைத்துச்செல்லப்பட்ட சம்பவத்தைக் குறிக்கிறது. பின்னர் அத்தியாயம் வரலாற்றின் பக்கம் திரும்பி இஸ்றாயீலின் மக்களையும் ஃபலஸ்தீனில் அவர்களுக்கு ஆட்சியதிகாரம் வழங்கப்பட்டதையும் நினைவுகூருகிறது.*

*மார்க்க விவகாரங்களுக்கும் நாட்டின் விவகாரங்களுக்கும் வழிகாட்டும் தவ்றாத் என்னும் வேதம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. அவர்களிடமும் அவர்களைப் போன்றவர்களிடமும் எதிர்பார்க்கப்படும் விசயம், அவர்கள் ஆட்சியதிகாரத்தைப் பெற்றால் அது ஒழுக்கமற்ற, அநீதியான ஆட்சியாக இல்லாமல் சீரான, நீதிமிக்க ஆட்சியாக இருக்க வேண்டும் என்பதுதான். ஃபிர்அவ்னுடைய ஆட்சியின் கீழ் கடுமையான சித்திரவதைகளை, துன்பங்களை அனுபவித்த இஸ்றாயீலின் மக்கள் தங்களுக்கு ஆட்சியதிகாரம் வழங்கப்பட்டவுடன் சிறிது காலத்துக்குள்ளேயே முந்தைய ஃபிர்அவ்ன்களைப் போன்றே ஆட்சிசெய்தார்கள். பூமியில் குழப்பம்செய்தார்கள்.*

*இந்த அத்தியாயம் அல்இஸ்றாஃ என்று சொல்லப்படுவது போன்று பனீ இஸ்றாயீல் என்றும் சொல்லப்படுகிறது.*

*ஒழுக்க வீழ்ச்சியும் நிர்வாகத் திறமையின்மையும் ஓர் ஆட்சியின் அழிவுக்கும் மற்றவர்கள் அதனைக் கைப்பற்றுவதற்கும் காரணமாக அமைகின்றன என்பதையும் குழப்பம்செய்பவர்கள் தண்டிக்கப்பட்டே தீருவார்கள் என்பதையும் திருக்குர்ஆன் தெளிவுபடுத்துகிறது. அல்லாஹ் கூறுகிறான்:*

*நாம் இஸ்றாயீலின் மக்களுக்கு வேதத்தில், 'நீங்கள் உலகத்தில் இரு முறை குழப்பம்செய்வீர்கள், பெரும் அட்டூழியம் புரிவீர்கள்.' என்று அறிவித்தோம். அவற்றில் முதலாவது வாக்குறுதி வந்தபோது நாம் உங்களுக்கு எதிராக மிகவும் பலம் வாய்ந்த நம் அடியார்களை அனுப்பினோம். அவர்கள் வீடுகளுக்குள் புகுந்தார்கள். வாக்குறுதி நிறைவேறியது.* (4,5)

இங்கு வேதம் என்பது நிலையான பதிவேட்டைக் குறிக்கிறது.

ஓர் ஆட்சியின் விவகாரங்களைச் சீர்குலைக்கும் அம்சங்கள் அதன் நாட்டையும் சீர்குலைத்து அதன் சுதந்திரத்தைப் பறித்துவிடுகின்றன.

உமக்கு ஆட்சி வழங்கப்பட்டது. நீர் அதனைச் சிறந்த முறையில் நிர்வகிக்கவில்லை. ஆட்சியைத் திறம்பட நடத்தாதவர் பதவி விலக்கப் படுவார்.

வஹீயின் அடிப்படையில் நிலைபெறும் ஆட்சியில் குழப்பத்தையும் அநியாயத்தையும் எண்ணிக்கூடப் பார்க்க முடியாது. ஆகவே, அதற்கான விளைவும் கடுமையாகவே இருக்கும். நாட்டில் குழப்பமும் அநியாயமும் மிகுந்துவிட்டால் அது மற்ற நாடுகளின் ஆக்கிரமிப்புக்குள்ளாகி இழி வடையும். அது தன் தவறுகளிலிருந்து தன்னைத் திருத்திக்கொண்டு மீண்டும் நேர்வழியின் பக்கம் திரும்பினால் இழந்த கண்ணியத்தையும் அதிகாரத்தையும் மீண்டும் பெறும்: 'பின்னர் அவர்களுக்கு எதிராக உங்களுக்கு நாம் வெற்றியளித்து, செல்வங்களாலும் மக்களாலும் உங்க ளுக்கு உதவிபுரிந்து உங்களைப் பெரும் கூட்டத்தினராக ஆக்கினோம். (6)'

நிகழ்ந்தது துன்பத்தை அகற்றும் அருட்கொடை அல்ல. மாறாக, அது புதியதொரு சோதனையாகவே இருந்தது. சமூகங்கள் விழிப்படைந்து தம்மைத்தாமே திருத்திக்கொள்ள வேண்டும். 'நீங்கள் நன்மைசெய்தால் அது உங்களுக்குத்தான் நல்லது. நீங்கள் தீமைசெய்தால் அது உங்களுக்கே கேடாக அமையும். (7)'

ஆனால் யூதர்கள் நோய்க்கு அடிமையாகிவிட்டார்கள். அவர்களின் நிலைமை சீரடைந்தபோதெல்லாம் மீண்டும் அவர்கள் அநியாயத்தின் பக்கமும் வீணானவற்றின் பக்கமும் திரும்பினார்கள். மீண்டும் அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். மீண்டும் அவர்கள் பாவமன்னிப்பு கோரினார்கள். 'நீங்கள் மீண்டும் அதையே செய்தீர்களானால் நாமும் அதையே செய் வோம். நிராகரிப்பாளர்களுக்கு நாம் நரகத்தைச் சிறைச்சாலையாக ஆக்கி யுள்ளோம். (8)'

*வரலாறு கூறுகிறது: அவர்கள் முதன்முறை குழப்பம்செய்தபோது ஆஷூரின் மூலமாக அவர்களுக்கு அழிவு வந்தது. சுலைமான் கட்டிய ஆலயம் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது.*

*பின்னர், மீண்டும் ஒருமுறை அவர்கள் ஆட்சியைப் பெற்றார்கள். மீண்டும் குழப்பம்செய்தார்கள். ரோமர்கள் அவர்கள்மீது தாக்குதல் தொடுத்தார்கள். மீண்டும் அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். அதன் பிறகு நீண்ட காலம்வரை அவர்கள் ஆட்சியின்றியே நீடித்தார்கள்.*

*பின்னர், முஸ்லிம்களும் யூதர்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்ற வேண்டும் என்று அல்லாஹ் நாடிவிட்டான். வஹீயின் அடிப்படையில் அமைந்த ஆட்சியைத் தங்கள் மனஇச்சைக்கேற்ப மாற்றினார்கள். இந்த முறை திருக்குர்ஆனைக் கைவிட்டு உலக மோகத்தில் மூழ்கிவிட்ட அறபுகளின் பூமி ஆக்கிரமிக்கப்பட்டு யூதர்களுக்கென ஒரு நாடு உருவாக்கப்பட்டது.*

*இன்று நிலைபெற்றுள்ள மோதல் விசித்திரமானது. ஏனெனில், அது வஹீயின் போதனைகளைக் கைவிட்டு மனஇச்சைகளுக்கு அடிமையாகிவிட்ட முஸ்லிம்களுக்கும் தவ்றாத்தின் கொடியை உயர்த்திப் பிடிக்கும் யூதர்களுக்கும் மத்தியில் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. வேறு வார்த்தைகளில் கூற வேண்டுமானால், குறைவான உதவியாளர்களைக் கொண்ட வஹீக்கும் திரிக்கப்பட்ட, சிதைக்கப்பட்ட வஹீயைக் கொண்டுள்ளவர்களுக்கும் மத்தியில் மோதல் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. 'நாம் உங்களில் சிலரைச் சிலருக்குச் சோதனையாக ஆக்கியுள்ளோம். நீங்கள் பொறுமையைக் கடைப்பிடிப்பீர்களா? உம் இறைவன் அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறான். (25:20)'*

❖ ❖ ❖

*மற்ற அத்தியாயங்களில் இல்லாமல் இந்த அத்தியாயத்தில் மட்டும் காணப்படுகின்ற ஓர் அம்சத்தின் பக்கம் நாம் திரும்புவோம். அது, குர்ஆன் என்ற வார்த்தை இந்த அத்தியாயத்தில் மட்டும் பதிமூன்று முறை இடம் பெற்றுள்ளது. மற்ற அத்தியாயங்களில் இவ்வாறு இடம்பெறவில்லை. யூதர்களுக்கும் நமக்கும் மத்தியில் நிலைபெற்ற மோதலின் இயல்புக்கும் இதற்கும் ஏதேனும் தொடர்பு இருக்கிறதா? இப்போது அந்த வசனங்களை இங்கு நாம் குறிப்பிடுகிறோம்:*

- ❖ *நிச்சயமாக இந்தக் குர்ஆன் மிகவும் நேரான வழியைக் காட்டுகிறது. நற்செயல் புரியும் நம்பிக்கையாளர்களுக்குப் பெரும் கூலி உண்டு என நற்செய்தியும் கூறுகிறது. (9)*

- ❖ *அவர்கள் சிந்தித்துணரும் பொருட்டு நாம் இந்தக் குர்ஆனில் பல்வேறு விதங்களில் தெளிவுபடுத்தியுள்ளோம். ஆனாலும், அது அவர்களின் வெறுப்பைத்தான் அதிகப்படுத்துகிறது.* (41)

- ❖ *அவர்கள் புரிந்துகொள்ள முடியாதவாறு அவர்களின் உள் ளங்கள்மீது திரையைப் போட்டு, அவர்களின் காதுகளில் அடைப்பை ஏற்படுத்திவிடுகிறோம். நீர் குர்ஆனில் உமது ஒரே இறைவனை மட்டும் கூறும்போது அவர்கள் வெறுப்போடு புறங்காட்டிச் சென்றுவிடுகிறார்கள்.* (46)

- ❖ *நீர் குர்ஆனை ஓதும்போது உமக்கும் மறுமையை நம்பா தோருக்கும் மத்தியில் மறைவான ஒரு திரையை நாம் ஏற் படுத்திவிடுகிறோம்.* (45)

- ❖ *நாம் உமக்குக் காண்பித்த காட்சியும் குர்ஆனில் சபிக்கப்பட்ட மரமும் மக்களைச் சோதிப்பதற்காகவேயாகும். நாம் அவர் களை அச்சுறுத்துகிறோம். ஆனால், அது அவர்களின் அட்டூழி யத்தையே அதிகரிக்கிறது.* (60)

- ❖ *அதிகாலையில் குர்ஆன் ஓதுவதையும் கடைப்பிடிப்பீராக. நிச்சயமாக அதிகாலையில் குர்ஆன் ஓதுவது சாட்சி கூறக்கூடிய தாக இருக்கிறது.* (78)

- ❖ *நம்பிக்கையாளர்களுக்கு நிவாரணியாகவும் அருளாகவும் உள்ள வற்றையே நாம் குர்ஆனில் அருளுகிறோம். ஆயினும், அது அநியாயக்காரர்களுக்கு இழப்பையே அதிகப்படுத்துகிறது.* (82)

- ❖ *நீர் கூறும், 'இதைப் போன்ற ஒரு குர்ஆனைக் கொண்டுவரு வதற்காக மனிதர்கள், ஜின்கள் அனைவரும் ஒன்றுதிரண்டா லும் அவர்களால் இதைப் போன்ற ஒன்றைக் கொண்டுவர முடியாது, அவர்கள் ஒருவருக்கொருவர் உதவியாளர்களாக இருந்தாலும் சரியே!'* (88)

- ❖ *நாம் இந்தக் குர்ஆனில் மக்களுக்காகப் பல்வேறு வகையான உதாரணங்களைப் பல விதமாகக் கூறியுள்ளோம். ஆயினும், மக்களில் பெரும்பாலோர் நிராகரிப்பிலேயே நிலைத்திருக்கி றார்கள்.* (89)

- ❖ *நீர் மனிதர்களுக்குச் சிறிது சிறிதாக ஓதிக்காண்பிக்க வேண்டும் என்பதற்காகவே குர்ஆனைப் படிப்படியாக அருளியுள்ளோம்.* (106)

இந்த அத்தியாயத்தில் றூஹ் -ஆன்மா- என்ற பெயராலும் குர்ஆன் குறிப்பிடப்பட்டுள்ளது: ‘அவர்கள் ஆன்மாவைப் பற்றி உம்மிடம் கேட்கிறார்கள். நீர் கூறும், ஆன்மா என் இறைவனின் கட்டளைப்படி இருக்கிறது. அது குறித்து சொற்ப அறிவுதான் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (85)’

றூஹ் என்பதற்கு வேறு பொருள் கொள்வதைவிட இதுவே நெருக்கமானது. அதே சமயம், வேறு பொருள் கொள்வதற்கான வாய்ப்பும் உள்ளது.

> நாம் குர்ஆனைச் சத்தியத்துடனே அருளியுள்ளோம். அது சத்தியத்துடன்தான் அருளப்பட்டுள்ளது. உம்மை நற்செய்தியாளராகவும் எச்சரிக்கையாளராகவுமே அனுப்பியுள்ளோம். (105)

இந்த அத்தியாயம் இந்த விசயத்தால் தனித்துவமடைகிறது. ஆரம்பத்தில் ஒரு சமூகத்தை உருவாக்கிய திருக்குர்ஆன் மீண்டும் ஒரு சமூகத்தை உருவாக்குவதன் நிமித்தம் முஸ்லிம்களின் உள்ளத்திலிருந்து உலக மோகத்தையும் மரண பயத்தையும் நீக்குவதற்கும் சத்தியத்துக்காகத் தியாகம்செய்யும், அல்லாஹ்வின் சந்திப்பை விரும்பும் உள்ளங்களை அவர்களுக்கு வழங்குவதற்கும் அது ஆற்றல் பெற்றதுதான் என்பதை அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை.

சில சமயங்களில் அறியாமை ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால், அறிந்துகொண்டே அறியாததுபோன்று நடிப்பதும் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாமல் கர்வம் கொள்வதும் அல்லாஹ்வின் கோபத்தைப் பெற்றுத் தரக்கூடியவையாகும்.

கடந்தகாலத்தில் சிலை வழிபாட்டாளர்களை அல்லாஹ் இஸ்றாயீலின் மக்களின் மீது சாட்டினான். ஏனெனில், அவர்கள் தங்களின் வேதத்துக்கு மதிப்பளிக்க வேண்டிய முறைப்படி மதிப்பளிக்கவில்லை. முஸ்லிம்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட திருக்குர்ஆனுக்கு மதிப்பளிக்க வேண்டிய முறைப்படி மதிப்பளிக்காமல் அதனை வீணாக்கியபிறகு அல்லாஹ் இஸ்றாயீலின் மக்களை அவர்கள்மீது சாட்டிவிட்டான்.

அவர்கள் திரும்புவதற்கான பாதை தெளிவானது. அவர்கள் திருக்குர்ஆன் என்னும் தூய்மையான ஊற்றிலிருந்தே தங்களுக்கான கொள்கைகளையும் சட்டங்களையும் ஒழுக்கங்களையும் விவகாரங்களையும் பெற வேண்டும். அவற்றைக் கொண்டு முஸ்லிம்கள் தங்களைத் தாங்களே புதுப்பித்துக்கொள்ள வேண்டும். அவர்கள் வஹீயின் அடிப்படையில் வாழும் சமூகத்தினராகத் தங்களை ஆக்கிக்கொள்ள வேண்டும்.

*யார் சத்தியத்தை விட்டுவிட்டுப் பொய்யைப் பின்பற்றுவாரோ அவர் தாம் விதைத்ததையே அறுவடைசெய்வார். ஒவ்வொன்றுக்கும் ஒரு குறிப்பிட்ட நேரம் இருக்கிறது. மனிதன் ஏற்றுக்கொண்டாலும் அல்லது ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அதனைப் பெற்றே தீர வேண்டும்.*

*மனிதனால் ஒரு நாளில் வளர்ந்துவிட முடியாது. ஒரு மாதத்தில் ஒரு நாகரிகம் தோன்றிவிடாது. கால ஓட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட விதி களின்படி ஒவ்வொன்றும் தமக்கானவற்றைப் பெற்றுக்கொள்கிறது.*

*மனிதன் என்னதான் பிரார்த்தனைசெய்தாலும் அல்லாஹ் உலகில் அமைத்த நியதிகளைப் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். 'நன்மையை வேண்டி பிரார்த்திப்பது போல மனிதன் தீமையை வேண்டி பிரார்த்திக்கிறான். மனிதன் மிகவும் அவசரக்காரனாக இருக்கி றான்.* (11)'

❖ ❖ ❖

*அடுத்து வரக்கூடிய வசனம் அவை இறைவனால் அமைக்கப்பட்ட விதிகள் என்பதையும் அவற்றைப் பேண வேண்டிய அவசியத்தையும் தெளிவுபடுத்துகிறது:*

> *நாம் இரவையும் பகலையும் இரு சான்றுகளாக்கியுள்ளோம். பின்னர், இரவு என்னும் சான்றை நீக்கி பகலின் சான்றைப் பிரகாசமாக்கி யுள்ளோம். அது, நீங்கள் உங்கள் இறைவனின் அருளைத் தேடிக்கொள்வதற்காகவும் ஆண்டுகளின் எண்ணிக்கை யையும் கணக்கையும் அறிந்துகொள்வதற்காகவும்தான். நாம் ஒவ் வொன்றையும் தெளிவாக விவரித்துவிட்டோம்.* (12)

*கால ஓட்டத்தில் யூதர்கள் ஆட்சியைக் கைப்பற்றினார்கள். பின்னர் இழந்தார்கள். உயர்வும் தாழ்வும் மாறிமாறி அவர்களைத் தழுவிக் கொண்டன. இதுதான் இவ்வுலகின் இயல்பு. அவர்களைத் தவிர மற்றவர் களும் இப்படித்தான் இருப்பார்கள்.*

*ஆனாலும், மனிதன் முதலில் அவனைக் குறித்தே விசாரிக்கப்படு வான். அவன் பக்குவமடைந்துவிட்டால் நேரான வழியைக் கைக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யவில்லையெனில் அவன் வழிதவறி விடு வான். 'நேரான வழியில் செல்பவர் தமது நன்மைக்காகவே நேரான வழியில் செல்கிறார். வழிதவறிச் செல்பவர் தமக்குத்தாமே தீங்கிழைத் துக் கொள்கிறார். எவரும் அடுத்தவரின் சுமையைச் சுமக்க மாட்டார்* ...(15)'

*இதுதான் தனிமனிதர்களுக்கும் அமைப்புகளுக்கும் உரிய விதிமுறை. இங்கு திருக்குர்ஆன், ஆடம்பரம்தான் ஒரு சமூகத்தில் வெளிப்படும்*

குழப்பங்களில் முதலாவதான குழப்பம் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. சொகுசாக வாழ்பவர்கள் நோய்க்கூறுகளைக் கொண்டிருக்கிறார்கள். அவை அவர்களைக் கொஞ்சம்கொஞ்சமாகப் படுகுழியில் வீழ்த்திவிடு கின்றன.

> நாம் ஓர் ஊரை அழிக்க நாடினால் அங்கு சொகுசாக வாழ்பவர் களுக்குக் கட்டளையிடுவோம். அங்கு அவர்கள் இறைவனின் கட்டளைக்கு மாறாகச் செயல்படுவார்கள். அப்போது அவர்களின் மீது வாக்கு உறுதியாகிவிடும். ஆகவே, அதனை அடியோடு அழித்து விடுகிறோம். (16)

மார்க்க அடிப்படையில் நிலைபெறும் சமூகம் தம்மைத் தாமே பாது காத்துக்கொள்ளும். அது ஆடம்பரம், இறுகிய உள்ளம் ஆகியவற்றை விட்டுத் தம்மை விலக்கிக்கொள்ளும்.

மறுமையைக் குறித்த அவர்களின் நிலைப்பாடு பின்வருமாறு தெளி வாகிவிட்டால் அவர்களுக்கானவை உறுதியாகிவிடும்: 'யார் விரைவாகக் கிடைக்கக் கூடியதை விரும்புவாரோ, நாம் நாடியவர்களுக்கு நாம் கொடுக்க நாடியதைக் கொடுத்து விடுவோம். பின்னர், அவருக்காக நரகத்தை ஏற்படுத்தியுள்ளோம். இழிவுக்குள்ளாகி, சபிக்கப்பட்டவராக அவர் அதில் நுழைவார். (18)'

'யாருக்கு நாம் நாடுகிறோமோ அவருக்கு நாம் நாடியதை ...' எவ்வளவு அற்புதமான சொல்லாடல் இது! அல்லாஹ்வை யாரும் மிகைக்க முடி யாது. அவனுடைய நாட்டத்துடனே தவிர அவனிடமிருந்து எதையும் பெற முடியாது. பொய்யான மார்க்க ஈடுபாடு அவனிடத்தில் பயனளிக்காது. அப்படிப்பட்டவர்களுக்கு அவன் எதையும் கொடுக்க மாட்டான். அவன் கூறுகிறான்: 'நூஹுக்குப் பின்னர் நாம் எத்தனையோ சமூகங்களை அழித்துள்ளோம். தன் அடியார்களின் பாவங்களை அறிந்துகொள்வதற்கும் பார்ப்பதற்கும் உமது இறைவனே போதுமானவன். (17)'

நபியவர்கள் தூதராக அனுப்பப்படுவதற்கு முன்னால்வரை இருந்த முந்தைய சமூகங்கள்குறித்து பேசப்படுகிறது. அதற்குப் பிறகு அத்தியாயம் குற்றவாளிகள் அடைந்த விளைவுகளைக் குறித்து பேசுகிறது. 'எந்த ஊரையும் நாம் மறுமைநாளுக்கு முன்பே அழிக்காமல் அல்லது கடும் வேதனையால் பிடித்துக்கொள்ளாமல் விட்டுவிடுவதில்லை. இது பதி வேட்டில் எழுதப்பட்டுள்ள விசயமாகும். (58)' இங்கு பதிவேடு என்பது இறைவனிடம் இருக்கின்ற பதிவேடாகும். நமக்கும் மனிதர்கள் அனை வருக்கும் இங்கு பொதுவான எச்சரிக்கை விடுக்கப்படுகிறது.

இந்த விளைவுகளிலிருந்து தப்புவது எப்படி? இந்த அத்தியாயத்தில் அடுத்து வரக்கூடிய இரண்டு பக்கங்களும் அதற்கான அறிவுரைகளையே கொண்டுள்ளன. அவை மனிதர்களைத் தவறுகளிலிருந்து காத்து நேரான பாதையின் பக்கம் இட்டுச்செல்கின்றன. நிகழ்காலத்திலும் எதிர்காலத் திலும் இறைவனின் உதவி அவர்களுக்குக் கிடைப்பதற்கான உத்தர வாதத்தை அளிக்கின்றன.

இந்த அறிவுரைகள் பின்வரும் வசனத்திலிருந்து தொடங்குகின்றன: 'உம் இறைவன் கட்டளையிட்டுள்ளான், நீங்கள் அவனைத் தவிர வேறு யாரையும் வணங்கக் கூடாது. தாய்தந்தையருடன் நல்ல முறையில் நடந்துகொள்ள வேண்டும் ... (23)'

பின்வரும் வசனத்தோடு நிறைவுபெறுகின்றன:

> இவையனைத்தும் இறைவன் உனக்கு அறிவித்துள்ள அறிவார்ந்த விசயங்களாகும். அல்லாஹ்வுடன் வேறு எவரையும் இறைவனாக ஆக்கிக்கொள்ளாதே. அவ்வாறு செய்தால் நீ தூற்றப்பட்டவனாகவும் சபிக்கப்பட்டவனாகவும் நரகத்தில் வீசியெறியப்படுவாய். (39)

தவ்ஹீதைக் கொண்டு தொடங்கிய அறிவுரைகள் தவ்ஹீதைக் கொண்டே நிறைவடைகின்றன. ஏனெனில், அல்லாஹ்வைத் தவிர பிறவற்றின் மீது ஈடுபாடு கொண்ட உள்ளத்தை எந்த விதத்திலும் நம்ப முடியாது. முழுமையான உறுதி முழுமையான தவ்ஹீதோடு இணைக்கப் பட்டுள்ளது.

அல்லாஹ்வை மட்டுமே வணங்க வேண்டும் என்பதுடன் தாய் தந்தையருடன் நல்ல முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்ற கட்டளையும் இடம்பெறுகிறது. முதியவர்களை மேற்கத்திய சமூகங்கள் எவ்வாறு அணுகுகின்றன என்பதை ஒருவர் கவனித்துப்பார்த்தால் இந்த அறிவுரையின் பெறுமதியை உணர்ந்துகொள்வார்.

வீடுகள் அவர்களுக்கு நெருக்கடியளிப்பவையாக மாறிவிட்டன. அவர் கள் தங்களின் பிள்ளைகளை விட்டுவிட்டு, தங்களுக்கெனக் கட்டப் பட்ட முதியோர் இல்லங்களில் அடைக்கலம் புகுந்துவிடுகிறார்கள். இறுதியில் அங்கேயே மரணித்தும் விடுகிறார்கள்.

அவர்களுக்கு வாழ்க்கையைக் கற்றுக்கொடுத்த தலைமுறை உபகாரம் செய்வதைக் கற்றுக்கொடுக்கவில்லை. அவர்கள் காட்டு விலங்குகளைப் போன்று நாட்டில் வாழ்கிறார்கள். முதுமையை அடைந்துவிட்டால் தங்களுக்கெனக் கட்டப்பட்ட இல்லங்களில் தஞ்சமடைந்துவிடுகிறார்கள். இவ்வாறு அவர்களிடம் சுயநலம் ஒரு விதியாகவே ஆகிவிட்டது.

*விசித்திரம் என்னவென்றால், தங்களின் பிள்ளைகளைப் பக்குவ மடையும்வரை பெற்றோர்கள்தாம் வளர்க்கிறார்கள். அவர்கள் பக்குவ மடைந்துவிட்டால் தங்களுக்கான பாதையில் தனித்தனியாகவே பயணிக் கிறார்கள். விழாக்கள், நிகழ்ச்சிகள் தவிர வேறு எதுவும் அவர்களை ஒன்றுசேர்ப்பதில்லை.*

*ஆனால், முஸ்லிம் சமூகம் தனக்கெனத் தனித்துவமான அடையா ளங்களைக் கொண்டுள்ளது. தாய்தந்தையர் குறித்து அல்லாஹ் அதற்குக் கூறுகிறான்: 'அவர்களுக்கு முன்னால் கருணையுடன் பணிவு என்னும் சிறகைத் தாழ்த்துவீராக! இறைவா, சிறு பருவத்தில் அவர்கள் என்னைப் பராமரித்ததைப் போல அவ்விருவரின் மீதும் நீ கருணை காட்டுவாயாக என்று பிரார்த்திப்பீராக.* (24)' *உறவினர்களைக் குறித்து அதனிடம் கூறப் படுகிறது: 'உறவினர்களுக்கும் ஏழைகளுக்கும் வழிப்போக்கர்களுக்கும் அவரவரின் உரிமையை வழங்குவீராக. ஆனால், வீண்செலவு செய்யாதீர்.* (26)'

*இங்கு வீண்செலவு என்பது ஆடம்பரப் பொருள்களைப் பயன்படுத்து வதில் வரம்புமீறுவதாகும். அவ்வாறு வரம்புமீறுவது அவனிடத்தில் உள்ளவற்றை அழித்துவிடும். நெருங்கிய, தூரமான உறவினர்களுக்குக் கொடுப்பதற்கு எதுவும் இல்லாமல் அவனை ஆக்கிவிடும்.*

*பின்வரும் வசனம் இந்தப் பொருளையே உறுதிப்படுத்துகிறது: 'உமது கையைக் கழுத்துடன் கட்டிக்கொள்ளாதீர். அதனை முழுவதும் விரித்தும் விடாதீர். அவ்வாறு செய்தால் நீர் தூற்றப்பட்டவராக, முடக்கப்பட்டவராக ஆகிவிடுவீர்.* (29)'

*மக்கள் தொகையைக் குறைப்பதால் மூடச் சமூகத்துக்கு எந்தப் பயனும் இல்லை. அல்லாஹ் பரப்பியுள்ள பூமியின் பொக்கிஷங்களைத் தோண்டியெடுக்க வேண்டியதே மனிதர்கள் செய்ய வேண்டியது. செயல் படாமல் சோம்பிக்கிடப்பவர்களுக்கு வானம் தங்கத்தையோ வெள்ளி யையோ மழையாகப் பொழிவிப்பதில்லை. 'வறுமைக்கு அஞ்சி உங்கள் குழந்தைகளைக் கொன்றுவிடாதீர்கள். அவர்களுக்கும் உங்களுக்கும் நாமே உணவளிக்கிறோம் ...* (31)'

*திருக்குர்ஆன் விபச்சாரத்தைத் தடைசெய்கிறது. ஆனால், இன்று மேற்கத்திய கலாச்சாரம் அதனை அன்றாட நிகழ்வாகக் காண்கிறது. அவர்களிடத்தில் மன அழுத்தத்திலிருந்து விடுபடுவதற்கான ஒரு வழியே அது. சம்பந்தப்பட்ட இருவரும் சம்மதத்துடன் ஈடுபடும்வரை அவர்கள் சட்டரீதியாகத் தண்டிக்கப்படக் கூடாது என்று அது கூறுகிறது. அல்லாஹ்*

*கூறுகிறான்: ‘விபச்சாரத்தின் அருகில்கூடச் செல்லாதீர்கள். அது மானக் கேடானதாகவும் தீய வழியாகவும் இருக்கிறது. (32)’*

*கொலைசெய்வதை அனைவரும் ஒரு குற்றமாகக் கருதினாலும் பல நாடுகள் அதற்காக மரண தண்டனை விதிப்பதைத் தடைசெய்துவிட்டன. இது கொலைக் குற்றங்கள் நடைபெறுவதை இன்னும் அதிகப்படுத்தவே செய்யும்.*

> *அல்லாஹ் தடைசெய்துள்ள எந்த உயிரையும் அநியாயமாகக் கொன்றுவிடாதீர்கள். அநியாயமாகக் கொல்லப்பட்டவரின் வாரிசுக்கு நாம் அதிகாரமளித்துள்ளோம். ஆகவே, அவர் கொலை செய்வதில் வரம்புமீறிவிட வேண்டாம். நிச்சயமாக அவர் உதவி செய்யப்படுவார். (33)*

*பின்னர் அல்லாஹ், அநாதைகளின் செல்வங்களை உரிய முறையில் அணுகும்படியும் வாக்குறுதிகளை நிறைவேற்றும்படியும் அளவையிலும் நிறுவையிலும் மோசடிசெய்யாதிருக்கும்படியும் கட்டளையிடுகிறான்.*

*பின்னர் ஒவ்வொரு மனிதனும் அவனுடைய பார்வை, செவிப்புலன், உள்ளம்குறித்தும் அவனுக்கு வழங்கப்பட்ட ஒவ்வொன்றைக் குறித்தும் விசாரிக்கப்படுவான் என்றும் அல்லாஹ் கூறுகிறான். ஆகவே, அவன் மனம்போன போக்கில் செயல்பட்டுவிடக் கூடாது. ‘உனக்கு அறிவு இல்லாத விசயத்தைப் பின்தொடராதே. நிச்சயமாகச் செவிப்புலன், பார்வை, உள்ளம் ஆகிய ஒவ்வொன்றுக்காகவும் மனிதன் விசாரிக்கப்படுவான். (36)’*

*மக்கள் தங்களிடம் வருகின்ற புரளிகளையெல்லாம் நம்பாமல், பரப்பாமல் இருந்தால் பல்வேறு தீங்குகளைவிட்டும் தங்களைக் காத்துக் கொள்ள முடியும்.*

*இறுதியாக, பூமியில் ஆணவம் கொண்டு திரிவதைக் குர்ஆன் தடை செய்கிறது: ‘பூமியில் ஆணவம் கொண்டு திரியாதே. உன்னால் பூமியைப் பிளந்துவிடவும் முடியாது. மலைகளின் அளவுக்கு உயர்ந்துவிடவும் முடியாது. (37)’*

*இந்த அறிவுரைகளை நம்பிக்கை கொண்ட தனிமனிதனால், நம்பிக்கை கொண்ட சமூகத்தால், நல்ல நாகரிகத்தால் நிலைநாட்ட முடியும். இந்தப் பண்புகளைப் பற்றிக்கொண்ட எந்தச் சமூகத்தையும் அல்லாஹ் தோல்வியடையச்செய்ய மாட்டான்.*

*இந்த அறிவுரைகளுக்குப் பிறகு அல்லாஹ்வைக் குறித்து, அவனுடைய சந்திப்பைக் குறித்து, பிரபஞ்சத்தைக் குறித்து, அதன் படைப்பாளனைக் குறித்து தாக்கம் ஏற்படுத்தும் செய்தி இடம்பெறுகிறது.*

இந்த இடத்தில் நான் டாக்டர் அஹமது ஸகீயை நினைவுகூர்கிறேன். அவர் இந்தப் பிரபஞ்சத்தை அதன் சூரியன்களோடும் சந்திரன்களோடும் வர்ணித்துளளார். அவர் கூறுகிறார்: 'இது ஆடக்கூடிய ஒரு பிரபஞ்சம். அதன் கிழக்குகளிலிருந்து மேற்குகள் வரை, அதன் உயரத்திலிருந்து தாழ்வுவரை ஒவ்வொன்றும் ஆடிக்கொண்டுதான் இருக்கிறது. அவை குறிப்பிட்ட ஒரு இராகத்தோடு ஆடிக்கொண்டிருக்கின்றன. அவற்றில் விசித்திரமாக எதுவும் இல்லை. அவற்றில் கடந்துபோகும் ஒவ்வொரு நொடியும் படைப்பாளனின் வல்லமையை, அவனுடைய மகத்துவத் தைப் பறைசாற்றிக்கொண்டே இருக்கின்றன.'

ஆனாலும், நான் ஏன் மனிதப் படைப்பைக் கண்டு ஆச்சரியப்படு கிறேன் என்று தெரியவில்லை. எனது இடது மணிக்கட்டில் கட்டப் பட்டுள்ள கடிகாரத்தைப் பார்க்கிறேன். அதனால் தோலின் மீது இலே சான அழுத்தம் ஏற்பட்டுள்ளது. அது இரத்த நாளங்களில் இலேசான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. உணர்வுகளைக் கடத்திச் செல்லும் நரம்பு களில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

இந்த உடலின் எல்லா உறுப்புகளைக் குறித்தும் தம்மைத்தாமே புதுப்பித்துக்கொண்டே இருக்கும் அவற்றின் அமைப்பைக் குறித்தும் நான் சிந்தித்துப் பார்த்தேன். ஆயிரக்கணக்கான செல்கள் தம்முடைய பணிகளைச் சீராக நிறைவேற்றிக் கொண்டே இருக்கின்றன. மூளையில் அல்லது கைவிரல்களில் செல்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை நீங்கள் அறிவீர்களா? இரத்த சிகப்பணுக்களுக்கு அல்லது வெள்ளை யணுக்களுக்கு அல்லது உடலின் இன்னபிற உறுப்புகளுக்கு வழிகாட்டும் அறிவு என்ற ஒன்று இருக்கிறதா?

அவற்றைப் படைத்தவன்தான் அவற்றுக்குரிய பணிகளை நிர்ணயித்து அவற்றுக்கு வழிகாட்டினான். அவை தமக்கு நிர்ணயிக்கப்பட்ட பணி களை விட்டும் சற்றும் விலகிச்செல்லாது.

இது ஒருநாள் மட்டும் நிகழக்கூடிய ஒன்றா? மாறாக, கூடுதலோ குறைவோ இன்றி வாழ்நாள் முழுவதும் அப்படியே நிகழ்கிறது.

ஒரு மனிதனிடம் மட்டுமா இப்படியெல்லாம் நிகழ்கிறது? மாறாக, கோடிக்கணக்காகக் காணப்படும் மனிதர்கள் அனைவரிடமும் இப்படித் தான் நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

இவை படைப்பாளனின் மகத்துவத்தை அறிவிக்கும் தெளிவான சான்றுகள், இல்லையா? ஒவ்வொரு மனிதனும், மாறாக ஒவ்வொரு அணுவும் படைப்பாளனின் வல்லமையைப் பறைசாற்றிக் கொண்டே இருக்கிறது.

*இந்த அத்தியாயத்தில் அல்லாஹ் இணைவைப்பாளர்களைப் பார்த்து ஆச்சரியம்மிக்க செய்தியோடு பின்வருமாறு உரையாடுவதைப் பார்க்கிறேன்:*

> *அவர்கள் படிப்பினைபெறும் பொருட்டு நாம் இந்தக் குர்ஆனில் பல்வேறு விதங்களில் தெளிவுபடுத்தியுள்ளோம். ஆனாலும், அது அவர்களின் வெறுப்பைத்தான் அதிகரிக்கிறது. அவர்கள் கூறுவதைப் போல அவனுடன் வேறு தெய்வங்களும் இருந்திருந்தால் அவை அரியணையின் அதிபதியின் பக்கம் நிச்சயம் வழியைத் தேடியிருக்கும். அவர்கள் கூறுவதைவிட்டும் அல்லாஹ் மிகத் தூய்மையானவன்; மிக உயர்ந்தவன். ஏழு வானங்களும் பூமியும் அவற்றுக்கிடையே உள்ள அனைத்தும் அவனது தூய்மையைப் பறைசாற்றுகின்றன. அவையனைத்தும் அவனது தூய்மையைப் பறைசாற்றுவதுடன் அவனைப் புகழ்ந்துகொண்டும் இருக்கின்றன. ஆனால், அவை புகழ்வதை நீங்கள் அறிய மாட்டீர்கள். அவன் சகிப்புத்தன்மையுடையவனாகவும் பெரும் மன்னிப்பாளனாகவும் இருக்கிறான்.* (41-44)

*இந்தப் பிரபஞ்சம் தன் இறைவனின் தூய்மையைப் பறைசாற்றுவதோடு அவனைப் புகழ்ந்துகொண்டும் இருக்கிறது. அது நேரடியாக அவனைப் புகழ்கிறதா? அல்லது மறைமுகமாக அதில் உள்ளவை அவனுடைய மகத்துவத்தையும் புகழையும் அறிவிக்கின்றனவா?*

*பிரபஞ்சம் தானாக இயங்காது. என்றும் நிலைத்திருப்பவனும் நித்திய ஜீவனுமாகிய அல்லாஹ்தான் அதனை இயக்குகிறான்.*

*அறிவீனர்களால் அல்லாஹ்வை அறிந்துகொள்ள முடியவில்லை என்றால், அவன் ஒருவனே என்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றால் அதனால் அல்லாஹ்வுக்கு எந்த இழப்பும் இல்லை. ஒவ்வொன்றும் அவனுடைய புகழைப் பறைசாற்றிக்கொண்டே இருக்கிறது.*

*அல்லாஹ்வை வணங்காமல் சிலைகளை ஏற்படுத்திக்கொண்டு, அவற்றை வணங்கிக்கொண்டிருந்த இணைவைப்பாளர்களுக்கு அல்லாஹ்வைக் குறித்து அறிவித்தவாறு அத்தியாயம் கடந்துசெல்கிறது. ஆனால் அவர்களோ அல்லாஹ்வைப் பற்றிக் கேட்க விரும்பாமல் அலட்சியமாக இருந்துகொண்டிருக்கிறார்கள்.*

*அவர்கள் தூதரைச் சூனியம்செய்யப்பட்ட ஒரு மனிதராக எண்ணுகிறார்கள். இந்த உலக வாழ்க்கையைத் தவிர வேறொரு வாழ்க்கை இல்லை என்றும் விலங்குகளின் வாழ்க்கையும் நம் வாழ்க்கையும் ஒன்றுதான்*

என்றும் அவர்கள் கருதுகிறார்கள். விலங்குகள் 'நாளை' என்பதைக் குறித்து எதுவும் சிந்திக்காது. அவை அன்றைய தினத்தைத் தவிர வேறு எதிலும் கவனம்செலுத்தாது.

விசித்திரம் என்னவென்றால், இன்றைய உலகமும் இந்தத் தர்க்கத் தைத்தான் அறியும். இதனை அது தமது கலை, இலக்கியம், தத்துவம் ஆகியவற்றின் மூலம் பரப்பிக்கொண்டிருக்கிறது.

> 'நாம் எலும்புகளாக, மண்ணோடு மண்ணாக ஆகிவிட்டாலுமா மீண்டும் புதிய படைப்பாக எழுப்பப்படுவோம்?' என்று அவர்கள் கேட்கிறார்கள். நீர் கூறும், 'நீங்கள் கல்லாகவோ இரும்பாகவோ ஆகிவிடுங்கள். அல்லது, நீங்கள் பெரிதாக எண்ணும் ஒரு படைப் பாக ஆகிவிடுங்கள்.' அப்போதும் அவர்கள், 'எங்களை மீண்டும் படைப்பவன் யார்?' என்று கேட்பார்கள். நீர் கூறும், 'யார் உங்களை ஆரம்பத்தில் படைத்தானோ அவன்தான்!' அப்போது அவர்கள் தம் தலைகளை உம் பக்கம் சாய்த்து, 'அது எப்போது நிகழும்?' என்று கேட்பார்கள். நீர் கூறும், 'அது சமீபத்தில் நிகழ்ந்துவிடக்கூடும்!' அவன் உங்களை அழைக்கின்ற நாளில் நீங்கள் அவனைப் புகழ்ந்த வாறு அவனிடம் வருவீர்கள். அப்போது வெகுசொற்ப காலமே தங்கியிருந்ததாக நீங்கள் எண்ணுவீர்கள். (49-52)

இந்த அத்தியாயத்தின் மற்றுமொரு இடத்தில் மறுமைநாளையும் அங்கு கூலி வழங்கப்படுவதையும் நிராகரித்து இணைவைப்பாளர்கள் வைக்கும் வாதம் இடம்பெறுகிறது. திருக்குர்ஆன் அதற்கு இவ்வாறு பதிலளிக் கிறது, மற்ற உயிரினங்களைவிட மனிதனுக்கு அறிவு என்னும் அருட் கொடை வழங்கப்பட்டுள்ளது. அதுதான் மனிதனை வேறுபடுத்தும் அம்சம். மனிதன் இந்த அறிவைத் தொலைத்துவிட்டால், அவன் பார்த் தாலும் அவனால் பார்க்க முடியாது; அவன் கேட்டாலும் அவனால் புரிந்துகொள்ள முடியாது. அவன் அசத்தியத்துக்காக வாதிடக்கூடிய வனாக, அல்லாஹ்வின் வழிகாட்டலைப் பெறுவதற்கான தகுதியை இழந்தவனாக, அல்லாஹ்வையும் அவனுடைய சந்திப்பையும் நிராகரிக்கக் கூடியவனாக ஆகிவிடுவான்:

> அல்லாஹ் யாருக்கு நேர்வழி காட்டுகிறானோ அவரே நேர்வழி பெற்றவர். அவன் யாரை வழிகெடும்படி விட்டுவிடுகிறானோ அவர்களுக்கு அவனைத் தவிர எந்த உதவியாளரையும் நீர் காண மாட்டீர். மறுமைநாளில் நாம் அவர்களை முகத்தால் நடந்துவரும் படி, குருடர்களாகவும் ஊமையர்களாகவும் செவிடர்களாகவும் ஒன்றுதிரட்டுவோம். அவர்களின் தங்குமிடம் நரகமாகும். அதன்

நெருப்பு தணியும்போதெல்லாம் நாம் இன்னும் கொழுந்துவிட்டு எரியச்செய்வோம். அவர்கள் நம் சான்றுகளை நிராகரித்ததனாலும், 'நாம் எலும்புகளாகி மண்ணோடு மண்ணாகிவிட்டாலும் மீண்டும் புதிய படைப்பாக எழுப்பப்படுவோமா?' என்று அவர்கள் கூறிய தனாலும் இதுவே அவர்களுக்குரிய கூலியாகும். வானங்களையும் பூமியையும் படைத்த அல்லாஹ் அவர்களைப் போன்றோரை மீண்டும் படைக்கும் ஆற்றலுடையவன் என்பதை அவர்கள் கவனிக்கவில்லையா? அவன் அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தவணையை ஏற்படுத்தியுள்ளான். அதில் எத்தகைய சந்தேகமும் இல்லை. ஆயினும், அக்கிரமக்காரர்கள் அதனை நிராகரிக்காமல் இல்லை. (97-99)

இந்த அத்தியாயத்தில் அல்லாஹ் முஸ்லிம்களுக்கு நல்லவற்றைப் பேசும்படி அறிவுறுத்துகிறான். யூதர்களுக்கு வழங்கப்பட்ட அறிவுரை களிலும் இந்த அறிவுரை இடம்பெற்றது. 'மக்களிடம் நல்லவற்றைக் கூறுங்கள் ... (2:83)' அவர்கள் தங்களின் சொல்லிலும் அழைப்பிலும் நன்னடத்தையே மேற்கொள்ள வேண்டும். இதுதான் அவர்களின் அடையாளமாக இருக்க வேண்டும். 'என் அடியார்களிடம் கூறுவீராக, அவர்கள் நல்லவற்றையே பேசட்டும்! ஷைத்தான் அவர்களிடையே குழப்பத்தை உண்டுபண்ணுகிறான். நிச்சயமாக ஷைத்தான் மனிதனின் வெளிப்படையான எதிரியாவான். (53)'

இதனைத் தொடர்ந்து, முஸ்லிம்கள் பூமியின் சொந்தக்காரர்களாக வருவார்கள் என்ற குறிப்பும் உணர்த்தப்படுகிறது: 'வானங்களிலும் பூமியிலும் உள்ளவற்றை உம் இறைவன் நன்கறிவான். நாம் தூதர்களில் சிலரைச் சிலரைவிடச் சிறப்பித்துள்ளோம். நாம் தாவூதுக்கு ஆகமத்தையும் வழங்கினோம். (55)' அல்லாஹ் தாவூதுக்கு வழங்கிய ஆகமத்தில் பின் வருமாறு கூறுகிறான்: 'நாம் ஆகமத்தில் அறிவுரைக்குப் பின் எழுதி விட்டோம், என் நல்லடியார்கள்தாம் பூமியின் வாரிசுதாரர்களாவர் என்று. (21:105)' இதில் பயன்படுத்தப்பட்டுள்ள 'திக்ர்' என்ற வார்த்தை இந்தச் சமூகத்தின் நிரந்தரமானது என்பதையும் இதன் தூதுத்துவம் என்றும் அறுபடாதது என்பதையும் உணர்த்தக்கூடியதாக இருக்கிறது.

உண்மையில் எந்தத் தவ்ஹீது இஸ்லாத்தின் தனித்துவமாக இருக் கிறதோ, எந்தத் தவ்ஹீதைப் பரப்புவதற்காக அது உத்வேகத்துடன் செயல்படுகிறதோ அதுதான் மனிதர்களை அவர்களின் இறைவனுடன் இணைக்கும் வலுவான, உறுதியான இணைப்பாகும். அது இறைவனைத் தவிர அனைவரும் அவனுடைய அடிமைகள்தாம் என்பதை உறுதியாக நிறுவுகிறது.

நீர் கூறும், 'அவனைத் தவிர நீங்கள் கடவுள்களாகக் கருதிக் கொண்டிருப்பவர்களை அழையுங்கள். அவர்கள் உங்களை விட்டும் துன்பத்தை நீக்கவோ மாற்றவோ சக்திபெற மாட்டார் கள்.' இவர்கள் யாரை அழைக்கிறார்களோ அவர்களே 'தங்களில் யார் இறைவனிடம் மிக நெருக்கமானவர்கள்?' என்று அவனது நெருக்கத்தைத் தேடுபவர்களாகவும் அவனது கருணையை ஆதரவுவைப்பவர்களாகவும் அவன் அளிக்கும் தண்டனையை அஞ்சுபவர்களாகவும் இருக்கிறார்கள். நிச்சயமாக உம் இறைவனின் வேதனை அஞ்சப்பட வேண்டியதுதான். (56,57)

இந்த இடத்தில் ஆதமையும் அவருடைய சந்ததியினரையும் குறித்த செய்தி இடம்பெறுகிறது. அல்லாஹ் ஆதமைத் தேர்ந்தெடுத்தபிறகு, அவரது அந்தஸ்தை உயர்த்தி வானவர்களை அவருக்குச் சிரம்பணியு மாறு செய்தபிறகு அவரது நிலை மிகச் சிறப்பானதாக இருந்திருக்க வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு நன்றிசெலுத்தப்படத்தக்க அருட் கொடைகளை வழங்கிய பிறகு அவர்கள் இப்லீஸின் ஊசலாட்டங்களை, வீணான சந்தேகங்களைப் பொய்யெனக் கூறி நிராகரித்திருக்க வேண்டும். 'நாம் ஆதமுடைய மக்களைக் கண்ணியப்படுத்தியுள்ளோம். கரையிலும் கடலிலும் நாமே அவர்களைச் சுமந்துசெல்கிறோம். அவர்களுக்குத் தூய்மையானவற்றை உணவாகக் கொடுத்துள்ளோம். நாம் படைத்துள்ள படைப்பினங்கள் பலவற்றை விடவும் அவர்களைச் சிறப்பித்துள்ளோம். (70)' ஆனால் ஆதமோ பலவீனமடைந்தார். அவருடைய பிள்ளைகள் தாம் அனுபவித்துக்கொண்டிருக்கும் அருட்கொடைகளை மறந்துபோனார்கள். இந்தக் குர்ஆனில் ஆச்சரியத்தை ஏற்படுத்தும் வகையில் அவர்களின் சிறப்புகள்குறித்து கூறப்பட்டுள்ளது. ஆனால், நாம் எவ்வாறு செயல் பட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதை நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

நாம் சிந்திக்க வேண்டும் என்பதற்காக அல்லாஹ் நமக்கு அறிவை வழங்கியுள்ளான். அதன் மூலமாகவே நாம் தூய்மையானவற்றை அசுத்த மானவற்றிலிருந்தும் நல்லவற்றைத் தீயவற்றிலிருந்தும் வேறுபடுத்து கிறோம். நாம் இவ்வாறு செய்யவில்லை என்றால் நமக்கு வழங்கப்பட் டுள்ள அறிவின் மதிப்பு என்ன?

யார் இருளையும் வெளிச்சத்தையும் ஒன்றாகவே காண்கிறாரோ அவர் தம் பார்வையைக் கொண்டு என்ன பயனடைய முடியும்?

நீங்கள் ஒரு மனிதரிடம் ஒன்றும் ஒன்றும் இரண்டு என்று கூறினால், அவர் குறிப்பிட்ட ஒரு மலையைச் சுட்டிக்காட்டி 'இது இந்த இடத்தி லிருந்து நகர்ந்து செல்லாதவரை நீ கூறுவதை நான் நம்ப மாட்டேன்'

என்று கூறினால் அவரைப் பற்றி என்ன கருதுவீர்கள்? அவரிடம் இருக்கின்ற அறிவு உண்மையில் மதிக்கத்தக்கதா?

❖ ❖ ❖

அல்லாஹ் ஒருவனே வணக்கத்துக்குத் தகுதியான இறைவன் என்பதை மக்களுக்குப் புரியவைக்க அவனுடைய தூதரான முஹம்மது தம்மால் இயன்ற எல்லா முயற்சிகளையும் செய்தார். ஆனால் அவர்கள் கூறினார்கள், 'மாறாக, எங்களின் சிலைகளே கண்ணியம் வாய்ந்தவை. நீர் கூறும் விசயம் உண்மையெனில் அதற்காக ஓர் அற்புதத்தைக் கொண்டு வாரும்.'

அவர்கள் ஆரோக்கியமான உள்ளத்தையும் சரியான அறிவையும் பெற்றிருந்தால் உண்மையை ஏற்றுக்கொண்டிருப்பார்கள். ஆனாலும், தங்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டபின்னரும் அவர்கள் நிராகரிப்பில் தான் நிலைத்திருந்தார்கள். 'முற்காலத் தூதர்கள் சான்றுகளுடன் அனுப்பப்பட்டவாறு இவரும் நம்மிடம் ஒரு சான்றினைக் கொண்டுவரட்டும் என்று அவர்கள் கூறுகிறார்கள். இவர்களுக்கு முன்னர் நாம் அழித்துவிட்ட ஊரில் இருந்த மக்களில் யாரும் நம்பிக்கை கொள்ளவில்லை. இவர்கள் நம்பிக்கை கொள்ளப்போகிறார்களா என்ன? (5,6)'

மக்காவாசிகள் நபியவர்களிடம், 'நாங்கள் உம்மை நம்ப வேண்டுமெனில் நீர் ஸஃபா மலையைத் தங்கமாக மாற்ற வேண்டும்.' என்றார்கள். அது தங்கமாக மாற்றப்பட்டபிறகும் அவர்கள் நிராகரிப்பில் நிலைத்திருந்தால் அவர்களின் நிலைமை என்னவாகும்? உறுதியாக அவர்கள் அழிக்கப்பட்டே தீருவார்கள். இந்த அத்தியாயத்தில் அல்லாஹ் கூறுகிறான்: 'முன்னிருந்தவர்களின் நிராகரிப்புதான் நாம் சான்றுகள் அனுப்புவதற்குத் தடையாக அமைந்தது. நாம் ஸமூது சமூகத்துக்குப் பெண் ஒட்டகத்தைத் தெளிவான சான்றாக வழங்கியிருந்தோம். ஆயினும், அவர்கள் அதற்குத் தீங்கிழைத்தார்கள். அச்சமூட்டுவதற்காகவே நாம் அத்தாட்சிகளை அனுப்புகிறோம். (59)'

குறைஷிகள் 'ஏதேனும் ஓர் அற்புதத்தை' வேண்டவில்லை. மாறாக, அற்புதங்களை நிர்ணயித்து அவற்றை நிகழ்த்திக் காட்டுமாறு வேண்டினார்கள்:

> அவர்கள் கூறுகிறார்கள், 'நீர் பூமியிலிருந்து எங்களுக்காக ஒரு நீரூற்றை ஓடச்செய்யும்வரை நாங்கள் ஒருபோதும் உம்மை நம்ப மாட்டோம். அல்லது, உம்மிடம் பேரீச்சை மரங்களும் திராட்சைத் தோட்டங்களும் இருந்து, அவற்றுக்கிடையே ஆறுகளை ஓடச்செய்ய

வேண்டும். அல்லது, நீர் கூறுவதைப் போல் வானத்தைத் துண்டு துண்டாக்கி எங்கள்மீது விழச்செய்ய வேண்டும். அல்லது அல்லாஹ் வையும் வானவர்களையும் எங்கள்முன் கொண்டுவந்து நிறுத்த வேண்டும். அல்லது, உம்மிடம் ஏதேனும் ஒரு தங்க மாளிகை இருக்க வேண்டும். அல்லது, வானத்தின் மீது நீர் ஏற வேண்டும். அங்கிருந்து நாங்கள் படிப்பதற்காக ஏதேனும் ஒரு நூலை எங்களிடம் கொண்டுவரும்வரை நீர் வானத்தில் ஏறுவதைக்கூட நாங்கள் நம்ப மாட்டோம்.' நீர் கூறும், 'என் இறைவன் தூய்மையானவன், நானோ ஒரு மனிதனாகவும் தூதனாகவுமே இருக்கிறேன்.' (90-93)

உண்மையில் அவர்கள் வேண்டுவது நிகழ்த்திக் காட்டப்பட்டாலும் அவர்களின் உள்ளத்தில் ஈமான் என்னும் பேரொளி நுழையாது. அல் ஹிஜ்ர் அத்தியாயத்தில் அல்லாஹ் கூறுகிறான்:

நாம் அவர்களுக்காக வானத்தின் ஒரு கதவைத் திறந்து, அதன் வழியே அவர்கள் ஏறிச்செல்லத் தொடங்கினாலும் அவர்கள் கூறு வார்கள், 'எங்களின் பார்வைகள் மயக்கப்பட்டுவிட்டன. எங்கள்மீது சூனியம்செய்யப்பட்டுள்ளது.' (14,15)

பிடிவாதம் அவர்களின் உள்ளங்களை ஆட்கொண்டுள்ளது. நிராகரிப்பு என்பது வெறுமனே கடந்துசெல்லக்கூடிய ஒன்றல்ல. அது பொறாமை, மடமைத்தனம், பேராசை, சுயநலம் ஆகியவற்றின் கலவை. நிராகரிப்பை விட்டுத் தவிர்ந்திருப்பதற்கு விழிப்பான அறிவும் தூய்மையான பண்பும் அவசியமாகிறது.

ஈமானுக்கும் நிராகரிப்புக்குமான போராட்டம் விரைவில் கடந்து விடக்கூடிய ஒரு போராட்டம் அல்ல. அது காலம்காலமாக நீடிக்கும் மோதல். 'இது ஏனெனில், வீழ்பவர் தெளிவான ஆதாரத்துடன் வீழ்ந்து விட வேண்டும், வாழ்பவர் தெளிவான ஆதாரத்துடன் வாழ வேண்டும் என்பதற்காகத்தான் ... (8:42)'

யாருடைய பதிவேடு அவரது வலது கையில் கொடுக்கப்படுமோ அத்தகையவர்கள்தாம் தம் பதிவேடுகளைப் படிப்பார்கள். அவர்களுக்கு அணுவளவும் அநீதி இழைக்கப்படாது. யார் இவ்வுலகில் குருடராக இருந்தாரோ அவர் மறுமையிலும் குருட ராகவே இருப்பார். அவரே மிகவும் வழிதவறியவர். (70,71)

கடந்தகாலங்களில் வழிகேட்டை எதிர்த்துப் போராடிய தீரம்மிக்க தூதர்களின் தலைவர் முஹம்மது (ஸல்) அவர்கள். அன்றைய அறபியாவில் நிராகரிப்பாளர்களின் தேவைகள், ஆலோசனைகள் எதற்கும் அவர் தம்மை உட்படுத்திக்கொள்ளவில்லை. அவருக்கு அளிக்கப்பட்ட பொது

*வான மார்க்கம் மறுமைநாள்வரை வரக்கூடிய ஒவ்வொரு மனிதன் மற்றும் ஒவ்வொரு பகுதியில் உள்ள குறைபாடுகளைச் சீர்படுத்தக் கூடியதாக இருக்கிறது.*

*அவருக்கு வழங்கப்பட்ட பொறுப்பு பெரும் முக்கியத்துவம் பெற்ற தற்குரிய காரணங்களில் ஒன்று, அவர் அல்லாஹ்வின் உதவிக்குப் பிறகு மக்களை அறிவுபூர்வமாகச் சிந்திக்கத் தூண்டினார்; அவர்களின் சடங்கு களைக் கேள்விக்குட்படுத்தினார்; அவர்களின் குறைபாடுகளைச் சீர் படுத்தினார். இறுதியில் தலைமைத்துவம் அவர் வசமானது.*

*அவர்களின் தலைவர்கள், முக்கியப் பிரமுகர்கள் பாமர மக்களுடன் ஒன்றிணைய மறுத்தார்கள். நூஹின் சமூகத்தார் அவரிடம் கூறினார்கள்:*

> *'நாங்கள் உம்மை ஏற்றுக்கொள்வதா? இழிவான மக்கள்தானே உம்மைப் பின்பற்றிக்கொண்டிருக்கிறார்கள்.' அதற்கு அவர் கூறி னார், 'அவர்கள் செய்துகொண்டிருப்பதுகுறித்து எதனையும் நான் அறிய மாட்டேன். அவர்களை விசாரிப்பது என் இறைவன்மீது உள்ள பொறுப்பாகும். நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமே! நான் நம்பிக்கையாளனை விரட்டுபவன் அல்ல.'* (26:111-114)

*அவர்கள் முஹம்மதிடம், 'நாங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டு மெனில் எங்களுக்குத் தனித்துவமான இடங்கள் வழங்கப்பட வேண்டும்' என்று வேண்டினார்கள்.*

*ஒரு குலத்தின் தலைவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டால் அவரைப் பின்பற்றும் மற்ற மக்களும் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வார்கள் என் பதற்காக நபியவர்கள் அப்படிப்பட்டவர்களுக்குப் பெரும் முக்கியத்து வம் கொடுத்து தமது நேரங்களைச் செலவிட்டார்கள். சில சமயங்களில் அது ஏழைகளுக்கு வழங்கப்பட வேண்டிய நேரங்களையும் சேர்த்து விழுங்கக்கூடியதாக இருந்தது. இதுகுறித்து அல்லாஹ் அவரிடம் கூறி னான்:*

> *நாம் உமக்கு அறிவித்ததை விடுத்து வேறு ஒன்றை நீர் நம்மீது புனைந்துகூறும்படி அவர்கள் உம்மைக் குழப்பத்தில் ஆழ்த்தி வழிகெடுக்க முயன்றார்கள். நீர் அவ்வாறு செய்திருந்தால் உம்மை அவர்கள் நெருங்கிய நண்பனாக ஆக்கியிருப்பார்கள். நாம் உம்மை உறுதிப்படுத்தியிருக்காவிட்டால் நீர் அவர்களின் பக்கம் சிறிதள வேனும் சாய்ந்திருப்பீர். நீர் அவ்வாறு செய்திருந்தால் இவ்வுல கிலும் இறந்த பின்பும் இரு மடங்கு வேதனையைச் சுவைக்கச் செய்திருப்போம். பின்னர், நமக்கு எதிராக உதவிபுரிபவர் எவரையும் நீர் காண மாட்டீர்.* (73-75)

அழைப்பியலின் அரசியல் என்பது வேறு. படைப்புகள் வழிகெட்டுச் செல்வது என்பது வேறு. பலவீனர்களை விட்டுவிட்டுத் தலைவர்களில் ஒருவரிடம் கவனத்தைக் குவித்துக்கொண்டிருந்த தன் தூதரை அல்லாஹ் கண்டிக்கிறான். வசனங்கள் அவர்களின் சூழ்ச்சிகளையும் அவர்களுடன் மென்மையாக நடந்துகொள்வதால் ஏற்படும் விளைவுகளையும் எச்சரித்த வாறு செல்கின்றன.

அதற்குப் பிறகு அவர்கள் உள்ளங்களில் மறைத்து வைத்திருக்கும் சூழ்ச்சிகளும் இஸ்லாத்துக்கு எதிராக அவர்கள் செய்யும் சதித் திட்டங் களும் வெளிப்படுத்தப்படுகின்றன: ‘இந்தப் பூமியிலிருந்து உமது பாதத் தைப் பெயர்த்துவிட அவர்கள் முயன்றுகொண்டிருந்தார்கள், உம்மை இங்கிருந்து வெளியேற்றிவிட வேண்டும் என்பதற்காக. அவ்வாறு செய்தி ருந்தால் உமக்குப் பின்னர் அவர்கள் சொற்ப காலமே தங்கியிருந்திருப் பார்கள். (76)’ தூதர் மக்காவில் இருந்தபோது அவர்கள் கடும் நெருக் கடியளித்தார்கள். முதலில் அவரை நாடுகடத்தத் திட்டமிட்டார்கள். பின்னர், அவரைக் கொலைசெய்ய வேண்டும் என்று முடிவுசெய்தார்கள்.

புலம்பெயர்ந்தவராகத் தூதர் மக்காவைவிட்டு வெளியேறினார். அவர் களின் சூழ்ச்சிகளிலிருந்து அல்லாஹ் அவரைக் காப்பாற்றினான். அதற்குப் பிறகு சிறிது காலத்துக்குள்ளேயே இஸ்லாம் பெரும் வெற்றிபெற்றது. வெற்றியாளராகத் தூதர் மக்காவின் பக்கம் திரும்பினார். அல்லாஹ் தன் வாக்குறுதியை உண்மைப்படுத்திக் காட்டினான்.

அழைப்பியல் போராட்டத்துக்குப் பிறகு வணக்க வழிபாடு என்னும் போராட்டம் வந்தது. இரவிலும் பகலிலும் தொழுகையை நிலைநிறுத்து மாறு தூதர் கட்டளையிடப்பட்டார்:

> சூரியன் சாய்ந்ததிலிருந்து இரவின் இருள் சூழும்வரை தொழுகை யைக் கடைப்பிடிப்பீராக. அதிகாலையில் குர்ஆன் ஓதுவதையும் கடைப்பிடிப்பீராக. நிச்சயமாக அதிகாலையில் குர்ஆன் ஓதுவது சாட்சி கூறக்கூடியதாக இருக்கிறது. (78)

இறுதிநபியின் வாழ்வில் இறை நினைவும் பிரார்த்தனையும் என்ற தலைப்பில் நான் ஒரு புத்தகம் எழுதினேன். அவரைப் போன்று அல் லாஹ்வை நினைவுகூரக்கூடியவரை, வணங்கக்கூடியவரை, அவனு டைய புகழையும் தூய்மையையும் பறைசாற்றக்கூடியவரை இந்த உலகம் இதுவரை கண்டதில்லை என்ற உணர்வே எனக்கு மேலோங்கியது. அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கும் புத்தகங்கள் இந்த உண்மைக்கான சாட்சிகளாய் விளங்குகின்றன.

*முஹம்மது மனிதர்களின் பக்கம் அனுப்பப்பட்ட அல்லாஹ்வின் இறுதியான தூதர். தூதுத்துவக் கட்டடம் அவரைக் கொண்டே முழுமை யடைந்தது. ஒரு நபி விரைவில் வருவார் என்று வேதக்காரர்களும் எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களிடம் இருந்த ஆதாரங்கள் அவரை எதிர்பார்க்கவும் அவரை உண்மைப்படுத்தவும் தூண்டின.*

*அவர் வந்தபோது உண்மையாகவே நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் விரைந்து அவரை ஏற்றுக்கொண்டார்கள். அல்லாஹ் கூறுகிறான்:*

> *நாம் குர்ஆனைச் சத்தியத்துடனே அருளியுள்ளோம். அது சத்தியத் துடன்தான் அருளப்பட்டுள்ளது. உம்மை நற்செய்தியாளராகவும் எச்சரிக்கைசெய்பவராகவுமே அனுப்பியுள்ளோம். நீர் மனிதர் களுக்குச் சிறிது சிறிதாக ஓதிக் காண்பிக்க வேண்டும் என்பதற் காகவே குர்ஆனைப் பகுதி பகுதியாக, படிப்படியாக அருளி யுள்ளோம். நீர் கூறும், 'இதனை நீங்கள் நம்பினாலும் சரி நம்பா விட்டாலும் சரி.' இதற்கு முன்னர் அறிவு வழங்கப்பட்டோரிடம் இது எடுத்துரைக்கப்பட்டால் அவர்கள் சிரம்பணிந்தவர்களாக முகங்குப்புற விழுவார்கள். 'எங்கள் இறைவன் தூய்மையானவன். எங்கள் இறைவனின் வாக்குறுதி நிறைவேறியே தீரும்.' என்று அவர்கள் கூறுவார்கள்.* (105-108)

*ரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு ஷாம் தேசமும் எகிப்தின் கிறிஸ்தவர்களும் விரைந்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள் என்ப தற்கு வரலாறு சாட்சியாக இருக்கிறது. பின்னர், அவர்கள் இந்த வசனத்தை உண்மைப்படுத்தும் பொருட்டு அறபுகளுடன் இணைந்து உலகின் பல பகுதிகளுக்கும் இஸ்லாத்தைக் கொண்டுசென்றார்கள்.*

❖ ❖ ❖

அத்தியாயம் 18

# அல்கஹ்ஃப்

(குகை)

*இந்தப் பிரபஞ்சம் அல்லாஹ் ஒருவனே என்பதை அறிவிக்கிறது. இறை வஹீ அதன் பக்கம் வழிகாட்டுகிறது. சரியான ஈமான் தன்னுடைய எதார்த்தத்தை இரண்டிலிருந்தும் ஒருசேர பெற்றுக்கொள்கிறது, பிர பஞ்சத்தை வாசிப்பதன் மூலமும் வஹீயில் கவனம் செலுத்துவதன் மூலமும். அல்லாஹ் கூறுகிறான்: 'எல்லாப் புகழும் அல்லாஹ் ஒரு வனுக்கே. அவனே வானங்களையும் பூமியையும் படைத்தான். இருள் களையும் ஒளியையும் உண்டாக்கினான் ...* (6:1)'

*இங்கும் அல்ஹம்து என்ற வார்த்தை மீண்டும் இடம்பெறுகிறது, இரண்டாவது வகையான ஆதாரத்தின் பக்கம் சுட்டிக்காட்டும் பொருட்டு: 'எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அவனே தன் அடியார்மீது எத்தகைய குறைபாடும் இல்லாத வேதத்தை அருளினான்.* (1)'

*மனித வாழ்க்கையை வாசிக்கும்படியும் ஒவ்வொரு பொருளையும் குறித்து ஆராய்ச்சி செய்யும்படியும் அல்லாஹ் தன் அடியார்களிடம் வேண்டுகிறான். அதே போன்று, இந்தக் குர்ஆனை வாசிக்கும்படியும் இதில் உள்ள வசனங்களைக் குறித்து சிந்தனை செய்யும்படியும் அவன் வேண்டுகிறான். இந்த இரண்டு வகையான ஆதாரங்களிலிருந்தும் பயன டையாதவர்கள் நேர்வழியைத் தொலைத்துவிடுவார்கள் என்பதையும் அவன் தெளிவுபடுத்துகிறான்.*

> *வானங்கள், பூமியின் அமைப்பையும் அல்லாஹ் படைத்துள்ள ஏனைய பொருள்களையும் அவர்களின் தவணை நெருங்கிவிடக் கூடும் என்பதையும் அவர்கள் சிந்திக்க மாட்டார்களா? இதன் பின்னரும் அவர்கள் எந்த விசயத்தைத்தான் நம்பப்போகிறார்கள்?* (7:185)

வானத்திலோ பூமியிலோ ஓரிறைவனைத் தவிர வேறெந்த இறைவனும் இல்லை என்பதை இந்தப் பிரபஞ்சம் தெளிவாக எடுத்துரைக்கிறது. வானத்தில் உள்ளவர்களும் அவன் ஒருவனே என்பதில் ஒன்றுபட்டுள்ளார்கள். அவனைத் தவிர அனைத்துமே அவன் படைத்தவை தாம். அவனுக்கு மகன்களோ மகள்களோ இல்லை. அவனுக்குத் தந்தையும் இல்லை.

திருக்குர்ஆன் இதனை மிகத் தெளிவாக எடுத்துரைத்துவிட்டது. குர்ஆனை எடுத்துரைத்த முஹம்மதும் மற்ற தூதர்களைப் போன்ற அல்லாஹ்வின் அடியார்தாம். இதனைத் தவிர அவரைப் பற்றி வேறு மாதிரியாகக் கூறியவர் அறியாமையால் வரம்புமீறி அவரைப் புகழ்ந்தவராவார்.

> அது, 'அல்லாஹ் ஒரு மகனை ஏற்படுத்திக்கொண்டான்.' என்று கூறுவோரை எச்சரிப்பதற்காகவும்தான். இதுகுறித்து அவர்களிடமோ அவர்களுடைய முன்னோர்களிடமோ எவ்வித அறிவும் இல்லை. அவர்களின் வாயிலிருந்து வெளிப்படும் வார்த்தை மிகப் பயங்கரமானது. அவர்கள் பொய்தான் கூறுகிறார்கள். (4,5)

அல்லாஹ் ஒருவனே என்பதை நிறுவ இந்தக் குர்ஆன் முதல் மூலாதாரமாகும். ஆகவேதான் அதுகுறித்து, 'அது நேரான வழியைக் காட்டக் கூடியது.' என்றும் 'பிற வேதங்கள் அடைந்த இடைச்செருகல்களை விட்டும் தூய்மையானது.' என்றும் கூறப்பட்டுள்ளது.

சத்தியத்தைத் தெளிவுபடுத்துவதும் அதனுடைய மூலதாரத்தை நிர்ணயம் செய்வதும் பரிபூரணமான அருட்கொடையாகும். ஆகவேதான் இந்த அத்தியாயம் பின்வரும் வசனங்களைக் கொண்டு தொடங்குகிறது:

> எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அவனே தன் அடியார்மீது எத்தகைய குறைபாடும் இல்லாத வேதத்தை அருளினான். அது முற்றிலும் சரியானது. அது அவர் கடுமையான வேதனையைப் பற்றி எச்சரிக்கைசெய்வதற்காகவும் நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிவோருக்கு நற்கூலி உண்டு என்னும் நற்செய்தியைக் கூறுவதற்காகவும்தான். சுவனத்தில் அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள். (1-4)

தான் எடுத்துக் கொண்ட பேசுபொருளை -தவ்ஹீது- உண்மைப்படுத்தும் மனிதச் சமூக வரலாற்றின் குறிப்பிட்ட ஒரு பகுதியை இது உள்ளடக்கியுள்ளது.

குகைவாசிகளின் சம்பவம், தோட்டத்தைப் பெற்றிருந்த ஒரு மனித ருக்கும் அவருடைய ஏழை நண்பருக்கும் மத்தியில் நடைபெற்ற உரை யாடல், கிள்ருடன் மூசா நடத்திய உரையாடல், துல்கர்னைனின் வாழ்க் கையைப் பற்றிய சுருக்கமான அறிமுகம் ஆகியவை இந்த அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு சம்பவத்துக்குப் பிறகும் அல்லாஹ்வின் பக்கம் வழி காட்டக்கூடிய, அவனது சந்திப்புக்காகத் தயார்படுத்தக்கூடிய பொருத்த மான பின்னூட்டங்கள் இடம்பெறுகின்றன.

இந்தச் சம்பவங்களை முழுமையாக எடுத்துரைப்பதற்கு முன்னால் முஹம்மது நபிக்கு கூறப்படுகிறது, 'எடுத்துரைப்பீராக, நிராகரிப்பவனின் நிராகரிப்பை எண்ணிக் கவலைப்பட வேண்டாம்.' உளத்தூய்மையுடன் அவர் அல்லாஹ்வின் பக்கம் அவர்களை அழைத்துக்கொண்டிருந்தார். அதனைப் பொருட்படுத்தாத அவர்களின் புறக்கணிப்பும் நிராகரிப்பா ளர்களின் தாக்குதலும் அவரை மிகுந்த நெருக்கடிக்கு உள்ளாக்கிக் கொண்டிருந்தன.

அவர்கள் எந்தச் சத்தியத்தைப் புறக்கணித்தார்களோ அந்தச் சத்தியத் தைச் சுமப்பவராக அவர் இருந்தார். ஆனால் அவர்களோ தங்களை அழிவின் பக்கம் இட்டுச்செல்லும் கட்டுக்கதைகளுக்கு, மூடநம்பிக்கை களுக்குப் பின்னால் சென்றார்கள். அல்லாஹ் அவருக்கு ஆறுதல் கூறி னான்: 'அவர்கள் இந்தக் குர்ஆனின் மீது நம்பிக்கை கொள்ளவில்லை என்றால் அவர்களுக்காகக் கவலைப்பட்டு உம்மை நீரே அழித்துக் கொள்வீர் போலும்! (6)'

ஒவ்வொருவருக்கும் அறிவு வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அவர்கள் விசாரணைசெய்யப்படுவார்கள். அவர்கள் பூமியில் வாழ்ந்த காலகட்டம்குறித்து விசாரிக்கப்படுவார்கள். நற்செயல் புரிந்தவர்கள் வெற்றிபெறுவார்கள். தீய செயலில் ஈடுபட்டவர்கள் நரகத்தில் விழு வார்கள். உம் இறைவன் யார்மீதும் சிறிதும் அநீதி இழைக்க மாட்டான்.

பின்னர் குகைவாசிகளின் சம்பவம் தொடங்குகிறது.

குகைவாசிகள் அல்லாஹ் ஒருவனின் மீது நம்பிக்கை கொண்ட இளைஞர்கள். அவனைத் தவிர மற்றவை யாவும் பலனளிக்கவோ தீங்களிக்கவோ சக்தியற்ற பூஜ்யங்கள் என்பதை அவர்கள் உறுதியாக அறிந்திருந்தார்கள். ஆனால், அவர்களின் சமூகத்தார் அல்லாஹ்வை விடுத்து எவ்வித ஆதாரமுமற்ற பிற கடவுள்களை நம்பிக்கொண்டி ருந்தார்கள். ஆகவே, அவர்களுக்கும் இந்த இளைஞர்களுக்கும் மத்தியில் பகைமை மூண்டது. 'எங்களின் இந்த சமூகத்தினர் அவனைத் தவிர

வேறு கடவுள்களை ஏற்படுத்திக்கொண்டார்கள். இதற்காக இவர்கள் தெளிவான ஆதாரத்தைக் கொண்டுவர வேண்டாமா? அல்லாஹ்வின் மீது பொய்யைப் புனைபவனைவிட மிகப் பெரிய அநியாயக்காரன் யார்? (15)'

சோதனையான காலகட்டங்கள் அவர்களைத் தொடர்ந்து வர, அநியாயக்காரர்களிடமிருந்து தப்பிக்கும் பொருட்டு, தங்களைக் காத்துக் கொள்ளும் பொருட்டு அவர்கள் ஒரு குகையின் பக்கம் அடைக்கலம் புகுந்தார்கள். அல்லாஹ் அவர்களின் வாழ்க்கையை இறுதிநாள்வரை படிக்கப்படும் வஹீயாக ஆக்க நாடிவிட்டான்.

அநியாயக்கார ஆட்சியாளர்களுக்கும் நம்பிக்கை கொண்ட மக்களுக்குமிடையிலான மோதல் இரவு பகல் போன்று மீண்டும் மீண்டும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது. அதே போன்று, நம்பிக்கையாளர்களுக்கு அல்லாஹ் உதவிசெய்வதும் நிராகரிப்பாளர்களை அவன் கைவிட்டுவிடுவதும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது. 'குகைவாசிகளும் கல்வெட்டுச் சாசனக்காரர்களும் நமது சான்றுகளில் மிகவும் வியக்கத்தக்கவையாக இருந்தார்கள் என்று நீர் எண்ணுகிறீரா? (9)' வரலாற்றில் அவர்களின் வரலாறு ஒன்றும் புதுமையான வரலாறு அல்ல.

குகையில் அவர்கள் தங்கியிருந்த இடத்தை நான் பார்த்தபோது மிகுந்த ஆச்சரியமடைந்தேன். ஐந்நூறு மில்லியன் கிலோமீட்டருக்கு அப்பால் சூரியன் உள்ளதாக அறிவியல் கூறுகிறது. அதன் ஒளிக்கதிர்களோ எட்டு நிமிடங்களில் நம்மை வந்தடைந்து விடுகின்றன. அதன் வெளிச்சம் குகையின் மீது விழுகிறது. ஒளிக்கதிர்கள் காலையில் குகையின் வாசலைவிட்டு வலதுபுறமாகவும் மாலையில் இடதுபுறமாகவும் சரிந்து விழுகிறது, அதன் வழியாகக் கடந்துசெல்பவர் அங்கு யாரும் இருப்பதை உணர முடியாதவாறு.

நம்பிக்கை கொண்ட அந்த இளைஞர்களுக்கு வழங்கப்பட்ட மகத்தான அற்புதம் அல்லவா இது?

> சூரியன் உதிக்கும்போது அது அவர்களின் குகையைவிட்டு வலப் பக்கமாகச் சாய்வதையும் மறையும்போது அதன் இடப்பக்கமாகக் கடப்பதையும் நீர் காண்பீர். அவர்கள் குகையினுள் ஒரு விசாலமான இடத்தில் இருக்கிறார்கள். (17)

முன்னோர்களுக்கும் பின்னோர்களுக்கும் வழங்கப்பட்ட சான்றுகள் எவ்வளவு அதிகமானவை! நம்மைச் சுற்றிலும் எவ்வளவு சான்றுகள் காணப்படுகின்றன! நாம்தான் அவற்றையெல்லாம் உணராமல் இருந்து கொண்டிருக்கிறோம்.

*முன்னூறு வருடங்களுக்குப் பிறகு அவர்கள் கண்விழிக்கிறார்கள். நீண்ட நெடிய தூக்கத்திலிருந்து விழித்த அவர்கள் பசியை உணர்கிறார்கள். தங்களில் ஒருவரை உணவு வாங்கிவருவதற்காக அனுப்புகிறார்கள். அவரிடம் கூறுகிறார்கள், 'எச்சரிக்கையாக இரும். இணைவைப்பாளர் களில் யாரும் உம்மை அறிந்துவிட வேண்டாம்.' 'அவர்கள் உங்களை அறிந்துகொண்டால் உங்களைக் கல்லால் அடித்துக் கொன்றுவிடுவார்கள் அல்லது பலவந்தமாக உங்களைத் தங்கள் மார்க்கத்துக்குத் திருப்பிவிடு வார்கள். அவ்வாறு நடந்துவிட்டால் ஒருபோதும் நீங்கள் வெற்றிபெற மாட்டீர்கள்.* (20)'

*அவர்களைச் சுற்றி நிகழ்ந்த மாற்றங்கள் எதையும் அவர்கள் அறிய வில்லை. அவர்களின் நோக்கமெல்லாம் சத்தியத்தில் நிலைத்திருக்க வேண்டும், அசத்தியத்தை விட்டொழிக்க வேண்டும், குழப்பங்களை விட்டும் வெருண்டோட வேண்டும் என்பதாகத்தான் இருந்தது. ஆகவே, அவர்களின் சம்பவம் பின்வரும் வசனத்தோடு நிறைவுபெறுகிறது:*

> *நீர் கூறும், 'அவர்கள் தங்கியிருந்த காலத்தை அல்லாஹ்வே நன்கறிவான். வானங்களிலும் பூமியிலும் உள்ள மறைவான அறிவு அவனுக்கே உரியது. அவன் எவ்வளவு நன்றாகப் பார்ப்பவனாகவும் கேட்பவனாகவும் இருக்கிறான்! அவனைத் தவிர அவர்களுக்கு வேறு உதவியாளன் இல்லை. அவன் தன் அதிகாரத்தில் யாரையும் கூட்டுசேர்த்துக்கொள்வதும் இல்லை.'* (26)

*சம்பவம் முழுமையும் தவ்ஹீதை வலுப்படுத்தக்கூடியதாகவே உள் ளது. அத்தியாயத்தில் ஆரம்பத்தில் கூறப்படுகிறது: 'அவன் எத்தகைய குறைபாடும் இல்லாத ஒரு வேதத்தைத் தன் அடியாருக்கு அருளினான்.* (1)' *சம்பவத்தின் நிறைவுப் பகுதியாகப் பின்வரும் வசனம் இடம்பெறு வதிலும் எந்த ஆச்சரியமும் இல்லை: 'உமக்கு அறிவிக்கப்படுகின்ற உம் இறைவனின் வேதத்தை அவர்களுக்கு எடுத்துரைப்பீராக. அவனது வார்த்தைகளை மாற்றக்கூடியவர் யாரும் இல்லை. அவனைத் தவிர எந்தப் புகலிடத்தையும் நீர் காண மாட்டீர்.* (27)'

*இந்த வேதத்தை அடிப்படையாகக் கொண்டு மனிதர்களை இரு பிரிவினராகப் பிரிக்கலாம். ஒரு பிரிவினர், இந்த வேதத்தின் மீது நம் பிக்கை கொண்டு இதன் தூதரைப் பின்பற்றக்கூடியவர்கள். மற்றொரு பிரிவினர், சத்தியத்தை விட்டு விலகி தங்களின் மனஇச்சைகளைப் பின்பற்றக்கூடியவர்கள். இங்கு அல்லாஹ் தன் தூதருக்கு முதல் பிரி வினருடன் சேர்ந்துகொள்ளும்படி கட்டளையிடுகிறான்.*

தம் இறைவனின் திருப்தியை நாடி காலையிலும் மாலையிலும் அவனை அழைத்துக் கொண்டிருப்போருடன் நீரும் உம்மை இணைத்துக்கொள்ளும். (28)

இரண்டாவது பிரிவினரைவிட்டு விலகியிருக்கும்படியும் அவன் கட்டளையிடுகிறான்.

யாருடைய உள்ளத்தை நம் நினைவைவிட்டும் அலட்சியத்தில் ஆழ்த்திவிட்டோமோ அத்தகைய மனிதனின் பேச்சை ஏற்றுக் கொள்ளாதீர். அவன் தன் மனஇச்சைப்படி நடப்பவன். அவனது விவகாரம் வரம்புமீறியதாகிவிட்டது. (28)

மறுமைநாள் நிலைபெறும்போது இரு பிரிவினரும் தங்களுக்குரிய இடத்தைப் பெறுவார்கள். ‘நாம் அக்கிரமக்காரர்களுக்காக நரகத்தைத் தயார்படுத்தி வைத்துள்ளோம். அதன் சுவர்கள் அவர்களைச் சூழ்ந்து கொள்ளும். (29)’ இறையச்சமுடையோர் அதற்கு மாறான வெகுமதியைப் பெறுவார்கள். ‘நிச்சயமாக நம்பிக்கை கொண்டு நற்செயல் புரிவோரின் கூலியை நாம் ஒருபோதும் வீணாக்கிவிட மாட்டோம் (30).’ தெளிவான இந்த விளக்கத்துக்குப் பிறகு பூமியில் உள்ள அனைவருக்கும் கூறப்படுகிறது: ‘நீர் கூறும், இது உங்கள் இறைவனிடமிருந்து வந்துள்ள சத்தியமாகும். ஆகவே, விரும்பியவர் நம்பிக்கை கொள்ளட்டும்; விரும்பியவர் நிராகரிக்கட்டும். (29)’

நம்பிக்கையாளன் தன் இறைவனை அறிந்தவன்; அவனுக்காகவே வாழ்பவன்; அவனுடைய சந்திப்புக்காகத் தன்னைத் தயார்படுத்திக் கொள்பவன். மரணம் என்பது வாழ்வின் முற்றுப்புள்ளி அல்ல என்பதையும் வாழ்க்கையை எந்த ஒன்றும் முடித்துவிடாது என்பதையும் மரணம் என்பது இவ்வுலக வாழ்விலிருந்து மறுவுலக வாழ்வை நோக்கிய இடம்பெயர்வு என்பதையும் அவன் அறிவான்.

ஆனால் நிராகரிப்பாளன் தன்னை மட்டுமே அறிந்து தனக்காக மட்டும் வாழக்கூடியவன். தன் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவே அவன் தன் வாழ்நாள் முழுவதையும் செலவிடுகிறான். மரணத்துக்குப் பின் வரக்கூடிய கேள்விக் கணக்கை அவன் நம்புவதில்லை. இவ்வுலக வாழ்வு தான் அவனுக்கு அனைத்தும்.

இந்த அத்தியாயத்தில் செல்வந்தனான ஒரு நிராகரிப்பாளனுக்கும் ஏழையான ஒரு நம்பிக்கையாளனுக்கும் மத்தியில் நடைபெறும் உரையாடலும் இடம்பெறுகிறது. ‘நீர் அவர்களிடம் ஓர் உதாரணத்தை எடுத்துரைப்பீராக, இரு மனிதர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவனுக்கு

*நாம் இரு திராட்சைத் தோட்டங்களை வழங்கி, அவற்றைச் சுற்றிலும் பேரீச்சை மரங்களை அமைத்திருந்தோம். அவ்விரண்டுக்குமிடையே வயல்களையும் ஏற்படுத்தியிருந்தோம் ... (32)' மற்றொருவருக்கு அவரைப் போன்று வழங்கப்படவில்லை.*

*கர்வம் கொண்ட செல்வந்தன் செருக்குடன் அந்த ஏழை மனிதரிடம் கூறினான்: 'நான் உன்னைவிட அதிகச் செல்வமுடையவன்; ஆள்பலம் மிக்கவன். (34)' உன்னைப் போன்ற ஒரு மனிதனை அவனது வறுமையின் காரணமாக ஏன் பழிக்கிறாய்? உன்னால் முடிந்தால் அவனுக்கு உதவி செய். உன்னுடைய நாவைப் பேணிக்கொள். யாருக்குத் தெரியும்? அவன் அல்லாஹ்விடத்தில் உன்னைவிடச் சிறந்தவனாக இருக்கலாம்.*

*தன்னுடைய வணக்க வழிபாடுகளைக் கொண்டு பெருமையடிக்கும் மனிதனைக்கூட அல்லாஹ் வெறுக்கிறான். அவன் பாவம்செய்த ஒரு மனிதனிடம், 'அல்லாஹ் உன்னை மன்னிக்க மாட்டான்!' என்று கூறினால் மறுமைநாளில் அல்லாஹ் கூறியவனிடம் கூறுவான், 'என்னிடம் உள்ள வற்றுக்கு நீ உரிமையாளனாக இருந்தாயா? நான் அவனை மன்னித்து விட்டேன். உன்னுடைய செயல்கள் அனைத்தையும் வீணாக்கிவிட்டேன்.'*

*நம்மிடம் இருப்பவை யாவும் அல்லாஹ் அளித்த அருட்கொடைகளே என்ற பார்வையைத்தான் இஸ்லாம் நமக்குக் கற்றுத்தருகிறது. ஒரு முஸ்லிம் செய்யக்கூடிய பிரார்த்தனைகளில் இதுவும் ஒன்று, 'அல் லாஹ்வே, நீ கொடுப்பதை யாராலும் தடுக்க முடியாது. நீ தடுப்பதை யாராலும் கொடுக்க முடியாது.'*

*தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவைக் கொண்டுதான் தாம் செல் வத்தைச் சம்பாதித்தோம் என்று பலர் எண்ணுகிறார்கள். காறூனும் இவ்வாறுதான் கூறினான்: 'இச்செல்வங்கள் அனைத்தும் என் அறிவால் தான் எனக்குக் கிடைத்துள்ளன. (28:78)'*

*ஒரு பேச்சுக்கு உங்களை மிகத் திறமையானவர் என்றும் உங்களின் வியக்கத்தக்க திறமையின் மூலம் செல்வங்கள் பலவற்றை நீங்கள் சேக ரித்துவிட்டீர்கள் என்றும் வைத்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு இந்தத் திறமையை வழங்கியவன் யார்? இந்த ஆற்றலைக் கொண்டு உங்களைச் சிறப்பித்தவன் யார்?*

*உங்களிடம் இருக்கின்ற யாவற்றையும் அல்லாஹ்வின் பக்கம் இணைப்பதே சரியானது. ஏழையாக இருந்த நம்பிக்கையாளன் செல்வச் செருக்கு கொண்ட தன் நண்பனுக்கு இதைத்தான் தெளிவுபடுத்தினான்.*

*‘நீ உன் தோட்டத்தில் நுழைந்தபோது, அல்லாஹ் நாடியவையே நடக்கும், அல்லாஹ்வையன்றி யாரிடத்திலும் எவ்வித ஆற்றலும் இல்லை என்று ஏன் கூறவில்லை? நான் செல்வங்களிலும் பிள்ளைகளிலும் உன்னைவிடக் குறைந்தவனாக இருப்பதாக நீ கருதினால் என் இறைவன் உன் தோட்டத்தைவிடச் சிறந்த ஒன்றை எனக்கு வழங்கலாம். வானத்திலிருந்து ஆபத்தை இறக்கி உன் தோட்டத்தை வெட்டவெளியாக்கி விடலாம் அல்லது நீங்கள் பெற முடியாதபடி தண்ணீர் வற்றிவிடலாம்.’* (39,40)

*அவன் எதிர்பார்த்ததே நிகழ்ந்தது. வானத்திலிருந்து இறங்கிய ஆபத்து அவன் தோட்டத்தை ஒன்றுமில்லாத வெட்டவெளியாக்கிவிட்டது. அவன் வெட்கப்பட்டு வருத்தத்துடன் கூறலானான்: ‘அந்தோ, நான் என் இறைவனுக்கு இணைவைக்காமல் இருந்திருக்கக் கூடாதா! அல்லாஹ்வைத் தவிர அவனுக்கு உதவிபுரியும் கூட்டத்தார் யாரும் இருக்கவில்லை. தானே பழிவாங்கக்கூடியவனாகவும் அவன் இல்லை.* (42,43)’

*இவன் அல்லாஹ்வுக்கு இணையாக யாரை ஆக்கினான்? தன்னை அல்லாஹ்வுக்கு இணையாக ஆக்கிக்கொண்டான். தன் மனஇச்சையைக் கடவுளாக்கி வழிபட்டுவந்தான்.*

*பொதுவாக மனிதன் தன் நலனில் பெரும் அக்கறை கொண்டவன். தன் தேவையை நிறைவேற்றுவதற்காக ஓடக்கூடியவன். ஆனாலும் இந்த ஓட்டம் அவனது வெளியைச் சுருக்கிவிடுகிறது. தன் தேவையைத் தவிர வேறு எதையும் அவன் அறியாதவனாக ஆகிவிடுகிறான். தன் உள்ளத்திலோ நடத்தையிலோ அல்லாஹ்வுக்கென அவன் எந்த இடத்தையும் அளிப்பதில்லை. தன்னை முதலாமானவனாகவும் இறுதியானவனாகவும் அவன் எண்ணிக்கொள்கிறான்.*

*தற்கால நாகரிகம் இவ்வகையான மனிதர்களையே உருவாக்கியிருக்கிறது. அவர்கள் இந்த மண்ணோடு ஒட்டிவிட்டார்கள். இதற்கு அப்பால் இருக்கின்ற எதையும் அவர்கள் பார்ப்பதில்லை.*

*அவர்கள் மறுமைநாளை மிக தூரமான ஒன்றாகக் கருதுகிறார்கள். அதைக் குறித்து சிந்திப்பதோ பேசுவதோ அறிவாளிகளின் வேலை அல்ல என்றும் அது மூடநம்பிக்கையின் ஓர் அம்சம் என்றும் கருதுகிறார்கள். இவர்களைக் குறித்து அல்லாஹ் கூறுகிறான்:*

*அவர்களுக்கு உலக வாழ்வின் உதாரணத்தைக் கூறுவீராக. அது நாம் வானத்திலிருந்து நீரை இறக்கி, அதனால் பூமியின் தாவரங்கள் செழித்துவளர்ந்து, பின்னர் அவை காற்றால் அடித்துச்செல்லப்படும்*

*காய்ந்த சருகுகளாகிவிடுவதைப் போன்றதாகும். அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் பேராற்றலுடையவனாக இருக்கிறான்.* (45)

இவ்வுலக வாழ்வு அழியக்கூடியதாக இருந்தாலும் அது முழுக்க முழுக்க தீமையை மட்டும் கொண்டதல்ல. அதில் வழங்கப்படும் வாய்ப்புகளும் அதிகாரமும் அல்லாஹ்வின் அருளாகும். அவன் தன் தூதர் யூசுஃபுக்கு உயர்ந்த பதவிகளை வழங்கிய பிறகு கூறினான்: ‘*இவ்வாறு நாம் யூசுஃபுக் குப் பூமியில் அனைத்து வசதிகளையும் வழங்கினோம். அவர் எங்கு விரும்பினாலும் வசித்துக்கொள்ளலாம். நாம் நாடியோர்மீது நம் அருளைப் பொழிகிறோம். நன்மைசெய்வோரின் கூலியை நாம் வீணாக்கி விடுவதில்லை.* (12:56)’

இந்த அதிகாரம் சத்தியத்துக்கு உறுதுணையாக, பலவீனர்களுக்கு உதவியாக, மனிதச் சமூகத்துக்கு நன்மையளிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

வானம், பூமி ஆகியவைகுறித்த வாசிப்பும் ஆராய்ச்சியும் பொங்கும் நீரூற்று போல ஈமானை அதிகரிக்கச் செய்கின்றன. மனிதர்களுக்கு அவர்களின் இறைவனைக் குறித்து சரியான முறையில் அறிவிக்கின்றன. திருக்குர்ஆனும் அல்லாஹ்வின் படைப்புகளில் சிந்தனை செலுத்துவதைச் சரியான ஈமானை அடைவதற்கான வழிமுறையாக எடுத்துரைக்கிறது.

அல்லாஹ் செல்வத்தைக் குற்றவாளிகளுக்கு மட்டும் உரித்தானதாக ஆக்கி, தன் நல்லடியார்களுக்குத் தடைசெய்யப்பட்டதாக ஆக்கவில்லை.

தோட்டக்காரர்மீது அல்லாஹ் கோபம் கொண்டது அவர் வைத்திருந்த தோட்டத்தின் காரணமாக அல்ல. சிந்தனையற்ற மூடனாக இருந்தான் என்பதால் அவன் அல்லாஹ்வின் கோபத்துக்கு ஆளானான்.

பாருங்கள், அவன் கூறுவதை:

*அவன் தனக்குத்தானே அநீதி இழைத்தவனாகத் தன் தோட்டத்தினுள் நுழைந்தான். அவன் கூறினான், ‘இது என்றைக்காவது அழிந்துவிடும் என்றோ மறுமை என்றாவது நிலைபெறும் என்றோ நான் கருதவில்லை. ஒருவேளை நான் என் இறைவனிடம் திரும்பக் கொண்டுசெல்லப்பட்டால் இதைவிடச் சிறந்த இடத்தையே பெறுவேன்.’* (35,36)

நிராகரிப்புக்கும் கர்வத்துக்கும் கூலியாக அவனுக்கு இவ்வாறெல்லாம் வழங்கப்பட வேண்டுமா? இந்த மூடன் மறுமையில் நரகத்தின் எரிபொருளாக இருப்பதற்கே உகந்தவன், இந்த உலகில் அவனுக்கு இழப்பு ஏற்பட்டதைப் போல.

*இதனடிப்படையில் இந்தச் சம்பவத்தின் இறுதியில் இறைவனின் விமர்சனமாக இடம்பெறும் வசனத்தை நாம் புரிந்துகொள்கிறோம்: 'செல்வங்களும் பிள்ளைகளும் இவ்வுலக வாழ்வின் அலங்காரங்கள்தாம். நன்மையைப் பொறுத்து நிலையான நற்காரியங்களே உம் இறைவனிடம் மிகச் சிறந்ததாகும்; நம்பிக்கை வைப்பதற்கும் மிக ஏற்றதாகும்.* (46)'

*செல்வங்களும் பிள்ளைகளும் இவ்வுலக வாழ்வின் அலங்காரங்கள். அவை கண்ணியத்தை, விடுதலையைப் பெறும் போராட்டத்துக்கு உதவக்கூடியவையாக இருக்க வேண்டும். இஸ்றாயீலின் மக்களுக்கு அல்லாஹ் உதவிசெய்து வெற்றியளித்தபோது அவன் கூறினான்: 'பின்னர் அவர்களுக்கு எதிராக உங்களுக்கு நாம் வெற்றியளித்து, செல்வங்களாலும் மக்களாலும் உங்களுக்கு உதவிபுரிந்து உங்களைப் பெரும் கூட்டத்தினராக ஆக்கினோம்.* (17:6)'

*ஹதீஸில் கூறப்பட்டுள்ளது, 'நல்லடியாருக்கு வழங்கப்படும் நல்ல செல்வங்கள் எத்துணைச் சிறப்பானவை!'*

*தியாகத்துக்கும் ஜிஹாதுக்குமான உயிரோட்டம் உலக மோகத்துக்கு முன்னால் தோல்வியடையும்போது இன்பங்கள் இழப்புக்குக் காரணி களாக அமைந்துவிடுகின்றன.*

*செல்வத்துடன் கஞ்சத்தனமும் பேராசையும் கலந்துவிட்டால் அது பெரும் துன்பமாகிவிடுகிறது.*

*ஆனால், நம்பிக்கையாளன் தன் செல்வங்களை அல்லாஹ்வின் பாதையில் செலவுசெய்கிறான். அவன் அதன் மூலமாக உன்னதமான வெகுமதியைப் பெறும் வணக்கசாலியாக ஆகிவிடுகிறான்.*

*உலக மோகத்தைப் பழித்துரைக்கும் ஹதீஸ்களை அவற்றின் வரம் புக்குள் நின்றுதான் நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவற்றின் வரம்பு களை மீறிவிடக் கூடாது.*

*தூய்மையான, கண்ணியமான ஒரு வாழ்க்கை வாழும்படி தூண்டும் பின்வரும் ஹதீஸும் இந்த வகையைச் சார்ந்ததுதான்: 'நபியவர்கள் கூறினார்கள், யார் மறுமையை நோக்கமாகக் கொண்டுள்ளாரோ அவரது உள்ளத்தில் அல்லாஹ் தன்னிறைவை ஏற்படுத்திவிடுவான். அவரது விவகாரங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து வைப்பான். உலகம் அவரை நோக்கி வரும். யாருடைய நோக்கம் உலகமாக இருக்குமோ அவருக்கு முன்னால் அல்லாஹ் வறுமையை ஏற்படுத்துவான். அவரது விவகா ரங்களைச் சிதறடிப்பான். அவருக்கு விதிக்கப்பட்டதைத் தவிர உலகி*

லிருந்து வேறு எதையும் அவர் பெற முடியாது. அவர் ஏழ்மை நிலையில் தான் மாலைப் பொழுதை அடைவார். ஏழ்மைநிலையில்தான் காலைப் பொழுதை அடைவார். எந்த அடியார் தன் உள்ளத்தோடு அல்லாஹ்வை நோக்கி வருவாரோ அல்லாஹ் அடியார்களின் உள்ளங்களை அன்பாலும் இரக்கத்தாலும் அவர் பக்கம் திருப்புவான். நன்மையான ஒவ்வொன்றையும் அவருக்கு விரைந்து அளிப்பான்.'

இந்த ஹதீஸ், பேராசை என்னும் பித்திலிருந்தும் உலக மோகத்தி லிருந்தும் அடியார்களை விடுவிக்கும் அருமருந்தாக இருக்கிறது.

மிகவும் கவலையளிக்கும் விசயம் என்னவெனில், மனிதன் தன் இறைவனை மறந்து உலக இன்பங்களில் மூழ்கிவிடுவதுதான். இறை வனின் சந்திப்புக்காக எந்த ஒன்றையும் அவன் தயார்படுத்தி வைப்ப தில்லை. நிச்சயமாக நிகழக்கூடிய மறுமைநாள் அவனுக்குக் கற்பனை யாகத் தெரிகிறது.

இதுபோன்று அவன் சுயநினைவைத் தொலைப்பதால் இழப்பைத் தவிர வேறு ஒன்றும் நிகழப்போவதில்லை. ஆகவே, சந்திப்பு நிகழும் அந்த நாளைத் திருக்குர்ஆன் அவனுக்கு நினைவூட்டுகிறது.

> நாம் மலைகளை நகர்த்தும் அந்நாளில் பூமியை முற்றிலும் வெட்ட வெளியாகக் காண்பீர். நாம் அவர்களை ஒன்றுசேர்ப்போம். அவர் களில் யாரையும் விட்டுவிட மாட்டோம். அனைவரும் உம் இறை வனுக்கு முன்னால் வரிசையாக நிறுத்தப்படுவார்கள். (47,48)

மனிதர்களில் பெரும்பாலோர் அலட்சியத்திலும் மறதியிலும் மூழ்கி யிருக்கிறார்கள். நிகழ்காலத்தையும் கடந்தகாலத்தையும் எதிர்காலத்தை யும் மறந்துவிடுகிறார்கள். ஆனால் அவையோ அவர்களைக் குறித்த நுணுக்கமான விவரங்களோடு அவர்களை எதிர்கொள்ளும்.

> அவர்களுக்கு முன்னால் பதிவேடு வைக்கப்படும். குற்றவாளிகள் அதில் உள்ளவற்றைக் கண்டு பயந்தவர்களாக, 'அந்தோ, எங்கள் கேடே! சிறியதோ பெரியதோ எதையுமே இப்பதிவேடு பதிவு செய்யாமல் விட்டுவைக்கவில்லையே!' என்று புலம்புவதை நீர் காண்பீர். தாங்கள் செய்தவை அனைத்தும் தங்களுக்கு முன்னால் இருப்பதை அவர்கள் காண்பார்கள். உமது இறைவன் எவர்மீதும் அநீதி இழைக்க மாட்டான். (49)

விசாரணை நாள் திடீரென நிகழக்கூடிய நாளாகவும் ஏமாற்றம் தரும் நாளாகவும் இருக்கும். தாங்கள் தவறான பாதையில்தான் இருந்தோம்

என்பதை இணைவைப்பாளர்கள் உறுதியாக அறிந்துகொள்வார்கள். தாங்கள் எந்த அளவு பாவங்கள் செய்தோம் என்பதைப் பாவிகளும் உணர்ந்துகொள்வார்கள்.

இறைவன் அளிக்கும் அவகாசத்தைப் பார்த்து தற்கால மனிதர்கள் ஏமாந்துவிடுகிறார்கள். இறை வேதனை சூழ்ந்துவிட்டால் பின்னர் பாவ மன்னிப்பு கோரவும் அவர்களால் முடியாது. 'அந்த ஊர்வாசிகள் அநியாயம்செய்தபோது நாம் அவர்களை அழித்துவிட்டோம். அவர்களை அழிப்பதற்கு ஒரு குறிப்பிட்ட தவணையையும் நிர்ணயித்திருந்தோம். (59)'

❖ ❖ ❖

இரு சம்பவங்களுக்குப் பிறகு மூன்றாவது சம்பவம் இடம்பெறுகிறது. இஸ்றாயீலின் சமூகத்துக்கு அனுப்பப்பட்ட மூசாவும் இன்னொரு தூதரும் சேர்ந்து அல்லாஹ்வின் நல்லடியார்களில் ஒருவராக இருந்த 'கிள்ரை' சந்தித்த சம்பவம். நபிமொழிகளிலும் கிள்ரைக் குறித்த குறிப்பு இடம்பெற்றுள்ளது.

என்னுடைய பார்வையில் இந்தச் சம்பவம் 'அல்லாஹ்வால் மட்டுமே பலனளிக்கவோ தீங்களிக்கவோ முடியும்.' என்ற தத்துவத்தை அல்லது 'நீங்கள் மறைவானவற்றை அறிந்தால் எது நிகழக்கூடியதோ அதையே தேர்ந்தெடுத்திருப்பீர்கள்.' என்ற தத்துவத்தைத் தெளிவுபடுத்தக்கூடியதாக இருக்கிறது. இவ்வுலக வாழ்க்கையில் எது நமக்குச் சரியானதாக, பயனளிக்கக் கூடியதாகத் தெரிகிறதோ அதன்படி செயல்படுகிறோம். பின்னர், நாம் எதிர்பார்க்காத வேறொரு கவலையளிக்கும் அல்லது நமக்குத் தீங்களிக்கும் விளைவை எதிர்கொள்கிறோம். அல்லாஹ் அமைத்த விதியை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வதே மனிதனுக்கு நல்லது. அல்லாஹ் கூறுகிறான்: 'ஒரு பொருள் நன்மையாக இருக்க நீங்கள் அதனை வெறுக்கலாம். ஒரு பொருள் தீமையாக இருக்க நீங்கள் அதனை விரும்பலாம். அல்லாஹ்வே நன்கறிவான். நீங்கள் அறிய மாட்டீர்கள். (2:216)'

நம்முடைய செயல்பாடுகளில் நாம் நம்பிக்கை இழந்துவிட வேண்டும் என்பதையா இந்த வசனம் வலியுறுத்துகிறது? இல்லை. சரியான வழிமுறையைக் கடைப்பிடிக்கும்படியும் விளைவை அல்லாஹ்வின் வசம் விட்டுவிடும்படியும் நமக்கு அறிவுறுத்தப்படுகிறது.

மார்க்கம் கூறாத, அறிவுக்கு முரணான ஒரு காரியத்தைச் செய்துவிட்டு விதியின் மீது பழிபோடுவதை இந்த வசனம் அனுமதிக்கிறதா? நிச்சயமாக இல்லை. யார் மார்க்கத்துக்கும் அறிவுக்கும் முரணான காரியத்தைச் செய்வாரோ அவர் விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார். அவரது எந்தப் பொய்யான காரணமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

கிள்ருடன் மூசாவுக்கு நடந்த அனுபவம் தனித்துவமான வழிமுறை யில் உன்னதமான வஹீயின் வழிகாட்டலில் முழுமையடைந்தது. இரு மனிதர்களும் தங்களுக்கு இடப்பட்ட தங்கள் இறைவனின் கட்டளையை நிறைவேற்றினார்கள்.

வஹீயின் காலகட்டம் நிறைவடைந்துவிட்டது. யாராவது ஒருவர் தீய காரியத்தைச் செய்துவிட்டு அல்லாஹ்வின் கட்டளையின் பேரில்தான் இவ்வாறு செய்தேன் என வாதிட்டால் அவர் பொய்யராவார். அவர் செய்த தீய காரியத்துக்கேற்ப அவருக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டியதும் அவசியமாகிவிடுகிறது.

மூசாவுக்கு நிகழ்ந்த சம்பவம் அவருக்கு மட்டுமே உரித்தானதாகும். அவர் செய்த ஒரு பிழையின் காரணமாக அல்லாஹ் அவருக்கு அளித்த தாகும். அவர் சத்தியத்தை எடுத்துரைத்துக் கொண்டிருந்தபோது ஒருவர் அவரிடம், ‘உங்களைவிட அறிந்தவர்கள் யாரேனும் இருக்கிறார்களா?’ என்று கேட்டபோது அவர் ‘இல்லை’ எனக் கூறிவிட்டார். அவர், அனைத் தையும் அறிந்தவன் அல்லாஹ் ஒருவனே என்று கூறியிருக்க வேண்டும். இந்த விசித்திரமான சம்பவத்தின் மூலம், ஒவ்வொரு அறிவாளிக்கும் மேல் ஒரு அறிவாளி இருப்பதை உணர்த்தி அவருக்கு ஒழுக்கம் கற்பிக்க அல்லாஹ் நாடிவிட்டான்.

சம்பவம் ஆளுமைமிக்க மனிதர்களுக்கு அவசியமான இரண்டு மகத் தான பண்புகளை -உறுதியான நம்பிக்கையும் நீண்ட பொறுமையும்- புகழ்ந்தவாறு தொடங்குகிறது. ‘மூசா தம் சீடரிடம், இரு கடல்கள் சங்கமிக்கும் இடத்தை அடையும்வரை நான் நடந்துகொண்டே இருப் பேன் அல்லது பல்லாண்டுகள்வரை இப்படியே நடந்துகொண்டிருப் பேன் என்று கூறியதை நினைவுகூர்வீராக. (60)’ அதாவது, நான் கிள்ரைக் கண்டடையும்வரை ஓய மாட்டேன், அதற்காகப் பல ஆண்டுகளைச் செலவிட்டாலும் சரியே.

மூசா மனஉறுதிமிக்க தூதர்களில் ஒருவராவார். இந்தப் பண்புகள் அவரிடம் இருப்பது ஒன்றும் புதுமையானதல்ல. அப்போதே உமர் நல்லவரின் திறமையின்மையையும் வலிமையானவரின் மோசடியையும் குறித்து பேசியுள்ளார். உண்மையில் மகத்தான செயல்கள் இறையச்ச மும் வலிமையும் ஒருங்கே வாய்க்கப்பெற்றவர்களின் மூலமே முழு மையடைகின்றன. நல்லவர்களாக இருந்தும் பலவீனர்களாக இருப்ப வர்களால் எந்த நன்மையும் இல்லை.

மூசாவும் கிள்ரும் சந்தித்துக்கொண்டார்கள். மூசா மிகவும் பணிவாக அவரிடம் கேட்டார்: ‘உங்களுக்கு வழங்கப்பட்ட அறிவை நீங்கள் எனக்குக்

*கற்றுக்கொடுக்கும் பொருட்டு நான் உங்களுடன் இருக்கலாமா?* (66)' *அதில் உள்ள சிரமங்களைத் தெளிவுபடுத்தியவராகக் கிள்ர் கூறினார்: 'உம்மால் என்னுடன் பொறுமையாக இருக்க முடியாது! நீர் அறியாத விசயத்தில் எவ்வாறு உம்மால் பொறுமையாக இருக்க முடியும்?* (67,68)'

*ஆனாலும் மூசா, தாம் கட்டுப்பட்டுப் பொறுமையாக இருப்பதாக வாக்களித்தார். ஆனால், தம்மை ஏற்றிவந்த கப்பலைக் கிள்ர் துளையிடுவதைக் கண்டதும் தம் பொறுமையையும் வாக்குறுதியையும் மறந்துபோனார். மோசமான அந்தச் செயலை ஆட்சேபித்தார். தொடர்ந்து அடுத்தடுத்த இரு சம்பவங்களிலும் அவர் தம் ஆட்சேபணைகளை வெளிப்படுத்தினார். இறுதியாக அவற்றுக்கான காரணம் அவருக்குத் தெளிவுபடுத்தப்பட்டது. 'அந்தக் கப்பல் கடலில் வேலைசெய்துகொண்டிருந்த சில ஏழைகளுக்குரியது. அவர்களுக்கு முன்னால் இருந்த ஓர் அரசன் ஒவ்வொரு கப்பலையும் பலவந்தமாக அபகரித்துக் கொண்டிருந்தான். ஆகவேதான் அதனைப் பழுதாக்க நாடினேன்.* (79)'

*குறையற்ற கப்பல்கள் அனைத்தையும் அந்த அரசன் பறித்துக்கொண்டிருந்தான். இந்தக் கப்பல் துளையிடப்பட்டிருப்பதைக் கண்டதும் அவன் விட்டுவிட்டான். அதில் இடப்பட்ட துளை அது நிலைத்திருப்பதற்குக் காரணமாக அமைந்துவிட்டது.*

*அவர் சிறுவனைக் கொன்றதற்கான காரணம், அவன் நிராகரிப்பாளனாகவும் அநியாயக்காரனாகவும் இருந்தான். அவனது தீங்கிலிருந்து அவனுடைய பெற்றோர்களை அல்லாஹ் காப்பாற்ற நாடினான். வேறொரு அத்தியாயத்தில் அல்லாஹ் கூறுகிறான்: 'உங்கள் தந்தையர்களோ உங்கள் பிள்ளைகளோ அவர்களில் அதிகம் உங்களுக்குப் பலனளிப்பவர்கள் யார் என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள்.* (4:11)'

*இங்கு கவனிக்கப்பட வேண்டியது கிள்ர் இறுதியாக மூசாவிடம் கூறியதுதான், 'நான் என் விருப்பப்படி எதையும் செய்யவில்லை. இதுதான் நீர் பொறுமையாக இருக்க முடியாதிருந்த விசயங்களின் உண்மைநிலையாகும்.* (82)'

*குறிப்பிட்ட இந்தப் பணிகளை அல்லாஹ் தன் நல்லடியார்களில் ஒருவரின் மீது சுமத்தியிருந்தான். யாரேனும் ஒருவர் இதுபோன்ற செயல்களைத் தன் இஷ்டப்படி செய்தால் அது ஷரீஅத்தின் வரையறைகளை மீறியதாகவும் பூமியில் விளைவிக்கப்படும் குழப்பமாகவும் ஆகிவிடும். மறைவானவை யாவற்றையும் அல்லாஹ்வே அறிவான். அவன் தான் நாடியவற்றைத் தான் நாடியோரிடம் ஒப்படைக்கிறான்.*

தங்களின் மனஇச்சைப்படி செயல்படுபவர்கள் மற்றவர்கள்மீது அநீதி இழைக்கிறார்கள். அவர்கள் தண்டனையிலிருந்து தப்ப முடியாது.

அல்லாஹ் ஒப்படைத்த பணிகளை நிறைவேற்றுவதற்காகவே கிள்ர் புறப்பட்டார். அவரைத் தவிர வேறு யாருக்கும் இதுபோன்ற வாய்ப்பு வழங்கப்படாது.

இங்கு ஒரு கேள்வி எழலாம், 'கிள்ர் அல்லாஹ்விடத்தில் மூசாவை விடச் சிறந்தவரா?'

ஒருபோதும் இல்லை. மூசா மனிதச் சமூகத்துக்கு வழிகாட்டும் பொருட்டு அல்லாஹ் தேர்வுசெய்த மனஉறுதிமிக்க தூதர்களில் ஒருவர். அவர்கள் நூஹ், இப்ராஹீம், மூசா, ஈசா, முஹம்மது ஆகியோராவர். மனிதர்களில் யாரும் இந்த ஐந்து தூதர்களைவிடச் சிறந்தவராக ஆகிவிட முடியாது.

கிள்ருக்கு வழங்கப்பட்ட சிறப்பம்சத்தின் காரணமாக அவர் மூசாவை விடச் சிறந்தவராக ஆகிவிட மாட்டார். தனித்தன்மை யாரையும் சிறந்தவராக ஆக்கிவிடாது. ஒரு மனிதரிடம் காணப்படும் பல்வேறு வகையான சிறப்பியல்புகளின் காரணமாகவே அவர் சிறப்படைகிறார். ஒரேயொரு சிறப்பம்சத்தின் காரணமாக அல்ல.

தன்னை நலம் விசாரிக்க வருபவர்களைவிடக் கூர்மையான பார்வைத் திறனைப் பெற்றுள்ள நோயாளி அதன் காரணமாக அவர்களைவிடச் சிறந்தவராக ஆகிவிடுவாரா என்ன?

❖ ❖ ❖

மார்க்கப் பற்றுள்ளவர் என்று சொல்லப்பட்டாலே அவர் உலக இன்பங்களைவிட்டு முற்றிலும் விலகியவராக இருக்க வேண்டும் என்றுதான் நினைவுகூரப்படுகிறது. உண்மையில் உலகப் பற்றற்றவராக அல்லது திறமையற்றவராக இருப்பவரிடத்தில் எந்த நன்மையும் இல்லை.

இந்த அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ள நான்காவது சம்பவம் அரசாட்சியும் ஞானமும் வழங்கப்பட்ட ஒரு அரசனைக் குறித்து பேசுகிறது. அவரது மார்க்கப் பற்று நேர்மைக்கான அல்லது இறையச்சத்துக்கான சிறந்த உதாரணமாக எடுத்துரைக்கப்படுகிறது. அவர்தான் துல்கர்னைன்.

அவர் கிரேக்கத்தைச் சேர்ந்தவராகவோ பாரசீகத்தைச் சேர்ந்தவராகவோ சீனாவைச் சேர்ந்தவராகவோ யமனைச் சேர்ந்தவராகவோ இருந்திருக்கலாம் என்பது நமக்கு முக்கியம் அல்ல. இங்கு நமக்கு அவசியமானது, அல்லாஹ்

அவருக்கு அதிகாரத்துக்கான வழிகளை இலகுபடுத்தினான். அவர் அவன் இலகுவாக்கித் தந்த பாதைகளில் சென்றார். அவர் மாபெரும் அரசாட்சியைப் பெற்றிருந்தார். கல்வியையும் ஈமானையும் விவேகத்தையும் நேர்மையையும் ஒருசேரப் பெற்றவராக இருந்தார்.

அவர்கள் துல்கர்னைனைப் பற்றி உம்மிடம் கேட்கிறார்கள். நீர் கூறும், 'அவரைப் பற்றி நான் உங்களுக்கு எடுத்துரைப்பேன்.' நாம் அவருக்குப் பூமியில் அதிகாரம் வழங்கியிருந்தோம். எல்லா வகையான வசதிகளையும் அவருக்கு அளித்திருந்தோம். அவர் ஒரு வழியைப் பின்பற்றிச்சென்றார். (83-85)

அல்லாஹ் அவருக்காகத் திறந்த நன்மையின் வாயில்கள் அனைத்திலும் அவர் நுழைந்தார். தம் இறைவனின் திருப்தியைப் பெறுவதில் வெற்றி பெற்றார்.

அல்லாஹ் அவருக்கு வழங்கிய ஆற்றல்களைக் கொண்டு அவர் புறப்பட்டுப் பூமியின் பல பாகங்களிலும் பயணம்செய்தார். அதற்குப் பிறகு வேறு இடமே இல்லை என்று சொல்லும் அளவுக்கு அவர் பூமியின் விளிம்புவரை பயணம்செய்தார். சூரியனின் கதிர்கள் சேற்றுநீரில் மறைவதை -அவருக்குத் தோன்றியவாறு- கண்டார். அங்கு நல்லவர்களையும் தீயவர்களையும் கொண்ட ஒரு சமூகத்தைக் கண்டார். அல்லாஹ் அவருக்கு அறிவித்தான்:

'நீர் விரும்பினால் அவர்களைத் தண்டிக்கலாம். விரும்பினால் அவர்களுடன் நல்ல முறையில் நடந்துகொள்ளலாம்.' அதற்கு அவர், 'அநீதி இழைத்தவரை நாம் தண்டிப்போம். பின்னர் அவர் தம் இறைவனிடம் கொண்டுசெல்லப்படுவார். அவன் அவருக்குக் கடும் தண்டனையளிப்பான்.' என்று கூறினார். ஆனால், நம்பிக்கை கொண்டு நற்செயல் புரிபவருக்கு அழகிய கூலி உண்டு. நாம் நம் கட்டளையில் எளிதானதையே அவருக்குக் கூறுவோம். (86-88)

இதுதான் நேர்மையான ஆட்சியாளனின் நீதிமிக்க அரசியல்.

மற்றொரு பயணத்தில் அவர் மேற்குத் திசையை அடைந்தார். அங்கு மிகவும் பின்தங்கிய ஒரு சமூகத்தைக் கண்டார். சூரியன் நேரடியாக அவர்களின் மீது விழுந்தது. எந்தத் தடுப்பும் அதனை மறைக்கவில்லை. அவர்களுக்கு மத்தியில் அவர்களின் நிலையைச் சீர்படுத்தக்கூடிய ஒருவரை அவர் விட்டுவிட்டுச் சென்றிருக்கலாம்.

மற்றுமொரு பயணத்தில் இரண்டு தடுப்புகளுக்கு மத்தியில் உள்ள பகுதியை அடைந்தார். அங்கும் மிகவும் பின்தங்கிய மக்கள் வாழ்ந்து

கொண்டிருப்பதைக் கண்டார். அவர்களுக்கு அருகில் வசித்தவர்கள் அவர்கள்மீது தாக்குதல் தொடுத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் கேட்டார்கள்: ‘துல்கர்னைனே, யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினர் பூமியில் குழப்பம் விளைவிக்கிறார்கள். ஆகவே, எங்களுக்கும் அவர்களுக்கும் இடையே ஏதேனும் தடுப்பை ஏற்படுத்த நாங்கள் உமக்கு ஒரு தொகையை நிர்ணயிக்கலாமா? (94)’

அவர்களின் செல்வம் தமக்குத் தேவை இல்லை என்றும் அல்லாஹ் தமக்கு வழங்கியிருப்பதே போதுமானது என்றும் துல்கர்னைன் அறிவித்தார். எதிரிகளிடமிருந்து அவர்களைக் காக்கும் பொருட்டு ஒரு பெரும் தடுப்பை ஏற்படுத்த உதவிசெய்யும்படி அவர்களிடம் கூறினார். ‘நீங்கள் உழைப்பால் எனக்கு உதவுங்கள். நான் உங்களுக்கும் அவர்களுக்கும் இடையே ஒரு சுவரை எழுப்பிவிடுகிறேன். (95)’

இங்கு பொறியியலில் துல்கர்னைன் பெற்றிருந்த திறமை வெளிப்பட்டது. ஒரு பலமான இராணுவச் சுவரை எழுப்பி, அதில் இரும்பையும் செம்பையும் பாறையையும் உருக்கி ஊற்றினார். அடித்தளத்தைப் பலப்படுத்தி அதன் சுவர்களை உயர்த்தினார். இரண்டு மலைகளுக்கும் இடைப்பட்ட பகுதியைச் சரிசெய்தார். எதிரிகளிடமிருந்து காக்கக்கூடிய வலுவான ஒரு தடுப்பை எழுப்பினார். ‘யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினரால் அதன் மீது ஏறவும் முடியாது, அதில் துளையிடவும் முடியாது என்றார். மேலும் அவர் கூறினார், இது என் இறைவனின் அருளாகும் ... (97,98)’

இந்த மனிதரைக் குறித்து வாசிக்கும்போது கவலையை உணர்கிறேன். அன்று அவர் வெளிப்படுத்திய நுணுக்கமான இந்தத் திறமையை இன்றைய முஸ்லிம்கள் அறிய மாட்டார்கள். அவர்களைவிட மற்றவர்களே திறமை யானவர்களாக, நிபுணர்களாக இருக்கிறார்கள்.

வாழ்க்கையின் பல விவகாரங்களில் நிபுணத்துவம் பெற்றவர்களாக, கண்டுபிடிப்பாளர்களாக முஸ்லிம் அல்லாதவர்களே இருக்கிறார்கள்.

விசித்திரம் என்னவென்றால், உலக விவகாரங்களில் நாம் கண்டுபிடிப்பை நிகழ்த்துவதற்குப் பதிலாக மார்க்க விவகாரங்களில் புதுமைகளைப் புகுத்திக் கொண்டிருக்கிறோம். அதற்கு அல்லாஹ் எவ்வித ஆதாரத்தையும் இறக்கிவைக்கவில்லை.

அவை நம்முடைய அறிவாற்றலையும் ஒழுக்கத்தையும் வீணாக்கிக் கொண்டிருக்கின்றன. நம்மை மிகவும் பின்தங்கியவர்களாக ஆக்கி விட்டன.

*திருக்குர்ஆன் இந்த அத்தியாயத்தில், மறுமைநாள் நெருங்கும்போது பல நகரங்கள் இறுதிக் காலத்தில் வேதனைக்குள்ளாக்கப்படும் என்ற செய்தியைக் குறிப்பிடுகிறது: 'இந்த ஊர்வாசிகள் அநியாயம்செய்தபோது நாம் அவர்களை அழித்துவிட்டோம். அவர்களை அழிப்பதற்கு ஒரு குறிப்பிட்ட தவணையையும் நிர்ணயித்திருந்தோம். (59)'*

*அல்இஸ்றா என்ற அத்தியாயத்தில் அல்லாஹ் கூறுகிறான்: 'எந்த ஊரையும் நாம் மறுமைநாளுக்கு முன்பே அழிக்காமல் அல்லது கடும் வேதனையால் பிடித்துக்கொள்ளாமல் விட்டுவிடுவதில்லை. இது பதி வேட்டில் எழுதப்பட்டுள்ள விசயமாகும். (17:58)'*

*இந்த வேதனை யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினரின் கரங்களால் நிகழ்த்தப்படுமா அல்லது அவர்கள் வெளியேறி வருவது தற்செயலா னதா? அல்அன்பியா என்ற அத்தியாயத்தில் அல்லாஹ் கூறுகிறான்: 'யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினர் திறந்துவிடப்படும்போது அவர்கள் ஒவ்வொரு உயரமான இடங்களிலிருந்தும் பரவிவிடுவார்கள். உண்மை யான வாக்குறுதி நெருங்கிவிட்டால் நிராகரிப்பாளர்களின் பார்வைகள் அப்படியே நிலைகுத்தி நின்றுவிடும். (21:96,97)'*

*யஃஜூஜ், மஃஜூஜ் குறித்து திருக்குர்ஆனில் வந்துள்ளவாறு தவ்றாத் திலும் வந்துள்ளது.*

*இந்த அத்தியாயம் எந்த நோக்கங்களைக் கொண்டு தொடங்கப் பட்டதோ அதே விசயங்களைக் கொண்டு நிறைவுசெய்யவும் படுகிறது. அல்லாஹ்வுக்கு இணைகளோ பிள்ளைகளோ இல்லை என்பதைத் தெளிவுபடுத்தி அவன் ஒருவனே என்பதை நிறுவுவதே அத்தியாயத்தின் நோக்கம். 'அவர்களின் வாயிலிருந்து வெளிப்படும் வார்த்தை மிகப் பயங்கரமானது. (5)' இங்கு கூறப்படுகிறது: 'என்னை விடுத்து என் அடியார்களைப் பாதுகாவலர்களாக எடுத்துக்கொள்ளலாம் என்று நிரா கரிப்பாளர்கள் எண்ணிக்கொண்டார்களா? நிராகரிப்பாளர்களை விருந்த ளித்து உபசரிப்பதற்காக நாம் நரகத்தைத் தயார்படுத்தி வைத்துள்ளோம். (102)'*

*இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் மனிதர்கள் நற்செயல்கள் புரிய வேண்டும் என்பதற்காகவே படைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அல் லாஹ் தெளிவுபடுத்துகிறான். இதுதான் அவர்களுடைய வாழ்வின் நோக்க மாக இருக்க வேண்டும்.*

> *மனிதர்களில் நற்செயல் புரிபவர்கள் யார் என்பதைச் சோதிப்பதற் காகவே நாம் பூமியில் உள்ளவற்றை அதற்கு அலங்காரமாக ஆக்கியுள்ளோம். (7)*

இங்கு கூறப்படுகிறது:

நீர் கேளும், 'தங்கள் செயல்களைப் பொறுத்து மிக அதிக இழப்புக்குரியவர்கள் யார் என்பதை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா?' அவர்களின் முயற்சி இவ்வுலக வாழ்வில் வீணாகிவிட்டது. அவர்கள் நன்மைசெய்துகொண்டிருப்பதாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள்தாம் தங்கள் இறைவனின் சான்றுகளையும் அவனது சந்திப்பையும் மறுத்தவர்கள். (103-105)

நல்லவர்களுக்கும் தீயவர்களுக்கும் வழங்கப்படும் கூலிகுறித்து குறிப்பிடப்பட்ட பிறகு அல்லாஹ்வின் வார்த்தைகள்குறித்து பேசப்படுகிறது. அவனே உயிர்ப்பிக்கிறான்; மரணிக்கச்செய்கிறான்; இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொன்றும் அவனுடைய நாட்டத்தின்படியே செயல்படுகிறது. அவனுடைய கட்டளையின்படியே இவ்வுலகமும் இதில் உள்ள மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் ஆகியனவும் இயங்குகின்றன. படைப்பினங்கள் யாவும் தமக்குத் தேவையான பண்புகள், வடிவங்கள், வாழ்நாள்கள் என அனைத்தையும் அவனிடமிருந்தே பெறுகின்றன. அவன் ஒரு நிமிடம்கூட ஓய்வாக இருப்பதில்லை. 'ஒவ்வொரு நாளும் அவன் செயல்பாட்டிலேயே இருக்கிறான். (55:29)'

இவை எல்லாவற்றையும் யாராவது எண்ண முடியுமா? கடல்கள் அனைத்தும் மையாக, மரங்கள் அனைத்தும் எழுதுகோல்களாக இருந்தாலும் அவனுடைய படைப்புகளை, ஆற்றலை யாராலும் எண்ண முடியாது.

நீர் கூறும், 'என் இறைவனின் வார்த்தைகளை எழுதுவதற்குக் கடலே மையாகிவிட்டாலும், கடல் முடிவடைந்து விடுமே தவிர என் இறைவனின் வார்த்தைகள் தீர்ந்து போகாது, அத்துடன் அதனைப் போல் இன்னொரு கடலையும் சேர்த்துக்கொண்டாலும் சரியே.' (109)

இங்கு அல்லாஹ்வின் வார்த்தைகள் என்பது காணப்படக்கூடிய படைப்புகள். அவை உருவாகக்கூடியவையாக, அழியக்கூடியவையாக, இயங்கக்கூடியவையாக, அமைதியாக இருக்கக்கூடியவையாக இருக்கலாம்.

உன்னதமான ஒரு விளக்கத்தின் மூலம் அத்தியாயம் நிறைவடைகிறது. அவன் ஒருவனே இறைவனாக இருக்கும்வரை அவன் மட்டுமே வணங்கப்பட வேண்டும்; முன்னோக்கப்பட வேண்டும். அவனைத் தவிர மற்றவர்களை முன்னோக்குவதால் யாருக்கு என்ன பயன் கிடைக்கும்? பலனளிக்கவோ தீங்களிக்கவோ இயலாதவற்றை நாம் ஏன் முன்னோக்க வேண்டும்?

*பெரும்பாலான மூடர்கள் அல்லாஹ்வுடன் வேறு கடவுளையும் ஏற்படுத்திக்கொண்டுள்ளார்கள் அல்லது அவனுக்கு இணையானவர்கள் இருப்பதாகக் கருதுகிறார்கள். உண்மையில் அவை ஒன்றுமில்லா பூஜ்யங்கள்; மூடநம்பிக்கைகள்.*

*வணக்க வழிபாட்டையும் பிரார்த்தனையையும் கொண்டு அல்லாஹ்வை முன்னோக்குவதே சரியான தவ்ஹீதாகும்.*

> *நீர் கூறும், 'நான் உங்களைப் போன்ற ஒரு மனிதன்தான். உங்கள் இறைவன் ஒரே இறைவன்தான் என்று எனக்கு அறிவிக்கப்படுகிறது. ஆகவே, யார் தம் இறைவனின் சந்திப்பை எதிர்பார்க்கிறாரோ அவர் நற்செயல் புரியட்டும்; தம் இறைவனை வணங்குவதில் எவரையும் இணைவைக்காமல் இருக்கட்டும்.'* (110)

❖ ❖ ❖

அத்தியாயம் 19

# மர்யம்

(ஈசாவின் தாயார்)

*இந்த அத்தியாயத்தில் உள்ள வசனங்களின் சிறப்பம்சங்களில் ஒன்று, அவை பெரும்பாலும் 'யா' என்ற எழுத்தைக் கொண்டு முடிவடைந் திருக்கின்றன. இறுதிப் பக்கம் மட்டும் விதிவிலக்கு. அவற்றில் 'தால்' என்ற வார்த்தை இறுதியாக இடம்பெற்றுள்ளது.*

*அல்லாஹ்வின் பெயர்களில் ஒன்றான அர்றஹ்மான் என்ற வார்த்தை இந்த அத்தியாயத்தில் மட்டும் பதினாறு முறை இடம்பெற்றுள்ளது. அவை பின்வருமாறு:*

**(18)** *அவள் கூறினாள்: 'உம்மைவிட்டு அளவிலாக் கருணையாள னிடம் நான் பாதுகாவல் தேடுகிறேன், நீர் இறையச்சமுடை யோராயின்.'*

**(26)** *'நான் அளவிலாக் கருணையாளனுக்காக நோன்பு நோற்றுள் ளேன். ஆதலால் இன்று யாரிடமும் நான் பேச மாட்டேன்.'*

**(44)** *'என் தந்தையே, ஷைத்தானை வணங்காதீர்கள். நிச்சயமாக ஷைத்தான் கருணைமிக்க இறைவனுக்கு மாறுசெய்பவனாக இருக்கிறான்.'*

**(45)** *'என் தந்தையே, அளவிலாக் கருணையாளனிடமிருந்து ஏதே னும் வேதனை உங்களைப் பீடித்துக்கொள்ளும் என நான் அஞ்சுகிறேன். அப்போது நீங்கள் ஷைத்தானுக்கு உற்ற நண்ப ராகி விடுவீர்கள்.'*

**(58)** *அவர்கள்தாம் அல்லாஹ் அருள்புரிந்த தூதர்களாவர். அவர்கள் ஆதமுடைய சந்ததிகளிலும் நூஹுடன் கப்பலில் நாம் ஏற்றி*

விட்டவர்களிலும் இப்றாஹீம், இஸ்றாயீல் ஆகியோரின் வழித் தோன்றல்களிலும் நாம் நேர்வழி காட்டித் தேர்ந்தெடுத்தவர் களிலும் உள்ளவர்கள். அவர்களிடம் அளவிலாக் கருணை யாளனின் வசனங்கள் ஓதிக்காட்டப்பட்டால் அவர்கள் சிரம் பணிந்தவாறும் அழுதவாறும் விழுந்துவிடுகிறார்கள்.

**(61)** அளவிலாக் கருணையாளன் தன் அடியார்களுக்கு வாக்களித் துள்ள, காண முடியாதவாறு மறைவாக உள்ள நிலையான சுவனங்கள் அவர்களுக்கு உண்டு. அவனது வாக்குறுதி நிறை வேற்றப்பட்டே தீரும்.

**(69)** பின்னர் ஒவ்வொரு கூட்டத்திலிருந்தும் கருணைமிக்க இறை வனுக்கு மாறுசெய்வதில் தீவிரமாக இருந்தவர்களைத் தனி மைப்படுத்திவிடுவோம்.

**(75)** நீர் கூறும், 'வழிகேட்டில் இருப்பவருக்குக் கருணைமிக்க இறைவன் அவகாசமளிக்கிறான்.'

**(78,79)** அவன் மறைவான விசயங்களை அறிந்துகொண்டானா? அல்லது, அளவிலாக் கருணையாளனிடம் ஏதேனும் வாக் குறுதி பெற்றுள்ளானா? ஒருபோதும் இல்லை. அவன் கூறு வதை எல்லாம் நாம் பதிவுசெய்துகொள்வோம். அவனது வேதனையை மேலும் அதிகமாக்குவோம்.

**(85)** அன்றைய தினம் நாம் இறையச்சமுடையோரைக் கருணை மிக்க இறைவனிடம் விருந்தாளிகளாக்கி ஒன்றுசேர்ப்போம்.

**(87)** கருணைமிக்க இறைவனிடம் அனுமதி பெற்றவர்களைத் தவிர வேறு எவரும் பரிந்துரை செய்யும் அதிகாரம் பெற்றிருக்க மாட்டார்கள்.

**(88,89)** கருணைமிக்க இறைவன் ஒருவரை மகனாக ஏற்படுத்திக் கொண்டான் என்று அவர்கள் கூறுகிறார்கள். நீங்கள் மிகப் பயங்கரமான விசயத்தைக் கூறியுள்ளீர்கள்.

**(91)** ஏனெனில், அவர்கள் கருணைமிக்க இறைவனுக்கு மகன் இருப்பதாகக் கூறுகிறார்கள்.

**(92)** மகனை ஏற்படுத்திக்கொள்வது கருணைமிக்க இறைவனுக்கு உகந்ததல்ல.

**(93)** வானங்களிலும் பூமியிலும் உள்ள அனைவரும் கருணைமிக்க இறைவனிடம் அடிமைகளாகவே வருவார்கள்.

**(96)** நம்பிக்கை கொண்டு நற்செயல் புரிந்தவர்களுக்காக அளவிலாக் கருணையாளன் அன்பை ஏற்படுத்துவான்.

இன்னுமொரு ஆச்சரியமான விசயம், அர்றஹ்மத் என்ற வார்த்தையிலிருந்தே அத்தியாயத்தின் ஆரம்ப வசனம் தொடங்குகிறது. 'இது உம் இறைவன் தன் அடியாரான ஸகரிய்யாவின் மீது பொழிந்த அருளைப் பற்றிய செய்தியாகும். (2)' இந்த வார்த்தை இந்த அத்தியாயத்தில் நான்கு முறை இடம்பெறுகிறது. அது அல்லாஹ் அவர்கள்மீது பொழிந்த அருட் கொடைகளைப் பற்றிப் பேசுகிறது. அருட்கொடைகள் அவனுடைய கருணையின், அருளின் வெளிப்பாடே. மனிதர்கள் அனுபவிக்கும், எதிர்கொள்ளும் ஒவ்வொரு பொருளையும் அவன் நோக்கத்துடன்தான் படைத்துள்ளான். அறிந்தவர் அதனை அறிந்துகொள்வார். அறியாதவர் அதனை அறிய மாட்டார்.

இந்த அத்தியாயம் மக்காவில் அருளப்பட்டதாகும். மக்கா கால கட்டத்தின் ஆரம்ப வருடங்களில் ஹபஷாவுக்கு ஹிஜ்றத் செய்யப்படுவதற்கு முன்னர் அருளப்பட்டிருக்கலாம். மர்யமின் மகன் ஈசாவின் பிறப்புகுறித்தும் அதில் வெளிப்பட்ட இறைவனின் அற்புதம் குறித்தும் இந்த அத்தியாயம் பேசுகிறது. அதே போன்ற அற்புதம் இறைத்தூதர் ஸகரிய்யாவின் விசயத்திலும் அவருடைய மகன் யஹ்யாவின் விசயத்திலும் வெளிப்படுகிறது.

யஹ்யாவின் பிறப்பு மற்றுமொரு அற்புதமாகும், அவருடைய தந்தை வயது முதிர்ந்தவராகவும் அவருடைய தாய் குழந்தைபெற முடியாத மலடியாகவும் இருந்த நிலையில். குழந்தைபெற இயலாத பெண்ணுக்கும் வயது முதிர்ந்த மனிதருக்கும் குழந்தையை வழங்கி அருள்புரிந்தவன் யார்?

அல்லாஹ்தான் இவையனைத்தையும் நிகழ்த்தினான். எந்த ஆணும் தீண்டாத ஒரு கன்னிப் பெண்ணைக் குழந்தைபெறச் செய்வது அவனுக்கு இயலாத காரியமா என்ன?

இந்த இரு சம்பவங்களும் மதீனாவில் அருளப்பட்ட ஆலு இம்றான் அத்தியாயத்திலும் இதே வரிசைப்படி இடம்பெற்றுள்ளன.

அல்லாஹ்தான் காரணிகளை உருவாக்கியவன். காரணிகள் அவனைக் கட்டுப்படுத்தாது. இதே முறையில்தான் அவன் ஈசாவையும் படைத்தான்.

*அவர் மக்களிடம் கூறினார்: 'நான் அல்லாஹ்வின் அடியானாக இருக்கிறேன். அவன் எனக்கு வேதத்தை வழங்கி என்னைத் தூதராகவும் ஆக்கியுள்ளான். நான் எங்கிருந்தபோதிலும் அவன் என்னைப் பெரும் பாக்கியம்மிக்கவனாக ஆக்கியுள்ளான்.* (30,31)'

*ஏன் குழந்தை வேண்டும் என்று ஸகரிய்யா ஆசை கொண்டார்? எத்தனையோ நம்பிக்கையாளர்கள் குழந்தை இல்லாத வாழ்க்கையை ஏற்றுக்கொண்டுதானே வாழ்கிறார்கள்? அவர் ஆசை கொண்டது, இஸ்றாயீலின் மக்களுக்கு ஆன்மரீதியான வழிகாட்டலுக்காக. அதுதான் காரணம். அவருக்கு இருந்த உறவினர்கள் பதவியாசை கொண்டவர்களாக இருந்தார்கள். அது சீர்திருத்தத்துக்கு உகந்த பண்பு அல்ல. ஆகவே, இந்தக் குறையைத் தீர்க்கும் வகையில், இஸ்றாயீலின் மக்களைச் சரியான முறையில் வழிநடத்தத் தகுதியான ஒரு வாரிசைத் தரும்படி அவர் அல்லாஹ்விடம் வேண்டினார்:*

> *'நான் எனக்குப் பின் என் உறவினர்களைக் குறித்து அஞ்சுகிறேன். என் மனைவியோ மலடியாக இருக்கிறாள். எனவே, உன் புறத்திலிருந்து எனக்கு ஒரு வாரிசை வழங்குவாயாக! அவர் எனக்கும் யஅகூபின் குடும்பத்தினருக்கும் வாரிசாக இருக்கட்டும். என் இறைவனே, அவரை உனக்குப் பிரியமானவராக ஆக்கிவைப்பாயாக!'* (5,6)

*மூன்று நாள்கள் அவர் அல்லாஹ்வைத் துதிசெய்து வணங்கிய பிறகு அல்லாஹ் அவருக்கு யஹ்யாவை வழங்கினான்.*

> *அவர் தொழுகைபுரியும் மாடத்திலிருந்து வெளியேறி தம் மக்களிடம் வந்து, 'நீங்கள் காலையிலும் மாலையிலும் இறைவனைத் துதியுங்கள்.' என்று சைகையால் அறிவித்தார். 'யஹ்யாவே, வேதத்தை உறுதியாகப் பற்றிக்கொள்ளும்.' சிறு வயதிலேயே அவருக்கு நாம் ஞானத்தை வழங்கினோம்.* (11,12)

❖ ❖ ❖

*மர்யமையும் அவருடைய மகனையும் குறித்த அற்புதத்தை இந்த அத்தியாயம் எடுத்துரைக்கிறது. உண்மையில் தொட்டில் குழந்தையாக இருக்கும்போது ஈசா பேசியது அவருடைய தாய் தூய்மையானவர் என்பதற்கான வலுவான சான்றாகும்.*

> *நான் அல்லாஹ்வின் அடியானாக இருக்கிறேன். அவன் எனக்கு வேதத்தை வழங்கி என்னைத் தூதராகவும் ஆக்கியுள்ளான். நான்*

எங்கிருந்தபோதிலும் அவன் என்னைப் பெரும் பாக்கியம்மிக்க வனாக ஆக்கியுள்ளான். நான் உயிரோடு இருக்கும் காலம்வரை தொழுகையையும் ஸகாத்தையும் எனக்கு வலியுறுத்தியுள்ளான். (30,31)

இந்த முறையில் அமைந்த ஈசாவின் பிறப்பு மற்றுமொரு தவறான கொள்கையை உருவாக்கியது. சிலர் கூறினார்கள், 'ஈசா தந்தையின்றிப் பிறந்தது உண்மையானால் அல்லாஹ்தான் அவருடைய தந்தை. அவர் தம் தந்தையைப் போன்றவர். அவர் இரண்டாவது கடவுள்.'

இந்தக் கடவுள் வரிசையில் மூன்றாவதாக வருபவர் மர்யமிடம் ஆன்மாவை ஊதிய பரிசுத்த ஆவி. மூவரும் கடவுள் குடும்பத்தின் அங்கத்தினர்கள்.

இதற்கு முன்னர் எந்த மார்க்கத்திலும் இவ்வகையான கூற்று காணப் படாததாலும் எந்தத் தூதரும் இவ்வாறு கூறாததாலும் அதற்கு 'புதிய ஏற்பாடு' என்று பெயரிடப்பட்டது.

இங்கு இயல்பாகவே ஒரு கேள்வி எழுகிறது. தந்தை, மகன், ஆவி மூன்றும் கடவுளைக் குறிக்கும் ஒரே வார்த்தைகளா, சிங்கத்தைக் குறிப்ப தற்கு அறபுகள் அஸத், ளைய்கம், களன்ஃபர் ஆகிய வார்த்தைகளைப் பயன்படுத்துவது போல? இல்லை. ஒவ்வொன்றுக்கும் தனித்தன்மைகள் இருக்கின்றன. ஆயினும், மூன்று வார்த்தைகளும் சிங்கத்தைத்தான் குறிக்கின்றன.

சிலர் கூறுகிறார்கள், 'ஒரே வகையான இயல்பினர். ஆனால், வெவ்வேறு பண்புகளை உடையவர்கள்.' பண்புகள் வடிவம்பெறுமா? சிலுவையில் அறையப்படுமா? பின்னர் உயர்த்தப்படுமா? மூன்று கடவுள்களும் ஒரு வராகக் கருதப்படுவாரா? நிச்சயமாக இல்லை. இது குறித்த எந்த விளக்கத்தையும் அறிவு ஏற்றுக்கொள்ளாது.

உண்மையில் அல்லாஹ் ஒருவன்தான். ஈசா அவனுடைய அடியா ராகவும் மற்ற தூதர்களைப் போன்று ஒரு தூதராகவும் இருக்கிறார். இந்த உண்மையைத் திருக்குர்ஆன் பல அத்தியாயங்களில் அழுத்தம் திருத்த மாகக் கூறுகிறது.

நிச்சயமாக அல்லாஹ்தான் என் இறைவனும் உங்கள் இறைவனும் ஆவான். ஆகவே, அவனையே நீங்கள் வணங்குங்கள். இதுவே நேரான வழியாகும். ஆயினும் அவர்களில் ஒரு பிரிவினர் தங்க ளுக்குள் முரண்பட்டுக்கொண்டனர். ஆகவே, நிராகரிப்பாளர்

களுக்கு வரப்போகும் ஒரு மாபெரும் நாளின் கேடு உள்ளது. அவர்கள் அனைவரும் நம்மிடம் வரும் நாளில் அவர்கள் நன்றாகச் செவிசாய்ப்பார்கள்; பார்ப்பார்கள். ஆனாலும் இன்று அக்கிரமக் காரர்கள் தெளிவான வழிகேட்டில் இருக்கிறார்கள். (36,37)

இந்தக் கருத்து வேறுபாடு மறுமைநாள் நிலைபெறும்வரை நிலைத் திருக்கும். அந்நாள் நிலைபெற்றவுடன் தலைவர்களும் அவர்களைப் பின்பற்றியவர்களும் அல்லாஹ் ஒருவனே என்பதையும் அவனுக்கு மகன்களோ மகள்களோ இல்லை என்பதையும் அவனைத் தவிர மற்ற அனைத்துமே அவனுடைய படைப்புகள்தாம் என்பதையும் அறிந்து கொள்வார்கள்.

இந்த உலகில் பார்த்தும் பார்க்காதவர்கள் கேட்டும் கேட்காதவர்கள் மறுமைநாளில் நன்றாகப் பார்க்கவும் கேட்கவும் செய்வார்கள். 'அவர்கள் அனைவரும் நம்மிடம் வரும் நாளில் அவர்கள் நன்றாகச் செவிசாய்ப் பார்கள்; பார்ப்பார்கள். (38)'

❖ ❖ ❖

மர்யமின் மகன் ஈசாவைக் குறித்தும் அவர் எவ்வாறு மக்களை தவ் ஹீதின் பக்கம் அழைத்தார் என்பது குறித்தும் பேசப்பட்ட பிறகு சிலை வழிபாட்டாளர்களுடன் நீண்ட போராட்டத்தை நடத்திய இறைத் தூதர் இப்றாஹீமின் சம்பவம் இடம்பெறுகிறது.

இப்றாஹீமுக்கும் இணைவைப்பாளராக இருந்த அவருடைய தந் தைக்கும் நடைபெற்ற இந்த உரையாடலில் இஸ்லாமிய அழைப்பின் இயல்பையும் அதற்கு மாறாக இருக்கும் கூட்டத்தினரின் இயல்பையும் நீ ங்கள் உணரலாம்.

சிலை வழிபாட்டைவிட்டு விலகிவிடும்படியும் அல்லாஹ்வுக்கு முழுமையாகக் கட்டுப்படும்படியும் இப்றாஹீம் உருக்கமான, பிரியமான வழிமுறையில் நான்கு முறை தம் தந்தையை அழைத்தார். இறுதியாக அவர் கூறியது: 'என் தந்தையே, அளவிலாக் கருணையாளனிடமிருந்து ஏதேனும் வேதனை உங்களைப் பீடித்துக்கொள்ளும் என நான் அஞ்சுகிறேன். அப்போது நீங்கள் ஷைத்தானுக்கு உற்ற நண்பராகிவிடுவீர்கள். (45)' ஆனால், அவருடைய தந்தை மிகக் கடுமையான முறையில் அதற்குப் பதிலளித்தார்: 'இப்றாஹீமே, நீ என் தெய்வங்களைப் புறக்கணித்து விட்டாயா? நீ இதிலிருந்து விலகிக்கொள்ளவில்லை என்றால் நான் உன்னைக் கல்லால் எறிந்து கொன்றுவிடுவேன். நீ என்னை விட்டு நிரந்தரமாக விலகிவிடு. (46)'

*சரியான கொள்கையில் நிலைத்திருந்தால் கல்லால் அடித்துக் கொன்று விடுவதாக அவர் தம் மகனை மிரட்டுகிறார். தம்மைவிட்டு அவரை விரட்டினார்.*

*இப்றாஹீம் தம் தந்தையையும் சமூகத்தையும் பிரிந்து தனியாகச் சென்றார். அல்லாஹ் அவரது தனிமையைப் போக்கினான். அவருடைய வழித்தோன்றலில் தூதுத்துவத்தை ஏற்படுத்தினான். 'அவர் அவர்களை விட்டும், அல்லாஹ்வையன்றி அவர்கள் வணங்கிக் கொண்டிருந்த தெய்வங்களைவிட்டும் விலகிக்கொண்டபோது நாம் அவருக்கு இஸ்ஹாக்கையும் யஅகூபையும் வழங்கினோம். அவர்கள் ஒவ்வொருவரையும் தூதராக ஆக்கினோம். (49)'*

❖ ❖ ❖

*இதற்குப் பிறகு அத்தியாயம் குறிப்பிட்ட எண்ணிக்கையில் தூதர்களையும் அவர்களுக்கு அல்லாஹ் அளித்த அருட்கொடைகளையும் குறிப்பிடுகிறது. இறைத்தூதர்கள் அல்லாஹ்வைக் குறித்து நன்கறிந்த, அவனைக் குறித்து மக்களுக்கு அறிவிக்கின்ற மனிதச் சமூகத்தின் பிரதிநிதிகள். அவர்களின் வாழ்க்கை பின்பற்றத்தகுந்த உதாரணமாகும்.*

*அவர்களுடன் இருந்தவர்கள், அவர்களைக் கொண்டு பயனடைந்தவர்கள் நிச்சயம் அறிவு ரீதியான, மனரீதியான பெரும் தாக்கமடைவார்கள். மற்றவர்களைவிடத் தூய்மையானவர்களாக, உன்னதமானவர்களாக இருப்பார்கள். ஆகவேதான் தூதர்களின் தலைவர் முஹம்மது (ஸல்) கூறுகிறார், 'மிகச் சிறந்த தலைமுறையினர் என் தலைமுறையினராவர். அவர்களுக்குப் பிறகு, அவர்களுக்குப் பின் வந்தவர்களாவர். பின்னர், அவர்களுக்குப் பின் வந்தவர்களாவர்.'*

*பின்னால் வரக்கூடிய தலைமுறையினர் தூதுத்துவ வெளிச்சத்தை விட்டு வெகுதூரமாகிவிடுவர்; இருளில் தடுமாறித்திரிய ஆரம்பித்து விடுவர். 'அவர்களுக்குப் பின் வந்த சந்ததியினர் தொழுகையை வீணாக்கி மனஇச்சைகளைப் பின்பற்றினார்கள். அவர்கள் விரைவில் அழிவைச் சந்திப்பார்கள். (59)'*

*தொழுகையின் மூலமாக அடியார்கள் தம் இறைவனைச் சென்றடைகிறார்கள். தங்களின் ஆன்மாக்களைப் பாவங்களிலிருந்து தூய்மைப்படுத்திக் கொள்கிறார்கள். யார் அல்லாஹ்வைவிட்டுத் தூரமாகி விடுவாரோ அவரை ஷைத்தான்கள் ஆக்கிரமித்துவிடுவார்கள். அவரைத் தீய காரியங்களில் மூழ்கடித்து விடுவார்கள்.*

இத்தோடு மார்க்க விசயங்களில் அறியாமையும் சேர்ந்துகொள்ளும். ஆகவே, இன்னொரு அத்தியாயத்தில் கூறப்படுகிறது: 'அவர்களுக்குப் பின் தகுதியற்றவர்கள் வேதத்துக்கு வாரிசாக ஆனார்கள். அவர்கள் இவ்வுலகின் அற்ப ஆதாயத்தைப் பெற்றுக்கொண்டு நாம் மன்னிக்கப் பட்டு விடுவோம் என்று கூறுகிறார்கள். (7:169)'

இழிவான செயல்களைச் செய்துகொண்டு மன்னிப்பை எதிர்பார்க்கி றார்கள். இதுதான் ஒருவரிடம் காணப்படும் மோசமான மார்க்கத்தின் அடையாளம். 'ஆயினும், மன்னிப்பு கோரி நம்பிக்கை கொண்டு நற்செயல் புரிவோரைத் தவிர. அவர்கள் சுவனத்தில் நுழைவார்கள். அவர்களுக்குக் கிஞ்சித்தும் அநீதி இழைக்கப்படாது. (60)'

இறைத்தூதர்களைப் பின்பற்றுவோரில் பிந்தையோர் அவர்களிடம் இருக்கின்ற வஹீயின் போதனைகளைக் கொண்டு பயனடையாமல் விலகிச் செல்பவர்களாக இருக்கிறார்கள் எனில் அவர்களைப் போன்ற இன்னொரு பிரிவினர் நாத்திகர்களாவர். அவர்கள் இறைவனைக் குறித்து எதுவும் அறிய மாட்டார்கள். மறுமையை எதிர்பார்க்க மாட்டார்கள். அவர்களின் பார்வை ஒருநாளும் வானத்தை நோக்கி உயராது.

இந்த வகையினரைக் குறித்து திருக்குர்ஆன் பேசுகிறது:

> 'நான் இறந்துவிட்டால் மீண்டும் உயிர்கொடுக்கப்பட்டு எழுப்பப் படுவேனா?' என்று மனிதன் கேட்கிறான். இதற்கு முன்னர் ஒன் றுமே இல்லாதிருந்த அவனை நாம்தான் படைத்தோம் என்பதை அவன் எண்ணிப்பார்க்கவில்லையா? உம் இறைவன்மீது சத்திய மாக, நாம் அவர்களையும் ஷைத்தான்களையும் ஒன்றுதிரட்டு வோம். நரகத்தைச் சுற்றிலும் மண்டியிட்டவர்களாக அவர்களை நிறுத்துவோம். பின்னர், ஒவ்வொரு கூட்டத்திலிருந்தும் கருணை மிக்க இறைவனுக்கு மாறுசெய்வதில் தீவிரமாக இருந்தவர்களைத் தனிமைப்படுத்திவிடுவோம். (66-69)

முந்தையவர்களிலும் பிந்தையவர்களிலும் உள்ள நிராகரிப்பாளர்கள், எதுவும் அறியாமல் மூடர்களாகவே வாழ்ந்தவர்கள் ஆகியோர் அனை வரும் படைப்பாளனுக்கு முன்னால் மண்டியிட்டவர்களாக நிற்பார்கள். அவர்களின் விசயத்தில் அல்லாஹ்வின் கட்டளை செயல்படுத்தப்படும். 'பின்னர், நரகில் நுழைவதற்கு அதிகத் தகுதியுடையவர்களை நாம் நன்கறிவோம். (70)'

அநியாயக்காரர்களும் நிராகரிப்பாளர்களும்தாம் நரகத்தில் நிரந்தரமாக வீழ்ந்துகிடப்பார்கள்.

*இந்த வசனத்தில், மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுதலை நிரா கரிப்பவர்கள்தாம் விளிக்கப்படுகிறார்கள். நேர்மையான நம்பிக்கை யாளர்கள் ஒருபோதும் நரகத்தின் பக்கம் செல்ல மாட்டார்கள். அந்த நரகத்தைக் குறித்து அல்லாஹ் கூறுகிறான்: 'அவர்கள் சென்றடையும் இடம் எவ்வளவு மோசமானது! (11:98)'*

*நம்பிக்கையாளர்களில் எந்த ஒன்றுக்காகவும் விசாரணை செய்யப் படாத உன்னதமானவர்களும் இருக்கிறார்கள். பொதுவாக நம்பிக்கை யாளர்கள் அனைவரும் வெற்றிபெறுவார்கள். அந்த நாளின் நடுக்கத் திலிருந்து பாதுகாவல்பெறுவார்கள்: 'இறையச்சமுடையோரைக் காப் பாற்றி அநியாயக்காரர்களை அதிலேயே மண்டியிட்டவர்களாக அப் படியே நாம் விட்டுவிடுவோம். (72)'*

❖ ❖ ❖

*இந்த அத்தியாயம் மக்காவில் உள்ள இணைவைப்பாளர்களுக்கு இஸ்லாம் எடுத்துரைக்கப்பட்ட சில சந்தர்ப்பங்களையும் எடுத்துரைக் கிறது. அவை அவர்களின் மடமைத்தனத்தை, பொய்யான வாதத்தைத் தெளிவுபடுத்துகின்றன.*

*ஒரு மனிதர் உங்களிடம் விவாதித்துக்கொண்டிருக்கும்போது, 'நீ எப்படி என்னை ஆட்சேபிக்கலாம்? என் ஆடை உன் ஆடையை விட அழகானது! என் கோட்டை உன் வீட்டைவிட உயர்ந்தது!' என்று வாதிட் டால் நீங்கள் அவரைக் குறித்து என்ன நினைப்பீர்கள்?*

> *நம்முடைய தெளிவான வசனங்கள் அவர்களிடம் எடுத்துரைக் கப்பட்டால், 'இரு பிரிவினரில் யார் நல்ல நிலையில் இருக்கி றார்கள்? யாருடைய கூட்டம் மிகச் சிறந்ததாக இருக்கிறது?' என்று நிராகரிப்பாளர்கள் நம்பிக்கையாளர்களிடம் கேட்கிறார்கள். (73)*

*தொடர்ந்து இறைவன் அளிக்கும் பதிலும் இடம்பெறுகிறது. 'இவர் களுக்கு முன்னர் இவர்களைவிட அதிகச் சாதனங்களை உடையவர் களாகவும் கம்பீரம் கொண்டவர்களாகவும் விளங்கிய எத்தனையோ சமூகங்களை நாம் அழித்திருக்கிறோம். (74)'*

*அவர்கள் வைத்த வாதம், பதிலளிக்க முடியாமல் வேண்டுமென்றே செய்யப்படும் வெற்று வாதம். இதைப் போன்றுதான் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ஒரு நம்பிக்கையாளரிடம் கடன் வாங்கிய கர்வம் கொண்ட இணைவைப்பாளன் அவரிடம் கூறினான், 'மறுமையில் உன்னைச் சந்திக்கும்போது உன் கடனை அடைத்துவிடுகிறேன். அங்கும் நான் செல்வங்களையும் குழந்தைகளையும் பெற்ற மனிதனாக இருப்பேன்.'*

*நம்முடைய வசனங்களை நிராகரித்தவனை நீர் பார்த்தீரா? தனக்குச் செல்வமும் குழந்தைகளும் கிடைத்தே தீரும் என்று அவன் கூறுகிறான். அவன் மறைவான விசயங்களை அறிந்துகொண்டானா அல்லது அளவிலாக் கருணையாளனிடம் ஏதேனும் வாக்குறுதி பெற்றுள்ளானா?* (77,78)

*இவனுடைய நிலை அல்கஹ்ஃப் என்ற அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள தோட்டக்காரனின் நிலையைப் போன்றது. அவன் அல்லாஹ்வின் சந்திப்பை மறுத்தான். பின்னர் கூறினான், 'ஒருவேளை அங்கு அல்லாஹ்வைச் சந்திக்க வேண்டியிருந்தாலும் அங்கும் நான் அதிகச் செல்வமுடையவனாகவும் நல்ல நிலையில் உள்ளவனாகவும்தான் இருப்பேன்.' 'ஒருபோதும் இல்லை. அவன் கூறுவதை எல்லாம் நாம் பதிவுசெய்து கொள்வோம். அவனது வேதனையை மேலும் அதிகமாக்குவோம். எதனைக் குறித்து அவன் சொந்தம் கொண்டாடுகிறானோ அதற்கு நாமே உரிமையாளராவோம். அவன் நம்மிடம் தனியாகவே வருவான்.* (79,80)' *அவன் எதுவுமற்ற நிர்வாணியாகவே இறைவனிடம் வருவான்.*

❖ ❖ ❖

*மக்காவில் அருளப்பட்ட வசனங்களில் அல்லாஹ்வுக்கு மகனோ மகளோ உண்டு என்னும் கொள்கைக்குக் கடுமையான மறுப்புகள் காணப்படுகின்றன. இவை இணைவைப்பாளர்களைச் சிலை வழிபாட்டிலிருந்து தடுத்தன. அத்தோடு, 'அடியார்களில் அவனுக்கு மகனும் இருக்கிறான்.' என்று கூறுபவர்களுக்கும் மறுப்புரைகளாக இருந்தன.*

*அனைவரும் அறிய வேண்டிய அவசியமான விசயம், அல்லாஹ்வைத் தவிர மனிதர்கள், ஜின்கள் என ஒவ்வொன்றும் அவனுடைய அடிமைதாம். அவர்கள் தங்களுக்குக்கூடப் பலனிக்கவோ தீங்களிக்கவோ சக்தி பெறாதவர்கள். எவ்வாறு அவர்கள் மற்றவர்களுக்குப் பலனிக்க முடியும்?*

*இடியைப் போன்று இறங்கும் இந்த வசனங்களைக் கேளுங்கள்:*

*கருணைமிக்க இறைவன் ஒருவரை மகனாக ஏற்படுத்திக் கொண்டான் என்று அவர்கள் கூறுகிறார்கள். நீங்கள் மிகப் பயங்கரமான விசயத்தைக் கூறியுள்ளீர்கள். அதனால் வானங்கள் வெடித்து, பூமி துண்டுதுண்டாகி, மலைகள் இடிந்துவிழக்கூடும். ஏனெனில், அவர்கள் கருணைமிக்க இறைவனுக்கு மகன் இருப்பதாகக் கூறுகிறார்கள். மகனை ஏற்படுத்திக்கொள்வது கருணைமிக்க இறைவனுக்கு உகந்ததல்ல.* (88-92)

*தனக்கு இணையாக மற்றவர்களை ஆக்குபவர்களை அல்லாஹ் வெறுக்கிறான். அவர்களின் பாவத்தை அவன் மன்னிப்பதில்லை. தவ்ஹீதுவாதிகளை அவன் ஏற்றுக்கொள்கிறான். அன்பையும் கருணையையும் அவர்கள்மீது பொழிகிறான். யார் தவ்ஹீதை ஏற்று, அதனடிப்படையில் தம் வாழ்க்கையை அமைத்துக்கொள்வாரோ அவரை அல்லாஹ் நேசிக்கிறான். வானத்தில் உள்ளவர்களும் பூமியில் உள்ளவர்களும் அவரை நேசிக்கிறார்கள். 'நம்பிக்கை கொண்டு நற்செயல் புரிந்தவர்களுக்காக அளவிலாக் கருணையாளன் அன்பை ஏற்படுத்துவான். (96)' நபியவர்கள் கூறினார்கள்:*

> *அல்லாஹ் ஓர் அடியானை நேசித்தால் ஜிப்ரீலை அழைத்து 'இந்த மனிதரை நேசிப்பீராக.' என்று கூறுகிறான். ஜிப்ரீலும் அவரை நேசிக்கிறார். பின்பு அவர் வானத்தில் அறிவிப்பு செய்கிறார், 'அல்லாஹ் இன்ன மனிதரை நேசிக்கிறான். நீங்களும் அவரை நேசியுங்கள்.' வானத்தில் உள்ளவர்கள் அவரை நேசிக்கிறார்கள். பின்னர் பூமியிலும் அவருக்கான அங்கீகாரம் ஏற்படுத்தப்படுகிறது.*

*நல்லோர்களில் ஒருவர் கூறியிருக்கிறார், 'எந்த அடியார் உளப்பூர்வமாக அல்லாஹ்வை முன்னோக்குவாரோ அவர் பக்கம் அல்லாஹ் நம்பிக்கையாளர்களின் உள்ளங்களைத் திருப்புவான். அவருக்கு அவர்களின் அன்பை வழங்குவான்.' 'இந்தக் குர்ஆனை உமது மொழியில் எளிதாக்கியுள்ளோம். அது, இதன் மூலம் நீர் இறையச்சமுடையோருக்கு நற்செய்தி கூறுவதற்காகவும் பிடிவாதம் கொண்ட மக்களை எச்சரிப்பதற்காகவும் தான். (97)'*

❖ ❖ ❖

அத்தியாயம் 20

# தாஹா

*தா, ஹா இரண்டும் தனித்தனியான எழுத்துகள். இது நபியவர்களின் பெயர் அல்ல. இது குறித்து எந்த ஒரு ஆதாரபூர்வமான அறிவிப்பும் இடம்பெறவில்லை. தனித்தனியான இந்த எழுத்துகளைக் கொண்டு பல அத்தியாயங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அதன் நோக்கத்தை அல்லாஹ்வே நன்கறிவான்.*

*'இந்த எழுத்துகளைக் கொண்டே நீங்கள் பேசுகிறீர்கள், இலக்கியங்களை உருவாக்குகிறீர்கள். இவற்றைக் கொண்டுதான் திருக்குர்ஆனும் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால், உங்களால் அதனைப் போன்ற ஒன்றைக் கொண்டுவர முடியாது.' என்று அறபுகளுக்கு உணர்த்தவே இவ்வாறு கூறப்பட்டுள்ளது என்ற கருத்தும் உண்டு.*

*திருக்குர்ஆன் வானத்திலிருந்து அருளப்பட்ட வஹீயாகும். அதன் அமைப்பிலும் நோக்கத்திலும் இதனைத் தெளிவாக உணர முடியும்.*

*அல்லாஹ் ஒருவன் என்பதை நிறுவக்கூடிய இதனைப் போன்ற எந்த ஒன்றும் இல்லை. பக்கச்சார்பற்று, தூய மனதுடன் இதனை வாசிப்பவர், இது மனிதர்களை அவர்களின் இறைவனை நோக்கிக் கொண்டுசெல்கிறது என்பதையும் அவனைக் குறித்த அச்சத்தை அவர்களின் உள்ளங்களில் ஊட்டுகிறது என்பதையும் தன் ஒளியைக் கொண்டு அவர்களின் அறிவில் பிரகாசத்தை ஏற்படுத்துகிறது என்பதையும் மறுமைநாளை அவர்களின் கண்முன்னால் காட்டுகிறது என்பதையும் உணர்ந்துகொள்வார்.*

*திறந்த மனதுடன், தூய இயல்புடன் திருக்குர்ஆனை அணுகுபவர் இதனைத் தெளிவாக அறிந்துகொள்வார். அறியாமைக் காலத்தில்கூட நபியவர்கள் உண்மையாளராகவும் நம்பிக்கைக்குரியவராகவும் அறியப்பட்டிருந்தார்கள். அவர்களைக் கடுமையாக எதிர்த்தவர்கள்கூட அவர்களின் நேர்மையை, ஒழுக்கத்தைச் சந்தேகிக்கவில்லை.*

தாம் குர்ஆனை எடுத்துரைத்தால் தம் சமூகத்தார் அதனை உண்மைப்படுத்துவார்கள் என்று நபியவர்கள் எண்ணினார்கள். ஏனெனில், அவர்கள் எப்போதும் பொய் சொன்னதில்லை. ஆனாலும் அந்தச் சமூகத்தாரின் குலவெறிதான் நபியவர்கள் கொண்டுவந்ததை நிராகரிக்குமாறு அவர்களைத் தூண்டியது. அதனைப் புனைவு என்றும் பைத்தியக்காரத்தனமான உளறல் என்றும் அவர்கள் கூறினார்கள்.

கண்ணியமான மனிதர் இவ்வாறான குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகும்போது கவலை கொள்ளவே செய்வார். அது அவருடைய வாழ்வை நெருக்கடிக்குள்ளாக்கும். இங்கு படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் இறைவன் தன் தூதருக்கு ஆறுதல் கூறுகிறான்: ‘அவர்களின் நிராகரிப்பால் ஏன் கவலையடைகிறீர்? நீர் அறிவுரை கூறுபவர் மட்டுமே. யார் அந்த அறிவுரையை ஏற்றுக்கொள்வாரோ அவர் வெற்றி பெறுவார். யார் அதனை நிராகரிப்பாரோ அவர் அழிந்துவிடுவார்.’

> நீர் துன்பப்படுவதற்காக நாம் இந்தக் குர்ஆனை உமக்கு அருளவில்லை; அஞ்சுவோருக்கு அறிவுரையாகவே அருளினோம். பூமியையும் உயரமான வானங்களையும் படைத்தவனிடமிருந்து இது அருளப்பட்டதாகும். அளவிலாக் கருணையாளன் அரியணையின் மீது நிலைகொண்டுவிட்டான். (2-5)

அல்லாஹ்வின் கண்ணியத்தை, மகத்துவத்தை எடுத்துரைக்கும் அடுத்தடுத்த இந்தப் பண்புகள் அவனிடமிருந்து இந்தக் குர்ஆனுக்கு அருளப்படுகின்றன. அவை அதன் கண்ணியத்தை உயர்த்துகின்றன. அவனைக் குறித்து எடுத்துரைக்கும் தூதரின் கண்ணியத்தையும் உயர்த்துகின்றன.

மனிதர்களை அல்லாஹ்வின் பக்கம் அழைக்கும் அழைப்புப் பணி கடினமான பணியாகும். கடின உள்ளம் கொண்ட நிராகரிப்பாளர்களை எதிர்கொள்வது கடினமான பணியாகும். நபியவர்களுக்கு ஆறுதலளிக்கும் விதமாகக் கூறப்படுகிறது, ‘கர்வம் கொண்ட நிராகரிப்பாளர்களை எதிர்கொள்ளும்படி, அவர்களை அல்லாஹ்வின் பக்கம் அழைக்கும்படி உமக்கு மட்டும் கூறப்படவில்லை. உமக்கு முன்னர் மூசாவும் இந்தக் கடினமான பணியை ஏற்றுக்கொண்டார். அவர் ஃபிர்அவ்ன்களை எதிர்கொண்டார். இறுகிய உள்ளமும் கடின இயல்பும் கொண்ட இஸ்றாயீலின் மக்களுக்கு வழிகாட்டும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.’

> மூசாவின் செய்தி உமக்கு எட்டியதா? அவர் நெருப்பைக் கண்டபோது தம் குடும்பத்தாரிடம், ‘இங்கே இருங்கள். நான் நெருப்பைக் காண்கிறேன். அதிலிருந்து ஒரு எரிகொள்ளியை உங்களிடம் நான்

கொண்டுவரக்கூடும் அல்லது அந்த நெருப்பின் அருகில் ஏதேனும் வழியைக் கண்டுகொள்ளக்கூடும்.' (9-10)

மூசாவின் சம்பவமே அத்தியாயத்தின் பெரும் பகுதியை ஆக்கிர மித்துள்ளது. முதலில் மூசா ஃபிர்அவ்னுக்கு எவ்வாறு நேரான வழியைக் காட்ட முயன்றார் என்பதையும் பின்னர் சூனியக்காரர்களுடன் அவருக்கு நிகழ்ந்த சந்திப்பையும் அவர் எவ்வாறு அவர்களை வென்றார் என்பதையும் அத்தியாயம் எடுத்துரைக்கிறது.

இரண்டாவதாக அவர் இஸ்றாயீலின் மக்களை எவ்வாறு வழிநடத்தி னார் என்பதையும் அவர்களால் அவர் அடைந்த சிரமங்கள் என்னென்ன என்பதையும் அத்தியாயம் எடுத்துரைக்கிறது.

திருக்குர்ஆனின் பல அத்தியாயங்களில் மூசாவின் சம்பவம் இடம் பெறுகிறது. ஆனால், ஒவ்வொரு இடமும் புதிய, வெவ்வேறான செய்தி களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு இடத்திலும் பிற இடங்களில் காணாத ஒன்றை நீங்கள் காணலாம்.

இங்கு மூசா தம் கைத்தடியை வர்ணிக்கும்போது அல்லாஹ்வுடன் பேச்சை நீடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நீட்டிக்கொண்டே செல் வதைக் காண முடிகிறது. அவர் கூறினார்: 'இது என் கைத்தடி. இதனை நான் ஊன்றிக்கொள்வேன். இதன் மூலம் என் ஆடுகளுக்கு இலைகளைப் பறிப்பேன். இன்னும் எனக்கு வேறுபல பயன்களும் இருக்கின்றன. (18)' இந்தப் பண்புகள் வேறு அத்தியாயங்களில் காணப்படவில்லை.

ஃபிர்அவ்னுடன் பேசிக்கொண்டிருந்தபோது மூசா தம் இறைவனை வர்ணிப்பதைப் பாருங்கள்:

'மூசாவே, உங்கள் இருவரின் இறைவன் யார்?' என்று ஃபிர்அவ்ன் கேட்டான். அதற்கு அவர், 'ஒவ்வொரு பொருளுக்கும் அதற்குரிய வடிவத்தைக் கொடுத்து, பின்னர் வழிகாட்டியவன்தான் எங்கள் இறைவன்.' என்று கூறினார். 'முன்சென்ற சமூகங்களின் நிலைமை என்ன?' என்று ஃபிர்அவ்ன் கேட்டான். அதற்கு அவர், 'அதைப் பற்றிய அறிவு என் இறைவனிடம் ஒரு பதிவேட்டில் உள்ளது. என் இறைவன் தவறிழைப்பதுமில்லை, மறப்பதுமில்லை. அவனே உங்களுக்காகப் பூமியை விரிப்பாக அமைத்து அதில் பாதைகளை ஏற்படுத்தியுள்ளான். வானத்திலிருந்து மழை பொழியச்செய்து அதன் மூலம் பல்வேறு வகையான தாவரங்களை வெளிப்படுத்தி யுள்ளான்' என்று கூறினார். (49-53)

இந்த வர்ணிப்பு இங்கு தனித்துவமானது. வேறு இடங்களில் இது காணப்படவில்லை.

அதே போன்று, இங்கு சூனியக்காரர்கள் அல்லாஹ்வின் மீது கொண்ட நம்பிக்கையும் அதில் அவர்கள் திருப்தியடைந்த விதமும் அதற்காக வலிகளைப் பொறுத்துக்கொண்ட விதமும் விரிவாக இடம்பெறுகிறது.

> ‘நாங்கள் எங்கள் இறைவனின் மீது நம்பிக்கை கொண்டோம், எங்கள் பாவங்களையும் கட்டாயப்படுத்தி எங்களை நீ சூனியம் செய்ய வைத்ததையும் அவன் மன்னித்துவிட வேண்டும் என்பதற்காக. அல்லாஹ்வே சிறந்தவனாகவும் நிலைத்திருப்பவனாகவும் இருக்கிறான். தன் இறைவனிடம் குற்றவாளியாக வருபவனுக்கு நரகம்தான் உண்டு. அதில் அவன் சாகவும் மாட்டான், வாழவும் மாட்டான். யார் நற்செயல்கள் புரிந்து நம்பிக்கையாளராகத் தம் இறைவனிடம் வருவாரோ அத்தகையவர்களுக்குத்தான் உயர்ந்த பதவிகள் இருக்கின்றன.’ (73-75)

மூசாவுடைய சம்பவத்தைத் தொடர்ந்து மறுமையைக் குறித்து உள்ளங்களில் நடுக்கத்தை ஏற்படுத்தும் விதமாகச் செய்தி இடம்பெறுகிறது:

> அவர்கள் மலைகளைப் பற்றி உம்மிடம் கேட்கிறார்கள். நீர் கூறும், ‘என் இறைவன் அவற்றைத் தூள்தூளாக்கிவிடுவான். பூமியை வெட்டவெளியாக்கிவிடுவான். அதில் எவ்வித மேடுபள்ளத்தையும் நீர் காண மாட்டீர். அந்நாளில் அனைவரும் அழைப்பாளரின் பின்னால் செல்வார்கள். யாரும் அங்கிருந்து தப்பிவிட முடியாது. கருணைமிக்க இறைவனுக்கு முன்னால் எல்லா ஓசைகளும் ஒடுங்கிவிடும். சிறு முணுமுணுப்பைத் தவிர வேறு எதையும் நீர் செவியுற மாட்டீர். அந்நாளில் கருணைமிக்க இறைவன் யாருக்கு அனுமதியளித்து அவரது பேச்சைக் கேட்க விரும்புவானோ அவரைத் தவிர வேறு யாருடைய பரிந்துரையும் பயனளிக்காது. அவன் அவர்களுக்கு முன்னுள்ளதையும் பின்னுள்ளதையும் நன்கறிகிறான். ஆனால், அவர்கள் தங்களது அறிவால் அவனைச் சூழ்ந்தறிய முடியாது. என்றும் நிலைத்திருக்கும் நிலையானவனின் முன்னால் மக்கள் அனைவரும் பணிந்திருப்பார்கள். அநியாயத்தைச் சுமந்தவன் தோல்வியடைந்துவிட்டான்.’ (105-113)

இந்தப் பண்புகள் நிராகரிப்பாளர்களின் கர்வத்தில் இடியாய் விழுகின்றன. அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்ளும்படி, அவனுடைய சந்திப்புக்காகத் தங்களைத் தயார்படுத்திக்கொள்ளும்படி மனிதர்களைத் தூண்டுகின்றன.

❖ ❖ ❖

இங்கு அறிஞர்களின் கவனத்தை ஈர்ப்பது இந்த அத்தியாயத்தின் பத்து இடங்களில் இடம்பெற்றுள்ள அத்திக்ர் - நினைவுகூர்தல், அந் நிஸ்யான் - மறத்தல் ஆகிய சொற்கள்தாம்.

1. ‘நீர் துன்பப்படுவதற்காக நாம் இக்குர்ஆனை உமக்கு அருள வில்லை; அஞ்சுவோருக்கு அறிவுரையாகவே அருளினோம். (2,3)’ வஹீ என்பது நினைவூட்டலாகவும் அலட்சியத்தை, மறதியை நீக்கக்கூடியதாகவும் இருக்கிறது.

2. ‘நான்தான் அல்லாஹ். என்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. எனவே என்னையே வணங்குவீராக. என்னை நினைவுகூர்வதற்காகத் தொழுகையை நிலைநிறுத்துவீராக. (14)’ இங்கு தொழுகையை நிலைநிறுத்துதல் என்பது கூட்டாகத் தொழுகையை நிறைவேற்றுவதும் அல்லாஹ்வை நினைவுகூர் வதற்காக உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் தயாராவது மாகும். ஹதீஸில் கூறப்பட்டுள்ளது, ‘தொழுகையின் வரிசை களைச் சரிசெய்வது தொழுகையை நிலைநிறுத்துவதாகும்.’

3. தமது தூதுத்துவப் பணியில் ஹாரூனையும் கூட்டாக்கு என்று மூசா வேண்டியபிறகு கூறுகிறார்: ‘எனது பணியில் அவரையும் கூட்டாக்கு. அதனால் நாங்கள் அதிகமதிகம் உனது தூய்மை யைப் பறைசாற்ற வேண்டும்; உன்னை அதிகமதிகம் நினைவு கூர வேண்டும். நிச்சயமாக நீ எங்களைப் பார்த்துக்கொண்டி ருக்கிறாய். (32-35)’

4. அதற்குப் பிறகு அல்லாஹ் மூசாவிடம் கூறினான்: ‘நீரும் உம் சகோதரரும் என் சான்றுகளுடன் செல்லுங்கள். என்னை நினைவுகூர்வதில் சோர்வடைந்துவிடாதீர்கள். (42)’

5. தூதுத்துவத்தின் நோக்கம் ஃபிர்அவ்னை அவனுடைய அலட்சி யத்திலிருந்து விடுவிப்பதும் அவனை அல்லாஹ்வின் பக்கம் திருப்புவதும்தான் என்பது தெளிவுபடுத்தப்படுகிறது: ‘அவ னுடன் மென்மையாகப் பேசுங்கள். அவன் அறிவுரையை ஏற்கக்கூடும் அல்லது அஞ்சக்கூடும். (44)’

6. அல்லாஹ் இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தையும் நன்கறிந்தவன். அவனுடைய அறிவு நிரந்தரமானது என்பதைக் குறித்து மூசா கூறுகிறார்: ‘அதைப் பற்றிய அறிவு என் இறைவனிடம் ஒரு பதிவேட்டில் உள்ளது. என் இறைவன் தவறிழைப்பதுமில்லை, மறப்பதுமில்லை. (52)’

7. சாமிரி தான் உருவாக்கிய காளைக் கன்றைக் குறித்து வர்ணிக் கிறான். தன் பேச்சை நம்பி ஏமாந்தவர்களிடம் அவன் கூறு கிறான்: ‘இதுதான் உங்கள் இறைவனும் மூசாவின் இறைவனும் ஆகும். அவர் இதனை மறந்துவிட்டார். (88)’

8. மூசாவின் சம்பவத்தை எடுத்துரைத்த பிறகு அல்லாஹ் தன் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களுக்குக் கூறுகிறான்: ‘இவ் வாறே முன்சென்றவர்களுடைய வரலாற்றை நாம் உமக்கு எடுத்துரைக்கிறோம். நம் புறத்திலிருந்து ஒரு நினைவூட்ட லையும் உமக்கு வழங்கியுள்ளோம். அதனைப் புறக்கணிப்பவர் மறுமைநாளில் பெரும் பாரத்தைச் சுமப்பார். (99,100)’

9. இந்தக் குர்ஆனின் ஒரு பண்பாக, இது அருளப்பட்டதன் ஒரு நோக்கமாக அல்லாஹ் கூறுகிறான்: ‘இவ்வாறே நாம் இந்தக் குர்ஆனை அறபி மொழியில் அருளியுள்ளோம். மனிதர்கள் இறையச்சமுடையோராகும் பொருட்டு அல்லது நல்லுணர்ச்சி பெறும் பொருட்டு இதில் எல்லா வகையான எச்சரிக்கை களையும் நாம் வழங்கியுள்ளோம். (113)’

10. பின்னர், ஆதம் சுவனத்தில் கண்ணியப்படுத்தப்பட்டவராக இருந்தபிறகு அதிலிருந்து வெளியேற்றப்பட்டதைக் குறித்து அல்லாஹ் கூறுகிறான்: ‘நாம் முன்னரே ஆதமுக்குக் கட்டளை யிட்டிருந்தோம். ஆனால், அவர் அதனை மறந்துவிட்டார். அவரிடம் நாம் உறுதியைக் காணவில்லை. (115)’

பின்னர் தனிமனிதர்களுக்கும் சமூகங்களுக்கும் பொதுவான எச்சரிக் கையாகப் பின்வரும் வசனம் இடம்பெறுகிறது:

> என் நினைவூட்டலைப் புறக்கணிப்பவனுக்கு நெருக்கடியான வாழ்வுதான் உண்டு. மறுமைநாளில் நாம் அவனைக் குருடனாகத் தான் எழுப்புவோம். ‘என் இறைவனே, நீ என்னை ஏன் குருடனாக எழுப்பினாய்? நானோ பார்வையுள்ளவனாக இருந்தேனே?’ என்று அவன் கேட்பான். அதற்கு இறைவன், ‘இவ்வாறே நம் சான்றுகள் உன்னிடம் வந்தபோது அவற்றை நீ பொருட்படுத்தவில்லை. அவ்வாறே நீயும் இன்று பொருட்படுத்தப்பட மாட்டாய்.’ என்று கூறுவான். (124-126)

இந்த அத்தியாயம் முழுமையும் அல்லாஹ்வின் நினைவைவிட்டு அலட்சியமாக இருப்பது, அவனது அறிவுரையைவிட்டுத் தூரமாக இருப் பது ஆகியவற்றின் விளைவுகளை எடுத்துரைக்கிறது.

*ஒருவனிடம் காணப்படும் தற்காலிக மறதி அஞ்சத்தக்க ஒன்றல்ல. விரைவாகவே அவன் நினைவுகூர்ந்துவிடுவான். அவனது பார்வையின் மீது திரையாகப் படியும் மறதிதான் ஆபத்தானது. அவனது மனஇச்சை அவனை எங்கோ கொண்டுசென்றுவிடும். இறுதியில் அவனை அது நரகத்தின் எரிபொருளாய் ஆக்கிவிடுகிறது.*

❖ ❖ ❖

*இந்த அத்தியாயத்தில் இடம்பெறும் இரண்டாவது சம்பவம் ஆதமுடைய சம்பவமாகும். இப்லீஸின் சூழ்ச்சியில் அவர் வீழ்ந்ததற்கான காரணத்தோடு அது தொடங்குகிறது. பின்னர் அவர் சுவனத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். அவரது பார்வை குன்றிவிட்டது. அவரது உறுதி குலைந்துவிட்டது. திருக்குர்ஆனின் சொல்லாடலில் கூற வேண்டுமானால், 'அவர் அதனை மறந்துவிட்டார். அவரிடம் நாம் உறுதியைக் காணவில்லை.* (115)'

*அந்த மரத்தை நெருங்க வேண்டாம் என்று அவர் தடுக்கப்பட்டபோது விழிப்பானவராகத்தான் இருந்தார். ஆனால், நாள்கள் செல்லச்செல்ல மறதி அவரை ஆட்கொள்ளவும் ஆசை அவரை இழுக்கவும் தொடங்கிவிட்டன். ஷைத்தான் அவரது உள்ளத்தில் ஏற்படுத்திய பொய்யான ஊசலாட்டங்களுக்கு அவர் செவிகொடுக்கத் தொடங்கினார். அது நிலையான மரம் எனவும் அழிவில்லாத அரசாட்சி எனவும் அவன் ஆசையூட்டத் தொடங்கினான்: 'ஆதமே, நிலையான மரத்தையும் அழிவில்லா அரசாட்சியையும் நான் உமக்கு அறிவிக்கட்டுமா?* (120)'

*ஆதம் தடுக்கப்பட்ட மரத்தை நெருங்கி அதிலிருந்து உண்டுவிட்டார். தம் மனைவியையும் உண்ணும்படித் தூண்டினார். அவளும் அவரைப் பின்பற்றினார். இருவரும் சுவனத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். இங்கு குற்றம்செய்தது ஆதம்தான் என்பதைக் குர்ஆனின் வசனங்கள் தெளிவாக உணர்த்துகின்றன. மனைவியின் குற்றம் அவரைத் தடுக்காததும் அவருக்கு அறிவுரை கூறாததும்தான்.*

*ஆதமும் அவரது மனைவியும் இன்பங்களை இழந்தார்கள். சிரமங்கள் சூழ்ந்த வாழ்க்கையைத் தொடங்குவதற்காக அவர்கள் பூமியில் இறக்கப்பட்டார்கள்.*

*இந்த முதல் சம்பவம் மனிதனுடைய வாழ்க்கையில் அனுதினமும் மீண்டும்மீண்டும் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கிறது. மறதி அவனை மிகைத்துவிடுகிறது. அதற்குப் பிறகு வீழ்ச்சி தொடங்குகிறது. அல்லாஹ்வின் கண்காணிப்பைப் பற்றிய தெளிவான உணர்வும் இச்சைகளைக்*

கட்டுப்படுத்தும் அளவுக்கு உறுதியான எண்ணமும் கொண்டவர்களுக்குத்தான் சுவனம் உரியது.

அல்லாஹ்வின் பெரும் கிருபைகளுள் ஒன்று, அவன் தவறிழைப்பவர்களுக்கு முன்னால் பாவமன்னிப்பின் வாசல்களைத் திறந்து வைக்கிறான். அவர்கள் தவறிழைத்தபோதிலும் அவன் தன் திருப்தியின் வாயில்களை அவர்களுக்கு அடைத்துவிடுவதில்லை. ஆனால், யார் அல்லாஹ்வின் நினைவைவிட்டு அலட்சியமாக இருக்கிறார்களோ, அவனுடைய பாதையைவிட்டு மக்களைத் தடுக்கிறார்களோ அவர்களுக்கு வேறொரு தண்டனை உண்டு. 'என் நினைவூட்டலைப் புறக்கணிப்பவனுக்கு நெருக்கடியான வாழ்வுதான் உண்டு. மறுமைநாளில் நாம் அவனைக் குருடனாகத்தான் எழுப்புவோம். (124)'

இந்த உலகம் கூலி வழங்கப்படுவதற்கான இடம் இல்லை என்றாலும் தீயவர்களுக்குச் சில தண்டனைகளை அவன் விரைவாக வழங்கிவிடுகிறான், நல்லவர்களுக்குச் சில வெகுமதியை அவன் விரைவாக வழங்கிவிடுவதைப் போன்று.

❖ ❖ ❖

அத்தியாயத்தின் இறுதிப் பகுதி அதன் ஆரம்பப் பகுதியுடன் உறுதியாக இணைக்கப்பட்டிருப்பதை நாம் காண முடியும். அல்லாஹ்வின் தூதருக்கு யார் தொல்லையளித்தார்களோ அவர்களின் உள்ளம் கவலையால் நிரம்பியிருக்கும். அவர்களின் முன்னோர்களுக்கு ஏற்பட்ட விளைவுதான் அவர்களுக்கும் ஏற்படும் என்பதைக் குறித்து அவர்களுக்கு எந்த அச்சமும் இல்லையா?

> இவர்களுக்கு முன்னர் எத்தனையோ சமூகங்களை நாம் அழித்திருக்கிறோம் என்பதிலிருந்து இவர்கள் படிப்பினை பெறவில்லையா? இவர்கள் அவர்களின் ஊர்களில்தான் நடக்கிறார்கள். நிச்சயமாக இதில் அறிவுடையோருக்குப் பெரும் சான்றுகள் இருக்கின்றன. (128)

சத்தியத்துக்கும் அசத்தியத்துக்குமான மோதல் படைப்பின் ஆரம்பக் கட்டத்திலிருந்தே தொடங்கிவிட்டது.

நாகரிகங்கள் தாம் சம்பாதித்த பாவங்களின் காரணமாக அழிந்துவிட்டாலும் சத்தியம் கடுமையாகத் தாக்கப்பட்டபோதும் மறையாமல் இருந்தாலும் பின்வந்தவர்கள் அசத்தியத்தைவிட்டும் விலகவில்லை; சத்தியத்தின் பாதையில் செல்லவுமில்லை.

குறைவான வாழ்நாளைப் பெற்றிருந்தபோதிலும் சத்தியம் நிலைக்க வேண்டும் என்பதற்காக அல்லாஹ்வின் பாதையில் உயிர் துறந்தவர்கள் நீண்ட காலம் நீடிப்பதையும் அல்லாஹ்வையும் அவனுடைய தூதர் களையும் மறந்த அநியாயக்காரர்கள் நிறைவான அதிகாரங்களைப் பெற்றிருந்த போதிலும் அழிந்து மறக்கப்பட்டுவிடுவதையும் காண்கி றேன். உண்மையும் நேர்மையும் நிலைத்திருக்கக்கூடியவை. 'நுரையோ காய்ந்து காணாமல்போய்விடுகிறது. மனிதர்களுக்குப் பயனளிப்பது மட்டுமே பூமியில் தங்குகிறது. (13:17)'

நிரந்தரமான இந்த மோதலுக்கு அல்லாஹ் சில நியதிகளை நிர்ண யித்துள்ளான். அவற்றில் அவசரக்காரர்களின் அவசரத்தால், அநியாயக் காரர்களின் கர்வத்தால் எந்த மாற்றமும் ஏற்பட்டுவிடுவதில்லை. பின்வரும் வசனம் இதனையே தெளிவுபடுத்துகிறது: 'உம் இறைவனிடமிருந்து முன்னரே ஒரு விசயம் முடிவாகாமலும் குறிப்பிட்ட தவணை நிர்ணயிக் கப்படாமலும் இருந்திருந்தால் நிச்சயமாக அவர்களின் முடிவு தீர்மா னிக்கப்பட்டிருக்கும். (129)' அவன் வகுத்த நியதிகளில் எவ்வித மாற்றமும் ஏற்படாது.

பின்னர் அத்தியாயம் நபியவர்களை விளித்து அவர்களுக்கு ஆறுதல் கூறுகிறது. எதைக் கொண்டு ஆறுதல் கூறுகிறது? பொறுமையைக் கொண்டும் அல்லாஹ்வின் புகழைப் பறைசாற்றுவதைக் கொண்டும் ஆறுதல் பெற்றுக்கொள்ளும்படி கூறுகிறது. இது அல்ஹிஜ்ர் என்ற அத்தியாயத்தில் இறுதியாகக் கூறப்பட்ட பின்வரும் வசனத்தைப் போன் றது: 'அவர்களின் கூற்றுகளால் உம் உள்ளம் இறுக்கமடைவதை நாம் அறிவோம். ஆகவே, உம் இறைவனை நீர் புகழ்ந்துபோற்றுவீராக. அவ னுக்குச் சிரம்பணிபவர்களில் ஒருவராகிவிடுவீராக. (15:97)' அசத்தியத்துக்கு முன்னால் சத்தியத்தில் மூழ்கிவிடுவது நெருக்கடியை ஏற்படுத்தும். ஆகவேதான் அல்லாஹ் தன் தூதருக்குக் கூறுகிறான்:

> ஆகவே, அவர்கள் கூறுவதைப் பொறுத்துக்கொள்ளும். சூரியன் உதிப்பதற்கு முன்பும் அது மறைவதற்கு முன்பும் உம் இறைவனைப் போற்றிப்புகழ்வீராக. இரவு நேரங்களிலும் பகலின் ஓரங்களிலும் அவனைத் துதிப்பீராக. அதனால் நீர் திருப்தியடையலாம். (130)

நிராகரிப்பாளர்களால் ஏற்படக்கூடிய நிராகரிப்பின் வலிகளால் நீர் துன்புற வேண்டாம்.

தூதர்கள் -இந்தத் தூதைச் சுமப்பவர்கள்- அல்லாஹ்வுடனான தங் களின் தொடர்பை வலுப்படுத்தாமல், அவனையே உற்ற நண்பனாக

எடுத்துக்கொள்ளாமல் ஆறுதலைப் பெற முடியாது. 'அவர்களில் சிலருக்கு அவர்களைச் சோதிக்கும் பொருட்டு நாம் வழங்கியிருக்கும் உலகியல் வசதிகளை ஏறெடுத்தும் பார்க்காதீர். உம் இறைவன் வழங்கியிருப்பது தான் மிகச் சிறந்தது; என்றும் நிலையானது. (131)'

சில சமயங்களில் நிராகரிப்பாளர்களும் பாவிகளும் அதிகமான உல கியல் வசதிகளைப் பெற்றவர்களாக இருக்கலாம். அதனால் அவர்களுக்கு மறுமையில் எந்தப் பலனும் ஏற்படப்போவதில்லை. அவர்கள் அழி வையே சந்திப்பார்கள். இதற்கு முன்னால் தங்களிடம் இருப்பவற்றைக் கொண்டு கர்வம் கொள்ளும் நிராகரிப்பாளர்களின் பின்வரும் கூற்றும் இடம்பெற்றுவிட்டது:

'இரு பிரிவினரில் யார் நல்ல நிலையில் இருக்கிறார்கள், யாருடைய கூட்டம் மிகச் சிறந்ததாக இருக்கிறது?' என்று நிராகரிப்பாளர்கள் நம்பிக்கையாளர்களிடம் கேட்கிறார்கள். இவர்களுக்கு முன்னர் இவர்களைவிட அதிகச் சாதனங்களுடையவர்களாகவும் கம்பீரம் கொண்டவர்களாகவும் விளங்கிய எத்தனையோ சமூகங்களை நாம் அழித்திருக்கிறோம். (73,74)

கடினமான படுக்கையில் நபியவர்கள் படுத்ததால் பாயினுடைய கோரைகள் நபியவர்களின் மேனியில் பதிந்திருப்பதைக் கண்ட உமர் வேதனையடைந்தார். கைஸரும் கிஸ்றாவும் அனுபவிக்கின்ற ஆடம் பரத்தை எண்ணிப்பார்த்தார்.

ஆனாலும் நபியவர்கள் அவருக்குப் புரியவைத்தார்கள். 'அவர்களுக்கு விரைவாகவே இன்பங்கள் வழங்கப்பட்டுவிட்டன. நாம் அவற்றைக் கண்டு வருத்தப்படத் தேவை இல்லை.' என்றார்கள். 'உம் இறைவன் வழங்கியிருப்பதுதான் மிகச் சிறந்தது; என்றும் நிலையானது.' (131)

வணக்க வழிபாட்டின் வெளிச்சத்தால் வீடுகள் பிரகாசமடைவதுதான் சிறந்தது. அவற்றை இறையச்சமும் இறைசார்ந்த வாழ்க்கையும் ஆக் கிரமித்திருக்க வேண்டும். மனிதர்களுக்கான ஒழுக்கத்தை, தூய்மையைச் சுமந்தவர்களாக அங்குள்ளவர்கள் வெளியேற வேண்டும். ஆகவேதான் அல்லாஹ் தன் தூதருக்குக் கூறுகிறான்:

'தொழுகையைப் பேணுமாறு உம் குடும்பத்தாரை ஏவுவீராக. அதன் மீது நீரும் உறுதியாக இருப்பீராக. நாம் உம்மிடம் எதையும் கேட்க வில்லை. நாமே உமக்கு அனைத்தையும் அளிக்கிறோம். சிறந்த முடிவு இறையச்சத்துக்கே.' (132)

*இஸ்லாம் உருவாக்கிய மனிதர்கள் கண்ணியமான செயல்களில்தான் மற்றவர்களுடன் போட்டி போடுவார்கள். அவர்களின் வீடுகள் மற்றவர் களுக்கு முன்மாதிரிகளாக விளங்கும்.*

*தம் நலன்களையே நோக்கமாகக் கொண்டவர்கள் தமக்கு நிர்ண யிக்கப்பட்ட செல்வத்துக்குப் பின்னால்தான் எப்போதும் ஓடிக்கொண்டி ருப்பார்கள். அதற்காகவே கவலை கொள்வார்கள். தாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகளைக் குறித்து அவர்கள் சிந்திக்க மாட்டார்கள். இப்னு அதா கூறுவதுபோன்று அவர்கள் அகப்பார்வை இழந்தவர்களாக இருப்பார்கள்.*

*அத்தியாயம் மீண்டும் மக்காவின் இணைவைப்பாளர்களை நோக்கித் திரும்புகிறது. தூதரின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் அற்புதத்தை அவர்கள் வேண்டுவதாகக் குறிப்பிடுகிறது. அதன் மூலம் அவர்கள் என்ன விரும்புகிறார்கள்? ஸஃபா மலை தங்க மலையாக மாற வேண்டும் என்று விரும்புகிறார்களா? அது அவ்வாறு ஆகிவிட்டாலும் இவர்கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள். அந்தத் தங்கத்தைப் பறித்துக்கொண்டு இன் பங்களில் மூழ்கிக்கிடப்பார்கள்.*

*அவர்களிடம் தெளிவான சான்று வந்துவிட்டது. ஆனாலும் அவர்கள் அதில் கவனம் செலுத்தவில்லை. 'அவர் தம் இறைவனிடமிருந்து ஏதேனும் ஒரு சான்றை ஏன் கொண்டுவரவில்லை என்று அவர்கள் கேட்கிறார்கள். முந்தைய வேதங்களில் உள்ள ஆதாரம் ஏதும் அவர்களிடம் வரவில்லையா?* (133)*' அல்லாஹ் ஒரு வேதத்தை அவர்களுக்கு வழங்கி யுள்ளான். அதில் முந்தைய தூதர்கள் அனைவருடைய போதனைகளை யும் ஒன்றிணைத்துள்ளான். ஏன் அவர்கள் அதைக் கொண்டு பயன டையவில்லை? அவர்களுக்கு அறிவு இல்லையா?*

*அவர்களின் வழிகேட்டின் காரணமாக அல்லாஹ் அவர்களைத் தண்டித்தால், அவர்கள்மீது வேதனையை இறக்கினால், 'எங்களுக்கு எச்சரிப்பவர் யாரும் வரவில்லை, ஏன் எங்களின் அலட்சியத்திலிருந்து விடுவிப்பவர் யாரும் வரவில்லை?' என்று கூப்பாடுபோடுவார்கள். அவர்களைப் பகிரங்கமாக எச்சரிப்பவர் வந்துவிட்டார். ஆனாலும் அவர் கள் தங்களின் காதுகளை அடைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, விளைவை எதிர்பாருங்கள்.*

> *நீர் கூறும், 'ஒவ்வொருவரும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார். ஆகவே, நீங்களும் எதிர்பாருங்கள். நேர்வழியுடையவர் யார், இலக்கினை அடைந்தவர் யார் என்பதை விரைவில் அறிந்து கொள்வீர்கள்.'* (135)

❖ ❖ ❖

அத்தியாயம் 21

# அல்அன்பியா

(இறைத்தூதர்கள்)

*இந்த அத்தியாயம் மக்காவில் இறுதியாக அருளப்பட்ட அத்தியாயங்களில் ஒன்றாகும். இதில் பதினாறு இறைத்தூதர்களும் அவர்களின் சுருக்கமான வரலாற்றுடன் குறிப்பிடப்பட்டிருப்பதால் அல்அன்பியா - இறைத்தூதர்கள் என்று இந்த அத்தியாயத்துக்குப் பெயரிடப்பட்டுள்ளது. இறைத்தூதர் இப்றாஹீமைக் குறித்து சற்று விரிவாகவே கூறப்பட்டுள்ளது.*

*தூதர்களாக வந்த ஆண்கள் தூதுத்துவத்தின் பெரும் பணிகளை நிறைவேற்றும், நிராகரிப்பின் தலைவர்களை எதிர்கொள்ளும் தகுதிமிக்கவர்களாக இருந்தார்கள் என்பதை இந்த அத்தியாயம் உணர்த்துகிறது. 'உமக்கு முன்னரும் நாம் ஆண்களையே தூதர்களாக ஆக்கி அவர்களுக்கு வஹீ அறிவித்தோம். நீங்கள் அறியாதவர்களாக இருந்தால் வேதக்காரர்களிடம் கேட்டுப்பாருங்கள். (7)'*

*அறிஞர்களில் சிலர் மர்யமையும் மூசாவின் தாயாரையும் இறைத்தூதர்களாகக் கணக்கிடுகிறார்கள், அவர்களுக்குத் தூதுத்துவம் வழங்கப்படாதபோதிலும்.*

❖ ❖ ❖

*இந்த அத்தியாயத்தின் ஆரம்பப் பகுதி, மக்காவின் இணைவைப்பாளர்கள் வழிகேட்டிலும் உலக மோகங்களிலும் மூழ்கியவர்களாக இருந்தார்கள் என்பதைக் காட்டுகிறது.*

*அல்லாஹ்வைக் குறித்த அவர்களின் அறிவு தெளிவற்றதாகவும் அவனுக்கு இணையாக யாரை ஆக்கினார்களோ அவர்களைக் குறித்த அறிவு தெளிவானதாகவும் இருந்தது. அவர்கள் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவதையும் கூலி கொடுக்கப்படுவதையும் நிராகரித்துக்*

கொண்டிருந்தார்கள். அன்றைய நாளுக்காகவே அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

இந்த அத்தியாயம் அவர்களின் நிலையை இவ்வாறு படம்பிடித்துக் காட்டுகிறது:

> மனிதர்களுக்கு விசாரணைக்கான நேரம் நெருங்கிவிட்டது. ஆயினும், அவர்கள் அலட்சியமாகப் புறக்கணித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் இறைவனிடமிருந்து புதிதாக எந்த ஒரு அறிவுரை வந்தாலும் அதனை அலட்சியம்செய்தவாறே அவர்கள் கவனிக்கிறார்கள். அவர்களின் உள்ளங்கள் அலட்சியத்தில் ஆழ்ந்து கிடக்கின்றன. (1-3)

மீண்டும் உயிர்கொடுத்து எழுப்புதலை மறுப்பவர்களுக்குத் திருக்குர்ஆன் பல வகையான ஆதாரங்களைக் கொண்டு பதிலளிக்கிறது. அவற்றுள் ஒன்று, 'நாம் வானத்தையும் பூமியையும் அவற்றுக்கிடையே உள்ளவற்றையும் விளையாட்டாகப் படைக்கவில்லை. (16)' நாம் செய்த ஒவ்வொரு செயலுக்கும் செய்யாமல் விட்டவற்றுக்கும் துல்லியமான முறையில் நாம் பதில் சொல்லியாக வேண்டும். இது குறித்த அல்மஅர்ரியின் பின்வரும் கவிதை எவ்வளவு அற்புதமானது!

> நீடிப்பதற்காகவே மனிதர்கள் படைக்கப்பட்டுள்ளார்கள். வழி தவறிய ஒரு பிரிவினர் அழிந்துவிடுவோம் என்று எண்ணுகிறார்கள்.
>
> மாறாக, அவர்கள் செயற்களத்திலிருந்து துன்பம் மிகுந்த அல்லது நிம்மதியளிக்கக்கூடிய ஒரு களத்தை நோக்கி இடம்பெயர்கிறார்கள்.

மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுதலுக்குத் திருக்குர்ஆன் இயல்பான ஓர் ஆதாரத்தை முன்வைக்கிறது. இந்தப் பிரபஞ்சத்தை முதன் முதலாகப் படைத்தவன் அதனை அழிப்பதற்கும் அதனை மீண்டும் படைப்பதற்கும் ஆற்றலுடையவன் என்பதுதான் அது. 'வானங்களும் பூமியும் இணைந்திருந்தன, நாம்தான் அவற்றைப் பிரித்தோம் என்பதையும் உயிருள்ள ஒவ்வொரு பொருளையும் நீரிலிருந்தே நாம் உருவாக்கினோம் என்பதையும் நிராகரிப்பாளர்கள் கவனிக்கவில்லையா? (30)'

அறிவியலாளர்களில் பெரும்பாலோர் நெபுலா (Nebula) தியரியை ஏற்றுக்கொள்கிறார்கள். அது கூறுகிறது, 'நட்சத்திரங்கள் அனைத்தும் ஒரே கோளாகத்தான் இருந்தன. பின்னர் -அல்லாஹ்வின் நாட்டப்படி- நாம் காணுகின்ற இந்த வடிவங்களை அடைந்தன. ஒவ்வொன்றும் தனக்கான வட்டப் பாதையைத் தேர்ந்தெடுத்துக்கொண்டது.'

*ஆச்சரியம் என்னவென்றால், இந்தப் பூமிக்குக் கீழே நெருப்பு இருக்கிறது. எரியக்கூடிய நெருப்பைச் சுற்றியுள்ள, நாம் வாழ்கின்ற வெளிப்பகுதி உயிரினங்களும் தாவரங்களும் வாழ்வதற்குத் தேவையான தண்ணீரால் நிரம்பியுள்ளது. எவ்வளவு வியப்பானது இந்த ஆற்றல்! 'பூமி அவர்களுடன் சாய்ந்துவிடாதிருக்க நாம் அதில் மலைகளை நாட்டினோம். மக்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு அதில் விசாலமான பாதைகளையும் ஏற்படுத்தினோம்.* (31)*' ஆனாலும் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவதை மறுப்பவர்கள் முன்னோர்களிலும் பின்னோர்களிலும் காணப் படத்தான் செய்கிறார்கள்.*

*தற்காலத்தில் மனிதர்கள் உலக மோகத்தில் மதிமயங்கியவர்களாகக் காணப்படுகிறார்கள். அவர்கள் இன்னும் அதிலிருந்து மீளவில்லை. மறுமைநாளைக் குறித்த எந்தப் பேச்சையும் அவர்கள் கேட்க விரும்பவுமில்லை. மாறாக, அதனைப் பரிகாசமாகக் கருதுகிறார்கள்.*

> *'நீங்கள் உண்மையாளர்களாயின் இந்த எச்சரிக்கை எப்போது வரும்?' என்று அவர்கள் கேட்கிறார்கள். அந்தோ, தங்கள் முகங்களையும் முதுகுகளையும் நெருப்பைவிட்டுத் தடுக்க முடியாத அச்சமயத்தை நிராகரிப்பாளர்கள் அறிந்துகொள்ள வேண்டுமே! அப்போது அவர்களுக்கு எங்கிருந்தும் உதவி கிடைக்காது. மாறாக, அது திடீரென அவர்களிடம் வந்து அவர்களைத் திகைக்கச் செய்துவிடும். அதனை அவர்களால் தடுக்கவும் முடியாது. அவர்களுக்கு அவகாசமும் அளிக்கப்படாது.* (38-40)

*பின்னர், மறுமைநாளில் விசாரணை மிகத் துல்லியமாக இருக்கும் என்பதை அல்லாஹ் தெளிவுபடுத்துகிறான். அதில் எந்த அநீதியும் குறைபாடும் இருக்காது.*

> *மறுமைநாளில் நாம் நியாயமான தராசை நிறுவுவோம். ஆகவே, எந்த உயிரின் மீதும் சிறிதளவுகூட அநீதி இழைக்கப்படாது. கடுகளவு செயலை ஒருவர் புரிந்திருந்தாலும் அதையும் நாம் கொண்டு வருவோம். விசாரணைசெய்வதற்கு நாமே போதுமானவர்களாவோம்.* (47)

❖ ❖ ❖

*இணைவைப்பாளர்கள் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுதலைச் சாத்தியமற்ற ஒன்றாகக் கருதுவதோடு மட்டுமல்லாமல் தூதரை நிராகரித்து, அவர் சூனியத்தைக் கொண்டுவந்துள்ளார் என்றும் இட்டுக் கட்டுகிறார்கள். 'இவர் உங்களைப் போன்ற ஒரு மனிதர்தானே. நீங்கள்*

பார்த்துக்கொண்டே சூனியத்தில் விழுந்துவிடுகிறீர்களா? (3)' இந்த வார்த்தை அல்லாஹ்வின் மார்க்கத்தைத் தேர்ந்தெடுக்கக்கூடியவர் களுக்கு மறைமுகமான நெருக்கடியை உள்ளடக்கியுள்ளது.

தூதர்கள் மனிதர்களாக, நம்முடன் பழகக்கூடியவர்களாகத்தான் இருக்க வேண்டும். அப்போதுதான் நம்மால் அவர்களைப் பின்பற்ற முடியும். அவர்கள் நம்முடைய ஆசைகளையும் வலிகளையும் உணர்வார்கள். நம்முடைய உடலையும் உணர்வுகளையும் கொண்டு சோதனையையும் போராட்டத்தையும் எதிர்கொள்வார்கள். வானத்திலிருந்து வருகின்ற ஒரு வானவரிடமிருந்து நாம் தூய்மையையும் உன்னதத்தையும் எவ்வாறு கற்றுக்கொள்ள முடியும்? அவர் நம்மைப் போல மணமுடித்தவராகவோ பிள்ளைகள் உள்ளவராகவோ இருக்க மாட்டாரே? நம்மைப் போலச் சிரிப்புக்கும் அழுகைக்கும் உட்பட மாட்டாரே? ...

இணைவைப்பாளர்கள் தொட்டுணரக்கூடிய ஓர் அற்புதத்தை வேண்டி னார்கள். 'முற்காலத் தூதர்கள் சான்றுகளுடன் அனுப்பப்பட்டவாறு இவரும் நம்மிடம் ஒரு சான்றைக் கொண்டுவரட்டும் என்று அவர்கள் கூறுகிறார்கள். இவர்களுக்கு முன்னர் நாம் அழித்துவிட்ட ஊர்வாசிகளில் எவரும் நம்பிக்கை கொள்ளவில்லை. இவர்கள் நம்பிக்கை கொள்ளப் போகிறார்களா என்ன? (5,6)'

சான்றுகள் அனைத்தும் அவர்களிடம் வந்துவிட்டாலும் அவர்கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள். அல்லாஹ் மற்றொரு அத்தியாயத்தில் கூறுகிறான்: 'நாம் அவர்களுக்காக வானத்தின் ஒரு கதவைத் திறந்து அதன் வழியே அவர்கள் ஏறிச்செல்லத் தொடங்கினாலும் அவர்கள் கூறுவார்கள், எங்களின் பார்வைகள் மயக்கப்பட்டுவிட்டன. எங்கள்மீது சூனியம் செய்யப்பட்டுள்ளது. (15:15)' இறுதியில் பிடிவாதம் அவர்களை அழிவின் பக்கம் இட்டுச்சென்றுவிடும்.

அல்லாஹ் அறபுகளுக்கு அறிவிக்கிறான், உலகில் உள்ள மனிதர்களை விட அவர்களின் படித்தரத்தை உயர்த்தும் பொருட்டே அவர்களிலிருந்து முஹம்மதைத் தூதராகத் தேர்ந்தெடுத்துள்ளான். தூதுத்துவம் வழங்கி ஆடு மேய்ப்பவர்களாக இருந்த அவர்களைச் சமூகங்களை வழிநடத்துப வர்களாக ஆக்கினான். 'நிச்சயமாக உங்களுக்கு ஒரு வேதத்தை அருளி யுள்ளோம். அதில் உங்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. நீங்கள் புரிந்து கொள்ள மாட்டீர்களா? (10)'

❖ ❖ ❖

இருந்தும் மிகச் சிரமத்துடனேயே அறபுகள் இஸ்லாத்தை ஏற்றார்கள். ஆனாலும் இஸ்லாத்தைக் கொண்டு அவர்கள் திருப்தியடைந்த பிறகு

அதற்காக உயிரையும் அர்ப்பணித்தார்கள். உலகின் மூலை முடுக்கெல் லாம் அதனைக் கொண்டுசென்றார்கள்.

தவ்ஹீதைக் கொண்டுதான் அவர்கள் புறப்பட்டார்கள். அதைக் குறித்து தான் மக்களிடம் விவாதித்தார்கள். உலகின் பல பகுதிகளிலும் உள்ள கிறிஸ்தவர்கள் ஈசாவை இறைவனாக ஆக்கிக்கொண்டிருந்தார்கள். இன்று வரை திரித்துவம் அவர்களின் கொள்கையாகவே இருந்துவருகிறது.

திருக்குர்ஆன் பொய்யான அவர்களின் கொள்கையை மறுத்தது. ஈசாவும் ஜிப்ரீலும் கண்ணியமான அடியார்கள்தாம் என்பதைத் தெளிவுபடுத்தியது.

> வானவர்கள் கண்ணியம்மிக்க அடியார்களாவர். அவர்கள் அவனை மீறிப் பேச மாட்டார்கள். அவனது கட்டளைப்படியே செயல்படு வார்கள். அவர்களுக்கு முன்னுள்ளதையும் பின்னுள்ளதையும் அவன் நன்கறிவான். அவனது விருப்பமின்றி யாருக்கும் அவர்கள் பரிந்துபேச மாட்டார்கள். அவனது அச்சத்தால் அவர்கள் நடுங்கிக் கொண்டிருப்பார்கள். 'அவர்களில் யாராவது அவனன்றி நான்தான் இறைவன் என்று கூறினால் நரகத்தையே நாம் அவருக்குத் தண்ட னையாக அளிப்போம். இவ்வாறே நாம் அநியாயக்காரர்களைத் தண்டிக்கிறோம்.' (26-29)

இந்த எச்சரிக்கை மிகத் தெளிவான ஆதாரமாகும். இவ்வாறு நரகத்தைக் கொண்டு மிரட்டப்பட்டும் ஏன் அவர்கள் அடிபணிகிறார்கள்? அவர் களிடம் கடவுள்தன்மை இருந்திருந்தால் நிச்சயம் பழிவாங்கும் பொருட் டுப் பொங்கி எழுந்திருப்பார்கள். விண்ணுலகில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருப்பார்கள். ஆனாலும் இவற்றில் எதுவும் நிகழவில்லை. இந்தப் பிரபஞ்சத்தின் நியதிகள் படைக்கப்பட்டதிலிருந்து அப்படியே தான் நிலைத்திருக்கின்றன.

ஏன்? ஏனெனில் வானங்களிலும் பூமியிலும் ஆற்றல்மிக்கவன் அல் லாஹ் ஒருவனே. அவன் நாடியதே நடந்தது. அவன் நாடுவதே நடக்கும். அவன் நாடாதது எதுவும் நிகழாது. அவனைத் தவிர அனைவருமே அவனுடைய கண்ணியத்துக்கு முன்னால் அடிபணிகிறார்கள். அவனுக்கு மாறுசெய்யும் எந்த வார்த்தையும் அவர்களிடமிருந்து வெளிப்படுவ தில்லை.

> வானங்களிலும் பூமியிலும் உள்ளவை அவனுக்கே உரியன. அவ னிடம் உள்ளவர்கள் அவனை வணங்குவதை விட்டுக் கர்வம் கொள்வதுமில்லை; களைத்துப் போவதுமில்லை. அவர்கள் இரவும் பகலும் சோர்வடையாமல் அவனைப் புகழ்ந்து கொண்டே

*இருக்கிறார்கள். அவர்கள் பூமியிலிருந்து உருவாக்கிக் கொண்ட தெய்வங்களால் யாரையேனும் உயிர்கொடுத்து எழுப்ப முடியுமா? வானங்களிலும் பூமியிலும் அல்லாஹ்வைத் தவிர வேறு தெய்வங் கள் இருந்திருந்தால் அவை அழிந்தே போயிருக்கும். அவர்கள் கூறுவதைவிட்டும் அரியணையின் அதிபதியாகிய அல்லாஹ் மிகவும் தூய்மையானவன்.* (19-22)

*தூதர்கள் அனைவரும் அல்லாஹ்வின் பக்கம் மனிதர்களை அழைக் கும் அழைப்பாளர்கள். அவர்கள் அவனிடமிருந்து வந்த தூதர்கள்தாம். 'உமக்கு முன் நாம் அனுப்பிவைத்த எல்லாத் தூதர்களுக்கும், என்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. என்னையே வணங்குங்கள் என்றே வஹீ அறிவித்திருந்தோம்.* (25)'

*அவனைத் தவிர வேறு தெய்வங்கள் இருந்திருந்தால் அவை ஏன் பேசாமல் மௌனமாக இருக்கின்றன? அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவனைத் தவிர தெய்வங்கள் என்று கூறப்படும் அனைத்துமே பூஜ்யங்கள்தாம்.*

❖ ❖ ❖

*இந்த அத்தியாயம் தூதர்களைக் குறிப்பிடுவதில் இடம், காலம் ஆகிய வற்றின் அடிப்படையிலான வரிசைமுறையைப் பின்பற்றவில்லை. மூசா வையும் ஹாரூனையும் கொண்டு அத்தியாயம் தொடங்குகிறது. இரண் டாவதாக, இப்ராஹீம்குறித்த செய்தி இடம்பெறுகிறது. அவர்கள் இரு வரும் இவரின் வழித்தோன்றல்களில் உள்ளவர்கள்தாம். இதற்கு மாறாக, மர்யம் என்ற அத்தியாயத்தில் இப்ராஹீம் முதலாவதாகக் குறிப்பிடப் படுகிறார். காரணம், மூசாவுக்கு வழங்கப்பட்ட தவ்றாத் என்னும் வேதம் தான் பிரபல்யமானதாகவும் நிலைத்திருக்கக்கூடியதாகவும் இருக்கிறது. அதன் பக்கம் சுட்டிக்காட்டுவது திருக்குர்ஆனைக் குறித்த செய்திக்கு முன்னுரையாக அமைந்துவிடுகிறது. 'அருள்வளம்மிக்க இந்த அறிவு ரையை நாமே அருளியுள்ளோம். நீங்கள் இதனை மறுக்கிறீர்களா?* (50)'

*இங்கு வலுவான இளைஞராக இப்ராஹீம் நினைவுகூரப்படுவது நம் கவனத்தை ஈர்க்கும் ஒன்றாகும். அவர் சிலைகளை உடைத்த செய்தி மக்கள் மத்தியில் பரவியிருந்தது. அதற்கு முன் அவர்தான் அவற்றை உடைப்பதாக மிரட்டிக்கொண்டிருந்தார். 'சிலர் கூறினார்கள், ஒரு இளை ஞர் இவற்றைக் குறித்து பேசுவதை நாங்கள் கேட்டிருக்கிறோம். அவர் இப்ராஹீம் என்று அழைக்கப்படுகிறார்.* (60)' *இப்ராஹீம் சிலைகளை உடைத்தபிறகு பெரிய சிலையை மட்டும் விட்டுவைக்க நாடினார்.*

சிலைகளை உடைத்த கோடாரியை அதன் கழுத்தில் தொங்கவிட்டார், வழிகேட்டில் ஆழ்ந்திருக்கும் வணக்கசாலிகளிடம் தாம் உடைக்கவில்லை என்பதைக் கூறுவதற்காக. ‘இல்லை. அவற்றில் பெரியதுதான் இவ்வாறு செய்தது. அவை பேசக்கூடியவையாக இருந்தால் அவற்றிடமே கேட்டுப்பாருங்கள். (63)’

இதன் மூலம் அவர் இணைவைப்பாளர்களையும் அவர்களின் வணக்க வழிபாட்டையும் சாடினார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

இப்றாஹீமுக்குப் பிறகு அவரது சகோதரரின் மகனான லூத் குறிப்பிடப்படுகிறார். பாவிகளுடன் போராடுவதில் லூத்தும் இப்றாஹீமுக்கு உறுதுணையாக இருந்தார்.

> நாம் அவரையும் லூத்தையும் காப்பாற்றி உலக மக்கள் அனைவருக்கும் நாம் அருள்புரிந்துள்ள பூமியின்பால் கொண்டு சேர்த்தோம். நாம் அவருக்கு இஸ்ஹாக்கையும் கூடுதலாக யஅகூபையும் வழங்கினோம். அவர்கள் அனைவரையும் நல்லோர்களாகவும் ஆக்கினோம். (71,72)

பின்னர், நூஹின் பக்கம் உரையாடல் திரும்புகிறது. அதற்குப் பிறகு தாவூதும் சுலைமானும் குறிப்பிடப்படுகிறார்கள். இருவரும் இஸ்றாயீலின் மக்களைச் சேர்ந்த இறைத்தூதர்கள். திருக்குர்ஆன் அவர்களைக் குறித்து, ‘அவர்கள் இருவரும் ஒரு விவகாரம் தொடர்பான தீர்ப்பில் கருத்து வேறுபட்டார்கள்.’ என்று குறிப்பிடுகிறது. ‘நாம் இருவருக்கும் மதிநுட்பத்தையும் அறிவையும் வழங்கியிருந்தபோதும் சுலைமானுக்கு அதைப் பற்றிய சரியான புரிதலை வழங்கினோம் (79).’ வணக்க வழிபாடு, பொது விவகாரங்கள் ஆகியவற்றின் கிளைப் பிரச்சினைகளில் கருத்து வேறுபாடு ஏற்படுவது இயல்பான ஒன்றுதான். முயற்சி அங்கீகரிக்கப்பட்டதாக இருந்தால் மனிதர்கள் இரு நிலையிலும் -அவர்கள் சரியான விசயத்தை அடைந்தாலும் அல்லது தவறிழைத்தாலும்- கூலி வழங்கப்படுவார்கள்.

ஆனாலும் பொதுமக்கள் இந்தக் கருத்து வேறுபாட்டைப் பிரிவினைக்கான ஒன்றாக ஆக்கிக்கொள்கிறார்கள். நான் அறிந்தவரை இது குர்ஆனிய வழிமுறைக்கு முரணானது.

அதற்குப் பிறகு அத்தியாயம் அய்யூபைக் குறித்து பேசுகிறது. அவர் செல்வந்தராகவும் பிள்ளைகளை உடையவராகவும் இருந்தார். அனைத்தும் அவரைவிட்டுச் சென்றன. அவரது நிலைமை மோசமாகியது. அவர் அல்லாஹ்விடமே அடைக்கலம் தேடினார்.

*அய்யூபையும் நினைவுகூரும். அவர் தம் இறைவனிடம், 'நோய் என்னைப் பீடித்துவிட்டது. நீயே கருணையாளர்களில் எல்லாம் மாபெரும் கருணையாளனாக இருக்கிறாய்!' என்று இறைஞ்சிய போது நாம் அவரது பிரார்த்தனையை ஏற்று அவரது துன்பத்தைப் போக்கிவிட்டோம். நாம் அவருக்கு அவரது குடும்பத்தையும் அவர்களுடன் அவர்களைப் போன்றவர்களையும் வழங்கினோம். இது நம்மிடமிருந்துள்ள கருணையாகவும் வழிபடுவோருக்கு நினைவூட்டலாகவும் இருக்கிறது.* (83,84)

*இவ்வாறே இஸ்மாஈல், இத்ரீஸ், துல்கிஃப்ல், யூனுஸ், ஸகரிய்யா, யஹ்யா ஆகியோரும் சோதிக்கப்பட்டார்கள். அவர்கள் யாரிடம் அடைக் கலம் தேடினார்கள்? அல்லாஹ் ஒருவனிடம் மட்டுமே அடைக்கலம் தேடினார்கள். தனக்கு ஏற்பட்ட துன்பத்தை நீக்குமாறு அடியார்களிடம் கைகட்டி நிற்பவரை விடப் பெரும் மூடனை, வழிகேடனை நான் கண்டதில்லை. ஒரு பலவீனமானவர் இன்னொரு பலவீனமானவருக்கு என்ன செய்துவிட முடியும்?*

*சோதனை என்பது வாழ்க்கையின் இயல்புதான். சோதனைக்காகவே மனிதர்கள் படைக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் அவற்றைப் பொறுமை யுடன் சகித்துக்கொண்டால் அல்லாஹ் அவற்றிலிருந்து மிக விரை வாகவே விடுதலையளித்துவிடுவான்.*

*இறைத்தூதர்களுக்கு அளிக்கப்படும் சோதனைகள் அவர்களது படித் தரத்தை உயர்த்தக்கூடியதாகவும் சமூகங்களுக்குப் பாடமாகவும் இருக் கிறது. இறைத்தூதர் யூனுஸின் சம்பவத்தைக் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள்:*

*மீன் வயிற்றில் இருந்தவர் தம் சமூகத்தைக் கோபித்துக்கொண்டு சென்றபோது நாம் அவரைத் தண்டிக்க மாட்டோம் என எண் ணிக்கொண்டார். பின்னர் இருள்களில் சிக்கிக்கொண்ட அவர், 'உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. நீ தூயவன். நிச்சயமாக நான் அநியாயக்காரர்களில் ஒருவனாகிவிட்டேன்.' என்று இறைஞ் சினார். நாம் அவரது பிரார்த்தனையை ஏற்று அத்துன்பத்திலிருந்து அவரை விடுவித்தோம். இவ்வாறே நாம் நம்பிக்கையாளர்களைக் காப்பாற்றுகிறோம்.* (87,88)

*இந்தச் சம்பவங்களிலிருந்து நாம் பாடங்கள்பெற வேண்டும். நாம் அவற்றிலிருந்து அல்லாஹ்வுடனான தொடர்பை கற்றுக்கொள்கிறோம்.*

❖ ❖ ❖

தூதர்களில் பெரும்பாலோர் பிரபல்யமான நாகரிகங்கள் நிலைபெற்ற மத்திய கிழக்கில் உள்ள நாடுகளில்தான் தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் ஒரு பல்கலைக்கழகத்தின் அங்கத்தினர்கள் என்று கூற லாம். அதன் முதல்வர் முஹம்மது இப்னு அப்தில்லாஹ் அவர்கள். பூமி யில் உள்ள அனைவரும் அதன் மாணவர்களாவர். அவர்களுடைய போதனைகளின் சுருக்கம் திருக்குர்ஆனில் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தூதர்களைக் குறித்த செய்திக்கு முன்னால் மறுமைநாளைக் குறித்த செய்தி இடம்பெறுகிறது.

> மறுமைநாளில் நாம் நியாயமான தராசை நிறுவுவோம். எனவே, எந்த உயிரின் மீதும் சிறிதளவுகூட அநீதி இழைக்கப்படாது. கடுகளவு செயலை ஒருவர் புரிந்திருந்தாலும் அதையும் நாம் கொண்டு வருவோம். விசாரணைசெய்வதற்கு நாமே போதுமானவர்களா வோம். (47)

அதனைத் தொடர்ந்தும் மறுமைநாளைக் குறித்த செய்தி இடம் பெறுகிறது. ‘அவர்கள் தங்களின் மார்க்க விவகாரத்தில் தங்களிடையே பிளவுபட்டார்கள். அனைவரும் நம்மிடமே திரும்பிவரக்கூடியவர்கள். (93)’ தூதர்களைப் பின்பற்றுபவர்கள் நன்மையான, இறையச்சம் மிகுந்த செயல்பாடுகளில் ஒருவருக்கொருவர் உதவக்கூடியவர்களாக இருக்க வேண்டும். ஆனால், இதற்கு மாறாகவே நிகழ்ந்தது. இருபது நூற்றாண் டுகளாக யூதர்கள் மர்யமின் மகன் ஈசாவை நிராரித்துக்கொண்டிருக்கி றார்கள். கிறிஸ்தவர்கள் முஹம்மதை நிராகரிக்கிறார்கள். யூதர்களும் அவர்களுடன் இணைந்து இந்த மார்க்கத்தை எதிர்த்துக்கொண்டிருக்கி றார்கள்.

தூதர்களைப் பின்பற்றுபவர்களுக்கு மத்தியில் ஏற்பட்ட இந்தப் பிளவு எந்த வானுலகத் தூதுத்துவத்தையும் பெறாத கிழக்கு தேசங்களிலிருந்து ஒரு கூட்டம் வெளிப்படும்வரை நீடித்துக்கொண்டே இருக்கும். அவர் கள் உலகெங்கும் பரவி தம்மை எதிர்ப்பவர்களைத் தோற்கடிப்பார்கள்.

> ஆயினும் யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினர் திறந்துவிடப்படும் போது அவர்கள் ஒவ்வொரு உயரமான இடங்களிலிருந்தும் பரவி விடுவார்கள். உண்மையான வாக்குறுதி நெருங்கிவிட்டால் நிரா கரிப்பாளர்களின் பார்வைகள் அப்படியே நிலைகுத்தி நின்றுவிடும். (96,97)

அவர்கள் சீனாவைச் சேர்ந்தவர்களாக அல்லது கிழக்கு ஆசியாவைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. குர்ஆன்

விரிவுரையாளர்களில் சிலர், அவர்கள் இஸ்லாமிய நாடுகளை வெற்றி கொண்ட மங்கோலியர்களாக, தாத்தாரியர்களாக இருக்கலாம் என்று கூறுகிறார்கள். இது சரியான கருத்து அல்ல. முன்பின் வசனங்களைக் கவனிக்கும்போது யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினர் மறுமைநாளுக்கு நெருக்கமாகவே வெளிப்படுவார்கள் என்பது தெளிவாகிறது. அவர்கள் மறுமைநாளின் அடையாளங்களில் ஒன்றாவர்.

❖ ❖ ❖

பின்னர், நற்பேறு பெற்ற சுவனவாசிகள் அவர்களுக்கு வாக்களிக்கப் பட்டதைப் பெறுவதுகுறித்த, துர்பாக்கியம் பெற்ற நரகவாசிகள் அவர் களுக்கு எச்சரிக்கப்பட்டதைப் பெறுவது குறித்த செய்தி இடம்பெறுகிறது. பின்னர் இந்த வசனம் இடம்பெறுகிறது: ‘அந்நாளில் எழுதப்பட்ட ஏடுகளைச் சுருட்டுவதைப் போல நாம் வானத்தைச் சுருட்டிவிடுவோம். ஆரம்பத்தில் படைத்தவாறே மீண்டும் படைப்போம். (104)’ இவ்வாறு வானம் மற்றும் பூமியின் விவகாரங்கள் முடிவுக்கு வந்துவிடும். இந்த உலகம் வெறுமனே நினைவுகளாக மட்டும் எஞ்சிவிடும்.

பின்னர் அல்லாஹ் கூறுகிறான்: ‘நாம் ஆகமத்தில் அறிவுரைக்குப் பின் எழுதிவிட்டோம். எனது நல்லடியார்கள்தாம் பூமியின் வாரிசுதாரர் களாவர். (105)’ இங்கு அல்அர்ள் - பூமி என்பது சுவனத்தைக் குறிக்கக் கூடியதாக இருக்கலாம். இன்னொரு அத்தியாயத்திலும் சுவனத்தில் உள்ள இடத்துக்குப் பூமி என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் கூறுவார்கள்: ‘அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவன் எங்களுக்கு அளித்த வாக்குறுதியை உண்மைப்படுத்திக் காட்டினான். எங்களை இந்தப் பூமிக்கு உரிமையாளர்களாக ஆக்கினான். சுவனத்தில் நாங்கள் விரும்பும் இடங்களில் தங்கிக்கொள்வோம். (39:74)’ வசனம் பூமியில் வழங்கப்படும் அதிகாரத்தையும் குறிக்கக்கூடியதாக இருக்கலாம். பூமியின் ஆட்சியதி காரங்கள் அவற்றுக்குரியவர்களிடம் நிச்சயம் வழங்கப்படும்.

தாவூதுக்கு வழங்கப்பட்ட ஸபூர் என்ற வேதத்தில் இது குறித்து வந் துள்ளது. ஏனெனில், அவர் அநீதி இழைக்கப்பட்ட ஒரு சமூகத்தை வழிநடத்திச் சென்றார், அவர்களின் கொள்கையையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கும் பொருட்டு. தலைமைத்துவத்துக்கென்று சில திறமைகளும் தனித்தன்மைகளும் அவசியம் என்று அல்லாஹ் நமக்குத் தெளிவு படுத்தியவாறு அவருக்கும் தெளிவுபடுத்தினான்.

தவ்ஹீதின் பக்கம் விடுக்கப்படும் அழைப்பு, மறுமைக்கான தயா ரிப்பு, வஹீயைக் கொண்டு பயனடைதல் ஆகியவற்றைக் கொண்டு

அத்தியாயம் தொடங்கியதைப் போல அதே வகையான விசயங்களைக் கொண்டு நிறைவும் அடைகிறது. 'நீர் கூறும், உங்கள் இறைவன் ஒரே இறைவன்தான் என்று எனக்கு வஹீ அறிவிக்கப்பட்டுள்ளது. நீங்கள் கீழ்ப்படிந்திருப்பீர்களா? (108)'

அறபுகளே, நீங்கள் இதனை உண்மைப்படுத்தினால் வெற்றிபெறு வீர்கள். இல்லையெனில் உங்களால் எந்தச் சாக்குப் போக்கும் கூற முடியாது.

> 'என் இறைவா, சத்தியத்துடன் தீர்ப்பு வழங்குவாயாக. எங்கள் இறைவன் அளவிலாக் கருணையாளன். நீங்கள் கூறும் விசயத்துக்கு எதிராக அவனிடமே நாங்கள் உதவி தேடுகிறோம்.' என்று அவர் பிரார்த்தனைசெய்தார். (112)

❖ ❖ ❖

அத்தியாயம் 22

# அல்ஹஜ்

(கஅபாவை நோக்கிய புனிதப் பயணம்)

*இந்த அத்தியாயம் அச்சத்தைத் தூண்டும் உணர்ச்சிபூர்வமான ஓர் அழைப்போடு தொடங்குகிறது. ஏனெனில், இது மறுமைநாளின் சில பயங்கரமான நிகழ்வுகளை உள்ளடக்கியுள்ளது.*

> *மனிதர்களே, உங்கள் இறைவனை அஞ்சிக்கொள்ளுங்கள். நிச்சயமாக மறுமையின் அதிர்ச்சி மிகக் கடுமையானதாகும். 'அந்நாளில் நீர் காண்பீர், பாலூட்டுகின்ற ஒவ்வொரு தாயும் தான் பாலூட்டுகின்ற குழந்தையை மறந்துவிடுவாள். கர்ப்பமான ஒவ்வொரு பெண்ணும் தன் சுமையை ஈன்றுவிடுவாள். மக்களை மயக்கமுற்றவர்களாகக் காண்பீர். உண்மையில் அவர்கள் மயக்கத்தில் இருக்க மாட்டார்கள் ...'* (1,2)

*மறுமைநாள் நிகழ்வதற்கு முன்னால் பூமியதிர்ச்சி ஏற்படும் என்று நபிமொழிகளில் கூறப்பட்டுள்ளது. பூகம்பம் ஏற்பட்டுப் பூமி தன்னுள் தேக்கிவைத்துள்ளவற்றைத் துப்பிவிட்டு மனிதர்களை விழுங்கிவிடும்.*

*அது மரணத்துக்கான முன்னறிவிப்பாக, இறுதிப் பயணத்துக்கான பிரியாவிடையாக அமையும்.*

*இதற்குப் பிறகு, அலட்சியமான அறிவை விழிப்புறச் செய்யும் அல்லது சந்தேகத்தை இல்லாமல் ஆக்கும் அறிவுபூர்வமான அழைப்பு இடம் பெறுகிறது.*

> *மனிதர்களே, 'மீண்டும் எழுப்பப்படுவது' குறித்து நீங்கள் சந்தேகத்தில் இருந்தால் அறிந்துகொள்ளுங்கள்: நாம் உங்களை மண்ணிலிருந்து, பின்னர் விந்துத்துளியிலிருந்து, பின்னர் இரத்தக் கட்டியிலிருந்து, பின்னர் வடிவமைக்கப்பட்டதும் வடிவமைக்கப்படாததுமான சதைப் பிண்டத்திலிருந்து படைத்தோம் ...* (5)

*மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவதைக் குறித்து சந்தேகம் ஏற்படுவது வாழ்க்கையையும் படைப்பினங்களையும் குறித்த கடுமை யான அலட்சியத்தின் விளைவே ஆகும். மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவது எதிர்காலத்தில் நிகழ்கின்ற ஒரு செயல்பாடு என்றும் அதற்கு நிகழ்காலத்திலோ கடந்த காலத்திலோ எவ்வித ஆதாரமும் இல்லை என்றும் மூடர்கள் கருதுகிறார்கள். ஒவ்வொரு நாளும், ஏன் ஒவ்வொரு நிமிடமும் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவதைப் போன்ற நிகழ்வுகள் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன. அல்லாஹ் தானே அவற்றையெல்லாம் நிகழ்த்துகிறான். பிறகு எப்படி இறுதி நாளில் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுதலைச் சாத்தியமற்றதாகக் கருத முடியும்?*

❖ ❖ ❖

*கருவறையில் இருக்கும் கருவுக்கு உயிர்கொடுப்பவன் யார்? ஒவ்வொரு நொடியும் உயிர்கொடுக்கப்படும் இந்த நிகழ்வு நிகழ்ந்துகொண்டு தானே இருக்கிறது? அதில் மனிதனுக்கு எந்தப் பங்கும் இல்லையே?*

*விந்துத்துளியைப் படைத்தது யார்? அதைக் கருவாகவும் பின்னர் உயிருள்ள குழந்தையாகவும் உருமாற்றியவன் யார்? அதற்குப் பிறகு, அதன் மூக்கு உலகின் காற்றைச் சுவாசிக்க வேண்டும் என்பதற்காக, அதன் கண்கள் உலகின் ஒளியைக் காண வேண்டும் என்பதற்காக அதனைத் தாயின் வயிற்றிலிருந்து குழந்தையாக வெளிப்படுத்துபவன் யார்?*

*பரம்பரைப் பண்புகளை அதற்குள் வைத்தவன் யார்? இரவிலோ பகலிலோ உருவாகக்கூடிய ஒரேயொரு கருவின் விவகாரம் அல்ல இது. ஒரே சமயத்தில் இலட்சக்கணக்கான கருக்கள் உருவாகிக்கொண்டே, உயிர்பெற்றுக்கொண்டே இருக்கின்றன.*

*நீரிலும் நிலத்திலும் பரவிக் காணப்படும் மனிதச் சமூகத்தையும் இன்னபிற உயிரினங்களையும் விட்டுவிட்டு மற்றொரு விசயத்தைக் காண்போம்.*

> *நீர் பூமியை வறண்டதாகக் காண்கிறீர். அதன் மீது நாம் மழையை இறக்கியவுடன் அது செழித்துவளர்ந்து விதவிதமான, அழகிய தாவரங்களை முளைக்கச்செய்கிறது.* (5)

*மண்ணைப் பிளந்துகொண்டு விதைகள் எவ்வாறு முளைக்கின்றன? இதனை ஏற்றுக்கொள்ளும் நாம் மறுமையில் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுதலை ஏன் ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம்? நம்முடைய*

கால்கள் மிதிபட்டு இறந்த இந்த மண்ணிலிருந்துதானே அரிசியும் கோதுமையும் இன்னும் வெவ்வேறு வகையான உணவுப் பொருள்களும் வெளிப்படுகின்றன? கார்போஹைட்ரேட், இனிப்பு, எண்ணெய், உப்பு, தங்கம், வெள்ளி போன்ற கனிமங்களையும் வைட்டமின்கள் பலவற்றை யும் இந்த மண்ணிலிருந்துதானே பெறுகிறோம்?

இது நிராகரிக்க முடியாத உண்மையாகும். பிசுபிசுப்பான களிமண்ணி லிருந்துதான் சுவையான உணவுப் பொருள்களும் மணக்கும் பூக்களும் வெளிப்படுகின்றன!

இவற்றையெல்லாம் செய்தது யார்? நாம் ஏன் முதன் முதலாக உயிர் கொடுத்தவன் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்ப ஆற்றலுடையவன் என்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம்.

உணர்ச்சிபூர்வமான, அறிவுபூர்வமான அழைப்புக்குப் பிறகு இங்கு திருக்குர்ஆன் அதன் விளைவுகளை நினைவூட்டுகிறது.

> அல்லாஹ்தான் உண்மையானவன். அவனே மரணித்தவர்களை உயிர்ப்பிக்கிறான். அவன் ஒவ்வொரு பொருளின் மீதும் பேராற்ற லுடையவன் என்பதே இதற்கான காரணமாகும். 'அந்நேரம்' வந்தே தீரும். அதில் எத்தகைய சந்தேகமும் இல்லை. நிச்சயம் அல்லாஹ் புதைகுழிகளில் உள்ளவர்களை எழுப்புவான். (6,7)

உணர்வுடனும் அறிவுடனும் ஒத்துப்போகும் இந்த விளைவுகளை பெரும்பாலோர் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆயினும், இன்னொரு சாரார் நம்பிக்கையை ஏற்றுக்கொள்வதில்லை. மனித வாழ்க்கையைத் தற்செய லானதாகவும் நோக்கமற்றதாகவும் அது அறியப்படாத விளைவை நோக்கிச் செல்வதாகவும் கருதுகிறார்கள்.

இவர்களின் இந்தக் கோட்பாட்டுக்கு மதிப்பளிப்பது தவறாகும். சிந் தனையாளர்களில் பெரும்பாலோர் நாத்திகர்கள்தாம் என்ற கருத்து பரவலாகக் காணப்படுகிறது. இது தவறான கருத்தாகும். பேராசிரியர் அக்காத், சிந்தனையாளர்களின் கொள்கைகள் என்ற தம்முடைய புத்த கத்தில் அவர்களில் பெரும்பாலோர் நம்பிக்கையாளர்கள் என்பதை நிறுவியுள்ளார்.

சிலர் அல்லாஹ்வின் இருப்பையே நிராகரிக்கிறார்கள். ஆனால், அதற்கு அவர்களிடம் எந்த அறிவியல்பூர்வமான ஆதாரமும் கிடையாது. அவர் களின் குருட்டுத்தனமான அனுமானமோ மனவிருப்பமோ முன்முடிவு களோதான் அதற்குப் பின்னால் காணப்படுகிறது.

இப்லீஸ் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிய மறுத்தபோதும் பூமியில் அவனுக்கு எதிரியாக ஆக்கப்பட்டபோதும் 'அல்லாஹ் உண்மையானவன்' என்பதை இப்லீஸ் நன்கறிவான்.

❖ ❖ ❖

வசனங்கள் நிராகரிப்பின் வகைகளைத் தெளிவுபடுத்தியவாறு தொடங்குகின்றன. 'மனிதர்களில் சிலர் அறிவு இல்லாமலும் வழிகாட்டுதல் இல்லாமலும் ஒளியை அளிக்கக்கூடிய வேதம் இல்லாமலும் அல்லாஹ்வைப் பற்றித் தர்க்கம்புரிகிறார்கள். கர்வம் கொண்டவர்களாக மக்களை அல்லாஹ்வின் பாதையைவிட்டுத் தடுக்க வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு செய்கிறார்கள். (8,9)' நிராகரிப்பாளன் தனக்குள் ஒலித்துக்கொண்டிருக்கும் தன் இயல்பின் குரலை ஏற்க மறுக்கிறான். வஹீயின் வசனங்கள் அவனுக்கு அதனை நினைவூட்டுகின்றன. இதைவிட இழிவான ஒரு நிலையை நான் கண்டதில்லை.

இன்னும் சிலர் இருக்கிறார்கள். தங்களின் ஈமானை தங்களுக்குக் கிடைக்கும் ஆதாயத்தோடு இணைத்துவிடுவார்கள். அவர்கள் நல்ல நிலையில் இருந்தால் நம்பிக்கையாளர்களாக இருப்பார்கள். இல்லையெனில் திமிறியெழுவார்கள்.

> மனிதர்களில் சிலர் அரைமனதாக அல்லாஹ்வை வணங்குகிறார்கள். அவர்களுக்கு ஏதேனும் நன்மை ஏற்பட்டால் அதைக் கொண்டு திருப்தியடைகிறார்கள். ஆனால், அவர்களுக்கு ஏதேனும் சோதனை ஏற்பட்டுவிட்டால் தலைகீழாகத் திரும்பிவிடுகிறார்கள். அவர்கள் இம்மையையும் மறுமையையும் இழந்துவிட்டார்கள். இதுதான் தெளிவான பெரும் இழப்பாகும். (11)

மனிதனுக்கு வழங்கப்பட்ட இந்த வாழ்வு அவனைச் சோதிப்பதற்காகவே வழங்கப்பட்டுள்ளது. அவன் விரும்பக்கூடியவையும் வெறுக்கக்கூடியவையும் மீண்டும் மீண்டும் அவனை எதிர்கொண்ட வண்ணம் இருக்கும். அவனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டால் நன்றி செலுத்த வேண்டும். துன்பம் ஏற்பட்டால் பொறுமை காக்க வேண்டும். அதை விடுத்து விதியைப் பழிப்பதும் விதியை நிர்ணயித்தவனைத் திட்டுவதும் அப்பட்டமான நிராகரிப்பாகும்.

இஸ்லாம் என்பது அல்லாஹ் அளிக்கும் இன்பங்களையும் துன்பங்களையும் ஏற்றுக்கொண்டு முழுக்க முழுக்க அவனுக்குக் கீழ்ப்படிவதும் அவனுடைய செயல்கள் அனைத்துக்குப் பின்னாலும் ஒரு நோக்கம் இருக்கிறது என்று நம்புவதும் ஆகும்.

*யார் அல்லாஹ்வை அறிவாரோ அவர் அவதூறை நீக்கிவிடுவார். 'அவன் ஒவ்வொன்றையும் ஞானத்துடன்தான் நிகழ்த்துகிறான்' என்று அவர் கூறுவார்.*

*நிச்சயமாகப் பொறுமையும் நன்றியுணர்வும் உள்ள ஒவ்வொரு வருக்கும் இதில் பெரும் சான்றுகள் உள்ளன.* (12:5)

*ஒரு கவிஞர் கூறுகிறார்:*

*மனிதன் தான் நாடியதை அடைய வேண்டும் என்று*
*விரும்புகிறான். ஆனால் அல்லாஹ்வோ தான்*
*நாடியதையே செய்கிறான்.*

*அல்லாஹ்விடம் தம்மை ஒப்படைத்துக்கொண்டவர் வெற்றியடைவார். அவனுடைய விதியை ஏற்றுக்கொள்ளாதவரால் வேறென்ன செய்ய முடியும்? தற்கொலைசெய்துகொள்ளட்டும்.*

*இவ்வுலகிலும் மறுவுலகிலும் அல்லாஹ் தனக்கு உதவ மாட்டான் என்று எண்ணுகிறவன் மேல்நோக்கி ஒரு கயிற்றை வீசி தூக்கில் தொங்கட்டும். அவனது திட்டம் அவனது கோபத்தைத் தணித்து விடுகிறதா என்பதைப் பார்க்கட்டும்.* (15)

*எவ்வாறு இருப்பினும் அனைவரும் அல்லாஹ்வின் பக்கமே திரும்ப வேண்டும். அவன் யார்மீதும் ஒருபோதும் அநீதி இழைக்க மாட்டான்.*

*நம்பிக்கையாளர்கள், யூதர்கள், ஸாபிஈன்கள், கிறிஸ்தவர்கள்* (Baptist), *நெருப்பு வணங்கிகள், இணைவைப்பாளர்கள் ஆகிய அனைவருக்குமிடையே அல்லாஹ் மறுமைநாளில் தீர்ப்பளிப்பான். நிச்சயமாக அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவனாக இருக்கிறான்.* (17)

*இந்த நீண்ட முன்னுரைக்குப் பிறகு திருக்குர்ஆன் இந்த அத்தியாயத்தில் ஈமானுக்கும் நிராகரிப்புக்கும் சத்தியத்தின் கொடியை உயர்த்திப் பிடிப்போருக்கும் அசத்தியத்தின் கொடியை உயர்த்திப் பிடிப்போருக்கும் மத்தியில் இவ்வுலகில் நிலைபெறும் மோதலை வர்ணிக்கத் தொடங்குகிறது.*

*இந்த மோதல் வாழ்க்கை எதன் அடிப்படையில் நிலைபெறுமோ அது சோதனையின் ஓர் அம்சம்தான். நம்பிக்கையாளர்கள், குற்றவாளிகள் என இரு சாராரும் இதனை எதிர்கொண்டே தீர வேண்டும்.*

*அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டவனுக்கும் அவனை நிராகரிப்பவனுக்கும் மத்தியில் எந்த அன்பும் நிலைபெற முடியாது. இருவரும் ஒரே*

வழிமுறையில் ஒருபோதும் இணைய மாட்டார்கள். அப்படியானால் அவர்கள் இரு சாராருக்குமிடையே எப்போதும் போர் இருந்துகொண்டே இருக்குமா? அப்படியல்ல. நம்பிக்கையாளர்கள் நிராகரிப்பாளர்களுக்குச் சத்தியத்தை எடுத்துரைக்கும்படியும் அதன் பாதையைத் தெளிவுபடுத்தும் படியும் பணிக்கப்பட்டுள்ளார்கள். விவேகமும் அழகிய உபதேசமும் கலந்த வழிமுறையைத் தாண்டி வேறொரு வழிமுறையை அவர்கள் பின்பற்றக் கூடாது. ஏனெனில், அல்லாஹ் இரு சாராரையும் மற்றவர் களைக் கொண்டு சோதிக்கிறான். இந்தச் சோதனையில் அவர்கள் தோற்று விடக் கூடாது.

சத்தியத்தைத் தெளிவுபடுத்த வேண்டியதும் அதற்கான ஆதாரங்களை எடுத்துவைக்க வேண்டியதும்தான் நம்முடைய பணி. இன்று அவர்கள் அதனை மறுத்தால் எதிர்வரும் நாள்களுக்காக அவர்களை நாம் விட்டு விடுவோம். அவர்களின் விவகாரங்களில் நாம் எப்போதும் நியாயமான வர்களாகவே இருக்க வேண்டும்.

இதுதான் நம் தூதரின் வழிமுறை. எதிரிகளுக்கு எதிராக அல்லாஹ் அவருக்கு வெற்றியளிக்கும்வரை அவர் இந்த வழிமுறையைத்தான் பின்பற்றினார். இந்த எதிரிகளால் அசத்தியத்துக்கு ஆதாரங்களைக் கொண்டுவர முடியாது. ஆனாலும் அவர்கள் தங்களின் பலத்தைக் கொண்டு சத்தியவாதிகளுக்குத் தொல்லையளித்துக்கொண்டிருப்பார்கள். முற்காலத் தூதர்களிடம் கூறப்பட்டது, 'மௌனமாக இருங்கள், அல்லது நாங்கள் உங்களை ஊமையாக்கிவிடுவோம்.'

> நிராகரிப்பாளர்கள் தங்கள் தூதர்களிடம், 'நீங்கள் எங்கள் மார்க்கத் துக்குத் திரும்பிவிட வேண்டும். இல்லையெனில் எங்களுடைய ஊரிலிருந்து உங்களை வெளியேற்றிவிடுவோம்.' என்று கூறி னார்கள். அவர்களின் இறைவன் அவர்களுக்கு வஹீ அறிவித்தான், 'அநியாயக்காரர்களை நிச்சயம் நாம் அழித்திடுவோம். அவர் களுக்குப் பின் நாம் உங்களைப் பூமியில் வசிக்கச்செய்வோம்.' (14:13,14)

❖ ❖ ❖

இதுதான் நம்பிக்கையாளர்களுக்கும் நிராகரிப்பாளர்களுக்கும் மத்தி யில் நிலைபெறும் பகைமையின் இயல்பு. இந்த அத்தியாயம் இதனை இங்கு தெளிவுபடுத்துகிறது. 'இவர்கள்தாம் தம் இறைவனைக் குறித்து தர்க்கித்துக்கொண்ட இரு பிரிவினர்கள். (19)' இது சத்தியத்தின் வீரர் களுக்கும் அசத்தியவாதிகளுக்கும் மத்தியில் நடைபெற்ற பத்ருப் போர்

சம்பந்தமாக அருளப்பட்ட வசனம் என்று நபிமொழிகளில் காணப் படுகிறது. முஸ்லிம்கள் பதினைந்து வருடங்கள் மென்மையான போக் கையும் சகிப்புத்தன்மையையும் கடைப்பிடித்தபின்னர் நடைபெற்ற முதல் போர் இது.

இதற்குப் பிறகு வந்த வசனங்கள் தூதர்கள் அனைவரும் சோதனை களைக் கடந்துதான் வந்தார்கள் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. அல்லாஹ்வை வணங்குவதற்காக அவர்கள் கட்டிய இல்லங்கள் சத்திய வாதிகளின் பெரும் முயற்சிக்கும் தியாகத்துக்கும் பிறகே கட்டப்பட்டன.

> நிச்சயமாக அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்குப் பாதுகாப்பளிக் கிறான். அவன் துரோகம் செய்பவர்களையும் நன்றிகெட்டவர் களையும் விரும்புவதில்லை. போர் தொடுக்கப்பட்டோருக்கு -அவர்கள் அநீதி இழைக்கப்பட்டிருப்பதால்- எதிர்த்துப் போரிட அனுமதியளிக்கப்பட்டுள்ளது. நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவிபுரிய ஆற்றலுடையவன். ‘அல்லாஹ்தான் எங்கள் இறைவன்’ என்று கூறியதற்காகவே அவர்கள் அநியாயமாகத் தங்கள் வீடு களிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். மனிதர்களில் சிலரின் மூலம் சிலரை அல்லாஹ் தடுக்காவிட்டால் மடாலயங்களும் கிறிஸ்தவ ஆலயங்களும் வழிபாட்டுத் தலங்களும் அல்லாஹ்வின் பெயர் அதிகமாகக் கூறப்படும் பள்ளிவாசல்களும் இடிக்கப்பட்டிருக்கும். (38-40)

தூதர்களும் அவர்களைப் பின்பற்றியவர்களும் தங்களின் பெருமையை நிலைநாட்ட ஒருபோதும் போர்புரியவில்லை. அநியாயமாக ஒரு துளி இரத்தம்கூடச் சிந்தப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. அநியாயத்தை எதிர்த்துதான் அவர்கள் போரிட்டார்கள்.

அவர்கள் அல்லாஹ் விரும்பிய விழுமியங்களைக் கொண்டிருந்ததால் அவன் அவர்களுக்கு வெற்றியளித்தான். வெறுமனே அவர்களுக்கு அவன் உதவி மட்டும் புரியவில்லை.

அவர்கள் கொண்டிருந்த விழுமியங்கள், பெற்றிருந்த தகுதிகள் என்ன?

> பூமியில் நாம் அவர்களுக்கு ஆட்சியதிகாரம் வழங்கினால் தொழு கையைக் கடைப்பிடித்து ஸகாத்தையும் வழங்குவார்கள்; நன் மையை ஏவி, தீமையைத் தடுப்பார்கள். எல்லாக் காரியங்களின் முடிவும் அல்லாஹ்விடமே உள்ளது. (41)

அவர்கள் செல்வத்துக்காகவோ அதிகாரத்துக்காகவோ போரிட வில்லை. மனிதச் சமூகம் தம் இறைவனை அறிந்துகொள்ள வேண்டும்,

அவனது பெயரை உரக்கக் கூற வேண்டும் என்பதற்காகவே அவர்கள் போரிட்டார்கள்.

❖ ❖ ❖

போர்குறித்து பேசக்கூடிய இந்த வசனங்களுக்கு மத்தியில் ஹஜ் குறித்தும் அதன் கிரியைகள், சடங்குகள் குறித்தும் பேசப்படுவதைக் காண்கிறோம். இணைவைப்பாளர்கள் இப்றாஹீமின் மார்க்கத்தை விட்டு விலகிச் சென்றுவிட்டார்கள். இப்றாஹீம் ஓரிறைக் கொள்கையின் பக்கம் அழைத்தார். இவர்களோ இணைவைப்பாளர்களாக இருக்கிறார்கள். அவருக்கும் இவர்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை இணை வைப்பாளர்களுக்குப் புரியவைப்பதற்காகவே இவ்வாறு கூறப்பட்டுள்ள தாகத் தெரிகிறது.

அவர்கள் தாங்கள் வாரிசாகப் பெற்ற மார்க்கத்துக்குத் துரோகம் இழைத்துவிட்டார்கள். அவர்கள் பழமையான அந்த இல்லத்தைவிட்டு ஓரிறைக் கொள்கையுடையவர்களைத் தடுக்கக்கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் சத்தியத்தை மறைப்பதோடு அதனைப் பின் பற்றுவோர்மீது அநீதியும் இழைக்கிறார்கள்.

> சத்தியத்தை நிராகரித்து மனிதர்களை அல்லாஹ்வின் பாதையை விட்டும், நாம் மனிதர்களுக்காக ஏற்படுத்தியுள்ள மஸ்ஜிதுல் ஹறாமை விட்டும் -அங்கு வசிக்கக்கூடியவர்களும் வெளியி லிருந்து வரக்கூடியவர்களும் சமமாவார்கள்- தடுக்கின்றவர் களையும் அங்கு நேரான வழியைவிட்டு விலகி அநீதி இழைக்க நாடுபவர்களையும் நாம் துன்புறுத்தும் வேதனையைச் சுவைக்கும் படி செய்வோம். (25)

இந்த அநியாயக்காரர்களை எதிர்த்துப் போரிடுவது கண்ணியமான செயலாகும். அதற்காக நாம் ஒருபோதும் பழிக்கப்பட மாட்டோம்.

ஹஜ்ஜின் சடங்குகளில் கவனம் செலுத்துபவர் அவையனைத்தும் பெரும் பேரணிக்குரிய செயல்பாடுகள் என்பதையும் அவை தவ்ஹீதை நிலைநிறுத்தவும் அதனை உள்ளங்களில் ஊன்றவும் அதனடிப்படையில் உலகம் முழுவதிலுமிருந்து மனிதர்களை ஒன்றுதிரட்டவும் படைப் பாளனால் தேர்ந்தெடுக்கப்பட்டவை என்பதையும் கண்டுகொள்வார்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இப்றாஹீமைக் கொண்டு இது தொடங்கப்பட்டது. ‘நாம் இப்றாஹீமுக்கு இறையில்லத்துக்கான இட மளித்தபோது, நீர் என்னுடன் எப்பொருளையும் இணையாக்கக் கூடாது ... (26)’

சிலர் ஹஜ்ஜின் செயல்பாடுகளைக் குறித்து இவ்வாறு கூறுவதை நான் செவியேற்றுள்ளேன், 'நம் அறிவால் புரிந்துகொள்ள முடியும் விசயங்களைக் கொண்டு அல்லாஹ் நம்மை சோதித்தான். நாம் நம்பிக்கை கொண்டோம். அவன் நம் அறிவால் புரிந்துகொள்ள முடியாத விசயங் களைக் கொண்டும் நம்மைச் சோதிக்க நாடுகிறான்.' இது தவறான புரிதலாகும். ஹஜ்ஜின் செயல்பாடுகளில் அறிவுக்கு முரணான எந்தச் செயலும் இல்லை. அறிவுக்கு முரணானவற்றைக் கொண்டு பூமியில் கட்டப்பட்ட முதல் இறையில்லத்தில் வணங்குமாறு வணக்கசாலிகள் வேண்டப்படுவார்களா என்ன?

நீங்கள் கேட்கலாம், அப்படியென்றால் தவாஃப் என்றால் என்ன? தவாஃபும் தொழுகையைப் போன்றதுதான். அதற்காகவும் தூய்மை அவசியம். சுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், லாயிலாஹா இல்லல்லாஹ் ஆகிய திக்ருகளால் நிரம்பியது அது. குறிப்பிட்ட ஒரு பொருளை வெளிப்படுத்துவதற்காக, குறிப்பிட்ட நோக்கத்தைக் கடைப் பிடிப்பதற்காக மனிதர்கள் வெளிப்படுத்தும் செயல்பாடுகளுக்கும் அறி வுக்கு முரணான செயல்பாடுகளுக்கும் மத்தியில் நிச்சயம் வேறுபாடுகள் இருக்கின்றன.

நாம் வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கமாக எழுதுகிறோம். ஐரோப் பியர்கள் இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கமாக எழுதுகிறார்கள். சீனர்கள் மேலிருந்து கீழ்நோக்கி எழுதுகிறார்கள். இவை அறிவுக்கு முரணானவை என்று கூற முடியுமா என்ன?

நம்மில் பெரும்பாலோர் நடக்கும்போது வலப்பக்கமாகச் செல்கிறோம். ஐரோப்பியர்கள் இடப்பக்கமாகச் செல்கிறார்கள். ஹஜ்ஜின் செயல்பாடு களும் இந்த வகையைச் சார்ந்தவைதான். தவ்ஹீதைப் பாதுகாக்கும் பொருட்டுக் கட்டப்பட்ட இந்த முதல் ஆலயத்தை நாம் தரிசிக்கிறோம்.

இங்கு 'அது முதன்மையானது' என்ற தனித்தன்மை ஏன் மறுக்கப்பட வேண்டும்? ஏன் ஐந்து கண்டங்களில் உள்ள பள்ளிவாசல்களுடன் அது இணைக்கப்படவில்லை?

> ஹஜ்ஜுக்கு வருமாறு மக்களுக்கு அறிவிப்புசெய்வீராக. அவர்கள் தூரமான இடங்களிலிருந்து நடந்தவாறும் மெலிந்த ஒட்டகங் களிலும் உம்மிடம் வருவார்கள். தங்களின் பயன்களை அடை வதற்காகவும் அல்லாஹ் அவர்களுக்கு வழங்கியுள்ள கால்நடை களைக் குறிப்பிட்ட நாள்களில் அவனது பெயர்கூறி அறுப்பதற் காகவும் அவர்கள் அங்கு வருவார்கள். ஆகவே, அதிலிருந்து நீங் களும் உண்ணுங்கள். சிரமப்படும் ஏழைகளுக்கும் உணவளியுங்கள். (27,28)

இப்போது உள்ள நவீன வசதிகளைக் கொண்டு மக்காவிலும் பிற நகரங்களிலும் உள்ள இலட்சக்கணக்கான தேவையுடையோருக்கு இறைச்சிகளை விநியோகம்செய்யலாம்.

*பலியிடப்படும் ஒட்டகங்களை நாம் உங்களுக்காக அல்லாஹ் வின் அடையாளச் சின்னங்களாக ஆக்கியுள்ளோம். அவற்றில் உங்களுக்கு நன்மை உள்ளது. ஆகவே, அவற்றை நிற்கவைத்து அவற்றின் மீது அல்லாஹ்வின் பெயரை உச்சரியுங்கள். பின்னர் அவை விலாப்புறமாக விழுந்துவிட்டால் அவற்றிலிருந்து நீங்களும் உண்ணுங்கள், யாசிப்பவருக்கும் யாசிக்காதவருக்கும் உண்ணக் கொடுங்கள். (36)*

இந்த அத்தியாயத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ள ஹஜ்ஜின் கிரியை கள் தவ்ஹீதுக்கான மனித நேயத்தை வலுப்படுத்தக்கூடியவையாகவும் ஒரு கொடியின் கீழ் பலரை ஒன்றிணைக்கக் கூடியவையாகவும் இருக் கின்றன.

*சிலை வழிபாடு என்னும் அசுத்தத்தை விட்டுத் தவிர்ந்துகொள் ளுங்கள்; பொய் பேசுவதையும் தவிர்த்துக் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் மீது முழு நம்பிக்கை கொண்டவர்களாக இருங்கள். அவனுடன் யாரையும் இணையாக்காதீர்கள். அல்லாஹ்வுக்கு இணைவைப்பவன் வானத்திலிருந்து விழுந்துவிட்டவனைப் போன்றவனாவான். அவனைப் பறவைகள் வாரிச்சென்றுவிடு கின்றன அல்லது காற்று அவனைத் தூரமான இடத்தில் வீசிவிடு கிறது. (30,31)*

தூதுத்துவம் வழங்கப்பட்ட சமூகம் தன் வரலாற்றுடன் தன் வணக்க வழிபாட்டையும் தன் நினைவுகளுடன் தன் வரலாற்றையும் தன் உணர் வுகளுடன் தன் சிந்தனையையும் இரண்டறக் கலந்திருக்க வேண்டும்.

❖ ❖ ❖

மனித வாழ்க்கையோடு அதன் ஆரம்பக் கட்டத்திலிருந்தே இணைந்து வந்த சோதனைகள் சிக்கல்களும் சிரமங்களும் மிகுந்தவை. சத்தியத்துக் காக ஓர் அழைப்பாளர் எழும்போதெல்லாம் அதற்கு முன்னால் அசத் தியத்தின் அழைப்பாளர்கள் அதனை முறியடிப்பதற்காக, அதன் பாதை களில் தடைகளை ஏற்படுத்துவதற்காக வந்துவிடுகிறார்கள். இரண்டுக்கு மிடையிலான போர் நிரந்தரமான போராகிவிடுகிறது.

இந்தப் போரில் சில சமயங்களில் -உன்னதமான நோக்கத்துக்காக- சத்தியம் தோற்கடிக்கப்படலாம். பள்ளிவாசல்கள் கேளிக்கை அரங் கங்களாக அல்லது அருங்காட்சியகங்களாக அல்லது தொழுவங்களாக மாற்றப்படலாம்.

நம்முடைய இந்தக் காலத்தில் இந்தியாவில் உள்ள பாபரி மஸ்ஜித் இந்துக்களால் இடிக்கப்பட்டிருக்கிறது. அது அவர்கள் வழிபடும் இராமர் என்ற கடவுள் பிறந்த இடம் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

அந்தப் பள்ளிவாசலில் தவ்ஹீதின் அழைப்பை நீடிக்கச் செய்யும் பொருட்டுப் போராடிய ஏராளமான முஸ்லிம்கள் கொல்லப்பட்டிருக் கிறார்கள். அவர்கள் உயிர்த்தியாகம் செய்துவிட்டார்கள். மோதல் இன்றளவும் நீடித்துக்கொண்டுதான் இருக்கிறது.

எதிர்காலத்தில் என்ன நிகழும் என்று யாருக்கும் தெரியாது. ஆனாலும் முஸ்லிம்கள் நிலைகுலையாமல் உறுதியாக நின்று போராட வேண்டும். நிச்சயமாக இறுதி வெற்றி அவர்களுக்குத்தான். அவர்கள் அல்லாஹ் தன் தூதருக்குக் கூறும் இந்த ஆறுதல் வார்த்தைகளைச் செவியேற்க வேண்டும்:

*அவர்கள் உம்மை நிராகரித்தால், அவர்களுக்கு முன்னர் நூஹுடைய சமூகமும் ஆது, ஸமூது மக்களும் இப்றாஹீமின் சமூகமும் லூத்தின் சமூகமும் இன்னும் மத்யன்வாசிகளும் நிராகரித்துள்ளார்கள். மூசாவும் நிராகரிக்கப்பட்டார். நான் நிராகரிப்பாளர்களுக்கு அவ காசமளித்து, பின்னர் அவர்களைப் பிடித்துக்கொண்டேன். எனது தண்டனை எவ்வாறு இருந்தது?* (42-44)

❖ ❖ ❖

ஆறுதல் வார்த்தைகள் நீள்கின்றன. அல்லாஹ்விடத்தில் காலத்தைக் குறித்து வேறொரு கணக்கும் இருக்கிறது. இந்தத் தலைமுறை தோல் வியைக் காண்கிறது. பின்னர், சில காலங்களுக்குப் பிறகு அது வெற்றியைக் காணும். ‘அவர்கள் உம்மிடம் வேதனைக்காக அவசரப்படுகிறார்கள். அல்லாஹ் ஒருபோதும் தன் வாக்குறுதிக்கு மாறாகச் செயல்பட மாட்டான். உம் இறைவனிடத்தில் ஒருநாள் என்பது ஆயிரம் ஆண்டுகளுக்குச் சம மாகும். (47)’

தூதரின் மீதுள்ள கடமையெல்லாம் எந்த நிராகரிப்பாளனுக்கும் சாக்குப் போக்குகள் கூற காரணம் இல்லாதவாறு தெளிவாக எடுத்துரைத்து விடுவதுதான்.

*நீர் கூறும், ‘மனிதர்களே, நான் உங்களுக்குப் பகிரங்கமாக எச் சரிக்கைசெய்பவன்தான். நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிந்த வர்களுக்கு மன்னிப்பும் கண்ணியமான உணவும் உண்டு.’ நம் வசனங்களைத் தோற்கடிக்க முனைபவர்கள்தாம் நரகவாசிகள்.* (49-51)

பின்னர் அல்லாஹ் தன் தூதருக்கும் நமக்கும் தெளிவுபடுத்துகிறான், தூதர்கள் தங்களின் ஆற்றல்கள் அனைத்தையும் சத்தியத்துக்கு உதவிபுரிய வேண்டும் என்பதற்காகவே செலவுசெய்தார்கள். எந்த அளவுக்கெனில், சிலை வழிபாட்டாளர்களின் உள்ளங்கள் இதுதான் சத்தியம் என்பதை அறிந்துகொள்கின்றன. ஆனாலும் ஷைத்தான் தன் ஊசலாட்டங்களின் மூலம் விரைவாகவே அவர்களை அணுகுகிறான். அவர்கள் மனம்மாறித் திரும்பிப்போய்விடுகிறார்கள். தூதர்களின் முயற்சிகளைக் குறித்து அவர்கள் கூறுகிறார்கள்: ‘நாம் நம் தெய்வங்களின் மீது கொண்ட நம்பிக்கையில் உறுதியாக இல்லையென்றால் இவர் அவற்றைவிட்டும் நம்மைத் திருப்பியிருப்பார். (25:42)’

அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள நெருங்கிவிட்டார்கள். ஆனாலும் மனித, ஜின் இனத்தில் உள்ள ஷைத்தான்கள் அவர்களைப் பின்தொடர்ந்து கடிவாளமிட்டுவிட்டார்கள். ‘இவ்வாறே நாம் கேடுகெட்ட மனிதர்களையும் ஜின்களையும் ஒவ்வொரு தூதருக்கும் பகைவர்களாக ஆக்கினோம். அவர்கள் ஒருவர் மற்றவரை ஏமாற்றுவதற்காக அலங்காரமான பேச்சுகளைக் கற்றுக்கொடுக்கிறார்கள். (6:112)’ இந்த அலங்காரமான பேச்சுகளைக் கொண்டே வழிதவறுபவர்கள் வழிதவறுகிறார்கள். இதற்குத்தான் இல்காவுஷ்ஷைத்தான் - ஷைத்தான் ஏற்படுத்தும் குழப்பம் என்று சொல்லப்படுகிறது.

> நாம் உமக்கு முன்னர் அனுப்பிய எந்தத் தூதரானாலும் நபியானாலும் அவர் ஓதும்போது ஷைத்தான் குழப்பத்தை ஏற்படுத்திவிடுகிறான். ஆயினும் அல்லாஹ் ஷைத்தான் ஏற்படுத்திய குழப்பத்தை நீக்கி, பின்னர் தன் வசனங்களை உறுதிப்படுத்துகிறான். அல்லாஹ் நன்கறிந்தவனாகவும் ஞானம்மிக்கவனாகவும் இருக்கிறான். (52)

ஷைத்தான் ஏற்படுத்தும் குழப்பம் என்பது உண்மையை அறியவிடாமல் கூச்சலிட்டு அதன் வடிவத்தைத் திரித்துக் காட்டுவதாகும். அசத்தியவாதிகளின் எழுத்துகள் மலைகளையே உடைக்கும் அளவு வலிமையானவையாக இருப்பதை நாம் காண்கிறோம். ஆனாலும் அல்லாஹ் அவர்களின் சூழ்ச்சிகள் அனைத்தையும் முறியடித்து அவர்களின் பொய்யை வெளிப்படுத்திவிடுகிறான். போராட்டக் களத்திலிருந்து சத்தியம் பாதுகாக்கப்பட்டதாகவும் தூய்மையானதாகவும் வெளியேறிச் செல்கிறது.

ஷைத்தான் ஏற்படுத்தும் குழப்பம் என்பது அரசர்களாலும் பொதுமக்களாலும் மார்க்கத்தில் புகுத்தப்பட்ட பித்அத்துகளாக இருக்கலாம். அவை உண்மையான மார்க்கத்தின் எதார்த்தத்தைச் சிதைத்து மக்களை அதனைவிட்டுத் திருப்புகின்றன.

*எப்படியிருந்தாலும் இந்தக் குழப்பம் வெள்ள நுரைபோன்று விரைவாகவே மறைந்துவிடுகிறது. சத்தியம் மட்டுமே நிலைத்திருக்கிறது. அது தெளிவாகி, சத்தியவாதிகளின் கரங்களில் அதிகாரம் வந்துசேர்கிறது.*

*இங்கு நாம் கரானிக்கின் சம்பவத்தைக் குறிப்பிடப்போவதில்லை. அது அப்பட்டமான ஒரு பொய். மூடர்கள் அதனைக் கொண்டு ஏமாந்துவிடுகிறார்கள். அந்நஜ்ம் என்ற அத்தியாயத்தில் இதுகுறித்து விரிவாகப் பேசுவோம், இன்ஷா அல்லாஹ்.*

❖ ❖ ❖

*நாம் யாரின் பக்கம் அழைக்கிறோமோ அவனுடைய மகத்துவத்தை அறிவதும் அவனுடைய பாதையில் போராடுவதும் அழைப்புப் பணியைச் சிறப்பாகச் செய்வதற்கும் ஜிஹாதில் ஈடுபடுவதற்கும் உதவிகரமாக அமையும். ஏனெனில், அல்லாஹ்வின் வார்த்தையை மேலோங்கச் செய்வதற்காக முயற்சிசெய்பவன் உலக இன்பங்களைப் பெற முயற்சி செய்பவனைப் போலல்ல. ஆகவே, அல்லாஹ் தன் தூதருக்கு அழைப்பின் பாதையில் கடந்துசெல்லுமாறு ஆர்வமூட்டுகிறான்.*

> *அல்லாஹ்வே வானத்திலிருந்து மழையைப் பொழிவிக்கிறான் என்பதையும் அதனால் பூமி பசுமையாகிவிடுவதையும் நீர் பார்க்கவில்லையா? நிச்சயமாக அல்லாஹ் நுட்பமானவனாகவும் நன்கறிந்தவனாகவும் இருக்கிறான். வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அவனுக்கே உரியன. நிச்சயமாக அல்லாஹ் தேவையற்றவனாகவும் புகழுக்குரியவனாகவும் இருக்கிறான். (63,64)*

*வசனங்கள் அல்லாஹ்வின் மகத்துவத்தை, அவனுடைய ஆற்றலை, அவன் மட்டுமே இந்தப் பிரபஞ்சத்தில் வணங்கப்படத் தகுதியானவன் என்பதை வெளிப்படுத்தியவாறு கடந்துசெல்கின்றன. அவனைத் தவிர வேறு யார்தான் வணங்கப்படத் தகுதியானவன்? இயலாமை கொண்ட மனிதனா? பேசும் சக்தியற்ற கற்களா? 'அவர்கள் அல்லாஹ்வை விடுத்து மற்றவற்றை வழிபடுகிறார்கள். அல்லாஹ் அதற்கு எவ்வித ஆதாரத்தையும் இறக்கிவைக்கவில்லை. அதுகுறித்து எந்த அறிவும் அவர்களிடம் இல்லை. அநியாயக்காரர்களுக்கு உதவுபவர்கள் யாரும் இல்லை. (71)'*

*பின்னர் அல்லாஹ் தன் தூதருக்குக் கூறுகிறான்:*

> *நாம் ஒவ்வொரு சமூகத்துக்கும் ஒரு வழிமுறையை ஏற்படுத்தினோம். அவர்கள் அதனைப் பின்பற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இவ்விசயத்தில் அவர்கள் உம்முடன் தர்க்கிக்க வேண்டாம்.*

> உம் இறைவனின் பக்கம் அழைப்பீராக. நிச்சயமாக நீர் நேரான வழியில் இருக்கிறீர். (67)

ஹஜ் கடமையாக்கப்பட்டபோது அதனைக் குறித்து நபியவர்கள் மக்களிடம் கூறினார்கள், 'அதன் வழிமுறைகளை என்னிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்.' அதன் கிரியைகளையும் செயல்பாடுகளையும் நபியவர்கள் தெளிவுபடுத்தியவாறு, 'அது அல்லாஹ்வின் புகழைப் பாடக்கூடிய பெரும் பேரணி.' என்றார்கள். தவ்ஹீது உள்ளத்தைத் தொடும் உணர்வுகளாக, பிரபஞ்சத்தில் ஒலிக்கும் குரல்களாக மாற்றமடைகிறது.

அல்லாஹ்வின் நெருக்கத்தை நாடி அறுக்கப்படும் பிராணிகளில் அவனுடைய பெயர் கூறப்பட வேண்டும். 'அவற்றின் இறைச்சியோ இரத்தமோ அல்லாஹ்வை அடைவதில்லை. மாறாக, உங்களின் இறையச்சமே அவனை அடைகிறது. (37)'

குறைஷிகளுக்கு மட்டும் தனிப்பட்ட முறையில் ஒரு பாதை இருப்பதை நபியவர்கள் மறுத்தார்கள். அதே போன்று, ஹஜ்ஜிலிருந்து திரும்பிய பிறகு பின்வாசல் வழியாக நுழைவதையும் நபியவர்கள் தடைசெய்தார்கள்.

ஹஜ் என்பது ஈமானிய ஆட்சியின் அற்புதமான வெளிப்பாடும் ஷிர்க்கின் கோட்டையை இழிவுபடுத்தி தகர்க்கக்கூடியதுமாகும். ஆகவே, இங்கு அல்லாஹ் கூறுகிறான்:

> நாம் ஒவ்வொரு சமூகத்துக்கும் ஒரு வழிமுறையை ஏற்படுத்தினோம். அவர்கள் அதனைப் பின்பற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இவ்விசயத்தில் அவர்கள் உம்முடன் தர்க்கிக்க வேண்டாம். உம் இறைவனின் பக்கம் அழைப்பீராக. நிச்சயமாக நீர் நேரான வழியில் இருக்கிறீர். அவர்கள் உம்முடன் தர்க்கம்புரிந்தால், 'நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிவான்.' என்று நீர் கூறிவிடும். (67,68)

❖ ❖ ❖

பின்வரும் வசனத்தின் மூலம் தவ்ஹீதின் விவகாரம் உச்சத்தையும் ஷிர்க்கின் விவகாரம் அடித்தளத்தையும் அடைகிறது:

> 'மனிதர்களே, உங்களுக்கு ஓர் உதாரணம் கூறப்படுகிறது. அதனைக் கவனமாகக் கேளுங்கள். நீங்கள் அல்லாஹ்வை விடுத்து அழைக்கும் தெய்வங்களால் ஒரு ஈயைக்கூடப் படைக்க முடியாது. அதற்காக அவையனைத்தும் ஒன்றுசேர்ந்தாலும் சரியே. ஏன், ஒரு ஈ அவற்றிடமிருந்து எதையேனும் பிடுங்கிக் கொண்டாலும் அதைக்கூட அவை

களால் மீட்க முடியாது. உதவி தேடுபவர்களும் பலவீனர்களே. உதவி தேடப்படுபவையும் பலவீனமானவையே.' (73)

❖ ❖ ❖

இந்த அத்தியாயம் இஸ்லாமியச் சமுதாயம் ஆற்ற வேண்டிய பெரும் பணியைத் தெளிவுபடுத்தியவாறு நிறைவடைகிறது.

தூதர் அல்லாஹ்விடமிருந்து கற்றுக்கொண்டதை இந்தச் சமூகம் அவரிடமிருந்து கற்றுக்கொண்டது. தூதரிடமிருந்து பெற்றவற்றை இந்த உலகில் உள்ள மனிதர்களுக்கு எடுத்துரைக்க வேண்டியது இந்தச் சமூகத்தின் மீதுள்ள கடமையாகும்.

தூதர் இந்தச் சமூகத்துக்குச் சாட்சியாளராக இருக்கிறார். இந்தச் சமூகம் மக்களுக்குச் சாட்சியாக இருக்கிறது.

நவீன நாகரிகத்தில் வாழும் நாடுகள் தங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காகச் செயல்படுகின்றன; அல்லது, தங்கள் இனத்தின் மீதுள்ள பற்றின் காரணமாகப் போரிடுகின்றன; அல்லது, ஏதேனும் ஆதாயத்தைப் பெறுவதற்காகவே செயல்படுகின்றன. ஆனால், இஸ்லாமியச் சமூகத்தின் நோக்கம் வேறு. அது அல்லாஹ்வை வணங்குகிறது. அதன் பக்கம் மனிதர்களை அழைக்கிறது. அநியாயக்காரர்கள் மனிதர்களை அடிமைப்படுத்தி வைத்திருந்தால் அவர்களுக்கு எதிராகப் போரிட்டு, குழப்பம் நீக்கி மார்க்கத்தை அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித்தாக்கும் பணியையும் செய்கிறது.

'நம்பிக்கையாளர்களே, குனிந்து சிரம்பணியுங்கள். உங்கள் இறைவனையே வணங்குங்கள். இன்னும் நன்மையான செயல்களைச் செய்யுங்கள். அதனால் நீங்கள் வெற்றிபெறலாம். அல்லாஹ்வின் பாதையில் முயற்சிசெய்ய வேண்டியவாறு முயற்சி செய்யுங்கள்.' (77,78)

பின்னர் அவன் கூறுகிறான்:

'அது ஏனெனில், தூதர் உங்கள்மீது சாட்சியாகவும் நீங்கள் மக்களுக்குச் சாட்சியாகவும் இருக்க வேண்டும் என்பதற்காக. ஆகவே, தொழுகையைக் கடைப்பிடித்து, கடமையாக்கப்பட்ட தர்மத்தையும் கொடுத்துவாருங்கள். அல்லாஹ்வை உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள். அவனே உங்கள் அதிபதி. அவன் மிகச் சிறந்த அதிபதியாவான்; மிகச் சிறந்த உதவியாளனாவான்.' (78)

❖ ❖ ❖

அத்தியாயம் 23

# அல்முஃமினூன்

(நம்பிக்கையாளர்கள்)

*செயல்களுக்கும் அதற்காக வழங்கப்படும் கூலிகளுக்கும் வலுவான தொடர்பு உண்டு. நன்மையான செயல் எதிர்காலத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும், அதன் கடந்தகாலம் சிரமமானதாக இருந்தாலும். தீமையின் எதிர்காலம் மோசமானது. அதன் கடந்தகாலம் ஏமாற்றக்கூடியதாக இருந்தபோதிலும்.*

*பொதுவாக மனிதர்கள் அன்றைய நாளைத்தான் பெரிதாகக் கருது கிறார்கள். தங்களின் முழுக் கவனத்தையும் அதற்காகவே செலவிடுகி றார்கள். அது சத்தியத்தை மறைக்கக்கூடியதாகவும் அலட்சியமாக இருப்பவர்கள் அகப்பட்டுக்கொள்ளும் வலையாகவும் இருக்கிறது.*

*இந்த அத்தியாயம் பின்வரும் நற்செய்தியைக் கொண்டு தொடங்கு கிறது:*

> *நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் வெற்றியடைந்துவிட்டார்கள். அவர்கள் தம் தொழுகையில் பணிவைப் பேணுவார்கள்; வீணான காரியங்களைவிட்டும் விலகியிருப்பார்கள்; ஸகாத்தையும் வழங்குவார்கள் ...* (1-4)

*உமர் இப்னுல் ஃகத்தாபு கூறுகிறார், நபியவர்களின் மீது வஹீ இறங் கினால் தேனீக்களின் ரீங்காரத்தைப் போல அவர்களின் முகத்திலிருந்து சத்தம் கேட்கும். ஒருநாள் அல்லாஹ் அவர்கள்மீது வஹீ இறக்கினான். ஒரு மணி நேரம்வரை அவர்கள் அமைதியாக இருந்தார்கள். பின்னர் அது நீங்கியது. நபியவர்கள் இந்த அத்தியாயத்தின் முதல் பத்து வசனங்களைப் படித்துக் காட்டினார்கள். பின்னர் கூறினார்கள், 'யார் இந்த பத்து வசனங் களையும் தம் வாழ்க்கையில் கடைப்பிடிப்பாரோ அவர் சுவனம் செல்வார்.'*

பின்னர் கிப்லாவை முன்னோக்கித் தம் கைகளை உயர்த்தி அவர்கள் கூறினார்கள்:

> அல்லாஹ்வே, எங்களுக்கு அதிகப்படுத்துவாயாக. எங்களுக்குக் குறைத்துவிடாதே. எங்களைக் கண்ணியப்படுத்துவாயாக. எங்களை இழிவுபடுத்திவிடாதே. எங்களுக்கு வழங்குவாயாக. எங்களுக்கு விலக்கிவிடாதே. எங்களைச் சிறப்பிப்பாயாக. எங்களைக் கைவிட்டுவிடாதே. அல்லாஹ்வே, எங்களை ஏற்றுக்கொள்வாயாக.

❖ ❖ ❖

மேற்குறிப்பிடப்பட்டுள்ள வசனங்கள் கொள்கைள், ஒழுக்கங்கள், வணக்க வழிபாடுகள், பொது விவகாரங்கள் ஆகியவற்றின் கலவையாக இருக்கின்றன. அவற்றைக் கடைப்பிடிப்பவர் வெற்றியைக் கொண்டு நற்செய்தி கூறப்படுகிறார்.

இந்த அத்தியாயத்தின் நடுவில் இதே பொருள் வேறொரு வடிவிலும் இடம்பெறுகிறது:

> தம் இறைவனின் மீதுள்ள அச்சத்தால் நடுங்குவோரும் தம் இறைவனின் வசனங்களை நம்புவோரும் தம் இறைவனுக்கு இணைவைக்காதோரும் தர்மம் வழங்குவோரும் தங்கள் இறைவனிடம் திரும்பிச்செல்வோம் என்பதால் யாருடைய உள்ளங்கள் நடுநடுங்கிக்கொண்டிருக்கிறதோ அவர்களுமாகிய இத்தகைய மனிதர்கள்தாம் நற்செயல்களில் விரைந்துசெல்பவர்கள். இவர்கள்தாம் அவற்றுக்கு முந்திச்செல்பவர்கள். (57-61)

மேற்கண்ட வசனங்களில் சொல்லப்பட்டுள்ள பண்புகள்தாம் அத்தியாயத்தின் ஆரம்பத்தில் இடம்பெறும் வசனங்களிலும் கூறப்பட்டுள்ளன. இவ்விரு இடங்களும் அவர்களுடைய வாழ்க்கையின் ஒரு பகுதியை, அவர்களுடைய பண்புகளில் ஒரு தொகுதியைச் சித்தரித்துக் காட்டுகின்றன.

தீயவர்களைக் குறித்தும் அவர்களின் முடிவைக் குறித்தும் வேறுபல அத்தியாயங்கள் தெளிவுபடுத்துகின்றன. அவை அவர்கள் இறுதியாகச் சென்றடையும் இடங்களை, அவர்களை அடையும் விளைவுகளைக் குறிப்பிடுகின்றன.

முழுமையான கூலி மனிதர்கள் பூமியில் ஒரு குறிப்பிட்ட காலத்தைக் கழித்தபிறகே வழங்கப்படுகிறது. அப்போது அவர்களின் செயல்கள் யாவும் முழுமையாகக் கணக்கிடப்படும்.

*இந்தக் காலகட்டம் அல்லாஹ்வின் மீதுள்ள நம்பிக்கையை தூண்டக்கூடிய வகையிலும் அவனுடைய மகத்துவத்தை உணர்த்தக்கூடிய வகையிலும் வர்ணிக்கப்பட்டுள்ளது. 'நாம் மனிதனைக் களிமண்ணின் சாரத்திலிருந்து படைத்தோம். பின்னர், அவனை விந்துத்துளியாக்கி ஒரு பாதுகாப்பான இடத்தில் வைத்தோம்.* (12,13)'

*மண்ணிலிருந்து இந்த உடல்கள் எப்படிப் படைக்கப்பட்டன? அது சரியான மனிதனாக எப்படி உருமாறியது? பேரீச்சம்பழக் கொட்டையில் அதன் தனித்தன்மைகள் எப்படி உள்ளடக்கப்பட்டன? விந்துத்துளியில் மனிதனின் தனித்தன்மைகள் எப்படி உள்ளடக்கப்பட்டன? பரம்பரைப் பண்புகள் காலம் கடந்தும் எப்படி ஊடுருவிக்கொண்டிருக்கின்றன? இயலாமை கொண்ட குழந்தை முழு மனிதனாக எப்படி மாற்றமடைகிறது?*

*ஒவ்வொரு பொருளும் படைப்பாளனின் வல்லமையை, மகத்துவத்தை பறைசாற்றுகின்றன. ஆனாலும் நிராகரிப்பாளர்கள் கடுமையான அலட்சியத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் சென்றடையும் இடம் மிகவும் மோசமானது. 'அதற்குப் பின் நிச்சயம் நீங்கள் மரணிக்கக் கூடியவர்கள்தாம். பின்னர், மறுமைநாளில் நீங்கள் எழுப்பப்படுவீர்கள்.* (15,16)'

❖ ❖ ❖

*அத்தியாயம் முற்கால மக்களின் வரலாற்றை எடுத்துரைக்கிறது. அவர்கள் அல்லாஹ்வின் அருட்கொடைக்கு எவ்வாறு நன்றிகெட்டத்தனமாக நடந்துகொண்டார்கள் என்பதையும் எவ்வாறு அவனுடைய தூதர்களை நிராகரித்தார்கள் என்பதையும் எடுத்துரைக்கிறது. நூஹையும் அவருடைய சமூகத்தினரையும் ஹூதையும் அவருடைய சமூகத்தினரையும் நினைவுகூர்கிறது.*

> *அவர்களுக்குப் பின் நாம் வேறொரு சமூகத்தை உருவாக்கினோம். எந்தச் சமூகமும் தன் தவணைக்கு முந்தவும் செய்யாது, பிந்தவும் செய்யாது. பின்னர், நாம் தொடர்ந்து நம் தூதர்களை அனுப்பினோம். எந்த ஒரு சமூகத்திடமும் அதனுடைய தூதர்கள் வந்தாலும் அவரை அவர்கள் நிராகரித்துக்கொண்டுதான் இருந்தார்கள். ஆகவே, நாம் அவர்களை ஒன்றன்பின் ஒன்றாக அழித்து அவர்களைப் பழங்கதைகளாக ஆக்கிவிட்டோம். நம்பிக்கை கொள்ளாத மக்கள் அல்லாஹ்வின் அருளைவிட்டும் தூரமாகட்டும்.* (42-44)

*நம்பிக்கை கொள்ள மறுத்த சமூகங்களில் பெரும்பாலோர் மத்திய கிழக்கு என்று அழைக்கப்படும் நாடுகளில் வாழ்ந்தவர்களாவர். நூஹ்*

இறாக்கின் வடக்குப் பகுதியில் வாழ்ந்தார். இப்றாஹீம் இறாக்கிலிருந்து ஹிஜாஸை நோக்கிச் சென்றார். எகிப்து, ஷாம் ஆகிய நாடுகளைக் கடந்து சென்றார். மூசா நைல் நதிக் கரையிலிருந்து தம் சமூகத்தைவிட்டுத் தப்பியோடினார். பாலைவனத்தில் மரணமடைந்தார். ஈசா ஃபலஸ்தீனில் பிறந்தார். எகிப்துக்குச் சென்றார். ஸாலிஹ், ஷுஐபு அறபு தீபகற்பத்தில் வாழ்ந்தார்கள் ...

இந்த நாடுகளில் உள்ளவர்கள் மற்றவர்களைவிட இறை மார்க்கங் களைக் குறித்து, வஹீயின் உண்மைகள்குறித்து நன்கறிந்தவர்களாக இருந்தார்கள். ஆனாலும் அவர்கள் அறிந்துகொண்டே மறுத்தபோது அல்லாஹ் அவர்களை வலிமை இழக்கச்செய்து சிதறடித்தான்.

தூதர்கள் மனிதர்களால் தாங்கிக்கொள்ள முடியாததை அவர்கள்மீது சுமத்தினார்களா? நிச்சயமாக இல்லை. தீயவற்றை விட்டுவிட்டு நன் மையான செயல்களைச் செய்வது மனிதர்கள்மீது கடினமான ஒன்றல்ல. ‘தூதர்களே, தூய்மையானவற்றை உண்ணுங்கள். நற்செயல் புரியுங்கள். நீங்கள் செய்பவற்றை நான் நன்கறிவேன். உங்களது இந்தச் சமூகம் ஒரே சமூகம்தான். நானே உங்களின் இறைவன். ஆகவே என்னையே அஞ்சு ங்கள். (51,52)’

ஆகவேதான் அதற்குப் பிறகு கூறப்பட்டது: ‘எந்த மனிதனையும் அவனது சக்திக்குட்பட்டே தவிர நாம் சிரமப்படுத்துவதில்லை. மிகச் சரியாகப் பேசக்கூடிய ஒரு புத்தகம் நம்மிடம் உள்ளது. யாருக்கும் அநீதி இழைக்கப்பட மாட்டாது. (62)’

❖ ❖ ❖

தனித்தனியான தூதுத்துவங்களுக்குப் பிறகு உலகளாவிய இறுதித் தூதுத்துவம் வந்தது. அறபு தீபகற்பத்தில் முஹம்மது இறை வஹீயின் சாராம்சம் அனைத்தையும் உள்ளடக்கியுள்ள திருக்குர்ஆனைக் கொண்டு வந்தார். அது அவருக்கு வழங்கப்பட்ட அற்புதமாகவும் இருந்தது.

ஆனால் அறபுகள் ஆரம்பக் கட்டத்தில் அதனை எதிர்த்தார்கள். தங்க ளின் தூதரை நிராகரித்தார்கள். இத்தனைக்கும் முஹம்மதின் கண்ணி யத்தையும் நம்பகத்தன்மையையும் குறித்து அவர்கள்தாம் நன்கறிந்த வர்களாக இருந்தார்கள். அபூதாலிபு இந்த விசயத்தை இந்தக் கவிதையில் வெளிப்படுத்துகிறார்:

எங்களின் பிள்ளை எங்களிடத்தில் பொய்யர் எனத்
தூற்றப்படுவதற்குரியவர் இல்லை என்பதை நாங்கள்

*அறிந்துகொண்டோம். பொய்யர்களின் கூற்று அவர் பக்கம் இணைக்கப்படாது.*

*திருக்குர்ஆனும் அவர்களின் இந்த நிலைப்பாட்டை இவ்வாறு வர்ணித்தது:*

*அவர்கள் இந்தக் கூற்றை ஆராய்ந்துபார்க்க வேண்டாமா? அல்லது, அவர்களின் முன்னோர்களிடம் வராத ஒன்று அவர்களிடம் வந்துவிட்டதா? அல்லது, அவர்கள் தம் தூதரை அறிந்துகொள்ளாததால் அவரை நிராகரிக்கிறார்களா? அல்லது, அவருக்குப் பைத்தியம் பிடித்துள்ளது என்று கூறுகிறார்களா? மாறாக, அவர்களிடம் அவர் சத்தியத்தையே கொண்டுவந்துள்ளார். ஆயினும் அவர்களில் பெரும்பாலோர் சத்தியத்தை வெறுப்பவர்களாகவே இருக்கிறார்கள்.* (68-70)

*சத்தியத்தை அவர்கள் வெறுத்ததால் அதற்காகப் பெரும் விலையை அவர்கள் கொடுக்க நேர்ந்தது. 'இறுதியில் அவர்களில் சொகுசாக வாழ்வோரை வேதனையால் நாம் தண்டிக்கும்போது அவர்கள் அபயக்குரல் எழுப்புவார்கள்.* (64)*' பத்ருப் போரில் அவர்கள் மிக இழிவான முறையில் தோற்கடிக்கப்பட்டார்கள். நிராகரிப்பின் தலைவர்கள் கொல்லப்பட்டுப் பாழுங்கிணற்றில் வீசியெறியப்பட்டார்கள்.*

*அவர்கள் அதற்கு முன்னால் தங்களின் சபைகளில் இஸ்லாத்தையும் அதன் போதனைகளையும் பரிகாசம்செய்துகொண்டும் திட்டிக்கொண்டும் இருந்தார்கள். பலவீனமான முஸ்லிம்களைத் துன்புறுத்திக்கொண்டும் அவர்களின் உரிமைகளைப் பறித்துக்கொண்டும் இருந்தார்கள்.*

*குறைஷித் தலைவர்கள் கொல்லப்பட்டபோது ஷத்தாது இப்னு அஸ்வத் இவ்வாறு கவிதை பாடினார்:*

*''ஐயகோ! இந்தக் கிணறு★ எதைத் தின்று விட்டு ஆவென்று*
*திறந்து கிடக்கிறது..*

*விலயுயர்ந்த உணவுத் தட்டுகளில் ஒட்டகத்துத் திமிலின்*
*இறைச்சி குவியலாய்த் தெரிகிறதே !*

*குடித்து வெறித்து கும்மாளமிட்ட ஆட்டக்காரிகளெல்லாம்*
*சரிந்து குவிந்து கிடப்பதென்ன !''*

*(★பத்ர் போரில் மாண்ட குறைஷிக் குலத்து எதிர்ப்படை முன்னணித் தலைவர்களின் சடலங்களை நபிகளார் இட்டு நிரப்பிய ஓர் அகன்ற கிணறு - கலீப் பத்ர் அன்று அழைக்கப்படுகிறது)*

இந்தக் கவிஞன் , பத்ர் போர் நடக்கும்போது, நபிகளார் போதித்த மரணத்தின் பின்னர் மனிதர்கள் மீள எழுப்பப்படுதல், அவர் தம் செயல்களுக்காய் கூலி வழங்கப்படுதல் போன்றவற்றை ஏற்க மறுத்த வனாய் வாழ்ந்திருந்தான். பத்ர் போரில் அவன் தரப்பு கொள்கை சார்ந்த, இறைதூதை எதிர்த்துப் போரிட்ட தலைவர்களில் முக்கியமானோர் மடிந்து போனதைப் பார்த்து இன்னும் பாடினான் :

''மாண்டாலும் யாம் மீளஉயிர்கொள்வோம், நீ நம்பு என்கிறார்
இந்த நபி - இங்கு

மண்டையோடுகளாய், ஆந்தைகளாய் அலையும்
இவரெல்லாமா உயிர் பெறுவார்?''

அவர்களுக்குப் பதிலளிக்கும் விதமாக அல்லாஹ் கூறுகிறான்:

மாறாக, அவர்களிடம் அவர் சத்தியத்தையே கொண்டுவந்துள்ளார். ஆயினும் அவர்களில் பெரும்பாலோர் சத்தியத்தை வெறுப்ப வர்களாகவே இருக்கிறார்கள். சத்தியம் அவர்களின் விருப்பங் களைப் பின்பற்றியிருந்தால் வானங்களும் பூமியும் அவற்றுக் கிடையில் உள்ள அனைத்தும் அழிந்துபோயிருக்கும். மாறாக, நாம் அவர்களுக்கு அவர்களுக்கான அறிவுரையையே வழங்கியுள்ளோம். ஆயினும் அவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட அறிவுரையைப் புறக்கணித்துக்கொண்டிருக்கிறார்கள். (70,71)

❖ ❖ ❖

மனிதனுக்கு ஏற்படக்கூடிய வலிகள் அவனைத் தூய்மைப்படுத்தக் கூடியவையாகவும் அவனுடைய படித்தரத்தை உயர்த்தக்கூடியவையாக வும் இருக்கின்றன. நல்லவர்கள், அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாது செய்பவர்கள் மற்றும் அவர்களைப் போன்றவர்களுக்கு ஏற்படக்கூடிய வலிகள் இவ்வகையானவை. ஹதீஸில் வந்துள்ளது, 'ஒரு முஸ்லிம் உணரக்கூடிய கவலை, துக்கம், களைப்பு ஆகியவற்றை, சொல்லப் போனால் அவனுடைய காலில் முள் குத்தினால் அவன் உணரக்கூடிய வலியைக்கூட அல்லாஹ் அவனுடைய தவறுகளுக்குப் பரிகாரமாக ஆக்கிவிடுகிறான்.'

சில சமயங்களில் வலிகள் மனிதர்களுக்கு ஒழுக்கம் கற்பிக்கும் பொருட் டும் அவர்களை நேர்வழியின் பக்கம் திருப்பும் பொருட்டும் அளிக்கப் படுகின்றன. ஏனெனில், அதிகாரமும் செல்வமும் மமதையை, கர்வத்தை ஏற்படுத்தும்.

பெரும் செல்வம் வழங்கப்பட்ட அல்லது பெரும் பதவியளிக்கப்பட்ட மனிதன் தன் தகுதியை மீறி கர்வம் கொள்ளத் தொடங்குகிறான்.

குறைஷிகள் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாமல் ஆணவம் கொண்டிருந்தார்கள். ஏனெனில், சொகுசு வாழ்வு அவர்களை ஆணவத்தில் ஆழ்த்திவிட்டிருந்தது. அந்த ஆணவத்தை உடைக்கவே நபியவர்கள் இவ்வாறு பிரார்த்தித்தார்கள், 'அல்லாஹ்வே, ஏழு வருடங்களைக் கொண்டு யூசுஃபுக்கு உதவியதுபோன்று எனக்கும் உதவு.'

மனிதனுக்கு வரக்கூடிய தொடர் வேதனைகள் அவனைப் பாவங்களை விட்டும் தடுக்கின்றன. அவர்கள் நேர்வழியை ஏற்க மறுத்துக் கொண்டிருக்கும் வரை சோதனைகள் அவர்களைத் தொடர்ந்து கொண்டே இருக்கும். அல்லாஹ் கூறுகிறான்: 'நாம் அவர்கள்மீது கருணை காட்டி அவர்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பத்தை நீக்கிவிட்டால் தங்களின் வரம்பு மீறலிலேயே அவர்கள் தடுமாறித்திரிவார்கள். (75)'

குறைஷிகளுக்கும் பஞ்சம்மிகுந்த ஆண்டுகள் வந்தன. பஞ்சம் அவர்களை வாட்டியது. எந்த அளவுக்கெனில், அவர்களின் கண்களுக்கு இந்த உலகம் கருப்பாகவே தெரிந்தது. இருந்தும் அவர்கள் கிட்டத்தட்ட இருபது வருடங்கள்வரை தூதருடனும் அவருடைய தோழர்களுடனும் போரிட்டுக் கொண்டிருந்தார்கள்.

இறுதியில் அவர்களின் பலம் குன்றியது. நிராகரிப்பின் ஆட்சி அவர்களின் பூமியிலேயே வீழ்த்தப்பட்டது. அங்கு ஈமானிய ஆட்சி நிலை பெற்றது.

இறுதியில் அவர்கள்மீது கடும் வேதனையின் வாசலை நாம் திறந்து விட்டால் அவர்கள் நிராசையடைந்துவிடுவார்கள். (77)

இந்த அத்தியாயம் மக்காவில் அருளப்பட்டது. அந்த மக்களை நேர்வழியின் பக்கம் கொண்டுவரும் பொருட்டே இவ்வாறு அவர்கள் எச்சரிக்கப்பட்டார்கள்.

❖ ❖ ❖

ஆனாலும் திருக்குர்ஆன் அவர்களுக்குக் கற்பிப்பதற்கும் வழிகாட்டுவதற்கும் மனித அறிவை விழிப்படையச் செய்யும் தன்னுடைய இயல்பான வழிமுறைகளின் பக்கம் திரும்பியது. ஆகவே, அல்லாஹ்வின் அருட்கொடைகளை அவர்களுக்கு நினைவூட்டியது. அவன் எவ்வாறு அவர்களைப் படைத்து, இரவையும் பகலையும் சூரியனையும் சந்திரனையும் அவர்களின் வாழ்க்கைக்காக ஆக்கித்தந்துள்ளான் என்பதையும்

எவ்வாறு அவர்களுக்குச் செவிப்புலனையும் கண்களையும் உள்ளங் களையும் வழங்கியுள்ளான் என்பதையும் அவர்களுக்குத் தெளிவு படுத்தியது. அவர்களின் இணைவைப்பை, அவர்களின் சிந்தனையில் புகுந்துவிட்ட தவறுகளை வெளிப்படுத்தக்கூடிய, அவர்களைத் தூய தவ்ஹீதின் பக்கம் திருப்பக்கூடிய மூன்று கேள்விகளை அவர்களுக்கு முன்னால் வைத்தது:

அ. நீர் கேளும், 'பூமியும் அதில் உள்ளவர்களும் யாருக்குரியவர்கள், நீங்கள் அறிந்திருந்தால் கூறுங்கள்?' 'அல்லாஹ்வுக்குரியவர் கள்!' என்று அவர்கள் கூறுவார்கள். நீர் கேளும், 'பிறகு, நீங்கள் சிந்திக்க மாட்டீர்களா?'

ஆ. நீர் கேளும், 'ஏழு வானங்களுக்கும் மகத்தான அரியணைக்கும் அதிபதி யார்?' 'அல்லாஹ்தான்!' என்று அவர்கள் கூறுவார்கள். நீர் கேளும், 'பிறகு, நீங்கள் ஏன் அஞ்சுவதில்லை?'

இ. நீர் கேளும், 'யாருடைய கையில் அனைத்து அதிகாரமும் உள் ளது? அவன் பாதுகாப்பளிப்பவன்; பாதுகாப்புத் தேவை அற்ற வன். நீங்கள் அறிந்திருந்தால் கூறுங்கள்?' அவர்கள் கூறு வார்கள், 'எல்லாம் அல்லாஹ்வுக்கே உரியன!' நீர் கேளும், 'பிறகு, எவ்வாறு நீங்கள் ஏமாற்றப்படுகிறீர்கள்?' (84-89)

சிலைகளை வணங்கிக்கொண்டிருந்த இணைவைப்பாளர்களை நோக்கி இந்த கேள்விகள் முன்வைக்கப்பட்டன. அந்தச் சிலைகள் வானத்தையோ பூமியையோ எதையும் படைக்கவில்லை என்பதையும் யாருக்கும் உண வளிக்கவில்லை என்பதையும் அவர்கள் அறிவார்கள். அதே சமயம், இந்தக் கேள்விகள் வேதக்காரர்களை நோக்கியும் முன்வைக்கப்படுகின்றன. அவர்களும் அல்லாஹ்வுடன் வேறு இறைவனை ஏற்படுத்தி, தவ்ஹீதைக் களங்கப்படுத்திக்கொண்டிருந்தார்கள். அதற்கு அல்லாஹ் எவ்வித ஆதா ரத்தையும் இறக்கியிருக்கவில்லை.

குர்ஆன் 'இறைவன் ஒருவனே. அவனைத் தவிர அனைத்தும் அவ னுடைய படைப்புகளே.' என்ற தூய தவ்ஹீதின் அடிப்படையில்தான் சரியான ஈமானை அமைத்தது. அவனைத் தவிர அனைவரும் அவனுடைய அடிமைகள்தாம்.

அல்லாஹ் எந்த மகனையும் தனக்கென ஏற்படுத்திக்கொள்ள வில்லை. அவனுடன் வேறெந்த இறைவனும் இல்லை. அவ்வாறு இருந்திருந்தால் ஒவ்வொரு இறைவனும் தான் படைத்தவற்றைச் சேர்த்துக்கொண்டு ஒருவருக்கொருவர் தாக்குதல் நடத்தியிருப்

*பார்கள். அவர்கள் கூறுவதைவிட்டு அல்லாஹ் தூய்மையானவன். அவன் வெளிப்படையானவற்றையும் மறைவானவற்றையும் அறியக் கூடியவன். அவர்களின் இணைவைப்பைவிட்டும் அவன் மிக உயர்ந்தவன்.* (91,92)

*பிரகாசமான சிந்தனையின், வலுவான ஆதாரத்தின் வெளிப்பாடே தவ்ஹீதாகும். இணைவைப்பும் அல்லாஹ்வுக்கு மகன் அல்லது மகளை ஏற்படுத்துவதும் நோயுற்ற அறிவின் யூகங்கள்தாம்.*

❖ ❖ ❖

*மனிதன் மிகைக்கக்கூடிய இச்சைக்கு அடிமையாகி வழிகேட்டில், தவறான காரியங்களில் நிலைத்திருக்கலாம். அல்லாஹ் அவனுக்கு இந்த உலக வாழ்வு நிரந்தரமானதல்ல என்பதை உணர்த்துகிறான். அது குறிப் பிட்ட தவணையைத் தாண்டாது. அதனைத் தொடர்ந்து மரணம் நிச்சயம் வந்தே தீரும். ஆகவே, அவன் அதற்கு அஞ்சிக்கொள்ளட்டும். ஏனெனில், பின்னர் அவன் தன் செயல்களை எண்ணி நிச்சயம் வருத்தப்படுவான்.*

*இறுதியில் அவர்களில் யாருக்கேனும் மரணம் வந்துவிடுமானால், 'என் இறைவா, என்னைத் திருப்பியனுப்பு, நான் விட்டுவந்ததில் கொஞ்சம் நன்மையைச் சேர்த்துக்கொள்வதற்காக.' என்று கூறுவான். ஒருபோதும் இல்லை. அவன் வெறும் வார்த்தையாகத்தான் இப்படிக் கூறுகிறான். அவர்கள் எழுப்பப்படும் நாள்வரை அவர்களுக்கு முன்னால் ஒரு திரை இருக்கிறது.* (99,100)

*மீண்டும் கண்ணியமான ஒரு வாழ்வைத் தொடங்குவதற்காக அவர் கள் உலகின் பக்கம் திரும்ப வேண்டும் என்று கோருவது திருக்குர் ஆனில் பத்துக்கு மேற்பட்ட முறை இடம்பெற்றுள்ளது. இது குற்ற வாளிகள் தங்களின் குற்றத்தை ஒப்புக்கொள்வார்கள் என்பதற்கான ஆதாரமாகும். அல்லாஹ் அவர்களுக்கு மற்றுமொரு வாய்ப்பை வழங்க வேண்டும் என்று அவர்கள் விரும்புவார்கள்.*

*இந்தக் கோரிக்கை இந்த அத்தியாயத்தில் இரண்டு முறை இடம் பெற்றுள்ளது. மரணம் நெருங்கும்போதும் விசாரணை செய்யப்படும் நேரத்திலும்.*

*'என் வசனங்கள் உங்களுக்கு எடுத்துரைக்கப்பட்டபோது நீங்கள் அவற்றை நிராகரித்தீர்கள், இல்லையா?' அதற்கு அவர்கள் கூறு வார்கள், 'எங்கள் இறைவா, எங்களின் துர்பாக்கியம் எங்களை மிகைத்துவிட்டது. நாங்கள் வழிகெட்ட மக்களாக இருந்தோம்.*

*எங்கள் இறைவா, எங்களை இதிலிருந்து வெளியேற்றிவிடு. நாங்கள் மீண்டும் இவ்வாறு செயல்பட்டால் நிச்சயமாக நாங்கள் அநீதி இழைத்தவர்களாவோம்.'* (105-107)

*மீண்டும்மீண்டும் இடம்பெறும் இந்தக் கோரிக்கை 'நமக்கென்று நாட்டம் எதுவுமில்லை, நாம் வலுக்கட்டாயமாக இழுத்துச் செல்லப் படுகிறோம்.' என்று நம்பும் மக்களைத் திருப்திப்படுத்தக்கூடியதாகத் தெரிகிறது. அவர்கள் கூறுகிறார்கள், 'கூலி ஏற்கனவே நிர்ணயிக்கப் பட்டுவிட்டது. அதற்குக் காரணம் என்று எதுவும் தேவை இல்லை.'*

*நம் சமூகத்தில் இவர்கள் எவ்வித நாட்டமுமின்றி வாழ்கிறார்கள். விசி த்திரமான தங்களின் இந்த வாதத்தின் மூலம் இஸ்லாத்துக்கு அநீதி இழைக்கிறார்கள். அத்தியாயத்தின் இறுதிப் பகுதி இந்தச் சோம்பேறி களுக்குப் பதிலடியாக அமைகிறது. 'உங்களை நாம் நோக்கமின்றியே படைத்தோம் என்றும் நீங்கள் நம்மிடம் திரும்பக் கொண்டுவரப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக்கொண்டீர்களா? உண்மையான அரச னான அல்லாஹ் மிக உயர்ந்தவன். அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவன் மகத்தான அரியணையின் அதிபதி!* (115-116)*' அல்லாஹ் தன் அடியார்களில் யார்மீதும் அநீதி இழைக்க மாட்டான். ஆதமுக்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் இவ்வுலக வாழ்வை அவன் வழங்கி யுள்ளான். தெளிவான அறிவையும் வழிகாட்டக்கூடிய வஹீயையும் அவர்களுக்கு வழங்கியுள்ளான்.*

*அவன் நற்செய்தி கூறுகிறான், எச்சரிக்கிறான், ஆரோக்கியமளிக்கிறான், நோய்வாய்ப்படுத்துகிறான், இலகுவை ஏற்படுத்துகிறான், கடினத்தை ஏற்படுத்துகிறான். ஏனெனில், இரு நிலைகளிலும் மனிதன் தன் இறை வனை அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக. அவனுடைய சந்திப் புக்காக நற்செயல்களைக் கொண்டு தன்னைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காக. அவன் கீழ்ப்படிய மறுத்தால் அவனுக்காகக் காத்திருக்கும் தண்டனை நியாயமானதுதான். எந்தச் சாக்குப்போக்கும் அவனிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படாது.*

*இந்த அத்தியாயம், நிராகரிப்பாளன் விசாரணையின்போது பூமியில் வாழ்ந்த காலகட்டத்தை மறந்துவிடுவான் என்று குறிப்பிடுகிறது. கடந்த காலத்தைக் குறித்து எந்த நினைவும் அவனுக்கு இருக்காது. அவனுடைய கடந்தகால வாழ்வு குறுகிய நிமிடங்களைக் கொண்ட மூட்டமான வாழ்க் கையாகவே அவனுக்குத் தோன்றும்.*

*அவன் கேட்பான், 'பூமியில் எத்தனை ஆண்டுகள் நீங்கள் வசித்தீர்கள்?' அதற்கு அவர்கள் கூறுவார்கள், 'நாங்கள் ஒருநாள்*

*அல்லது அதைவிடக் குறைவாகத் தங்கியிருந்திருப்போம். கணக்கிடுவோரிடம் கேட்டுக்கொள்வாயாக!' அவன் கூறுவான், 'நீங்கள் சிறிது காலமே தங்கியிருந்தீர்கள். நீங்கள் அறிந்திருக்க வேண்டுமே!'* (112-114)

❖ ❖ ❖

*மீண்டும் திருக்குர்ஆன் ஆதாரத்தைக் கொண்டு ஈமானைக் கட்டியெழுப்புவதன் பக்கம் திரும்புகிறது. மார்க்கம் என்பது தேவையற்ற விசயங்களைக் கொண்டுவரும் குருட்டுத்தனமான அறிவு விளையாட்டு அல்ல என்பதை வலியுறுத்துகிறது. அது ஆதாரங்களைக் கொண்டு சத்தியத்தைத் தெளிவுபடுத்துகிறது.*

*அறிவு, பொறுப்புடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும் உயரம் செல்வதற்கான படிகளாகவும் இருக்கிறது. விலங்குகளுக்கு மிக நெருக்கமானவர்கள் அல்லாஹ்வை நிராகரிப்பவர்களும் அவனுடைய வழிகாட்டுதலை விட்டுத் தூரமானவர்களும்தாம்.*

*யார் அல்லாஹ்வுடன் வேறு இறைவனை அழைக்கிறாரோ -அது குறித்து எந்த ஆதாரமும் இல்லை- அவர் அவருடைய இறைவனால் விசாரிக்கப்படுவார். நிச்சயமாக நிராகரிப்பாளர்கள் வெற்றி பெற மாட்டார்கள். நீர் கூறும், 'என் இறைவா, என்னை மன்னித்து என்மீது கருணை காட்டு. நீயே மிகச் சிறந்த கருணை யாளன்.'* (117,118)

❖ ❖ ❖

அத்தியாயம் 24

# அந்நூர்

(ஒளி)

*அந்நூர் என்பது அல்லாஹ்வின் அழகிய பெயர்களில் ஒன்று. இந்த அத்தியாயத்துக்கான பெயர்க்காரணம் பின்வரும் வசனமாகும்: 'அல்லாஹ் வானங்கள் மற்றும் பூமியின் ஒளியாக இருக்கிறான். (35)' ஒளி அல் லாஹ்விடமிருந்தே வெளிப்படுகிறது. மாறாக, ஒவ்வொரு பொருளும் தன்னுடைய இருப்பை அவனிடமிருந்தே பெற்றுக்கொள்கின்றன. எது அவனிடமிருந்து எதையும் பெறவில்லையோ அது எதுவுமே இல்லை.*

*இந்தப் பிரபஞ்சம் நிழலைப் போன்றது. அதன் மீது விழுகின்ற வடிவத் தின் இருப்புக்கு இருப்பு இல்லை. வடிவம் மறைந்துவிட்டால் நிழலும் இல்லாமல் ஆகிவிடும்.*

*அவனுடைய இருப்பைக் கொண்டே, அவனுடைய பரிபாலித்தலைக் கொண்டே பிரபஞ்சம் தன் இருப்பைப் பெற்றுக்கொள்கிறது. சூரியன் உதிக்கும்போது வெளிப்படக்கூடிய பகலின் ஒளி அல்லது சந்திரன் உதிக்கும்போது வெளிப்படக்கூடிய இரவின் ஒளி தன் மூலத்தை அல் லாஹ்விடமிருந்தே பெற்றுக்கொள்கிறது.*

*இயங்கக்கூடிய ஒவ்வொரு அணுவும் படைப்பாளனின் இருப்புக்கு ஆதாரமாக இருக்கிறது. ஏனெனில், அனைத்தும் அவனைக் கொண்டே நிலைபெறுகின்றன; அவனுடைய இருப்பையே அறிவிக்கின்றன.*

*தாயிஃப் நகரத்தில் இணைவைப்பாளர்கள் நபியவர்களைத் துன் புறுத்தியபோது நபியவர்கள் இவ்வாறு பிரார்த்தித்தார்கள்:*

*இருள்களைப் பிரகாசமாக்கிய உன் முகத்தின் ஒளியைக் கொண்டு -இவ்வுலக, மறுவுலக விவகாரங்கள் அதனைக் கொண்டுதான் சீர்பெறுகின்றன- உனது கோபம் என்மீது இறங்குவதிலிருந்து*

*அல்லது உன் அதிருப்திக்கு நான் ஆளாவதிலிருந்து நான் பாது காவல் தேடுகிறேன். நீ திருப்தியடையும்வரை நான் உன் திருப் தியை வேண்டுகிறேன். அல்லாஹ்வின் உதவிகொண்டே தவிர நன்மையான செயல்களைச் செய்யவோ தீமையான செயல்களி லிருந்து தவிர்ந்திருக்கவோ முடியாது.*

இரவில் நபியவர்கள் எழுந்திருக்கும்போது ஓதக்கூடிய பிரார்த்தனை களில் இதுவும் ஒன்று: *'அல்லாஹ்வே, உனக்கே புகழனைத்தும். நீ வானங்கள், பூமி மற்றும் அவையிரண்டுக்கும் இடையில் உள்ளவற்றின் ஒளியாக இருக்கிறாய். உனக்கே புகழனைத்தும். நீ வானங்கள், பூமி மற்றும் அவையிரண்டுக்கும் இடையில் உள்ளவற்றை நிர்வகிப்பவனாக இருக்கிறாய்.'*

இப்னு மஸ்ஊது (ரழி) கூறுகிறார், *'உங்கள் இறைவனிடத்தில் இரவோ பகலோ கிடையாது. அர்ஷின் ஒளி அவனுடைய முகத்தின் ஒளியிலிருந்து வெளிப்படுவதாகும் ...'*

*'அவனுடைய ஒளியைப் போன்று'* என்ற வசனத்துக்கு, சில பக்கங் களுக்குப் பிறகு விரிவாக விளக்கமளிப்போம், அல்லாஹ் நாடினால். இப்போது நாம் அத்தியாயத்தின் ஆரம்பத்தைக் கவனிக்கலாம். *'இது நாம் அருளி விதியாக்கியுள்ள ஓர் அத்தியாயமாகும். நீங்கள் நினைவில் கொள்ளும் பொருட்டு இதில் தெளிவான வசனங்களை அருளியுள் ளோம். (1)'* இந்த அமைப்பு, அத்தியாயத்தின் சிறப்பையும் அதில் அடங்கி யுள்ள வழிகாட்டல்களின் முக்கியத்துவத்தையும் உணர்த்துகிறது. ஏனெ னில், இந்த முறையில் வேறெந்த அத்தியாயமும் தொடங்கப்படவில்லை. இந்த அத்தியாயம் கொண்டுவந்துள்ள சட்டங்கள் குறித்து வசனங்களில் இரு முறை இடம்பெற்றுள்ள பின்வரும் செய்தி நம் கவனத்தை ஈர்க் கக்கூடியது:

- ❖ *நிச்சயமாக நாம் உங்களுக்குத் தெளிவான வசனங்களையும் உங்களுக்கு முன்சென்றவர்களின் உதாரணங்களையும் அருளி யுள்ளோம். இறையச்சமுடையோருக்கு அறிவுரையையும் வழங்கியுள்ளோம். (34)*
- ❖ *சத்தியத்தைத் தெளிவுபடுத்தும் வசனங்களை நாம் அருளி யுள்ளோம். அல்லாஹ் தான் நாடியோருக்கு நேரான வழியைக் காட்டுகிறான். (46)*

ஏனெனில், இந்த அத்தியாயம் ஆணுக்கும் பெண்ணுக்கும் மத்தியில் உள்ள தனிப்பட்ட தொடர்புகளைக் குறித்து பேசுகிறது; சில பாலியல்

குற்றங்களுக்கான தண்டனைகளைக் குறிப்பிடுகிறது; ஆண்களும் பெண் களும் ஒருவர் மற்றவரைப் பார்ப்பதைக் குறித்த ஒழுக்கங்களையும் தெளிவுபடுத்துகிறது; அனுமதிக்கப்பட்ட, தடைசெய்யப்பட்ட அலங்கா ரங்களை நிர்ணயம்செய்கிறது; வீட்டில் நுழைவதற்கு முன்னால் அனுமதி கோரப்பட வேண்டும் என்பதையும் வீட்டில் யாருடன் எல்லாம் உண்ண லாம் என்பதையும் தெளிவுபடுத்துகிறது.

இந்த ஒழுக்கங்கள் இஸ்லாமியச் சமூகத்தைத் தூய்மையின் அடிப் படையில் கட்டியெழுப்புவதற்கும் அதன் பாதுகாப்புக்கும் மிக அவசிய மானவை.

பாவங்களிலிருந்தும் இழிசெயல்களிலிருந்தும் இந்தச் சமூகத்தைப் பாதுகாப்பதில் இந்தப் போதனைகளுக்குப் பெரும் பங்கு இருக்கிறது. தற்கால நாகரிகம் தீய, மானக்கேடான காரியங்களில் வீழ்ந்துகிடக்கிறது. அவை பரவுவதற்கான வழிகளையும் அது இலகுபடுத்திவிட்டது. அது விபச்சாரத்தை அனுமதிக்கப்பட்டதாகக் கருதுகிறது. மாறாக, அது விபச்சாரத்துக்கு நட்பு அல்லது காதல் என்ற பெயர்சூட்டி அழைக்கிறது.

பண்பாட்டுத் துறையில் மதங்கள் அகற்றப்பட்டுவிட்டன. ஈமானுக்கோ கண்ணியத்துக்கோ இடமில்லாத வகையில் பாதைகள் அனைத்தும் திறந்துவிடப்பட்டுவிட்டன. காலனித்துவவாதிகள் இஸ்லாத்தையும் இந்த நிலைக்குக் கொண்டுவந்துவிட வேண்டும் என்று முழு வீச்சாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

❖ ❖ ❖

விபச்சாரத்துக்கான தண்டனையை நிறுவுவதைக் கொண்டு அத்தி யாயம் தொடங்குகிறது. விபச்சாரிகளை மணமுடிக்க வேண்டாம் எனத் தடை விதிக்கப்படுகிறது. அதே போன்று, ஒழுக்கமான பெண்கள்மீது குற்றம் சாட்டுவது கடுமையான முறையில் தடைசெய்யப்படுகிறது. ஒருவருக்கொருவர் சபித்துக்கொள்வதன் சட்டம் தெளிவுபடுத்தப்படு கிறது. இவையனைத்தும் அல்லாஹ்வின் அருளும் ஞானமுமே என்பதும் அவன் தன் அடியார்களின் பாவமன்னிப்புக் கோரிக்கையை ஏற்றுக் கொள்கிறான் என்பதும் தெளிவுபடுத்தப்படுகிறது.

இவற்றுக்குப் பொருத்தமாக இந்த இடத்தில் அவதூறு குறித்த செய்தி யும் இடம்பெறுகிறது. அந்தச் சந்தர்ப்பம், இஸ்லாத்தின் எதிரிகள் இஸ் லாத்துக்கு எதிராகத் தங்கள் உள்ளங்களில் தேக்கி வைத்த குரோதங்களை அப்பட்டமாக வெளிப்படுத்திவிட்டது. திருக்குர்ஆன் இதற்கு முன்னர் இதைக் குறித்து எச்சரிக்கை செய்தது: ‘உங்கள் செல்வங்களிலும்

உயிர்களிலும் நிச்சயம் நீங்கள் சோதிக்கப்படுவீர்கள். உங்களுக்கு முன் வேதம் வழங்கப்பட்டோரிடமிருந்தும் இணைவைப்போரிடமிருந்தும் நிச்சயம் வேதனை தரும் வார்த்தைகளைச் செவியுறுவீர்கள். (3:186)'

மறைவாக இருந்துகொண்டு கண்ணியமான ஒரு பெண்மீது அவதூறாக கட்டுரை எழுதுபவனை நான் இழிவானவனாகக் கருதுகிறேன். பல வீனர்களும் ஏமாளிகளும் இந்தச் செய்தியைப் பரப்பிவிடுவார்கள் என்று கருதியே அவன் இவ்வாறு செய்கிறான்.

நயவஞ்சகர்களின் தலைவர் அப்துல்லாஹ் இப்னு உபை இப்படித் தான் செய்தான். நம்பிக்கையாளர்களின் அன்னை ஆயிஷா (றழி) மீது அவதூறை அள்ளி வீசினான். கடுமையான கவலையில் அன்னை ஆயிஷா அவர்கள் கூறினார்கள், 'கவலை என் ஈரலைப் பிளந்துவிடும் என்றே நான் எண்ணினேன்.'

அல்லாஹ்வின் தூதர் அவர்களும் கடுமையான மனநெருக்கடிக்கு ஆளானார்கள். அல்லாஹ் அன்னையின் தூய்மை குறித்து வஹீயை அருளி, அதனை இறுதிநாள்வரை படிக்கப்படும் வசனங்களாக ஆக்கினான்.

அந்தச் சம்பவம் மறக்க முடியாத பல பாடங்களை உள்ளடக்கியதாக இருந்தது.

- நீங்கள் அதனைக் கேள்விப்பட்டபோது, 'இது குறித்து பேசுவது நமக்கு உகந்ததல்ல. அல்லாஹ்வே, நீ தூய்மையானவன். இது மிகப் பெரிய அவதூறாகும்.' என்று கூறியிருக்க வேண்டாமா? … (16)

- நம்பிக்கையாளர்களிடையே வெட்கக்கேடானவை பரவ வேண் டும் என்று விரும்புவோருக்கு இவ்வுலகிலும் மறுவுலகிலும் துன்புறுத்தும் வேதனை உண்டு. அல்லாஹ்வே நன்கறிவான், நீங்கள் அறிய மாட்டீர்கள். (19)

- ஒழுக்கம் உள்ள, கள்ளங்கபடமற்ற, நம்பிக்கை கொண்ட பெண்கள்மீது அவதூறு கூறுபவர்கள் இம்மையிலும் மறுமை யிலும் சபிக்கப்பட்டுவிட்டார்கள். அவர்களுக்குக் கடுமையான வேதனை உண்டு. (23)

உள்ளங்களில் கடுமையான காயங்களை ஏற்படுத்திய அந்தக் குழப் பத்தை அல்லாஹ் இவ்வாறு நீக்கினான்.

❖ ❖ ❖

*பின்னர் திருக்குர்ஆன் வீட்டுக்குள் கடைப்பிடிக்க வேண்டிய தனிப் பட்ட ஒழுக்கங்கள்குறித்து பேசுகிறது. அவற்றில் வசிப்பவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய ஒழுக்கங்களும் இருக்கின்றன. கண்டிப்பாக அனுமதிபெற்றே, சலாம் கூறிய பிறகே அவற்றில் நுழைய வேண்டும். இந்த அனுமதி என்பது வெளியிலிருந்து வீட்டுக்குள் வருவோர், வீட்டுக் குள் அறைகளுக்கிடையே சென்றுகொண்டிருப்போர் என இரு சாராருக் கும் அவசியமானது. முந்தைய நாகரிகங்களில் இந்த ஒழுக்கங்கள் விதிக் கப்பட்டதாக நான் அறியவில்லை. நவீன நாகரிகம் வீட்டில் உள்ள கதவின் ஓட்டை வழியாக உள்ளே எட்டிப்பார்ப்பதையும் குற்றமெனக் கருத வில்லை.*

❖ ❖ ❖

*இச்சைகளை நெறிப்படுத்தியபிறகு இஸ்லாம் பார்வையைத் தாழ்த்த வும் வெட்கத்தலங்களைப் பாதுகாக்கவும் வலியுறுத்துகிறது. உண்மை யில் இவையனைத்தும் முந்தைய மார்க்கங்களில் சொல்லப்பட்டவை தான். ஆயினும் இஸ்லாம் அவற்றை நெறிப்படுத்துகிறது. அவற்றில் படிந்துவிட்ட தூசிகளை அப்புறப்படுத்துகிறது. அனுமதிக்கப்பட்ட, வெளிப்படையான அலங்காரங்கள் - கண்ணுக்குச் சுர்மா, கன்னத்தில் மேக்கப், கைகளில் மோதிரம், மறைக்க வேண்டிய மறைமுகமான அலங்காரங்கள் ஆகியவை - குறித்து அத்தியாயம் பேசுகிறது.*

*விசித்திரம் என்னவென்றால், தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்பவர்கள் நிர்வாணத்தையும் கட்டுப்பாடின்றி அலை வதையும் உலகத்தாருக்குக் கற்றுக்கொடுத்துக்கொண்டிருப்பதுதான். இதுபோன்ற ஒரு இழிநிலையை இந்த உலகம் இதுவரை கண்டதில்லை என்று நான் எண்ணுகிறேன். என்னுடைய சில புத்தகங்களில் நான் இதனை விபச்சாரக் கலாச்சாரம் என்று பெயரிட்டுள்ளேன்.*

*பல்வேறு பத்திரிகைகள், ஊடகங்கள் வீட்டுக்குள் குழப்பத்தை ஏற் படுத்துவதில் போட்டிபோட்டுக்கொண்டு செயல்படுகின்றன. மனிதர்கள் கும்பலாக நடனமாடும் மேற்கத்திய நடனம்குறித்த படங்களையும் கிழக்கின் தனிநபர் நடனம் குறித்த படங்களையும் அவை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. அவை ஷைத்தானை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்கின்றன. தூய ஒரு சமூகத்துக்கான திட்டம் தவிடுபொடியாகிக் கொண்டிருக்கிறது.*

*மணமுடிப்பதை இஸ்லாம் வணக்க வழிபாடாகக் கருதுகிறது. மனிதன் அனுமதிக்கப்பட்ட முறையில் தன் இச்சைகளைத் தணித்துக்கொள்ளவும்*

தவறான வழிகளைவிட்டு விலகியிருக்கவும் இதனை அவசியமான வழிமுறையாகக் கருதுகிறது.

திருக்குர்ஆனின் ஆச்சரியங்களில் ஒன்று, அது வீட்டுக்குள் உண வருந்துவதைக் குறித்தும் யார் யாரெல்லாம் ஒன்றுசேர்ந்தோ தனித் தனியாகவோ உணவருந்தத் தகுதியானவர்கள் என்பதுகுறித்தும் நீளமான ஒரு வசனத்தைக் கொண்டுவருகிறது. இந்தத் தனிப்பட்ட ஒழுக்கங்கள் அத்தியாயத்தின் மூன்றில் ஒரு பகுதியை உள்ளடக்கியுள்ளன.

❖ ❖ ❖

ஆனாலும் இந்த அத்தியாயம் அந்நூர் என்று பெயரிடப்படுவதற்குக் காரணமான வசனம் இறைவனின் அழகையும் என்றும் மாறாத அவனது கண்ணியத்தையும் குறித்து பேசுகிறது. அந்த வசனத்தையும் அதில் கூறப்பட்டுள்ள உதாரணத்தையும் நாம் விரிவாகப் பார்க்கலாம்.

அந்த வசனத்தில் அல்லாஹ் தன் ஒளிக்கு உதாரணம் கூறுகிறான்:

> அவனது ஒளிக்கு உதாரணம், விளக்கு இருக்கும் ஒரு மாடத்தைப் போன்றதாகும். அவ்விளக்கு ஒரு கண்ணாடிப் படிகத்துக்குள் உள்ளது. அக்கண்ணாடிப் படிகம் பிரகாசிக்கும் நட்சத்திரத்தைப் போன்றது. (35)

மிஷ்காத் என்பது விளக்கு வைப்பதற்காகச் சுவரில் இடப்பட்டுள்ள மாடக்குழியாகும்.

அந்த விளக்கைச் சுற்றி அதன் ஒளியைத் தூய்மையாகக் காட்டவும் அதன் புகையைத் தடுக்கவும் கண்ணாடிப் படிகம் இருக்கிறது. விளக்கு தனித்துவமான ஸைத்தூன் எண்ணெயிலிருந்தே தனக்கான நெருப்பைப் பெற்றுக்கொள்கிறது. அதன் தனித்துவம் எப்படிப்பட்டதெனில் நெருப்பு அதனைத் தீண்டாவிட்டாலும் அது பிரகாசிக்கும். அது மின்னக்கூடிய நட்சத்திரத்தைப் போன்றது.

இங்கு நமக்கு ஒரு கேள்வி எழலாம். இது பிரபஞ்சத்தில் அவனது ஒளிக்கான உதாரணமா? அல்லது, நம்பிக்கையாளனின் உள்ளத்தில் அவனது ஒளிக்கான உதாரணமா? இமாம் கஸ்ஸாலி இது பிரபஞ்சத்தில் அவனது ஒளிக்கான உதாரணம் என்று கூறியுள்ளார். அவர் கூறுகிறார், ‘அந்த ஒளிதான் வெளிப்படக்கூடியது. வெளிப்படக்கூடிய ஒவ்வொன்றும் அதிலிருந்தே தனக்கானதைப் பெற்றுக்கொள்கிறது.’ அதாவது, பொருள் கள் யாவும் அதைக் கொண்டே, அதற்காகவே, அதிலிருந்தே வெளிப் படுகின்றன. அவன்தான் உண்மையான ஒளி. அவனுக்கு மேல் எந்த

ஒளியும் இல்லை. அவன் தன் பெயரை அந்நூர் எனவும் ஆக்கிக் கொண்டான். அது இல்லாமையிலிருந்து அவனைத் தூய்மைப்படுத்தக்கூடியதாகவும் ஒவ்வொரு பொருளையும் இல்லாமை என்னும் இருளிலிருந்து வெளிப்படுத்தக் கூடியதாகவும் இருக்கிறது.

உண்மையில் அவனுடைய இருப்புக்கான ஆதாரங்கள் இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு பொருளிலும் நிரப்பமாகக் காணப்படுகின்றன. வழிகெட்ட குருடர்கள்தான் அவற்றைக் கண்டுகொள்ள மாட்டார்கள்.

இரண்டாவது பொருள், நம்பிக்கையாளனின் உள்ளத்தில் அவனது ஒளிக்கான உதாரணம். அதன் அடிப்படை இதுதான்: இறைவனை அறிந்த உள்ளம் தனக்கு வழங்கப்பட்டுள்ள அகப்பார்வையைக் கொண்டு தவறானவற்றிலிருந்து சரியானவற்றை, பாவத்திலிருந்து நன்மையானதை அடையாளப்படுத்திக்கொள்ளும். அது மனிதர்களிடையே தடுமாற்றமின்றியும் சரியான நோக்கத்தைப் பெற்றதாகவும் நடந்துசெல்லும்.

அவன் குர்ஆனிலிருந்து தன் நோக்கத்தைத் தெளிவாகப் பெற்றுக் கொள்வான். குர்ஆன் என்பது ஒளியாகும். ‘ஆகவே, அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதரின் மீதும் நாம் அருளியிருக்கும் ஒளியின் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள் ... (64:8)’ ‘மனிதர்களே, உங்கள் இறைவனிடமிருந்து ஓர் ஆதாரம் வந்துவிட்டது. நாம் உங்கள்மீது தெளிவான ஒளியை அருளியுள்ளோம். (4:174)’

கொஞ்சம் கவனத்தோடு பார்க்கும்போது இரண்டு பொருள்களும் ஒன்றையொன்று சார்ந்தவை என்பதை அறிந்துகொள்ளலாம். யார் பிரபஞ்சத்தில் தம் இறைவனின் ஒளியைக் காண்பாரோ அவரது உள்ளத்தில் அதன் வழிகாட்டல்கள் தமக்கான இடத்தைப் பெற்றுக்கொள்ளும். அது அவனை அதிகாலையிலிருந்து இரவுவரை பள்ளிவாசல்களோடு இணைத்துவிடுகிறது. அவனது உள்ளம் இறையில்லங்களோடு எப்போதும் தொடர்பில் இருக்கும். அங்கு காலையிலும் மாலையிலும் அவன் அல்லாஹ்வின் புகழைப் பாடிக்கொண்டிருப்பான்.

நிராகரிப்பாளர்கள் கால்நடைகளைப் போன்றவர்கள். தம் இறைவனைக் குறித்து எதுவும் அறியாதவர்கள். அவர்கள் உலக விவகாரங்களில் அறிவாளிகளாக இருந்தாலும் இவ்வுலக, மறுவுலக இறைவனைக் குறித்து எதுவும் அறிய மாட்டார்கள். ‘யாருக்கு அல்லாஹ் ஒளியைத் தரவில்லையோ அவருக்கு எந்த ஒளியும் இல்லை. (40)’

❖ ❖ ❖

அதற்குப் பிறகு வசனங்கள் அல்லாஹ்வின் வல்லமையைக் குறித்து, அவனுடைய மகத்துவத்தைக் குறித்து பேசுகின்றன. அவை பிரபஞ்சத்தில் கவனம் செலுத்துமாறு அறிவுடையோரை ஆர்வமூட்டுகின்றன. அவ்வாறு கவனம் செலுத்துவது ஈமானை அதிகரிக்கும், அவனுடைய ஒளியைப் பன்மடங்காக்கும்.

பின்வரும் வசனங்களைக் கவனத்தோடு படித்துப்பாருங்கள்:

வானங்களிலும் பூமியிலும் உள்ளவர்களும் தம் இறக்கைகளை விரித்தவாறு பறவைகளும் அல்லாஹ்வைப் புகழ்ந்துகொண்டிருப்பதை நீர் காணவில்லையா? ஒவ்வொன்றும் தன் தொழுகையையும் புகழ்ந்திடும் முறையையும் அறிந்தே உள்ளது. அவர்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிந்தவன். வானங்களின், பூமியின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது. அவனிடமே அனைவரும் திரும்பிச் செல்ல வேண்டும். (41,42)

இந்த வசனங்கள் பிரபஞ்சத்தின் ஒரு பகுதியாக மாறி அவனுடைய புகழைப் பறைசாற்றுவதற்கும் அவனுடைய அருட்கொடைகளை ஒத்துக் கொள்வதற்கும் உங்களைத் தூண்டவில்லையா?

இங்கு ஒரு கேள்வி எழலாம். இதற்கு முன்னால் இடம்பெற்ற குடும்ப ஒழுக்கங்கள், சமூகத்தின் பாதுகாப்பு ஆகியவற்றைப் பற்றிப் பேசும் வசனங்களுக்கும் அல்லாஹ்வின் மகத்துவத்தைப் பற்றிப் பேசும் இந்த வசனத்துக்கும் என்ன தொடர்பு?

மார்க்கத்தின் சட்டங்கள் அனைத்தும் கொள்கையோடு இணைக்கப்பட்டுள்ளன. அவை கொள்கையின் நிழலில் வாழக்கூடியவை. கொள்கை இல்லாமல் அவற்றால் ஒருபோதும் நீடிக்க முடியாது என்பதே அதற்கான பதில். பின்வரும் வசனத்தை உதாரணமாக எடுத்துக்கொள்ளுங்கள்:

தங்கள் மனைவியருடன் சேருவதில்லை என்று சத்தியம்செய்து விலகியிருப்பவர்களுக்கு நான்கு மாதங்கள்வரை அவகாசம் உண்டு. பின்னர் அவர்கள் திரும்பிவிட்டால், அல்லாஹ் பெரும் மன்னிப்பாளனாகவும் இணையிலாக் கிருபையாளனாகவும் இருக்கிறான். ஆனால், அவர்கள் விவாகரத்துசெய்யத் தீர்மானித்துவிட்டால், நிச்சயமாக அல்லாஹ் செவியேற்பவனாகவும் நன்கறிந்தவனாகவும் இருக்கிறான். (2:226,227)

அல்லாஹ்வின் நான்கு பெயர்கள் இடம்பெற்றுள்ளன, குடும்பம் தொடர்பான ஒரு சட்டத்தில்.

*இவ்வாறு திருக்குர்ஆன் ஈமானைச் செயலோடும் மனிதர்களின் விவகாரங்களைத் தங்களின் இறைவன்மீது அவர்கள் கொள்ள வேண்டிய கடமையான நம்பிக்கையோடும் இணைக்கிறது.*

*ஷரீஆவுக்கும் கொள்கைக்குமான தொடர்பும் ஈமானுக்கும் செயல்பாட்டுக்குமான தொடர்பும் உறுதியானது. நம்முடைய காலத்தில் சட்டத்துக்கு இஸ்லாம் அல்லாத வேறொரு மூலம் வேண்டும் என்றும் அரசியல், வஹீயை அடிப்படையாகக் கொண்டு இருக்கக் கூடாது என்றும் சிலர் விரும்புகிறார்கள்.*

❖ ❖ ❖

*அவர்கள் குறிப்பாக இந்த அத்தியாயத்தை வெறுக்கிறார்கள். ஏனெனில், இது விபச்சாரத்தையும் கட்டுப்பாடின்றி அலைவதையும் மானக்கேடான வழிமுறைகளையும் தடைசெய்கிறது. ஆகவே, இந்த அத்தியாயம் இப்படிப்பட்டவர்களின் நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்துகிறது. மார்க்கத்துக்கும் அவர்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் அது கூறுகிறது.*

> *நாங்கள் அல்லாஹ்வின் மீதும் தூதரின் மீதும் நம்பிக்கை கொண்டு அவர்களுக்குக் கீழ்ப்படிந்துள்ளோம் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆயினும் அவர்களில் ஒரு பிரிவினர் அதன் பின்னரும் புறக்கணித்துவிடுகிறார்கள். அவர்கள் நம்பிக்கையாளர்கள் அல்லர். இறைத்தூதர் அவர்களிடையே எழும் விவகாரங்களில் தீர்ப்பளிக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் அல்லாஹ்வின் பக்கமும் அவனுடைய தூதரின் பக்கமும் அழைக்கப்பட்டால் அவர்களில் ஒரு பிரிவினர் புறக்கணித்துவிடுகிறார்கள்.* (47,48)

*அல்லாஹ்வுடைய, அவனுடைய தூதருடைய கட்டளைகளை ஏற்றுக்கொள்ள மறுக்கும் இவர்களின் வழிமுறைகளை நான் ஆராய்ந்து பார்த்தேன். இவர்களில் பெரும்பாலோர் அல்லாஹ்வைக் குறித்து, அவன் விதித்துள்ள கடமைகள்குறித்து எந்த மதிப்பும் கொண்டிராதவர்கள். பள்ளிவாசலுக்குச் செல்லும் வழியைக்கூட அறியாதவர்கள். ஆயினும் அவர்கள் தங்களை முஸ்லிம்களாகக் காட்டிக்கொள்கிறார்கள். அவர்கள் இஸ்லாமிய ஆட்சி ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருக்கிறார்கள். அவர்களின் நோக்கமெல்லாம் எந்த வகையிலும் இஸ்லாம் மேலோங்கிவிடக் கூடாது என்பதும் நவீன ஜாஹிலிய்யாவை உலகம் முழுவதும் பரப்புவதும்தான். ஆகவே, அல்லாஹ் அதற்குப் பிறகு கூறுகிறான்:*

இறைத்தூதர் அவர்களிடையே தீர்ப்பளிக்க வேண்டும் என்பதற் காக நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வின் பக்கமும் அவனுடைய தூதரின் பக்கமும் அழைக்கப்பட்டால், 'கேட்டோம், கீழ்ப்படிந் தோம்' என்பதுதான் அவர்களின் பதிலாக அமையும். அவர்கள்தாம் வெற்றியாளர்கள். அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிந்து, அல்லாஹ்வுக்கு அஞ்சி, அவனுக்கு மாறுசெய்வதை விட்டுத் தவிர்ந்துகொள்பவர்கள்தாம் வெற்றியாளர்கள். (51,52)

இரு சாராருக்குமிடையிலான மோதல் ஆரம்பத்திலேயே நிலை பெற்றுவிட்டது. அவர்களில் ஒரு பிரிவினர் மார்க்கத்தை வெறுப்பவர்கள். அதனை வீழ்த்துவதற்காகப் பாடுபடக்கூடியவர்கள். மற்றொரு பிரிவினர் மனிதர்களை அவர்களின் இறைவனோடு இணைக்கக்கூடியவர்கள். சமூகத்தை இஸ்லாத்தைக் கொண்டு கட்டியெழுப்பப் பாடுபடுபவர்கள்.

தற்காலத்தில் முஸ்லிம்களின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. தோல்விகள் அவர்களைச் சூழ்ந்திருக்கின்றன. ஆனாலும் அல்லாஹ் அவர்களுக்கு முன்னால் நம்பிக்கையின் வாசல்களைத் திறந்துதான் வைத்துள்ளான். அவன் அவர்களிடம் கூறுகிறான்:

உங்களில் நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் புரிந்தோருக்கு அல்லாஹ் பின்வருமாறு வாக்களித்துள்ளான்: அவர்களுக்கு முன்னிருந்தவர்களுக்கு அதிகாரம் வழங்கியது போன்று அவர் களுக்கும் பூமியில் அதிகாரம் வழங்குவான். தான் விரும்பும் மார்க் கத்தை அவர்களுக்காக மேலோங்கச் செய்வான். அவர்களுக்கு ஏற்பட்ட அச்சத்துக்குப் பின் அமைதியை ஏற்படுத்துவான் ... (55)

இந்த அதிகாரத்தைப் பெற நீண்ட முன்னேற்பாடுகளும் தொடர் முயற்சி களும் அவசியம். ஏனெனில், தலைமைத்துவத்துக்கென்று சில தகுதிகள் இருக்கின்றன. அதனைப் பெறுவதற்கு அந்தத் தகுதிகளை வளர்த்துக் கொள்வதும் மிக அவசியம்.

ஈமானிய ஆட்சியை நிலைநிறுத்தும் பொருட்டு நபியவர்களும் அவர் களுடைய தோழர்களும் என்னவெல்லாம் செய்தார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். கிட்டத்தட்ட கால் நூற்றாண்டுகாலம் சிலை வழி பாட்டாளர்களான அறபுகளுடன் அவர்கள் போராடினார்கள். இறுதியில் அவர்களை வீழ்த்தினார்கள். பின்னர், தவ்ஹீதைக் கொண்டு அவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்தார்கள். பின்னர், ரோம், பாரசீகம் ஆகிய இருபெரும் வல்லரசுகளையும் வீழ்த்தினார்கள். விரைவிலேயே அவை இஸ்லாமிய ஆட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளாக மாறின.

*இக்றஃ என்ற வசனம் அருளப்பட்டு முப்பது வருடங்களில் ஒரு தனிமனிதர் தம் இறைவனுக்காகச் செயல்படும் ஒரு சிறந்த சமூகமாக மாற்றமடைந்தார்.*

*மக்காவில் உள்ள ஒரு ஏழ்மையான குடும்பம் உலகில் அதிகாரம் செலுத்தும் ஒரு அரசாக மாறும் என்பது சாத்தியமற்ற ஒன்றாக இருந்தது. ஆனாலும் அவர்கள் எந்த வழிமுறையைக் கொண்டு இப்படியொரு அற்புதத்தை நிகழ்த்தினார்கள்? 'அவர்கள் என்னை மட்டுமே வணங்குவார்கள். எனக்கு எதையும் இணையாக்க மாட்டார்கள். (55)' 'தொழுகையைக் கடைப்பிடித்து ஸகாத்தையும் வழங்குங்கள். இந்தத் தூதருக்கும் கட்டுப்படுங்கள். இதனால் நீங்கள் இரக்கம் காட்டப்படுவீர்கள். (56)'*

*இந்த வழிமுறைகளைக் கொண்டுதான் இந்தச் சமூகம் எழுச்சியடைந்தது. அவற்றைக் கொண்டுதான் பத்து நூற்றாண்டுகளாக உலகை ஆட்சிசெய்துகொண்டிருந்த அநியாயக்கார அரசுகளை வீழ்த்தியது. 'நிராகரிப்பாளர்கள் பூமியில் இறைவனை வென்றுவிடுவார்கள் என்று நீர் எண்ண வேண்டாம் ... (57)'*

*இந்த வழிமுறைகளை மூடர்களோ இயலாதவர்களோ புரிந்துகொள்ள முடியாது. உலகின், மறுமையின் விதிகளை நன்கு புரிந்துகொள்ளும் மனிதர்கள்தாம் இவற்றைப் புரிந்துகொள்வார்கள். அவர்களால் மட்டுமே முஹம்மதும் அவருடைய தோழர்களும் சென்ற பாதையில் செல்ல முடியும்.*

❖ ❖ ❖

ஷெய்க் முஹம்மது அல்கஸ்ஸாலி எகிப்தின் அல் புஹைராவில் ஹிஜ்ரி 1335 துல்ஹிஜ்ஜா ஐந்தில் (22 செப்டம்பர் 1917) பிறந்து, ஷவ்வால் 19, 1416 இல் (9 மார்ச் 1996) இறையடி சேர்ந்தார். மக்காவின் உம்ம் அல் குரா பல்கலைக்கழகம், கதார் பல்கலைக்கழகம், அல்ஜீரியாவின் அல் அமீர் அப்த் அல் காதிர் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் கற்பித்தார். தமது அந்திம காலத்தில் கெய்ரோவில் இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனத்தின் அறிவியல் குழுமத்துத் தலைவராக அரும் பணியாற்றினார். ஷெய்க் அல்கஸ்ஸாலியின் அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களுள் ஏராளமானவை பல்வேறு மொழிகளில் வெளியாகியுள்ளன. எகிப்திய குடியரசின் அதி மேதகு கௌரவ விருது (1988), மன்னர் பைஸல் விருது(1989), பாகிஸ்தானின் அரச கௌரவ விருது முதலியவற்றால் அவர் கௌரவிக்கப் பட்டார்.

Published by
Fuzin Texts

ISBN 978-955-8398-67-8
9789558398678

INTERNATIONAL INSTITUTE OF ISLAMIC THOUGHT